தண்ணீரில் தாகம் பாகம்-1

இன்பா அலோசியஸ்

தண்ணீரில்
தாகம் பாகம்-1
இன்பா அலோசியஸ்

http://www.pustaka.co.in

தண்ணீரில் தாகம் பாகம் - 1

Thaneeril Thagam Part - 1

Author:

இன்பா அலோசியஸ்

Infaa Alocious

For more books

http://www.pustaka.co.in/home/author/infaa-alocious-novels

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

தாகம் - 1.

தாகம் - 2.

தாகம் - 3.

தாகம் - 4.

தாகம் - 5.

தாகம் - 6.

தாகம் - 7.

தாகம் - 8.

தாகம் - 9.

தாகம் - 10.

தாகம் - 11.

தாகம் - 12.

தாகம் - 13.

தாகம் - 14.

தாகம் - 15.

தாகம் - 16.

தாகம் - 17.

தாகம் - 18.

தாகம் - 19.

தாகம் - 20.

தாகம் - 21.

தாகம் - 22.

தாகம் - 23.

தாகம் - 24.

தாகம் - 25.

தாகம் - 26.

தாகம் - 27.

தாகம் - 28.

தாகம் - 29.

தாகம் - 30.

தாகம் - 31.

தாகம் - 32.

தாகம் - 33.

தாகம் - 34.

தாகம் - 35.

தாகம் - 36.

தாகம் - 37.

தாகம் - 1.

கடல் நீரின் நடுவில்

குடிநீரைத் தேடுவது - விதி

நீரோடையின் நடுவில்

தாகத்தில் தவிப்பது.....?

படுக்கையில் படுத்திருந்த திவ்யா, கீச்.....கீச்.... என்ற பறவைகளின் ஒலியில், கிழக்கு வெளுத்ததை உணர்ந்தாள். ஜன்னலின் வழியே கசிந்த வெளிச்சத்தில், கடிகாரத்தைப் பார்க்க, நேரம் விடியற்காலை நான்கு மணியைக் காட்டியது.

‘இன்னுமா ஆறுமணியாகவில்லை....., கடிகாரம் ஓடவில்லையோ....’, சந்தேகத்தில், அருகில் இருந்த தன் அலைப் பேசியில் மணியைப் பார்க்க, அதுவும் அதே நேரத்தையே காட்டியது.

‘நம் வேகத்துக்கு கடிகாரம் ஓடுமா.....என்ன?’, மனதுக்குள் நினைத்துக் கொண்டாள். மனம் முழுவதும் வெறுமை அப்பிக் கிடந்தது. வலிகளைக் கண்டுக் கண்டு, உள்ளம் மரத்துவிட்டதோ? என்ற சந்தேகம் அவளுக்கு எழுந்தது.

கண்கள் கூடக் கண்ணீரை உற்பத்தி செய்ய சக்தியற்று வற்றி விட்டது போல் உணர்ந்தாள். இல்லை, நான் இன்னும் உயிர்ப்போடுதான் இருக்கிறேன், என்பதை அவளுக்கு உணர்த்தவென்றே, “அம்மா..., அம்மா வா.....”, தன் மகன் கண்ணனின் அலறலில், சுய உணர்வை அடைந்து,

“கண்ணா...., அம்மா உன் கிட்டே தாண்டா இருக்கேன். ஒண்ணும் இல்லை தூங்கு....”, அவனைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டாள்.

அவன் அதையெல்லாம் உணரும் நிலையில் இல்லை. “அப்....அப்....பா..... அப்பா..... வேண்டாம்..... இருட்டு பயம்மா இருக்குமா. போகாதம்மா.....”, எழுந்து அமர்ந்துகொண்டு, அவளைப் பற்றிக்கொண்டு அழுதான். உடலில் அப்படியொரு நடுக்கம். கண்விழித்துப் பார்க்கவே பயந்து அவளை ஒண்டிக் கொண்டான். மூன்று வயது பாலகன், தந்தையை எண்ணிக் கதறும் விந்தை.....

திவ்யாவின் கண்கள் வெந்நீரை உற்பத்தி செய்தன. இதயத்தைப் பிளக்கும் வலியிலும், தன் மகனைத் தேற்றுவதுதான் முதல் தேவை என்பதை உணர்ந்து, “இல்லடா கண்ணா....., அம்மா உன்னை விட்டு இனிமேல் போகவே மாட்டேன். உன் கூடவேதான் இருப்பேன்....., இனிமேல் அப்பா வரவே மாட்டார்டா கண்ணா. நீ தூங்கு...”, தன் திணறலை மறைத்து, அவனைத் தேற்றினாள். தனக்குக் கண்ணீர் வற்றவில்லை என்பதை உணர்த்துவதற்காகவே, இப்படி ஒரு நிகழ்வு நடந்ததோ என்று அவள் எண்ணினாள்.

“இல்ல... இல்ல....., தூங்க வேண்டாம்....., கண்ணன் தூங்கலை.....”, எங்கே தான் தூங்கிவிட்டால், தாய் போய்விடுவாளோ என்றுக் கருதி, அவளை விலக மாட்டேன் என்று கட்டிக்கொண்டு, தேம்பினான்.

“கண்ணா, இங்கே பார்...., நாம இப்போ தனியா இருக்கோம். இங்கே அப்பா வர மாட்டாங்க. கண்ணைத் தொறந்து பாருடா கண்ணா...., இது அப்பா வீடு இல்லை...., நீயே பாரேன்.....”, அவனைத் தேற்ற முயன்றாள். அவனைக் கட்டாயப் படுத்தி, சுற்றிலும் பார்க்க வைத்தாள். விளக்கையும் போடவே, விளக்கு வெளிச்சத்தில், தங்கள் அறையைப் பார்த்தான்.

அதன் பிறகுதான் அவன் நடவடிக்கையில் கொஞ்சம் மாறுதல் வந்தது. தாயைப் பிடித்திருந்த பிடியைக் கொஞ்சம் தளர்த்தினான். அவனின் மருண்ட பார்வையும், பயமும்,

நடுக்கமும், திவ்யாவின் இதயத்தைக் கிழித்துக் கூறு போட்டது.

தான் இப்பொழுது கலங்கினால், கண்ணன் இன்னும் மிரண்டு விடுவான், அவன் மனநிலை இன்னும் மோசமாகிவிடும் என்று தோன்றவே, தன் உணர்வுகளை அவனுக்குக் காட்டாமல் மறைத்தாள். அவனுக்குக் கொஞ்சம் தண்ணீர் எடுத்துக் கொடுத்துவிட்டு, “கண்ணா...., கொஞ்ச நேரம் தூங்கு, அம்மா உனக்கு ஹார்லிக்ஸ் போட்டு எடுத்துட்டு வாறேன்....”, அவன் மன நிலையை மாற்ற, சொன்னாள்.

“இல்ல..... வேண்டாம்....., போகாதீங்க. நீங்க இருங்க”, படுக்கையை விட்டு அவளை நகர விடாமல் பிடித்துக் கொண்டான்.

அவன் மனநிலை புரிந்தும், போகிறேன் என்று சொன்ன தன்னை, என்ன செய்தால் தகும் என்பதுபோல், மனதுக்குள்ளேயே தன்னை நொந்து கொண்டு, “சரிடா கண்ணா....., அம்மாவும் உன்னோடவே படுத்துக்கறேன்”, அவனை அணைத்தவாறு படுத்துக் கொண்டாள்.

வழியும் கண்ணீரை அதன் போக்கில் விட்டுவிட்டு, கண்களை இறுக மூடிக் கொண்டாள். விடியல் வரை அவளை நெருங்காத உறக்கம், அப்பொழுதும் அவளை நெருங்க மாட்டேன் என்று சண்டித்தனம் செய்தது.

திவ்யாவிற்கு இப்பொழுது மட்டுமல்ல, திருமணம் முடித்த உடனேயே உறக்கம் அவளை விட்டு தூர இருந்து வேடிக்கை பார்க்கத் துவங்கி விட்டது. முதலில் கணவனின் தேவைக்காக தொலையத் துவங்கிய உறக்கம், பின்னர் மகன் பிறந்த பிறகு தொடர்ந்து, அவன் வளர்ந்த பொழுது, தனிமையில் தவிக்கிறானே, என்பதில் துடித்து, இன்று தனிமரமாக நிற்கும் போதும் அதே நிலைதான்.

நான்கு வருடங்களில், நாற்பது வருடச் சித்திரவதையை அனுபவித்துவிட்டாள் அவள். கடந்த கால நிகழ்வுகளை

நினைவில் கூட, அலசப் பிடிக்காமல், மகனை அணைத்தவாறே, நேரத்தை நெட்டித் தள்ளிக் கொண்டிருந்தாள்.

கண்ணன் உறங்கிவிட்டது, அவனது சீராக எழுந்த மூச்சில் இருந்து தெரிந்தது.கண்ணன் அப்படியே திவ்யாவின் செராக்ஸ். நிறம் மட்டுமே அவன் அப்பாவைக் கொண்டிருந்தான். அவன் முகத்தில் பேன் காற்றிற்கு கலைந்த முடியை வாஞ்சையாகக் கோதி, அவன் நெற்றியில் இதழ் பதித்தாள்.

இனி மீதம் இருக்கும் தன் வாழ்வின் ஆதாரம் அவனே என்பதை நினைக்கையில், கொஞ்சம் கவலையாகவும், வரும் காலமாவது தனக்கு நிம்மதியாக இருக்குமா? என்ற எதிர்பார்ப்புடனும், எதிர்காலத்தை எப்படி எதிர்கொள்ளப் போகிறோம் என்பதில் மலைப்பாகவும் இருந்தது.

யோசனைகள் அனைத்தையும் ஓரம் கட்டிவிட்டு, இதற்குமேல் எங்கே தூங்கப் போகிறோம், எழுந்து வேலைகளைப் பார்ப்போம் என்று எழுந்து, மகனுக்குத் தலகாணியை அணைவாக வைத்துவிட்டு கிச்சனுக்குச் சென்றாள்.

எதையும் ஆர்வமாகச் செய்து சாப்பிட விருப்பம் இல்லை. ஆனாலும் மகனுக்காகவாவது உயிர் வாழ வேண்டுமே, குக்கரில் அரிசியைப் போட்டுவிட்டு, பால் காய்ச்சி, தனக்கு டீ போட்டுவிட்டு, மகனுக்கு ஹார்லிக்ஸ் கலந்து வைத்தாள்.

மீதமிருக்கும் பாலில் மகனுக்குப் பால் சாதம் கலந்து கொள்ளலாம் என்றுவிட்டு, தனக்காக ரசம் மட்டும் செய்ய முடிவெடுத்தாள். டீயைக் குடித்தவள், குக்கர் விசில் அடித்த பிறகு அதை நிறுத்தினாள். குக்கர் சத்தத்தில் எழுந்து வந்த மகனை, காலை கடன்களை முடிக்க வைத்து, ஹார்லிக்சைக் குடிக்க வைத்தாள்.

“கண்ணா... நீ சமத்தா இங்கேயே இருந்துக்கோ, அம்மா குளிச்சுட்டு வந்து, உன்னைக் குளிக்க வைக்கிறேன்

சரியா?”, அவன் சேரில் அவனை அமர வைத்துவிட்டு, துணிகளை எடுத்துக் கொண்டு குளிக்கச் சென்றாள்.

மூன்று வயது பையனுக்குரிய எந்தச் சுட்டித் தனமோ, குறும்போ எதுவும் கண்ணனிடம் கிடையாது. அவனிடம் இருக்கும் ஒரே குணம், திவ்யாவையே சார்ந்து இருப்பதுதான். அவள் எங்கே சென்றாலும் ஒட்டிக் கொண்டே அலைவான்.

அவள் அவசரத் தேவைக்கு பாத்ரூம் செல்லவேண்டும் என்றால் கூட, அவளோடு உள்ளேதான் இருப்பேன் என்று அடம் செய்யும் அளவு, அவள் எப்பொழுதும் வேண்டும் அவனுக்கு. அவனது இந்த குணம் மாறவேண்டும் என்பதற்காகவே, தான் வேலை செய்யும் பள்ளியை விட்டு, ஒரு க்ரஷில் அவனைச் சேர்த்திருக்கிறாள்.

அந்தக் க்ரஷில் சேர்த்த பிறகு அவனிடம் கொஞ்சம் மாற்றம். திவ்யாவை விட்டு, கொஞ்சம் விலகி இருக்கிறான். அதிலும் முக்கியமான மாற்றம், அவள் குளித்துக் கிளம்பி வரும்வரை, சமர்த்தாக அமர்ந்திருப்பான்.

ஆமாம், அவனுக்கு விளையாட்டில் ஆர்வம் கிடையாது. எப்பொழுதும் ஒரு அசாத்திய அமைதி இருக்கும் அவனிடம். அவன் வயதுப் பிள்ளைகள், இது வேண்டும், அது வேண்டும், என்று அடம் பிடித்து விளையாட்டு பொருட்கள் வாங்கினால், இவனோ அது எதிலுமே ஈடுபடாமல், அவைகளை வேடிக்கை மட்டுமே பார்ப்பான்.

கண்ணனின் இந்த அமைதி கூட, திவ்யாவிற்குப் பெரிய கவலைதான். அவனை எப்படி மாற்றவென்றும் அவளுக்குத் தெரியவில்லை. அவள் குளித்து முடித்து வரும்வரை, அவன் அந்தச் சேரில் இருந்து இறங்கக் கூட இல்லை. அதை கவனித்தாலும், அப்படியே ஒதுக்கிவிட்டு, வேலைகளைத் தொடர்ந்தாள்.

வாழ்க்கை, அவளுக்கு என்ன வைத்திருக்கிறது என்பது தெரியவில்லை அவளுக்கு.

********** “அப்பா பால்.....”, படுக்கையில் லேசாகச் சிணுங்கிய மகளின் சத்தத்தில், சட்டென விழிப்புக்கு வந்தான் நம் கதையின் நாயகன் ஜீவா. கடிகாரத்தைப் பார்க்க, நேரம் நான்கைக் காட்டியது. மகளை அப்படியே தட்டிக் கொடுத்தால், உறங்கி விடுவாள்தான்.... ஆனால் அதைச் செய்ய மனமில்லாமல், அவளைத் தூக்கிக் கொண்டு கிச்சனுக்குச் சென்றான்.

இரவு காய்ச்சி வைத்திருந்த பால் இருந்த பொழுதும், அதை விடுத்து, புதிதாகக் காய்ச்சி, அதைப் பதமான சூட்டிற்கு ஆற்றி அவளுக்குக் கொடுத்தான். அவளுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கும் வேளையில், அவர்கள் வீட்டு வேலைக்காரன், சமையல் காரன், தோட்டக்காரன், அந்த வீட்டின் ஆல் இன் ஆல் முத்து, எழுந்து வந்தார்.

“தம்பி.... என்னை எழுப்பி இருக்கலாமே..... பாப்பாவை நான் கவனிச்சுக்க மாட்டேனா? எதுக்கு நீங்க இப்படிக் கஷ்டப் படுறீங்க?”, அவரது முதுமையிலும், திடகாத்திரமாகவே இருந்தார்.

“இதில் என்ன இருக்குண்ணே.....? என் மகளை கவனிக்க எனக்கு முடியாதா....? நீங்க போய் படுத்துக்கோங்க.....?”, மெல்லிய சிரிப்புடன் வாஞ்சையாகச் சொன்னான். அப்பொழுதும் அவன் மகள் அஞ்சலி, அவன் மடியிலேயே இருந்தாள்.

முத்து அந்தக் காட்சியைப் பார்த்து கண் கலங்கியவராக நின்று கொண்டிருந்தார். அஞ்சலி பால் குடித்தவாறே உறங்கிவிட, “தம்பி....., இன்னும் எவ்வளவுநாள் இப்படித் தனியாவே இருப்பீங்க...? நம்ம பாப்பாக்கு ஒரு அம்மா வேண்டாமா....? அதுவும் பொம்பளைப் பிள்ளை தம்பி....., எவ்வளவு நாள் நீங்களே பாக்க முடியும்...?

உங்களுக்கு ஒரு பொம்பளைத் துணை தேவை இல்லன்னாலும், பாப்பாக்கு ஒரு அம்மா வேணும் தம்பி....", அவர் சொல்லிக் கொண்டே போக,

"அண்ணே போதும்....., பெத்த அம்மாவே, வேண்டாம்னு கவனிக்காமல் ஒதுக்கி வைத்திருந்ததைப் பார்த்த பிறகும், உங்களால் எப்படி இப்படிப் பேச முடியுது? பெத்த அம்மாவே பார்க்காத போது, மூன்றாம் மனிதரிடம் எந்த தைரியத்தில் எதிர் பார்க்க, வேண்டாண்ணே....., என் பொண்ணுக்கு, நான் மட்டும் போதும்", அவன் குரலில் அப்படி ஒரு விரக்தி.

முப்பது வயதை எட்டப் போகும் ஒரு இளைஞனின் குரலில் வெளிப்படும் விரக்தியைக் கேட்டு, முத்துவின் மனம் பாரமாகிப் போனது. வாழ்க்கையை அனுபவிக்க வேண்டிய வயதில், அதைப் பற்றிய கசப்புணர்வை அவனுக்குக் கொடுத்த கடவுளை சபிப்பதைத் தவிர, அவரால் வேறு என்ன செய்ய முடியும்?

நூற்றுக் கணக்கான தொழிலாளர்களின் வாழ்வில் ஒளியை ஏற்றி வைத்து, தனது முதுமையிலும் தன்னை அரவணைத்து, மற்றவரின் மனம் நொந்துவிடக் கூடாதே என்பதால், பார்த்துப் பார்த்து பேசும் தன் முதலாளிக்கு, வாய்த்த வாழ்வை எண்ணி அவர் கண்ணீர் விடாத நாளே கிடையாது.

தன்னை விட்டுப் போன மனைவியால்....., வெளியே தலைகாட்ட முடியாமல், ஆறு மாதமாக வீட்டிலேயே அடைந்து கிடக்கும் ஜீவாவை எண்ணும் போதே, மனம் வேதனையில் கசங்கியது.

"அப்படிச் சொல்லாதீங்க தம்பி....., உலகத்தில் எல்லோரும் ஒரே மாதிரி இருக்க மாட்டாங்க. நல்ல பொண்ணுங்களும் இருக்கத்தான் செய்யிறாங்க.... அப்படி ஒரு பொண்ணைப் பாத்து.....", எப்படியாவது அவன் மனதை மாற்ற முனைந்தார்.

“நான், நல்ல பொண்ணுங்களே இல்லன்னு எப்போண்ணே சொன்னேன்....., எனக்கு வேண்டாம் என்றுதான் சொல்லுறேன். இன்னொரு ஏமாற்றத்தையோ, எதிர்பார்ப்பையோ, தாங்கிக்கவோ, வளத்துக்கவோ, என் மனசு தயாரா இல்லை. இந்தப் பேச்சு வேண்டாண்ணே.....”, வேதனையாகச் சொல்லி நிறுத்தினான்.

முடியாது என்று சண்டை போடுபவனிடம் எதையாவது பேசலாம். வேண்டாம் என்று வேதனைப் படுபவனிடம் என்ன சொல்ல? சரி தம்பி, பாப்பாவை படுக்க வச்சுட்டு, நீங்களும் தூங்குங்க”, அவனை அறைக்குப் போகச் சொன்னார்.

“என்னண்ணே.... அஞ்சலியை , பாப்பாவாவே மாத்திட்டீங்க.....”, மகளைக் கையில் ஏந்திக் கொண்டு கேட்டான்.

“அவதான்.... நான் பாப்பான்னு சொல்லுறா....., அதான் நான் அப்படியே கூப்பிடுறேன். அவளுக்கு என்ன தம்பி.... குட்டிப் பாப்பாதான்.....”, பூரிப்பாகச் சொன்னார்.

“அண்ணே....., அவ பாப்பா மட்டும் இல்லை, தேவதை....., என் வாழ்க்கைக்கு ஒளி வீச வந்த தேவதை”, சொல்லிவிட்டு, மகளைத் தூக்கிக் கொண்டு படுக்கைக்கு விரைந்தான். அவளைக் கட்டிலில் விட்டுவிட்டு, பக்கத்தில் மல்லாந்து படுத்து, விட்டத்தைப் பார்த்தான்.

மகளுக்காக கூரையில் ஒட்டியிருந்த ரேடியம் ஸ்டிக்கர்கள், அழகாக ஒளி வீசிக் கொண்டிருந்தன. அவைகளையேப் பார்த்தவாறு படுத்திருந்தான். என்ன வாழ்க்கை இது...? என்று எழுந்த யோசனையை உடனடியாக உதறிவிட்டு, மகளைப் பார்த்தான்.

அவனையே உரித்து வார்த்ததுபோல் இருந்தாள் அஞ்சலி. முடி மட்டும், அவள் தாய்க்கு இருந்ததுபோல், சுருட்டை முடியாக இருந்தது. அதைப் பராமரிப்பதுதான் கொஞ்சம்

கஷ்டம். ஆனால் அது கூட அவளுக்கு அழகாகத்தான் இருந்தது.

மகளின் கூந்தலை வாஞ்சையாக வருடினான். அஞ்சலி அவள் தாயைப் போல இல்லாமல், தன்னைப் போல இருப்பதில், அவனுக்கு அப்படி ஒரு திருப்தி. இவள் மட்டும் அவளது தாயைப் போல், அவள் ஜாடையில் இருந்திருந்தால்..... அந்த யோசனையே கசந்தது.

உறக்கமும் தொலைந்து போயிருக்க....., மகள் தூங்கும் அழகையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த ஏசி அறையின் நிசப்தம், அவஸ்த்தையாக இருந்தது அவனுக்கு. எனவே எழுந்து ஏசியை நிறுத்திவிட்டு, ஜன்னல்களைத் திறந்து வைத்தான்.

தோட்டத்தில் இருந்து வந்த குளிர்ந்த காற்று மனதுக்கு இதமாக இருந்தது. நேரம் ஐந்தைக் கடந்திருக்க, அங்கே நிற்பதற்கு பதில் , காலை ஓட்டத்தைத் தொடர்வோம் என்ற எண்ணத்தில் உடை மாற்றிவிட்டு, தோட்டத்தில் இறங்கி, நடை பாதையில் ஓடத் துவங்கினான்.

வழக்கமாக ஆறு மணிக்கு வருபவன், இன்று ஐந்து மணிக்கே வந்துவிடவே, அவன் மனநிலை புரிந்து, எதுவும் சொல்லாமல், தோட்டத்துக்கு நீர் பாய்ச்சினார் முத்து.

ஓட்டம் முடித்து வந்து அமர்ந்தவனுக்கு, ஓட்ஸ் கொடுத்தார் முத்து. மறுக்காமல் அதை வாங்கி அருந்தியவன், அவர் தயங்கி நிற்பதைப் பார்த்து, புருவம் உயர்த்தினான்.

“என்னண்ணே ஏதாவது சொல்லணுமா.....?”, யோசனையாகக் கேட்டான்.

“தம்பி, கணேஷ் போன் பண்ணுனாப்ல.....”, இதைச் சொன்னவுடனேயே ஜீவாவின் முகம் இறுகியதை, முத்து உணர்ந்தார். எனவே பேச்சைப் பாதியில் நிறுத்தினார்.

“என்னவாம்.....”, முகத்தில் இறுக்கம் குறையவில்லை.

“எவ்வளவு நாள்தான் ஆபீஸ் போகாமல், எல்லாத்தையும் அவரையே பாக்க சொல்ல முடியும் தம்பி, என்னைக்கா இருந்தாலும் நீங்க பார்த்தால்தான் சரிவரும். அதான்....., இன்னைக்கு உங்களைப் பாக்க வாறதா சொன்னார்”, கொஞ்சம் உரிமையாக, இறுக்கமாகவே அவரும் சொன்னார்.

அவரது இந்த தோரணையில், அவனுக்கு மெல்லிதாகச் சிரிப்பு எட்டிப் பார்த்தது. ஆனால் அதை அவருக்குக் காட்டாமல்....., “இப்போ அவன் வந்துட்டா மட்டும், நான் ஆபீஸ் போய்டுவனா? ஆனாலும், அவன் எந்த தைரியத்தில் என் முன்னாடி வாறான்?”, காட்டமாகக் கேட்டான்.

அவன் கோபம் புரிந்தாலும், “யாரோ செஞ்ச தப்புக்கு, அவர் என்ன தம்பி செய்வார்....?”, கொஞ்சம் சுருதி குறைந்தது அவர் குரலில்.

“முதல்ல, எல்லாத் தப்பையும் அவங்கதான் செஞ்சாங்க....., அதற்கான தண்டனையை மட்டுமே , நானும் என் பொண்ணும் அனுபவிக்கிறோம், உங்களுக்கு அது தெரியலையா? இல்ல, தெரிஞ்சும் தெரியாத மாதிரி நடிக்கிறீங்களா?”, அவமானப்பட்ட உணர்வு, அவன் வார்த்தைகளில் தெறித்தது.

“இன்னும் எவ்வளவு நாள்தான் உங்களை நீங்களே தண்டிச்சுக்கப் போறீங்க தம்பி. இன்னைக்கு கணேஷ் வருவான்....., நீங்க அவனோட ஆபீஸ் போறீங்க, அவ்வளவுதான்.....”, கண்டிப்பாகச் சொல்லிவிட்டு, ஜீவா எதையும் மறுத்து சொல்லும்முன் அங்கிருந்து நகர்ந்தார்.

செல்லும் அவரது முதுகையே வெறித்தவாறு அமர்ந்திருந்தான். ஓட்ஸ் ஆறியிருந்தது. அதைக் குடிக்க மனமில்லாமல், அப்படியே அமர்ந்துவிட்டான்.

வாழ்க்கை தன்னை எங்கே இழுத்துச் செல்லும் என்பது அவனுக்குப் புரியவில்லை.

***

தாகம் - 2.

துள்ளித்திரியும் எந்தன் கால்கள்

அடங்க மறுக்கும் எந்தன் எண்ணம்

சிறகை விரிக்கும் எந்தன் கனவு

இவை அனைத்தையும் காக்குமா?

இல்லை அழிக்குமா?

எந்தன் கல்யாண கனவு.....

"தர்ஷு....., அடியேய் தர்ஷு....., எவ்வளவு நேரமா கூப்பிட்டுட்டு இருக்கேன். அங்க என்னடி பராக்கு பாத்துட்டு இருக்க. எவ்வளவு நேரமா கழுதை மாதிரி கத்துறது.....?", அக்கா கீதாவின் குரல் காட்டுக் கத்தலாக ஒலித்த பிறகும், அதைக் கண்டுகொள்ளாமல், வானத்தையே அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தாள் தர்ஷிணி.

தர்ஷிணி கலையவே போவதில்லை என்பதை உணர்ந்து, கீதாவே அவள் அருகில் வந்தாள். "ஏண்டி, நான் கூப்பிட்டது காதில் விழுந்துதா இல்லையா? என்னமோ ஆகாயத்தில் கோட்டை கட்டுறவ மாதிரி அங்கே என்னடி பார்வை.....?", கேட்டவாறே அவளும் வானத்தை அண்ணாந்து பார்த்தாள்.

"அதுக்கா....., எனக்கு கழுதை பாஷை எல்லாம் தெரியாதா, அதான் பேசாமல் வேடிக்கை பாக்குறேன்", சொல்லிவிட்டு அவள் வேலையைத் தொடர்ந்தாள்.

ஒரு நிமிடம் புரியாமல் திகைத்தவள், தான் கொஞ்ச நேரம் முன்னாடி சொன்னது நினைவு வந்தவளாய், அவள் முதுகில் ஒன்று போட்டாள்.

“உனக்கு வாய்க்கொழுப்பு ஜாஸ்த்தி ஆயிடுச்சு. என்னைப் பார்த்தால் உனக்கு கழுதை மாதிரி இருக்கா....?”, அவள் காதை முறுக்கினாள்.

“அதை நான் என் வாயால் சொல்ல மாட்டேன்.....”, கண்களில் குறும்பு கொப்பளிக்க பதில் சொல்லும் தங்கையை வாஞ்சையாகப் பார்த்தாள்.

‘இன்னும் இரண்டு மாதத்தில் கல்யாணம் ஆகப் போறவ மாதிரியா இவ நடந்துக்கறா? இன்னும் சின்னப் புள்ளன்னே நினைப்பு’, மனதுக்குள் நினைத்ததை வெளியில் சொன்னால், தங்கை இன்னும் செல்லம் கொஞ்சுவாள் என்பதை உணர்ந்து, அதைச் சொல்லாமல் விடுத்தாள்.

“உன் வாயால் சொல்ல மாட்டேன்னா என்ன அர்த்தம்....., அப்போ என்னைக் கழுதைன்னு நீ முடிவே பண்ணிட்டியா?”, பொய் கோபமாகக் கேட்டாள்.

“ச்சே..ச்சே...., நான் அப்படிச் சொல்லுவேனா...? அப்படிச் சொன்னால் கழுதை கோச்சுக்காது.....?”, முகத்தை அப்பாவியாக வைத்துக்கொண்டு அவள் சொன்ன விதத்தில், கீதாவிற்கு கோபத்தையும் மீறி சிரிப்பு வந்துவிட்டது.

அதை மறையாமல் சிரித்தவாறே, “வாயாடி வாயாடி....., உன் வாய்கொழுப்பை அடக்கன்னே ஒருத்தன் வாறான் பாரு....., எல்லாம் அப்போ அடங்கிடும். சரி வானத்தில் அப்படி எதை பாத்துட்டு இருந்த....?”, ஆர்வமாகக் கேட்டாள்.

“அது ஒண்ணும் இல்லக்கா....., ஏதாவது தெரியுதான்னுதான் பாத்துட்டு இருந்தேன்”, இன்னும் ஆர்வமாக வானை நோட்டமிட்டவளை, இடுப்பில் இரண்டு கைகளையும் முட்டுக் கொடுத்தவாறு நின்று முறைத்துப் பார்த்தாள் கீதா.

ஒரு நிமிடம் நின்று நிதானித்தவள், அடுத்த நிமிடம் அவளை அடிக்கத் துரத்தினாள். அதை உணர்ந்து தர்ஷுவும்

ஓட்டம் பிடித்தாள். “ஏய் நில்லுடி ஓடாதே.....”, கத்தியவாறே அவளைத் துரத்தினாள்.

“இது நல்லா இருக்கே....., உன்கிட்டே அடிவாங்க, நான் நிக்கவேற செய்யணுமா? முடிஞ்சா என்னைப் பிடி.....”, சொன்னவாறு அந்த மொட்டை மாடி முழுவதும், அக்காவின் கைக்கு சிக்காமல் ஓடினாள் தர்ஷிணி.

“ஏய் என்ன நடக்குது இங்கே.....? ஏழு கழுதை வயசாகுது ரெண்டு பேருக்கும், என்ன ஆட்டம் வேண்டிக் கிடக்கு. ஏண்டி... அவதான் சின்னப் பொண்ணு, உனக்கு எங்கே போச்சு அறிவு. பிள்ளை பெத்திருந்தால் அது பின்னாடி ஓடுற வயசில்....., இவகூட சின்னப் பிள்ளைமாதிரி உனக்கும் என்ன ஆட்டம் வேண்டிக் கிடக்கு...?

அக்கம் பக்கத்துல இருக்குறவங்க பார்த்தால் என்ன நினைப்பாங்க....? புள்ளை வளக்குற லட்சணத்தைப் பாருன்னு பேசுவாங்க”, தன் பெரிய மகளிடம் பொரிந்தவர், தன் சின்ன மகளின் பக்கம் திரும்பினார்.

“உனக்கும் என்ன, இன்னும் சின்னப் புள்ளைன்னு நினைப்பா? ரெண்டு மாசத்தில் கல்யாணத்தை வச்சுட்டு, உனக்கும் என்ன ஆட்டம் வேண்டி கிடக்கு. போங்கடி உள்ளே.....”, சிறுமிகளாக மாறி ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தவர்களை, நனவுலகம் மீட்டார் வசுந்தரா.

கீதாவின் முகம், தாயின் பேச்சில் நொடியில் கூம்பி விட்டது. அதைப் பார்த்த தர்ஷிணிக்கு, தாயின்மேல் கோபம் எழுந்தது. ஆனாலும் தாயை எதிர்த்துப் பேசும் வழக்கம் இல்லாததால்....., “அக்கா, இப்போ அம்மா, இப்படி வந்து கத்தினால் மட்டும் பக்கத்து வீட்டில் இருக்குறவங்க ஒண்ணும் நினைக்க மாட்டாங்களா? என்னமோ ஸ்பீக்கரை முழுங்குன மாதிரி இப்படிக் கத்துறாங்க”, அக்காவின் காதில் கிசு கிசுத்தாள்.

தாயின் பேச்சில் வாடிய அவள் முகம், தங்கையின் பேச்சில் மலர்ந்தது. தர்ஷிணி பேசுவதை வசுந்தராவும் கண்டார்.

“என்னடி அவ காதில் பேச்சு.....?”, வெடுக்கென கேட்க,

“நாம காபி குடிக்கப் போகலாமான்னு கேட்டுட்டு இருந்தேம்மா....”, அசட்டுச் சிரிப்பு சிரித்தவாறே சொன்னாள்.

சம்பந்தமே இல்லாமல் பேசிய பேச்சில் குழம்பினார் வசுந்தரா. “மத்தியானம் சாப்பாடு சாப்பிட வேண்டிய நேரத்தில் என்ன காப்பி...”, எரிச்சலாகக் கேட்டார்.

“அதானே.....”, வேகமாகச் சொல்லிவிட்டு நாக்கை கடித்தவள், “அதாம்மா..... இப்போ ஞாபகம் வந்து, சாப்பாடு சாப்பிட போகலாமான்னு கேக்க வந்தேன்..... நீங்களே கேட்டுட்டீங்க. வாக்கா, நாம சாப்பிடப் போகலாம். எனக்கு ரொம்ப பசிக்குது”, தாய் மேலே எதையும் பேசும் முன்பு, அக்காவை இழுத்துக்கொண்டு கீழே இறங்கினாள்.

சிரித்தவாறே கீதா அவளுடன் செல்ல, தலையில் அடித்துக் கொள்ளாத குறையாக, அவர்கள் பின்னால் சென்றார் வசுந்தரா.

சாப்பாட்டு அறையில் சென்று அமர்ந்து சாப்பிடத் துவங்கினர். தர்ஷிணி எதை எதையோ பேச, கீதா எதுவும் பேசாமல் அமைதியாகவே இருந்தாள். அக்காவின் மனம் தாயின் பேச்சில் காயப் பட்டிருப்பதை உணர்ந்தவள்,

“என்னக்கா அம்மா இன்னைக்குத்தான் புதுசா திட்டுறாங்களா? எதுக்கு இப்படி மூஞ்சியைத் தூக்கி வச்சுட்டு இருக்க? ப்ரீயா விடு, அதான் உனக்கும், அத்தானுக்கும் எந்தக் குறையும் இல்லன்னு டாக்டர் சொல்லிட்டாரே. கூடிய சீக்கிரம் உனக்கு குழந்தை பிறக்கத்தான் போகுது, நான் சித்தி ஆகத்தான் போறேன்”, நம்பிக்கையாகச் சொன்னாள்.

“முதல்ல நீ உன்னைப் பாரு. அதுக்குப் பிறகு சித்தி ஆகுறதைப் பாக்கலாம்”, வசுந்தராவின் குரல் பின்னால் கேட்டது.

“அம்மா....., நீங்க எங்களுக்கு அம்மாவா இல்லை சித்தியா? இப்படிப் புடுங்குற, அவளே ஒரு வாரம் கழிச்சு இன்னைக்குதான் வந்து இருக்கா. ஏம்மா இப்படி வெடுக்குன்னு பேசுறீங்க?”, தன் அக்கா கலங்குவது பிடிக்காமல், தாயிடம் சண்டைக்கு போனாள்.

அதைவிட, தன்னை வளர்த்த அக்கா கலங்குவது அவளுக்கு சுத்தமாக தாங்கிக் கொள்ள முடியவில்லை. தர்ஷிணிக்கும், கீதாவிற்கும் ஒன்பது வயது வித்தியாசம். வசுந்தரா இயல்பிலேயே கொஞ்சம் சிடு சிடு குணம் கொண்டவர். அதைவிட, ஆண் குழந்தை வேண்டுமென்று ஆசையோடு இருந்தவர் , பெற்ற இரண்டுமே பெண்ணாகிப் போனதில் வந்த எரிச்சலில், எப்பொழுதும் அப்படித்தான் இருப்பார்.

எனவே கீதாவும், தர்ஷிணியும் தாயாய் பிள்ளையாய், ஒட்டிக் கொண்டார்கள். கீதாவை, வசுந்தரா, கொட்டிக் கொட்டியே வளர்த்ததால், தங்கை தர்ஷிணியை தாயிடம் கொடுக்காமல், தர்ஷிணிக்குத் தாய் பாசத்தை கீதா வாரி வழங்கினாள்.

இதனாலேயே கீதா கொஞ்சம் ஒடுங்கியும், தர்ஷிணி குறும்புத்தனம் தொலையாமலும் வளர்ந்தார்கள். திருமணம் முடிந்த பிறகு கூட, வாரத்தில் ஒருநாள், தங்கையைக் காண வந்து விடுவாள். அவள் கணவன் கமலேஷ் கூட அவளைப் புரிந்துகொண்டு அதற்கு ஒத்துழைப்பு கொடுத்தான்.

“ஏய்... என்னடி வாய் ரொம்ப நீளுது....., கல்யாணம் ஆகி பத்து வருஷம் ஆகப் போகுது, ‘என்ன இன்னும் விசேஷம் இல்லையா’ன்னு கேக்குறவங்க கிட்டே என்ன பதில் சொல்ல? அவங்களிட்டே எல்லாம், அவங்களுக்கு ஒரு குறையும் இல்லையாம்னு பாடவா முடியும்....., என்னால் வெளியே தலை காட்ட முடியலை”, வசுந்தரா ஆங்காரமாகக் கத்த,

“அம்மா....., நீங்களே அக்காவைப் புரிஞ்சுக்காமல் இப்படிப் பேசினால் எப்படிம்மா? அவளுக்குக் கண்டிப்பா குழந்தை பிறக்கும், நீங்க வேண்ணா பாருங்க, அடுத்த வருஷமே அக்கா உங்களுக்கு ஒரு பேரனைப் பெத்து தரப் போறா”, கலங்கி அமர்ந்திருக்கும் அக்காவின் கரங்களை அழுத்தியவாறு சொன்னாள்.

அவள் பதிலில் கீதா இன்னும் அழுதாள். அழுகையினூடே, “எனக்குதான் குழந்தையா நீ இருக்கியே தர்ஷு....., நான் உன்னை என் குழந்தையாதான் நினைக்கிறேன். இனிமேல் பிறக்கும் குழந்தை இரண்டாவதுதான்”, நெகிழ்வாகச் சொன்னாள்.

“அக்கா.....”, என்ற கேவலுடன் அவளை அணைத்துக் கொண்டாள்.

“ஹூம்....., என்னண்ணும் போங்க..... அக்காவுக்கும் தங்கைக்கும் என் ஆதங்கம் எங்கே புரியுது”, சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தார் வசுந்தரா.

அதே நேரம் தர்ஷிணியின்யின் அலைபேசி ஒலி எழுப்பி அவர்களை கலைத்தது. “தர்ஷு உனக்கு ஏற்கனவே போன் வந்துது. அதை சொல்லத்தான் உன்னைக் கூப்பிட்டேன். உன்கூடப் பேசியதில் அதை நான் மறந்தே போயிட்டேன்”, கீதா வேகமாகச் சொன்னாள்.

“உன்னை நான் இனிமேல் அக்கான்னு கூப்பிட மாட்டேன். பாட்டின்னு கூப்பிடப் போறேன். அதென்ன உனக்கு அப்படி ஒரு மறதி”, அவளுக்கு அளவம் காட்டியவாறே, அலை பேசியை எடுக்க ஓடினாள்.

“ஹேய் மெதுவா போ....., அவங்க வெயிட் பண்ணுவாங்க. நீ விழுந்து வாராதே”, அவள் குரல் காற்றில் கரைந்தது.

அலை பேசியில் ஒளிர்ந்த வித்தார்த் என்ற பெயரில், தர்ஷிணியின் முகம் வெட்கத்திலும், மனம் படபடப்பிலும் சிவந்து துடித்தது. இதழ்களில் மெல்லிய சந்தோஷ நடுக்கம்

எட்டிப் பார்க்க, நடுங்கும் விரல்களால், அலைபேசியை காதுக்கு கொடுத்தாள்.

“ஹலோ.....”, அவள் குரல் காற்றில் கரைந்து அந்த பக்கம் எட்டியதா என்பதுகூட தெரியவில்லை. அதற்கு முன்பே அவன் கேட்டான், இல்லையில்லை கத்தினான்.....

“போனை வச்சுட்டு எங்கே போய் தொலஞ்ச.....”, அவன் அவ்வளவுதான் பேசினான். பின்னர் அலைபேசி பீப் ஒலியை எழுப்பியது.

எழுந்த உற்சாகம் அனைத்தும் வடிந்துவிட, அலைபேசியை காதிலிருந்து எடுத்து அதை வெறித்துப் பார்த்தாள்.

‘இவர் என்கிட்டேதான் பேசினாரா? இல்லை அவர் பக்கத்தில் இருக்குறவங்ககிட்டே பேசினாரா? அதான் போனை எடுத்துட்டேனே, பிறகு என்ன? இல்லன்னா போன் கட் ஆயிடுச்சோ?’, தன் குழப்பத்திலும், , அவள் விரல்கள் தானாக அவனுக்கு கால் செய்தது.

கால் போய்க்கொண்டே இருந்ததே தவிர அவன் அதை எடுக்கவே இல்லை. ‘ச்சே...., அவருக்கு வேலை வந்துடுச்சு போல. சரி நாம பிறகு போன் செய்யலாம்’, அதை அத்தோடு விட்டுவிட்டு வெளியேறினாள்.

ஆனால் அவன் கோபத்தில் கொந்தளித்துதான் அவளது அழைப்பை எடுக்கவில்லை என்பதை அவள் அறிந்திருந்தால்.....

********** நந்தன்....., தன் கையில் இருந்த புகைப்படத்தை இமைக்க கூட மறந்து சுவாரசியமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்தப் புகைப்படத்தில், அவனைப் பார்த்து வசீகரமாக சிரித்துக் கொண்டிருந்தாள் ப்ரியா.

அவள் அழகில் தன்னை மறந்து லயித்தவன், சட்டென தன்னை மீட்டுக் கொண்டு, குளிக்கச் சென்றான். இன்னும்

இரண்டு மாதங்களில் அவளுடன் திருமணம்....., நினைக்கவே தித்தித்தது. ஷவரின் அடியில் நின்று இருக்கும் போதும், அவள் நினைவே அவனை இம்சித்தது.

கல்யாணக் கனவுகள் நிரம்பிய சராசரி இளைஞன்தான் அவன். இந்த இருபத்தியாறு வருட வாழ்வில், ஐந்து வருடக் கல்லூரி வாழ்க்கையில் கூட, அவன் மனம் இவ்வளவு அலை பாய்ந்ததில்லை.

எப்பொழுது ப்ரியாவைப் பார்த்தானோ அப்பொழுதே அவள்மேல் மையல் கொண்டுவிட்டான். மூன்று வருடமாக அவன் கவனிக்கும் தொழிலைக் கூட அவன் இவ்வளவு நேசிக்கிறானா என்று கேட்டால், பதில் 'இல்லை' என்பதாகத்தான் இருக்கும்.

ஆனால், ப்ரியாவை அவ்வளவு நேசித்தான் அவன். கண்டவுடனே அவள்மேல் ஒரு, இனம் புரியாத உணர்வு எழுந்தது. ஷவரின் அடியில் நின்றவனின் சிந்தை, அவளை முதல் முதலில் பார்த்ததை நினைத்துப் பார்த்தது.

அன்று, தனக்கு முக்கியமான வெளிநாட்டு ஆர்டர் ஒன்று கையொப்பமாகவேண்டி இருந்தது. அதைச் செய்யும் முன்பு, கோவிலுக்குச் சென்றுவிட்டுச் செல்லுமாறு அவனது தாய் வசந்தா சொல்லவே, அவசரமாகக் கோவிலுக்குச் சென்றான்.

தீபாரதனையை கண்ணில் ஒற்ற, கைகளைக் கொண்டு சென்ற அதே நேரம், இன்னொரு வளைக் கரமும் அவன் கையோடு இணைந்து தீபாராதனையை வணங்கியது. அந்தக் கரங்களின் அழகிலேயே லயித்தவன், அந்தக் கரங்களுக்குச் சொந்தக்காரியின் முகத்தைப் பார்த்த நொடியில் ஒரு நிமிடம் உறைந்தான். அவள் அங்கிருந்து நகர்ந்து சென்றதைக் கூட உணராமல் இருந்தவன், தன்னையே மீட்டுக் கொண்டு, அதை அசட்டை செய்துவிட்டு, வேலையை கவனிக்கச் சென்றான்.

மறுமுறை அவளை, பிசினஸ் விஷயமாகத் தொழில்முறை லன்ச் சாப்பிடப் போகும் வழியில், ஹோட்டலின் வெளியே அவளைப் பார்த்தான். அப்பொழுது, ஒரு அதிகப்படியான ஆர்வம் எழுந்தது. அந்த நேரமும் அவளைத் தொடர முடியாத நிலை எழவே, அதை அடக்கினான்.

பிறகு அவளைப் பார்க்க முடியாத ஒரு மாதத்தில், எங்கே சென்றாலும் அவளது மதி முகம் தெரிகிறதா என்ற அவனது தேடலை, அவனே வியப்பாய் உணர்ந்தான். அதை அசட்டை செய்ய அவன் எவ்வளவோ முயன்றும், அவனால் முடியவில்லை.

அவள் நினைப்பை ஒதுக்கி வைக்க முடியாமல், அதனுடனே வாழப் பழகினான், அவள் நினைப்பை, அழகை, சுவாசிக்கப் பழகினான். அன்று அவசரமாக போன் வரவே, அலுவலகம் கிளம்பிச் சென்றான். அங்கே, தனக்குக் காத்திருக்கும் ஆனந்த அதிர்ச்சியை, அவன் அறியவில்லை.

அவனது ஜாக்குவார் கார் சாலையில் சீறியது. டிரைவரை விடுத்து, அவன்தான் எப்பொழுதும் காரை ஓட்டுவான். அவனது தாய் வெளியே செல்லவேண்டுமென்றால் தேவை என்பதற்காக மட்டுமே, டிரைவரை வைத்துள்ளான்.

காரை அதன் இடத்தில் நிறுத்திவிட்டு, தன் ஐ போனில் இஞ்சினியருக்கு கால் செய்தான். “என்ன குமார்.....? மெஷின்ல என்ன ப்ராப்ளம்? இன்னும் அதை ஏன் சரி செய்யாமல் இருக்கீங்க.....? இப்போ அதைச் சரி செய்யலன்னா கம்பெனிக்கு எவ்வளவு நஷ்டம் வரும்னு தெரியுமா? அப்படித் தெரிஞ்சும் ஏன் பேசாமல் இருக்கீங்க?”, கொஞ்சம் கோபமாகவே கேட்டான்.

“சார் கண்டிப்பா தெரியும், அப்படித் தெரிந்ததால் தான், ராத்திரி முழுக்க இங்கேயே இருந்து சரி பண்ணிட்டு இருக்கேன். என்னோட அசிச்டண்டுகளை விடாமல், நானே நின்னு சரி பண்ணிட்டு இருக்கேன். என்னால் முடிந்த

அளவு, மெஷினை ஓட வச்சுட்டேன். இப்போ மெஷின் ஓடுது சார்”, குமார் வேகமாக பதில் சொன்னான்.

“ஓ……., அப்போ நைட்டே மெஷின் ரிப்பேரா, சொல்லவே இல்லை. என்கிட்டே சொல்லணும்னு உங்களுக்குத் தோணவே இல்லையா?என் கம்பெனியில் என்ன நடக்குதுன்னு எனக்குத் தெரியணுமா வேண்டாமா?”, இந்த சம்பாஷனைகள் அனைத்தும், காரில் இருந்து இறங்கி, பாக்டரிக்குள் நடக்கும் போது நடந்தது.

எப்பொழுதும் கம்பீரமாக, கோட், டையில் வரும் தங்கள் முதலாளி, இன்று சாதாரண சட்டை பேண்டில் வருவதைப் பார்த்து, அவனது பஞ்சு மில்லில் வேலை செய்யும் தொழிலாளர்கள் அனைவரும் அவனை வித்தியாசமாகப் பார்த்தார்கள்.

உள்ளே நுழைந்தவுடனே சூப்ரவைசரைத்தான் தேடினான். போனுக்கு காதைக் கொடுத்துக்கொண்டே பார்வையைச் சுழலவிட்டான். அனைத்து தொழிலாளர்களின் காலை வணக்கங்களையும் பெற்றுக் கொண்டான்.

“சார்… முதல்ல ஏதோ சின்ன மிஸ்டேக்குன்னுதான் நினைத்துத் துவங்கினோம், ஆனால்……., உங்களுக்கே தெரியும் இவையெல்லாம், உங்க தாத்தா காலத்தில் வாங்கிய மெஷின்கள், அது இவ்வளவு நாள் ஓடுவதே பெருசு. நானும், என்னால் முடிந்த அளவு எல்லா விதத்திலும் அதை சரி செஞ்சுட்டுதான் இருக்கேன். இதில் இருக்க மொத்த பார்ட்டும் கிட்டத்தட்ட மாத்தியாச்சு……”, உள்ள நிலையை அவனுக்கு விளக்கினான்.

அவன் சொல்லி முடிக்கவும், நந்தன் அவனிடம் வரவும் சரியாக இருந்தது. சூப்ரவைசர் ரங்கனும் அங்கேதான் இருந்தார்.

“என்ன ரங்கன்……., வேலை எல்லாம் பாதியாவது முடிஞ்சுதா இல்லையா? நூல் எல்லாம் சீக்கிரம் அனுப்பியாகணும். இந்த நேரத்தில் இப்படிச்

செய்தால்.....”, வேலை, குறித்த நேரத்தில் முடிய வேண்டுமென்ற எரிச்சல் அவன் குரலில்.

“குட் மார்னிங் சார், மெசினை முடிந்த அளவு சரி செய்து, சரி செய்துதான் ஓட்டிட்டு இருக்கோம் சார்..... வேலையும் முக்கால் வாசி முடிந்து விட்டது. இன்னும் கொஞ்சம் தான் இருக்கு”, அவசரமாக பதில் சொன்னான்.

“ஓ.....”, அவன் சொன்ன செய்தியை வேகமாக க்ராகித்தான்.

“சரி நீங்க வேலையைப் பாருங்க, குமார் வேலை முடிஞ்சுதா? கொஞ்சம் என்னோட ரூமுக்கு வாங்க”, மெஷினை ஒரு பார்வை பார்த்துவிட்டு, குமாரை அழைத்துக் கொண்டு அறைக்கு விரைந்தான்.

குமார் செல்லும் பொழுதே அவனது அலைபேசி அடித்தது. அதைக் கண்டு கொள்ளாமல் அவன் பின்னால் சென்றான். நந்தனும் அதைக் கவனித்தான், ஆனால் அவனது கவனம்முழுவதும், மெஷினைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்ததால், அதில் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை.

வேக நடையில் தன் அலுவலகத்தை அடைந்து, இருக்கையில் அமர்ந்தான். எதிரில் குமாரையும் அமரச் சொன்னான். அதற்குள்ளாகவே அவனது அலைபேசி மூன்று முறை அதன் வேலையைச் செய்தது.

“அப்புறம்....., சொல்லுங்க....., மெஷினை மாத்தியே ஆகணுமா? அவ்வளவு மோசமா போய்டுச்சா என்ன?”, புருவ மத்தியில் முடிச்சு விழக் கேட்டான்.

“சார்.... அந்த மெஷின் வாங்கி கிட்டத்தட்ட எழுபத்தைந்து வருஷம் இருக்கும்..... அதில் புது ஸ்பேர் பார்ட்ஸ் போட்டால் கூட, அதையும் அந்த மெஷின் சீக்கிரம் தேச்சுடுது, அதனால்தான் கொஞ்சம் சமாளிக்க முடியலை.

மாத்திட்டால் நல்லா இருக்கும் சார்”, நிலைமையை விளக்கினான்.

பேசும்பொழுதே அவன் அலைபேசி விடாமல் அடிக்க, அதை குமார் கட் செய்துகொண்டே இருந்தான். பேச்சின் நடுவில் அது தொந்தரவாக இருக்கவே, “குமார், விடாமல் அடிக்கிறாங்கன்னா ஏதாவது முக்கியமான விஷயமா இருக்கப் போகுது. எடுத்து என்னன்னுதான் கேளுங்களேன்”, தடங்கல் அவனுக்குப் பிடிக்கவில்லை.

“அப்படி முக்கியமான விஷயம் எதுவும் இல்ல சார். என்னோட தங்கைதான்.....”, சொன்னவாறே அவன் விசிட்டர் ரூம் பக்கம் பார்வையைத் திருப்ப, இவர்களையே பார்த்தவாறு, நந்தனின் தேடலுக்குச் சொந்தமானவள் நின்று கொண்டிருந்தாள்.

அவளைப் பார்த்த பிறகு, குமார் பேசிய எதுவும் அவன் காதில் விழவே இல்லை. அவளையே பார்த்தவாறு இருந்தான் நந்தன். ஒரு மாதகாலமாக அவளை, காணாமல் கண்டதால், அவனால் விழிகளை அவளை விட்டுத் திருப்பவே முடியவில்லை.

***

தாகம் - 3.

மழையில் நனையும் பொழுதும்

தாகத்தில் தவிக்கும் விந்தை

வெந்நீர் ஊற்றுக்களின் அருகில்

தண்ணீர் ஊற்றைத் தேடினால்

தவறு என்மேலா.....?

இல்லை படைத்தவன் மேலா.....?

மிதமான ஒப்பனையில் மெல்லிய காட்டன் புடவையில், தூக்கிப் போட்டக் கொண்டையோடு, நெற்றியில் இருக்கிறதா இல்லையா என்று உணர முடியாத அளவு கறுப்பு வண்ணப் பொட்டுடன், தன் இருபத்தியேழு வயதை, முப்பதுக்கும் அதிகமாகத் தெரிவிக்கும் வகையில், எளிமையான ஒப்பனையுடன் வீட்டை விட்டு வெளியேறினாள் திவ்யா.

அவள் எவ்வளவு முயன்றும், அவளது அழகை மறைக்க முடியவில்லை. அவளைப் பற்றிச் சொல்லுவதென்றால்..... கோதுமை நிறம், வட்ட முகம், பிறை போன்ற நெற்றி, கூர்மையான நாசி, செதுக்கி வைத்த இதழ்கள், ஐந்தடி இரண்டு அங்குலம் வளர்த்தி. கண்களின் கவர்ச்சியை, அவள் அணியும் பெரிய கண்ணாடி மறைத்துவிடும்.

அவள் என்னவோ தன் கண்களின் கவர்ச்சியை மறைக்க வேண்டுமென்று நினைத்து அதை அணியவில்லை. தன் கண்களில் வழியும் சோகம் மற்றவருக்குத் தெரிய வேண்டாம் என்றே அணிகிறாள். வீட்டை விட்டு வெளியேறியவுடன், சுற்றிலும் பார்வையைச் சுழலவிட்டாள்.

இந்த சென்னை மாநகருக்குள், ஒரு கோடியில் இருக்கும் அவளைத் தெரிந்தவர் ஒரே ஒருவன்தான். அவனும் மறு கோடியில் இருக்கின்றான். அவனைக் காணும் வாய்ப்பு குறைவுதான், ஆனாலும் தினமும் எழும் எச்சரிக்கை உணர்வை தவிர்க்க முடியவில்லை.

அதை உதறிவிட்டு, தன் கையில் இருந்த ஹேன்ட் பேக், கண்ணனின் பேக், லஞ்ச் பேக், என அனைத்தையும், ஹோண்டா ஆக்டிவாவில் வைத்துவிட்டு, மகனையும் ஏற்றிக் கொண்டு, அவனது க்ரஷை நோக்கிச் சென்றாள். இதழ்களை, மெலிதாகப் புன்னகைக்கும் விதமாக வைத்துக் கொண்டாள்.

இப்பொழுது அவளைப் பார்ப்பவர்கள், அவள் மனதுக்குள் குட்டி எரிமலையே குமுறிக் கொண்டிருக்கிறது என்று, கற்பூரத்தில் அடித்து சத்தியம் செய்தால் கூட நம்ப மாட்டார்கள். கண்ணனின் க்ரஷை நெருங்க நெருங்க கண்ணனின் அழுகையும் அதிகரித்தது.

அவள் வண்டியிலேயே திரும்பி நின்றுகொண்டு, அவள் இடுப்பை அணைத்துக் கொண்டான். “அம்மா, இல்ல..... இல்ல..... வேண்டாம்..... அங்கே வேண்டாம்....., போமாட்டேன்.....”, இதையே திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தான்.

“கண்ணா அழக் கூடாது....., கண்ணா குட் பாய் தானே. அழாமப் போனீங்கன்னா, அம்மா கண்ணனுக்கு சாக்லெட் வாங்கித் தருவேனாம்....”, அவனுக்கு ஆசை காட்டினாள்.

“எனக்கு வேண்டாம்.....”, உடனே மறுத்தான் அவன். அவன் அழுகையும் கொஞ்சம் அதிகரித்தது.

“சரி சாக்லெட் வேண்டாம்....., அம்மா உனக்கு கார் பொம்மை வாங்கித் தருவேனாம்..... சமத்தா போடா கண்ணா.....”, அடுத்த டீலில் இறங்கினாள்.

“எனக்கு காரு வேணா.....”, இப்பொழுது மறுப்பு பெரிதாகவே வந்தது.

“சரி அப்போ அம்மா இன்னைக்கு சீக்கிரம் வந்துடுவனாம்....., அம்மா வந்த உடனே நாம வெளியே போகலாம்”, எப்படியாவது அவனை சமாதனப் படுத்த முயன்றாள்.

“அம்மா போ வேணா....., நானு அம்மா கூட வாறே.....”, அவன் அழுகை இப்பொழுது பெருங்குரலாக மாறி இருந்தது. அப்படி மாறிய வேளையில் அவனது க்ரஷும் வந்து விட்டது.

வண்டியிலிருந்து இறங்க மாட்டேன் என்று சொன்ன மகனை, கட்டாயப்படுத்தி தூக்கும் வேளையிலேயே, பள்ளியின் ஆயா வேகமாக வருவது தெரிந்தது.

“இன்னா கண்ணா....., தினத்துக்கும் இம்மாம் அழுகை....., அம்மா ஜோலிக்கு போத்தாவல .....?”, சென்னை தமிழில் சதாய்த்தாள்.

“நான் வர்ர்ல....., நீ போ.....”, ஆயாவை தள்ளிவிட்டு அவள் கையில் திமிறினான்.

“நீ போம்மா நா(ன்) பாத்துக்கறேன் கண்ணனை....., சின்னப் புள்ளையாட்டம் நீயும் அவனோட அழுதால் ஆச்சா.....? நீ இருக்கங் காட்டியும் கண்ணன் அழுதுன்னேதான் இருக்கும், நீ கிளம்பு.....”, திவ்யாவை விரட்டினாள் ஆயா.

“ஆயா....., எனக்கு இவனோட மிஸ்ஸை பாக்கணும், கொஞ்சம் வரச் சொல்லுறீங்களா? நான் வேற ஸ்கூல்க்குப் போகணும்.....”, நேரமாவதை உணர்ந்து வாட்ச்சைப் பார்த்தவாறே தயக்கமாகக் கேட்டாள்.

“இதோ நொடியிலே இட்டாரேன்.....”, சொல்லிவிட்டு, கத்திக் கூச்சல் போடும் கண்ணனை, அவன் பிடியில்

இருந்த திவ்யாவின் புடவையை லாவகமாக உருவிப் போட்டுவிட்டு, எதை எதையோ பேசியவாறு அழைத்துச் சென்றாள்.

கண்ணன் அதை செவி மடுக்கிறானா என்பதைப் பற்றி அவள் கவலையே படவில்லை. கதறியபடியே செல்லும் தன் மகனை, இயலாமையாய் பார்த்தவாறு நின்றிருந்தாள் அவள். தன் கண்கள் கலங்குவதை அவளால் தடுக்க முடியவில்லை.

“குட் மார்னிங் மேம்....., என்னைப் பாக்கணும்னு சொன்னீங்களாம்.....”, கேள்வியாக நிறுத்தினார் பள்ளியின் ஆசிரியை ஹேமா.

“குட் மார்னிங்....., கண்ணனைப் பற்றித்தான் உங்ககிட்டே பேசணும்னு நினைத்தேன். ஆறு மாசம் ஆகியும் அவன் ஸ்கூல் வரும்போது இப்படி அழுறானே....., இங்கேயும் அழுதுட்டேதான் இருக்கானா.....?”, எவ்வளவு முயன்றும் குரல் தழுதழுத்தது அவளுக்கு.

“இன்னும் கொஞ்ச நேரம் அழுவான்....., பிறகு அமைதியா ஒரு ஓரத்தில் உக்காந்துப்பான். ஆனால் நாங்க அவனை அப்படியே விட மாட்டோம்....., எதையாவது விளையாடச் சொல்லுவோம், படங்கள் காட்டி அவனுக்கு விளக்குவோம், கதை சொல்லிக் கொடுப்போம்.....”, அடுக்கிக் கொண்டே போனாள்.

“எல்லாத்துலையும் அவன் கலந்துக்கறானா.....?”, மெல்லிய எதிர் பார்ப்பு அவள் குரலில்.

“சாரி டு சே திஸ்....., அவன் எதிலுமே ஈடுபாடா செயல்பட மாட்டான். அவன் வயசுக்கு அவனோட அமைதி....., எங்களுக்கே ஆச்சரியம்தான். அவன் வயசுப் பிள்ளைங்களோட கூட மிங்கிள் ஆக மாட்டிக்கான். அதுதான் பிரச்சனையே....., நாங்களும் எவ்வளவோ ட்ரை பண்ணுறோம்.....”, இதற்குமேல் அவள் மகனைப் பற்றிச் சொல்ல அவளுக்கு முடியவில்லை.

திவ்யா, புரிந்தது என்பதுபோல் தலையை ஆட்டினாள். “கொஞ்சம் பாத்துக்கோங்க.....”, இதற்குமேல் என்ன சொல்லுவதென்று அவளுக்குத் தெரியவில்லை. வீட்டில் பிரச்சனையை வைத்துக் கொண்டு, வெளியில் அவன் சரியில்லை என்று, அவளால் எப்படிக் குற்றம் சொல்ல முடியும்?

“கண்டிப்பா அவனை நான் தனி கேர் எடுத்துப் பாத்துக்கறேன் மேம்....., நீங்க கவலைப் படாமல் போய்ட்டு வாங்க.....”, திவ்யாவின் கசங்கிய முகத்தைப் பார்த்து ஆறுதலாகச் சொன்னாள்.

“தேங்க்ஸ்....., அப்புறம், என்னை திவ்யான்னே சொல்லுங்க, அந்த மேம் வேண்டாம்..... சாரி உங்க பேர்...?”, தன் தோற்றத்தைப் பார்த்து, அவள் அழைக்கும் விதம் தெரிந்து, தயங்காமல் சொன்னாள் திவ்யா.

“சரி திவ்யா..... என்னோட பேர் ஹேமா. அடேங்கப்பா... ரொம்ப சீக்கிரம் கேட்டுட்டீங்க.....”, அவள், இங்கு ஆறுமாதமாக வந்து சென்ற பிறகும், இவ்வளவுநாள் இல்லாமல், தாமதமாக கேட்டதை கேலி செய்தாள்.

“சாரி.....”, குற்ற உணர்வில் அவள் தலை கவிழ....., “திவ்யா....., எதுக்கு இப்போ இவ்வளவு பீல் பண்ணுறீங்க....., விடுங்க. இப்போ பேர் இல்லாத பூச்சின்னு கூப்பிட்டால் கூடத்தான் நான் திரும்பி பார்ப்பேன்....., இதுக்கெல்லாம் பீல் பண்ணினால் எப்படி.....?”, திவ்யாவை சமாதானம் செய்தாள்.

விளையாட்டாக பேசும் ஹேமாவையே விழி விரியப் பார்த்தாள் திவ்யா. “அப்படிப் பாக்காதீங்க திவ்யா....., நான் விளையாட்டா இருந்தாலும், உங்க பையனை பொறுப்பாப் பாத்துப்பேன் என்னை நம்புங்க.....”, அவள் பார்வையை உணர்ந்து சொன்னாள்.

“ஐயோ ஹேமா.... நான் அப்படி நினைச்சுப் பாக்கலை.....”, வேகமாகச் சொன்னாள் திவ்யா.

“பின்ன இவ எப்பவுமே இப்படித்தான் பேசுவாளா.....? வாயை மூடுவாளா இல்லையான்னு பாத்தீங்களா....?”, திவ்யாவை விடுவதாக இல்லை.

இப்பொழுதுதான் திவ்யாவின் இதழ்களில் மெல்லிய புன்னகை எட்டிப் பார்த்தது. “ஹப்பா....., உங்களை இத்துனோண்டு சிரிக்க வைக்க, நான் எவ்வளவு பேசவேண்டி இருக்கு.....”, போலியாக அலுத்துக் கொண்டாள்.

“ரொம்ப நல்லா பேசுறீங்க....., இதுக்கு முன்னாடி நான் வந்தப்போ உங்களைப் பாத்தது இல்லையே”, புருவம் நெரியக் கேட்டாள்.

“ஹல்லோ....., நீங்க இங்கே வந்தப்போ எப்போ நிமிர்ந்து பாத்து இருக்கீங்க.....? நானுமே, எங்கே நீங்க, வண்டியோட எங்கேயாவது மோதி விழுந்துடுவீங்களோன்னு பதை பதச்சுப் போயிருக்கேன். அப்படி இந்தத் தரையில் என்னதான் இருக்கோ.....?”, ஹேமா இப்படிப் பேசவே திவ்யாவின் மலர்ந்திருந்த முகம், சட்டென கூம்பி விட்டது.

அவள் மாற்றத்தை நொடியில் உணர்ந்த ஹேமா....., அவள் கையை மென்மையாகப் பற்றினாள். “திவ்யா சாரி..., நான் எதையோ தப்பா சொல்லிட்டேன்னு நினைக்கிறேன்.....”, உண்மையான வருத்தம் அவள் குரலில்.

காதல் மட்டும்தான் கண்டவுடன் மலருமா? நட்பு கூட மலரும். இங்கே ஒரு அழகான நட்பு பூத்தது. “ஹேமா.... அப்படியெல்லாம் எதுவும் இல்லை..... நானா எதையாவது நினைச்சு வருத்தப்பட்டா, அதுக்கு நீங்க எப்படிப் பொறுப்பாவீங்க.....”, அவள் கைகளின்மேல் தன் கைகளை வைத்தாள்.

“திவ்யா, நானும் உங்க வயசுதான் இருப்பேன்....., என்னை நீ வா போன்னே சொல்லுங்க.....”, தோழமையை உடனே பற்றிக் கொண்டாள் ஹேமா, அதை வளர்க்கவும் விரும்பினாள்.

“ஹேமா.... என்னைச் சொல்லிட்டு நீ மட்டும் ‘ங்க’ போடுற, நீயும் அப்படியே சொல் சரியா”, திவ்யாவும் நட்புக்கு நீர் பாய்ச்சவே, அது வேகமாகவே வளர்ந்தது.

“சரி திவ்யா நீ கிளம்பு, வழக்கத்தைவிட, உனக்கு கால்மணி நேரம் லேட் ஆயிடுச்சு”, அவள் சொன்ன பிறகுதான்....., காலத்தை மறந்து தான் இருந்தது புரிந்தது.

“ஓ....., சாரி நான் உன் டைமையும் வேஸ்ட் பண்ணிட்டேன்.....”, சங்கடமாகச் சொன்னாள்.

“ஆமா.... நான் ட்ரைனை பிடிக்கப் போறேன்..... லேட் ஆக..... நீவேற....., அங்கே போய் குட்டிங்களோட கொட்டம் அடிக்கப் போறேன்....., இது என் அம்மா வச்சு இருக்க க்ரஷ்தான்....., அதனால்தான் கண்ணனை இங்கே விட வரும்போது நான் இல்லை. சரி, நீ கிளம்பு.... விட்டால் நான் பேசிட்டே இருப்பேன்.....”, அவளை அனுப்பினாள்.

திவ்யாவும் கிளம்பினாள். ஹோண்டாவை அவள் ஸ்டார்ட் செய்யவும்....., “திவ்யா.....”, என அழைத்தவள், திவ்யாவின் கண்ணாடி அவள் முகத்துக்கு நல்லாவே இல்லை என சொல்ல நினைத்தவள், முதல் நாளே குறை சொல்ல வேண்டாம் என்ற எண்ணத்தில் அதை கைவிட்டாள்.

திவ்யா என்ன என்பதுபோல் அவளை திரும்பிப் பார்க்க, “டேக் கேர்....”, என்றாள். அவள் சொன்ன வார்த்தையில்....., தன் மனக் காயங்களை இவ்வளவு நேரம் மறந்து இருந்ததும், அவளுடன் பேசிய திருப்தியும், அவள் வாழ்த்தில் நிம்மதியும் ஒருங்கே அடைய, “தேங்க்ஸ்..... அண்ட் யு டூ”, என்றாள்.

மனம் லேசாகி இருந்ததால்....., பள்ளியில் லேட் ஆனதற்கு என்ன சொல்வது என்ற கவலை கூட இல்லாமல் நிம்மதியாகவே வண்டியைச் செலுத்தினாள்.

********** “அப்பா.....”, “அப்பா.....”, “அப்ப்பப்பா.....”, முதலில் சிணுங்கலாகவும், பின்னர் கொஞ்சம் சத்தமாகவும், அதன் பிறகு காட்டுக் கத்தலாகவும் ஒலித்தது அஞ்சலியின் குரல்.

அவள் குரல் உச்ச டெசிபலில் கேட்ட பிறகுதான், தான் ஜாகிங் முடிந்து அறைக்குக் கூடச் செல்லாமல் அங்கேயே அமர்ந்துவிட்டது தெரிந்தது ஜீவாவிற்கு.

“அப்பா வாரேண்டா செல்லம்.....”, கீழே இருந்தே சத்தம் கொடுத்தவன், படிகளை இரண்டு இரண்டாகத் தாண்டி, தங்கள் அறைக்குச் சென்றான்.

அங்கே படுக்கையில் எழுந்து அமர்ந்து, முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு, கோபமாக அமர்ந்திருந்தாள் அஞ்சலி. அவள் முகத்தில் இருந்தே அவள் கோபத்தை உணர்ந்து கொண்டவன், “அட... அஞ்சலி பாப்பா இன்னைக்கு ரொம்ப நேரம் தூங்கிட்டாங்க போல, அப்பா இவ்வளவு நேரம் இங்கேதான் இருந்தேன்....., அப்புறம் ரொம்ப பசிச்சுதா, அதான் காபி குடிக்கப் போயிருந்தேன்.

“என் செல்லத்துக்கு அதனால் கோபமா? சரி இனிமேல் நான் பசிச்சாலும் உன் கிட்டேயே இருக்கேன் சரியா?”, முகத்தை ரொம்பவே அப்பிராணியாக வைத்துக்கொண்டு அவன் சொல்லவே, அஞ்சலி, அப்பாவின் செய்கையில் கரைந்தே போனாள்.

“இல்லப்பா....., பாப்பாக்கு உங்க மேல கோபமே இல்ல....., நீங்கதான் என் செல்ல்ல்ல அப்பாவாச்சே.....”, தாவி அவன் கழுத்தை கட்டிக் கொண்டாள்.

மகளை சமாதானம் செய்த சந்தோசத்தில் அவனும் அவளோடு இணைந்து கொண்டான். அதன் பிறகு இருவருமே ஒன்றாகச் சேர்ந்து, குளித்து, மகளுக்கு இலகுவான பனியன் துணியில், மிருதுவான ஆடையை எடுத்து அணிவித்து, தானும் உடை மாற்றி, அவளைத் தூக்கிக் கொண்டு கீழே இறங்கி வந்தான்.

முத்து அவர்களுக்காகக் காத்திருந்தார். “பாப்பா ஓடி வாங்க ஓடிவாங்க....., தாத்தா இன்னைக்கு உங்களுக்குப் பிடிச்ச இட்லி செஞ்சு வச்சு இருக்கேன். சாப்பிடுறீங்களா?”, மகளை கீழே இறக்கி விடவே, அவளும் முத்துவிடம் ஓடிச் சென்றாள்.

“குட் மார்னிங் தாத்தா.....”, சொன்னவாறு அவர் கன்னத்தில் முத்தமிட்டாள்.

அவளை டைனிங் டேபிள் மேல் அமர வைத்தார். ஜீவாவோ பூஜை அறையில் இருந்த தன் தாய் தந்தையின் புகைப்படங்களுக்கு ஊதுபத்தி ஏற்றிவிட்டு, விழுந்து வணங்கி விட்டு, ஒரு நிமிடம் கண் மூடி நின்றான்.

“பாப்பா.... தாத்தாவே இட்லியை ஊட்டி விடட்டுமா.....?”, அவர் கேட்டார்.

“உஷ்....., அப்பா சாமி கும்புதாங்க, சத்தம் போடாதீங்க”, மழலையாக, கண்களை உருட்டி, பெரிய மனுஷியாகச் சொன்னாள்.

அவள் சொன்ன தோரணையில் நெட்டி முறித்தவர், சிறு யோசனை தோன்றியவராக, “பாப்பா.... தாத்தா ஒண்ணு சொல்லுறேன், அதை அப்படியே அப்பாட்ட கேக்குறியா?”, அவர் ரகசியமாகக் கேட்டார்.

“சரி தாத்தா.....”, அவளும் சற்று குனிந்து அதே போல் ரகசியமாகவே சொன்னாள்.

“அப்பாகிட்டே....., எனக்கு அம்மா வேணும்னு சொல்லுறியா.....?”, அவர் ஆர்வமாகக் கேட்டார்.

அதைக் கேட்டவுடனே அவள் முகம் களை இழந்தது. “அம்மா எக்கு தாத்தா.....? வேண்டாம். எப்போ பாத்தாலும் உம்முன்னு இதுக்கும்....., சத்தம் போட்டால் தித்தும்..... தூமுக்குள்ளேயே இதுக்கும், எதுக்கு அம்மா.....? எனக்கு வேண்டா(ம்)”, அவளுக்குத் தெரிந்த வரையில், தாய்

என்பவள் இப்படிப் பட்டவள் என்ற பிம்பம் மட்டுமே இருந்தது.

அதை மனதில் வைத்துக்கொண்டு, இதற்கு எதற்கு அம்மா என்று முடித்துவிட்டாள். அதைக் கேட்டு முத்துவின் இதயம் அடி வாங்கியது என்றால், எதேச்சையாக அங்கே வந்த ஜீவா, மனதளவில் நொந்தே போனான்.

கண்டிப்பான பார்வையை முத்துவை நோக்கி வீச, அதை சந்திக்க, அவர் எதுக்கு அங்கே நிற்கப் போகிறார்? கிச்சனுக்குள் வேலை இருக்கும் சாக்கில் அங்கே புகுந்து கொண்டார்.

கோபம், எரிச்சல், இயலாமை என அனைத்தும் கலந்த கலவையாக அவன் இருக்க, இட்லிக்களை துண்டம் போட்டு, கிண்ணத்தில் கொட்டி, கொஞ்சம் சாம்பார் ஊற்றி, அஞ்சலியின் கையில் கொடுக்க,

“தேங்க்ஸ்ப்பா....., என் சோ ஸ்வீட் அப்பா....., உம்மா....., உம்மா....”, உதட்டை குவித்து, காற்றிலே அவள் பறக்கவிட்ட முத்தங்கள் கூட அவன் மனதை இளக்கவில்லை.

அவள் தலையைக் கோதியவன் அமைதியாக ஒரு இருக்கையில் அமர்ந்தான். அவன் சாப்பிடாமல் இருப்பதைப் பார்த்தவள், “நீங்களும் சாப்பிதுங்கப்பா....., தாத்தா..... அப்பாக்கு சட்தினி.....”, தந்தையின் விருப்பம் அறிந்து, குரல் கொடுத்தாள். அவளுக்கு ரு, ட என சில எழுத்துக்கள் வராது, எனவே அப்படிப் பேசினாள்.

அப்படி ஒரு பெண்ணுக்குப் பிறந்த மகளா இது என்ற யோசனைதான், இரு ஆண்கள் மனதிலும் ஓடியது. சுயநலத்தின் மொத்த உருவமாக இருந்த அவள் கருவில் , இப்படி ஒரு மாணிக்க மகள் எப்படி உதித்தாள்?’, முத்து வியந்து போனார்.

அஞ்சலி உருவத்தில் மட்டுமல்ல, உள்ளத்திலும் அப்படியே ஜீவாதான் என்று பூரித்துப் போனார் முத்து. பாப்பா

அழைத்து, உடனே வரவில்லை என்றால், அவள் கத்தத் துவங்கி விடுவாள் எனவே வேகமாக வந்தார்.

ஜீவாவிற்கு ஒரு தட்டை எடுத்து வைத்து, அவளது சின்னக் கரங்களால், இட்லிகளையும் அவளே எடுத்து வைத்தாள். அவள் செய்கையில், ஜீவாவிற்கு கண்கள் கலங்கியது. தன் தாயே மறு உருவம் கொண்டு வந்ததாக எண்ணி, அவன் கண்கள் கலங்கியது.

இப்படி ஒரு மகளை கொடுத்ததற்காகவாவது, தன் மனைவியை மன்னிக்கலாம் என்று ஒரு மனம் சொன்னது. மற்றொரு மனமோ, 'அவளுக்கு மன்னிப்பா' என்று கறுவியது. இவன் கோபத்தை அதிகரிக்கவென்றே கேட்டது, வாசலில் அந்தக் குரல்.....

புயலென எழுந்து வாசலுக்கு விரைந்தவன், "படியில் காலை வச்ச....., நான் மனுஷனாவே இருக்க மாட்டேன். ஆபீஸ் விஷயம் எதுவாக இருந்தாலும், ஆபீஸ்ல பேசிக்கலாம். வெளியே போ.....", அவன் கத்தலில், வந்தவன் ஸ்தம்பித்து நிற்க, தந்தையின் கோப முகத்தை, திகைப்பாய் பார்த்தவாறு, அழத் தயாரானாள் அஞ்சலி. முத்துவே கூட ஜீவாவிடம் இந்தக் கோபத்தை எதிர் பார்க்கவில்லை.

***

தாகம் - 4.

பனிச்சாரலாய் உன் வார்த்தைகள்

மனம் நனைக்கும் என்று நான் நினைக்க

தேள் கொடுக்காய்

அது வலி தருவதேன்.....

நந்தனின் கவனம் தன்னிடம் இல்லை என்பதை உணர்ந்துகொண்ட குமார், “சார்....., அது என் தங்கை....., நேத்து நைட் நான் வீட்டுக்கே போகலன்னு காலையிலேயே என்னைத் தேடி வந்துட்டா.....”, சங்கடமாகச் சொன்னான்.

சட்டெனக் கலைந்தான் நந்தன். “குமார் என்ன சொன்னீங்க.....? அவ உங்க தங்கையா.....? நான் இவ்வளவு நாள் பார்த்தது இல்லையே?”, அவன் கண்களில், அப்படி ஒரு ஆர்வம், குரலில் அப்படி ஒரு துள்ளல்.

தன் தங்கையை நந்தன் ஆர்வமாகப் பார்ப்பதும், ஒருமையில் அழைப்பதும், பாசமான அண்ணனான அவனுக்கு, கொஞ்சம் எரிச்சலை அளித்தது. ஆனாலும், நந்தன் தனக்கு முதலாளி என்பதால், அதை அடக்கிக் கொண்டான். ஆனாலும் அவன், தான் இருப்பதைக் கூட பொருட்படுத்தாமல், அவளையே வெறிக்கப் பார்ப்பது சுத்தமாகப் பிடிக்கவில்லை.

“சார்..., அவ என்னோட தங்கை.....”, மீண்டும் அழுத்திச் சொன்னான். நந்தன், பெண்களிடம் வழிந்து அவன் பார்த்ததில்லைதான், ஆனாலும் ஒரு சகோதரியின் அண்ணனாக, அவனால் தன் தங்கையை, அவன் கண் முன்பே ஒருவன் பார்ப்பதை எந்த விதத்தில் பொறுத்துக் கொள்வான்.

குமார் அழுத்திச் சொன்ன பிறகுதான், தான் அவளையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தான். “குமார் உங்க தங்கை என்ன படிக்கிறாங்க.....?”, நந்தனால் தன் ஆர்வத்தை அடக்கவே முடியவில்லை.

இப்பொழுது குமார் மட்டும் அங்கே இல்லாமல், அவளை அந்த இடத்தில் பார்த்திருந்தால்....., ஓடிச் சென்று கட்டி அணைத்து, தன் காதலைச் சொல்லியிருப்பான்.

ஆனால் இப்பொழுது, பழம் நழுவி பாலில் விழுந்து, அது நழுவி வாயில் விழுந்ததுபோல்....., அவளைப் பார்த்ததோடு மட்டுமல்லாமல், அவளது முகவரியைத் தேடி அலையவேண்டிய அவசியமே இல்லாமல், அவளது அண்ணனே நேரில் நிற்கவே, சந்தோசத்தில் ஒரு பெரிய குத்தாட்டமே போட வேண்டும்போல் இருந்தது அவனுக்கு.

தான் இருக்கும் சூழல் கருதி அதை அடக்கிய குமார், “ப்ரியா பிஎஸ்சி மேத்ஸ் படிக்கிறா சார்”, கடித்த பற்களுக்கிடையில் பதில் சொன்னான் அவன்.

“ஓ....., குமார்....., உங்க வீடு எங்கே இருக்கு.....?”, அவன் கோபத்தை கவனியாமல், தன் மனதுக்குள் குமிழியிடும் உல்லாச மனநிலையிலேயே கேள்வி கேட்டான்.

இப்பொழுது குமாரின் மொத்த பொறுமையும் பறக்க, “சார்.... திஸ் இஸ் தி லிமிட்....., அவ என்னோட தங்கை....., நீங்க என்னமோ....., உங்க இடத்தில் இப்போ வேற யாராவது இருந்திருந்தால் நடக்குற விஷயமே வேற..... நீங்க என்னோட முதலாளியா இருக்கப்போய்....”, தன் கோபத்தை அதற்குமேல் மறைக்க முடியாமல் கொந்தளித்து விட்டான்.

அவன் கத்திய பிறகுதான் சுய நிலைக்கே வந்தான் நந்தன். அவன் கோப முகத்தைப் பார்த்த பிறகுதான், தான் ஒரு வயதுப் பெண்ணின் அண்ணனிடம், அவளைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறோம் என்ற உணர்வே அவனுக்கு வந்தது.

குமார் தன்னை தவறாக நினைப்பதைப் பொறுக்க முடியாமல், “குமார் ரிலாக்ஸ்....., நான் ஒண்ணும் தப்பான எண்ணத்தில் கேக்கலை...”, தன் நிலையை விளக்க முயன்றான்.

“நீங்க எந்த எண்ணத்தில் கேட்டாலும், என் தங்கையைப் பற்றி மூன்றாம் மனிதரிடம் பேசுவதை, நான் விரும்பலை”, அவன் குரலில் சூடு குறையவே இல்லை.

“குமார்....., உங்க தங்கையை கல்யாணம் செய்துக்கப்போற மாப்பிள்ளை எப்படி மூணாம் மனுஷம் ஆவான்.....”, நேரடியாக விஷயத்துக்கே வந்தான்.

வேகமாக அதற்கு பதில் சொல்லப் போனவன், அவன் சொன்ன வார்த்தைகளை கிரகித்து, திகைப்பாக அவனைப் பார்த்தான். அவனால் நம்ப முடியவில்லை, அதையே அவன் விழிகளும் பிரதிபலித்தது.

“என்ன குமார் நம்ப முடியலையா.....? நான் நிஜமாதான் சொல்லுறேன். உங்க தங்கையை எப்போ பார்த்தேனோ, அப்போ இருந்து, உங்க தங்கையை ரொம்பப் புடிச்சிருக்கு. அவளைக் கல்யாணம் செஞ்சுக்கணும்னு ஆசைப்படுறேன். நீங்க உங்க வீட்டில் கலந்து பேசுங்க. பேசிட்டு எனக்குச் சொல்லுங்க, நான் முறைப்படி உங்க வீட்டுக்கு, என் அம்மாவை அழைச்சுட்டு வந்து பொண்ணு கேக்குறேன்.

என்னைப்பத்தி உங்களுக்கு நல்லாவே தெரியும். மேலே ஏதாவது தெரிஞ்சுக்கணும்னா தாராளமா நீங்க வெளியே விசாரிச்சுக்கலாம். அப்படி விசாரிச்சு உங்களுக்கு திருப்தின்னா மட்டும் சொல்லுங்க....”, கொஞ்சம் இடைவெளி விட்டவன்,

“ஆனா....., நான் உங்க தங்கையை நல்லா பாத்துப்பேன்....., எனக்கு அவளை அவ்வளவு புடிச்சு இருக்கு. இதுக்கு முன்னாடியே ரெண்டு தடவை அவளை நான் பார்த்து இருக்கேன், பேச முடியலை..... இப்போ எதேச்சையா பார்த்த உடனே, கொஞ்சம் உணர்ச்சிவசப் பட்டுட்டேன். சாரி”, அவன்

குரலில் இருந்த நேர்மையும், கண்களில் தெரிந்த உண்மையும், குமாரை, மறுத்து எதுவும், பேச விடவில்லை.

“என்ன சார் சொல்லுறீங்க.....? நீங்க சொல்லுவது உண்மையா?”, அவனால் இன்னும் முழுதாக நம்ப முடியவில்லை.

“நான் என்ன செஞ்சா நம்புவீங்கன்னு சொல்லுங்க, அதையே செஞ்சுடுறேன்”, நந்தன் வேகமாகச் சொல்லவே, கொஞ்சம் இறுக்கம் தளர்ந்தான் குமார்.

“சார் அவ இப்போதான் பிஎஸ்சி கடைசி வருஷம் படிக்கிறா. சின்னப் பொண்ணு, இப்போவே கல்யாணம்னா.....? அவளுக்கு அண்ணா நான் மட்டும்தான் இருக்கேன்.....நாலு வருஷம் முன்னாடி என்னோட அப்பாவும் அம்மாவும் ஒரு விபத்தில் இறந்துட்டாங்க. அதில் இருந்து அவளுக்கு அம்மா அப்பா எல்லாம் நான்தான்....

திடீர்ன்னு அவளுக்குக் கல்யாணம்னா என்னால் நினைச்சுக் கூட பார்க்க முடியலை. அதைவிட, என்ன செய்யணும், எப்படிச் செய்யணும்னு எதுவும் புரியலை சார்”, அதீத சந்தோசமா, வியப்பா எதுவென்று தெரியாமலே தயங்கினான் அவன்.

“உங்க தயக்கம் எனக்கு புரியுது குமார். உங்க தங்கையை நான் நல்லா பாத்துப்பேன். அதில் உங்களுக்கு எந்த சந்தேகமும் வேண்டாம். வீட்டுக்குப் போய் உங்க தங்கை கிட்டே பேசுங்க. பேசிட்டு உங்க முடிவைச் சொல்லுங்க. பிறகு நான் எங்க அம்மாவோட வாறேன். அப்படி உங்களுக்கு விருப்பம் இல்லன்னா நான் உங்களைக் கட்டாயப் படுத்தவே இல்லை”, நந்தனின் குரலில் சுருதி குறைந்தது.

குமாருக்கு, கண்டிப்பாகத் தெரியும், தன் தங்கைக்கு நந்தனை விட சிறந்த கணவன் கிடைக்க மாட்டான் என்பதும், இருவரும் பொருத்தமான ஜோடிகளாக

இருப்பார்கள் என்பதிலும் அவனுக்கு எந்தச் சந்தேகமும் இல்லை.

“சார், நான் என் தங்கை கிட்டே பேசிட்டு சொல்லுறேன். அவகிட்டே பேசாமல் என்னால் எந்த முடிவுக்கும் வர முடியலை”, தயக்கமாகவே சொன்னான்.

“டேக் யுவர் ஓன் டைம்....., ஆனால் முடிவு எனக்கு சாதகமா இருந்தால் நான் ரொம்ப சந்தோசப் படுவேன்”, நந்தனின் பார்வை ஒரு நிமிடம் ஏக்கமாக ப்ரியாவைத் தழுவி மீண்டது.

குமாரும் அதை கவனித்தான். ஒரு ஆண்மகனாக நந்தனின் உணர்வுகளை அவனால் புரிந்துகொள்ள முடிந்தது. ஆனால் தங்கையிடம் பேசாமல், எந்த நம்பிக்கையையும் நந்தனுக்குக் கொடுக்க அவன் தயாராக இல்லை.

“நீங்க இப்போவே கிளம்புங்க. நாம மெஷின் பத்தி நாளைக்குப் பேசலாம்.....”, குமாருக்கு அழைப்பு வந்த வண்ணமே இருக்கவே, அவனை உடனடியாக அனுப்பி வைத்தான். அவன் சென்று, பிரியாவை அழைத்துக்கொண்டு செல்லும் வரையும், நந்தனின் பார்வை அவர்களைத் தொடர்ந்த வண்ணமே இருந்தது.

குமார், முதலில் வீட்டுக்குச் சென்று தங்கையிடம் பேசியதைவிட, நந்தனைப் பற்றி யோசித்ததுதான் அதிகமாக இருந்தது. தங்கையின் வயதை நினைத்து கொஞ்சம் தயக்கமாக இருந்தாலும், நந்தன் தங்கையை நன்றாகப் பார்த்துக் கொள்வான் என்ற நம்பிக்கை அதிகமாகவே இருந்தது.

என்றைக்காக இருந்தாலும், தங்கைக்கு ஒருநாள் திருமணம் செய்து வைக்க வேண்டும். அதை இப்பொழுதே செய்தால் என்ன என்ற எண்ணம் வளர்ந்து விருட்சமானது. எதற்கும் தங்கையிடம் பேசிவிடலாம் என்று முடிவெடுத்தான்.

இரவே, அண்ணன் வீட்டிற்கு வராததால், வேகமாக அவனுக்கு டிபன் செய்து கொடுத்தாள் ப்ரியா. இருவரும் சேர்ந்து சாப்பிடும் பொழுது, குமார் அவனது யோசனையிலேயே இருந்ததால் அமைதியாகவே சாப்பிட்டான்.

அண்ணனின் அமைதி, ப்ரியாவிற்கு வித்தியாசமாக இருந்தது. ஆனாலும், தானாக எதையும் அவனிடம் கேட்கும் வழக்கம் இல்லாததால் அமைதியாகவே இருந்தாள். அவள் பதினொன்றாவது படிக்கும்போது, அவளது அம்மாவும் அப்பாவும் ஒரு விபத்தில் காலமானார்கள். அதன் பிறகு குமார்தான் அவளைப் பார்த்துக் கொண்டான்.

அவளுக்குத் தேவையானது என்னவென்று, அவள் கேட்கும் முன்பே செய்து கொடுப்பான். இதுவரை, அவன் எடுத்த எந்த முடிவையுமே அவள் எதிர்த்துப் பேசியது இல்லை. அவள் உடுத்தும் உடை முதல், எந்தக் கல்லூரிக்குச் செல்ல வேண்டும் என்று சொன்ன, அந்த முடிவு வரை அவன் சொல்வதுதான்.

அவனை எதிர்த்து அவள் பேசியதே கிடையாது. எனவே, அவளது திருமண விஷயத்திலும், தன் முடிவை அவள் ஏற்றுக் கொள்வாள் என்று அவன் எண்ணினான். அவன் எடுத்துக் கொடுக்கும் உடைகளை உனக்குப் பிடித்திருக்கிறதா என்று அவன் கேட்டது இல்லை. ப்ரியாவும், எனக்கு இது பிடிக்கவில்லை என்று சொல்வதும் இல்லை.

அவளுக்கு ஒரு குணம் உண்டு. அவளுக்குப் பிடிக்காததை அவளது அண்ணன் வாங்கி வந்தால், அது பிடிக்கவில்லை என்று சொல்வதில்லை. மாறாக, அந்தப் பொருளை உபயோகப்படுத்தவே மாட்டாள்.

அதைக் கூட குமார் உணர்ந்தது இல்லை. அவள் சின்னப் பிள்ளை, அவளுக்கு முடிவெடுக்கத் தெரியாது, அனைத்தையும் தான்தான் அவளுக்குப் பார்த்துச்

செய்யவேண்டுமென்று எண்ணியே, அவன் அப்படி நடந்து கொண்டான்.

அவளுக்கென்று தனியான விருப்பங்கள் இருக்கும், ஆசைகள் இருக்கும் என்பதை, அவன் உணரவே இல்லை. பெண் பிள்ளையை கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும், தாயில்லாத பெண், அதனால்தான் இப்படி இருக்கிறாள் என்று, யாரும் ஒரு வார்த்தை சொல்லிவிடக் கூடாது, என்பதால் அதிக கவனமாக இருந்தான், என்பதுதான் சரியாக இருக்கும்.

தன் யோசனையிலேயே மூழ்கி இருந்தவன், தங்கை சாப்பாட்டை முடித்து எழுந்து செல்வதை பார்த்தவன், “ப்ரியா நான் உன்கிட்டே ஒரு விஷயம் சொல்லணும்....., உனக்கு ஒரு நல்ல வரன் வந்து இருக்கு. அதனால் அதை முடிச்சுடலாம்னு நினைக்கிறேன், உனக்கு எப்போ பரீட்சை முடியுது...?”, நான் எடுத்த முடிவு உனக்குச் சம்மதமா என்று கூட கேட்கவில்லை. அவள் திருமணத்தை ஒரு செய்தியாகவே அவளுக்குச் சொன்னான்.

அவன், தனது திருமணத்தைப் பற்றிப் பேசுவான் என்று சத்தியமாக அவள் எதிர் பார்க்கவில்லை. திருமணம் என்று சொன்னதில் அதிர்ந்தே போனாள் அவள். உனக்குச் சம்மதமா என்று கேட்டிருந்தால், அவள் மனதில் இருந்ததை சொல்லியிருப்பாளோ என்னவோ, அவன் முடிவெடுத்த பிறகு சொல்லவே, அவளால் எதுவும் மறுத்துச் சொல்ல முடியவில்லை.

“இன்னும் மூணு மாசத்தில் பரீட்சை முடியுதுண்ணா.....”, சொல்லிவிட்டு, அவ்விடத்தை விட்டு அகன்றாள். தங்கை வெட்கத்தில் செல்வதாக அவன் நினைத்துக் கொண்டு, சாப்பிடும் வேலையைத் தொடர்ந்தான்.

ஆனால் ப்ரியாவின் மனமோ வேதனையில் கசங்கியது. தன் தாய் இருந்திருந்தால், தன் விருப்பத்தைக் கேட்டுவிட்டு

பிறகு முடிவெடுத்திருப்பாளோ? அவனது ஆளுமையை தன்மீது திணிப்பதாகவே அவள் உணர்ந்தாள்.

சின்ன வயதிலேயே சேர்ந்து விளையாடி, தங்கள் மனதில் இருப்பதை பகிர்ந்து வளர்ந்திருந்தால், இல்லையென்றால், தாய் தந்தையின் மறைவிற்கு பிறகாவது அப்படி மாறியிருந்தால், ஏதாவது மாறியிருக்க வாய்ப்புண்டு.

ஆனால்....., குமார் அவளுக்கு, அண்ணனாக, அப்பாவாக, அம்மாவாக, நண்பனாக மாறாமல், ஒரு கார்டியனாக மட்டுமே மாறிவிட்டான். உனக்கான அனைத்து முடிவுகளையும் நான் எடுப்பேன்....., நீ கட்டுப்படு என்பதுபோன்ற அவனது நடத்தையை மனதுக்குள்ளே வெறுத்தாள்.

அப்படி அவன் மேலான வெறுப்பு, அவன் பார்த்த மாப்பிள்ளையின் மேலும் திரும்பியது, யார் செய்த தவறு?

தங்கையின் அதிர்ந்த முகத்தையோ, அவள் பதில் சொல்லிவிட்டு விலகிய விதத்தையோ, குமார் கவனிக்கவே இல்லை. அப்படி கவனித்திருந்தால் அவனுக்கு அவளது விருப்பமின்மை புரிந்திருக்குமோ? இவையெல்லாம் விதியின் செயலா?

*******தர்ஷிணிக்கு எதுவுமே புரியவில்லை. வித்தார்த்திடம் இருந்து மூன்று நாட்களாக எந்த அழைப்பும் இல்லை. ஒரு வாரமாக போனும் கையுமாக சுற்றிய மகள், இந்த மூன்று நாட்களாக போனை வெறித்தவாறே அலையும் மர்மம், வசுந்தராவிற்கு புரியவே இல்லை.

தாயின் துளைக்கும் பார்வையில், உள்ளுக்குள் குளிர் பிறந்தாலும், அதை அசட்டை செய்தவாறு, தைரியமாகக் காட்டிக் கொண்டாள் தர்ஷிணி. ஆனாலும், வித்தார்த்தின் பாராமுகம் மனதை அழுத்தவே செய்தது.

முதல் நாள் முழுவதும் அவனுக்குத் தொடர்பு கொள்ள, அவன் அழைப்புக்களை எடுக்கவே இல்லை. அவனுக்கு

ஏதாவது அவசர வேலையாக இருக்கும் என்று எண்ணியவள், இரண்டாம் நாளும் அது தொடரவே, தன்மேல் ஏதாவது கோபமாக இருக்குமோ என்று எண்ணினாள்.

ஆனாலும் எதற்காக அந்த கோபம் என்பதுதான் புரியவில்லை அவளுக்கு. அவன் கோபப்படும்படி தான் எதையுமே செய்யவில்லையே, அலைபேசி அழைப்பை எடுக்க கொஞ்சம் தாமதம் ஆனதற்கா இவ்வளவு கோபம்.....? அலைபேசியை எடுக்கத் தாமதம் ஆனதற்கு, எனக்கும் ஏதாவது காரணம் இருக்குமென்று அவருக்குத் தோணவே இல்லையா...?

அதைவிட, அதை என்ன கழுத்திலேயே கட்டிக் கொண்டா அலைய முடியும்.....? சரி, இனிமேல் அவராகப் போன் செய்யும்வரை, நானும் திரும்ப அழைக்கப் போவதில்லை..... என்ன ஆகிறதென்று பார்க்கலாம். அவளும் முடிவெடுத்து, அதன் பிறகு அவனை அழைக்கவே இல்லை.

வித்தார்த்தோ கோபத்தின் உச்சியில் இருந்தான். தர்ஷிணி அலைபேசியை எடுக்காதது, அவனுக்கு அவ்வளவு கோபத்தைக் கொடுத்திருந்தது. அவள் எப்படி என் அழைப்பை எடுக்காமல் இருக்கலாம்? அப்படியென்றால், எனக்கு அவள் கொடுக்கும் மதிப்பு அவ்வளவுதானா?

என் அழைப்புக்கு ஒரு மரியாதை இல்லையா? இவ்வாறாக நினைத்து, தேவையில்லாமல் வன்மம் வளர்த்தான். அவளுக்கும் ஏதாவது வேலை இருக்கும், அவசரத் தேவைகள் இருக்கும், அக்கம் பக்கம் போகவேண்டி இருக்கும், இப்படி, ஒரு நொடி கூட அவன் சிந்திக்கவில்லை.

அவள் என்னமோ....., வேண்டுமென்று அவனை அலட்சியப் படுத்தியதாக எண்ணினான். எனவே அவள் உடனடியாகத் திரும்ப அழைத்த பொழுது அதை அவன்

கண்டுகொள்ளவே இல்லை. அலைபேசியை சைலண்ட்டில் போட்டுவிட்டு, எனக்கென்ன என்று இருந்துகொண்டான்.

ஆனாலும், அவளிடமிருந்து வரும் எண்ணிலடங்கா மிஸ்ட் கால்களைப் பார்க்கையில், ஒரு குரூர திருப்தி உருவானது அவனுக்கு. அந்தக் கேவலமான திருப்தியை அனுபவிக்கவென்றே அவளது அழைப்புக்கள் அனைத்தையும் தவிர்த்தான்.

நான்காம் நாளில் இருந்து அவளிடமிருந்து ஒரு அழைப்பு கூட இல்லாமல் போகவே, மனம் குரங்காக மாறி, மறுபடியும் அவளை நிந்தித்தது. அப்படியென்றால் என் நினைப்பே இல்லாமல் அவள் நிம்மதியாக இருக்கிறாளா? நான்மட்டும் இங்கே அவள் நினைப்பில் வெந்து சாக, அவள் மட்டும் அந்த நினைப்பே இல்லாமல் எப்படி இருக்கலாம்.....? அவன் சிந்தை இப்படியாகத்தான் வேலை செய்தது.

கடந்த மூன்று நாட்களாக அவள் விடாமல் அழைத்தது அனைத்தும், விடுமுறையில் விடப் பட்டது. ஐந்தாம் நாளிலும் இது தொடரவே பயித்தியக்காரனாகவே மாறிவிட்டான் அவன். இந்த நிலையிலேயே அடுத்த இரண்டு நாளும் கடந்தது.

ஆறாம்நாள், அலுவலகத்தில் அவனால் வேலை செய்யவே முடியவில்லை. தர்ஷிணியின் அலட்சியமே, (அலட்சியமென்று அவன் நினைப்பதே) வந்து போனது. அவனது மன உளைச்சலைப் பொறுக்க முடியாமல், அவளைத் தொடர்பு கொண்டான்.

தர்ஷிணியும் தவித்துதான் போயிருந்தாள். இரண்டு நாட்கள் முழுதாக முடிந்தும், அவனிடமிருந்து ஒரு அழைப்பு கூட இல்லையே என் கலங்கிப் போயிருந்தாள். அவள் தவிப்பைத் தணிப்பதற்காகவே, அவள் அலைப்பேசி கீதமாக ஒலித்தது.

அதை அவள் பார்க்காமலே, அவனது அழைப்புதான் என்பதை உணர்ந்து கொண்டாள். அதற்குக் காரணம்,

அவனது எண்ணிற்குத் தனியாக ரிக் டோன் மாற்றி வைத்திருந்தாள். எனவே வேகமாகச் சென்று அதை எடுத்தாள்.

அவனிடம் உரிமையாகக் கோபித்துக் கொள்ளவேண்டும் என்று எண்ணியிருந்தவை எதுவும், அவள் நினைவுக்கு வரவே இல்லை. தன் கோபத்துக்கு மதிப்பளித்து அவன் அழைப்பதே, அவளுக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது.

அவன்மேல் இருந்த, சின்னச் செல்லக் கோபம் விலகி ஓடிவிட, அந்த இடத்தில் காதல் மட்டுமே நிறைந்திருந்தது. அந்தக் காதலுடனே அலை பேசியை பாய்ந்து சென்று நொடியில் எடுத்து, “ஹலோ, எப்படிங்க இருக்கீங்க.....? நல்லா இருக்கீங்களா.....? பிரேக் பாஸ்ட் சாப்பிட்டீங்களா...? ஆபீஸ் வந்துட்டீங்களா.....?”, அவன்மேல் இருந்த காதலை, நேசத்தை, வார்த்தைகளில் வடிக்க முயன்றாள்.

அவளது இந்தத் தவிப்பும், காதலும், நேசமும் அவனை எட்டியதாகக் கூடத் தெரியவில்லை. “நான் நல்லா இருக்கறது இருக்கட்டும்..... நீ நல்லா சந்தோசமா இருக்கியா?”, குதர்க்கமாகக் கேட்டான்.

அதைக் கூட அவள் உணராமல்....., தன்மேல் இருந்த அக்கறையில் கேட்பதாக எண்ணிக் கொண்டு, “எனக்கென்னங்க...., நான் ரொம்ப சந்தோசமாத்தான் இருக்கேன். என்ன, ஆபீஸ்ல ரொம்ப வேலையா? போன் பண்ணவே இல்லை, வேலை வேலைன்னு இருக்காமல், உடம்பை நல்லா பாத்துக்கோங்க”, அவள் அக்கறையாகச் சொல்ல, குறுக்காக யோசிக்கும் அவன் புத்தி, அதையும் தவறாகவே எடுத்துக் கொண்டது.

“ஓ.....ரொம்ப சந்தோசமா இருக்கியா.....? அப்போ இந்த அஞ்சுநாளா என்கிட்டே பேசாதது உனக்குக் குறையாவே தெரியலை.....? நான் பேசினாலும் ஒண்ணுதான், பேசலைன்னாலும் ஒண்ணுதான்னு சொல்ல வாற, அப்படித்தானே? சரி, அப்போ நீ சந்தோசமாவே இரு, நான்

உன்னை போன் செய்து தொந்தரவு செய்யலை”, அவள் பதிலைக் கூட எதிர் பார்க்காமல், அலட்சியமாக போனை வைத்துவிட்டான்.

தர்ஷிணி அதிர்ந்து போனாள். வித்தார்த் ஏன் இப்படிப் பேசுகிறார்? நானே பழைய விஷயம் எதையும் பேசி பிரச்சனையை வளர்க்க வேண்டாம் என்று பார்த்தால்..... அவர் அதை விடவே மாட்டேன் என்கிறாரே. அப்போ, இப்போ எதுக்குப் போன் செய்தார்? அவள் குழம்பித் தவித்துப் போனாள். அவனை எந்த விதத்தில் அணுகவென்று அவளுக்குத் தெரியவில்லை. தெரிந்து கொள்வாளா?

***

தாகம் - 5.

காதலுக்குள் ஒளிந்திருக்கும்

நட்பையும்.....

நட்புக்குள் ஒளிந்திருக்கும்

காதலையும் உணர ஆசை.....

நிறைவேறுமா என் தாகம்.....

படியில் காலை வைத்தால் நான் மனுஷனாவே இருக்கமாட்டேன், என்று, ருத்ர மூர்த்தியின் மறு உருவமாக நின்று கர்ஜிக்கும் ஜீவாவை, சலனமே இல்லாமல் பார்த்தான் கணேஷ். ஆனாலும் அங்கிருந்து இம்மியும் நகரும் எண்ணமில்லாமல், அசையாமல் நின்றான்.

ஜீவாவின் குரலைக் கேட்டு வேகமாக அவன் அருகில் வந்தார் முத்து. “என்ன தம்பி, வீட்டுக்கு வந்தவங்களை இப்படித்தான் வாசல்ல நிக்க வச்சுப் பேசுவீங்களா? அம்மா உங்களுக்கு இதைத்தான் சொல்லிக் கொடுத்திருக்காங்களா? முதல்ல அவரை உள்ளே வரச் சொல்லுங்க. எதுவா இருந்தாலும் பேசித் தீத்துக்கலாம்”, ஜீவாவைக் கண்டிக்கும் தோரணையில் சொன்னார்.

“என்ன முத்தண்ணே.... நீங்களும் இவனுக்கு சப்போர்ட் பண்ணுறீங்க. எனக்கு இவன் முகத்தைப் பாக்கவே பிடிக்கலை. இவன், இந்த வீட்டுக்குள் காலடி வைப்பதை, நான் விரும்பவும் இல்லை”, தன் மன ரணத்தால் அவன் இப்படிப் பேசினான்.

முத்து பேசும் முன்பே, கணேஷ் பேசினான். “சார்... நீங்க ஆபீஸ் வந்து ஆறு மாசம் ஆகுது. என்னதான் நான் பார்த்துக் கொண்டாலும், நீங்க பாக்குற மாதிரி ஆகாதே. அது மட்டும் இல்லை. அங்கே தொழிலாளர் பிரச்சனை வேற

ஓடுது. நீங்க இப்படியே கவனிக்காமல் இருந்தால், பிறகு நாம கம்பெனியை இழுத்து மூட வேண்டியதுதான்", நடப்பு விஷயத்துக்கு அவனை இழுத்து வர முயன்றான்.

"அப்படி அந்தக் கம்பெனியை இழுத்து மூடணும்னா, நான் மூடிட்டுப் போறேன். அதனால் எவ்வளவு நஷ்டம் வந்தாலும் நான் தாங்கிப்பேன்", அவனது வீம்பு, அவனை இறங்கிவர அனுமதிக்கவில்லை.

"சார்.... நீங்க, உங்களுக்கு எவ்வளவு நஷ்டம் வந்தாலும் தாங்கிப்பீங்க. ஆனால், அந்தக் கம்பெனியை நம்பி இருக்கும் நூற்றுக் கணக்கான தொழிலாளர்களின் நிலையைக் கொஞ்சம் நினைச்சுப் பாருங்க", கிட்டத்தட்ட கெஞ்சினான்.

"ஏன் அதை நான் ஏன் நினைச்சுப் பாக்கணும்? அவங்கதானே இப்போ ஸ்ட்ரைக் பண்ணுறாங்க. இப்போவும் நஷ்டம் அவங்களுக்குத்தானே", கொஞ்சம்கூட சுருதி குறையவில்லை அவன் குரலில்.

"சார், உங்களுக்கே தெரியும், நீங்க ஆபீஸ் வந்து ஆறு மாசம் ஆகுதுன்னு. அதைவிட, நீங்க ரெண்டு வருஷமா புது ஆர்டர் எதுவும் பிடிக்கவே இல்லை. இருந்த ஆர்டரை வச்சு, இவ்வளவு நாள் ஓட்டியாச்சு.

இப்போ புது ஆர்டரும் இல்லை, அவங்களுக்கு வேலையும் இல்லை, ரெண்டு மாசமா, அவங்களுக்கு சம்பளம் கொடுக்கவும் இல்லை. உங்கமேல் இருந்த விசுவாசத்துக்காக இவ்வளவு நாள் பொறுத்தாங்க. அவங்க வீட்டிலும் அடுப்பு எரியணுமே..... நானும் இவ்வளவு மாசம் உங்ககிட்டே சொல்லாமல் சமாளித்தேன். இதற்கு மேலும் என்னால் சமாளிக்க முடியாமல் தான் நான் இங்கே வந்து இருக்கேன்", இதைச் சொல்லும்பொழுதே அவன் குரல் வேதனையில் விம்மியது.

அதைவிட ஜீவாவின் ஒடுக்கத்தை, பார்க்க முடியவில்லை அவனால். அவன் குரல் தழு தழுத்தது, கம்பீரமாகப்

பார்த்துப் பழகிய முதலாளியை இப்படி ஒடுங்கிப்போய் பார்க்க, அவனால் முடியவே இல்லை. இவ்வளவு நேரம் கோபத்தில் கொதித்த ஜீவா, கணேஷ் சொல்லி முடித்தவற்றை கேட்ட பிறகு, அப்படியே சோர்ந்து போனான்.

தன் ஒருவனின் தடுமாற்றம், நூற்றுக் கணக்கான தொழிலாளர்களின் வாழ்வின் ஆதாரத்தையே கேள்விக்குறியாக்கி இருப்பது புரிந்தது. தன் கூட்டுக்குள்ளேயே ஒடுங்கி, தன்னைச் சுற்றி பெரிய சுவர் எழுப்பிக் கொண்டு, வெளியே என்ன நடக்கிறது என்றே பார்க்காமல் இருந்துவிட்ட தன் மடத்தனத்தை நினைத்து வருந்தினான்.

“இதை ஏன் இவ்வளவு நாளா சொல்லலை.....?”, அவன் குரல் இப்பொழுது சுருதி குறைந்து ஒலித்தது.

‘எங்கே என்னைச் சொல்ல விட்டீங்க’, என்ற வார்த்தைகள் நுனி நாக்குவரை வந்தாலும், தன் முதலாளியிடம் அதைக் காட்டாமல்....., “டெய்லி ரிப்போர்ட் உங்க மெயில்க்கு அனுப்பிட்டுதான் இருந்தேன் சார். அதிலும், நிதி நிலைமையைப் பற்றி, கடைசி ரெண்டு மாசமா உங்களுக்கு ரிமைன்டர் போட்டுட்டே தான் இருந்தேன். உங்ககிட்டே இருந்து தகவல் வராமலே போகவும்தான், இன்னைக்கு வேற வழி இல்லாமல் நேர்ல வந்தேன் சார்”, தன் கடமையைச் சரியாகச் செய்ததை அறிவுறுத்தினான்.

ஜீவா என்ன சொல்வதென்று தெரியாமல் அமைதியானான். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, “தம்பி.... அவரை உள்ளே கூட்டி வந்து நிதானமா பேசுங்க. இதுக்கு மேலையும் நீங்க சும்மா இருக்குறது சரியில்லை. தொழிலாளர்களோட நிலையை யோசிச்சாவது கொஞ்சம் மனசு வைங்க தம்பி”, முத்துவும் சொல்லவே, ஜீவா ஆமோதிப்பாக தலையை ஆட்டினான்.

கணேஷிடம் எதுவும் சொல்லாமல் அவன் பின்னால் நடந்தான். ஜீவா தன்னை வீட்டுக்குள் அழைக்காதது ஒரு

பெரிய குறையாக இருந்தாலும், அவன் இந்த மட்டிலும் அமைதியாக இருப்பதே போதும் என்று நினைத்துக் கொண்டு அவனைப் பின் தொடர்ந்தான்.

அவன் மனநிலையைப் புரிந்தவர் போல், “தம்பி இன்னும் முழுசா தேறலை, அதுக்கு முன்னாடி எப்படி அவங்க முன்னாடி வாறதுன்னு ரொம்பத் தயங்குறார், அதனால்தான் இப்படிக் கோபமா நடந்துக்கறார். நீங்க எதையும் மனசில் வச்சுக்காதீங்க..... உள்ளே வாங்க”, கணேஷை, முத்து அழைத்துக் கொண்டு சென்றார்.

அங்கே அஞ்சலி, கலவர முகத்துடன் ஜீவாவையே வெறிக்கப் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தாள். ஜீவா கசங்கிய தன் மனதை திடப் படுத்திக் கொண்டு, “எங்க அஞ்சலி பாப்பா சாப்ட்டாங்களா? அப்பா கொஞ்சம் கோபமா இருந்தேனா, அதான் அப்படிப் பேசிட்டேன். மன்னிச்சுடுங்கடா.....”, ஒரு குழந்தையாக மாறி அவளிடம் மன்னிப்பை வேண்டினான்.

வெளியே தன்னிடம் அவ்வளவு குதித்தவன், தன் மகளின் முன்னால் மண்டியிட்டு மன்னிப்பை வேண்டி நிற்பதைப் பார்க்கையில், கணேஷின் கண்களும் பனித்தது.

“நீங்க பேசாதீங்கப்பா....., எனக்குக் கோபமா பேசினால் பிதிக்காதுன்னு உங்களுக்குத் தெதியும்ல. அப்புதம் ஏன் அப்பிதி பேசுதீங்க. நான் உங்க கித்த பேச மாத்தேன் போங்க”, அவன் கைகளைத் தட்டி விட்டு, கைகளைக் கட்டிக் கொண்டு, முகத்தை திருப்பிக் கொண்டு அமர்ந்து கொண்டாள்.

“என் அஞ்சு பாப்பாக்கு பிடிக்காததை அப்பா செய்வேனாடா...? செய்யவே மாட்டேண்டா..... அப்பாவுக்கு உன்னை விட்டால் வேற யாருடா இருக்கா? இப்போ அஞ்சு பாப்பா அப்பாகிட்டே பேசலன்னா, அப்பா அழுவேன்.....”, அவன் குரல் உண்மையாகவே தழு தழுத்தது. இதை ஜீவா

சொல்லி முடித்த பொழுது, அங்கிருந்த அனைவரின் விழிகளுமே கலங்கியது.

அவன் குரல் மாறுபாட்டை உணர்ந்த அஞ்சலி, சட்டென அவன்புறம் திரும்பி, “இல்லப்பா....., அஞ்சு பாப்பாக்கு உங்க மேல கோபமே இல்லை. நீங்க அதுவாதீங்க..... அப்படி நீங்க அதுதா அஞ்சு பாப்பாவும் அதுவா.....”, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு உதடு துடிக்க, தன் மழலை மொழியில் சொன்னாள்.

அவனும் அவளை இறுக கட்டிக் கொண்டான். இந்த பாசப் பிணைப்பை சிறிது நேரம் பார்த்தவர், “பாப்பா....., நாம தோட்டத்தில் புதுசா பூத்திருக்கும் அந்த ரோஜாவைப் பாக்கப் போலாமா? அந்த ரோஜாவை ஏதோ வெட்டுக்கிளி கடிச்சு வச்சுடுச்சு, அதை என்னன்னு பாக்கலாமா?”, முத்து கேட்க,

“அய்யோ.... பாவம்....., அந்த தோஜாக்கு வலிக்குமில்ல..... வாங்க நாம பாக்கலாம். அப்பா நீங்க சாப்பிதுங்க, நாங்க தோத்தத்துக்கு போதோம்”, குழந்தையாக ஒரு முகம் காட்டியவள், பொறுப்பானவளாக அவள் மறு முகத்தையும் காட்டினாள்.

அவர்கள் சென்ற பிறகு, இங்கே இருவருக்கும் இடையில் சங்கடமான அமைதி நிலவியது. அதை யார் முதலில் கலைக்கவென்று தெரியாமல் அமர்ந்திருந்தனர்.

“சார்.... நீங்க சாப்பிடுங்க, நான் வெயிட் பண்ணுறேன்.....”, அங்கிருந்த ஸோபாவில் சென்று அமர்ந்து கொண்டான் கணேஷ்.

பழைய ஜீவாவாக இருந்திருந்தால், கணேஷையும் சாப்பிட தயங்காமல் அழைத்திருப்பான். ஆனால் இன்று வாய் வார்த்தையாகக் கூட அழைக்க மனமில்லாமல் அமர்ந்திருந்தான். அவன் தயக்கம் உணர்ந்து, “நான் எதுவும் நினைக்கலை சார்..... என்னை, உங்க கீழே வேலை பாக்கும் ஒரு ஸ்டாப்பா நினைச்சுக்கோங்க. நான்

இருப்பது உங்களுக்கு சங்கடமா இருக்குன்னா, நானும் வெளியே அவங்களோட தோட்டத்தில் இருக்கிறேன்”, வேகமாக எழுந்து செல்லப் போனான்.

“இல்ல நீங்க உக்காருங்க நான் வாறேன்.....”, சொல்லிவிட்டு, இரண்டே இட்லிகளை, தின்றேன் என்று பெயர் பண்ணிவிட்டு, அவன் எதிரில் வந்து அமர்ந்தான்.

“சொல்லுங்க கணேஷ்....., இப்போ நான் என்ன செய்யணும்னு நீங்க எதிர் பாக்குறீங்க”, மூன்றாம் மனிதரிடம் பேசும் தோரணையே இருந்தது அவன் குரலில்.

ஜீவாவின் இந்த விலகலே, அவனைக் கிழித்து கூறு போட்டது. ஆனாலும், அவன் இந்த அளவுக்காவது தன்னிடம் முகம் கொடுத்துப் பேசுவதே தற்போதைக்குப் போதுமானது என்று முடிவு செய்து அதை ஒதுக்கிவிட்டு, அவனது பேச்சில் கலந்துகொண்டான்.

“சார்.... நீங்க பழையபடி ஆபீஸ் வாங்க, நீங்க வந்தாலே தொழிலாளர்களுக்கு ஒரு பெரிய நம்பிக்கையையும், உற்சாகத்தையும் அளிக்கும். அதன் பிறகு, எல்லாம் தன்னால் சரியாகிப் போகும்”, எப்படியாவது அவனை அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றுவிடும் முனைப்பு தெரிந்தது அவன் குரலில்.

“இனிமேல் அங்கே எனக்கு மதிப்பு இருக்கும்னு நீங்க நம்புறீங்களா கணேஷ்.....”, எவ்வளவு முயன்றும் அவன் குரலில் வேதனையை தவிர்க்க முடியவில்லை.

“சார்....., இப்போ உங்களைப் பத்தி எல்லா விஷயத்தையும் , அவங்க எல்லாம் புரிஞ்சுக்கிட்டாங்க . அங்கே யாருமே இப்போ உங்களைத் தவறாகவே எண்ணாத பொழுது, உங்களுக்கு ஏன் இப்படி ஒரு சந்தேகம்? உங்களோட இந்த ஒதுக்கத்தைத்தான் அவங்க அனைவரும் வெறுக்கிறார்களே தவிர, உங்களை இல்லை.....,

அதுமட்டும் இல்லை, நடந்த எதற்குமே நீங்க பொறுப்பில்லை என்னும்போது..... உங்களோட வரவைத்தான் நாங்க எல்லோரும் ஆவலாக எதிர் பார்க்கிறோம். இந்தக் கம்பெனி உங்களோட பரம்பரைச் சொத்து. அதை இப்படி முழுக விடுவது தர்மமே கிடையாது.

அஞ்சலி பாப்பா, இப்போ இருக்க வசதியோட, எல்லா நலன்களோட அவ நல்லா இருக்கணும் சார்....., அவளுக்காகவாவது நீங்க பழைய ஆளா மாறணும்", ஒருவித வேகத்தில் அனைத்தையும் சொல்லி முடித்தான்.

கொஞ்ச நேரம் ஜீவாவிடம் இருந்து, அமைதியே பதிலாகக் கிடைத்தது. அவன் யோசிப்பது புரிந்து, கணேசும் அமைதியாகவே இருந்தான். பின்னர் ஒரு முடிவுடன், "சரி.... நான் அடுத்த வாரத்தில் இருந்து வாறேன்", முடிவாகச் சொன்னான்.

அவன் வருகிறேன் என்று சொன்னதில் கணேஷிற்கு மகிழ்ச்சிதான், ஆனால், இன்னும் ஒரு வாரம் தொழிலாளர்களை எப்படிச் சமாளிப்பது என்று அவனுக்குச் சுத்தமாகப் புரியவில்லை. ஏற்கனவே நிலைமை கைமீறிச் செல்லும் நொடிகளில்தான், வேறு வழியில்லாமல் அவனைத் தேடி வந்திருக்கிறான். இன்னும் ஒரு வாரம்....., ஏழு நாள் என்பது மலைப்பாகத்தான் இருந்தது.

ஜீவாவின் பேச்சைக் கேட்டுக் கொண்டு வந்த முத்துவும், "தம்பி, அதான் போறதுன்னு முடிவாயிடுச்சே....., பிறகு என்ன இன்னும் ஒரு வாரம்ன்னு அதைத் தள்ளிப் போடணும்? நாளைக்கு புதன் கிழமை, நிறைந்த அமாவாசை, நாளைக்கே போங்க", முத்து நிலைமையின் தீவிரம் உணர்ந்து சொன்னார்.

"முத்து....., என்ன நீங்களும் புரியாமல் பேசுறீங்க....., பாப்பாவை கவனிக்க ஆள் வைக்க வேண்டாமா? நினைத்த நேரத்தில் அவளைத் தனியா வீட்டில் எல்லாம் விட்டுட்டுப் போக முடியாது", பொறுப்பான அப்பாவாகப் பேசினான்.

“சார்....., நான் அதைப் பற்றியும்தான் பேச வந்தேன்.....”, தயக்கமாக இழுத்தான் கணேஷ்.

“என் பொண்ணோட விஷயத்தில் முடிவெடுக்கும் உரிமையை நான் உனக்குத் தரவே இல்லை கணேஷ்.....”, வெளியே சாதாரண வாக்கியங்களாக தெரிந்தாலும், கணேஷை அந்த வார்த்தைகள் பலமாகத் தாக்கியது.

“தம்பி, என்ன இது.....? அவர் அதைப் பத்திப் பேசத்தானே வந்திருக்கேன்னு சொன்னார். அதுக்கு எதுக்கு அவர்மேல் இப்படிப் பாயிறீங்க. அவர் என்ன சொல்லுறாருன்னுதான் கேளுங்களேன்”, முத்துதான் இப்பொழுதும் அவனைத் தணித்தார்.

“முத்து....., அது எதுவாக இருந்தாலும், இந்த விஷயத்தில் அவரோட ஐடியாவை நான் கேட்பதா இல்லை”, அழுத்தம் திருத்தமாகச் சொன்னான்.

“உங்களை ஏத்துக்கச் சொல்லி இங்கே யாரும் கட்டாயப் படுத்தலை. அவர் என்ன சொல்லுறாருன்னு கேட்பதில் உங்களுக்கு அப்படி என்னத் தயக்கம்?”, முத்து கேட்கவே அமைதியானான் ஜீவா.

ஆனாலும், என்னவென்று கேட்க அவன் தயாராக இல்லை. “நீங்க சொல்லுங்க....., பாப்பாவை பத்தி நீங்க என்ன பேச வந்தீங்க?”, முத்துவே அவனிடம் கேட்டார்.

“ஐயா.....”, “என்ன தம்பி.... ஐயான்னு சொல்லிட்டு, சும்மா அண்ணேன்னு சொல்லுங்க, இல்லையா முத்துன்னு சொல்லுங்க”, முத்து சொல்லவே, “இப்போ இது ரொம்ப முக்கியம்.....”, நொடித்துக் கொண்டான் ஜீவா.

“அவர் இருக்கட்டும், நீங்க சொல்லுங்க.....”.

“முத்தண்ணே....., இப்போ பாப்பாவுக்கு வயசு மூணு ஆகுது. எல்லோரும் மூணு வயசில் எல்கேஜி ல விடுவாங்க.

ஆனால் பாப்பாவை நாம இன்னும் ப்ளே ஸ்கூல்ல கூட விடலை. அதான் நான்.....”, இழுத்தான் அவன்.

“மேலே சொல்லுங்க.....”, “இங்கே சார் வீட்டில் இருந்து, நம்ம ஆபீஸ் போற வழியில் இப்போ புதுசா ஒரு க்ரஷ் வித் ப்ளே ஸ்கூல் ஆரம்பிச்சு இருக்காங்க. அங்கே, ஒரு வயசுமுதல், நாலு வயசுவரை இருக்க பசங்க படிக்கிறாங்க.

முதல்ல நம்ம பாப்பா ஸ்கூல் போய் பழக வேண்டி, கொஞ்ச நாள் அவளை அங்கே விடலாம். நம்ம வீட்டு கிட்டே என்பதால், நீங்களும் நடுவில் போய் பாத்துக்கலாம். நான் நல்லா விசாரிச்சுட்டேன். ரொம்ப நல்லபடியா இருக்கு. நீங்களும் விசாரிச்சுட்டு ஒரு முடிவுக்கு வாங்க”, சொல்லி நிறுத்தி, ஜீவாவின் முகத்தைப் பார்த்தான்.

அதில், ‘உன் யோசனையை நான் என்ன கேட்பது’ என்ற பாவனையே தொக்கி இருந்தது. அதைப் பார்த்தாலும், சொல்லுவது என் கடமை, அதைச் சொல்லிவிட்டேன், இனி முடிவெடுப்பது உன் பாடு என்பதுபோல், அவனும் மேற்கொண்டு அதைப் பற்றிப் பேசவில்லை.

********* மாலையில் வழக்கம்போல், நான்கு முப்பது மணிக்கு, க்ரஷை வந்தடைந்தாள் திவ்யா. ஏறக்குறைய அனைத்துப் பிள்ளைகளும் போய் விட்டிருந்தனர். ஒன்றிரண்டு பிள்ளைகள் மட்டுமே விளையாடிக் கொண்டிருந்தனர்.

தினமும் இவளைப் பார்த்தவுடன், ஆயா கண்ணனைத் தூக்கிக் கொண்டு வருவார். இன்றோ, புதிதாக முளைவிட்ட நட்பின் காரணமாக, கண்ணனை தானே தூக்கி வந்தாள் ஹேமா. இருவரும் பரஸ்ப்பரம் சிநேகமாக சிரித்துக் கொண்டார்கள்.

கண்ணன் ஹேமாவின் கைகளில் இருந்து, நழுவி, வேகமாக ஓடி வந்து திவ்யாவின் கைகளுக்குள் அடைக்கலாமானான். அவள் கழுத்தை இறுகக் கட்டிக் கொண்டு, அவள் கன்னங்களில் முத்தமிட்டான். ஆனால்

ஒரு வார்த்தை கூட பேசாமல், அவள் தோள் வளைவில் முகம் புத்தைத்துக் கொண்டு, அமைதியாக இருந்தான்.

மகனைத் தானும் அணைத்தவாறே, அவன் முதுகை வருடினாள் திவ்யா. “திவ்யா....., நீ ஸ்கூலுக்குள்ளே சாயங்காலம் வந்தால், கண்ணை மூடிட்டு சொல்லிடலாம், டைம் நாலு முப்பதுன்னு, அவ்வளவு பெர்பெக்ட். கண்ணனுக்கும் அந்த நேரம் வந்தவுடனே, கடிகாரம் பார்க்காமலே தெரிஞ்சுடுது”, அவளை வாஞ்சையாகப் பார்த்தவாறு, சொன்னாள் ஹேமா.

திவ்யா அனிச்சையாக, மணிக்கட்டில் கட்டியிருந்த வாட்சைப் பார்த்தாள். நேரம் ஹேமா சொன்னதையே காட்டியது. “நானும், நீ சொன்ன பிறகுதான் கவனிக்கிறேன்....., அப்போ, இந்த கிரடிட் எங்க ஸ்கூல் ரிங் மாஸ்டர்க்குதான் போகணும்”, அடக்கமாகச் சொல்லி புன்னகைத்தாள்.

“இருந்தாலும் நீ இவ்வளவு தன்னடக்கமா இருக்க வேண்டாம்....., சரி, இன்னைக்கு நாள் எப்படி போச்சு”, பேச்சை வளர்த்தாள் ஹேமா.

திவ்யா அமைதியாக அவளை ஒரு நிமிடம் பார்த்துவிட்டு, “எப்பவும் போல சாதாரணமாகப் போச்சு, ஏன்.....?”, புருவம் நெரித்துக் கேட்டாள்.

“இல்ல....., இன்னைக்கு காலையில் நான்தான் உனக்கு விஷ் பண்ணி அனுப்பினேன்....., எங்கே தாறு மாறா போயிருக்குமோன்னு மனசுக்குள் ஒரே கவலை அதான் கேட்டேன்”, பொய்க் கவலையாகக் கேட்டாள் அவள்.

“அப்படியெல்லாம் நீ கவலையே பட வேண்டாம்....., கடந்துவிட்ட நாட்களைவிட மோசமாக, எந்த நாளும் மாறாது.....”, தனக்குத் தோழமை கிடைத்த திருப்தியா? இல்லை மனதில் இருப்பதை யாரிடமாவது கொட்ட வேண்டும் என்ற ஆவலா? இல்லை தன்னையே மீறியா? இல்லையென்றால் ஹேமாவின் கனிவா? ஏதோ ஒன்று

திவ்யாவின் மனதைத் திறக்க வைத்து, வார்த்தையைக் கொட்டியது.

ஹேமாவே, திவ்யாவிடம் இருந்து இப்படி ஒரு பதிலை எதிர்பார்க்கவில்லை. ஹேமாவின் அதிர்ந்த முகத்தைப் பார்த்த பிறகுதான், தான் தன்னையும் மீறி எதையோ உளறிவிட்டது, அவளுக்குப் புரிந்தது. ஆனால், என்ன சொன்னோம் என்பது, எவ்வளவு யோசித்தும் அவள் நினைவிற்கு வரவில்லை.

நொடியில் தன்னை சுதாரித்த ஹேமா, “ஹப்பா....., என் மனசில் பாலை வார்த்தீங்க. உங்க வாயில் இருந்து இப்படி ஒரு வார்த்தையைக் கேக்குற வரைக்கும், உங்க நாள் எப்படிப் போச்சோன்னு கவலைப் பட்டுட்டே இருந்தேன். சரி விடுங்க, நீங்க எவ்வளவுன்னாலும் தாங்குவீங்கன்னா, தினமும் என்னோட விஷ் தான் முதல்ல உங்களுக்கு..... சரியா”, நிலைமையை அழகாகச் சமாளித்தாள்.

எதையும் துருவாமல் கண்ணியம் காக்கும் ஹேமாவின் அணுகுமுறை, திவ்யாவை மிகவும் கவர்ந்தது. “ஹேமா....., யு வில் பி மை பெஸ்ட் ப்ரண்ட்”, உணர்ந்து சொன்னாள். ஹேமா திவ்யாவின் நம்பிக்கையைக் காப்பாற்றுவாளா?

***

தாகம் - 6.

ஒரு வார்த்தை வெல்லும்

ஒரு வார்த்தை கொல்லும்

உன் வார்த்தைகள் மட்டும்

என்னை உயிரோடு உருக்குவதேன்.....

குமார் ஒரே பரபரப்பாக இருந்தான். அதற்குக் காரணம், இன்று நந்தன் முறைப்படி அவனது தங்கையை, பெண் பார்க்க வருகிறான். பெண் பார்க்கும் படலத்தையே ஒரு குட்டி நிச்சய விழாவாக நடத்த முடிவு செய்துவிட்டான் நந்தன்.

அவன் பக்கமிருந்து, அவனது தாய் வசந்தா, அவனது தாய் மாமா, மாமி, சித்தப்பா, சித்தி, மற்றும் உறவினர்களோடு வந்து இறங்கிவிட்டான். அவனுக்கு, எங்கே குமார் மனம் மாறிவிடுவானோ என்ற கவலை. எனவே திருமணத்தை சீக்கிரம் முடிக்க எண்ணினான்.

ஆனால், குமார் வீட்டில் உறவினர்கள் யாரும் வரவில்லை. அவர்களது பெற்றவர்கள் இறந்த பிறகு, எங்கே இவர்களின் பொறுப்பு தங்கள் மேல் விழுந்துவிடுமோ என்று அஞ்சியதால், உறவினர்கள் அனைவரும் இவர்களோடான தொடர்பை முறித்துக் கொண்டார்கள்.

குமாரும் அவர்களது மனப்பான்மை உணர்ந்ததால், தனது காலில் நிற்கப் பழகிக் கொண்டான். தங்கையையும் நன்றாகப் பார்த்துக் கொண்டான். பெற்றவர்கள் இறந்த பொழுது, அவன் இஞ்சினியரிங் முடித்திருந்ததால், தனக்கென்று உடனடியாக ஒரு வேலையைத் தேடிக் கொண்டான்.

அதன் பிறகு, எதற்காகவும் உறவினர்களை அவன் நாடவில்லை. அப்படியே இவனுக்கு நல்ல சம்பளத்தில்

வேலை கிடைத்ததை அறிந்து, உறவு கொண்டாட வந்த உறவினர்களை அவன் அண்ட விடவில்லை. அதன் பிறகு யாரும் அவர்களோடு உறவாட முனையவில்லை.

நந்தனுக்குப் ப்ரியாவிடம் பேசவேண்டுமென்று கடலளவு ஆசை இருந்தது. அதற்கு, குமார்தான் தடை விதித்தான். “சார் நாங்க அம்மா அப்பா இல்லாத பசங்க, நீங்க வந்து பேசுவதை, யாராவது பார்த்து, தவறாகப் பேசிவிட்டால்....., நிச்சயம் முடிந்த பிறகு நீங்க பேசுவதை நான் தடுக்கவே மாட்டேன். ஆனால், அதற்கு முன்பு வேண்டாம்”, என்று பிடிவாதமாகச் சொல்லிவிட்டான்.

நந்தனும், அவனது கூற்றைக் கொஞ்சம் ஒத்துக் கொண்டான். அவன் வீட்டில், அவனது முடிவுகள் அனைத்தையும் அவன்தான் எடுப்பது வழக்கம். அவன் தந்தை இறந்த பிறகு, தொழிலை அவன் எடுத்து நடத்தத் துவங்கவே, வசந்தா ஒதுங்கி இருக்கத் துவங்கி விட்டார்.

தன் மகன் எடுக்கும் முடிவுகள் அனைத்தும் சரியாகத்தான் இருக்கும் என்று நம்பினார். தொழிலில் பெரிய முடிவுகளை தனிச்சையாக எடுப்பவனால், அவன் வாழ்க்கையையும் சரியான விதத்தில் அமைத்துக் கொள்ள முடியும் என்று எண்ணினார்.

எனவே, அவன் ப்ரியாவைப் பற்றிச் சொன்ன பொழுது, சந்தோஷமாகவே தன் சம்மதத்தைச் சொன்னார். ‘உன் மகிழ்ச்சிதான் எனக்கு முக்கியம்’ என்று ஒற்றை வார்த்தையில் முடித்துக் கொண்டார்.

எவ்வளவுதான் குமாரின் கூற்றை நந்தன் ஒத்துக் கொண்டாலும், ஓராயிரம் முறையாவது கேட்டுவிட்டான், “குமார், உங்க தங்கையிடம் என்னைக் கட்டிக்கொள்ளச் சம்மதமா என்று கேட்டீர்களா? அதற்கு அவள் என்ன சொன்னாள்? அவளுக்குச் சம்மதம் தானே? என்னிடம் பேசவேண்டுமென்று கேட்டாளா?”, இப்படி அவனது தவிப்புகளை வார்த்தையாக வடித்து விடுவான்.

குமாரும், தான் சொன்ன பதிலையே திரும்பத் திரும்பச் சொல்வான். “உங்களைக் கட்டிக்க கசக்குமா சார்? அவளுக்கு எல்லாமே நான்தான் சார். நான் சொன்ன சொல்லை அவ மீறவே மாட்டா. நீங்க கவலையே படாதீங்க”, நேரடியாகக் கேட்டதாக, அவனும் சொல்லவில்லை, நந்தனின் சந்தோஷ மனநிலையில், அவனும் கவனிக்கவில்லை.

அலைப்பேசியில் தொடர்பு கொள்ளலாம் என்றால், அவளிடம் தனியாக அலைபேசியும் இல்லை. முதல் வேலையாக, அவளுக்கு ஒரு அலைபேசி வாங்கிக் கொடுக்கவேண்டும் என்று எண்ணினான். அதற்குக் கூட, நிச்சயம் வரை பொறுக்க வேண்டுமே என்றிருந்தது அவனுக்கு.

குமாரின் பரபரப்போ, பதட்டமோ, மகிழ்ச்சியோ எதுவும் ப்ரியாவைத் தீண்டவே இல்லை. அவள் எப்பொழுதுமே கொஞ்சம் தனிமை விரும்பி, பெற்றவர்களின் மறைவிற்குப் பிறகு, இன்னும் தனக்குள்ளே முடங்கிப் போனாள். அப்படி முடங்கிப் போனதால், அவள் மனதில் இருக்கும் எண்ணங்களை, குமார் உணரவில்லை. உணர முயன்றதும் இல்லை.

அப்படிப் போனதால்தான், ப்ரியாவின் மனதில் வேரூன்றியிருந்த காதலையும் குமார் உணரவில்லை. அவள் காதலன் வேறு யாருமல்ல, அவளது வகுப்பில், உடன் பயிலும் மாணவன்தான். எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய எந்த திட்டமிடலும் இல்லாத பருவ வயதில், காதல் வருவது சகஜம்தான்.

ஆனால், அந்தக் காதலை வெற்றிபெறச் செய்வது, அவர்கள் கையில்தான் இருக்கிறது. அவர்கள் இருவரின் காதலும் உண்மையானதுதான், ஆனால் வாழ்க்கைக்கு, காதல் மட்டும் போதாதே. காதலைச் சிதையாமல் காப்பாற்றக் கூட, பணம் வேண்டும்.

பருவக் கோளாறில், காதல் செய்து வீட்டை விட்டு ஓடிப் போய், பணப் பிரச்சனை வரும் பொழுது, அவர்கள் கண் முன்பே அவர்களின் காதல் சிதைந்து, சின்னாபின்னமாவதை எத்தனைக் காதலர்கள் கண்டிருப்பார்கள்.

ப்ரியாவும், அப்படி ஒரு அவசர முடிவைத்தான் எடுத்தாள். அதற்கு, அவளது காதலன்தான் சம்மதம் தெரிவிக்கவில்லை. மாறாக வாழ்க்கையைப் பற்றிய தெளிவான கருத்து இருந்தது அவனுக்கு.

தன்னை எங்கேயாவது அழைத்துச் சென்றுவிடுமாறு கோரிய ப்ரியாவிடம், "ப்ரியா....நாம இனிமேதான் பிஎஸ்சி யே முடிக்கப் போகிறோம். இந்த டிகிரியை வைத்து, எதுவும் செய்ய முடியாது. இன்னும் இரண்டு வருடம் நான் எம்பிஏ முடிக்கணும். அதுக்குப் பிறகு இரண்டு வருடம் வேலை பார்க்கணும். ஆக மொத்தம், ஐந்து வருடம் நீ காத்திருக்கணும்.

அப்படி நீ காத்திருந்தால், உன்னை நான் திருமணம் செய்யத் தயாராக இருக்கிறேன். அதை விட்டுவிட்டு அவசரப் பட்டு, ஓடிபோய் நம் இருவரின் எதிர் காலத்தையும் சிதைக்க, நான் தயாராக இல்லை.

இது உன்னோட வாழ்க்கை. நீதான் முடிவெடுக்க வேண்டும். உன் அண்ணாவிடம் பேசி, இந்தத் திருமணத்தை, தடுத்து நிறுத்தினாலும் சரிதான், இல்லையென்றால் திருமணம் செய்து கொண்டாலும் சரிதான்", தெளிவாகச் சொன்னான்.

"என்ன பிரபு இப்படிப் பேசுற? அப்படின்னா நீ என்னைக் காதலிக்கவே இல்லையா? நான் திருமணம் செய்துகொண்டால் உனக்குப் பரவாயில்லையா?", கண்கள் கலங்க கேட்டாள்.

"நான் உன்னை ரொம்பக் காதலிக்கிறேன் ப்ரியா. அதனால்தான், உன்னைக் கஷ்டப் படுத்தாமல், நல்ல மாதிரியான எதிர்காலம் அமைய வேண்டும்னு

நினைக்கிறேன். எனக்கும் உன்னைப் பிரிவது, உயிர் பிரியும் வலிதான். உன் வளமான எதிர் காலத்துக்காக, அந்த வலியைத் தாங்கிக்க நான் தயாரா இருக்கேன்", பிரபுவின் வார்த்தைகளில் இருந்த திடம், அவன் குரலில் இல்லை.

அவனது வலியை, அவன் குரலும், கன்றிச் சிவந்திருந்த கண்களும் அவளுக்கு உணர்த்தியது. ஆனாலும் உயிர் காதலின் வலி, அவளை உருக் குலைத்தது. "நீ வந்து என் அண்ணனிடம் பேசேன்....", எதைத் தின்றால் பித்தம் தெளியும் என்ற நிலையில் இருந்தாள் அவள்.

"ப்ரியா.... நான் எந்த முகத்தை வைத்துக் கொண்டு உன் அண்ணனை வந்து பார்க்க? என் தங்கையை எப்படிக் காப்பாற்றுவாய் என்று கேட்டால், நான் என்ன பதில் சொல்லட்டும்", இயலாமையால் அவன் நெஞ்சம் விம்மியது.

"வேற வழியே இல்லையா பிரபு....., என்னால் உன்னை விட்டு வேற ஒருத்தனை மனசால் கூட நினைக்க முடியவில்லை பிரபு. ஏதாவது செய்யேன்", கையேந்தி அவள் காதலுக்காகப் பிச்சை கேட்டாள்.

"ப்ரியா....., இதைவிட வேறு ஏதாவது வழி இருந்தால் நீயே சொல். ஆனால், ஓடிப் போகும் ஐடியா மட்டும் வேண்டாம். இப்படியெல்லாம் கேட்டு என்னை தர்ம சங்கடத்துக்கு உள்ளாகாதே ப்ரியா. அடுத்த ஜென்மம் என்ற ஒன்று இருந்தால், அப்போ நாம சேரலாம்", சினிமா வசனமாக இருந்தாலும், இக்கட்டான சூழ்நிலையில், அதுவே கை கொடுத்தது.

"பிரபு, என் கழுத்தில் தாலி ஏறினாலும், இந்த மனசுக்குள் உன்னைத் தவிர வேறு யாரும் வர முடியாது. அது எத்தனை வருடங்கள் ஆனாலும் சரிதான்", உணர்ச்சி வசப்பட்டு பேசினாள்.

"ப்ரியா..... தாலின்னு ஒண்ணு ஏறினால்....., எல்லாம் மாறிடும். நீயும் கண்டிப்பா மாறுவ, மாறணும்", இதயம்

உதிரம் வடித்தாலும், சொல்ல வேண்டியவற்றை அவன் சொல்லவே செய்தான்.

“பிரபு என்னைப் பற்றி நன்றாகப் புரிந்த நீயே இப்படிச் சொல்கிறாயே. அப்படி ஒரு மாற்றம் என் வாழ்வில் வரவே போவதில்லை. என்றைக்குமே, மனத்தால் நான் உன் ப்ரியவாதான் இருப்பேன்”, அவள் குரலில் ஒலித்த உறுதியைக் கண்டு, அவனுக்கே கொஞ்சம் கலக்கம் ஏற்பட்டது.

“அப்படியெல்லாம் இப்பொழுதே எந்த முடிவும் எடுக்காதே ப்ரியா. அது உன்னோட “வாழ்க்கை”. அது சந்தோசமா இருப்பதும், கானல் நீராகப் போவதும் உன் கையில்தான் இருக்கு. பாத்து நடந்துக்கோ. உன் கல்யாணத்துக்குக் கண்டிப்பா நான் வருவேன். எங்கே இருந்தாலும் நீ நல்லா இருக்கணும். எனக்கு அதுதான் வேணும்”, ஆத்மார்த்தமாகச் சொன்னான்.

அவனது இந்தப் புரிதலே, அவர்களைப் பிரித்தது. அவசர முடிவை எடுக்காமல் இருந்ததால் தான், அவர்கள் இருவரின் வாழ்வும், சிதையாமல் தப்பித்தது. அந்தப் புரிதலை அவள் தொடர்ந்திருந்தால் அனைத்தும் சரியாக சென்றிருக்குமோ?

காதலனின் பிரிவு, காதல் தோல்வி, அதனால் ஏற்பட்ட இந்த வலி, இவை அனைத்திற்கும் காரணம், நந்தாவின் விருப்பம் தானே. அவன் அவசரப் பட்டு, தன்னைத் திருமணம் செய்யக் கேட்டதால் தானே, குமார் அவளது திருமணத்தை நடத்தி வைக்க முயல்கிறான்.

நந்தன் மட்டும் இல்லையென்றால்……., தன் வாழ்வில் அனைத்தும் சரியாக நடந்திருக்கும். அவனுக்கு என்மேல் விருப்பமா? அவன் எப்படி என்னோடு வாழ்ந்து விடுகிறான் என்று பார்க்கிறேன். அவனுக்கு இந்த அழகு மேல்தானே கண், அந்த அழகைக் கொண்டே அவனை அழ வைக்க

வில்லையென்றால், நான் ப்ரியா இல்லை. இவ்வாறாக நந்தனின் மேல் வன்மம் வளர்த்தாள்.

இவை எதையுமே அறியாமல், எப்படியாவது தனது தங்கையை நல்ல முறையில் திருமணம் செய்து கொடுக்க வேண்டும். அதற்குத் தேவையான பொருள் ஈட்டவேண்டும், எந்தக் குறையும் இல்லாமல் அவளைப் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று மட்டுமே குமார் எண்ணினானே தவிர, அவளுக்கு என்னவேண்டுமென்று அவளிடம் கேட்க வேண்டுமென்று அவனுக்குத் தோன்றவே இல்லை.

அது அவனது தவறும் இல்லை. பெற்றவர்கள் இருந்திருந்தால் ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து செய்திருப்பார்கள். அவர்கள் இருந்தவரை, எந்தக் கவலையும் இல்லாமல் நண்பர்களோடு ஊர் சுற்றி, கிரிக்கெட் என்று மொட்டை வெயிலில் அலைந்து, நண்பர்களோடு ஊர் சுற்றிக் கொண்டு, காலையில் எட்டு மணிக்கு வெளியே சென்றால், இரவு பத்துமணிக்கு வீட்டிற்கு வந்த இளைஞன் அவன்.

திடீரென அவன்மேல் சுமத்தப்பட்டக் கடமையை நிறைவேற்ற வேண்டுமென்ற நினைப்பே, அவனுக்கு மலைப்பைக் கொடுத்தது. இளைஞனான அவனுக்கு, அது பெரும் சுமையாகவும், ஒரு பக்கம் பயமாகவும் இருந்தது.

அனைவரும், மாலை, சரியாக நான்கு மணிக்கே வந்து விட்டார்கள். அனைவரையும் வரவேற்று அமர வைத்தான். குமார், அக்கம் பக்கத்தில் இருந்தவர்களில் இரு குடும்பங்களை அழைத்திருந்தான். அவர்கள்தான் இவர்களுக்கு உறுதுணையாக இருப்பவர்கள்.

ப்ரியாவை அவர்களே அலங்கரித்து அழைத்து வந்தார்கள். ஏற்கனவே அழகில் ஜொலிப்பவள், அலங்காரத்தில் தேவதையாக ஜொலித்ததால். வந்திருந்த அனைவருக்குமே பரம திருப்தி. முதலில், ஒன்றுமில்லாத

வீட்டில் சம்பந்தம் வைக்கிறாயே என்று புலம்பியவர்கள் கூட, ப்ரியாவின் அழகில், அமைதியாகி விட்டார்கள்.

“வசந்தா....., பையனுக்கு ஏத்த தேவதைதான்....., இப்போதானே தெரியுது, நீ எப்படி உடனே ஒத்துக்கிட்டன்னு”, வசந்தாவின் அண்ணன் மனைவி சொல்ல, பெருமிதத்தில் மிதந்தார் அவர்.

“என் பையனோட செலக்ஷன் ஆச்சே.....”, பெருமை பிடி படவில்லை அவருக்கு. நந்தனால் அவளிடமிருந்து பார்வையை திருப்ப முடியவில்லை. சாதாரணமாகவே அவள் அழகில் மயங்குபவன், இப்பொழுது சொக்கிப் போய் அமர்ந்திருந்தான்.

“அண்ணா....., வாயை மூடு, நாலு கொசு உள்ளே போய் வெளியே வந்துடுச்சு”, அவனது சித்தப்பா மகன், நந்தனை கேலி செய்ய, சட்டெனக் கலைந்தான். கலைந்த பிறகுதான், தான் வாயெல்லாம் பிளக்கவில்லை, அவன் கேலி செய்கிறான் என்பதை உணர்ந்து, அசட்டுச் சிரிப்பை உதிர்த்தவாறு, பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

ஆனாலும், அவனால் ப்ரியாவின் அழகை, பார்வையால் பருகாமல் இருக்க முடியவில்லை. “எல்லோருக்கும் நமஸ்காரம் பண்ணிக்கோம்மா....”, அவளிடம் பக்கத்து வீட்டுப் பெண்மணி சொல்ல,

“அதெல்லாம் எதுவும் வேண்டாம்....., நீ வந்து என் பக்கத்தில் உக்காரும்மா. சொல்லிவிட்டு, தங்களின் சம்மதத்தை தெரிவிக்க, தாம்பாளத்தில் இருந்த பூவை எடுத்து அவள் தலையில் சூட்டி விட்டார். அங்கிருந்த அனைவரும் அதை உணர்ந்து சந்தோஷம் அடைந்தார்கள். ப்ரியாவைத் தவிர,

அவள் வந்ததுமுதல், யாரையும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. நந்தன் எப்படி இருப்பான் என்று அறியக்கூட அவள் ஆவல் கொள்ளவில்லை. பிரபு உறுதியாக மறுத்துவிட்ட பிறகு, தன் எதிர்ப்பைக் காட்டி

என்ன செய்ய? நடப்பவை அதன் போக்கில் நடக்கட்டும் என்று, அப்படியே விட்டுவிட்டாள்.

நடப்பவைக்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதுபோல் அமர்ந்து கொண்டாள். “என்னம்மா.... என் மகனைக் கட்டிக்க உனக்குச் சம்மதமா?”, வசந்தா அவளிடம் கேட்க, ‘ரொம்ப சீக்கிரம் கேட்டுட்டீங்க.....’, மனதுக்குள் குமைந்தவள், தலை கவிழ்ந்தாள்.

அதை வெட்கம் என கருதி, அனைவரும் அப்படியே விட்டு விட்டார்கள். நந்தன், நடக்கும் எதிலுமே கவனம் செல்லாமல், கண்களில் ப்ரியாவையே நிறைத்துக் கொண்டிருந்தான். அவன் மனம் புரிந்தே, வசந்தா அன்றே நிச்சயத்தையும் சிறிய அளவில் முடித்துவிட்டார். அவள் விரல்களைப் பற்றி மோதிரம் அணிவிக்கும் பொழுது, ஒரு அழகிய மலர்ச்செண்டை கையில் பிடித்திருப்பதுபோல் உணர்ந்தான்.

அவள் விரலில் மோதிரத்தை அணிவித்துவிட்டு, அதில் இதழ் பதிக்க எழுந்த ஆவலை சூழ்நிலைக் கருதி, சிரமப் பட்டே அடக்கினான். “என்னண்ணே... அப்படியே கிஸ் அடிக்கணும்னு தோணுமே.....”, நந்தனின் காதில் அவன் தம்பி சொல்ல, அவனை போலியாக முறைத்தான்.

நந்தனின் கைவிரலில் மோதிரம் அணிவிக்கும் பொழுதும், இயந்திர கதியில் செய்தாள் அவள். அவள் மனதில் என்ன இருக்கிறது என்பது தெரியாமலேயே, கல்யாணக் கனவுகளில் மிதந்தான் நந்தன். அவளது தயக்கங்களையும், தலை நிமிராமல் இருப்பதையும் வெட்கம் என்றே எண்ணினான்.

அவள், தன் சோகத்தை முகத்தில் காட்டியிருந்தாலாவது, அவன் கொஞ்சம் சிந்தித்து இருப்பான். ஆனால் அவளோ எதையும் வெளிக்காட்டாமல், உணர்ச்சியைத் தொலைத்த முகத்துடன், தலை கவிழ்ந்தே இருந்ததால், யாருக்கும் எதுவும் வித்தியாசமாகத் தெரியவில்லை.

அனைத்தும் முடிந்து, அவர்களுக்குத் தனியாகப் பேச ஒரு சந்தர்ப்பம் அளித்தார்கள். அப்பொழுதாவது, அவள் மனம் திறந்து தன் விருப்பமின்மையை நந்தனிடம் சொல்லியிருக்கலாம். அவளோ..., தனக்குத் திருமணம் செய்துவைக்க குமார் முனைந்துவிட்டான், அதற்கு இவனே காரணம், இப்பொழுது, இவன் இல்லையென்றால், வேறு ஒருவனை அண்ணன் கூட்டி வருவான். அப்படி மற்றொருவனைத் திருமணம் செய்வதை விட, தன் அண்ணனுக்கு இப்படி ஒரு எண்ணம் உதிக்கக் காரணமாக இருந்த இவனையே திருமணம் செய்து, அவனைக் கலங்கடிக்க வேண்டும், அவன் வாழ்வைப் பாழாக்க வேண்டும், தன் காதல் சிதையக் காரணமாக இருந்த அவன், வேறு பெண்ணை திருமணம் செய்து, சந்தோஷமாக இருக்கக் கூடாது, என்று நெஞ்சுக்குள் நஞ்சைச் சுமந்து எண்ணினாள்.

தனிமையில் சந்தித்த போது, அவளிடம் என்ன பேசுவது, எப்படிப் பேசுவது என்று தெரியாமல் தடுமாறினான் நந்தன். கோடிக்கணக்கான தொழில் பரிவர்த்தனைகளை, வாய் சாமர்த்தியத்தாலும், தேர்ந்த தொழில் நுணுக்கங்களாலும், அடையும் அவன், தன் மனதுக்கு இனியவளிடம் பேசத் தடுமாறினான்.

அவளோ, எதையும் கண்டு கொள்ளாமல், மொட்டை மாடியில் இருந்து தொடு வானத்தை வெறித்துக் கொண்டிருந்தாள். அவனுக்கு முதுகு காட்டி நின்றதால், அவள் முகத்தில் விரவியிருந்த சோகத்தை, அவனால் படிக்க முடியவில்லை.

அவனது தவிப்பிலும், அவளது மௌனத்திலும் ஐந்து நிமிடம் கடந்துவிட, நேரமாவதை உணர்ந்து, “ப்ரியா....., எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு. உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா?”, முதல் முறையாக, அவளை அழைக்கும்போது, எங்கே அவள் பெயருக்கு வலிக்குமோ என்பதுபோல் மெதுவாக அழைத்து, தன் விருப்பத்தையும், அவளது பதிலையும் ஆர்வமாகக் கேட்டான்.

அவனது இந்த தவிப்பு, கொஞ்சம் கூட அவளை அசைக்கவில்லை. அவள் யோசனையில் எல்லாம் பிரபுவே நின்றான். அவன் சொன்ன வார்த்தைகளே காதில் ஒலித்துக் கொண்டிருந்தன. அதை யோசிக்கும் பொழுதே, கன்னத்தில் நீர் மணிகள் உருண்டன.

சிலருக்கு, காதல்.... செடி மாதிரி. ஒரு பூ பூத்து உதிர்ந்தால், வேற பூ பூக்கும். ஆனால் அதுவே சிலருக்கு அந்தப் பூ மாதிரி....., ஒரு முறை பூத்து உதிர்ந்துவிட்டால்.., அதை மறுபடி செடியில் ஓட்ட வைக்கவே முடியாது...., அப்படி ஒரு பூவாக மாறிப் போயிருந்தாள் ப்ரியா.

தன் கண்ணீர் அவனுக்குத் தெரிந்துவிடக் கூடாதே என்று, இதுவரை அந்த தொடுவானத்தை வெறித்துக் கொண்டிருந்தவள் தலை கவிழ, அவளது தலை கவிழ்தலை, சம்மதமாக எண்ணிக் கொண்டான் நந்தன். இருவரும் இரு வேறு துருவங்களில் பயணிப்பது தெரியாமலேயே நின்று கொண்டிருந்தார்கள்.

அவளது சம்மதத்தை ஏற்றவன் போன்று, “ப்ரியா நீ வாய் வார்த்தையில் சொல்லவில்லை என்றாலும், உன்னோட இந்த வெட்கம் எனக்கு உன் சம்மதத்தைச் சொல்லுது. எனக்கு, உன்னோட நிறையப் பேசணும், ஆனா உன்கிட்டே செல்போன் இல்லையே....., அதான் நான் உனக்கு ஒரு செல்போன் வாங்கிட்டு வந்திருக்கேன்.

என்னோட ஆசை, கனவு, லட்சியம்....., இதைப் பற்றியெல்லாம் உன்கிட்டே நிறையப் பேசணும், அப்படின்னு ஆசைதான். ஆனால், இப்போல்லாம் உன்னைப் பார்த்தாலே, பேச்சே வர மாட்டேன்னு அடம் பிடிக்குது. உன்னை அப்படியே...., கட்டிக்கணும் போல கையெல்லாம் துடிக்குது. உனக்கும் அப்படில்லாம் தோணுதா?

நான் இதுவரை இப்படில்லாம் உணர்ந்ததே இல்லை தெரியுமா? எந்தப் பெண் கிட்டேயும் எனக்கு

இப்படியெல்லாம் தோணியதில்லை. என்னமோ, இப்போதான் காலேஜ் போற பையன் மாதிரி பீல் பண்ணுறேன். எப்போ பாத்தாலும், கண் முன்னாடி உன் முகம்தான் வந்து நிக்கிது. எப்போடா நம்ம கல்யாணம் நடக்கும்னு தவிப்பா இருக்கு", தன் ஆசையை, நேசத்தை ஒரே நாளில் அவளுக்குப் புரிய வைக்க முனைந்தான்.

அவன் சொன்னவற்றை எல்லாம், ப்ரியா காது கொடுத்து கேட்கக் கூட இல்லை என்பதை, அவன் அறியவே இல்லை. அவன் பேசியவற்றை, அவனை உண்மையாக நேசிக்கும் ஒரு பெண் கேட்டிருந்தால், கண்டிப்பாக பேருவகைக் கொண்டிருப்பாள். ஒரு முழுமையான ஆண்மகனால், தான் இவ்வளவு நேசிக்கப் படுகிறோம் என்று பெருமைப் பட்டிருப்பாள்.

ஆனால், அவன் எதிரில் நின்று கொண்டிருந்தவளோ, பிரபுவின் காதலி. அவளுக்கு எப்படி, தன் காதலனைத் தவிர, மற்றவன் இப்படிப் பேசுவதை, எப்படி அவளால் ரசிக்க முடியும்? உணர்வுகள் செத்துப் போனவளாய், செவிடியாய் நின்று கொண்டிருந்தாள் அவள்.

நந்தனோ இன்னும் பேசிக் கொண்டிருந்தான்....., "காதல் வந்தால் இப்படியெல்லாம் இருக்குமா ப்ரியா? எனக்கு இப்போதான் தெரியுது, காதல் இவ்வளவு பரவசத்தைக் கொடுக்கும்னு.....", அவன் கண்மூடி அனுபவித்துச் சொல்ல, அவனது காதல் என்ற வார்த்தையில், அவள் செவிகள் திறக்கப்பட்டு, அவனது வார்த்தைகள் அனைத்தும் அமிலங்களாக மனதை அரிக்கத் துவங்கியது.

"உன்னை இப்படியே என்னோட வீட்டுக்குக் கூட்டிப் போய்டணும் போல இருக்கு. ஐ கான்ட் வெயிட் மோர்....., ஐ பேட்லி நீட் யு...., நீட் யுவர் டைட் ஹக்.....", அதை ஆழ்ந்து ஆத்மார்த்தமாகச் சொன்னான்.

"எப்போடா இன்னும் இந்த ரெண்டு மாசம் முடியும்னு இருக்கு. இந்தா.... இந்த செல்போன் உனக்குத்தான். நான்

டெய்லி உனக்குப் போன் பண்ணுறேன், நீயும் உன்னோட இந்த வெக்கத்தை எல்லாம் மூட்டை கட்டி வச்சுட்டு, என்கூடப் பேசணும்.... சரியா".

ஒரு சிறந்த காதலனாக, ஒரு சராசரி ஆண்மகனாக, கல்யாணக் கனவுகள் நிறைந்த துடிப்புள்ள இளைஞனாக, அவன் பேசியது அனைத்தும், அவள் செவிகளில் நாராசமாக ஒலித்தது. அவளை மனதுக்குள் வைத்து, ஒவ்வொரு நொடியும் அவளோடு வாழும் அவன், இப்படிப் பேசாமல் வேறு எப்படிப் பேசுவான் என்பது அவளுக்குத் தெரியவில்லை.

அவன் தன் அழகில் மயங்கி, அவளைத் திருமணம் செய்ய முயன்றது, என்னவோ கொலைக் குற்றத்தைவிட, பெரிய தண்டனையாகத் தெரிந்தது அவளுக்கு. இதுவரை, அவனை தன்னைத் தொட விடாமல் தவிக்க வைக்கவேண்டும் என்று எண்ணியிருந்தவளின் எண்ணத்தில், மற்றொரு குரூர எண்ணம் உதித்தது.

அது தோன்றவே அவள் இதழ்களில் வம்னமான புன்னகை ஒன்றும் உதயமானது. கீழே அவர்களை அழைக்கும் குரல் கேட்கவே, அவள் பக்கம் அந்த செல்போனை நீட்டினான். அவன் பக்கம் திரும்பியவள், அவனிடமிருந்து அந்த அலைபேசியை கை நீட்டி வாங்கவே இல்லை.

அவளது தயக்கம் புரிந்து, அதை அங்கிருந்த கைப்பிடி சுவரில் வைத்துவிட்டு, "பிறகு பேசலாம்.....", என்று விடை பெற்று கீழே வந்துவிட்டான். அவனை அப்பொழுது இருந்தே அலட்சியப் படுத்தத் துவங்கிவிட்டாள் என்பதை, அவன் அறியவே இல்லை.

அதை அறிந்தபொழுது, காலங்கள் கடந்திருந்தது, விதியின் சதியில்லாமல் வேறு என்ன?

அவர்கள் அனைவரும் சாப்பிட்டு, கிளம்பிச் செல்லும் வரை கூட, அங்கிருந்த யாரிடமும் அவள் ஒரு வார்த்தைக் கூடப்

பேசவில்லை. இவர்கள் வாழ்வில் இணைந்தால் என்ன நடக்கும்.....?

***

தாகம் - 7.

பார்க்கும் மரங்களெல்லாம்

நந்தலாலா..... நின்றன்

பச்சை நிறம் தோன்றுதடி

நந்தலாலா..... என்று

பாடிவைத்தான் பாரதி.....

அவன் எதை நினைத்துப் பாடினானோ

எங்கே என் விழித் திரையில் - நீ

விழுந்து விடுவாயோ என்று - நான்

பதைப்பதுபோல் இல்லை என்பதுமட்டும்

எனக்குப் புரிகின்றது.....

அன்று காலையில் எழும் பொழுதே, எதுவோ சரியில்லாதது போலவே தோன்றியது திவ்யாவிற்கு. தினமும் அப்படித்தான் இருக்கும். ஆனால் இன்றோ, வழக்கத்துக்கு மாறாக, எதுவோநிகழப் போவது போலவும், அது நல்லதாக இருக்கப் போகிறதா? கெட்டதாக இருக்கப் போகிறதா? என்ற தவிப்பும் மாறி மாறி எழுந்தது.

எவ்வளவு நேரம்தான் மனதுக்குள்ளேயே உழன்று கொண்டிருக்க முடியும்? அதைக் கொஞ்சம் ஒதுக்கி வைத்தவாறே, காலைக் கடன்களை வழக்கம்போல் இயந்திரகதியில் செய்தாள். கண்ணனும் அமர்ந்தவாறு அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனுக்கும், தாய்க்கு மனநிலை சரியில்லததுபோல் தோன்றியதோ என்னவோ, அமர்ந்திருந்த சேரில் இருந்து

எழுது, அவள் அருகில் சென்று அமர்ந்து, அவள் அழுகிறாளோ என்று முகத்தை உற்றுப் பார்த்தான்.

என்ன நினைத்தானோ, “அம்மா.., கண்ணா ஸ்கூல்.., அழமாட்டான்..”, தாய், தன்னை நினைத்து, அதற்காகத்தான் கலங்குகிறாளோ என்று எண்ணி, தனக்குத் தெரிந்த விதத்தில் ஆறுதல் சொன்னான். அவன் அப்படிச் சொல்லவே, அவனை இறுக அணைத்துக் கொண்டு, கலங்கும் மனதை அடக்க வழியில்லாமல், கண்ணீர் உகுத்தாள்.

அவள் அழுவதைக் கண்ட கண்ணனும், அழுகைக்குத் தயார் ஆனான். அவன் அழுவதைப் பார்த்த பிறகுதான், தன்னை நிலைக்குக் கொண்டு வந்தாள். ‘இப்பொழுது ஏன் அழுதோம்.....?’, அவளுக்கு அவளே கேட்டுக் கொண்ட கேள்விக்கு, விடைதான் இல்லை.

எப்பொழுதும் கொஞ்சம் சுணங்கியவாறே கிளம்பும் கண்ணன், எங்கே, தாய் மறுபடியும் அழுது விடுவாளோ என்று அஞ்சியவாறு, அன்று , அழுகையை தனக்குள் அடக்கிக் கொண்டு கிளம்பினான்.

திவ்யாவும் அனைத்து வேலைகளையும் முடித்துவிட்டு பள்ளிக்கு கிளம்பினாள். ஆனாலும், மகனை நொடிக்கொருதரம் பார்க்க மறக்கவில்லை. அவனது அமைதி ஒரு பக்கம் மகிழ்ச்சி என்றால்....., மறுபக்கம், அவனுக்கு உடம்பு எதுவும் சரியில்லையோ என கவலை கொள்ளச் செய்தது.

வண்டியில் ஏறிய பிறகும் கூட அவனது இறுக்கம் அவளுக்குக் கவலையைக் கொடுத்தது. கண்ணன் இப்படி இருப்பதற்கு, அழுது அடம் பிடித்தால் கூடப் பரவாயில்லை என்றே தோன்றியது.

“கண்ணா என்னடா.....? ஏன் அமைதியா இருக்க?”, அவளுக்குத்தான் எதுவோ குறைவதுபோல் இருக்கவே,

பொறுக்க முடியாமல் கேட்டுவிட்டாள். ஆனால் அவனோ பதில் எதுவும் சொல்லாமல் அமைதியாகவே இருந்தான்.

“அம்மாகிட்டே பேச மாட்டியா.....?”, வருத்தமாகக் கேட்டாள்.

அவள் வருத்தம் காணச் சகிக்காமல், “நீ அழுத...?”, அதை கேட்கும் பொழுதே ஒரு ஓரத்தில் அவன் இதழ்கள் அழுகைக்குத் தயாராகத் துடித்தது.

நீ ஏன் அழுதாய்?, எதற்கு அழுதாய்...? என்று மழலையில் அவன் கேட்க முயன்றது அவளுக்குப் புரிந்தது . ஆனால் தனக்கே புரியாத ஒரு விஷயத்தை, சிறுவனிடம் எப்படிச் சொல்லிப் புரிய வைக்கவென்றுதான் தெரியவில்லை.

அவள் அமைதியாகவே வண்டியைச் செலுத்தினாள். “அம்மா இனிமேல் அழமாட்டேண்டா கண்ணா. காலையில், அம்மா கண்ணில் தூசி விழுந்துடுச்சு அதான்.....”, அவனுக்குச் சமாதானம் சொன்னாள்.

“அப்பா இல்ல....., நீ அழுத.....”, அவனுக்கு மனதில் நினைப்பதை வார்த்தையில் வடித்துக் கேட்கத் தெரியவில்லை. ஆனால் அவன் சொல்ல வருவதைப் புரிய முடியாத அளவு, அவள் ஒன்றும் தாய்மைக் குணம் இல்லாமல் இருப்பவள் அல்லவே.

தன் பிள்ளை மழலையில் என்ன பேசினாலும், அதைச் சரியான விதத்தில் புரிந்து கொள்பவள் தாய் தானே, அப்படித்தான் அவன் கேட்க வருவதும் தெளிவாக அவளுக்குப் புரிந்தது. “அப்பா வீட்டில் இல்லை. பிறகு நீ எதற்கு அழுதாய்? என்னை நினைத்தா?”, இதைத்தான் அவன் கேட்க வருகிறான் என்பது புரியவே, அது ரோடு என்றும் பார்க்காமல், பட்டென வண்டியை நிறுத்தினாள்.

கொஞ்சம் தடுமாறி, பிறகு வண்டியை ரோட்டின் ஓரத்தில் தள்ளி நிறுத்தினாள். சைடு ஸ்டாண்ட் போட்டுவிட்டு, கண்ணனை தன் பக்கம் திருப்பினாள். அவன் கண்கள்,

கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தது. உதடு துடிக்க, அதை அடக்க அவன் போராடுவதும் தெரிந்தது.

“இங்கே பாருடா கண்ணா....., அம்மா கண்ணில் நிஜமாவே தூசிதான் விழுந்துதுடா. என் கண்ணன்தான் சமத்துப் பையனாச்சே. கண்ணா என்ன செஞ்சாலும் அம்மாவுக்குப் பிடிக்கும். ஏன்னா இந்த அம்மாவுக்கு கண்ணன் மட்டும் தானே இருக்க?”, அவனுக்குப் புரியுமா இல்லையா என்பதைப் பற்றியெல்லாம் அவள் கவலையே படவில்லை.

கண்ணன் தனக்காக இவ்வளவு நினைத்து கலங்குவது அவளுக்குப் பெருமையாகவும், ஆறுதலாகவும் இருந்தது.

********** வழக்கத்தை விட சீக்கிரமே எழுந்துவிட்டான் ஜீவா. இன்று அலுவலகம் செல்ல வேண்டும் என்று எண்ணும் பொழுதே மனமெல்லாம் பாரமாகிப் போன உணர்வு. அதைவிட, இன்று அஞ்சலியை, க்ரஷில் வேறு விட வேண்டுமே.

இவ்வளவு நாட்களாக, அவளுக்கு வயது போவதே தெரியாமல் இருந்த தன்னை நொந்து கொண்டான். அவள் தாய் சரியாக இருந்திருந்தால், அவளுக்கு அனைத்தும் சரியாக நடந்திருக்கும், அந்தக் கொடுப்பினைதான் இல்லாமல் போய் விட்டதே. யாரை நொந்து கொள்வது?

எவ்வளவுதான் வலித்தாலும், சில நினைவுகளை அசை போடாமல் இருக்க முடிவதில்லை. வலிக்க வலிக்க அதை நினைத்துப் பார்த்து, புதிதாக ரணப் பட்டுக் கொள்கிறதே மனது....., வலியை மறப்பதை விட, அந்த வலியோடு வாழப் பழகிவிட்டான் அவன்.

மல்லார்ந்து படுத்து, கைகளை தலைக்கடியில் கொடுத்து, வழக்கமாக தான் செய்யும் வேலையான, விட்டத்தை வெறிப்பதை, சரியாகச் செய்து கொண்டிருந்தான். தறிகெட்டு அலையும் எண்ணங்களை அடக்க வழி தெரியாமல், கண்களை இறுக மூடி, மனதை ஒருமுகப் படுத்த முனைந்தான்.

பெண்ணின் துன்பத்தை அவள் அழுதாவது கரைப்பாள். ஒரு ஆணாகப் பிறந்துவிட்டு கண்ணீர் விட்டு அழக் கூட முடியாமல், இதயம் பாரமாக கனப்பதை உணர்ந்தவாறு, வேதனையை தொண்டைக் குழிக்குள் அடக்கி, எச்சில் விழுங்குவதுபோல் விழுங்கினான்.

பின்னர் தன்னை அறியாமலே உறங்கியவன், காலையில் முத்து வந்து கதவைத் தட்டும் ஓசையில்தான் கண் விழித்தான்.

“தம்பி..., தம்பி....”, உறக்கம் கலைந்து நேரம் பார்த்தவன், அது ஏழு முப்பது எனக் காட்டவே, அருகில் தன் மகளைப் பார்த்தான். அவள் இருந்த இடமும் வெறுமையாக இருக்கவே,

வேகமாக எழுந்து அமர்ந்து, “முத்து வாங்க.....”, அவன் குரல் கொடுத்த மறு நிமிடம், முத்து, அஞ்சலியை ஒரு கையில் ஏந்தி, மறு கையில் காப்பி கோப்பையுடன் உள்ளே வந்தார்.

“என்ன தம்பி உடம்பு ஏதாவது சரியில்லையா? பாப்பா எழுப்பியும் நீங்க எழுந்துக்கவே இல்லையாம். என்கிட்டே வந்து ஒரே அழுகை, நான்தான் சமாதானம் செஞ்சு ஹார்லிக்ஸ் கொடுத்து உங்களைப் பார்க்கத் தூக்கிட்டு வாறேன்....”, அக்கறையாகக் கேட்டார்.

“அதெல்லாம் எதுவும் இல்லை முத்து, விடியக் காலம் கொஞ்சம் அசந்து தூங்கிட்டேன் போல.....”, சாதாரணமாகச் சொன்னான்.

இந்த பதிலைக் கேட்டு முத்துதான் கலங்கிப் போனார். இரவு முழுவதும் உறங்காமல் தவித்ததால் தான் அவன் காலையில் அசந்து தூங்கிவிட்டான். மனதுக்குள் அவனுக்கு இருக்கும் கவலை அவனை உறங்கவும் விடுவதில்லை என்பது அவருக்குப் புரிந்தது.

வார்த்தைகளில் ஆறுதல் சொல்லி தேற்றும் விஷயமில்லையே இது. மனம் சம்பந்தப் பட்டது. மனதை மாற்ற வேண்டுமென்றால், அதை வேறு வழியில் செலுத்த வேண்டும். அப்படிச் செலுத்தினால் தான், முந்தைய விஷயங்களை மறக்க முடியும்.

குழந்தையாக இருந்தால் அவனுக்கு எடுத்துச் சொல்லிப் புரிய வைக்கலாம். வாழ்க்கையில் பெரிய முடிவுகளையும் அனாயாசமாக எடுத்து வந்தவன், வேண்டுமென்று மனதை திசை திருப்பாமல் இருப்பதை என்னவென்று சொல்ல? கண்கள் பனிக்க அவனையே பார்த்தார்.

அவர் கவலையாகப் பார்ப்பதை உணர்ந்து, “என்ன முத்து....? தூங்குறது அவ்வளவு பெரிய குத்தமா? அதுக்கு எதுக்கு இப்படி வெறிச்சுப் பாத்துட்டு இருக்கீங்க? போங்க, போய் வேலையைப் பாருங்க. அப்படியே அந்த....., அந்த கணேஷை வரச் சொல்லுங்க. பாப்பாவோட ஸ்கூல்லைப் பாத்துட்டு வந்துடலாம்.

நானும் இன்னைக்கே ஆபீஸ் போகலாம்னு முடிவு பண்ணிட்டேன். என் ஒருத்தனோட கவலைக்காக, நூறு குடும்பத்தை தவிக்க விடுவது சரியாப் படலை. எவ்வளவு நாள்தான், என்னோட கூட்டுக்குள்ளேயே அடைந்து கிடப்பது, அதுவும், நான் எந்தத் தப்புமே செய்யாத போது.....”, மேலே என்ன சொல்லியிருப்பானோ, மகளின் முகத்தைப் பார்த்து, அதைப் பாதியிலேயே நிறுத்தினான்.

“நீங்க எடுத்திருப்பது நல்ல முடிவுதான் தம்பி. நீங்க கிளம்புங்க, நான் கணேஷ் தம்பிக்கு போன் பண்ணிட்டு வாறேன்”, மகளை அவனிடம் விட்டுவிட்டு, போன் செய்ய விரைந்தார்.

அதன் பிறகு, நேரம் ரெக்கை கட்டிப் பறந்தது. ஒருமணிநேரம் நொடியில் கடக்க, குளிக்கும் பொழுதும், உடை மாற்றும் பொழுதும், மகளை மனதளவில் கொஞ்சம் தயார் செய்தான் ஜீவா. ஸ்கூல் பற்றியும், அங்கே

அவளுக்கு விளையாட தோழர்கள் கிடைப்பார்கள், நிறைய ரைம்ஸ் சொல்லித் தருவார்கள், விளையாடலாம் இப்படி நல்ல விதமாகவே சொன்னான்.

அஞ்சலி எப்பொழுதுமே வயதிற்கு மீறிய பக்குவத்துடனே நடந்து கொள்வாள். அவளிடம் ஒரு பக்குவம் இருக்கும். மற்றவர்கள் சொல்வதைக் கொஞ்சம் கவனமுடன் கேட்பாள். அவளுக்கு இந்த பக்குவம் வரக் காரணமே ஜீவாதான்.

அவள் குழந்தையாக இருந்த பொழுதே, தாயை தொல்லை செய்யக் கூடாது என்பது துவங்கி, அவள் எப்படிப் பொறுப்பாக நடந்துகொள்ள வேண்டும், மற்றவரை எப்படி அனுசரிக்க வேண்டும், மற்றவர் மனம் புண் படும்படி பேசக் கூடாது, எதையுமே தைரியமாக தன்னிடம் சொல்ல வேண்டும், வெளிப்படையாக இருக்க வேண்டும், இப்படி நிறையச் சொல்லிக் கொடுத்தான் .

ஒரு வயதுமுதலே இதையெல்லாம் கேட்கத் துவங்கி விட்டதால், எதையுமே முதிர்ச்சியாகவே யோசிப்பாள் அவள். ஒரு வயதிலேயே பேசவும் துவங்கி விட்டாள். அந்த அவளது பக்குவம், அவளை பள்ளிக்குச் செல்லச் சொல்லும்போதும் வெளிப்பட்டது.

அனாவசியமாக, அலட்டலோ, அடாமோ எதுவும் இல்லை. மாறாக, அங்கே என்ன இருக்கும்? எப்படி இருக்கும்? தனக்கு யார் ரைம்ஸ் சொல்லித் தருவார்கள்? தனக்கு எப்படி நண்பர்கள் கிடைப்பார்கள்? அவர்கள் என்ன செய்வார்கள்? கேள்விமேல் கேள்வி கேட்டு, ஜீவாவை சுற்ற விட்டுவிட்டாள்.

அவளது கேள்விகளுக்கு பதில் சொல்லியே ஓய்ந்து போகும் ஜீவாவை, பாவமாகப் பார்த்தார் முத்து. அவரையும் பேச்சுக்குள் இழுத்தாள் அஞ்சலி. அவரோ, தனக்கு கிச்சனுக்குள் வேலை இருப்பதாகச் சொல்லி நழுவி விட்டார்.

பேச்சின் நடுவிலேயே சாப்பாடும் முடிந்துவிட, மகளை தூக்கிக் கொண்டு, வெளியே வந்தான், அவனோடு முத்துவும் வந்தார். அங்கே வெளி வராண்டாவில், சோபாவில் கணேஷ் அமர்ந்திருப்பதைப் பார்த்தனர்.

“குட் மார்னிங் சார்.....”, அவனது வாழ்த்தை சிறு தலையசைப்பில் பெற்றுக் கொண்டான்.

“என்னதம்பி உள்ளே வந்திருக்கலாமே.....?”, ஜீவா பார்வையில் வெளிப்படுத்திய கேள்வியை, முத்து வாய்விட்டே கேட்டார்.

“இல்லண்ணே..... நான் இப்போதான் வந்தேன், நீங்க கிளம்பிட்ட சத்தம் கேக்கவே இங்கேயே உக்காந்துட்டேன்”, அவன் பார்வை அஞ்சலியின் மேல் ஏக்கமாகப் படிந்தது.

அதை அசட்டை செய்துவிட்டு, தன் காரில் ஏறினான் ஜீவா. அவனோடு காரின் பின்னால் முத்துவும் ஏறிக் கொண்டார். ஜீவா, கணேஷிடம் எதுவும் பேசவில்லை. காரை ஸ்டார்ட் செய்துவிட்டு அவனைப் பார்க்க, அவனும் புரிந்ததுபோல், தனது ஹோண்டா சிட்டி பைக்கை உதைத்துக் கிளப்பி, காருக்கு வழி காட்டியவாறு முன்னால் சென்றான்.

அவன் மகளிடம் பேச்சுக் கொடுத்தவாறு, அவளிடம் ஒரு கண்ணும், பாதையில் ஒரு கண்ணுமாக வண்டியைச் செலுத்தினான்.

அதே நேரம், எதிர் திசையில் இருந்து, திவ்யா, தன் மகன் கண்ணனிடம் பேசியவாறு, வந்து கொண்டிருந்தாள். இரு வேறு திசைகளில் இருந்து வந்த இருவருமே, சாலையில் பாதிக் கவனமும், மீதி கவனம் அவர்களின் பிள்ளைகளிடமும் வைத்தவாறு, வந்து கொண்டிருந்தார்கள்.

சரியாக க்ரஷின் நுழை வாயிலில், இருவரின் கவனமும், ஒரு சேரத் தங்கள் மக்களிடம் இருக்க, சாலையில் கவனம்

சிதற, இருவரின் வாகனமும் ஒரு சேர முத்தமிட்டுக் கொள்ள இருந்த கடைசி நொடியில் சுதாரித்தார்கள்.

ஆனாலும் இருவரின் வாகனமும் முத்தமிட்டுக் கொள்வதை, இருவராலும் தடுக்க முடியவில்லை. ஜீவா காரில் இருந்ததால், சேதாரம் என்னவோ, திவ்யாவிற்கு மட்டும்தான் இருந்தது. எதிரில் இப்படி ஒரு படகுக் காரை இதுவரை எதிர்கொண்டே இல்லாத காரணத்தால், கொஞ்சம் அசட்டையாகத்தான் வந்தாளோ திவ்யா? தெரியவில்லை.

எதிர்பாராமல் அழுத்திய சடன் ப்ரேக்கால், பேலன்ஸ் தவறி, வண்டியோடு சரிந்தாள் அவள். ஜீவாவோ அதிர்ந்து போனான். அதிலும் வண்டியில் இருந்த சிறுவனைப் பார்த்து இன்னும் பதைத்துப் போனான்.

நொடியில் காரில் இருந்து குதித்து அவர்கள் அருகில் சென்றான். கண்ணனோ, அதிர்ச்சியில் பெருங் குரலெடுத்து அழத் துவங்கியிருந்தான். திவ்யாவால் வேகமாக எழ முடியவில்லை. ஏனென்றால், வண்டியின் அடியில் அவளது கால் சிக்கிக் கொண்டிருந்ததே காரணம்.

ஜீவா, கண்ணனை கைகளில் அள்ளிக் கொண்டான். “ஒண்ணும் இல்லடா செல்லம்....., ஒண்ணும் இல்லை”, அவனைச் சமாதானம் செய்ய முயன்றான்.

அதே நேரம், முத்து வந்து, அவளது வண்டியைத் தூக்கிவிட்டு, அவளைக் கை கொடுத்து எழுப்பினார். விழுந்த பொழுது இருந்த அதிர்ச்சியை விட, இரு ஆண்களைக் கண்ட அதிர்ச்சிதான் அதிகமாக இருந்தது.

பட்டென முத்துவின் கைகளில் இருந்து, தன் கையை விடுவித்துக் கொண்டவள், காலின் வலியால் கொஞ்சம் நிற்கத் தடுமாறினாள். விழுந்ததில் கால் வேறு எசகு பிசகாக சுளுக்கி இருந்தது. அந்த வலியை அவர்களுக்குத் தெரியாமல் பல்லைக் கடித்து அடக்கினாள்.

வெளியே இருந்த வலியை விட, கண்ணனின் அலறல் அதிகமாக வலித்தது, “இல்ல.., வேணா.., விடு....”, ஜீவாவின் கைகளில், விரோதியின் கைகளில் சிக்கிக் கொண்ட பட்டாம் பூச்சியாகத் துடித்தான்.

“இல்லப்பா....., அழாதே...., உனக்கு ஒண்ணுமில்லை.....”, அவன் விழுந்ததால் அழுகிறான் என்று, அணைத்து ஆறுதல் சொல்ல முயல, அவனோ இன்னும் நடுங்கி, விறைத்தான். அவன் உடல் வெட்டி இழுக்கத் துவங்கியது.

அவனிடம் வித்தியாசத்தை உணர்ந்தவன், என்னவென்று பார்க்கும் முன்னர், அவன் கைகளில் இருந்து தன் மகனைப் பறித்தாள் திவ்யா. “தயவு செய்து போய்டுங்க....., என் பையனை, நான் பாத்துக்கறேன்....., போய்டுங்க....”, ஜீவாவிடம் கையெடுத்துக் கும்பிட்டவள்,

“கண்ணா....., ஒண்ணும் இல்லடா....., இங்கே பார், நீ அம்மாகிட்டதான் இருக்க”, அவளுக்கு மகனிடம் சொல்லும் முன்னர், கண்ணீர்தான் வடிந்தது.

அவளிடம் இருந்து , இப்படி ஒரு செய்கையை எதிர் பார்க்காதவன் திகைத்தான். ஆனாலும் அதை விடுத்து, “மேம் அவனை உடனே ஹாஸ்பிடல் கூட்டிப் போகணும்...”, கண்ணன் துடிப்பதை உணர்ந்து சொன்னான்.

“ஹையோ...., நீங்க போயிடுங்களேன்....., நான் பாத்துக்கறேன்.....”, திவ்யா இன்னும் அதிலேயே நின்றாள். அதற்குள் அங்கே பெரிய கூட்டமே கூடி விட்டது. அவள் பார்வை, கலவரமாகச் சுற்றி இருந்தவர்களை நோட்டம் விட்டது.

***

தாகம் - 8.

எனக்கு வலிக்கவேண்டுமென்றே

வார்த்தைகளை வீசிச் செல்கிறாயா?

அப்படியென்றால் மகிழ்ந்துகொள்

உன் காரியம் வெற்றியென்று.....

தர்ஷிணி குழம்பித் தவித்துப் போனாள். இன்னும் இரண்டு மாதங்களில் திருமணத்தை வைத்துக் கொண்டு, அவனோடு சண்டை போடுவது....., இது சண்டையா? இல்லையென்றால் அவருக்கு அவள்மேல் வெறுப்பா? என்பதைக் கூட இனம் காண முடியாமல் தவித்தாள்.

கையில் இருந்த போனை வெறித்துப் பார்த்தவாறே இருந்தாள். அவளுக்கு என்ன செய்வதென்று எதுவுமே புரியவில்லை. இவர் வேண்டுமென்றே கோபப் படுகிறாரா? இதுதான் அவரது குணமா? அவர் சாதாரணமாகப் பேசுவதை, நான் தான் குதர்க்கமாக எடுத்துக் கொள்கிறேனா? மேலும் மேலும் குழம்பித் தவித்தது அவள் மனது.

கல்யாணக் கனவுகள் அனைத்தும் கலங்கலாகத் தெரிந்தது இப்பொழுது. அடி வயிற்றில் பயப் பந்து சுழன்றது. இந்த பயத்தை யாரிடம் சொல்லித் தெளிவு படுத்த? என்னவென்று சொல்லி அவர்களுக்குப் புரிய வைக்க? சாதாரண ஊடல் என்று அதை எடுத்துக் கொள்ள அவளால் முடியவில்லை.

அவன் குரலில் இருந்த விட்டேற்றித்தனம் அவளை அசைத்தது. மனதைப் பிசையும் உணர்வு....., என்ன செய்தாலும் அதை விரட்ட முடியவில்லை. அதே நேரம், அலைபேசி மறுபடியும் ஒலி எழுப்ப, அவன்தான்

அழைக்கிறானோ என்று நொடியில் அவள் அகமும், முகமும் மலர்ந்தது.

அதில் ஒளிர்ந்ததோ ஒரு புதிய எண், அதை உயிர்பித்து காதில் வைத்தாள். “ஹலோ, அண்ணி நான்தான் காவியா பேசுறேன். நல்லா இருக்கீங்களா?”, காவியா என்று ஒரு நிமிடம் யோசித்தவள், அது வித்தார்த்தின் தங்கை என்ற நினைவு எழவே, சட்டென ஒரு பரபரப்பு அவளைத் தொற்றிக் கொண்டது.

“சொ..., சொல்லுங்க அண்ணி...., நான் நல்லா இருக்கேன். நீங்க நல்லா இருக்கீங்களா? அண்ணா, குட்டிப் பையன் எல்லோரும் நல்லா இருக்காங்களா?”, வேகமாகக் கேட்டாள்.

“நாங்க எல்லோரும் நல்லா இருக்கோம் அண்ணி. நீங்க பதட்டப் படாதீங்க. நான் சும்மாதான் போன் செஞ்சேன். உங்ககிட்டே பேசணும்னு ரொம்ப நாளா நினைச்சுட்டே இருந்தேன். ஆனா இன்னைக்குதான் கொஞ்சம் டைம் கிடைச்சுது அதான் போன் செய்தேன்”, அவள் பதட்டம் உணர்ந்து ஆதரவாகச் சொன்னாள்.

“ஓ...., அப்படியா அண்ணி, நீங்க போன் செய்தது ரொம்ப சந்தோசமா இருக்கு”, உற்சாகமாகவே சொன்னாள்.

“அண்ணா உங்களுக்குப் போன் செய்யிறானா? என்கிட்டே நம்பர் வாங்கினான், அதான் கேட்டேன்”.

“ம்..., போன் பண்ணுனாங்க அண்ணி”, சுருதி குறைந்தது அவள் குரலில்.

அதை உணர்ந்தவள்போல், “என்னண்ணி, ஏதாவது பிரச்சனையா? அண்ணா ஏதாவது கோபமா சொல்லிட்டாங்களா என்ன?”, ஆச்சரியமாகக் கேட்டாளோ?

“அண்ணி..., உங்க அண்ணனுக்குக் கோபம் ரொம்ப வருமா?”, அவள் இருக்கும் மன நிலையில், அவளை மீறியே வார்த்தைகள் வந்து விழுந்தன.

“என்னது..... அண்ணா உங்ககிட்டே கோபப் பட்டாங்களா? என்னால் நம்பவே முடியலை, என் மேலேயும், அம்மா மேலேயும் அண்ணன் கோபமே பட மாட்டாங்க. அதாவது, பொண்ணுங்க மேல அண்ணா என்னைக்குமே கோபப்பட்டு நான் பார்த்ததே இல்லை. அப்படிப் பட்ட அண்ணா, உங்ககிட்டே கோபமா பேசினாங்கன்னு சொன்னால், என்னால் நம்பவே முடியலை”, இப்பொழுது அவளது ஆச்சரியத்தை அடக்கவே முடியவில்லை.

“இல்லண்ணி.... கோபமா பேசலை....., ஆனால்.....”, அவளுக்கு சொல்ல தெரியவில்லை, எனவே பாதியில் நிறுத்திவிட்டாள்.

“ஹையோ அண்ணி...., அண்ணா ஏதாவது டென்சன்ல இருந்திருப்பாங்க. மத்தபடி, அண்ணாவை நினைச்சு நீங்க வருத்தமே படாதீங்க. சரிண்ணி, என் பையன் அழறான், நான் அவனைப் பாக்குறேன். நீங்க சந்தோசமா இருங்க”, சொல்லிவிட்டு அலைபேசியை வைத்துவிட்டாள்.

காவியாவிடம் பேசிய பிறகும், தர்ஷுவின் மனம் தெளியவில்லை. மனதுக்குள் ஒரே குழப்பம். அம்மா தங்கையை மதிப்பவன், கண்டிப்பாக மனைவியை மதிப்பான் என்றே தோன்றியது. அப்படி எண்ணினாலும், வித்தார்த்தின் குரல்...., அப்படியே சமைந்துவிட்டாள் அவள். தர்ஷிணி பேசிவிட்டு, அங்கேயே அசையாமல் இருப்பதை உணர்ந்த வசுந்தராவோ, அவளை எரிச்சலாகப் பார்த்தார்.

“ஏண்டி....., எப்போ பாத்தாலும் கனா கண்டுகிட்டே இருக்கியே...., சமையல் கத்துக்கணும், வீட்டை கவனிக்கணும்னு கொஞ்சமாவது தோணுதா? இன்னும் ரெண்டு மாசத்தில் கல்யாணத்தை வச்சுட்டு, ஒரு பொறுப்பே இல்லாமல் இருக்க. அப்படி மெய் மறந்து இருக்குற அளவுக்கு என்னதான் ஆச்சு?”, அவளிடம் சிடு சிடுத்தார்.

தாயின் பேச்சைக் கொஞ்சம் கூட சட்டை செய்யாமல், “அம்மா...., எனக்கொரு சந்தேகம்....., உங்க கல்யாணத்துக்கு முன்னாடி அப்பாகிட்டே சண்டை போட்டிருக்கீங்களா?”, தன் கவலை அவளுக்கு.

திட்டுவதை நிறுத்திவிட்டு அவளை ஒரு நிமிடம் முறைத்தவர், “இந்த போன் எல்லாம் இருக்கப் போய்த்தானே நீங்க எல்லாம் இவ்வளவு பேசுறீங்க. எங்க காலத்தில் லேன்ட் லைன் போனே ஏதாவது ஒரு வீட்டில் தான் இருக்கும். இதில், நாங்க எங்கே பேச....., அப்படியே பேசியிருந்தால்தான், அப்போவே உங்க அப்பாவோட வண்டவாளம் எனக்குத் தெரிஞ்சு இருக்குமே. அப்படித் தெரிஞ்சிருந்தால், இப்படி ஒரு மனுஷனுக்கு நான் ஏன் வாக்கப்படப் போறேன்”, நொடித்துக் கொண்டார் அவர்.

“அதுசரி....., இப்போ எதுக்கு அந்த கேள்வி.....? அப்போ, நீ மாப்பிள்ளை கூட சண்டை போட்டியா?”, கூர்மையாக அவளைப் பார்த்தார்.

‘ஆஹா....., இப்படி வாயைக் குடுத்து மாட்டிக்கறியே தர்ஷு...., எதையாவது சொல்லி சமாளி’, தனக்குத் தானே சொல்லிக் கொண்டு, “சண்டையெல்லாம் எதுவும் இல்லம்மா...., இது ஒரு சின்ன விவாதம்...., சரி அதை விடுங்க, வாங்க நாம சமைக்கப் போகலாம். சமைக்கணும்னு சொல்லிட்டு, என்கிட்டே பேசிட்டே டைம் வேஸ்ட் பண்ணினால் எப்படி”, தாயை விலக்கிவிட்டு, கிச்சனுக்குள் சென்று புகுந்து கொண்டாள்.

வசுந்தராவுக்கு, அவள் எதையோ மறைப்பது புரிந்தது. ஆனாலும் அதை விட்டுவிட்டு, அவளைத் தொடர்ந்தார். கைகள்வேலையில் ஈடு பட்டிருந்தாலும், மனம் என்னவோ வித்தார்த்தையே சுற்றி வந்தது. இதற்கு ஒரே தீர்வு, தன் அக்காவிடம் பேசுவதுதான் என்று உணர்ந்து கொண்டாள்.

சமைத்து முடித்து சாப்பிட்டுவிட்டு, கட்டிலில் படுத்த வேளை, கைகள் தானாகவே அக்காவின் எண்களை அழுத்தியது.

கீதா ஏதோ வேலையில் இருந்தவள், அழைப்பை எடுத்துவிட்டு, “தர்ஷு கொஞ்ச நேரம் கழிச்சு கூப்பிடு. நான் கை வேலையா இருக்கேன்”, என்றாள்.

“உன்கிட்டே பேசியே ஆகணுமே எனக்கு..... சரி நான் பிறகு கூப்பிடுறேன்”, சொல்லிவிட்டு வைத்துவிட்டாள்.

தங்கை அலை பேசியை வைத்த பிறகு, கீதாவிற்குத்தான் இருப்பே கொள்ளவில்லை. கமலேஷிற்குப் போன் செய்து, தான் தங்கையை பார்க்கச் செல்வதாகவும், மாலையில் அலுவலகம் முடிந்து வரும் பொழுது, தன்னை வந்து அழைத்துச் செல்லுமாறும் சொன்னாள்.

அவனும் அனுமதி கொடுக்கவே, தங்கை அழைத்த இரண்டாவது மணிநேரம் அவள் முன்பு நின்றாள். அக்காவைப் பார்த்தவுடன் தாவி வந்து அணைத்துக் கொண்டாள்.

“உனக்கு என்கிட்டே பேசுறதைவிட, வேலைதான் பெருசா போச்சா? போ, நான் உன்மேல் கோபமா இருக்கேன்”, அக்காவைத் தள்ளி விட்டுவிட்டு, அவளுக்கு முதுகு காட்டி அமர்ந்து கொண்டாள்.

தங்கையின் செய்கையில் கீதாவிற்கு சிரிப்பு வந்தது. “அப்போ தர்ஷு.... அக்காகிட்டே பேச மாட்டாளா? இது தெரிஞ்சுருந்தால் நான் வந்திருக்கவே மாட்டேனே. ஹம்....., சாப்பிடாமல் கொள்ளாமல், கைவேலையை அப்படியே போட்டுட்டு வந்தால் இப்படிச் செய்யிறியே”, போலியாக அலுத்துக் கொண்டாள்.

அக்கா சாப்பிடவில்லை என்று சொல்லவே, விருட்டென்று திரும்பினாள். “என்னக்கா சொல்லுற..? சாப்பிடாமல் அப்படியே வந்துட்டியா..? சாரிக்கா...., முதல்ல வா சாப்பிடலாம். மற்றதெல்லாம் பிறகு பேசலாம்”, கீதாவை மேலே பேசவிடாமல், அவளை இழுத்துக் கொண்டு கிச்சனுக்குச் சென்றாள்.

முதல் வேலையாக அவளைச் சாப்பிட வைத்தவள், அதுவரை, அவள் கேட்ட எந்த கேள்விக்கும் பதில் சொல்லவில்லை. வசுந்தரா, கீதாவைப் பார்த்தவர், புருவத்தை நெரித்து ஒரு பார்வை பார்த்துவிட்டு, தனது மதிய தூக்கத்தைத் தொடரச் சென்றார்.

கீதா சாப்பிட்டு முடித்தவுடன் தர்ஷிணியை அழைத்துக் கொண்டு மொட்டை மாடிக்கு விரைந்தாள். “சொல்லுடா, என்ன விஷயம்? எது உன் மனசை அப்படிக் குடையுது? வித்தார்த்தோட ஏதாவது பிரச்சனையா?”, அவள் தலையைக் கோதியவாறே, கவலையாகக் கேட்டாள்.

அக்காவை கீழே அமர வைத்து, அவள் மடியில் தலை சாய்த்தாள். கீதாவிற்கு, கொஞ்சம் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. அவளது சின்ன வயதில், கீதாவின் மடியை நாடியிருக்கிறாள். அவள் வயதுக்கு வந்த பொழுது இனம் புரியாத கலக்கத்தில், பயத்தில் நாடியிருக்கிறாள்.

கல்லூரியில் சேர்ந்த பொழுது, ராகிங் பயத்தில், அவளையும் அழைத்துக் கொண்டுதான் கல்லூரிக்குச் செல்வேன் என்று அடம் பிடித்து அழும் பொழுது நாடியிருக்கிறாள். அதன் பிறகு இன்று நாடுகிறாள்.., தங்கையின் மனதை ஏதோ கவலை அழுத்துவது கீதாவிற்குப் புரிந்தது.

அவளாகவே சொல்லட்டும் என்று அமைதி காத்தாள். அவள் தலையைக் கோதியவாறே அமர்ந்திருந்தாள். “அக்கா, எனக்கு இந்தக் கல்யாணத்தை நினைச்சால் பயம்மா இருக்குக்கா. என்னமோ தப்பா இருக்க மாதிரி இருக்கு. உனக்கும் கல்யாணம் ஆக முன்னாடி இப்படித்தான் இருந்துதா?”, அவள் அடி மனதில் வித்தார்த் பற்றிய பயம் உறைந்துதான் போனது.

அவள் தலையைக் கோதுவதை ஒரு நிமிடம் நிறுத்தியகீதா, பின்னர் தொடர்ந்தாள். “என்னன்னு சொல்லு தர்ஷு....., இப்படித் தலையும் இல்லாமல், வாலும் இல்லாமல்

சொன்னால், நான் என்னன்னு நினைக்கட்டும். உன் மனசை என்ன விஷயம் அரிக்குது?”, நேரடியாகக் கேட்டாள்.

தர்ஷு அவனுடனான உரையாடலை, அவன் பேசியதை, சுருக்கமாகச் சொன்னாள். அனைத்தையும் பொறுமையாகக் கேட்ட கீதா, மெல்லியதாக நகைத்தாள். “தர்ஷு..., அவர் வேணும்னு அப்படிப் பேசியிருக்க மாட்டார். இனிமேல் உனக்கு அவரத்தான் ஸ்பெஷலா இருக்கணும்னு நினைக்கிறார்.

நீயும் அப்படி நினைக்கணும்னு விரும்புறார். அதைப் புரிஞ்சுக்காமல், நான் ரொம்ப நல்லா இருக்கேன், அப்படி இப்படின்னு சொல்லவே அவருக்குக் கோபம் வந்துடுச்சு. அப்போ, என்கிட்டே பேசாதது உனக்குக் கஷ்டமா இல்லையான்னு கேட்டுட்டு வச்சுட்டார். இனிமேல் அடுத்த முறை பேசும் போது, கொஞ்சம் ஆசையா, தவிப்பா, அவர்தான் முக்கியம்னு பேசு, எல்லாம் சரியாயிடும்.

அது மட்டும் இல்லை....., அம்மா, தங்கையை மதிக்கிறவங்க, கண்டிப்பா பொண்டாட்டியையும் மதிப்பாங்க. இதுக்குப் போய், கல்யாணம் சரி வருமாங்குற அளவுக்கு யோசிக்கிற, இனிமேல் உனக்கு அப்படி ஒரு நினைப்பு வரவே கூடாது.

உன்னோட வாழ்க்கை உன் கையில் தான் இருக்கு. அதை எப்படியாவது காப்பாத்த நினைக்கணுமே தவிர, இப்படிக் கைவிட நினைக்கக் கூடாது. எங்கே, இப்போ தைரியமா எழுந்து அவருக்குப் போன் செய்து பேசு பாப்போம்”, தர்ஷுவிற்கு, எதார்த்தத்தை சொல்லிப் புரிய வைத்தாள்.

அக்காவிடம் பேசிய பிறகு கொஞ்சம் தெம்பாக உணர்ந்தாள். “ஓ..., அப்படியும் இருக்குமோ, நான்தான் லூசு மாதிரி, பழைய விஷயத்தை ஏன் பேசணும்னு, கொஞ்சம் அதிகமா பேசிட்டேன் போல, விடுக்கா இப்போதான் நீ சொல்லிட்ட இல்ல, உன் தங்கை எப்படி வாழுறேன்னு பாரு”,

இவர்கள் பேசி முடிக்கவும், கமலேஷின் வண்டிச் சத்தம் கீழே கேட்கவும் சரியாக இருந்தது.

கீதாவிடம் பேசிய பிறகு, தெம்பாக உணர்ந்தாள். “தேங்க்ஸ்க்கா, நீ மட்டும் இப்போ சொல்லலன்னா, நான் இதையே போட்டு நினைச்சுட்டு, கவலைப் பட்டுட்டே இருந்திருப்பேன். சரி வா, அத்தான் வந்துட்டாங்க. நாம கீழே போகலாம்”, கீதாவிடம் நம்பிக்கையாகவும், தெளிவாகவும் பேசினாள்.

“ம்..., இதுதான் என் தங்கை, சீக்கிரம் வா நாம கீழே போகலாம். அவர்ட்ட அம்மா எதையாவது பேசி வைக்கப் போறாங்க”, கீதா தவிப்பாகச் சொன்னாள்.

அவளது தவிப்பை சட்டையே செய்யாமல், “நீ எதுக்கு இப்போ இப்படித் துடிக்கிற, அதெல்லாம் அம்மா, நம்ம கிட்டே மட்டும்தான் இப்படி ஸீன் போடுவாங்க, வீட்டு மாப்பிள்ளைக்கு இப்போ விருந்து உபச்சாரமே நடந்துட்டு இருக்கும். நாம மெதுவாவே கீழே போகலாம்”, பதட்டமே இல்லாமல் இருவரும் கீழே இறங்கி வர, கமலேஷ், காப்பியும், முறுக்கும் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

அவன் அருகில் வசுந்தரா அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார். இவர்களைப் பார்த்தவுடன், “நான் சொன்னேன்ல, அக்காவும் தங்கையும் பேசத் துவங்கினாலே, இந்த உலகத்தையே மறந்துடுவாங்கனு. வாங்கம்மா... காபி குடிங்க”, அவர்களையும் அழைத்தார்.

அக்காவும் தங்கையும், ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள். காபி குடிக்கத் துவங்கிய பொழுது, அக்காவிடம் மனம் விட்டுப் பேசியதால், ஒரு மிகப் பெரிய தைரியமே கிடைத்ததுபோல் உணர்ந்தாள் தர்ஷு. அவளது இந்த தன்னம்பிக்கை ஜெயிக்குமா?

******* நந்தனும் அவர்கள் வீட்டில் இருப்பவர்களும் சென்ற பிறகு, ப்ரியா செய்த முதல் வேலை, அவன் கொடுத்த செல் போனை, கழட்டி, பேட்டரியை எடுத்துவிட்டு, மறுபடி

போட்டுவிட்டு, அலை பேசியை சரியாகப் பொருத்திவிட்டு, அப்படியே வைத்து விட்டாள்.

அதை அவளது ஷெல்ப்பில் தூக்கிப் போட்டவள், அது எங்கே விழுந்தது என்பதைக் கூட கவனிக்கவில்லை. தன் அறையைப் பூட்டிவிட்டு, கட்டிலில் விழுந்து, இதுவரை அடக்கி வைத்திருந்த அழுகையை, கண்ணீராக வெளியேற்றினாள்.

எவ்வளவு அழுதாலும், மனதில் இருந்த பாரம் மட்டும் இறங்குவேனா என்று அடம் பிடித்தது. ஒருவாறு அழுது ஓய்ந்தவள், இனிமேல் தான் அழவே கூடாது, அவனைத்தான் அழ வைக்க வேண்டும் என்று உறுதி பூண்டாள். தான் பழிவாங்கத் துடிப்பது, தனது எதிர்கால வாழ்க்கையை, என்பதை அவள் அறியவே இல்லை.

அவளுக்கு யார் அதைச் சொல்லி புரிய வைப்பது? சொல்லிக் கொடுக்கும் அளவுக்கு யாரும் அவளுக்கு இல்லை. வீட்டிற்குச் சென்ற நந்துவோ, உடனடியாக அவளுக்கு அழைத்தான். அந்தப் பக்கம் அழைப்பு எப்பொழுது போகும், அவள் குரலை எப்பொழுது கேட்போம், என்று அவன் தவித்துக் கொண்டிருக்க,

அவனது தவிப்பு, எப்படி ப்ரியாவை எட்டவில்லையோ, அதேபோல் அவளது அலை பேசிக்கும் எட்டவில்லை. “நீங்கள் தொடர்புகொள்ளும் வாடிக்கையாளர் தொடர்பு எல்லைக்கு வெளியே உள்ளார்”, ரெக்கார்டெட் குரல், தமிழிலும் ஆங்கிலத்திலும் மாறி மாறி ஒலித்தது.

பத்து நிமிட இடைவெளியில், ஆர்வமாகவும், எதிர்பார்ப்புடனும், அவளுக்கு அழைத்து, சோர்ந்து போனான். அவள் அலைபேசி சிக்னல் இல்லாத இடத்தில் இருக்கிறதுபோல என்று தன்னையே சமாதானம் செய்து கொண்டான். ஆனாலும் அவளிடம் பேசத் துடிக்கும் மனதை அவனும் என்னதான் செய்வான்?

அன்றைய இரவு முழுவதும் பொறுத்தவன், காலையில் அலுவலகம் சென்ற உடனே, குமாரை அழைத்தான். தொழில் முறையில் துவங்கிய பேச்சு, வாங்கும் மெஷின்களைப் பற்றித் தொடர்ந்தது. இறுதியாக கல்யாண வேலைகள் பற்றி பேச்சு எழவே, “ஏன் குமார், உங்க வீட்டில் ஏர்செல் டவர் கிடைக்காதா?”, பேச்சுவாக்கில் கேட்டான்.

கிடைக்கும் என்று சொல்லப் போன குமார், “எனக்குத் தெரியலை சார், நான் பிஎஸ்என்எல் தான் வைத்து இருக்கேன். அது புல்லா கிடைக்கும்”, கொஞ்சம் யோசனையோடே சொன்னான். அது நந்தனுக்குத் தெரியாமல் பார்த்துக் கொண்டான்.

“அப்படியா..., நான் சும்மா தெரிஞ்சுக்கத்தான் கேட்டேன். நீங்க போங்க”, அவனை அனுப்பினான்.

“ப்ரியா டார்லிங்.... உன்னை எப்படிப் பார்க்க வாறதுன்னு நினைத்தேன். இப்போ அதுக்கு ஒரு செம சான்ஸ், மிஸ் பண்ணவே மாட்டேன்”, உற்சாகமாக தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

அதன் பிறகு அவளைப் பார்க்க போகவேண்டும் என்று எண்ணும் வேளையில், மெஷின்கள் வாங்க அவன் வெளிநாடு போகவேண்டி இருந்ததால், அப்பொழுது கையெழுத்தாக வேண்டிய ஆர்டர்களை பிடிப்பதிலும், அவர்களை எப்பொழுது சந்திப்பது என்று பிளான் செய்வதிலும் நாட்கள் கடந்தன.

வெளிநாடு செல்லவேண்டிய நாளும் வந்து விடவே, குமாரின் அலை பேசியிலே தொடர்பு கொண்டு, அவளிடம் பேசினான். வெளிநாடு செல்லும் பொழுது, தன்னை வழியனுப்ப அவள் வரவேண்டும் என்று சொல்ல அவனுக்கும் ஆசைதான், ஆனால் அலுவலக விஷயமாகச் செல்வதால், குமாருடன் சேர்த்து இன்னும் இரண்டு இஞ்சினியர்கள் வரவே அவளை அழைக்கத் தயங்கினான்.

“ப்ரியா..., நான் இன்னைக்கு வெளிநாடு கிளம்புறேன். நானும் உன்னை வந்து பாக்கணும்னு நினைச்சேன், பட் நேரமே கிடைக்கலை. கண்ணை மூடினாலே கண்ணுக்குள்ளே நீதான் நிக்கிற. நான் வந்த உடனே, உனக்கு வேற சிம்கார்டு வாங்கித் தாறேன். என்ன கோபமா இருக்கியா? சாரிடா உங்க வீட்டில் ஏர் செல் டவர் கிடைக்காதுன்னு எனக்குத் தெரியாது.

நான் வேண்ணா உன் கோபத்தை குறைக்க, ஒண்ணு தரவா?”, கேட்டுவிட்டு அமைதியாக, அவன் சொல்ல வருவது இவளுக்குப் புரியவே, அலைபேசியைக் காதிலிருந்து எடுத்துவிட்டு, அதை வெறுப்பாய் பார்த்தாள்.

இப்பொழுது அவள் முகத்திலாடிய வெறுப்பை அவன் பார்த்திருந்தால், தன் காதலை மறு பரிசீலனை செய்திருப்பான். ஆனால் விதி....., இவ்வளவு நேரமும் அவள் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

அவனுக்கு வேலை வந்துவிடவே, அலைபேசியை வைத்துவிட்டான். அதைவிட, அடுத்தவர் அலைபேசியில் எவ்வளவு நேரம்தான் பேச முடியும். வெளிநாடு சென்ற அவன், இரண்டு வாரம்தான் அங்கு இருப்பதாகப் பிளான் செய்திருந்தான். ஆனால், அவனுக்கு இரண்டு கோடி லாபம் நிற்கக் கூடிய ஒரு ஆர்டர் கிடைப்பதுபோல் இருக்கவே, மேலும் இரண்டு வாரங்கள் அவனது ட்ரிப்பை நீடிக்கவேண்டி இருந்தது.

அவனுடன் சென்ற அனைவரும், இரண்டு வாரங்களில் திரும்பி விட்டார்கள். குமாரிடம், திருமண ஏற்பாடுகளை, அவனையே செய்யச் சொல்லி கேட்டுக் கொண்டான். வசந்தாவிடம் பணம் வாங்கிக்கொள்ளச் சொன்னான். நாட்கள் அதன் வேலையைச் சரியாக செய்ய, புயலெனக் கடந்தன நாட்கள்.

***

தாகம் - 9.

மனதில் இருக்கும் காயங்களை

மறக்க முயல்கையில்

புதிதாக ஏற்படும் காயங்கள்

ஏற்படுத்தும் வலி

உயிர்வரை தாக்குவதேனோ.....

திவ்யாவின் செய்கை ஜீவாவிற்கு கோபத்தையும், வியப்பையும் ஒருங்கே அளித்தது. தவறு இருவர் பக்கமும் இருக்கும் பொழுது, அதை சரி செய்வதை விட்டுவிட்டு, தேவையில்லாமல் அவள் ஸீன் போடுவதாக அவனுக்குத் தோன்றியது.

அவன் முகத்தில் கோபத்தின் ரேகையைப் பார்த்த முத்து, வேகமாக அவன் அருகில் வந்து, அவன் கையை அழுத்தி, அமைதியாக இருக்குமாறு செய்கை செய்தார்.

“முத்து.... அங்கே பாருங்க, பையன் எப்படித் துடிக்கிறான், அவனைப் பாக்குறதை விட்டுட்டு இவங்க இப்படிச் செய்தால்.....”, ஆற்றாமையாகப் புலம்பினான்.

“அவனுக்கு இப்படி ஆகக் காரணமே நீங்கதான்....., ஏன் சார் நிலைமை புரியாமல்....., உங்களை யார் அவனைத் தூக்கச் சொன்னது? கண்ணா...., அம்மா பாருடா....”, அவள் கைகளில் இன்னும் புழுவாய்த் துடித்துக் கொண்டு இருந்த கண்ணனை, சுயநினைவுக்குக் கொண்டுவர முயன்றாள்.

இங்கே கூடியிருந்த கூட்டத்தைப் பார்த்து, ஹேமா, கணேஷ் இருவரும் ஒரே நேரம் அங்கே வந்தார்கள். ஹேமாவைப் பார்த்த பிறகுதான் திவ்யாவிற்கு கொஞ்சம் தெம்பாக இருந்தது. “ஹேமா கண்ணன்.....”, அவளால் மேலே சொல்ல முடியவில்லை.

ஹேமா நிலைமையைப் புரிந்துகொண்டு அங்கே சென்று கொண்டிருந்த ஆட்டோவைப் பிடித்து, அதில் திவ்யாவை ஏறச் சொல்லிவிட்டு, ஜீவாவின் பக்கம் திரும்பி, “சார்... நீங்க ஸ்கூல்க்குதான் வந்தீங்களா? அப்படின்னா, இவங்க வண்டியை உள்ளே நிறுத்திட்டு, அம்மாட்ட சாவியைக் கொடுத்துடுங்க. அண்ணே... நீங்க பக்கத்தில் இருக்கும் கிளினிக் போங்கண்ணே அவசரம்”, ஆட்டோக் காரரையும் விரட்டினாள்.

புயலென வந்து பேசிவிட்டுச் சென்ற அவளை அதிர்ச்சி விலகாமல், ஜீவா பார்த்தான் என்றால், கணேஷோ, சுவாரசியமாகப் பார்த்தான். ஜீவா வண்டியை எடுக்கும் முன்பே, கணேஷ் அவள் வண்டியை நகர்த்தினான்.

முத்து, அஞ்சலியைத் தூக்கி கணேஷிடம் கொடுத்துவிட்டு, “தம்பி, வாங்க, வந்து அந்த ஆட்டோவை பாலோ பண்ணுங்க. அவங்களுக்கு ஏதாவது தேவை இருந்தால் செய்ய ஆண் துணை வேணும்”, ஜீவாவை யோசிக்கக் கூட விடாமல் அவசரப் படுத்தினார்.

மறுத்துச் சொல்ல வழியில்லாமல், அந்த ஆட்டோ சென்ற பாதையில் காரைத் திருப்பினான். திருப்பிய இரண்டு நிமிடங்களில் ஆட்டோவைப் பிடித்துவிட்டான். “அதோ அந்த ஆட்டோதான் தம்பி, அந்தக் கிளினிக்குக்கு தான் போறாங்க. நீங்களும் போங்க”, முத்து சொல்லவே, அவர்களுக்கு முன்பே அங்கே சென்று வண்டியை நிறுத்திவிட்டு, அவர்கள் வரவும், பின்னால் சென்றான்.

குழந்தைக்கு அவசரம் என்று சொல்லவே, டாக்டர் அவனை உள் பிரிவிற்கு கொண்டு சென்று பரிசோதித்தார். கண்ணன் கொஞ்சம் நார்மல் நிலைக்கு வந்த பிறகு, வெளியே வந்தார்.

இங்கே திவ்யா, ஹேமாவின் தோளில் புதைந்து அழுது கொண்டிருந்தாள். அவளால் எதுவும் சிந்திக்க முடியவில்லை. அவள் மேனி நடுங்குவதை ஹேமா

உணர்ந்தாள். ஹேமாவிற்கும், திவ்யாவின் நடுக்கம் வித்தியாசமாகப் பட்டது. குழந்தைகள் என்றால் உடல்நலம் குறைவது இயற்கைதான், அதை நம்மால் தாங்கிக் கொள்ளவும் முடியாதுதான்.

விபத்து நடந்த அதிர்ச்சியில் கண்ணனுக்கு இப்படி ஆகி விட்டது. அதற்காக..... இப்படியா? மனதில் நினைத்ததை விடுத்து, "திவ்யா, கண்ணனுக்கு ஒண்ணும் இல்லை. அவன் நல்லாத்தான் இருப்பான். விபத்து நடந்த அதிர்ச்சியில் அவனுக்கு இப்படி ஆகியிருக்கு. அதையே நினைச்சுட்டு நீ இவ்வளவு கவலைப் பட்டால், இப்போ அவனோட சேர்த்து, உன்னையும் இங்கே சேர்க்க வேண்டி இருக்கும் போல இருக்கே.

"ஒரு டீச்சரா இருந்துட்டு உனக்குத் தெரியாததா?", அவளைத் தேற்ற முயன்றாள். ஆனால் திவ்யாவின் எண்ணங்களோ, ஹேமாவின் பேச்சில் இருக்கவில்லை, முன்பு அவன் அப்பாவிற்கு பயந்து, அவர் கைகளில் இருக்கும் பொழுதுதான் இந்த வலிப்பு அவனுக்கு வந்திருக்கிறது. கடந்த ஆறு மாதங்களில் ஒரு முறை கூட அவனுக்கு இது வந்ததில்லை.

அப்படியிருக்கையில், இன்று ஒரு ஆண்மகனின் கரங்களில் இருந்த அதிர்ச்சியில், தன் தந்தைதான் வந்துவிட்டானோ என்ற பதைப்பில், அவனுக்கு வலிப்பு வந்திருப்பது அவளுக்குப் புரிந்தது. அவனது இந்த பயத்தை எப்படிப் போக வைக்கவென்று அவளுக்குத் தெரியவில்லை.

ஆண்களைப் பார்ப்பதே அவனுக்கு ஒருவித நடுக்கத்தைக் கொடுக்கும் பொழுது, அவனது தொடுகை அவனை பலமிழக்கச் செய்ததில் வியப்பு எதுவும் இல்லைதான். ஜீவாவும் முத்துவும் ஒரு ஓரமாக நின்று கொண்டிருந்தார்கள்.

மருத்துவர் வெளியே வரவே, அனைவருமே அவரை நெருங்கினார்கள். “டாக்டர்.... கண்ணன் எப்படி இருக்கான்”?

“நீங்க”, “நான் கண்ணனோட அம்மா.....”, “இதுக்கு முன்னாடி, உங்க பையனுக்கு இந்த வலிப்பு வந்திருக்கா?.

“ம்ம்..., ஒரு ரெ...ண்டு மூணு முறை வந்திருக்கு”, அவளுக்கு குரல் எழும்பவில்லை.

“எதனால் அப்படி வந்தது? அதாவது, எந்தச் சூழ்நிலையில் வந்துதுன்னு கேட்கிறேன். பொதுவா, ஜுரம் அதிகமா இருக்கும்போது பிட்ஸ் வர சான்ஸ் அதிகம். ஆனா இப்போ, அவனுக்கு ஜுரமும் இல்லை, இதுக்கு முன்னாடியே வந்துருக்குன்னா...., கண்டிப்பா இதுக்கு ட்ரீட்மெண்ட் எடுக்கணும்.

அப்படியே விட்டுட்டா அது பெரிய பாதிப்பா போகும், அதனால்தான் கேட்கிறேன். இதுக்கு முன்னாடி எந்தக் காரணத்துக்காக வந்துது?”, நோயாளியைப் பற்றிய விளக்கங்கள் அவருக்குத் தெரிந்தால் தானே, சரியான விதத்தில் வைத்தியம் செய்ய முடியும்.

ஆனால் அதற்கு பதில் சொல்லும் நிலையில் அவள் இல்லை. என்னவென்று சொல்வாள்....., ஆண்களைப் பார்த்தால், அவர்கள் தொட்டால் இப்படி மூர்ச்சையாகி விடுவான் என்று அவளால் சொல்ல முடியுமா? அது எதனால் என்ற கேள்வி வந்தால் அதற்கு என்ன பதில் சொல்லுவாள்.

“எதையாவது பார்த்து பயந்துட்டா, அவனுக்கு இப்படி வந்துடும் டாக்டர். இப்போ சின்ன ஆக்சிடென்ட் அதான்....”, மென்று முழுங்கினாள்.

டாக்டர், அவளை ஆழ்ந்து ஒரு பார்வை பார்த்தார். பின்னர், “ஓகே, அவனுக்கு இப்போ கொஞ்ச நேரம் ரெஸ்ட் வேண்டும், தூங்கி எழுந்ததும் அவனைக் கூட்டிப்

போகலாம். போவதற்கு முன்னாடி, என்னை வந்து பாத்துட்டு போங்க", சொல்லிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்.

"நாங்க பார்க்கலாமா டாக்டர்.....", ஜீவாதான் கேட்டான். அவன் பேசிய பிறகுதான், அவன் வந்திருப்பதையே உணர்ந்தாள் அவள்.

"தாராளமா பார்க்கலாம். ஆனால் அவனோட தூக்கத்தைக் கலைச்சுடாதீங்க", சொல்லிவிட்டு சென்றுவிட்டார்.

ஹேமா அவனை முதலிலேயே பார்த்திருந்ததால், சிநேகமாக புன்னகை பூத்தாள். "உங்களுக்கு ஏதாவது ஹெல்ப் வேணுமா? சாரி, நான் கொஞ்சம் கவனம் இல்லாமல் வந்துட்டேன். பில் வேண்ணா நான் பே பண்ணிடுறேன்", குற்ற உணர்வில் சொன்னான்.

"அதெல்லாம் எதுவும் வேண்டாம். நீங்க இங்கே இருந்து போறதுதான், எங்களுக்குப் பெரிய ஹெல்ப்பா இருக்கும். உங்களைப் பார்த்தால், மறுபடியும் அவனுக்கு உடம்பு கெட்டுப் போகும். தயவு செய்து போய்டுங்க", கிட்டத்தட்ட கத்தினாள். அவனை பார்ப்பதையே தவிர்த்தாள் அவள்.

அவளது செய்கையை அனைவருமே அதிர்ச்சியாகப் பார்த்தார்கள். ஜீவாவிற்கு கோபம் குமுறிக் கொண்டு வந்தது. இருக்கும் இடத்தைக் கருதி அதை அடக்கினான். அவன் தன் கோபத்தை அடக்கவே, கண்கள் இரண்டும் கொவ்வை பழமாகச் சிவந்து விட்டது.

அவனது இறுகிய உடல்மொழியே, அவன் கோபத்தை உணர்த்த, வேகமாக இரண்டடி பின்னால் வைத்தாள். அவளது பயப் பார்வையை பார்த்து, தன்னைக் கட்டுப்படுத்த முயன்றான். "தம்பி.... வாங்க, நாம நல்லது செய்ய நினைத்து வந்தால், அதை அவங்க புரிஞ்சுக்கலை. நாம இருக்குறது அவங்களுக்கு கஷ்டமா இருக்குன்னா, நாம இங்கே இருக்க வேண்டாம். வாங்க போய்டலாம்.....",

ஜீவாவின் கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியேறினார்.

அவரது இழுப்பிற்குச் சென்றவன், காரின் அருகில் சென்று, ஆழ்ந்து மூச்சுவிட்டு, தன்னை நிதானத்துக்குக் கொண்டுவர முயன்றான். ஒரு நிமிடம் கண்களை மூடியதும், திவ்யாவின் அதிர்ச்சியும், தன்னைப் பார்த்து பயந்ததும், கை கூப்பி கெஞ்சியதும், இப்பொழுது அவளது கோபமும் நொடியில் படமாக வந்து போனது.

ஒரு முடிவுடன் கிளினிக் நோக்கி நடந்தான். அங்கே ஹேமாவும் திவ்யாவிடம் கடிந்து கொண்டாள். “உனக்கு யார்மேல கோபம் திவ்யா? ஏன் உதவிக்கு வந்தவரை, இப்படி அவமானப் படுத்தி அனுப்புற? விபத்துங்குறதே எதிர் பாராமல் நடக்குறதுதான்.

அதுக்குப் பிராயச்சித்தம் செய்ய வந்தவரை, இப்படி அவமானப் படுத்தி அனுப்புறது, கொஞ்சம் கூட நல்லாவே இல்லை. அப்படி அவ்வளவு பெரிய தப்பையா அவர் பண்ணிட்டார். ஏன் இப்படிப் பண்ணுற?”, உரிமையாகக் கடிந்து கொண்டாள்.

“ஹையோ ஹேமா நான்மட்டும் வேணும்னா பண்றேன்....., எனக்கு என் கண்ணன் வேணும் ஹேமா..., இப்போ அவர் இங்கே இருந்தால் அவன் மறுபடியும் பழைய நிலைக்கே போய்டுவான். இன்னும் கொஞ்ச நேரத்தில், மறுபடியும் அந்த டாக்டர் வந்து அவனைப் பார்த்தால், அந்த நிலைமையை எப்படி சமாளிக்கன்னு தெரியாமல் நான் இருக்கும் போது.....,

என் நிலைமையை புரிஞ்சுக்க, நீ முயற்சி பண்ணு ஹேமா. என்னால், கண்ணனோட இந்த நிலைமைக்குக் காரணத்தை யார்கிட்டேயும் விளக்க முடியாது. எல்லாம் எங்க விதி, இதைத் தவிர வேற என்ன சொல்ல. ப்ளீஸ் ஹேமா, நீயும் என்னை தப்பா நினைச்சுடாதே”, கண்ணீர் உகுத்தாள்.

அவள் கண்ணீர் ஹேமாவை தாக்கியது. “நீ என்னவோ சொல்லுற, எனக்கு எதுவும் புரியலை. ஆனா நான் உன்னை எப்போவும் தப்பா நினைக்க மாட்டேன். உனக்குத் துணையா இருக்கணும்னுதான் நான் முயற்சி பண்ணுறேன் திவ்யா. சரி நீ அழாதே”, அவளைத் தோளோடு அணைத்துக் கொண்டாள்.

“உன் கால் வீக்கத்தை கவனிக்காமலே இருக்கியே திவ்யா? இன்னும் கொஞ்ச நேரம் போனால் வலி உயிர் போகும். வா, உன் காலுக்குக் கட்டுப் போடலாம்”, அவளை அழைத்தாள்.

“ஹம்..., கால் வலி, நீ சொன்ன பிறகுதான் எனக்கு ஞாபகமே வருது ஹேமா...., மனசோட வலிக்கு முன்னாடி இதெல்லாம் சாதாரணம். அதெல்லாம் எதுவும் ஆகாது, விடு...”, விட்டேற்றியாக சொன்ன அவளை, கட்டாயப் படுத்தி, மருந்து வைக்க அழைத்துச் சென்றாள்.

இவர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த ஜீவா, நேராக டாக்டர் அறைக்குச் சென்றான். அவனை வெளியே பார்த்த நினைவு இருந்ததால், “வாங்க... நீங்க அந்த பையனோட அப்பாவா?”, அவர் கேட்டார்.

“ஐயோ இல்ல டாக்டர். அந்த ஆக்சிடன்ட் என்னாலதான் ஆச்சு, சோ நான் அவங்களோட வந்தேன். அது மட்டும் இல்லை, உங்ககிட்டே ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும்”, என்று சொல்லிவிட்டு, அவர்கள் விபத்து நடந்த பொழுது முதல், அவர்கள் பேசியதை, தான் கேட்டதுவரை, அனைத்தையும் சொன்னான்.

அவரும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டார். “ஓ..., அப்போ அவனோட அதிர்ச்சி, விபத்தால் இல்லை, நீங்க அவனைத் தூக்கியதால் இருக்கும்னு, நீங்க சொல்ல வாறீங்க. இப்போ மறுபடியும் என்னைப் பார்த்தாலும், அவன் உடல்நிலை மோசமாகும்னு நினைக்கிறீங்க.

சரி, அதை நான் பாத்துக்கறேன். என்னோட, இன்னொரு லேடி டாக்டரும் இருக்காங்க. அவங்களோட சேர்ந்து, நான்

போய் பாக்குறேன். தகவலுக்கு நன்றி. ஆனாலும் ஒரு சின்னப் பையன் இவ்வளவு தூரம் ரியாக்ட் பண்ணுறான்னா....., எனிவே....., தேங்க்யு", அவனுக்கு கை குலுக்கி விடை கொடுத்தார்.

அவன் வெளியே வரவும், ஹேமாவும், திவ்யாவும் டாக்டர் அறைக்கு, அவரைத் தேடி வருவதற்கும் சரியாக இருந்தது. ஒரு நொடி இருவரும் தயங்க, திவ்யாவின் கண்கள் உயர்ந்து அவன் கண்களை சந்திக்கும் முன்பு, சட்டென உடனே விலகியது.

ஆனால் அவனது பார்வை, அவளிடமே நிலைத்து இருந்தது. திவ்யா அவனிடம் சாரி கேட்க எண்ணினாள், ஆனால் ஏதோ ஒன்று அவளைத் தடுத்தது. அவள் தயங்கிய வேளையில், அவன் அங்கிருந்து விலகிச் சென்று விட்டிருந்தான்.

ஹேமாவும் திவ்யாவும் டாக்டர் அறைக்குச் செல்ல, அவன் காரை எடுத்துக் கொண்டு, அஞ்சலியைத் தேடிச் சென்றான். காரில் அவன் அருகில் அமர்ந்திருந்த முத்து, ஜீவாவைப் பார்த்துவிட்டு, பிறகு எதுவும் கேட்காமல் அமைதியாகி விட்டார்.

அங்கே கணேஷ் இவர்களுக்காக காத்துக் கொண்டிருந்தான். அஞ்சலியோ, இவர்கள் வருவதற்கு முன்பே அங்கிருந்த பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடத் துவங்கியிருந்தாள். பின்னர், ஹேமாவின் தாய் தங்கத்திடம், அஞ்சலியை முறைப்படி சேர்த்துவிட்டு, தங்கள் மூவரைத் தவிர யார் வந்தாலும் குழந்தையை அனுப்பக் கூடாது என்று சொல்லிவிட்டு, கிளம்பினார்கள்.

கணேஷ் அவனது பைக்கில் கிளம்ப, முத்துவோ, 'நடக்கும் தூரத்தில் தானே வீடு, நான் நடந்தே போய்க் கொள்கிறேன்' என்று சொல்லிவிட்டு, நடையைக் கட்டினார். அஞ்சலிக்கு, தன் வயது தோழமைகளைக் கண்டத்தில் ஒரே கொண்டாட்டம். முதல் நாள் ஆகையால், ஒரு மணி

நேரத்தில், அவளை வந்து அழைத்துச் செல்லச் சொன்னார் தங்கம்.

முத்து தான் வந்துவிடுவதாக, ஏற்கனவே சொல்லிவிடவே, மகளிடம் விடைபெற ஜீவா தேடினான். அவளோ தூரத்தில் இருந்து இவனுக்கு டாட்டா காட்டினாள். தங்கத்திற்கு நடந்தது எதுவும் தெரியாத காரணத்தால், ஜீவாவிடம் எதுவும் கேட்கவில்லை.

ஜீவா, மகளது மகிழ்ச்சியான முகத்தை பார்த்தவாறே, காரை எடுத்துச் சென்றான். அஞ்சலியை, இதுவரை இப்படியொரு மலர்ந்த முகத்துடன் பார்த்ததாக அவனுக்கு நினைவே இல்லை. இந்த மகிழ்ச்சியாவது அவளுக்குக் கிடைத்ததே, என்று எண்ணிக் கொண்டு, அலுவலகம் செல்லும் சாலையில் காரை பறக்கவிட்டான்.

தொழிற்சாலையை நெருங்கும் வேளையில், தொழிலாளர்கள் அனைவரும் வெளியே இருந்து ஏதோ கோஷம் போடுவது காதில் கேட்டது. மற்றவை அனைத்தும் பின்னுக்குப் போக, தொழிலாளர்களை எப்படி சமாளிப்பது என்ற எண்ணம் எழுந்தது.

எப்படியும் சமாளித்தே ஆகவேண்டும் என்ற உறுதியுடன் நெருங்கினான். இவனது காரைப் பார்த்தவுடனே, அங்கே பரபரப்பு நொடியில் தொற்றிக் கொண்டது. கும்பலாக அவனது காரைப் பார்க்க விரைந்து வந்தார்கள். காரின் வேகத்தைக் குறைத்து, தொழிலாளர்களின் நடுவிலே, படகுபோல் காரை செலுத்தி, உரிய இடத்தில் அதை விட்டுவிட்டு, அதிலிருந்து இறங்கினான்.

யூனியன் தலைவன் முன்னால் வந்தான். “சார்.... நீங்க வந்ததில் எங்களுக்கு ரொம்ப சந்தோஷம். இனிமேல் நம்ம கம்பெனி பழைய மாதிரி ஆயிடும் என்ற நம்பிக்கை எங்களுக்கு நிறைய இருக்கு”, உற்சாகமாகச் சொல்லி, கை கொடுத்தான்.

இப்படிப் பட்ட தொழிலாளர்களைத் தவிக்க விட்ட தன்னையே மனதுக்குள் கடிந்துகொண்டு. அவசரமாகப் போடப்பட்ட ஒரு டேபிள் மேலே ஏறி நின்று பேசத் துவங்கினான்.

“எல்லோரும் முதல்ல என்னை மன்னிக்கணும். என்னோட தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்பட்ட சறுக்கலால், தொழிலையும் கவனிக்காமல் விட்டுட்டேன். தொழிலில் சறுக்கிட மாட்டேன், ஆனால் அது என் ஒருவனால் முடியாது.

நாம எல்லோரும் சேர்ந்துதான், தொழிற்சாலையைப் புதிதாக மீட்டு எடுக்கணும். இரண்டு மாதம் பொறுத்த நீங்க, எனக்காக இன்னும் ஒரு இரண்டு மாதம் பொறுத்தீங்கன்னா, கண்டிப்பா அதோட பலனை நாம அனுபவிக்கலாம்.

அதற்காக உங்களுக்கு சம்பளமே இல்லாமல் வேலை செய்ய சொல்லப் போவதில்லை. இன்னும் இரண்டு நாளில், எப்படியாவது ஒரு மாதச் சம்பளம் தந்து விடுகிறேன். அதன் பிறகு, இரண்டு மாதங்களில், புதிய ஆர்டர்கள் பிடித்து, உங்களுக்குச் சேரவேண்டியதை, கண்டிப்பாகத் தந்து விடுவேன். நீங்க எல்லோரும் என்னோடு இருக்கத் தயாரா?”, அவன் கேட்க, அனைவருமே உற்சாகமாகக் கை தட்டி, தங்கள் ஆதரவைத் தெரிவித்தார்கள்.

அதன் பிறகு, மேலும் பல விவாதங்களுக்கு மத்தியில், செய்ய வேண்டியவற்றைப் பட்டியலிட்டு, தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க, தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் துவங்கினான். மதியம் தாண்டி, மாலை வந்தது கூடத் தெரியாமல், தன் வேலையில் மூழ்கிப் போனான்.

இரவு நேரம் எட்டைக் கடக்கவே, கணேஷ் தயக்கமாக அவன் கேபினுக்கு வந்தான். “சார்.....”, தயக்கமாக அழைத்தான்.

பின்னங் கழுத்தை இடக் கையால் தடவியவாறு, சோம்பலாகப் பார்த்தான் ஜீவா. “சொல்லுங்க.....”, ஜீவா கேட்க, “சார் டைம் எட்டாச்சு. அஞ்சு பாப்பா உங்களைத் தேடிட்டே இருக்காளாம். முத்தண்ணா ஒரு பத்துவாட்டி கால் பண்ணிட்டாங்க”, தயக்கமாக இழுத்தான்.

ஜீவாவிற்கு அதன் பிறகுதான், இன்று பணம் புரட்ட, பேசிய பேச்சின் விளைவாக, அலைபேசியில் இருந்த மொத்த சார்ஜும் இறங்கி, அது முடங்கியதே நினைவு வந்தது. அது மட்டுமில்லாமல், லேன்ட் போனையும் அவன் கீழே எடுத்து வைத்ததும் நினைவிற்கு வந்தது. ஒரே நாளில், தன் வாழ்க்கை மாறிப் போனது அவனுக்கு உறைத்தது.

அஞ்சலி பிறந்த பிறகு, அவன் ஆறு மணிக்குமேல் அலுவலகம் தங்கியதே கிடையாது. இன்று முதல் நாளும் அதுவுமாக, மகளைத் தவிக்க விட்டது புரிந்தாலும், இதைத் தவிர்க்க முடியாது என்ற எண்ணம் எழவே, ஒரு நெடிய பெருமூச்சை வெளியிட்டான். மதியம் சாப்பிடாததும், அதிக வேலையும், அவன் கண்களை இப்பொழுதே மூட வைத்தது. உடல் ஓய்வுக்காகக் கெஞ்சியது.

அவன் நிலை உணர்ந்து, “சார்.... நான் வேண்ணா உங்களை வீட்டில் விட்டுடவா?”, கேள்வியாகக் கேட்டான். கேட்கும் பொழுதே அவனுக்குத் தயக்கம்தான், எங்கே கத்துவானோ என்று. ஆனால், ஜீவா இருந்த மன நிலையில், அவனால் எதுவுமே செய்ய முடியாமல், கீயை அவன் பக்கம் தூக்கிப் போட்டான்.

தொழிற்சாலையில் இருந்து, வீட்டிற்கு வர எடுத்த முப்பது நிமிடங்களில், சீட்டில் படுத்துத் தூங்கி விட்டிருந்தான் ஜீவா.

***

தாகம் - 10.

புது வாழ்வில் அடியெடுத்து வைக்க

புதுமலராய் அவளிருக்க

மனம் முழுக்க விரவியிருக்கும் பதட்டத்தை

நீ தணிப்பாயா இல்லை..... தவிர்ப்பாயா?

கீதா அவள் வீட்டிற்குச் சென்ற பிறகு, தன் அலை பேசியில் வித்தார்த்தை அழைத்தாள் தர்ஷிணி. பயப் பந்து தொண்டைக்குள் உருள்வதை, தடுக்க நினைத்தாலும் முடியவில்லை. காதில் ஒலிக்கும் ரிங் டோன், தலைக்குள் பூகம்பத்தை விளைவித்தது. அதற்கு முன்பே, எதற்கென்று தெரியாமலே, நூறு சாரி மெச்செஜ்களை அனுப்பியிருந்தாள் அவள்.

அந்த நூறு சாரி குறுஞ்செய்திகளோ, அல்லது அவளது இடை விடாத அழைப்போ, எதுவோ ஒன்று, அவனைக் கொஞ்சம் மலையிறங்கச் செய்திருந்தது. அவனது 'ஹலோ' என்ற சொல் காதில் விழுந்த உடனே,

"சாரிங்க, நான் அப்போ ஏதோ தெரியாமல் பேசிட்டேன். நமக்குள் ஏற்கனவே நடந்த சண்டையைத் தொடர வேண்டாம்னு அப்படிச் சொன்னேன். அதை நீங்க தப்பா எடுத்துட்டீங்க. இனிமேல் நான் அப்படிப் பேசவே இல்லை... சரியா?", கொஞ்சம் அழுது விடுபவள் போல் பேசினாள்.

"ம்ம் சரி, அதை விடு, இப்போ என்ன செஞ்சுட்டு இருக்க?", அனைத்தையும் உதறிவிட்டு, பேச்சை சாதாரணமாகவே தொடர்ந்தான்.

"இப்போ சும்மாதான் இருக்கேன். நீங்க சாப்ட்டீங்களா?", அவன் சாதாரணமாக பேசவே, உற்சாகமாகவே பேச்சைத் தொடர்ந்தாள்.

“சாப்பிட்டேன்....., நீ...?”.

“நானும் சாப்பிட்டேன், இன்னைக்கு அண்ணி போன் செய்திருந்தாங்க. கொஞ்ச நேரம் பேசிட்டு இருந்தோம்”, அவள் குதூகலமாகச் சொல்ல,

“அண்ணியா...? அது யாரு...?”, அவனது வழக்கமான தோரணையில் வந்து விழுந்தன வார்த்தைகள்.

மனதுக்குள் குளிரெடுத்தது அவளுக்கு. “காவியா அண்ணிதாங்க..”, உற்சாகம் தண்ணீரில் இட்ட அப்பளமாக நமுத்தது அவள் குரலில்.

“ஹேய்.... காவியா உனக்குப் போன் செய்தாளா? என்ன சொன்னா? பாத்தியா.... என் தங்கச்சி உனக்குப் போன் செய்திருக்கா, நீ அவளுக்கு ஒரு நாளாவது போன் செஞ்சியா? என் தங்கைன்னா தங்கைதான்”, அவன் குரலில் இப்பொழுதுதான் ஒரு துள்ளல் வந்திருந்தது.

“முதல்ல எனக்கும் பேசத் தயக்கமா தானே இருக்கும். இனிமேல் பாருங்க நானும் பேசுறேன்”, அவன் துள்ளல் அவளிடத்தில் பிரதி பலித்தது.

“அவ இப்படி நினைச்சிருந்தா உன்கிட்டே பேசியிருப்பாளா? என் அம்மாவும் தங்கையும் ரொம்ப ஸ்பெஷல் தான் எனக்கு. அப்பா கொஞ்சம் முசுடு. அவர்கிட்டே நான் அவ்வளவா பேச மாட்டேன். ஆனால் அம்மா, காவியா கிட்டே ஒரு நாள் கூட பேசாமல் இருக்க மாட்டேன். அவங்களும் அப்படித்தான்”, தர்ஷிணிக்கு, அவன் அப்படிப் பேசுவது மகிழ்ச்சியாகவே இருந்தது.

அவனுக்கு பிடித்த விஷயத்தைப் பற்றி பேசுகிறோம், அவன் இப்படியே தன்னிடம் சந்தோஷமாகப் பேசவேண்டும் என்று மட்டுமே அந்தப் பேதை மனம் விரும்பியது.

அவன் இன்னும், தொடர்ந்து அவர்களைப் பற்றி பேசிக் கொண்டே போக, அவள் அலை பேசியில் இருந்த காசு

குறைந்துகொண்டே வந்தது. லைப்டைம் சிம்மில், இன்கம்மிங் கால் எப்பொழுது வேண்டுமென்றாலும் பேசிக் கொள்ளலாம். எனவே, அவளுக்கு ரீச்சார்ஜ் செய்ய, அவளது அம்மா காசு கொடுக்கவே மாட்டார்.

அவளது தாய்க்குத் தெரியாமல், தந்தை மணி, மாதம் ஐம்பது ரூபாய் காசு போட்டு விடுவார், அவ்வளவே. அப்படி இருக்கையில், அவளும் எவ்வளவு நேரம்தான் அதில் பேச முடியும். வேறு வழியில்லாமல், “என்னங்க....., என் மொபைல்ல காசு இல்லை...., நீங்க வேண்ணா கூப்பிடுறீங்களா? நாம பேசலாம்”, எங்கே அவன் கோபித்துக் கொள்வானோ என்பதால், அதையும் சேர்த்தே சொன்னாள்.

“ஓஹோ...., நான் என் அம்மா, தங்கை பத்தி பேசுறதைக் கேட்டு, உன் காசு கரியாகுற மாதிரி இருக்கா. நான் அவங்களைப் பத்தி பேசணும்னா, என் காசைப் போட்டு பேசுன்னு சொல்லுற? தெரியும்டி உங்களைப் பத்தி. என்ன... வந்த உடனே என்னை அவங்க கிட்டே இருந்து பிரிக்கலாம்னு பாக்குறியா? அது இந்த ஜென்மத்தில் நடக்காது.

சரி சரி, உன் காசை நான் வேஸ்ட் பண்ணலை, நான் வைக்கிறேன்”, அவனது இறுகிய குரலில் வந்தது பதில்.

“ஹையோ அப்படியெல்லாம் எதுவுமே இல்லங்க....., எனக்கே எப்போவாவதுதான் அப்பா ஐம்பது ரூபாய் ரீச்சார்ஜ் பண்ணி விடுவாங்க. இப்போ காசு காலி பண்ணிட்டேன்னா, உங்களுக்கு மறுபடிக் கூப்பிடக் கூட காசு இருக்காது, அந்த பயத்தில்தான் அப்படிச் சொன்னேன்...”, அவள் குரல் கலங்கி விட்டது.

“அடச்சே....., இப்படி ஒரு பிச்சைக்காரப் பயலா உன் அப்பன், நீ என்னைக் கட்டிகிட்ட பிறகு, உனக்கு போஸ்ட் பெய்ட் கார்டு வாங்கித்தாறேன். நீ எவ்வளவு வேண்ணாலும்

பேசலாம் சரியா”, அவள் தந்தையை ஏகத்தாளமாகப் பேசினான்.

‘இவன் எப்படி என் அப்பாவை, அப்படிச் சொல்லலாம், அதுவும் எந்த உரிமையும் ஏற்படும் முன்னர்’, அவளுக்குக் கோபம் வந்தது. ‘எங்க அப்பா அப்படியெல்லாம் இல்லை...’, என்று கத்த எழுந்தக் குரலை, தொண்டைக் குழியிலேயே புதைத்தாள்.

“ஹாங்...., இன்னொரு விஷயம்...., இனிமேல் நானே உனக்கு போன் செய்ய மாட்டேன். உனக்கு எப்போவெல்லாம் பேசணும்னு தோணுதோ, அப்போ எல்லாம் போன் பண்ணு, நாம பேசலாம்”, அவன் சொன்னதில் திகைத்தாள் அவள். போடும் ஐம்பது ரூபாயில் எவ்வளவு நாள் பேச முடியும்? அவள் கண்கள் கலங்கியது.

“நீ மிஸ்ட் கால் மட்டும் குடு, நானே போன் செய்யிறேன். எங்கே உன், அந்த அம்பது ரூபாய்க்கு வேட்டு வச்சுடுவனோன்னு பயப்படாதே என்ன”, இன்னும் அவளை நோகடித்துவிட்டு, அலைபேசியை அணைத்து விட்டான்.

இப்பொழுது அவன் சண்டை போடவில்லைதான், ஆனாலும் மனதில் எழும் வலி குறையவே இல்லை. இவன் நல்லவனா கெட்டவனா? இவனிடம் எப்படிப் பேசினால் பிடிக்கும்? என்ன பேசினால் பிடிக்கும்? பேசாமலே இருந்துவிட்டால் என்ன? இப்படியாக அவளது நேரங்கள் அனைத்தும், மனப் புழுக்கத்திலேயே சென்றன.

மறுநாள்முதல் அவளது சோதனைக் காலங்கள் என்றுதான் சொல்ல வேண்டுமோ? வித்தார்த்தின் பல முகங்களைக் கண்டாள் அவள். அவன், அவள் அழைத்தால்தான், பேசுவேன் என்று சொல்லிவிடவே, காலையில் எழுந்து, கொஞ்சம் வேலைகளை முடித்துவிட்டு அவனை அழைத்தாள். காலையிலேயே அழைத்தால், அவன்

அலுவலகம் கிளம்பும் அவசரத்தில் இருப்பானோ என்று கருதியே கொஞ்சம் தாமதமாக அழைத்தாள்.

அவளுக்குத் திரும்ப அழைத்தவன், “என்ன.... இவன் வேலை வெட்டி இல்லாமல், ஆபீஸ்ல இருப்பான்னு நினைச்சியா? இல்ல, நம்ம இஷ்டத்துக்கு இவனை ஆட்டி வைக்கணும்னு முடிவு பண்ணி இப்போ கூப்பிட்டியா? நான் இப்போ பிஸியா இருக்கேன் வை”, அவள் பதிலைக் கூட எதிர் பார்க்காமல் வைத்துவிட்டான்.

இன்னொருநாள் சீக்கிரமாக அழைக்க, “என்ன... மனுஷனைத் தூங்கவே விட மாட்டியா?”, என்று எரிந்து விழுந்தான்.

இந்தத் தொல்லைகளை எல்லாம் தவிர்க்க, ஒரு நாள் மாலையில் அழைத்தாள். “மகாராணி எப்போ கூப்பிடுவீங்கன்னு நான் காத்துட்டே இருக்கணுமா? நான் என்ன உன் வீட்டு வேலைக் காரனா? உங்க போனுக்கு காத்திட்டு இருக்க?”, இப்பொழுதும் அவளை ஒரு வார்த்தை பேச அனுமதிக்கவில்லை.

அவனது ஒவ்வொரு பேச்சிலும் உள்ளம் அடிவாங்க, அவனுக்கு அழைப்பதையே தவிர்த்தாள். இரண்டாம் நாள் காலையில் அவனிடமிருந்து அழைப்பு வந்தது. “அம்மணிக்கு மிஸ்ட் கால் குடுக்கவும் பேலன்ஸ் இல்லையோ? கொடுக்குற மிஸ்ட் கால் கூட ஒழுங்கா கொடுக்க முடியலை இல்ல..., இங்கே ஒருத்தன் பயித்தியக்காரன் மாதிரி காத்திருப்பான்னு உனக்குத் தோணவே இல்லையா?”, என்னமோ ஆருயிர் காதலன், காதலியைப் பிரிந்ததுபோல் கேட்டான் அவன்.

அவளுக்குத்தான் பயித்தியமே பிடிக்கும்போல் இருந்தது. “என்னங்க, எப்போ போன் செய்தாலும், நீங்களே எதையாவது சொல்லிட்டு, வச்சுடுறீங்களே, இங்கே ஒருத்தி இருக்கேன், அவளுக்கும் ஏதாவது சொல்ல இருக்கும்னு

உங்களுக்குத் தோணவே இல்லையா? நானும் எவ்வளவு நாள்தான் பொறுத்துப் போறது.

இன்னைக்கு எனக்கு ஒரு முடிவு தெரிஞ்சே ஆகணும். உண்மையாவே, உங்களுக்கு என்னைப் பிடிச்சுதான் கட்டிக்கப் போறீங்களா? இல்லை, உங்க வீட்டில் கட்டாயப் படுத்தினாங்களா? உங்க மனசில் வேற யாராவது இருக்காங்களா? அப்படி யாராவது இருந்தால் தயவு செய்து அவங்களையே கட்டிக்கோங்க, என்னை விட்டுடுங்க. இனிமேல் நான் உங்களுக்குப் போன் செய்யவே மாட்டேன். நீங்க எதிர் பாக்கவும் செய்யாதீங்க”, இப்பொழுது அவன் பதிலை எதிர் பார்க்காமல் இவள் அலைபேசியை வைத்தாள்.

அவனுக்கு பதிலுக்கு பதில் பேசிய பிறகுதான் என்னவோ கொஞ்சமாவது நிம்மதியாக இருந்தது. ‘ச்சே, என்னவெல்லாம் சொல்லிவிட்டான். நான் மனிதப் பிறவியா இல்லை அவனோட அடிமையா? அவன் வாயில் இருப்பது நாக்கா, இல்லை தேள் கொடுக்கா? வாயைத் திறந்தாலே என்னைக் கொட்டிக் கொட்டி என் மனதை ரணமாக்குறானே.

அவன் தாயும், தங்கையும் போல் நானும் ஒரு பெண் தானே. அவர்களைப் பற்றி அவ்வளவு உயர்வாகப் பேசுபவன், என்னை மட்டும் இப்படி விரட்டி அடிப்பதேன்? நானும் எவ்வளவுதான் பொறுத்துப் போவது? அன்று அப்பாவைப் பற்றி அவன் தவறாகப் பேசிய பொழுதே, அவனைத் தட்டி வைத்திருக்க வேண்டும். அமைதியாக இருந்தது என் தவறு.

மனம் எரிமலையாகக் குமுறியது. எண்ணங்களின் தாக்கம் குறையவே, நிரம்ப நேரம் பிடித்தது. பேசும்பொழுது இருந்த வேகம், பேசி முடித்தபிறகு, விளைவுகளை நினைத்துக் கலங்கியது. அதிலும், வித்தார்த்தின் குணத்துக்கு, அவன் எங்கே என்ன பேசி குழப்பம் விளைவிப்பானோ, என்று கவலையாக இருந்தது.

ஒரு மனமோ, அப்படி ஏதாவது குழப்பம் விளைவித்து இந்தத் திருமணம் நின்றுவிட்டால் நன்றாக இருக்குமே என்று வேண்டியது. இதை நினைத்தபொழுது அவளே ஒரு நிமிடம் திகைத்துப் போனாள். திருமணம் நடக்கும் முன்பே, அவனோடான வாழ்க்கை இவ்வளவு கடினமாக இருக்கிறதே, திருமணம் முடிந்தால், ஒவ்வொரு நாளும் எப்படிப் போகும் என்று எண்ணும் போது அடி வயிற்றில் நெருப்பு மூண்ட உணர்வு.

ஆனால், தொடர்ந்த நாட்களில் அவள் நினைத்ததுபோல் எதுவும் நடக்கவில்லை. மாறாக, வித்தார்த் அவளுக்கு அழைத்துப் பேசினான். பேச்சில் வழக்கமாக இருக்கும் அந்தக் கடினம் இல்லையென்றாலும், அது அவ்வப்பொழுது எட்டிப் பார்த்தது.

தன் பேச்சையோ உணர்வுகளையோ மதிக்கவில்லை என்றாலும், தன் கோபத்தையாவது மதித்தானே என்ற நிம்மதி இருந்தது. ஆனால் இந்தக் கோபம் எவ்வளவுநாள் கைகொடுக்கும் என்பதுதான் அவளுக்குத் தெரியவில்லை. தர்ஷுவிற்கு அவ்வளவாக கோபப் படவும் தெரியாது.

திருமண நாளும் நெருங்க, மண்டபம் பார்ப்பது, துணி எடுப்பது, பத்திரிகை அடிப்பது, என ஒரு பக்கம் வேலைகள் ஜரூராக நடந்தாலும், அலைப் பேசியில் இவர்களது பேச்சு அடுத்த கட்டங்களை எட்டியது.

வித்தார்த், தான் ஒரு கல்யாணக் கனவுகள் நிறைந்த இளைஞன் என்பதை, அவன் பேச்சில் நிரூபித்தான். அவள் வெட்கப்பட்டு சிலிர்க்கும் அளவுக்கோ, சில வேளைகளில் கேட்கவே கூசும் அளவுக்கோ, அவன் பேச்சு இருந்தது.

தாள முடியாத தருணங்களில், “ப்ளீஸ் வேண்டாமே, இப்படிப் பேசாதீங்க....”, என்று கத்தரிக்க முயல்வாள்.

“ஏன்..?”, என்று அவன் உறுமும் குரல் கேட்டாலே சப்தநாடியும் ஒடுங்கிவிடும் அவளுக்கு. முன்பு, அந்தக் குரலில் வினவினாலே, பயப்பந்து தொண்டையை

அடைக்கும். ஆனால் இப்பொழுதெல்லாம், அந்தக் குரலில் வினவினாலும், அலைப் பேசியை வைக்காமல் தொடர்ந்து பேசினான். அப்படி அவன் பேசியதே கொஞ்சம் நிம்மதியாக இருந்தது.

எனவே, அதன் பிறகு அவனது 'அந்த மாதிரி' பேச்சுக்கள் தனக்குப் பிடிக்கவில்லை என்றாலும், அவனுக்காக அதைப் பொறுத்துக் கொண்டாள். நாட்கள் நெருங்கிவிடவே, உரிமையானப் பேச்சுக்கள் அவளுக்குக் கொஞ்சம் பழகியும் இருந்தது. ஆனாலும் அடி வயிற்றில் உறையும் பயம் மட்டும் அவளை விட்டு விலகவில்லை.

அவளது இந்தப் பயம் கலையாமலேயே, திருமண நாளும் வந்துவிட்டது. தர்ஷிணியின் வாழ்வு என்னவாகும்? அவள் பயம் மெய்யாகுமா? இல்லை பொய்யாகுமா?

******** திருமணத்துக்கு ஒரு வாரம் இருக்கும்பொழுது, இந்தியா வந்தான் நந்தன். அவனுக்காக வேலைகள் எதுவும் காத்திருக்கவில்லை. அவை அனைத்தையுமே குமாரும், வசந்தாவுமே முடித்து விட்டிருந்தார்கள்.

ப்ரியாவைத் தொடர்புகொண்டு பேசவேண்டும் என்று அவன் எண்ணினாலும், புதிதாக வந்திறங்கிய மெஷின்களை, சரியான இடத்தில் வைப்பது, அதன் செயல்பாடுகளைக் கண்காணிப்பது என நிமிரக் கூட நேரமில்லாமல் ஓடிக் கொண்டிருந்தான் அவன்.

ப்ரியாவோ, தேர்வுகள் அனைத்தையும் முடித்துவிட்டு, பிரபுவுடனான அவளது காதலை அசைபோட்டுக்கொண்டே இருந்தாள். அவள் தூக்கிப் போட்ட செல்போனைப் பற்றிய எண்ணம் கூட அவளுக்கு எழவில்லை.
அப்படியிருக்கையில் நந்தனைப் பற்றி அவள் எப்படி நினைப்பாள்.

திருமண வேலைகளில் அவளது பங்கு எதுவுமே இருக்கவில்லை. அவளுக்குத் தேவையான அனைத்துப் பட்டுப் புடவைகள் கூட வசந்தாவின் பொறுப்பிலேயே

எடுக்கப் பட்டன. வசந்தா அவளைக் கடைக்கு அழைத்த பொழுதும், நாசூக்காக மறுத்துவிட்டாள். குமார் அவளுக்குக் கொடுக்கும் நகைகளையும் அவனே தேர்ந்தெடுத்தான். நந்தனின் சித்தப்பா மகள் அவளைப் பார்க்க வந்தபொழுது கூட, அவளிடம் முகம் கொடுத்துப் பேசவில்லை.

அவளது அழகால் ஏற்பட்ட கர்வத்தால் அவள் அப்படி இருப்பதாக அவனது தங்கை எண்ணிக் கொண்டு, அன்றோடு ஒதுங்கிக் கொண்டாள் அவள். அவளது கோபத்தை, நந்தனிடம் தெரிவிக்கக் கூட, அவளால் நந்தனிடம் பேச முடியவில்லை. அப்படி அவள் பேசியிருந்தாலாவது, நந்தன் ப்ரியாவிடம் பேச முயன்றிருப்பானோ?

அவனோ திருமணத்திற்குப் பிறகு, ஒரு மாதம் விடுப்பு எடுக்கவேண்டும் என்ற எண்ணத்தில், மும்முரமாக வேலைகளில் ஈடுபட்டான். அவ்வளவு வேலைகளிலும், ப்ரியாவின் முகம் கண்முன் வந்து இம்சிப்பதை நிறுத்தவில்லை. கல்யாணக் கனவுகளில் மிதந்தான் அவன்.

ப்ரியாவோ மறுபடியும் பிரபுவைச் சந்தித்துப் பேசவே செய்தாள். ஆனால் அவனோ, அவளுக்கு புத்திமதி சொல்லி, அவளை அனுப்பி வைத்தவன், அவள் வாழ்வில் குறுக்கிடக் கூடாது என்பதால், டெல்லி சென்றுவிடுவதாக அவளிடம் சொன்னான்.

அவளோ, எப்பொழுதும் அவனுக்காக மட்டுமே காத்திருப்பேன் என்று சொல்லி அவன் வயிற்றில் புளியைக் கரைத்தாள். அவளது இந்த உறுதி அவனுக்குக் கலக்கத்தை மூட்டியது என்பதுதான் உண்மை. ஆனால், அவன் இருக்கும் சூழலில், அவளை ஏற்கவும் முடியாமல், அவளைத் தவிர்க்கும் இக்கட்டான சூழலில் தன்னை வைத்த விதியை, மனமார சபித்தான் அவன்.

பிரபுவும் அவளை உண்மையாக நேசிக்கவே செய்தான். அப்படி இருந்தாலும், வீட்டுப் பொறுப்புக்களைத் தவிர்க்கவும் அவனால் முடியாது. அதைவிட, வாழ்க்கையின் எதார்த்தம் என்னவென்பது அவனுக்கு முழுமையாகத் தெரியும். காதல் எவ்வளவு முக்கியமோ, அதே அளவு, காதலியை அதே காதலோடு சந்தோஷமாக வைத்துக் கொள்வதும் முக்கியம் என்பதும்.

அவனுக்கு இன்னும் ஐந்து வருடங்கள் வேண்டி இருந்தது. எந்தவித உறுதியான நம்பிக்கையும் இல்லாமல், அவளை அழைத்துச் செல்ல அவன் தயாராக இல்லை, அவளைக் காத்திருக்கச் சொல்லும் தைரியமும் அவனுக்கு இல்லை என்பதுதான் உண்மை.

அவனால் முடிந்த அளவு அவளுக்கு எதார்த்தத்தைப் புரிய வைக்க முயன்றான். அப்படி அவன் முயன்ற நேரங்களில் எல்லாம், நந்தன்மேல் அவளுக்கு இருந்த வெறுப்பு, வானளவு வளர்ந்துகொண்டு போனதை, அவன் அறியவே இல்லை.

தன் வாழ்வில் நடந்த அனைத்து திருப்பங்களுக்கும், நந்தந்தான் முக்கிய காரணி என்பதாக அவள் நினைத்தாள். ஆனால் அவளது இயலாமையை, பிரபுவின் வேலையில்லாத நிலையையோ, அவன் படிப்பை கூட முடிக்காத பத்தொன்பது வயதேயான மாணவன் என்பதையோ,

வாழ்க்கையைப் பற்றிய அவனது தெளிவான மதிப்பீடே அவள் காதல் பிரிய காரணம் என்பதையோ, தனது தைரியமின்மையே இந்தத் திருமணம் நடக்க முக்கிய காரணம் என்பதையோ, தன் அண்ணனிடம் பேச பிரபுவின் வேலையின்மை, மிகப்பெரிய தடை என்ற உண்மையையோ,

வாழ்க்கையின் எதார்த்தத்துக்கு இறங்கி வராமல், காதல் மட்டுமே வாழ்க்கை என்ற சின்னப்பிள்ளைத்தனமான

அவளது நினைப்பை அவள் மாற்றிக்கொள்ளத் தயாராகவே இல்லை. எதார்த்தத்தில், தனது காதலை மறுக்கும் பிரபு மேல்தான் அவள் கோபம் கொண்டிருக்க வேண்டும், ஆனால் விதி.....,

பிரபுவின் கையாலாகத் தனத்தை அவள் நினைக்காமல், அவனது தெளிவான மதிப்பீட்டை புரிந்துகொள்ளாமல்....., நந்தன் தன்மேல் ஆசைப்பட்டுக் கேட்டதால்த்தான் இந்தக் கல்யாணம் நடக்கிறது. இல்லையென்றால் தன் திருமணம் பிரபுவோடு நடந்திருக்கும் என்று சிறுபிள்ளைத்தனமாக நினைத்தாள்.

பிரபு அவளை விட்டு டெல்லி சென்றதை அவளால் ஒரு சதவீதம் கூட ஒத்துக்கொள்ள முடியவில்லை.

திருமண நாள் நெருங்க நெருங்க, நந்தனை எப்படிப் பழிவாங்கவேண்டும், அவன் வாழ்க்கையை எப்படிக் குலைக்கவேண்டும் என்பது மட்டுமே அவளது எண்ணமாக இருந்தது. நந்தனோ, மனதுக்குள் அவளை உருகி உருகிக் காதலித்து, அவளோடு எப்படியெல்லாம் வாழவேண்டும் என்று கனவுகாண, ப்ரியாவோ அவனை எப்படி விதம் விதமாகப் பழி வாங்கலாம் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தாள்.

நந்தனின் காதல் அவளை மாற்றுமா? இல்லை ப்ரியாவின் பழிவாங்கல் ஜெயிக்குமா? பொறுத்திருந்து பார்க்கலாம்.

***

தாகம் - 11.

பார்த்தவுடன் பற்றிக்கொள்ளும்

உணர்வை, காதல் என்றால்.....

உன்னைப் பார்த்தவுடன் எழும்

பயத்தை, எந்த உறவில் சேர்க்க....?

ஹேமாவும் திவ்யாவும், டாக்டரின் அறைக்குள் நுழைந்த சிறிது நேரத்திலேயே, செவிலி சற்றுப் பரபரப்பாக வந்து, கண்ணன் தாயைத் தேடி அழுவதாகச் சொல்லவே, அவசரமாக அனைவருமே அங்கிருந்து கிளம்பினார்கள்.

அறைக்குள் நுழைந்த டாக்டரைப் பார்த்த கண்ணன் இன்னும் அதிகமாக அழுதான்.

“அம்மா....., அம்மா.....”, என்று மட்டுமே சொல்லி அடம் செய்யும் அவனை, நெருங்கவே முடியவில்லை அந்த மருத்துவரால். இப்பொழுது காய்ச்சலும் கண்டிருந்தது அவனுக்கு.

“கண்ணா....., உங்க பேர் கண்ணன் தானே....., எதுக்கு இப்படி அழுறீங்க? நீங்க குட் பாய் தானே? குட் பாய் எல்லாம் அழவே மாட்டாங்க...., நான் உங்களுக்கு சாக்லேட் தரவா?”, இப்படி விதம் விதமான மருத்துவரின் சமாதானங்கள் எதுவும், அவனை எட்டவே இல்லை.

கட்டிலில் அமரக் கூட மாட்டேன் என்பதுபோல் உருண்டு அழுதான். அவனைத் தொடுவதற்குக் கூட மருத்துவரை அனுமதிக்கவில்லை அவன். அவன் அதிகமாக முரண்டு பிடித்து அழவே, மேலும் உடல்நிலை பாதிக்காமல் இருக்க, தோல்வியைத் தழுவி அங்கிருந்து வெளியேறினார் அந்த மருத்துவர். கண்ணனை அணைத்தவாறு, அவனைச் சமாதானம் செய்யக் கூடத் தோன்றாமல், கண்ணீர் வழிய நின்றிருந்தாள் திவ்யா.

“அம்மா...., போலா(ம்)....., இங்க(கே)....., வேணா....., இல்ல...., வேணா.....”, சொன்னதையே திரும்பத் திரும்பச் சொன்னான்.

திவ்யாவும் பேசாமல் இருக்கவே, “கண்ணா...., இங்கே பாருடா, இப்போ உனக்கு ஜுரம் அடிக்குதுல்ல, உனக்கு ஜுரம் குறைஞ்ச உடனே நாம வீட்டுக்குப் போகலாம். மிஸ் சொன்னா கேட்பாய் தானே”, அவளது பேச்சுக்குக் கொஞ்சம் மதிப்பிருந்தது.

“ம்ம்...., ம்ஹூ....., ”, தன் கழுத்தினடியில் தொட்டுக் காட்டி, காய்ச்சல் இல்லை, என்பதுபோல் கையை விரித்தான். “இல்ல...., போலாம்...”, இப்பொழுது மறுப்பின் அளவு கொஞ்சம் குறைந்திருந்தது. அதற்குக் காரணம், பள்ளியில் அவள் சொல்வதை, கொஞ்சம் கேட்டுப் பழகி இருந்ததே காரணம். ஆனாலும் முழு மனதுடன் அவன் சம்மதிக்கவில்லை.

திவ்யாவிற்கு அதுவே ஒரு பெரிய ஆறுதலாக இருந்தது. ஹேமா இல்லாமல் போயிருந்தால், இந்நேரம் என்னவாகியிருக்கும் என்பதை நினைக்கவே கலக்கமாக இருந்தது. ஒரே நாளில் ஹேமா தனக்கு மிகவும் நெருக்கமாகிவிட்டது புரிந்தது. கண்களில் நன்றியோடு அவளை ஏறிட்டாள்.

பார்வையாலேயே அதை ஏற்றுக்கொண்டு, மீண்டும் கண்ணனோடு உரையாடினாள் ஹேமா.

“இல்லடா கண்ணா உனக்கு நிஜமாவே ஜுரம் அடிக்குது. இப்போ நீ இங்கே இருக்காமல் வீட்டுக்குப் போனால், பிறகு இந்த சிஸ்டர் ஊசி போட்டுத்தான் உன்னை வீட்டுக்கு அனுப்புவாங்க. உனக்கு ஊசி வேணுமா சொல்லு”, ஹேமா பிள்ளைகளின் பலவீனத்தை அறிந்தவள், எனவே அப்படிக் கேட்டாள்.

அவள் கேட்கவே, கண்ணனின் கண்களில் அப்படி ஒரு மருட்சி, “வேணா, ஊசி வேணா....., கண்ணா போல.....”,

தாயை இன்னும் ஒண்டினான்.

“சரி சரி....., இங்கே இருந்தால் ஊசி போட மாட்டாங்க. போட மாட்டீங்கதானே சிஸ்டர். எங்க கண்ணன் சமத்துப் பையனா இருப்பான். நீங்க அவனுக்கு ஊசி போடாதீங்க சரியா”, அங்கிருந்த செவிலியிடம் கண்களால் சிரித்தவாறே கேட்டாள்.

“கண்ணா.... இப்போ கொஞ்ச நேரம் தூங்கி எழுந்தாலே ஜுரம் போய்டும். பிறகு நான் ஊசி போடவே மாட்டேன். தூங்குறீங்களா?”, செவிலியும், ஹேமா அமைத்துக் கொடுத்த வழியைக் கச்சிதமாகப் பயன்படுத்தவே, தன் முட்டைக் கண்ணை உருட்டி அவர்களைப் பார்த்தவன். எதுவும் சொல்லாமல் தாயின் மார்பில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

திவ்யாவின் கதகதப்பும், அணைப்பும், மருந்தின் வேகத்தால் எழுந்த ஆழ்ந்த உறக்கமும் சேர்ந்து அவனை உடனே இமைகளை மூட வைத்தது. நொடியில் உறங்கியும் போனான். அவனை அணைவாகத் தலையணையில் படுக்க விட்டவள், அவன் தலையை மெதுவாக வருடினாள்.

இதயத்தைப் பிசையும் வலியையும், தவிப்பையும், அடக்க முடியாமல் திணறினாள். என்னவோ மூச்சு முட்டும் உணர்வு. அவள் நிலையை உணர்ந்தவள்போல், ஹேமா அவள் கையைப் பிடித்து அழுத்தி, ஆதரவாக அவளைப் பார்த்தாள்.

நீர் நிறைந்த விழிகளால், பார்வை மறைக்க, ஹேமாவைப் பார்த்து சிரிக்க முயன்று தோற்றாள்.‘வெளியே வா’, என்பதுபோல் தலையை அசைத்துவிட்டு முன்னால் நடந்தாள் ஹேமா. திவ்யா செவிலியைப் பார்க்க, “நீங்க போயிட்டு வாங்க, நான் கண்ணனைப் பாத்துக்கறேன். ஏற்கனவே கொடுத்த மருந்தின் வீரியம் இன்னும் குறையாமலே எழுந்துட்டான். நீங்க பயப்படாமல் போயிட்டு

வாங்க. நான் இங்கேயே இருந்து கவனிச்சுக்கறேன்”, ஆதரவாகச் சொன்னாள்.

சரி என்பதுபோல் தலையை ஆட்டிவிட்டு, கண்ணனை ஒரு பார்வை பார்த்துவிட்டு வெளியேறினாள். வெளியே அவள் பார்வையில் விழுந்தது, ஹேமாவும் மருத்துவரும் பேசும் காட்சி. அவர்களிடம் செல்லும் முன்னர், அருகில் இருந்த விநாயகர் சிலையின் அருகே, கால்கள் அவளை நடத்திச் சென்றது.

‘அடைமழை விட்டாலும், தூவானம் விடாத நிலையாக, வாழ்வில் பெரிய கண்டத்தைத் தாண்டி வந்துவிட்டேன் என்று நான் நினைக்க, இப்படி ஒரு சோதனையை எனக்கு வைக்கிறாயே, உனக்கே இது நியாயமா? எனக்கு எந்தத் துன்பம் வேண்டுமென்றாலும் தா, என் பையனை விட்டுடேன்’, மனம் மானசீகமாக மன்றாடியது அந்த தெய்வத்திடம்.

உனக்கு, இந்தத் துன்பமே ஒரு பெரிய இன்பத்துக்கு அஸ்த்திவாரமாகத்தான் கொடுக்கிறேன் என்பதை, நீ, பிறகு புரிந்துகொள்வாய் என்பதை, மௌனமாக அவர் சொன்னது, அவள் செவிகளைத்தான் எட்டவில்லை.

ஆனால் உன் வேண்டுதல் என்னை எட்டியது என்பதுபோல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார் விநாயகர். சுற்றுப்புறம் அனைத்தும் உறைய, விநாயகரும் அவளும் மட்டுமே நிலைத்திருந்தனர் அங்கே.

திவ்யா தெய்வத்திடம் முறையிட, மருத்துவரோ ஹேமாவை, கேள்வியால் துளைத்துக் கொண்டிருந்தார். “அவங்க உங்களுக்கு யார்? என்ன உறவு? கண்ணனைப் பற்றி உங்களுக்கும் முன்பே தெரியுமா?

“கண்ணனின் அப்பா என்ன செய்கிறார்? அவர் எங்கே? அவர் ஏன் இங்கே இன்னும் வரவில்லை? அவரிடமும் அவன் இப்படித்தான் நடந்து கொள்வானா? எனக்கு அவரைப் பார்க்க வேண்டுமே”, ஹேமாவின் பதில் கூட

அவருக்குத் தேவையாக இருக்கவில்லை. ஒரு சிறுவன் இப்படித் துன்பப் படுவதை, ஒரு சக மனிதனாக அவரால் பார்க்க முடியவில்லை.

எப்படியாவது அவனை, அவன் மனநிலையை சரி செய்தே ஆகவேண்டும், இல்லையென்றால் அது, வேறு விதமான துன்பங்களில் போய் முடியுமே, என்று ஒரு மருத்துவராகவும் அவரால் சிந்திக்காமல் இருக்க முடியவில்லை. எனவேதான் கேள்விகளைத் தொடுத்தார்.

“சாரி டாக்டர், நீங்க கேட்ட எந்தக் கேள்விக்குமே என்னிடம் பதில் இல்லை. கண்ணன் எங்க க்ரஷில் தான் இருக்கிறான். அப்படித்தான் எனக்கு திவ்யாவைத் தெரியும், திவ்யா என்னோட தோழி, அதுக்கும்மேல எனக்கு அவளைப்பற்றி எதுவும் தெரியாது”, ஒரு நாள் பழக்கத்தில் அவளுக்கும் எதுவுமே தெரியாதே, அதையே அவரிடம் சொன்னாள்.

“என்ன நீங்க..... ப்ரண்டுன்னு சொல்லுறீங்க, ஆனால் அவங்களைப் பற்றி எதுவுமே தெரியாதுன்னு சொல்லுறீங்களே. சொல்லப்போனால் அவங்களுமே நார்மலா இல்லை. எப்பவும் ஏதோ இறுக்கமாவே இருக்காங்க.....

சரி அதெல்லாம் போகட்டும், அவங்க துணைக்கு யாராவது இருக்காங்களான்னாவது தெரியுமா உங்களுக்கு?”, அதை அறிந்துகொள்ளும் ஆர்வம் தெரிந்தது அவர் குரலில்.

“மறுபடியும் இதுக்கு, நான் சாரின்னு ஒரு பதிலைத்தான் உங்களுக்குத் தர முடியும் டாக்டர்”, தர்மசங்கடமாக உணர்ந்தாள் அவள்.

ஹேமாவின் நிலையில், அவளால் இதைத்தான் சொல்லமுடியும் என்பதை அவரும் உணர்ந்தார். புருவம் சுருக்கி ஒரு நிமிடம் யோசித்தவர், “உண்மையாவே அவங்களை நீங்க ப்ரண்டா நினைக்கிறீங்களா?”, நேரடியாகக் கேட்டார்.

“நேத்துல இருந்து அவளை நான் உயிர்த் தோழியாத்தான் நினைக்கிறேன் டாக்டர். நான் என்ன செய்யணும்னு நீங்க நினைக்கிறீங்க, அதைக் கொஞ்சம் தெளிவா சொல்லிடுங்களேன்”, தன்னிடம் கொஞ்சம் கூடத் தயக்கமே இல்லாமல் பேசும் அவளை, வியப்பாகப் பார்த்தார்.

“அப்படின்னா, இனிமேல் அவங்களைப் பற்றி தெரிஞ்சுக்க முயற்சி பண்ணுங்க. அதாவது முக்கியமா, அவங்க மனசுக்குள் என்ன இருக்கு, என்ன கவலை இருக்கு? அதைக் கொஞ்சம் கொஞ்சமா வெளியே கொண்டு வாங்க.

இன்னும் கொஞ்சநாள் கண்ணனையும், அவங்களையும் நீங்க இப்படியே விட்டால்....., அவங்களை நீங்க சந்திக்கவேண்டிய இடம் மனநல மருத்துவமனையாகத்தான் இருக்கும்”.

“டாக்டர்.....”, அதிர்ந்தாள் அவள்.

“உண்மையைத்தான் சொல்லுறேன்....., அவங்க, என்னோட கண்களை சந்தித்துப் பேசவே மாட்டேன்னு சொல்லுறாங்க. ஆண்களிடம், அவங்களுக்குமே ஒரு ஒதுக்கம் தெரியுது, ரொம்ப உணர்ச்சிவசப் படுறாங்க”, அடுக்கிக் கொண்டே போனார்.

“எல்லோராலும் ஆண்களிடம் சகஜமாகப் பேச முடியாதே டாக்டர்...”, தன் சந்தேகத்தைக் கேட்டாள்.

“சகஜம் என்பது வேற, எதார்த்தம் என்பது வேற, நடைமுறைச் சிக்கல் என்பது வேற. இப்போ நீங்க இருக்கீங்க . அதாவது உங்க குணம், சகஜமா பேசுறது. இது எல்லோராலும் முடியாது. எதார்த்தம்னா, சிலர் வளர்ப்பால் அப்படி இருக்கலாம், அண்ணன் தம்பி இல்லாமல் இருப்பது, இரு பாலினரும் சேர்ந்து படிக்காத பள்ளிக் கூடங்களில் படிக்காமல் இருப்பது, இதனால் வரும் தயக்கம்...., இது எதார்த்தமா ஏற்படுவது.

“இவங்ககிட்டே ஒரு கூச்சம் இருக்கும். உடல்மொழியில், நிலையில்லாத ஒரு அசைவு, பதட்டம், நகம் கடிப்பது இப்படி இருக்கும். அதே நேரம், நடைமுறைச் சிக்கல்ன்னு நான் சொல்ல வருவது என்னன்னா.....? திவ்யாவோட உடல் மொழியிலோ, பார்வையிலோ, கூச்சம் எதுவும் இல்லை.

“மாறாக, ஒரு பெரிய, தயக்கம் கலந்த பயம்தான் இருக்கு. அது மட்டும் இல்லாமல், அவங்களை அறியாமலே உடல் மொழியில் ஒரு விறைப்புத்தன்மை வெளிப்படுது. கண்டிப்பா அவங்களால் முந்தி....., நான் சொல்ல வருவது, இந்த அவங்களோட பயம் வருவதற்கு முன்பு, அவங்க என்னைச் சந்தித்திருந்தால், கண்டிப்பா என் கண்களைப் பார்த்து பேசி இருப்பாங்க.

“இப்போ, அவங்க வாழ்க்கையில் நடந்த, நடந்துட்டு இருக்க, இல்லன்னா நடந்து முடிந்த ஒரு விஷயத்தோட தாக்கம்தான், அவங்க இப்படி இருக்கக் காரணம். அதைக் கண்டுபிடித்து, அவங்க மனசில் இருந்து அதைக் களைய முயற்சிக்கணும். இல்லையென்றால், விளைவுகள் கொஞ்சம் பயங்கரமாகத்தான் இருக்கும்.

“இப்போ, நீங்க அவங்களோட கொஞ்சம் கலந்து பேசினாலே, அவங்களை இந்த மனநிலையில் இருந்து மாற்ற முடியும். அதுக்கு, முதல்ல அவங்க வாழ்க்கையில் என்ன நடந்ததுன்னு நமக்குத் தெரியணும்”, நீளமாகப் பேசி முடித்தார்.

“நான் எப்படி டாக்டர் அவளோட தனிப்பட்ட விஷயத்தில் தலையிட முடியும்?”, தயக்கமும், கவலையும் அவள் குரலில் போட்டி போட்டது.

“உடம்புக்குள்ளே இருக்க கட்டியை எடுக்கணும்னா, கத்தியை வைத்து உடலைக் கீறித்தான் ஆகணும். அதை விட்டுட்டு, கத்தியைப் பார்த்தால் எனக்கு பயம், ரத்தத்தைப் பார்த்தால் எனக்கு மயக்கம் வரும்னு ஒரு மருத்துவர் சொல்லுவது முட்டாள்த்தனம்.

இப்போ நீங்க அவங்களோட தோழி மட்டும் இல்லை. அவங்களை, அவங்க மனதை சரி செய்ய முயற்சி செய்யும் ஒரு டாக்டர்ன்னு நினைச்சுக்கோங்க. இதை நீங்க, எவ்வளவு சீக்கிரம் செய்யிறீங்களோ அவ்வளவு நல்லது", முடிவு உன் கையில் என்பதுபோல் பேச்சை நிறுத்திக் கொண்டார்.

ஹேமாவும் ஒரு நிமிடம் யோசித்தாள். "சரி டாக்டர், இப்போ இருந்தே நான் அவள் மனசைப் புரிஞ்சுக்க முயற்சி செய்யிறேன். கண்டிப்பா என்னால் முடியும்", நம்பிக்கையாகச் சொன்னாள்.

"இந்த நம்பிக்கையை நீங்க அவங்களுக்குக் கடத்தினாலே போதும்...., அவங்களே எல்லாத்தையும் உங்ககிட்டே சொல்லுவாங்க. உங்களுக்கு எந்த உதவி வேண்டுமென்றாலும், எப்போவேண்ணா என்னைக் கேட்கலாம். ஆல் தி பெஸ்ட்", அவளுக்கு கை கொடுத்து வாழ்த்துச் சொன்னார்.

"கண்டிப்பா டாக்டர்.....", அவளும் கை குலுக்கினாள்.

அந்த நேரம் அவர்களை நெருங்கினாள் திவ்யா. "சாரி டாக்டர்...., கண்ணன் கொஞ்சம் அடமென்ட்டா நடந்துகிட்டான். அவனுக்கு என்னைத் தவிர யார் தொட்டாலும் பிடிக்காது, அதான்....", டாக்டரைப் பார்க்காமல், சுவற்றைப் பார்த்து, ஒரு விதமாக, இதைச் சொல்லியே ஆகவேண்டும் என்ற பிடிவாத்தத்தில் சொல்லிவிட்டாள். அவளது முயற்சி, அங்கிருந்த இருவருக்குமே புரிந்தது.

"இட்ஸ் ஓகே....., போட்டிருக்கும் ட்ரிப் முடிஞ்சதும், நீங்க கண்ணனை கூட்டிட்டுப் போகலாம். பீவர்க்கு கிரோசின் கொடுங்க. அன்டிபயாட்டிக் எதுவும் வேண்டாம். கொஞ்சம் கவனமா பாத்துக்கோங்க.

"முடிஞ்ச அளவு, அவன்கிட்டே பேசி, அவன் அடி மனதில் இருக்கும் பயத்தை போக வைங்க. இதற்குமேல் நான் எதுவும் சொல்லத் தேவையில்லை. உங்களுக்கே எல்லாம்

தெரியும். இந்த பிட்ஸ் அடிக்கடி வராமல் இருப்பது அவனுக்கு நல்லது. இல்லையென்றால், இது பெரிய ஆபத்தில் முடியலாம். டேக் கேர்", அவரும் முடிந்த அளவு சாதாரணமாகவே சொல்லி முடித்தார்.

ஒரு நொடி திகைப்பில் விரிந்த அவள் முகம், நொடியில் கசங்கிச் சரியானது. அதை மறைத்துக் கொண்டு, "தேங்க் யூ டாக்டர்", அவரிடம் சொல்லிவிட்டு ஹேமாவை பார்த்து, போகலாமா என்பதுபோல் கேட்க, அவர்களுக்கு விடை கொடுத்தார்.

ஹேமா திவ்யாவிடம் எதுவும் கேட்கவே இல்லை. "ஹேமா, ரொம்ப நேரமாயிடுச்சு, உன்னை அம்மா தேட மாட்டாங்க, நீ வேண்ணா போறியா? நான் கண்ணன் முழித்தவுடன் கூட்டிப் போறேன்", தனிமை எனக்குப் பழக்கம்தான் என்னும் தொனியில் இருந்தது அவள் பேச்சு.

"நான் என்ன பால் குடிக்கும் பப்பாவா? என்னைக் காணோம்னு தேடறதுக்கு. அதெல்லாம் தேட மாட்டாங்க, சரி, உன் திருப்திக்காக வேணும்னா, நான் போன் செஞ்சு விஷயத்தை சொல்லிட்டு வாறேன்.

"சரி.... கண்ணனோட அப்பாவுக்கோ, இல்லன்னா வீட்டில் இருக்குறவங்களுக்கோ, தகவல் கொடுக்க வேண்டாமா? போன் நம்பர் இருந்தால் தா, நானே அவங்ககிட்டே சொல்லிடுறேன்", நாசூக்காக தன் வேலையைத் துவங்கினாள் அவள்.

ஹேமாவின் கேள்வியில், துடித்தவள், தன் உணர்வுகளை மறைத்துக்கொண்டு, "அப்படி யாரும் இல்லை ஹேமா. யாருக்கும் சொல்லவேண்டாம்", சாதாரணமாகச் சொல்ல முயன்றாலும், குரல் சண்டித்தனம் செய்து, அவள் வேதனையை வெளிச்சமிட்டது.

"ஓ...., அப்போ நீ இங்கேயே இரு, நான் போய்ட்டு ஓடி வந்துடுறேன் என்ன....", அவள் வலியை உணர்ந்தாலும், அதை வெளியே காட்டாமல், சாதாரணமாகச்

சொல்லிவிட்டு, அங்கிருந்து நகர்ந்தாள். அப்பொழுதுதான் நினைவு வந்தது, தான் பணம் கொண்டு வரவில்லை என்பது.

‘ச்சே...., கண்ணனைப் பார்த்தவுடனே எதுவுமே மூளைக்கு எட்டலை. பணம் எடுக்கலை, போன் எடுக்கலை, பர்ஸ் கூட எடுக்கலை. என்ன ஹேமா.... நீ இப்படி ஆயிட்ட’, தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள்.

‘அட ஆண்டவா, வந்த ஆட்டோவுக்குக் கூட பணம் கொடுக்க வில்லையே’, யோசனையாக வாசலுக்கு விரைந்தாள். அங்கே ஆட்டோ இருக்கவில்லை. அங்கிருந்த செவிலியிடம், தான் ஒரு போன் செய்யவேண்டும் என்று சொல்லவே, அங்கிருக்கும் லேன்ட் போனைக் காட்டினாள்.

தாய்க்கு போன் செய்து பணம் கொண்டுவரச் சொல்லலாம் என நினைத்து , கண்ணனின் பில் எவ்வளவு வரும் என்று கேட்டாள். அதற்கு அவளோ, கண்ணனின் பெயரில் ஐந்தாயிரம் கட்டியிருப்பதாகவும், இங்கே அவ்வளவு ஆகாது, ஆயிரம் ரூபாய்தான் ஆகும் என்றும், மீதியை அவளை பெற்றுச் செல்லுமாறும் சொன்னாள்.

“என்னது...? ஐந்தாயிரமா...? நாங்க பே பண்ணவே இல்லையே. நீங்க வேற யாரையோன்னு நினைச்சுட்டுப் பேசுறீங்கன்னு நினைக்கிறேன்”, வேகமாகச் சொன்னாள்.

“இல்ல மேம்.... இன்னைக்கு ஒபி ல நீங்கதான் முதல் ஆள். வேற யாரும் சின்னப் பசங்களும் கிடையாது. வந்தவர், கண்ணன்னு சொல்லித்தான் கட்டிட்டுப் போனார். அதோட, நீங்க வந்த ஆட்டோவுக்கும் அவர்தான் பணம் கொடுத்தார்.

ஆட்டோக்காரர் கொஞ்ச நேரம் காத்திருந்துட்டு திட்டினார், அவனுக்குமே ஐநூறு ரூபாய் கொடுத்தாரே. அப்போ அவர் உங்களோட வந்தவர் இல்லாமல் வேற யார்?”, இப்பொழுது குழம்புவது, அவள் முறை ஆயிற்று.

ஹேமா அப்பொழுதுதான் நினைத்தாள், ‘ச்சே...., வந்தவர்ட்ட அவரோட பெயரைக் கூட கேக்கலை. ஆனாலும் அவர் பொறுப்பா எல்லாம் செஞ்சுட்டுதான் போயிருக்கார். இப்போ அவரை எங்கே போய் தேடுறது.....

“அட ஸ்கூல்க்கு வந்தவர் தானே, நாளைக்குப் பாத்துட்டா போச்சு. ஹம்..., ஒரு தேங்க்ஸ் மறக்காமல் சொல்லணும்’, மனதுக்குள் எண்ணமிட்டாள்.

செவிலி அவளது பதிலுக்காகக் காத்திருப்பது புரியவே, “அவர் எங்களுக்குத் தெரிந்தவர்தான். பணம் கட்டியதைச் சொல்லாமல் போய்ட்டார் அதான்....., சரி, நான் ஒரு போன் பண்ணிக்கிறேன்”, அவள் பதிலை எதிர் பார்க்காமல், தாய்க்கு அழைத்தாள்.

நிலைமையைச் சுருக்கமாக விளக்கிவிட்டு, திவ்யாவின் வண்டி, அவள் பொருட்கள் அனைத்தும் பத்திரமாக இருக்கிறதா என்பதை உறுதி செய்துவிட்டு வைத்துவிட்டாள். அவளது தாய் தங்கமும் நிலைமையைப் புரிந்துகொண்டு, அவளுக்கு அனுமதி அளித்தார்.

அதன் பிறகு கண்ணன் உறங்கி எழும்வரை அங்கேயே இருந்தார்கள். கண்ணனுக்கு ஜுரம் லேசாகத்தான் இருந்தது. கிளம்பும் நேரம், ஆட்டோவை வர வைத்து, திவ்யாவுடன் அவளது வீட்டிற்கே சென்றாள் ஹேமா.

ஹேமாவின் ஆதரவு திவ்யாவிற்கு மிகப் பெரிய தைரியத்தை கொடுத்தது. அதைவிட, கலங்கிய குட்டையாக மனதைத் தவிக்க விடாமல், ஹேமாவின் பேச்சு, அவள் மனதுக்கு மிகப்பெரிய ஆறுதலை அளித்தது. ஹேமாவின் வரவு, திவ்யாவின் வாழ்வில் மாற்றத்தை வர வைக்குமா?

***

தாகம் - 12.

திக்குத் தெரியாத காட்டில்

சிக்கிக் கொண்ட உணர்வு

தவிர்க்க வழி தெரியவில்லை

தணிக்கவாவது உதவி செய்யேன்.....

“மீனாட்சி பஞ்சாலையின் வாரிசு நந்தனுக்குத் திருமணம். வீடு மட்டுமில்லாமல், தொழிற்சாலையே களை கட்டியது. தொழிலாளர்கள் அனைவரின் முகங்களிலும் உற்சாகம் கரை புரண்டு ஓடியது.

வேலை கூட அவ்வளவு சுறு சுறுப்பாக நடந்தது. ஒரு மாதச் சம்பளம் இனாமாகக் கிடைத்ததால் வந்த பூரிப்பு, அனைவரின் முகங்களிலும் தெரிந்தது. குமாரை, கையிலேயே பிடிக்க முடியவில்லை. சாதாரண இஞ்சினியராக வந்தவன், முதலாளியின் மச்சான் என்றால் சும்மாவா? அதைவிட, மில்லின் முழுக் கட்டுப்பாட்டையும் அவன்வசம் கொடுத்திருந்தான் நந்தன்.

எனவே, அவனது இந்தப் புது மதிப்பு, குமாருக்குப் பெரிய உற்சாகத்தைக் கொடுத்தது. தன்னை நம்பிக் கொடுத்தப் பொறுப்பை, சரியாகச் செய்யவேண்டுமே என்ற பொறுப்புணர்வும், அவனுக்கு அதிகமாகவே இருந்தது.

இந்தச் சலுகையைப் பயன்படுத்தி, அவன் தவறாக நடக்க முயலவில்லை. அனைத்தையும் சரியான விதத்திலேயே செய்தான். ப்ரியாவிடம் வாய் ஓயாமல் அதைச் சொல்லிச் சொல்லிப் பெருமைப் பட்டான்.

குமாரின் இந்த உற்சாகம், ப்ரியாவுக்கு அதீத வெறுப்பையே அளித்தது. தன் அண்ணனுக்கு, பதவி மோகத்தைக் கொடுத்து, வளைத்து விட்டதாக எண்ணிக் கறுவினாள்.

அவளது கோபம் வளர்ந்துகொண்டே சென்றதே தவிர, குறையவில்லை.

பத்திரிகை அனைத்தும், இருவீட்டு அழைப்பாக இருந்தபடியாலும், குமாருக்குப் பெரிய அளவில் உறவினர்கள் இல்லாத காரணத்தாலும், அனைத்து மாப்பிள்ளை வீட்டு வேலைகளையும் அவனே முன்னின்று நடத்தினான்.

நந்தனின் வீட்டு உறவினர்கள் முணுமுணுத்த பொழுது கூட, அதை சட்டை செய்யவில்லை நந்தன். அவனே கண்டுகொள்ளாத பொழுது யார் என்ன செய்ய முடியும்? திருமண நாளும் வந்தது. மாப்பிள்ளை அழைப்பு, நலுங்கு வைப்பது என அனைத்து நிகழ்வுகளிலும், நந்தனின் கண்கள் ப்ரியாவையே மொய்த்தது.

ஆனால் அவளோ, உணர்வுகளைத் துடைத்த முகத்துடன் அமர்ந்து கொண்டிருந்தாள். அவன் ஒவ்வொரு முறையும் அவளது கண்களைச் சந்திக்க முயன்று தோற்றான். ப்ரியாவின் இந்தச் செய்கை, அங்கிருந்த அனைவரின் புருவத்தையும் உயர வைத்தது.

மணமகளுக்கே உரிய பூரிப்போ, மகிழ்ச்சியோ, நாணமோ எதுவுமே இல்லாமல் இருக்கும் அவளைப் பார்த்தால், அப்படித்தான் எண்ணத் தோன்றியது. நந்துவும் சிறிது நேரம் பொறுமை காத்தான். இறுதியில், அவளிடம் என்னவென்று கேட்டுவிடலாம் என எண்ணும் வேளையில் நலுங்கு சடங்கு முடிவதாகச் சொல்லவே, இருவரையும் அவரவர் அறைக்குப் போகச் சொன்னார்கள்.

அவள் பின்னால் செல்லத் துடித்த கால்களை அடக்கி, தனக்கு ஒதுக்கிய அறைக்குச் சென்று, முதல் வேலையாக, தன் அலைப்பேசியில் இருந்து அவளுக்கு அழைத்தான். அப்படி அழைக்கும் வேளையில்தான், சிலநேரம், தான், முன்பே அவளுக்கு அழைத்துப் பேசாததால்தான்,

கோபமாக இருக்கிறாளோ என்ற சந்தேகமே அவனுக்கு எழுந்தது.

அவளுக்கு இந்தத் திருமணத்தில் விருப்பம் இருக்காது என்றோ, அவளுக்குத் தன்னைப் பிடிக்கவில்லையோ என்றோ, அவன் யோசிக்கவே இல்லை. அவள்மேல் அவன் உயிரையே வைத்திருந்தபடியால், அவளது கோபத்தையும், பாராமுகத்தையும் கூட ரசிக்கவே செய்தான்.

அவளது இன்றைய பாராமுகத்துக்கு, தான் அவளிடம் அலைபேசியில் பேசாதது தான் காரணம் என்று, தனக்குத் தானே ஒரு காரணத்தைக் கற்பித்துக்கொண்டு, நாளை மாலைவரை அவளது கோபத்தை அருகில் இருந்து ரசிக்க எண்ணினான். அவளது அலைப்பேசிக்கு அழைக்க எடுத்த முடிவைக் கைவிட்டான்.

அவன் அறிந்திருக்கவில்லை, அப்பொழுது அவளுக்கு அழைத்திருந்தாலும், முன்னர் கேட்ட அந்த பதிலைத்தான் பெற்றிருப்பான் என்று. நாளைக் காலையில் அவளுடனான தன் திருமணத்தை எண்ணியவாறு கனவுலகிலேயே சஞ்சரித்தான் நந்து.

கடவுளிடம் பாசம்காட்டும் பக்தனைப்போல்,
ப்ரியாவின்மேல் அன்பு செலுத்தினான் நந்தன்.
அவளிடமிருந்து பதிலுக்கு எதையுமே அவன்
எதிர்பார்க்கவில்லை. அவள்மேல் இருந்த காதல்,
கண்களை மறைத்தது அவனுக்கு.

அவனது இந்த அதீதக் காதல்தான், அவனை, அவனது சுற்றுப்புறத்தையும், அறிவையும் மழுங்கடித்ததோ. மற்றவர்களுக்கு குறையாகத் தெரிந்த எதுவுமே, அவனுக்குக் குறையாகத் தெரியவில்லை. சொந்தங்களின் பார்வையில், ப்ரியாவின் அழகில் எந்தக் குறையும் தெரியவில்லை.

அதேநேரம் அவளது நடத்தியிலும், செய்கையிலும், பார்வையிலும் தெரிந்த அலட்சியம், அசால்ட்டுத்தனம்

யாருக்குமே பிடிக்கவில்லை. வசந்தாவிடமே அனைவரும் அதைத் தெரிவிக்க, அவரும் எவ்வளவுதான் சமாதானம் சொல்ல முடியும்.

அவராலேயுமே ப்ரியாவின் செய்கையை, நியாயபடுத்த முடியாத போழுது, உப்புச் சப்பாக எதையும் சொல்லி வைக்கவும் அவர் விரும்பவில்லை. மகனிடமே பேசிவிடலாம் என்ற முடிவுக்கு வந்தார்.

அவருமே, ப்ரியாவிடம் முன்பு பேசியபொழுது, எந்தவிதமான ஆர்வத்தையோ, எதிர்ப்பையோ அவள் காட்டியதே இல்லை. அவளைப் பார்க்கச் சென்ற அன்று, அவள் இறுக்கமாக இருந்ததால் , “நீ சிரித்த முகமாக இருந்தால் இன்னும் அழகாய் இருப்பம்மா”, என்று சொன்னபொழுது, அவள் முகம் இருண்டது, அசந்தர்ப்பமாக இந்த வேளையில் அவர் நினைவிற்கு வந்து கலக்கத்தை ஏற்படுத்தியது.

அதுமட்டுமில்லாமல், ப்ரியாவின்மேல் கொண்ட காதலால், ஜாதகம் பார்ப்பதையும் நந்தன் விரும்பவில்லை. ஜாதகம் பொருந்தாமல், இந்தத் திருமணத்தை நடத்துகின்றோமோ, அதனால்தான் இப்படிப்பட்ட சஞ்சலங்கள் மனதை ஆக்கிரமிக்கின்றனவா? மனம் பலவற்றையும் எண்ணிக் கலங்கியது.

ஒரு முடிவுடன், மணமகன் அறைக்குச் சென்றார். “நந்தா.....”, தாயின் அழைப்பில், கனவில் இருந்து மீண்டு, நனவுலகம் வந்தான்.

“வாங்கம்மா.... என்ன இந்தநேரம் வந்து இருக்கீங்க? பந்தி எல்லாம் முடிஞ்சுதா இல்லையா? சாப்ட்டீங்களா? ஏதாவது பிரச்சனையா என்ன?”, தாய் அவனைத் தேடி வந்தது, வித்தியாசமாகத் தெரிந்தது அவனுக்கு. எனவே, படுக்கையில் இருந்து வேகமாக எழுந்து, படபடப்பாய் கேட்டான்.

“பிரச்சனை எல்லாம் எதுவும் இல்லை நந்து, சும்மா உன்னைப் பாத்து பேசிட்டு போலாம்னுதான் வந்தேன்...”, அவர் குரலில் அவ்வளவு தயக்கம்.

“என்னம்மா விளையாட்டு இது, சின்னப் பிள்ளை மாதிரி. உங்களுக்கு வயசு ஏறுதா, இறங்குதா? போங்க, முதல்ல போய் நல்லா ரெஸ்ட் எடுங்க. காலையில், கல்யாண வேலையைக் கவனிக்கத் தெம்பு வேண்டாமா? போங்கம்மா..”, கண்களில் கனவு மிதக்கப் பேசும் மகனை, வாஞ்சையாகப் பார்த்தார்.

தன் ஒரே மகனின் வாழ்வு சிறப்பாக அமையவேண்டும் என்ற பிரார்த்தனையைத் தவிர, அந்தத் தாயின் மனதில் வேறு சிந்தையே இல்லை. ஆனாலும் மனதை உறுத்தும் விஷயத்தைக் கேட்காமல் இருக்கவும் அவரால் முடியவில்லை.

“நந்து..., அம்மா ஒண்ணு கேப்பேன்...., நீ பதில் சொல்லுறியா?”, தவிப்பாகக் கேட்டார்.

தாயின் குரலில் தெரிந்த தவிப்பில், அவர் அருகில் சென்று அமர்ந்து, அவர் கைகளை ஏந்திக் கொண்டான்.“அம்மா...., என்னம்மா... ஏதாவது என்கிட்டே கேக்கணுமா? என்கிட்டே கேக்க, என்னம்மா தயக்கம், கேளுங்க”, அவரை ஊக்கினான்.

“நந்து....., ப்ரியாக்கு உன்னைப் பிடிச்சிருக்கு தானே? நீ அவகிட்டே பேசினியா? அவளுக்கு இந்தக் கல்யாணத்தில் முழு சம்மதமா?”, அவன் முகத்தைப் பார்த்தவாறே கேட்டார்.
“உங்களுக்கு எதுக்கும்மா இப்போ இப்படி ஒரு சந்தேகம்? ஓ.... இப்போ மேடையில் உம்முன்னு இருந்ததை வச்சுக் கேக்குறீங்களா?

அது வேற ஒண்ணும் இல்லை. அம்மணிக்கு, நான் போனில் பேசலைன்னு கொஞ்சம் கோபம், அதான். மற்றபடி, நீங்க பயப்படும் அளவு எதுவும் இல்லம்மா”, அவருக்கு தைரியம் சொன்னான்.

“என்னவோப்பா...., நீ சொல்லுற.... நான் நம்புறேன்..... உனக்குத் தெரியாதது இல்லை. எனக்கு என்னவோ, ஜாதகம்.....”,

“அம்மா...., எங்க மனம் பொருந்தி இருக்கே, நீங்க அதைப் பாருங்கம்மா. அதை விட்டுட்டு, இன்னும் இந்த ஜாதகம், தோஷம் இப்படி எல்லாம் பேசாதீங்கம்மா”, அவரை முழுதாகப் பேச விடாமல் தடுத்து விட்டான். குரலில் ஒரு கெஞ்சல் கூட இருந்தது.

வசந்தா எவ்வளவோ பேச வந்தும், மகனது ஆசைப் பேச்சும், கனவு முகமும், கெஞ்சல் குரலும், அவரைத் தடுத்தது, மேலே எதையும் பேச முடியவில்லை. “நீ சந்தோசமா இருக்குறதைப் பார்த்தால் போதும் நந்து, வேற எனக்கு என்ன வேணும்? சரி நீ தூங்கு, காலையில் சீக்கிரம் எழணுமே”, சொல்லிவிட்டு, குழம்பிய மனநிலையோடு அங்கிருந்து வெளியேறினார்.

தாயின் கவலை தேவையில்லாதது என்றேஅவனுக்குத் தோன்றியது. அவளுக்கு, அப்படியே தன்மேல் விருப்பமில்லை என்றால் கூட, தன் அன்பால் அவளை மாற்ற, தன்னால் முடியும் என்று மலையளவு நம்பினான். அவனுக்குத் தெரியவில்லை. தகுதியில்லாதவர்களிடம் செலுத்தும் அன்பு கூட, நம்மைக் காயப்படுத்தவும், அவமானப்படுத்தவுமே செய்யும் என்று.

பாறையை உடைக்க உளியால்தான் முடியும். அதை விடுத்து தலையால் அதை உடைக்க முயல்வது, நமக்குத்தான் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை அவன் அறியவில்லை.

ப்ரியாவின் நிலையோ, சொல்லொண்ணா விதத்தில் இருந்தது. தன் கல்லூரித் தோழிகளைக் கூட அவள் திருமணத்திற்கு அழைக்கவில்லை. அவளுக்குத் துணையாக இருக்க முன்வந்த, நந்தனின் தங்கை

ரம்யாவைக் கூட, வேண்டாம் என்று சொல்லிவிட்டு, அறையை இறுக்க மூடிக்கொண்டு முடங்கிக் கொண்டாள்.

சாப்பிட அழைத்தபொழுது கூட, தலைவலி என்று சொல்லி தவிர்க்கப் பார்த்தாள். ஆனால் குமார் கட்டாயப் படுத்தவே, வேறு வழியில்லாமல், நந்தனின் அருகில் வேண்டா வெறுப்பாக அமர்ந்தாள்.

அவன் அருகில், சாதாரணமாக சாப்பிட அமர்வதுகூட, ஒருவித வெறுப்பையே அளித்தது அவளுக்கு. 'இந்த மனநிலையில் அவனோடு எப்படி வாழப் போகிறோம்', என்பதை எண்ணும் பொழுதே..., கண்கள் கலங்குவதைத் தவிர்க்க முடியவில்லை.

அவள் சாப்பாட்டை அளைந்து கொண்டிருப்பதைப் பார்த்தவன், அவள் முகத்தைப் பார்த்தான், அது கலங்கியிருக்கவே துடித்துப் போனான் நந்து.

"என்னம்மா ரொம்பத் தலை வலிக்குதா? நான் வேண்ணா பாலும், டேப்லெட்டும் உன் ரூமுக்குக் கொடுத்து அனுப்புறேன், நீ போய் ரெஸ்ட் எடுக்குறியா?", கனிவாகக் கேட்டான்.

அவனது இந்த கனிவு...., அவள் மனதில் பிரபு இல்லாமல் இருந்திருந்தால் எந்தவிதத் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்குமோ? ஆனால் இப்பொழுது எதிர்விதமான தாக்கத்தையே அளித்தது.

'என்னோட இந்த தலைவலிக்கே, நீதாண்டா காரணம்...., இப்போ நீயே, மருந்தும் தாறேன்னு சொல்லுறியா? நீ என்னைவிட்டுப் போனால்தான் இந்தத் தலைவலி போகும்...., என்ன போய்டுறியா?', கண்கள் நெருப்பையும், வெறுப்பையும் உமிழ, உள்ளம் உலைக்களமாக கொதிக்க, அதை அவனுக்குக் காட்டாமல் குனிந்துகொண்டாள்.

அவன் கேள்வி காதில் விழுந்ததாகக் கூடக் காட்டாமல், இவனுக்கெல்லாம் நான் என்ன பதில் சொல்வது என்ற

தோரணையில் அமர்ந்திருந்தாள். நந்து அவளிடம் சாய்ந்து பேசிக் கொண்டிருப்பதைப் பார்க்கும் மற்றவர்களுக்கு, நந்தனின் பேச்சுக்கு, ப்ரியா வெட்கப்பட்டு அமர்ந்திருப்பது போன்ற தோற்றத்தையே அளித்தது.

அவளது பதிலை, அவன் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவே இல்லை. அவள் தன் அருகில் மட்டும் இருந்தாலே போதும் என்றே எண்ணியது. அவள்தான் அவன்மேல் கோபத்தில் இருப்பதாக, அவன் கற்பனை செய்து கொண்டிருந்தானே. அவளது இவ்வளவு கோபத்திலும், தன்னிடம் சண்டை போடாததை நினைத்துப் பெருமையும், பூரிப்பும் வேறு பட்டுக் கொண்டான்.

அவளுக்குத் தன்னிடம் கோபப்படக்கூட முடியவில்லை, என்று புளகாங்கிதம் அடைந்தான். 'உனக்கு, காதல் கிறுக்கு முத்திப்போச்சுடா', என்று மனசாட்சியும், 'காதல், உன் கண்ணை இவ்வளவு மறைக்கவேண்டாம்', என்று விதியும் எக்காளமிட்டுச் சிரித்துக் கொண்டிருந்ததை, அவன் கண்டுகொள்ளவே இல்லை.

"என்னம்மா.... அதான் சொன்னேனே, உன்னால் முடியலன்னா விட்டுடுன்னு. நீ ரூமுக்குப் போ, நானே வந்து உனக்கு மாத்திரை தாறேன் சரியா", அவளைத் தனியாகக் காணும் ஆவல் வழிந்தது அவன் குரலில்.

மறுத்து எதுவும் சொல்லாமல், சட்டென எழுந்து கைகழுவச் சென்றுவிட்டாள். அவள் முதுகையே வெறித்தவாறு அமர்ந்திருந்தான்.

"அண்ணா...., என்ன....? என்னமோ கடவுளை நேர்ல கண்ட பக்தன் மாதிரி அப்படியே திகைச்சுப் போய் உக்காந்து இருக்க. நீதான் என்னமோ வாட்டர் பால்சையே தொறந்து விட்ட மாதிரி ஜொள்ளா ஊத்துற, அங்கே இருந்து ஒண்ணையும் காணோம்.....

"அங்கே இருந்து ஒரு ரியாக்சனுமே இல்லாத போதே நீ இவ்வளவு ஜொள்ளு விட்டா....., அவ ஓர விழிப்

பார்வையில் பாத்து வச்சான்னா....., எங்களை எல்லாம், நீந்தித்தான் வீட்டுக்குப் போக வைப்ப போல", ரம்யா அவனை சீண்டும் விதமாக, நொடித்துக் கொண்டாள்.

"ரம்யா...., அண்ணியை மரியாதை இல்லாமல் பேசாதே....., என்னதான் அவ உன் வயசா இருந்தாலும், அவ உன் அண்ணனோட மனைவி, அதை நீ ஞாபகம் வச்சுக்கோ", அவள் சொல்ல வந்த விஷயத்தைப் புரிந்து கொள்ளாமல், மனைவியின் மரியாதையைக் காக்க முயன்றான் அந்த (பயித்தியக்காரக்) காதல் கணவன்.

"உனக்கு ரொம்ம்ப முத்திப் போச்சுண்ணா....., இப்போவே இப்படின்னா...., அப்போ நாளைக்கு, நாங்கல்லாம் உன் கண்ணுக்கே தெரிய மாட்டோம் போல", கொஞ்சம் கோபம், கொஞ்சம் நக்கல், அவள் குரலில்.

ஆனால் அவனோ...., "ஆமா நீ யாரு...?", என்று அப்பொழுதே கேட்டுவைக்க, வெடுக்கென முகத்தை திருப்பிக் கொண்டு போனாள் அவள்.

'விளையாட்டுப் பிள்ளைக்கு, பொறாமையைப் பாரேன்', தங்கை தன்மேல் கொண்ட உரிமை உணர்வால், இப்படிப் பேசுவதாக எண்ணினான். அவள் பேச்சில் இருக்கும் உண்மையை, அவன் உணரத் தவறினான்.

வேகமாகச் சாப்பிட்டு முடித்தவன், ஒரு டம்பளர் பால், மாத்திரையுடன் மணமகள் அறையை அடைந்தான். மண்டபத்தில் சந்தடி அடங்கி விட்டிருந்தது. மெல்லிதாகக் கதவை தட்டவே, "யாரு....?", வெடுக்கென குரல் கொடுத்தாள்.

"நான்தான் ப்ரியா, உனக்குப் பால் கொண்டு வந்திருக்கிறேன். கொஞ்சம் கதவைத் திற", மெதுவாகச் சொன்னான்.

அவளே வந்து கதவைத் திறக்கவே, அவளோடு யாரும் இல்லையா என்று கேட்க, தனக்குத் தனியாக

இருந்தால்தான் தூக்கம் வரும், எனவே மற்றவர்களை அனுப்பி விட்டதாக, சுவரைப் பார்த்தவாறே பதில் சொன்னாள்.

தன்னை அவள், அறைக்குள் அனுமதிக்காதது கொஞ்சம் வருத்தமாக இருந்தாலும், மற்றவர்கள் தங்களைத் தவறாக எண்ணிவிடக் கூடாது என்ற முன்னெச்சரிக்கையாலேயே, அவள் அப்படி நடந்து கொள்வதாக, தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டான்.

அவளிடம், பாலையும் மாத்திரையையும் கொடுக்க, அவன் நுனி நகம் கூட தன்னைத் தீண்ட விடாமல், நாசூக்காக வாங்கிக் கொண்டு, கதவை அவன் முகத்துக்கு நேராக அறைந்து சாத்தினாள். அவளது கோபத்தாலேயே அவள் இப்படி நடந்து கொள்கிறாள் என்று எண்ணிக் கொண்டு, அங்கிருந்து சென்றான்.

அவளோ....., அந்த பால் இருந்த கண்ணாடி டம்ப்ளரையும், மாத்திரையையும், குளியலறையில் விசிறியடித்தாள். கண்ணாடி டம்பளர் சுக்குநூறாக உடைந்து சிதற, மாத்திரை ஒரு மூலையில் போய் விழுந்தது.

தன் வாழ்க்கையும் இந்தப் பாலைப் போல் வீணாகப் போகப்போவதும், தன் மனம், இந்தக் கண்ணாடிச் சில்லுகளைப்போல உடைந்து சிதறப்போவதும், தான், அந்த மாத்திரையைப் போல எங்கோ ஒரு மூலையில் விசிறியடிக்கப்படப் போவதையும், அவன் உணர்ந்திருந்தால்....., நடப்பதெல்லாம் முன்பே அறிய அவன் என்ன முக்காலமும் அறிந்த ஞானியா?

***

தாகம் - 13.

உன் காதலுக்காக நான் காத்திருக்க

கிடைப்பதென்னவோ ஏமாற்றமும்

வலிகளும் மட்டும்தான்.....

தங்கையின் திருமணத்தில் கொஞ்சம் கூட உற்சாகமே இல்லாமல் இருக்கும் மனைவியை, வித்தியாசமாகப் பார்த்துக் கொண்டே இருந்தான் கமலேஷ். அவன் பார்வையை உணரும் நிலையில் கூட கீதா இல்லை என்பதை உணர்ந்தவன், அவள் அருகில் சென்று அமர்ந்தான்.

‘ம்க்கும்....’, தொண்டையைச் செருமினான். ஆனாலும் அவனைக் கண்டுகொள்வதாக இல்லை அவள். “கீது...., எந்த மலையைக் கட்டி இழுக்க, இவ்வளவு யோசனை. தெரிஞ்சால் நானும் உதவி செய்வேன்”, அவள் காதில் மென்மையாகக் கேட்டான்.

“ம்ச்...., விளையாடாதீங்க....., அதெல்லாம் எந்த மலையையும்.....”, வேகமாக பதில் சொல்லத் துவங்கியவள், அவனது கேலியைப் புரிந்துகொண்டு, “என்ன கிண்டலா? என்னைப் பார்த்தால் எப்படித் தெரியுது உங்களுக்கு?”, பொய்க் கோபமாகக் கேட்டாள்.

“உண்மையைச் சொல்லவா, இல்லை பொய் சொல்லவா...”, அவன் கேட்ட விதமே, விவகாரமாக எதையோ சொல்லப் போகிறான் என்பதை கணித்தவள், “ஐயோ சாமி, நீங்க உண்மையோ பொய்யோ, எதுவும் சொல்ல வேண்டாம். முதல்ல போய் குளிச்சுட்டு வாங்க, டிபன் சாப்பிடப் போகலாம்.

“மண்டபத்துக்கு வேற கிளம்பணும், நேரமாகுது. இப்போ நாம வெளியே போகல...., வெளியே என்னக் கலவரம் நடக்கும்னு எனக்குத் தெரியாது. நான் சீக்கிரம்

போனால்தான், தங்கையை எங்க அம்மா வாயில் இருந்து காப்பாத்த முடியும். பாவம் அவ, ஏற்கனவே ரொம்ப பயத்துல இருக்கா", உண்மையான கவலை அவள் குரலில்.

"கீது..., அதெல்லாம் பாத்துக்கலாம்....., முதல்ல உன் மண்டைக்குள் என்னக் குடையுதுன்னு சொல்லு, மத்ததை பிறகு பாக்கலாம்", எழுந்து செல்லப்போன அவளைக் கை பிடித்து அமர வைத்தான்.

"நான், வேற யாரை நினைச்சுக் கவலைப்படப்போறேன்? எல்லாம் நம்ம தர்ஷுவைப் பத்தித்தான். முந்தில்லாம் எப்போ பாத்தாலும் வாய் ஓயாமல் பேசுவா, வாயைத் திறந்தாலே கேலி, கிண்டல்ன்னு ஆளையே காலி பண்ணுவா. இப்போ, இந்த ரெண்டு வாரமா எதையோ பறிகொடுத்தவ மாதிரியே இருக்கா.

"என்னன்னு கேட்டாலும் பதிலே சொல்ல மாட்டேன்னு அடம் பண்ணுறா. ரொம்பக் கட்டாயப் படுத்துனா, கண்ணுல தண்ணி விட்டுட்டு, எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம்கான்னு கதறுறா. எனக்கு என்ன சொல்லன்னே தெரியலை கமலேஷ்.

"உனக்கு கல்யாணமே வேண்டாமா, இல்ல இந்த மாப்பிள்ளையைப் பிடிக்கலையான்னு கேட்டால், அதுக்கும் ஒரே அழுகை. வித்தார்த் கூட டெய்லி போன்ல பேசவும் செய்யிறா. அவங்க பேசிப் பேசி ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுப்பாங்கன்னு பார்த்தால்.....

"எனக்கு என்னமோ ரொம்பக் கவலையா இருக்குங்க....., அவளை நினைச்சாலே, அவளோட அழுகைதான் கண்முன்னாடி வருது. குழந்தையில் கூட அவளை நான் அழவே விட மாட்டேங்க. இப்போ என்னமோ.....

அன்னைக்கு என்கிட்டே கேக்குறா....., அக்கா எங்க ஜாதகம் சேராமல் போயிருந்தாலோ, இல்ல எனக்கு முதல்ல பையன் பொறக்கும்னு அந்த ஜோசியர் சொல்லாமல்

போயிருந்தாலோ இந்தக் கல்யாணம் முடிவாகி இருக்காது இல்லையாக்கான்னு.....

நான் அப்படியே திகைச்சுப் போய்ட்டேங்க....., அவ சொன்னது நிஜம்தான். எங்க அம்மா இவ்வளவு உறுதியா இருக்கப்போய்தான் இந்தக் கல்யாணமே முடிவாச்சு. அதுவும் அவங்க, நம்ம சக்திக்கு மீறி நகை, ரொக்கம் எல்லாம் கேட்டபோது கூட, அம்மா ஜாதகத்தை இவ்வளவு நம்பியதால்தான், எல்லாத்துக்கும் அப்பா தலையாட்டினார்.

அவனும் அப்படி ஒண்ணும் அழகா, கம்பீரமா கூட இல்லை. அதைவிட, தர்ஷுக்குப் பிடிச்ச மீசை கூட இல்லை..... அன்னைக்கு அதையும் சொல்லி ஒரே அழுகை. எனக்கு என்னமோ...., அவளுக்குப் பிடிக்காத இடத்தில் அவளைக் கட்டிக் கொடுக்குற மாதிரி இருக்குங்க", மனதைப் பிசையும் உணர்வில், அவன் தோள் சாய்ந்து ஆறுதல் தேடினாள்.

அவனும் அவளைத் தோளோடு அணைத்துக் கொண்டான். சற்று நேரம் அமைதியாக இருந்தவன், "கீது...., அவ சின்னப் பொண்ணு, அவதான் ஏதோ பயத்தில் அழறான்னா...., நீயும் தேவையில்லாமல் ஏன் இப்படிக் கவலைப் படுற?

"இப்போ இப்படித்தான் பயப்படுவா, கல்யாணம் முடிஞ்ச மறுநாள் பாரு, எல்லாம் தலைகீழா மாறி இருக்கும். சின்னப் பசங்க மாதிரி எதுக்குன்னாலும் முதல்ல கோச்சுப்பாங்க. பிறகு அதுவே சரியாயிடும்.

"நீவேற அவளை ரொம்பப் பொத்தி வளத்துட்ட. உங்க அம்மாவைக் கூட திட்ட விடமாட்ட. அப்படி இருக்கும்போது...., புதுசா அவளோட வாழ்க்கைத் துணையோடப் பேசும்போது, அவங்க குணத்தைப் புரிஞ்சுக்க, இவளுக்கு நாள் ஆகும் இல்ல.

"அவர் விளையாட்டுக்குக் கோபப்பட்டால் கூட, இவ அதைப் பெருசா எடுத்துக்கறாளோ என்னவோ. விடு....., முதல்ல எல்லாம் நமக்குள் வராத சண்டையா? மீசை என்ன பெரிய விஷயம், நாலு நாள் ஷேவ் செய்யாமல் விட்டால், தானா

வந்துட்டுப் போகுது. இதெல்லாம் ஒரு காரணம்னு.....”, அவளைத் தேற்றினான். ஆனாலும் அவன் மனதிலும் கொஞ்சம் நெருடல்.

அதை வெளியிட்டால், கீதா இன்னும் கலங்கிவிடுவாள் என்று தோன்றவே அவளுக்குக் காட்டாமல் மறைத்தான். தன்னால் முடிந்தால் ஏதாவது செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தான். கணவனின் தேறுதல் வார்த்தைகள், அவளுக்குக் கொஞ்சம் தெம்பை அளித்தது.

தங்களுக்குப் பத்து வருடமாகக் குழந்தை இல்லையே என்று, ஒரு முறை கூட அவன் அவளிடம் கோபித்ததே இல்லை. இவள் இல்லையென்றால் என்ன? தங்கையைக் கட்டி வையுங்கள் என்று சண்டை போட்டதில்லை. அவ்வளவு ஏன்? கீதா தர்ஷுவை மகளாகப் பார்க்கிறாள் என்பது தெரிந்து, அவனும் அவளை மகளாகவேதான் கருதினான்.

அவளது செல்லச் சேட்டைகள், சண்டைகள், குறும்புகள் என அனைத்தையும் பார்த்தவன்தான் அவன். ஆனாலும் மகள் என்ற கண்ணோட்டத்தில் இருந்து. மனதளவில் கூட, தர்ஷுவைத் தவறாக அவன் நினைத்ததில்லை. அவர்களது தாய் திட்டுவதை உணர்ந்து, நம்ம வீட்டில் வேண்டுமென்றால் அவளைத் தங்க வைத்துப் படிக்க வைக்கலாம் என்று கூட கேட்டிருக்கிறான்.

அவளுக்கு, தானே தகப்பனாக இருந்து திருமணமும் செய்து வைக்கிறேன் என்றும் சொல்லி இருக்கிறான். கீதாதான், தங்கள் தந்தை அங்கே தனியாளாகி விடுவார் என்று அதற்கு அனுமதித்ததில்லை.

“கீது....., நாம வேண்ணா அவளைத் திருமணம் முடிச்சு, டெய்லி போய் பாக்கலாம்டா. நான் உன்னை அவளோட வீட்டுக்குக் கூட்டிப் போறேன், சரியா”, தன் மனைவியின் மௌனம் பொறுக்காமல், சேர்த்தே சொன்னான்.

பின்னர் இருவரும் சேர்ந்து கிளம்பி, தர்ஷு, வந்திருக்கும் உறவினர்கள் என அனைவருடனும் மண்டபம்

சென்றார்கள். அங்கே மாப்பிள்ளை அழைப்பு, நலுங்கு என அனைத்தும் நல்லபடியாகவே நடந்து முடிந்தது.

தர்ஷிணி, வித்தார்த் இருவரும் சுமுகமான மனநிலையிலேயே இருந்தார்கள். வித்தார்த் அவளிடம், கொஞ்சம் சிரித்துக் கூடப் பேசினான். தர்ஷிணி, வித்தார்த்தின் முகத்தைப் பார்த்த பொழுதெல்லாம், இவருக்கு மீசை இருந்தால் நன்றாக இருக்கும் என்ற எண்ணம் எழுவதைத் தவிர்க்க முடியாமல் திண்டாடினாள்.

இவர்களுக்கு, முந்தினநாள் இரவே வரவேற்பு வைத்திருந்தார்கள். அடர் நீலவண்ணக் கோட், பேண்டில் இருந்த அவனது கம்பீரத்தில் தன்னைத் தொலைக்கவே செய்தாள் அவள். தர்ஷிணியும், வெங்காய வண்ணப் பட்டில் தேவதையாகவே ஜொலித்தாள்.

வித்தார்த்தின் பார்வை, தர்ஷிணியை, அங்கம் அங்கமாக வலம் வந்தது. மேடை என்று கூடப் பாராமல், பார்வையால் தன் தாபத்தை வெளிப்படுத்தினான் அவன். தர்ஷிணியோ அவனிடம், காதல் பார்வையை விதைத்துக் கொண்டிருந்தாள்.

“ஏய்....., அநியாயத்துக்கு அழகா இருக்கடி....., இப்படிக் கிட்டே இருந்து பாக்க....., என்ன என்னமோ தோணுதுடி....., பேசாமல் உன்னை இப்படியே எங்கேயாவது கூட்டிப் போய்டட்டுமா.....”, அவன் பேச்சு ஐஸ் துண்டமாகக் காதில் விழ, இதயக்கூடு மட்டுமல்ல, தேகம் முழுவதும் சில்லிட்டுப் போனது அவளுக்கு.

அவன் பேச்சில் கலந்துகொள்ள கொஞ்சம் தயக்கம் இருந்தாலும், அவளும் அனைத்து ஆசைகளும் நிரம்பிய சராசரிப் பெண் தானே. எதிர்பார்ப்புக்கள் அவளுக்கும் இருக்கத்தான் செய்தது. ஆனாலும், இருக்கும் சூழலும், இடமும், அதைவிடப் பெரிதாக தெரிய,

“கொஞ்சம் சும்மா இருங்களேன்”, இதைச் சொல்லும் முன்பே, கன்னங்களில் தாமரை பூத்தது.

“இங்கே வேற என்னதான் செய்ய முடியும்....? ஹும்....”, அவன் போலியாகப் பெருமூச்சுவிட, அவன் பார்வையின் வேகம் தாங்காமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

வாழ்த்துச் சொல்ல ஆட்களும் வந்த வண்ணம் இருக்க, அவனது பேச்சுக்கள் அதற்குமேல் வரம்பு மீறவில்லை. ‘இவ்வளவு ஆசை வைத்திருப்பவனா, தன்னைப் பேச்சால் குத்திக் கிழித்தான்’, என்பதை அவளால் நம்பவே முடியவில்லை.

அவள் நெற்றியில் பூத்த வியர்வையை, அவனது கர்ச்சீப்பால் ஒற்றி எடுத்தான். அவளுக்கு குடிக்க ஜூஸ் கொண்டுவரச் செய்தான் , ஒவ்வொரு நிமிடமும் அவளைத் தாங்கினான்.

செல்லச் சீண்டல்கள் கூடச் செய்தான். அவள் உள்ளங்கையில் சுரண்டுவது, விரல்களைப் பின்னிக் கொள்வது என அட்டகாசம் செய்தான். நின்று நின்று கால்கள் இரண்டும் ஓய்ந்தே போனது அவளுக்கு.

அதைவிட, அவனது பேச்சிலிருந்தும், சீண்டலில் இருந்தும் எப்பொழுது விடுதலை கிடைக்கும் என ஏங்கிப் போனாள். அவனை நிமிர்ந்து பார்க்கவே வெட்கம் தடுத்தது. அவனது சீண்டலால், கன்னங்கள் சிவப்பதை, அவளால் தடுக்க முடியவில்லை.

ஒரு வழியாக வரவேற்பு முடிந்து, பந்தி பரிமாறும் இடம் வந்து சேர்ந்தார்கள். அங்கும் அவனது அடாவடித் தொடர்ந்தது. தங்கையின் பூரித்த முகமும், கன்னத்து வெட்கச் சிவப்பும் கீதாவின் கண்களில் இருந்து தப்பவில்லை. மனதுக்கு நிம்மதியாக உணர்ந்தாள் அவள்.

மறுநாள் திருமணச் சடங்கில் கூட, அவன் பட்டு வேட்டியிலும், அவள் கூரைப் புடவையிலும் ஜாடிகேற்ற மூடியாக ஜொலிக்கவே செய்தார்கள். அவள் சங்கு கழுத்தில் திருமாங்கல்யத்தை அவன் அணிவிக்க, ‘என்

வாழ்வில் இந்த சந்தோஷம் நிலைக்கவேண்டும் தாயே', என்ற வேண்டுதல் மட்டுமே தர்ஷுவின் மனதில் இருந்தது.

திருமணம் முடிந்து மெட்டி அணிவிக்கும் வேளை, அவன் அந்தச் சடங்கை வேண்டா வெறுப்பாக செய்வதுபோல் செய்தது, அவளுக்குப் புரிந்தது. ஆனால் அதையெல்லாம் ஆராய நேரமில்லை அவர்களுக்கு.

பெற்றோரிடம் ஆசீர்வாதம் வாங்கும் பொழுது, வசுந்தரா, "சீக்கிரமா ஒரு பேரனைப் பெத்துத் தந்துடு", என்று சொல்லி ஆசீர்வதிக்க, "அது என்ன தேவைக்கு", என்று வித்தார்த் வாய்க்குள் முணுமுணுத்தது அட்சரம் பிசகாமல் தர்ஷிணியின் காதில் விழுந்து, அவளைக் கலவரப் படுத்தியது.

அதன் பிறகு நடந்த தம்பதிகளுக்கான விளையாட்டுக்கள் அனைத்திலும், வித்தார்த்தே வெற்றி பெற்றான். தர்ஷிணி சிணுங்கலாகப் பார்த்த பொழுது, "என்னதான் இருந்தாலும் ஆம்பளைக்கு கீழேதானே நீங்க....., ஆம்பளையை ஜெயிக்கணும்னு எல்லாம் நினைக்கக் கூடாது....", அவன் அவள்பக்கம் சாய்ந்து சொல்ல, அடுத்த சுனாமி மனதுக்குள் அடிக்கத் துவங்கியது தர்ஷிணிக்கு.

அதிர்ச்சியாக அவனைப் பார்க்க, அவனோ சாதாரணமாக இருந்தான். அவன் முகத்திலிருந்து எதுவுமே அவளால் உணர முடியவில்லை. மணமகள் வீட்டில்தான் முதலிரவுச் சடங்கு செய்யவேண்டும் என்று சொல்லவே, கொஞ்சம் முரண்டினாலும் பின்னர் சம்மதித்தான் அவன்.

தர்ஷிணிக்கு, ஒரு புறம் கிளர்ச்சியாக இருந்தாலும், ஒரு மனமோ ஏதோ யுத்தத்துக்கு ஒற்றை ஆளாகத் தயாராவதுபோல் தவித்து துடித்தது. கீதாவிடமும் புலம்பித் தள்ளிவிட்டாள். கீதாவும் முடிந்த அளவு பொறுமையாக, அனைத்தையும் அவளுக்குப் புரிய வைத்தாள்.

"தர்ஷும்மா....., இப்படித்தான் நாலு நாளைக்கு முன்னாடி புலம்பின, ஆனால் இப்போ என்ன ஆச்சு? நேத்தும்,

இன்னைக்கும் உன் முகத்தில் இருந்த சந்தோஷத்தைப் பார்த்த பிறகு, எனக்கே, நீ தேவையில்லாமல் பயப்படுறன்னு தோணுதுடா.

“இந்த பயம் எல்லோருக்கும் இருக்குறதுதான். நீயாவது அவரிடம் போனில் பேசி இருக்க. ஆனால் நான்....., உன் அத்தானைக் கல்யாண மேடையில்தான் பார்க்கவே செய்தேன். நாங்க நல்லா இருக்கலையா.... அதே மாதிரி நீயும் நல்லா இருப்ப. தைரியமா போ”, தங்கைக்கு முடிந்த அளவு தைரியம் சொன்னாள்.

கீதா எவ்வளவுதான் ஆறுதல், சமாதானம், தைரியம் கொடுத்தாலும், வித்தார்த்தின் கழுதை குணத்துக்கு, அவரோடு எப்படிக் குடும்பம் நடத்தப் போகிறேன் என்று மலைப்பாகத்தான் இருந்தது அவளுக்கு. வித்தார்த்தைத் தனியாக எதிர்கொள்ளப்போகும் அந்த நொடியை நினைத்தாலே...., தொண்டையில் இருந்த நீரெல்லாம் வற்றிப்போய், நாக்கு வறண்டு, தாகமாய் தவித்தது மனது.

வித்தார்த்தின் இந்த வினோத குணத்தை, சொந்த அக்காவாகவே ஆனாலும் எப்படிச் சொல்லிப் புரிய வைக்கவென்று தெரியவில்லை. அதைவிட, கீதாவே, குழந்தை இல்லை என்ற கவலையில் மாய்ந்து போகிறாள். அவளிடம் இதையும் சொல்லி அவளை சங்கடப்படுத்த அவள் தயாராக இல்லை.

‘சரி என்னதான் நடக்கிறதென்று போய் பார்த்துவிடுவோம் என்று வீராவேசமாக மனம் நினைத்தாலும், அங்கிருந்து அவளது அறைக்குச் செல்ல திரும்பும் வேளை,

“அக்கா நீயும் வாயேன்.....”, என்று கையைப் பிடித்து தர்ஷிணி கெஞ்சிய பொழுது, கீதாவிற்கு அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை.

அவள் பேசத் துவங்கையில், “என்ன...., இன்னுமா அவளை அனுப்பாமல் இருக்க? பொழுதன்னிக்கும், அக்காவும்

தங்கையும் அப்படி என்னதான் பேசுவீங்களோ?”, இருவரிடமும் பொதுவாகச் சாடிவிட்டு,

“முதல்ல, குழந்தை பெத்துக்குற வழியைப் பாரு, நீயும் இவளை மாதிரி ஒத்தை மரமா நின்னுடாதே. பிறகு..... என் வயித்தில் பிறந்த ரெண்டுமே மலடா போய்ட்டுங்குற பட்டம் என் தலையில் விழுந்துடப் போகுது”, சவுக்காய் நாவைச் சுழற்றினார் வசுந்தரா.

இருவரின் மனமுமே காயப்பட்டாலும், நேரமாவதை உணர்ந்து, கீதா தங்கையை அவளது அறைக்குச் செல்லச் சொன்னாள். “பாத்து நடந்துக்கோடா”, கீதாவின் குரல் அவளைத் தொடர்ந்தது.

“உபதேசமெல்லாம் உடன்பிறந்தவளுக்கு மட்டும் கொடுத்தால் போதாது...”, இன்னும் என்ன சொல்லியிருப்பாரோ, கமலேஷ் அங்கே வரவே, அவர் பேச்சு தடை பட்டது.

மணியோ எதையுமே கண்டுக்கொள்ளாமல், வெளியே தன் நண்பர்களே கதியென்று அவர்களோடு இருந்தார். கமலேஷ் கீதாவைப் பார்த்தான், அவள் கண்கள் கலங்கியிருப்பதைப் பார்த்தவன், “கீது... நாம வீட்டுக்குப் போய்டலாமா? நாளன்னைக்கு வேண்ணா வரலாம்”, என்றான்.

அவள் இருந்த மனநிலையில் மறுத்து எதுவும் பேசாமல் அவனுடன் கிளம்பினாள். வசுந்தரா கமலேஷை இருக்க சொல்லிக் கேட்டார். ஆனால் அவன் முடிவாக மறுத்துவிட்டு கிளம்பிவிட்டான். கீதா இருந்திருந்தால், தர்ஷிணிக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்திருக்குமோ?

***

தாகம் - 14.

என் காதல் தீபத்தை

உன் மனவிளக்கில்

ஏற்றவந்தால்.....

எவனடா நீயென்று - எனை

எட்டி உதைப்பதேன்.....

காலையில் அந்த மண்டபமே அல்லோகல்லோலப் பட்டுக் கொண்டு இருந்தது. தொழிற்சாலையில் இருந்து வந்த தொழிலாளர்கள், அவர்களது குடும்பங்களின் வரவால், மண்டபமே அமிளி துமிளியானது. தொழிலாளர்களுக்குச் சாப்பிடத் தனியிடமும், விஐபிக்களுக்குத் தனியிடமும் ஒதுக்கப் பட்டிருந்தது. ஆனால் வந்த அனைவருக்குமே ஒரே விதமான விருந்து தான் பரிமாறப் பட்டது. அதில் எந்தவிதமான ஏற்றத் தாழ்வுகளும் காட்டப்படவில்லை.

எவ்வளவு ஏற்பாடுகள் செய்திருந்தாலும் கூட்டத்தை சமாளிப்பது கொஞ்சம் கடினமான செயலாகத்தான் இருந்தது. குமார் அங்கும் இங்கும் ஓடி, அனைத்தையும் சரியான விதத்தில் சமாளித்துக் கொண்டிருந்தான்.

திருமண விசேஷம் அனைத்தும் சரியான ஆட்களிடம் ஒப்படைக்கப் பட்டிருந்ததால், அனைத்தும் எந்தவிதக் குழப்பமும் இல்லாமல் சென்று கொண்டிருந்தது. நந்தன், தன் தொழில்முறை நண்பர்களை வரவேற்பதும், அவர்களுக்குச் சரியான விதத்தில் மரியாதை கொடுத்து அழைத்துச் செல்ல, ஆட்களை அனுப்புவதுமாக அவனது காலை வேளை, மிகுந்த பரபரப்பாகவே சென்று கொண்டிருந்தது.

வருபவர்களைத் தவிர்க்கவும் முடியாமல், தன் வேலைகளையும் கொஞ்சம் நடுவில் பார்த்து, கிளம்பிக்

கொண்டும், இறுக்கமான மனநிலையிலேயே அவன் இருந்தான். காலையில் சாப்பிடக் கூட அவனுக்கு நேரமில்லை.

மண்டபத்துக்குள்ளும் பெரிய சர்ச்சையும், சலசலப்பும் நடந்துகொண்டிருந்தது. அது வேறு யாரைப் பற்றியும் இல்லை, மணப்பெண் ப்ரியாவைப் பற்றித்தான். அவளை யாருமே நெருங்க முடியாதவாறு கடினமாக இருக்கின்றாள் என்றும்,

ஒன்றுமே இல்லாத வீட்டில் இருந்து வருபவளுக்கு, இவ்வளவு அகங்காரம் கூடாது என்றும், அழகு, ஒரு பெண்ணுக்கு இவ்வளவு ஆணவத்தைக் கொடுக்குமா என்றும், அங்கே பெரிய பட்டி மண்டபமே நடந்து கொண்டிருந்தது.

அதற்கு முக்கியக் காரணம்....., காலையில் ஐந்து மணிக்கு, அவளை எழுப்பி அலங்காரம் செய்ய உதவி செய்யப்போன, சொந்தக்காரப் பெண்களை, அவள் அறைக்குள்ளேயே அனுமதிக்கவில்லை. வசந்தா வந்து கேட்ட பிறகுதான்..., ரம்யாவை மட்டும் அனுமதித்தாள்.

நந்தனின் அத்தை, சித்தி, பெரியம்மா போன்றவர்கள் அவளை பார்க்கச் சென்ற பொழுதும், முகத்தைத் திருப்பிக்கொண்டு அமர்ந்து கொண்டாள். இது எப்படியோ வெளியே கசிந்து, வந்திருந்தவர்களின் வெறும் வாய்க்கு அவல் ஆகியது.

நந்தனின் சொந்தங்களுக்கு, ஏற்கனவே ஒன்றும் இல்லாத வீட்டில் இருந்து பெண் எடுப்பது அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ப்ரியாவின் அழகு மட்டுமே அவர்களது வாயைக் கட்டி வைத்திருந்தது. ஆனால் இறுதியாக, அவளது அந்த அழகே விமர்சனத்துக்குரிய விஷயமாகியது.

தலைக்கனமானவள், அழகால் அகங்காரமானவள், பெரியவர்களை மதிக்கத் தெரியாதவள், இப்படியாக,

அவள் நந்தனின் வீட்டில் அடியெடுத்து வைக்கும் முன்பே...., வீட்டுக்கு விளங்காத பெண் என்ற பெயரை வாங்கிவிட்டாள்.

இவையெல்லாம் அறிந்து, வசந்தா நொந்தே போனார். நந்தனிடம் சொல்லலாம் என்றால்....., அவன் கனவுலகில் இருந்து இறங்கி வரவே மாட்டேன் என்று, அடம் பிடித்து தொங்கிக் கொண்டிருந்தான். அதைவிட திருமண நாளும் அதுவுமாக, அவன் மனதை வருத்தப்பட வைக்க அவர் விரும்பவில்லை.

நந்தனின் காதை இந்த விஷயம் எட்டியபொழுது, இருக்கும் எரிச்சலில் அவனுக்குக் கோபமாக எதையாவது கத்தவேண்டும்போல் இருந்தது. ஆனாலும் சொல்பவர்கள், தன் சொந்தம் ஆகையால் கொஞ்சம் அடக்கிக் கொண்டு பொறுமையாக பதில் சொன்னான்.

“அம்மா..... நாம வசதியானவங்கன்னு, பயத்தில் அவள் விலகி இருக்கலாம். நம்ம வீட்டுக்கு வந்து, நாம அவகிட்டே பழகுற முறையைப் பார்த்து, அவளோட தயக்கங்கள் எல்லாத்தையும் விட்டுட்டு நம்மளோட சகஜமா பேசுவா”, என்று சொல்லி அவர்களின் வாயை அடைத்துவிட்டான்.

அதைவிட, அவன் இருந்த பரபரப்பில் அவர்கள் ப்ரியாவைப் பற்றி எதையோ சொல்கிறார்கள் என்பதுவரை கேட்டானே தவிர, அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை சரியாக கிரகிக்கவில்லை.

“என்ன வசந்தா....., எல்லா பயலுங்களும் கல்யாணம் முடிஞ்ச பிறகுதான் பொண்டாட்டிக்கு கூஜா தூக்குவானுங்க, இங்கே இப்போவே தூக்குறான் போல? அப்போ இன்னும் கொஞ்ச நாளில் உன் நிலைமை.....”, வசந்தாவின் வயிற்றில் புளியைக் கரைத்தார்கள் சிலர்.

வசந்தாவுக்குமே நந்தனின் இந்தப் பேச்சை ஒத்துக்கொள்ள முடியவில்லை. இந்த இரண்டு மாதங்களில் தன்னைப் பற்றியும், ரம்யா பற்றியும்

அவளுக்குப் புரிந்துகொள்ள முடியவில்லையா? தாங்கள் நூறு வார்த்தை பேசினால்..., இரண்டு எழுத்தில் கூட பதில் சொல்லாமல் இருக்கும் அவளை எப்படி நம்ப.

பழகவேண்டும் என்று ஒருவர் மட்டும் முயன்றால் போதாதே, ஒருவர் ஒரு படி எடுத்துவைத்தால், அடுத்த படியை அவள் எடுக்காமல் இருந்தால் என்னதான் செய்ய முடியும்...., மணமேடைவரை வந்த பிறகு இவையெல்லாம் யோசித்து என்ன செய்ய?

அவர் விதியின் படி நடக்கட்டும் என்று விட்டுவிட்டார். ஆனாலும் தெய்வங்களைத் துணைக்கழைபதை மட்டும் மனம் நிறுத்தவில்லை. நந்தனையும், ப்ரியாவின் இந்த செய்கைகள் கொஞ்சம் திகைக்கவே செய்தது. ஆனால் எப்படியும் முதலில் அவளைச் சொந்தமாக்க வேண்டும், என்ற எண்ணமே மேலோங்கி இருந்ததால், அந்த உறுத்தலை தூர வைத்தான்.

திருமணம் முடிந்த பிறகு அவளுக்குத் தங்கள் சொந்தங்களைப் பற்றியும், தன் தாயைப் பற்றியும், தன் நேசத்தையும், காதலையும் அவளுக்குச் சொல்லிப் புரியவைக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

ஒரு வழியாக, மணமேடையில் அவன் அமர்ந்தான். நொடிக்கொருதரம் அவன் பார்வை மணப்பெண் அறையையே தொட்டு மீண்டது. அது மற்றவருக்குத் தெரியாமல் பார்த்துக் கொண்டான். மேடையில் அவன் கம்பீரமாகவே அமர்ந்திருந்தான்.

ஐயர், “பொண்ணை அழைச்சுட்டு வாங்க”, என்று சொன்னபொழுது, சட்டென அவள் அறையைத் திரும்பிப் பார்க்கத் தோன்றிய உணர்வை அடக்கினான். ஏனென்றால் அனைவரின் பார்வையும் அவன்மீது இருக்கும் என்பது அவனுக்குத் தெரியும்.

அரக்கு வண்ண காஞ்சிப் பட்டில் அம்மன் சிலையாகவே நடந்து வந்தாள் ப்ரியா. அவளது பால் வெண்மை

நிறத்துக்கு, அந்த வண்ணப் பட்டு ஆளையே அசரடித்தது. பதுமைபோல் அவள் வந்த அழகில், மண்டபமே ஒரு நிமிடம் மணப்பெண்ணின் அழகில் லயித்தது.

ஐயர் கூட மந்திரம் சொல்லுவதை நிறுத்தி, எங்கே அம்பாள்தான் இறங்கி வந்துவிட்டாள் என்று சேவித்து விடுவோமோ என்று தடுமாறினார். மற்றவர்களின் நிலையே இப்படியென்றால், நந்தனின் நிலை எப்படி இருந்திருக்கும்.

அவள் வந்து தன் பக்கத்தில் அமரவே, ஓரவிழிப் பார்வையாகப் பார்த்தவன், பார்த்த கண்களை விலக்க முடியாமல், கிறு கிறுத்துப்போய் அமர்ந்திருந்தான். உச்ச மின்சாரம் அவன் நாடி நரம்புகளில் பாய்ந்து சென்றது.

இவ்வளவு அழகும் என் ஒருவனுக்கேவா....., நினைக்கவே கள்வெறி கொண்டது அவனுக்கு. என் மனைவியைப் பார்த்தீர்களா...? மனதுக்குள் அப்படி ஒரு ஆனந்த கர்வம், அடக்கவே முடியவில்லை அவனால்.

அவனைச் சுற்றி இருந்த சொந்தங்கள், “அம்மாடியோ எம்புட்டு அழகு”, “இவளுக்கு இம்புட்டு அழகு இருக்கப் போய்த்தான், அவளுக்கு அம்புட்டு தலைக்கனம்”, நந்தனுக்கு இவ கொஞ்சம் அதிகம்தான்”, “இவ இப்படி செதுக்கிவச்ச சிலையாட்டம் இருக்கப் போய்த்தான், நம்ம நந்து தலகால் புரியாம அலையிறான்”, “அட நந்து தலசுத்தி திரியிறத்தில் தப்பே இல்லை”, வியப்பும், ஆச்சரியமும், சில இள வட்டங்களின் வயிற்றெரிச்சலும், பெரியவர்களின் ஆதங்கமும், நொடிப்பும், கேலியுமாக, கலகலத்தது மண்டபம்.

நந்தனுக்கு இப்பொழுது ஒரே சந்தேகம், அவளுக்குத் தான் சரியான பொருத்தமான ஆளாக இருக்கிறோமா என்று. தாயைத் தேடி கண்களைச் சுழலவிட்டான். அவரோ மேடைக்கு எதிரில் முன் வரிசையில் அமர்ந்திருந்தார்.

நந்தனின் பார்வையில் இருந்த கேள்வியையும், ஏக்கத்தையும், சந்தேகத்தையும் புரிந்தவற்போல், இருந்த இடத்தில் இருந்தே நெட்டி முறித்தார் அவர். தாயின் செய்கையில் சிரித்தான் அவன்.

“அண்ணா உங்களுக்கு ஏத்த ஜோடி....., பொருத்தம் கண்ணையே பறிக்குது”, ரம்யா நந்தனின் காதில் சொல்லவே, இன்னும் நிமிர்ந்து அமர்ந்தான் அவன். அருகில் அமர்ந்திருந்த ப்ரியாவை காதல் பொங்கப் பார்த்தான்.

அவன் பார்வையில் இருந்த வேகம் தாங்காமல், ஒரு நொடி அவன் கண்களைச் சந்தித்தவள், அதில் தெரிந்த பெருமிதம், கர்வம், ஆனந்தம் கலந்த, கரைகாணாத காதலையும் சேர்த்து கண்டவள், நொடியில் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

சிலிர்த்து அடங்கவேண்டிய அவள் தேகமோ, ‘என் பிரபு இருக்கவேண்டிய இடத்தில்.... நீயா. அவன் பார்க்கவேண்டிய பார்வையை, நீயா பாக்கிறாய், என்று வெந்து தணிந்தது மனம்.

ஐயர் ஓதிய மந்திரங்களோ, சுற்றி இருந்தவர்களின் பேச்சோ, பார்வையோ, நந்தனின் காதலோ, எதுவுமே அவள் மனதைத் தொடவில்லை. ‘பிரபு, பிரபு’ என்றே ஜெபம் செய்தது அது.

“கெட்டிமேளம், கெட்டிமேளம்.....”, ஐயரின் குரலில் கலைந்தவள், நந்தன் தன் கழுத்தில் திருமாங்கல்யத்தை அணிவிக்கும்போது, “நீ நல்லாவே இருக்க மாட்டாடா. என் காதலைக் கலைத்த உன்னை, நிம்மதியாக வாழவே விடமாட்டேன்”, என்று சபிக்கவும் வைத்ததுதான் உச்சக் கொடுமை.

நந்தனோ, “நாம நூறு வருஷம் உன் மனசுப் படியே வாழணும்”, என்று வேண்ட வைத்தது....., விதியின் சதியில்லாமல் வேறு என்னவாக இருக்கும்.

அதன் பிறகு நடந்த எந்த நிகழ்வுகளிலும் ஈடுபாடே இல்லாமல் கலந்துகொண்டாள். திருமண விளையாட்டுக்களில் கூட ஈடுபடவில்லை அவள். விளையாட்டுக்களில் அவளை வெற்றிபெற வைக்க அவன் விட்டுக்கொடுக்க, அவனது முயற்சிகள் அனைத்தும் வெற்றிகரமாகத் தோல்வியையே தழுவியது.

குழப்பமான மனநிலையில் அவள் முகத்தை ஆராய, அவளோ உணர்வுகளைத் தொலைத்த முகத்துடன் இருந்ததால், அவள் முகத்தில் இருந்து, அவனால் எதையுமே அறிந்துகொள்ள முடியவில்லை.

“என்னம்மா தலை வலிக்குதா? தூக்கம் வருதா? கொஞ்சம் பொறுத்துக்கோடா இப்போ முடிஞ்சுடும் இதெல்லாம்”, அவனது கரிசனைகள் அனைத்தும், அவளைத் தீண்டவே இல்லை. ஒரு கட்டத்துக்குமேல் பொறுக்க முடியாமல், “வீட்டுக்குப் போகலாம்....”, என்று அவள் சொல்லிவிட, அதை வேத வாக்காக செயல்படுத்தினான் அவன்.

அவனிடம் அவள் பேசிய முதல் வார்த்தயே அது என்பதால், அவள் பேசிவிட்டதில் பரவசமானான். முடிந்த அளவு வேகமாகச் செயல்பட்டு, அவளை அவன் வீட்டிற்கே அழைத்து வந்துவிட்டான்.

குமார் வீட்டில் பெரியவர்கள் யாரும் இல்லாததால் சாந்தி முஹூர்த்தச் சடங்கை அவன் வீட்டிலேயே வைப்பது என்று முடிவு செய்தார்கள் அவர்கள். அவனது திருமண வரவேற்பும் ஒரு மாதம் கழித்துதான் வைப்பதாக இருந்தது.

வீட்டிற்கு வந்து விளக்கேற்றி, பால் பழம் உண்டு முடித்த பிறகு, “நந்து, ப்ரியாவை உன் ரூமுக்குப் பக்கத்து ரூமில் ரெஸ்ட் எடுக்கச் சொல்லு. அவ காலையிலேயே எழுந்தது, சோர்வா தெரியிறா”, வசந்தா சொல்லவே, அவளை அந்த அறையில் விடச் சென்றான்.

அவன் உறவினர்கள் அனைவரும் கீழே இருந்ததால், மாடியில் யாரும் இருக்கவில்லை, அது மட்டும் இல்லாமல்

வரவேற்பும் தள்ளி வைத்திருந்ததால், நெருங்கிய உறவினர்கள் தவிர மற்றவர்கள் மண்டபத்தில் இருந்தே கிளம்பி விட்டார்கள்.

ப்ரியாவை அந்த அறைக்குக் கூட்டிச் சென்றவன், “ப்ரியா நீ தூங்கி ரெஸ்ட் எடு, அப்போதான் நைட் பிரெஷ்ஷா இருக்க முடியும். எனக்கு இப்போவே உன்னை நம்ம ரூமுக்கு கூட்டிப் போகத்தான் ஆசை. ஆனால், ஏற்கனவே ஜாதகம் பார்க்கலைன்னு அம்மா வருத்தத்தில் இருக்காங்க.

அவங்களை மேலும் கஷ்டப் படுத்த வேண்டாம்னுதான் எதுவுமே சொல்லாமல் வந்துட்டேன். உனக்கு ஒண்ணும் இதில் வருத்தம் இல்லையே. அங்கே வந்தாலும், உன்னைத் தூங்க விடுவேனோ என்னவோ”, முதல் முறையாக, சற்று உரிமையாகப் பேசினான் அவன். காதலும், தாபமும், பாதி எதிர்பார்ப்பும், மீதி ஏக்கமுமாகக் கலந்து ஒலித்தது அவன் குரல்.

அவளோ, நந்தன் என்று ஒருவன் அங்கு நின்று, தன்னிடம்தான் பேசுகிறான் என்ற உணர்வே இல்லாமல், அப்படி ஒருவன் அந்த அறையிலேயே இல்லை என்பதுபோல், ஜன்னல் அருகே சென்று நின்று வெளியே வேடிக்கைப் பார்த்தாள்.

அவள் பதில் சொல்லாமல் ஜன்னல் வழியாக வேடிக்கை பார்க்கவே, அவள் அருகில், கொஞ்சம் நெருங்கி நின்றான். அவள் தலையில் சூடியிருந்த மல்லிகையின் மணம், அவள் அழகு, அவள் நெருக்கம், அவனை இம்சித்தது.

அவளை அணைத்து ஆள, அவன் ஆண்மை தவித்தது. அவளை இன்னும் நெருங்கி, அவள் கூந்தலில் சூடியிருந்த மல்லிகையில் வாசம் பிடித்தான். இமைகளை மூடி, தன் கோபத்தை அடக்கியவாறு அசையாமல் நின்றாள் அவள்.

தன் கரத்தை எடுத்து, அவள் இடையை வளைக்க எண்ணி, கையை உயர்த்தினான். அவன் அணைத்தால் அவனைத் தள்ளிவிட்டு, உன்னை எனக்கு பிடிக்கலடா....., நீ என்னைக்

கனவில் கூடத் தொட முடியாது என்று கத்தத் தயாரானாள் அவள்.

ஆனால், அவன் அவள் இடையை வளைக்கவே இல்லை. மாறாக ஒரு பெருமூச்சுடன் விலகினான். அப்பொழுதும் அவள் திரும்பிப் பார்க்கவில்லை.

“ப்ரியா....., உன்னை அணைச்சுட்டு, என்னால் விலகிப் போகவே முடியாது. ஒரு விஷயம் நமக்குத் தெரியாமல் இருக்கும் வரைக்கும்தான் நம்மளால் கட்டுப்பாடா இருக்க முடியும். உன்னை இப்போ தொட்டுட்டேன்னா என்னால் விலகவே முடியாது. அதனால் இப்போ நான் இப்படியே வெளியே போய்டுறேன்.....”, அவன் தன்னைக் கட்டுப்படுத்தியவாறு அவளை அறையில் விட்டுவிட்டு வெளியேறினான்.

இதுவரை அவனை தன்னைத் தொட விடாமல் இம்சிக்கவேண்டும் என்று நினைத்தவள், அவன் பேச்சைக் கேட்ட பிறகு, ‘உனக்கு ஒரு பொண்ணோட சுகத்தை முழுசா தந்த பிறகு...., அதைக் கிடைக்க விடாமல் செய்தால் தாண்டா அது உனக்கு சரியான தண்டனையா இருக்கும்.

என்னை நீ முழுசா அனுபவித்த பிறகு, அடுத்த நாள்முதல், என்னைத் தொட முடியாமல் நீ ஏங்கிச் சாகணும்டா. என் காதலை நான் மனசுக்குள்ளே வச்சு எப்படிப் புழுங்குறேனோ, அதே மாதிரி நீயும் அனுபவிக்கணும்டா. அதை நான் பாத்து ரசிக்கணும், அப்போதான் என் மனசு ஆறும்.....’, வேட்டை நாயின் வெறி அவள் கண்களில் பளிச்சிட்டது.

அவன் அறையை விட்டு வெளியேறியதும், வேகமாகக் கதவைத் தாளிட்டவள், வேகமாக பாத்ரூம் சென்று, விரலை வாய்க்குள் விட்டு, வேண்டுமென்றே வாந்தி எடுத்தாள்.

அப்பொழுது குடித்த பாலும், பழமும் வெளியேறியது. அதையே வெறிக்கப் பார்த்தவள், ‘அவன் சாப்பிட்ட எச்சில் கூட என் வயித்துக்குள் இருக்கக் கூடாது’, என்று

எண்ணிக்கொண்டு, வெளியேறினாள். வெளியே துப்ப முடியாத எச்சில்களும் உண்டு என்பதை அவள் உணரவே இல்லை. உணரும் காலம் வராமலா போகும்....., விதியின் கையில் அனைத்தும்.

அவளது பெண்மையின் குணங்கள் அனைத்துமே வெளியேறி, ஒரு சுயநலம் பிடித்த மிருகமாகவே மாறி விட்டிருந்தாள் அவள். அவனைப் பழிவாங்க, தன் பெண்மையையே பகடைக்காயாக ஆக்கும் அளவு துணிந்து விட்டாள். இது எவ்வளவு பெரிய ஈனச் செயலென்று அவளுக்குத் தெரியவே இல்லை.

அப்படியே தெரிந்தாலும், அதை ஒத்துக் கொள்ளும் நிலையிலும் அவள் இல்லை. அவளது எண்ணமெல்லாம் ஒன்றுதான், நந்தனுக்கு வலிக்கவேண்டும், அவன் அழ வேண்டும், அவனை அழ வைக்க வேண்டும். அவனது நிம்மதி பறிபோகவேண்டும் என்பதாக மட்டுமே இருந்தது.

அதில் அடங்கியிருப்பது, தன்னோட வாழ்வும், எதிர்காலமும்தான் என்பதை, அவள் அறியவே இல்லை. தனக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை, தன் விரோதிக்கு இரண்டு கண்ணும் போகவேண்டும் என்ற முடிவில் இருந்தாள் அவள். யோசனையோடு உறங்கியும் போனாள்.

மாலையில், ரம்யா வந்து அவளை எழுப்பி, 'அலங்காரம் செய்ய வேண்டும், நான் உதவி செய்யவா?' என்று கேட்டபொழுது, சந்தோசமாகவே சம்மதித்தாள். ரம்யாவுக்கே மயக்கம் வராத குறைதான். அதை வெளிக்காட்டாமல், தன் அண்ணிக்கு உதவினாள். "நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க அண்ணி. என் அண்ணாவுக்கு ஏற்ற ஜோடிதான். அவனோட கம்பீரத்துக்கு, நீங்கதான் சரியா இருப்பீங்க", ப்ரியா கொஞ்சம் சிரித்துப் பேசியதில், அவளோடு தோழமையை வளர்க்க முயன்றாள்.

அவள் என்னவோ நல்ல விதமாகத்தான் சொன்னாள். ஆனால் கேட்டவளது மனதில்தான் சாத்தான் குடி கொண்டிருந்ததே...., ‘ஓஹோ.... அப்படி ஒண்ணு இருக்கோ, அவனோட கம்பீரம் எவ்வளவு நேரத்துக்குன்னு நானும் பாக்குறேன். முதல் வேலை, அதைக் குலைப்பதுதான்’, மனதுக்குள் முடிவெடுத்தாள் ப்ரியா.

***

தாகம் - 15.

உலகமெல்லாம் எனை வெறுக்கட்டும்

எதையும் நான் வென்றுவிடுவேன்

காதலுக்கு மட்டும்தான்

இந்த வரிகள் பொருந்துமா?

எனக்குப் பொருந்துகிறது

நட்பிலும்.....

தன்னோடு வீட்டிற்கு வந்த ஹேமாவை, வீட்டுக்குள் அழைத்து வந்தாள் திவ்யா. அங்கிருந்த ஒரு இருக்கையைக் காட்டி, “உக்காரு ஹேமா, நான் இதோ வாறேன்”, என்று சொல்லிவிட்டு மறுபடியும் வெளியே சென்றாள்.

இருக்கையில் அமர்ந்த ஹேமாவின் பார்வை, அந்த வீட்டை அலசியது. மொத்தமாக அங்கே இருந்தது ஒரே அறை. என்ன.... கொஞ்சம் பெரிய அறையாக இருந்தது. இடது ஓரத்தில் கேஸ் அடுப்பும், நான்கைந்து பாத்திரங்களும் இருந்தது. வலது பக்கம் திரும்பிப் பார்க்க, ஒரு கதவு தெரிந்தது. அது பாத்ரூம் என்பது தெரிந்தது.

மூலையில் ஒரு கட்டில், அதன் அருகில் ஒரு டேபிள், ஒரு சேர். ஒரு இரும்பு பீரோ. மொத்தமே அவ்வளவுதான் இருந்தது அங்கே. கண்ணனுக்காக வாங்கிய ஒரு குட்டி சேர், அவனது இரண்டு மூன்று விளையாட்டுப் பொருட்கள்.

அந்த வீட்டில், பெயருக்கு என்று ஒரே ஒரு ஜன்னல் இருந்தது. அதுவும் இறுக அடைத்து வைக்கப் பட்டிருந்தது. என்னவோ, வேற்று கிரகத்துக்கே வந்து விட்டதாக உணர்ந்தாள் ஹேமா.

‘இங்கே, இன்னும் கொஞ்ச நேரம் இருந்தால், எனக்கே மூளை குழம்பிடும் போல இருக்கே. திவ்யா எப்படி இவ்வளவு தெளிவா, இவ்வளவு நாளும் இருக்கா?’, இந்தக் கேள்விதான் அவள் நெஞ்சைக் குடைந்தது.

வீட்டிலோ, அவள் தோற்றத்திலோ, கண்ணனின் உடைகளிலோ, வறுமை தெரியவே இல்லை. மாறாக, அதையும் தாண்டி எதுவோ ஒன்று அவளைத் தாக்கியது.

உயிர்வாழ இது இருந்தால் போதும். ஆடம்பரத்துக்கு இல்லை, அவசியத்துக்கு இல்லை, அத்தியாவசியத்துக்குத் தேவையான பொருட்கள் மட்டுமே அங்கே இருந்தன.

ஒரு குளிர்சாதனப் பெட்டி கூட இருக்கவில்லை. விட்டத்தில் தொங்கிய ஒற்றை பேன் மட்டுமே ஆடம்பரப் பொருட்களின் அடையாளமாக அங்கே தொங்கிக் கொண்டிருந்தது.

‘திவ்யா ஏன் இப்படி.....? எதுக்கு இப்படி ஒரு வன வாசம்..? இந்த வயதில் நீ இருக்க வேண்டிய விதமா இது?’, மனம் ஊமையாக அழுதது.

சுவற்றில் ஏதாவது புகைப்படம் இருக்கிறதா என்று கண்கள் துழாவ, மருந்துக்குக் கூட ஒரு தெய்வத்தின் படம் கூட இருக்கவில்லை. பேசும் சுட்டிக் குழந்தையாக இருந்தால், கண்ணனையாவது கேட்கலாம். அவனோ, ஹேமா என்ற ஒருத்தி அங்கே இருப்பதையே கண்டுக் கொள்ளாமல், தலையணையில் முகம் புதைத்திருந்தான்.

அவள் யோசனையைக் கலைக்கவென்றே வந்தாள் திவ்யா.அவள் கையில் ஒரு பால் பாக்கெட் இருந்தது. “சாரி ஹேமா, உன்னைத் தனியா உக்கார வச்சுட்டு போயிட்டேன்”, அவளிடம் மன்னிப்பை வேண்டினாள்.

கண்ணனோ அசையாமல், கட்டிலிலேயே சோர்ந்து படுத்து விட்டிருந்தான். ஹேமா சென்று அவனைத் தொட்டுப் பார்க்க, சூடு குறைவாகத்தான் இருப்பதை உணர்ந்தாள். பின்னர் அவனை விட்டு, திவ்யாவின் அருகில் சென்று

நின்று கொண்டாள். மனதின் ஓரத்தில் கண்ணனின் நடவடிக்கைகள் ஹேமாவுக்கு மிகுந்த கவலையைக் கொடுத்தது.

பள்ளியில், தாயை விட்டு வருவதால்தான் இவ்வளவு அமைதியாக இருக்கிறான் என்று அவள் நினைத்திருக்க, வீட்டில் கூட, தனித் தீவாக இருக்கும் அவன்மேல் இரக்கம் சுரந்தது. அவனை இப்படியே விட்டால் என்னவாகும்....., என்ற கவலை அவளை ஆக்கிரமிக்க, எதையாவது செய்தே ஆகவேண்டும் என்ற தீர்மானத்தை மனதில் எடுத்தாள்.

“திவ்யா...., இப்போ பால் வாங்கிட்டு வந்து, எனக்கு காபி போட்டுத் தான்னு நான் கேட்டேனா? எதுக்கு இந்தத் தேவையிலாத வேலை உனக்கு”, அவளைக் கடிந்து கொண்டாள்.

“என்ன ஹேமா இப்படிச் சொல்லிட்ட... காலையில் இருந்து சாயங்காலம் வரை என்னோடவே இருந்து, எனக்கு எவ்வளவு உதவி செஞ்சு இருக்க, ஹாஸ்பிட்டலோட போகாமால், வீடு வரைக்கும் வந்த உனக்கு, ஒரு டம்பளர் காபி கூடக் கொடுக்காமல் எப்படி அனுப்ப முடியும்?”, அவளிடம் அமைதியாகச் சொல்லிவிட்டு, அவளது வேலையைத் தொடர்ந்தாள்.

“திவ்யா...., அதுக்குன்னு, நீ அலைஞ்சு பால் வாங்கிட்டு வரணுமா? ஜஸ்ட் தண்ணி தந்திருக்கலாமே. அதைவிட, நடப்பில் இந்த பார்மாலிட்டி எல்லாம் வேலைக்கே ஆகாது. அப்போ என் வீட்டுக்கு வந்தால் நான் காபி தர மறந்துட்டேன்னா நீ என்ன நினைப்ப? ஆத்தாடியோ...

“ஏற்கனவே எங்க அம்மா என்னை விளக்கெண்ணை, இருபத்தாறு வயசாகுது, இன்னும் ஒரு பொறுப்பே வரலன்னு திட்டுவாங்க. இந்தச் சின்னப் பசங்களோட சேர்ந்து உனக்கு மூளையும் வளராமலே போச்சோன்னு எனக்குச் சந்தேகமா இருக்குன்னு சொல்லுவாங்க.

“இப்போ நீ சொன்ன பிறகுதான் தெரியுது....., இந்த விருந்தோம்பல், விருந்தோம்பல்னு ஒரு விஷயம் சொல்லுவாங்களே, அது இதுதானா? பாயிண்ட் நோட்டட்.....”, திவ்யா நன்றிப் பெருக்கோடு சொன்ன விஷயத்தைக் கண்டுகொள்ளாமல், அவளது இயல்பான கேலியிலேயே, அவளுக்கு பதில் கொடுத்தாள்.

திவ்யாவோ ஹேமா சொன்ன கேலிகள் எதையுமே கவனிக்காமல், அவளது இருபத்தி ஆறு வயது என்பதிலேயே வட்டமிட்டது. திகைப்பாக அவளைப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

திவ்யா தன்னை விழி விரித்துப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்ட ஹேமா, “திவ்யா....., நீ இப்படி வியக்கற அளவுக்கு நான் என்ன சொன்னேன்? என்னமோ எட்டாவது உலக அதிசயத்தைப் பாக்குறாப்புல பாக்குற?”, அவள் கண் முன்பு விரல் சொடுக்கினாள்.

ஹேமா கண்களை உருட்டி, கையை ஆட்டி, வடிவேல் பாணியில் கேட்ட விதத்தில் சிரித்தே விட்டாள் திவ்யா. அவள் சிரிப்பதையே ஆசையாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஹேமா.

“ஹேமா நான் ஒண்ணு கேக்கவா.....?”, தயக்கமாக இழுத்தாள்.

“திவ்யா.... ஒண்ணு கேக்குறதுக்கு எல்லாம் எதுக்கு இவ்வளவு தயக்கம். தாராளமாக் கேளு”, பட்டெனச் சொன்னாள்.

“ஹேய் வாயாடி, சீரியசாவே இருக்க மாட்டியா...?”, திவ்யாவும் அவளை அறியாமலே அவளோடு இணைந்தாள்.

ஹேமா மனதுக்குள் சிரித்துக் கொண்டாள். ‘உன்னை மனம் விட்டுப் பேச வைக்க, நான் ஓட்டவாயா ஆக வேண்டி

இருக்கு, என்ன செய்ய?', மனதில் எண்ணியவள், வெளியே பெருமூச்சு விட்டாள்.

"எதுக்கு இவ்வளவு பெரிய மூச்சு.....", திவ்யா திகைப்பாய் கேட்டாள்.

"சீரியஸா இருந்தால் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்காது? அதான் இது", தோளைக் குலுக்கி அவள் சொல்ல, திவ்யா போலிக் கோபத்தோடு அவளை முறைத்தாள்.

"அம்மா தாயே இவ்வளவு நேரம் மகாலஷ்மியா இருந்த, இப்போ எதுக்கு இப்படிக் காளி அவதாரம் எடுக்குற? உன் பார்வையின் அனல், இங்கே அடிக்குதுல்ல", திவ்யாவின் பார்வையையும், கோபத்தையும் கூட கேலி செய்தாள்.

"ஹேமா, நீ என்கிட்டே நல்லா உதை வாங்கப் போற, அம்மாடியோ என்ன இது? இவ்வளவு பேசுற? நீ பேசியதில் உனக்கு தாகம் எடுத்திருக்கும், இந்தா இந்தக் காப்பியைக் குடி", காப்பியை அவள் கையில் திணித்தாள்.

"உன் காதை பஞ்சர் ஆக்கினது போதும்னு, என் வாயில் காப்பியை அடைச்சு, என் பேச்சை நிறுத்தப் பாக்குறியா? முடியுமா உன்னால், விடுவேனா நான்?", வில்லன் சிரிப்பு சிரித்தவாறு காப்பியை வாங்கினாள்.

இதுக்கும் மேல என்னால் முடியாது சாமி, என்பதுபோல் அமைதியாகிவிட்டாள் திவ்யா. அதைவிட, தான் ரொம்பவே அதிகமாக பேசிவிட்டது அவளுக்குப் புரிந்தது.

திவ்யா சட்டென அவள் கூட்டுக்குள் ஒடுங்கி விடவே, ஹேமாவும் கொஞ்சம் விட்டுப் பிடித்தாள். ஒரே நாளில் அவளை மாற்ற முடியாதே. ஆனாலும், இப்படி ஒரு தனிமைத் தீவில் தன் தோழியை விட்டுச் செல்ல அவள் தயாராக இல்லை.

'எதையாவது செய். எதையாவது யோசி', என்று அவளது மூளையை தட்டி விட்டுக் கொண்டிருந்தாள்.

கண்ணனுக்கும் கொஞ்சம் பால் கலந்து, அவனை மடியில் அமர வைத்துப் புகட்டினாள். எவ்வளவு மெதுவாகக் குடித்தாலும், ஒரு கப் காப்பியை எவ்வளவு நேரம்தான் குடிக்க முடியும். ஹேமா கிளம்ப வேண்டிய நேரமும் வந்து விட்டது.

வீட்டிற்குச் செல்வதைத் தவிர்க்கவும் முடியாது. தாயும் தேடுவார், என்ன செய்ய? அப்பொழுதுதான் அவளுக்கு அந்த யோசனை வந்தது.

“திவ்யா, நாளைக்கு நீ ஸ்கூல் போகணுமா என்ன...?”, திடீரெனக் கேட்டாள்.

“கண்டிப்பா போகணும். ஏற்கனவே நான் இந்த ஸ்கூல்ல லேட்டா சேர்ந்தேன், இன்னைக்கும் கூட லீவ் சொல்லவே இல்லை. இதில் நாளைக்கும்னா....., கஷ்டம். கண்டிப்பா போகணும். அதுக்கு முன்னாடி கண்ணனுக்கு சரியாயிட்டா பரவாயில்லைன்னு இருக்கு”, கண்ணனின் தலையை பாசமாக வருடியவாறு சொன்னாள்.

“எப்படிப் போவ...?”.

“ஏன்... வழக்கம்போல் வண்டியில்தான்...., ஓ..., காலையில் வண்டியை ஸ்கூல்லயே விட்டுட்டேன் இல்ல. இப்போவே எடுத்தால்தான் நாளைக்குக் கொஞ்சம் ஈசியா இருக்கும். கொஞ்சம் வெயிட் பண்ணுறியா? நானும் குளிச்சுட்டு உன்னோடவே வந்துடுறேன். உனக்கு ஒண்ணும் கஷ்டம் இல்லையே?”, எங்கே அவளுக்கு நேரமாகுமோ, மறுப்பாளோ என்ற தயக்கம் இருந்தது அவள் குரலில்.

“திவ்யா, நானே அதனால்தான் உன்கிட்டே இந்த கேள்வியைக் கேட்டேன். நீ முதல்ல போய் குளிச்சுட்டு வா. நான் பக்கத்தில் இருக்க கடைக்குப் போய் ஒரு போன் பண்ணிட்டு வந்துடுறேன். கண்ணனையும் கூட்டிப் போறேன்”, அவளிடம் சொல்லிவிட்டு, கண்ணனையும் தூக்கிக் கொண்டாள்.

ஹேமா வெளியே சென்று சுற்றும் முற்றும் பார்க்க, கண்ணன் அவன் கைகளை இடப்பக்கம் நீட்டினான். அங்கே போக வேண்டும், என்று கொஞ்சம் முரண்டும் விதமாக இருந்தது அவன் செய்கை.

அங்கே தனக்குத் தேவையான ஏதாவது, திவ்யாவைப் பற்றிய ஏதாவது கேள்விக்கு விடை கிடைக்குமோ, என்ற எதிர்பார்ப்பில் அங்கே சென்றாள்.

ஆனால் அங்கே இருந்தது ஒரு சிறிய பிசிஓ மட்டுமே. தான் போன் செய்ய வேண்டும் என்று சொன்னதால் அவன் அங்கே கை காட்டியிருக்கிறான் என்பது புரிய, “கண்ணா...., ஆன்ட்டி போன் பண்ணனும்னு சொன்னதால் தான் இந்த கடையைக் காட்டினியா?”, வியப்பாகக் கேட்டாள்.

அவன் ‘ஆமாம்’ என்று தலையை ஆட்டினான். அமைதியே உருவாக இருந்தாலும், சுற்றி நடப்பதை அவன் கவனமாகக் கிரகிப்பது அவளுக்குப் புரிந்தது. அவன் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டாள்.

“சோ ஸ்வீட் கண்ணா.....”, அவள் முத்தத்துக்கு அவனிடமிருந்து எந்த பிரதிபலிப்பும் இருக்கவில்லை.

அந்தக் கடையில் ஒரு வயதான தம்பதிகள் அமர்ந்திருந்தனர். “என்னம்மா, போன் பண்ணணுமா? லோக்கலா.... இல்லை....?”, அந்த வயதான பாட்டி கேட்டார்.

“லோக்கல் தான் பாட்டி.....”, சொல்லிவிட்டு, அங்கிருந்த போனில் தாயை அழைத்தாள்.

அழைப்பது இவள்தான் என்று தெரிந்தவர்போல், திட்டித் தீர்த்தார் அவள் தாய். அனைத்தையும், சிரித்த முகமாக வாங்கிக் கொண்டவள், “அம்மா, அம்மா... ஒரு நிமிஷம் இருங்க”, தாயிடம் சொல்லிவிட்டு, “பாட்டி, கண்ணனை உங்களுக்குத் தெரியுமா?”, என்று கேட்டாள்.

“என்னம்மா இப்படிக் கேட்டுட்ட, பக்கத்து வீட்டில் இருக்குறவளைத் தெரியாதா? நீ யாரு தாயி? அவளுக்கு உறவா? இம்புட்டு நாளா அந்தப் புள்ளை இருக்கா போச்சான்னு கூடப் பாக்காமலா இருப்பீங்க?”, அங்கலாய்த்தார் பாட்டி.

“நான் எல்லாத்தையும்ம் சொல்லுறேன் பாட்டி. கொஞ்சம் கண்ணனைப் பாத்துக்கறீங்களா? நான் பேசிட்டு வந்துடுறேன்”, அவனை அவரிடம் கொடுக்கும் முன்பு, “கண்ணா... பாட்டிக் கிட்டே போறியா?”, எனக் கேட்க, கொஞ்சம் தயங்கியவாறே தலையை அசைத்தான்.

பாட்டி அவனை அந்தப் பக்கம் அழைத்துச் சென்ற பிறகு, “அம்மா, நீங்க திட்டுறதில் தப்பே இல்லை. ஆனால் நான் காலையிலேயே சொன்னேனே, இங்கே திவ்யாவுக்கு, துணைக்கு யாருமே இல்லன்னு, அதான்.....”.

“ஹேமா....., வயசுப் பொண்ணான உன்னை ஒரு நாள் முழுக்கக் காணாமல் நான் தவிச்சுப் போறேன். இப்போ வீட்டுக்கு வராமல் என்ன போன் வேண்டிக் கிடக்கு?”, சலிப்பாகக் கேட்டார்.

“அம்மா நான் சொல்ல வாறதைக் கொஞ்சம் கேளுங்களேன்”, மகளின் குரலில் இருந்த கெஞ்சலில் ஒரு நிமிடம் அமைதியானார்.

“சரி சொல்லு....”.

முழுதாக ஐந்து நிமிடம் செலவழித்து, திவ்யாவைப் பற்றி, கண்ணனைப் பற்றி, அவர்கள் தனிமையைப் பற்றி, மருத்துவர் அவர்களைப் பற்றி சொன்னது வரை அனைத்தையும் சொல்லி முடித்தாள்.

“என்னால அவளை இப்படியே தனியா விட்டுட்டு வர முடியலம்மா....”, ஏக்கமாகச் சொன்னாள்.

மகளது குரலில், சில வருடங்களுக்குப் பிறகு தொனிக்கும் நட்பின் வாடையை, அவரும் உணர்ந்து கொண்டார். பள்ளியில் இருக்கும் பிள்ளைகளே உலகம் என்றிருந்தவள், நட்பின் வட்டத்துக்குள் வந்து, தன் கூட்டை விட்டு வெளியே வருவது அவருக்கும் மகிழ்சியே.

ஆனாலும் அதை வெளிக்காட்டாமல், “சரி இப்போ நீ ஏதோ முடிவு செய்திருக்குற மாதிரி இருக்கே அது என்னன்னு சொல்லு”, நேரடியாக விஷயத்துக்கே வந்தார்.

எனக்கென்ன உங்களிடம் பயமா என்பதுபோல், “அம்மா, அதான் நம்ம மாடி வீடு ரொம்ப நாளாவே சும்மா பூட்டி தானே இருக்கு. அதை ஏன் நாம திவ்யாவுக்குக் கொடுக்கக் கூடாது? அவளுக்கும் பேச்சுத் துணைக்கு ஆள் இருந்த மாதிரி இருக்கும். அவள் மனநிலையும், கண்ணன் மனநிலையும் மாற வாய்ப்பு இருக்குமே”, பட படவென்று சொன்னாள்.

“ஹேமா....., இது திவ்யாவுக்காக மட்டும் எடுத்த முடிவா என்ன?”, ஆழ்ந்த குரலில் கேட்க,

“எனக்கு ஒரு அக்காவோ, தங்கையோ, இருந்தால் நாம செய்ய மாட்டோமா? அது மட்டும் இல்லை, திவ்யாவை நான் உயிர்த் தோழியாத்தான் நினைக்கிறேம்மா. அதென்னமோ அவளை பார்த்ததுமே ஒரு பிடிப்பு.

“சில நேரம், ஒரு பொண்ணோட மனசு இன்னொரு பொண்ணுக்குத் தெரியும்னு சொல்லுற மாதிரி, காயப்பட்ட மனசு இன்னொரு மனசைப் புரிஞ்சுக்குதோ என்னமோ?”, தாயின் குரலிலேயே அவளும் பதில் சொல்ல, இருவருக்கும் நடுவில் ஆழ்ந்த மௌனம்.

இதுவரை, தங்கம் தான் ஹேமாவின் உற்ற தோழி, வழிகாட்டி, நலம் நாடி அனைத்தும். எனவேதான் தயக்கமின்றி பேசினாள்.

“ஹேமா இதென்ன சின்னப்புள்ளை விளையாட்டா? அவளோட முடிவையும் நாம தெரிஞ்சுக்கணுமே?”, யோசனையாகச் சொன்னார்.

“என் அம்மாவால் முடியாதது எதுவுமே கிடையாதும்மா. நான் அவளை அங்கே கூட்டி வாறேன். நீங்கதான் எப்படியாவது பேசி அவளை சம்மதிக்க வைக்கணும், அவ்வளவுதான். இப்போ ரெடியா இருங்க, நாங்க வந்துட்டே இருக்கோம்”, தன் கவலையை அவர் தலையில் இறக்கி வைத்துவிட்டு கழண்டு கொண்டாள் அவள்.

இவள் பேசி முடிக்கவும், அதற்காகவே காத்திருந்தவர்போல் வேகமாக அருகில் வந்தார் அந்த பாட்டி. “ஏந்தாயி..., நீயென்ன இந்தப் புள்ளைக்கு உறவா? ஏன் இம்புட்டு நாளா வரலை? அந்தப் புள்ளையை நாங்க பாக்காமல் அப்படியே விட்டிருந்தா, ரெண்டும் செத்து கருவாடாத்தான் பாத்திருப்பீங்க”, கலங்கிய கண்களை துடைத்தவாறு சொன்னார்.

“என்ன பாட்டி சொல்லுறீங்க?”, அதிர்ச்சியாகக் கேட்டாள்.

“பின்ன என்னம்மா....? இந்த வீட்டுக்கு, ஒரு விடியக்காலம் இவங்க வந்ததைப் பார்த்தேன். தொடர்ந்து ரெண்டு நாள்...., கதவைக் கூட தொறக்காமல், தாயும் புள்ளையும் வீட்டுக்குள்ளேயே இருந்தாங்க. நாங்கதான் சந்தேகப்பட்டு, வீட்டைத் தட்டினால், தள்ளாடி வந்து கதவைத் தொறந்துட்டு, அப்படியே மயங்கி சரிஞ்சிடுச்சு.

“உடனே தூக்கித் தண்ணி தெளிச்சு...., எப்படி எப்படியோ ஆயிடுச்சு. இப்பவும் என்னமோ நடமாடுது அவ்வளவுதான்....., அவளைப் பாக்கும் போது எல்லாம் மனசு கனமாயிடுது. வாயைத் தொறந்து ஒத்தை வார்த்தைப் பேசாது. இந்த சின்னப் பையன், என் வீட்டாளுக்கிட்டே கூடப் போக மாட்டான்.

“இப்படி இருக்கப் புள்ளையை தனியா விட்டுட்டீங்களே?”, தன் ஆதங்கத்தைக் கொட்டினார்.

“பாட்டி இனிமேல் அவளை நான் பாத்துக்கறேன். நீங்க செஞ்ச உதவிக்கு நன்றி பாட்டி”, அவரிடமிருந்து விடை பெற்றுக் கிளம்பியவளின் மனதுக்குள், எப்படியாவது அவளை அழைத்துச் சென்றுவிடவேண்டும், தன்னோடு வைத்துக் கொள்ள வேண்டும் என்ற உறுதி இருந்தது.

அங்கே அவள் தாயும், திவ்யாவை எப்படித் தங்களுடனே தங்க வைக்கலாம் ? என்று எண்ணிக் கொண்டிருந்தார். நேரம் போனதே தெரியாமல் அவர் அமர்ந்திருக்க, ஹேமாவும், திவ்யாவும் கண்ணனுடன், ஆட்டோவில் வந்து இறங்குவது பார்வையில் விழுந்தது.

பள்ளியின் பின்னால் இருந்த தங்கள் வீட்டுக்கு, திவ்யாவை அழைத்துச் சென்றாள் ஹேமா. “வாம்மா....., கண்ணனுக்கு இப்போ எப்படி இருக்கு?”, கேட்டவாறு அவனைக் கைகளில் வாங்கிக் கொண்டார்.

திவ்யாவிற்கு, அவள் தாயே(அன்பே உருவாக) நேரில் நிற்பது போன்ற பிரம்மை ஏற்பட்டது. “இப்போ நல்லா இருக்காம்மா.....”, அவளையும் அறியாமல் அவரை ‘அம்மா’ என்று அழைத்தாள்.

கண்ணனோடு தங்கம் வீட்டுக்குள் சென்றுவிட, வாசலோடு நின்று, வண்டியை எடுத்துக்கொண்டு சென்றுவிட வேண்டுமென்று எண்ணியிருந்த அவள் எண்ணம், மூளையின் ஒரு ஓரத்தில் முடங்க, கால்கள் தானாக அவர் பின்னால் சென்றது.

தன் தாயின் செய்கையை மனதுக்குள்ளே மெச்சிக் கொண்டாள் ஹேமா. விஸ்த்தாரமாக இருந்த ஹால் சோபாவில் அமர்ந்துகொண்டு, கண்ணனையும் மடியில் அமர்த்திக் கொண்டார்.

“கண்ணம்மா.... ரெண்டு காபி, ஒரு பால்..... கொண்டுவா”, அவரது குரலுக்கு, பள்ளிக்கூட ஆயா, நொடியில் தயாரித்து எடுத்து வந்தாள்.

“வேண்டாம்...”, என்று நுனி நாக்குவரை வந்த வார்த்தைகள், இதழ்களைத் தாண்டி வெளியே வரவில்லை.

“சரிம்மா நீங்க பேசிட்டு இருங்க, நான் இப்போ வந்துடுறேன்”, சொல்லிவிட்டுத் தன் அறைக்குச் சென்றாள் ஹேமா. போகும் முன்னர் தன் தாயிடம் சைகைக் காட்டவும் மறக்கவில்லை.

காபியைக் கொஞ்சம் வேகமாகவே குடித்தாள் திவ்யா. கண்ணனுக்கு, தங்கமே சூடாற்றிக் கொடுக்க, தயக்கமே இல்லாமல் குடித்தான். அவரது மடிக்குள் அடங்கியிருக்கும் தன் மகனை கண் கலங்கப் பார்த்தாள்.

சலுகையாக அவர் தோளில் அவன் சாய்ந்திருக்கும் அழகு...., அவனுக்குக் கிடைக்காமல் போன பாட்டியின் மடி, இந்தக் காட்சியைக் காணும் போது, கதறி அழ வேண்டும்போல் இருந்தது. தன் தாய் மட்டும்....., ‘வேண்டாம் மனமே, எதையும் எண்ணாதே.....’, தனக்குத் தானே கட்டளை இட்டுக் கொண்டாள். ஆனாலும் ஏக்கம் எழுவதைத் தடுக்க முடியவில்லை.

அவள் நிலையைக் கண்ட தங்கம், கொஞ்சம் துணுக்குற்றார். “என்னம்மா, காபி ரொம்ப சூடா இருக்கா? இன்னொரு டம்ளர் கொண்டு வரச் சொல்லவா?”, அக்கறையாகக் கேட்டார்.

“அதெல்லாம் எதுவும் இல்லம்மா..., எனக்கு, எங்க அம்மா ஞாபகம் வந்துடுச்சு”, மனதை மறைக்காமல் சொன்னாள்.

“என்னையும் உன் அம்மாவா நினைச்சுக்கோம்மா. எனக்குமே கண்ணனை, என்னோடப் பேரனாத்தான் நினைக்கத் தோணுது. அதிலும், நமக்குக் கிடைக்காத, இல்லாத பொருளின் அருமை, மத்தவங்க கிட்டே இருக்கும்போது, ஏக்கமாத்தான் இருக்கும் இல்ல”, கண்ணனின் தலைக் கோதி, வாஞ்சையாகச் சொன்னார்.

இப்பொழுது திகைப்பது திவ்யாவின் முறை ஆனது. “என்னம்மா சொல்லுறீங்க? இப்போ ஹேமாவுக்குக் கல்யாணம் பண்ணி வச்சீங்கன்னா, உங்களுக்கு ஒரு பேரனையோ, பேத்தியையோ அவ பெத்துத் தந்துட்டுப் போறா. இதுக்கு ஏன் இவ்வளவு வருத்தப் படுறீங்க?”, ஆறுதலாகச் சொன்னாள்.

“அதுக்கெல்லாம் ஒரு கொடுப்பினை வேணும் திவ்யா”, அவர் குரலில் கவலை அப்பிக் கிடந்தது.

“என்னம்மா சொல்லுறீங்க.....?”, கலக்கமாகக் கேட்டாள்.

“இந்த விஷயத்தை நான் இதுவரை யார்ட்டையும் சொன்னதே இல்லை திவ்யா, அதை அவளும் விரும்ப மாட்டா. அவ ஜாதகத்தில் ஒரு பிரச்சனை, செவ்வாதோஷம். உனக்கே தெரியும், நல்ல ஜாதகப் பொண்ணுங்களுக்கே கல்யாணம் ஆகாத போது, என் மக.....,

“நானும் முதல்ல இதைப் பெருசா நினைக்காமல் வரன் பார்த்தேன். வந்தவங்க எல்லாம் இவ ஜாதகத்தைப் பாத்துட்டு, வந்த வேகத்திலேயே போய்ட்டாங்க. இந்தக் கவலையிலேயே வேலைக்குப் போன இவங்க அப்பா, ஒரு விபத்திலே போய்ட்டார்.

“அவங்க அப்பா போன உடனே இவ மனசு ஒடஞ்சுப் போய்ட்டா, அவளோட ப்ரண்ட்ஸ் கூட, கொஞ்சம் ஏளனமா பாக்கத் தொடங்கவும், வீட்டுக்குள்ளேயே முடங்க ஆரம்பிச்சுட்டா. நானும் எவ்வளவு நாள்தான் அவளை அப்படிப் பாக்க முடியும், கோயம்புத்தூரில் இருந்த எங்க சொத்தை எல்லாம் வித்துட்டு இங்கேயே வந்து செட்டில் ஆயிட்டோம்.

“பிறகுதான் இந்த ஸ்கூல் துவங்கி, அந்தப் பிள்ளைங்களோடேயே அவ பொழுது போச்சு. இப்போ ரெண்டு நாளாத்தான் உன்னோட நட்பு, அவளோட பழைய கலகலப்பை மீட்டுக் கொடுத்திருக்கு. அதனாலேயே, உன்னை என்னால் வேற்று ஆளா நினைக்க முடியலம்மா.

“இந்த அம்மா ஒண்ணு கேக்குறேன். எனக்காக, இங்கே, எங்க வீட்டுக்கே கண்ணனோட வந்துடுறியா? எனக்கும் கண்ணன் பேரன் மாதிரித்தான். எங்களுக்காக....., என்னம்மா சொல்லுற....”, ஆர்வமாக, உருக்கமாகக் கேட்டார்.

ஹேமாவின் கதையைக் கேட்டே உருகியவள், தங்கம் இறுதியில் இப்படிக் கேட்கவும், என்ன பதில் சொல்வது என்று திகைத்துப் போனாள். ஹேமா தனக்கு நல்ல தோழிதான், அதற்காக நம் நிலையை நாம் மறக்கக் கூடாதே.

அவரிடம் எப்படி மறுக்கவென்று தெரியாமல், “அம்மா...., சில விஷயங்களை, தூரமா வச்சுக்கிறதுதான் எல்லோருக்கும் நல்லதும்மா”, தொண்டை அடைக்கச் சொன்னாள்.

“என் பொண்ணை, எந்தக் காரணத்துக்காகவும் நான் வெறுக்கவோ, விடவோ முடியாதே திவ்யா....”, அவரது அதிரடி பதிலும், கண்ணனின் சலுகையும், ஹேமாவின் நட்பும் அவளைக் கொஞ்சம் இளக்கியது.

ஆனால் முடிவெடுக்க முடியாமல் திணறினாள் திவ்யா. அவளால் சரியான முடிவுக்கு வர முடியுமா?

***

தாகம் - 16.

காதல் மெல்லிய உணர்வுதான்

உணர்ந்துகொண்டேன் நான்

உனக்கு அதை உணர்த்த

நான் தவறினேனா? - இல்லை

உணர நீ தவறினாயா.....?

விடை யார் சொல்வார்.....?

தன் அறைக்கு, சிங்கத்தை அதன் கூண்டிலேயே சந்திக்கும் மனநிலையில் சென்றாள் தர்ஷிணி. எப்படியெல்லாம் அவன் தன் மனத்தைக் காயப் படுத்துவானோ என்பது மட்டுமே எண்ணத்தில் ஓடியது.

மற்ற எதைப் பற்றிய நினைப்புமே அவளுக்கு இருக்கவில்லை. கால்கள் பின்ன, எவ்வளவு மெதுவாக நடந்தாலும் அவளது அறை வந்தே விட்டது. ஆழ்ந்த மூச்சுக்களை எடுத்து விட்டுவிட்டு, கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே சென்றாள்.

அங்கே அறைக்குள், குட்டிப்போட்ட புலியாக இங்கும் அங்கும் உலவிக் கொண்டிருந்தான் அவன். தர்ஷிணி, பதுமையென அறைக்குள் நுழைய, அவளையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

பயம் கலந்த தயக்கமாக, அவன் கண்களை நிமிர்ந்து பார்த்தாள் தர்ஷிணி. அவன் கண்களில் கோபம் இருக்கவில்லை, மாறாக, வேறு எதுவோ இருந்தது. அதை அவளால் படிக்க முடியவில்லை.

‘வா’ என்பதுபோல் அவன் தலையை அசைக்க, அன்ன நடையிட்டு அவன் அருகில் சென்றாள். அவள் மெதுவாக

நடந்து வரவே, “ஏண்டி..., மனுஷன் அவஸ்த்தை தெரியாமல், என்னமோ தேர் வாற மாதிரி ஆடி அசஞ்சு வாற”, அவள் அருகில் நெருங்கவே, முரட்டுத்தனமாக அவள் இடையைப் பிடித்து இழுத்து அணைத்தான்.

அவன் இப்படிச் செய்வான் என்று எதிர் பார்க்காததால், கையில் இருந்த பால் சொம்பைத் தவற விட்டாள் அவள். அது பெருத்த ஓசையுடன் கீழே விழுந்து உருண்டது.

பால் சொம்பு கீழே விழுந்து உருளவே, அந்த நேரம் பால் சிந்தியது அவளுக்குச் சரியாகப் படவில்லை. ‘முதல் இரவும் அதுவுமாக பால் சிந்தினால் என்ன அர்த்தம்? தன் வாழ்வும் இப்படிச் சிந்திச் சிதறப் போகிறதா?’, கவலைப் பந்து அவள் தொண்டைக்குள் துடித்தது.

அவளது கவலை, அவனுக்குக் கொஞ்சமும் இருந்ததாகத் தெரியவில்லை. “ஏண்டி , கொண்டு வந்ததை ஒழுங்கா வச்சுக்கத் தெரியாதா? இப்போ இதைக் கிளீன் பண்ண வேற டைம் வேஸ்ட்”, கோபமாகச் சலித்துக் கொண்டான் அவன்.

“இல்ல வித்து, நீ....ங்க இப்....படிச் செய்..(வீங்கன்னு) எதிர் பார்க்கலை.., அதான்.. கை... தவறி..... இருங்க ஒரே நிமிஷத்தில் கிளீன் பண்ணிடுறேன்”, திக்கித் திணறினாலும், சொல்ல வந்ததைச் சொல்லிவிட்டாள்.

“என்னடி சொன்ன...? திரும்பச் சொல்லு”, அவனது அணைப்பு இப்பொழுது உடும்புப் பிடியாக இறுகி இருந்தது. அவன் பிடி வலித்தது அவளுக்கு.

“என்னங்க...., வலிக்குது....., கொஞ்சம் விடுங்க..”, வலி முகத்தில் தெரியச் சொன்னாள்.

“நான்....., நீ என்ன சொன்னன்னு கேட்டேன்.....? அது உனக்குக் காதில் விழுந்துதா? அதுக்கு பதில் சொல்லு”, கர்ஜித்தான் அவன்.

“அ..தான்....., இதைக் கிளீன் பண்ணிடுறேன்னு....”, பயத்தில் இழுத்தாள் அவள்.

“அதுக்கு முன்னாடி.....”, குரல் இரும்பானது.

“நீ....ங்....க.....”, திணறினாள்.

“அதுக்கு’ம்’ முன்னாடி.....”, அந்த ‘ம்’ மில் அவ்வளவு அழுத்தம்.

“அதுக்கும் முன்னாடி.....”, புருவம் நெரிய யோசித்தாள்....., சத்தியமாக அவளுக்கு என்ன சொன்னோம் என்பது நினைவிற்கு வரவே இல்லை.

பரிதாபமாக அவனைப் பார்க்க, ருத்ர மூர்த்தியாக நின்று கொண்டிருந்தான் அவன்.

“தெ..., தெ..., தெ...ரியலங்க...”, மழையில் நனைந்த கோழிக் குஞ்சாக உதறியது அவள் மேனி.

“என்ன சொல்லுறோம்னே தெரியாத அளவுக்கு உனக்கு வார்த்தைகள் வந்து விழுமா...? ஒரு பயம் வேண்டாம் மனசுல”, கண்களை உருட்டிக் கேட்டான்.

‘உன்னைப் பார்த்து தாண்டா எனக்கு பயம்மா இருக்கு, அப்படித் தப்பா எதையுமே நான் சொல்லலையே’, அவள் மனம் ஊமையாய் நடுங்கியது.

“என்னை என்னனுடி கூப்பிட்ட.....”, அவள் என்னவோ கொலையே செய்து விட்டதுபோல் கத்தினான்.

அப்பொழுதுதான் அவளுக்கு நினைவே வந்தது. அவனுக்குத் தான் செல்லப் பெயர் ஒன்று வைத்திருப்பதும், அதைச் சொல்லி அவனை மனதுக்குள்ளேயே கொஞ்சுவதும். இந்தப் பெயரை அவனிடம் சொல்லி ஆனந்தப் படவேண்டும் என்றும், அதற்கு அவன் என்ன சொல்வான் என்று அறியவேண்டும் என்றும் அவள்

ஆனந்தமாகத் தவித்திருக்க, அவனது இந்தக் கோபத்தைச் சுத்தமாக அவள் எதிர் பார்க்கவில்லை.

அவளது யோசனை இப்படி இருக்க, அவனுக்கு பதில் சொல்ல வேண்டும் என்பதையே மறந்தாள் அவள்.

“என்னடி....., நான் கேட்டுட்டே இருக்கேன், நீ மரமாட்டம் நிக்கிற. இவனுக்கெல்லாம் பதில் ஒரு கேடான்னு நினைக்கறீங்களோ அம்மணி?”, வன்மமாகக் கேட்டான்.

“இ....ல்..இல்லங்க.....”,

“இப்போ மரியாதை வருது, அப்போ எங்கடி போச்சு?”, அவளைப் பேசக் கூட விடவில்லை. அவன் வார்த்தைகள் ஒரு புறம், அவன் உடும்புப் பிடி மறு புறம், பத்தே நிமிடங்களில் சோர்ந்து போனாள் தர்ஷிணி.

அவனோ அவளை விடுவதாகவே இல்லை. “என்னடி....., உனக்கு மரியாதையா பேசத் தெரியாதா? புருஷன்னா யாருன்னு நினைச்ச, உனக்கு வாழ்க்கைக் குடுத்த கடவுள்டி, கடவுளைப் பார்த்து என்ன செய்வ, கன்னத்தில் போட்டுக்க மாட்ட, அப்படி நடந்துக்கணும் என்கிட்டே, புரியுதா?”, விரல் நீட்டி எச்சரித்தான்.

‘என்னது... வாழ்க்கைக் கொடுத்தக் கடவுளா...?’, அவன் பேச்சில் அவளுக்கு மயக்கமே வரும்போல் இருந்தது.

ஆனாலும் அதை ஒதுக்கிவிட்டு, அவனைச் சமாதானப் படுத்தும் நோக்குடன், “என்.....னங்க....., செல்....லமா.....”,

“நீ செல்லமாக் கூப்பிட நான் என்ன உன்வீட்டு நாய்க்குட்டியா?”, அவளை முடிக்கக் கூட விடாமல் வெடித்தான்.

“ஐயோ அப்படி இல்லைங்க.....”,

“என்னடி அப்படி இல்லை, இப்படி இல்லைன்னு……., ச்சே….., மனுஷனுக்கு மூடே போச்சு”, என்று சொல்லிவிட்டு அவளை உதறிவிட்டுக் கட்டிலில் அமர்ந்தான்.

அவன் வேகமாக உதறவே, தடுமாறி தரையில் விழுந்தாள் தர்ஷிணி. இடுப்பில் வலி உயிர் போனது. கண்களில் கண்ணீர், அவள் அனுமதி இன்றியே வழிந்தது.

‘எப்படியோ அவன் இத்தோடாவது விட்டானே’, என்ற நிம்மதியும் ஒரு மூலையில் எழாமல் இல்லை.

அவள் நிம்மதியைக் குலைக்கவென்றே சட்டென அறையின் விளக்கு அணைந்தது. இரவு விளக்கின் ஒளி கூட இல்லாமல், அறையே இருளில் மூழ்கியது.

கரண்டுதான் போய்விட்டதோ என்று அவள் எண்ண, ஒரு வலுவான கரம், தன்னை குண்டுக் கட்டாகத் தூக்குவதை உணர்ந்த பிறகுதான், விளக்கை அவன்தான் அணைத்தான் என்பதே அவளுக்குத் தெரிந்தது.

தூக்கிய அதே வேகத்தில் அவளைக் கட்டிலில் தள்ளியவன், வன்மையாக அவளை அணைத்தான். அதிர்ந்தாள் தர்ஷிணி. ‘என்ன மனிதன் இவன்’, அவளை யோசிக்கக் கூட விடாமல், அவள் இதழ்களைக் கடித்துச் சுவைத்தான்.

பூவின் வாசனையை அறிய, சில மூடர்கள் அந்த மலரைக் கசக்கி நுகர்வார்கள். அதேபோல் இருந்தது வித்தார்த்தின் செய்கை. மலரில் இருந்து தேனெடுப்பது வண்டின் சாமர்த்தியம். அது அந்த மலருக்கு வலிக்காமல் செய்ய வேண்டும்.

மலர் என்ன மறுக்கவா செய்யும்? தேனையும் உண்டுவிட்டு, தன் கொடுக்கால் அதைக் கொட்டியும் வைத்தால், பாவம், அந்த மலர் என்ன செய்யும்?

கத்தக்கூட முடியவில்லை அவளால். அவனைத் தள்ள அவள் எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியைத்

தழுவின. அவள் ரத்தத்தை உப்பாக அவள் நாவு உணர்ந்தது.

கொண்டவன்தான் என்றாலும், இருட்டு அறையில் அவனது முரட்டு அணுகுமுறை, என்னமோ, எவனோ ஒருவனால் தான் கற்பழிக்கப் படுவதாக உணர்ந்தாள் தர்ஷிணி. மனம் விதிர்க்க, அவனிடமிருந்து தன் இதழ்களைப் பறித்துவிட்டு,

“எ.....ன்....ன...ங்க....., அ.....ந்த விடி..... விளக்...கை போ... போ...டுங்களேன்...., ப்ளீஸ்....”, கெஞ்சினாள்.

“வாய மூடுடி....., உன் மூஞ்சியைப் பார்த்தால், எங்கடி மூடு வரும்....., அதான்..... இறங்கின மூடை ஏத்த வேண்டாம், அதான் இப்படி”, எகத்தாளமாகச் சொல்லிவிட்டு, அவன் வேலையைத் தொடர்ந்தான்.

அவன் சொன்ன வார்த்தைகளை, அவளால் காது கொடுத்துக் கேட்க முடியவில்லை. உலகில் உள்ள ஜீவ ராசிகளிலே, ஒருவர் முகத்தை, மற்றவர் பார்த்துப் புணரும் வாய்ப்புப் பெற்ற இனம் மனித இனம் மட்டும்தான்.

அப்படி இருக்கையில், இருட்டு அறையில், கழுத்தில் ஒரு மஞ்சள் கயிற்றைக் கட்டிவிட்டான் என்ற ஒற்றைக் காரணத்துக்காக, வன்மையாகத் தன்னை அவன் எடுத்துக்கொள்வதை அவளால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை.

முடிந்த அளவு தன் எதிர்ப்பைக் காண்பித்தாள். “ஒரு பெண் மனது வைக்காமல், எவனாலும் அவளை அடைய முடியாது”, என்று எங்கோ படித்த வாசகம் நினைவுக்கு வரவே, கொஞ்சம் தைரியமாகவே போராடினாள்.

தர்ஷிணியின் எதிர்ப்பை உணர்ந்து, மிகச் சுலபமாக அதை முறியடித்தான். அவன் தேக்குமர தேகத்துக்கு முன்பு, அந்தக் கொடியிடையாள் என்ன செய்ய முடியும்? இறுதியில் அவன் நினைத்ததை சாதித்துக் கொண்டான்.

அந்த இரவு முழுவதும் அவள் உணர்ந்ததும், அனுபவித்ததும் வலிகள் மட்டுமே. இதற்குமேல் போராட அவள் தெம்பற்றுப் போக, அது இன்னுமே வசதியாகிப் போனது அவனுக்கு. இனிமேல், இரவு என்ற ஒன்றே வராது, என்பதுபோல் நடந்துகொண்டான் வித்தார்த்.

அவனது முரட்டு முத்தங்களால் அவள் இதழ்கள் தடித்து, ரத்தம் கன்றிப் போனது. இதழ்களின் நிலையே இதுவென்றால்....., சூரியனின் உதயத்தில், தர்ஷிணி, ஆழ்ந்த மயக்கத்துக்குப் போயிருந்தாள். அதைக்கூட அவன் உணராமல் மிருகமாகியிருந்தான்.

“மனிதன் மிருகத்தைவிடக் கொடூரமானவன், அவனிடம் மனசாட்சி ஒன்று இல்லையெனில்.....”, மனசாட்சியற்ற மனிதனிடம் சிக்கிக் கொண்ட தர்ஷிணி, மிருக வதைக்குத்தான் உள்ளானாள்.....

**********பால் சொம்புடன் நந்தனின் அறைக்குள் நுழையும் பொழுது, மனம் முழுக்க விஷம் மட்டுமே இருந்தது ப்ரியாவுக்கு. அவளை ஆவலாக எதிர் பார்த்த நந்தனோ, விரைந்துவந்து அவள் எதிரில் நின்றான். கண்கள் அவளைப் படம் பிடித்தன.

அவன் கண்களில் காம போதை வழிந்தது. அவள் அழகை ஆளும் நொடிகளுக்காக ஏங்கித் தவித்தான். ஆனாலும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, “வா ப்ரியா....”, அவள் கைகளைப் பிடித்து அழைத்துச் சென்றான்.

பாலை அவனிடம் கொடுக்க, அதை வாங்கி டீபாயில் வைத்தான். கட்டிலில் அவளை அமர வைத்து, தானும் நெருங்கி அமர்ந்தான். தன்மேல் இருந்த மோகத்தில், வந்தவுடன் தன்மேல் பாய்வான் என்று அவள் எதிர்பார்க்க, அவனது நிதானம் அவளுக்கு ஆச்சரியத்தை அளித்தது.

அதை காட்டிக் கொள்ளாமல், சிலையென அமர்ந்திருந்தாள். “ப்ரியா எனக்கு உன்கிட்டே முதல்ல

பேசணும். பிறகுதான் மற்றதெல்லாம், உனக்கு.....”, கேட்டுவிட்டு அவள் முகம் பார்த்து மெல்லிதாகச் சிரித்தான்.

‘பேசுடா.... அப்படி என்னப் பேசுறன்னு நானும் கேக்குறேன்’, மனதுக்குள் சொல்லிக் கொண்டு அமைதியாக இருந்தாள்.

“ப்ரியா....., எனக்கு உன்னைப் பார்த்த உடனே பிடித்திருந்தது..”, எனத் துவங்கி, தன் காதலை, தேடலை, அவளைப் பார்த்த நொடியை, என அனைத்தையும் அவளுக்குச் சொன்னான். இவ்வளவு காதல் இருந்த பொழுதும், அவளிடம் அலைபேசியில் பேச முடியாத தன் நிலைக்கு அவளிடம் மன்னிப்பும் கேட்டான்.

“ப்ரியா.... உன்னோட அழகுதான் என்னை முதலில் கவர்ந்தது. அதற்குப் பிறகு, உன்னோட இந்த அமைதி, இந்த வெட்கம், நான் இவ்வளவு பேசியும் எதுவுமே சொல்லாமல் கேட்டுக் கொண்டிருக்கும் உன்னோட பொறுமை, இப்படி உன்னை மொத்தமா எனக்கு இப்போ ரொம்பவே புடிச்சு இருக்கு.

“என்னோட காதலை வார்த்தையில் சரியாச் சொன்னேனா என்று எனக்குத் தெரியாது. ஆனால் என் காதலை, கண்டிப்பா என்னோட செய்கையில், என்னால் உனக்கு உணர வைக்க முடியும். உன்னை எதற்காகவும் கஷ்டப்படுத்தவே மாட்டேன்.

“இப்போகூட உனக்கு இன்னைக்கு வேண்டாம்னு சொன்னால், அதைக்கூட செய்ய நான் தயாராக இருக்கேன்”, கரை காண முடியாத ஆசையில் தவித்தாலும், தன் காதலை அவள் உணர்ந்துகொள்ள வேண்டும், என்ற தவிப்பு மட்டுமே அதிகமாக விரவி இருந்தது நந்தன் குரலில்.

எதற்குமே கலையாத, கரையாத, உருகாத இரும்பாக இருந்தாள் அவள். அவளது பதிலை அவன் எதிர்நோக்க, குனிந்த தலை நிமிராமல் இருந்தாள். அதை நாணம் என்றே கொண்டான் அவன்.

“நீ பேசவே மாட்டியா? இப்படி வெட்கப்பட்டால் நான் என்னதான் செய்யட்டும்...., ஏதாவது சொல்லேன்....”, தவிப்பாய் கேட்டான்.

மோகமாய் அவளை நெருங்க, “லைட்டை முதல்ல ஆப் பண்ணுங்க”, அவன் நெருங்கவே, தன் முகபாவனை அவனுக்குத் தெரியவேண்டாம் என்று வேகமாகச் சொன்னாள். அவள் வேண்டுகோளுக்கு இணங்க, டியூப்லைட்டை நிறுத்திவிட்டு, விடி விளக்கை ஏற்றினான்.

அதையும் நிறுத்துமாறு அவள் கெஞ்சவே, அதையும் நிறுத்தினான். மென்மையாய் அவளை நெருங்கி, எங்கே அவளுக்கு வலிக்குமோ என்பதுபோல், அந்தப் பூவையை மலர்ப் படுக்கையில் மெதுவாகச் சரித்தான்.

கட்டுக்கடங்காத தவிப்பு இருந்தபொழுதும், அதை அவளிடம் வன்மையாக வெளிப்படுத்தத் துணியவில்லை.அவன் இதழ்கள் சூடாக அவள் கழுத்து வளைவில் புதிய, தொலைந்து போனது என்னவோ அவன் மட்டும்தான்.

தன்மேல் படரும் அவனை விலக்கித் தள்ள மனம் பதைத்தாலும், வைராக்கியமாகப் படுத்திருந்தாள். செயலற்றுக் கிடக்கும் அவள் தேகமும், கரங்களும் அவனுக்கு வித்தியாசத்தை உணர்த்த, “என்னடா பிடிக்கலையா, வேண்டாமா....?”, கரையை உடைக்கத் துடிக்கும் தன் தவிப்பிலும், தன் துணையின் மனமறிந்து கேட்டான்.

அந்த கும்மிருட்டிலும் தன் உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் அவனை, மெச்சாமல் இருக்க முடியவில்லை ப்ரியாவால். இறுதியாக, நாடகம் ஆட முடிவெடுத்துவிட்டோம், அதனால் அந்தக் கதாப்பாத்திரமாகவே மாறுவோம் என்ற நினைப்பில் அவனுக்கு ஒத்துழைக்க முயன்றாள்.

ஆனாலும் அவன் செய்கைகளுக்குத் துணை போக முடியாமல் மனம் முரண்டியது. இறுதியாக, தன்னைத் தொடுபவன் தன் காதலன் பிரபு என்று மனதுக்குள் உருப்போடத் துவங்கினாள். அதன்பிறகே அவளால் கொஞ்சமாவது இயல்பாக முடிந்தது.

செயல்படத் தயங்கிய கரங்களை உயர்த்தி அவனைத் தழுவிக் கொண்டாள். “என்னடா...., பிடிச்சிருக்கா, இல்ல.....”, இருளில் அவள் முகம் பார்க்க முடியாத தவிப்பும், அவள் முகத்தைப் பார்த்து எதையும் அறிந்துகொள்ள முடியாத ஏக்கமும், அவன் குரலில் வழிந்தது.

“ம்ச்...., பேசாதீங்க.....”, பிரபுவின் உருவத்தோடு அவன் குரல் ஒத்துப் போகாமல் இருக்கவே, எரிச்சலில் வெடித்தாள்.

‘இந்த’, நேரம் பேசுவது அவளுக்குப் பிடிக்கவில்லை என்ற முடிவுக்கு வந்தான் அவன். அதன் பிறகு மௌனம் மட்டுமே ஆட்சி செய்தது அங்கே. ஒவ்வொரு முறையும் அவள் இதழ்களைத் தீண்ட அவன் இதழ்கள் முயல்கையில், தலையைத் திருப்பி அவன் முத்தங்களைத் தவிர்த்தாள்.

முதலில் அதைச் சாதாரணமாக ஒதுக்கியவன், அவள் தன் முத்தங்களை வேண்டுமென்றே தவிர்ப்பது புரிய, தன் செயல்களை ஒரு நிமிடம் நிறுத்தி, “ஏன் ப்ரியா.....?”, ஏக்கமாக வந்து விழுந்தன வார்த்தைகள்.

அவன் வித்தியாசத்தை உணர்வது புரிந்தாலும், அவளால் அவன் இதழ்களோடு இதழ் கலக்க முடியவில்லை. கண்ணீர் கண்களின் கடைவிழியோரம் வழிந்தது. ‘பிரபுவிற்குக் கொடுத்த இதழ்களை உனக்குக் கொடுக்க முடியாதுடா’, கத்திக்கொண்டு எழ எழுந்த வேகத்தை அப்படியே கொன்று புதைத்தாள்.

அவன் தன் பதிலுக்காக இன்னும் காத்திருப்பது புரிய, “உன்..., உங்க மீசை குத்துது. எனக்குப் பிடிக்கலை”,

கண்களில் வழிந்த கண்ணீராலும், துக்கத்தை அடக்கிய விதத்தாலும், அவள் குரல் தழுதழுத்தது.

“ஓ...., சாரிடா....., சாரிடா....., உனக்கு மீசை பிடிக்காதுன்னா முதலிலேயே சொல்லி இருக்கலாமே, நான் எடுத்திருப்பேனே. நான் உன்னை ரொம்பக் கஷ்டப் படுத்துறேனாடா? சரி நாளைக்கே மீசையை எடுத்துடுறேன் சரியா. நீ அதுக்கு எதுக்குடா அழற?”, அவள் அழுவது உணர்ந்து துடித்துப்போய், விலக முயன்ற அவனை, தன்னிடமிருந்து விலகாமல் இறுக அணைத்துக் கொண்டாள்.

அவளுக்கு அவளது காரியம் வெற்றி பெற்றே ஆக வேண்டும், இப்பொழுது அவன் அவள் முகத்தைப் பார்த்தால் எதுவும் நடைபெறாது என்பது அவளுக்குப் புரியவே, அவனை விலகவிடவில்லை அவள்.

அவளது இந்தச் செய்கை, நந்தனுக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. தன் காதல் மனைவியை ஆள வேட்கை கொண்டான். அவளை மென்மையாகவே கையாண்டான். முதல் முறையாக உணரும் பெண்மையின் ஸ்பரிசத்தில், அவளை விட்டு அவனால் விலக முடியவில்லை.

தன் இத்தனை வருடக் காத்திருப்பும், தன் காதலும் கைக்கூடிய ஆனந்தத்தில், அதன் பிறகு அவனால் எதையுமே சிந்திக்க முடியவில்லை. சொர்க்கம் என்ற ஒன்று இப்படித்தான் இருக்குமா? இல்லை அது இந்த சுகத்திற்கு அருகில் கூட வர முடியாது, என்றே எண்ணினான்.

அன்றைய இரவு அவனுக்கு மறக்க முடியாத ஆனந்தத்தை அள்ளிக் கொடுத்தது. அவளுக்கோ, மனம் ஒட்டாத உறவு, மன வலிகளை மட்டுமே கொடுத்தது. ஆனால் அவனால்தான் அவளை, விட முடியாமல் போனது. அன்று விடியும்வரை அவள் அவனுக்குத் தேவையாக இருந்தாள். விடிந்த பின் சூரிய ஒளியில், அவள் முகத்தைப் பார்த்தவன் திகைத்தே போனான்.

***

தாகம் - 17.

வெற்றுப் பலகையில்

எதையும் எளிதில்

எழுதலாம்

எழுதியதை அழித்து

எழுதுவதென்றால்

அதன் வடுக்கள்

ஏனோ மறைவதில்லை.....

வீட்டில் வந்து கார் நின்ற பிறகும், இறங்காமல் இருந்த தன் முதலாளியைத் திரும்பிப் பார்த்தான் கணேஷ். அங்கே ஜீவாவோ, இருக்கையில் தளர்ந்து அமர்ந்து, தலை ஒரு பக்கம் சாய, போட்டிருந்த டை, கழன்றுத் தொங்க, ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்.

எட்டரைக்கே அவனது இந்த உறக்கம் அதிகம்தான். இவ்வளவுநாள் உழைக்காமல் இருந்தது. இன்று ஒரே நாளில் கடினமான உழைப்பும், உண்ணாததால் எழுந்த பசி மயக்கமும் சேர்ந்து அவனை புரட்டிப் போட்டிருந்தது.

காரின் சத்தத்துக்கு வேகமாக வெளியே வந்த முத்து, யாரும் இறங்காமல் போகவே, பின்பக்கக் கதவை அவசரமாகத் திறந்தார். அங்கே அவர் கண்ட காட்சி, அவருக்கும் மனதைப் பிசைந்தது. கணேஷை நிமிர்ந்துப் பார்க்க,

“இன்னைக்கு ரொம்பவே வேலை, மதியம் சாப்பிடக் கூட இல்லை. நல்ல அலைச்சலும் கூட. அவரு ரொம்ப டயர்டா இருக்கவே, நானே கூட்டி வந்தேன். ஆனால் தூங்கிட்டார்போல, எனக்கு எப்படி எழுப்பன்னு தெரியலை

அதான்...., அப்படியே உக்காந்துட்டேன்”, அவன் கண்கள் நீரில் பளபளத்தது.

முத்துவும் எப்படி எழுப்பவென்று தயங்கினாலும், மதியமும் சாப்பிடவில்லை என்று தெரிந்த பிறகு, அவனை அப்படியே விட அவருக்கு மனம் வரவில்லை.

பெரியவர்கள் இருவரும் தயங்கி நிற்க, அஞ்சலியோ.., “அப்பா...”, என்ற கூவலுடன் வண்டியில் ஏறினாள்.

திடுக்கிட்டு கண்விழித்தான் ஜீவா. “அப்பா..., என்ற அழுகையுடன், அவன் முகம் முழுவதும் தன் முல்லைப்பூ இதழ்களை ஒற்றி எடுத்தாள். கூடவே அழுகையும் சேர்ந்து கொண்டது.

“அஞ்சும்மா..., அஞ்சுகுட்டி..., பாப்பா....”, பதிலுக்கு அவனும் கைகளில் ஏந்திக் கொண்டு பதில் முத்தமிட்டான். ஐந்து நிமிடம் இந்த பாசப் போராட்டம் நடந்தது. மற்றவர்கள் இவர்கள் உலகத்தில் செல்லாமல் பார்வையாளர்களாக நின்று கொண்டார்கள்.

முத்து அவர்களை கலைக்க வாய் திறந்த வேளை, அஞ்சு ஜீவாவின் கைகளில் இருந்து திமிறி இறங்கினாள். இறங்கியவள் அவனை முறைத்துப் பார்த்தவாறு, விறு விறுவென நடந்து வீட்டுக்குள் சென்றுவிட்டாள்.

அவள் செய்கையை திகைப்பாய் பார்த்துக் கொண்டிருந்தான் ஜீவா. ‘என்ன..?’, என்பதுபோல் கேள்வியாக முத்துவைப் பார்க்க,

“மதியம் ஸ்கூல்ல இருந்து வந்ததுல இருந்து உங்களைத்தான் கேட்டுகிட்டே இருந்தா தம்பி. அதுவும் முதல் நாள் ஸ்கூல் போனா இல்ல, அதெல்லாம் உங்ககிட்டே சொல்ல ரொம்ப ஆர்வமா இருந்தா பாப்பா.

“நீங்க வர நேரமாகவே, ரொம்ப ஏங்கிப் போயிட்டா. என்னால் அவளைச் சமாதானம் செய்யவே முடியலை. நீங்க

போய் அவளை சமாதானம் செய்ங்க”, ஜீவாவை போகச் சொன்னார்.

“அப்போ நான் கிளம்புறேன் சார்...”, கணேஷ் விடை பெற்றான்.

“சாப்ட்டு போங்க தம்பி....”, முத்து சொல்ல, கேள்வியாக ஜீவாவின் முகத்தைப் பார்த்தான்.

அவனைப் பார்ப்பதைத் தவிர்த்தான் ஜீவா. பின்னர் சுவற்றைப் பார்த்தவாறே, “சாப்பிட்டு, பின்னாடி கெஸ்ட் ஹவுசிலேயே தங்கிக்கச் சொல்லுங்க”, சொல்லிவிட்டு சென்றுவிட்டான்.

கணேஷ் மறுப்பான் என்று அவன் எதிர் பார்க்க, “முத்தண்ணே..., நான் போய் குளிச்சுட்டு வாறேன். கதவு திறந்துதான் இருக்கா?”, எனக் கேட்டான்.

“இருங்க தம்பி, நான் போய் கீ எடுத்துட்டு வாறேன்”, சென்று வந்தவரின் கையில் ஒரு கைலியும், டிஷர்ட்டும் இருந்தது.

குளிச்சுட்டு மாத்திக்கோங்க, தம்பிதான் தந்து விட்டார். கண் கலங்க, ஒரு சிறு தலையசைப்புடன் பெற்றுக் கொண்டான். தளர்ந்த நடையுடன் செல்லும் அவனை, இயலாமையாகப் பார்த்துக் கொண்டிருந்தார் முத்து.

வீட்டிலோ, ஜீவா அஞ்சலியைப் பார்த்தவாறே, அவள் அருகில் ஸோபாவில் அமர்ந்திருந்தான். அவளோ கைகளை மார்புக்கு குறுக்காகக் கட்டிக் கொண்டு, உதட்டைக் குவித்து உம்..., என்று வைத்துக்கொண்டு, அவனுக்கு முதுகு காட்டி அமர்ந்திருந்தாள்.

அவள் கோபத்தை ரசித்துக் கொண்டிருந்தான் ஜீவா. அவன் அணிந்திருந்த டைக்கு விடை கொடுத்து, அருகில் இருந்த டீப்பாயில் அது அனாதையாகக் கிடந்தது. சிறிது நேரம் அமைதியாக இருந்த அஞ்சலி, ஜீவா பேசாமல் போகவே, மெதுவாகத் திரும்பிப் பார்த்தாள்.

ஜீவா கண்களில் சிரிப்புடன் அவளையே பார்த்துக் கொண்டிருக்கவே, “ஹூம்...”, என சொல்லி மறுபடியும் திரும்பிக் கொண்டு, “அஞ்சுப் பாப்பா கோவமா இதுக்கா.....”, அவனுக்கு, தான் கோபமாக இருப்பது தெரியவில்லையோ என்று, அவளே சொன்னாள்.

மகள் பேசிவிடவே, “அப்படியா....? என் அஞ்சும்மாக்கு கோபம் எல்லாம் வருமா? எங்கடா செல்லம் இருக்கு கோபம்?”, அவனும் வளர்ந்த குழந்தையாக மாறி அவளிடம் பேச்சுக் கொடுத்தான்.

“ம்ம்ம்...”, கேள்வியாக ஒரு ம்’ கொட்டிவிட்டு, “இங்க....”, என்று அவள் மூக்கைத் தொட்டுக் காட்டினாள்.

“ஓ..., இந்த மூக்குலதான் கோபம் இருக்கா? அதைப் போக வைக்க என்ன செய்யலாம்...?”, தீவிரமாக யோசிப்பவன் போன்று முகத்தை வைத்துக் கொண்டு, நாடியில் ஒற்றை விரலால் தட்டினான். அவனது இந்தச் செய்கையில், தந்தை என்ன செய்யப் போகிறான் என்று ஆர்வமாக அவன் முகத்தைப் பார்த்தாள்.

“ஹாங்...., கண்டு புடிச்சுட்டேன். அப்பா அந்த மூக்கில் ஒரு முத்தா கொடுத்தால் அது ஓடியே போய்டும். கொடுக்கட்டுமா..., ஆங்...ஆங்..”, அவள் இடையில் கிச்சுகிச்சு மூட்டி, மூக்கில் முத்தமிட்டான்.

தன் கோபம் மறந்து சிரிக்கத் துவங்கினாள் அஞ்சலி. அவளை அப்படியே கைகளில் ஏந்திக் கொண்டு, “முத்து..., நீங்க டின்னர் எடுத்து வைங்க, நான் குளிச்சுட்டு வந்துடுறேன்”, சொல்லிவிட்டு, அஞ்சலியைத் தூக்கிக் கொண்டு மாடியேறினான்.

“அஞ்சும்மா..., இன்னைக்கு ஸ்கூல் எப்படி இருந்துது? உங்களுக்கு ஸ்கூல் பிடிச்சிருக்கா?”, அவளை கட்டிலில் விட்டுவிட்டு, உடை மாற்றினான்.

உற்சாகமானாள் அஞ்சலி, “அப்பா..., எனக்கு தொம்ப, பிச்சுக்கு. எல்லா குத்தி பசங்க..., நா(ன்) மண்ணுத விதாடினேன்....., அங்க ஆயா இதுக்கு..., மதம்(மரம்) இதுக்கு, சதுக்கு இதுக்கு..., குத்தி சதுக்கு...,

பாப்பா ஓதி(டி) உதுந்துத்தேன்..., அதவே இல்ல..., மிஸ் என்னை... தமத்து தொன்னாங்க. தாத்தா வந்தப்போ, நா வதவே மாத்தே சொன்னே... ஆனா அவதான் உதல..., நீங்க நாளைக்கு உத சொல்லுதீங்களா?”, அவன் கேட்பதற்காகவே காத்திருந்தவள்போல், மடை திறந்த வெள்ளமாக அனைத்தையும் கொட்டினாள்.

அவள் குரலில் உற்சாகம் நிரம்பி வழிந்தது. கண்களில் அப்படி ஒரு ஒளி. எதையோ வென்றுவிட்ட உணர்வு. தன் பிள்ளை உலகத்துக்குள் இப்பொழுதுதான் புகுந்ததுபோல், புதிதாகப் பிறந்தவளாக, உண்மையான சந்தோஷம் இப்படித்தான் இருக்கும் என்பதற்கு இலக்கணமாக நின்றுகொண்டிருந்தாள்.

ஜீவா குளித்து, கீழே வந்து சாப்பிட்டு, அவளுக்கும் ஊட்டி, படுக்கைக்கு வந்து, அவளுக்குப் பால் கொடுத்துவிட்டு, பாத்ரூம் போகச் சொல்லி, படுக்கையில் விழுந்து, இரவு விடிவிளக்கை ஒளிர விட்ட பிறகும் கூட, அவள் பேச்சு நிற்கவே இல்லை.

மகள் பேசுவதையே கேட்டுக் கொண்டிருந்தவன், “போதும்மா தூங்கு...”, என்று கூட ஒரு வார்த்தை சொல்லவில்லை. வாய் ஓயாமல் பேசும் மகளை, இமைக்கக் கூட மறந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவன் நெஞ்சில் காலை தூக்கிப் போட்டுக் கொண்டு, தன் போக்கில் சொல்லிக் கொண்டிருந்தாள் அவள். இறுதியில் யார் முதலில் உறங்கியது என்று தெரியாமலேயே இருவரும் உறங்கினார்கள்.

*******ஒரே நாளில் தன் வாழ்க்கைச் சூழல் மாறிப்போனதை நினைத்தவாறு படுத்திருந்தாள் திவ்யா.

அவளது இடப்பக்கம் ஹேமா ஒருக்களித்துப் படுத்து உறங்கிக் கொண்டிருந்தாள்.

‘இவளுக்கு, அப்படி என்மேல் என்ன பாசம்? இவளுக்கு நான் என்ன செய்தேன்? காரணமே இல்லாமல் ஒருவர்மேல் அன்பு வைக்க முடியுமா? காரணமே இல்லாமல் ஒருவர்மேல் வெறுப்பு வைக்க முடியும்போது இது முடியாதா?

எள்ளி நகையாடிய மனதை, எதையும் நினைக்காதே போ...’, என விரட்டிவிட்டு, விட்டத்தை சிறிது நேரம் வெறித்தாள்.

மாலையில் வண்டியை எடுக்க வந்த தான், இப்பொழுது அவர்கள் வீட்டு மாடியில், படுக்கையறையில் பாயில் படுத்திருப்பதை, சுத்தமாக அவளால் நம்ப முடியவில்லை. கண்டிப்பாக நான் ஏதாவது சுகமான கனவுதான் கண்டு கொண்டிருக்கிறேன், இல்லாவிட்டால் என் வாழ்வில் இது சாத்தியமே இல்லை... என்று மனம் வாதாடியது.

நீ காண்பது கனவென்றால், உன் அருகில் படுத்திருக்கும் இவள் என்ன பொய்யா’, மனசாட்சி குரல் கொடுத்தது. அதை நம்பவும் முடியாமல், நம்பாமல் இருக்கவும் முடியாமல், ஹேமாவையே பார்த்தவாறு இருந்தாள்.

இவள் பார்வையை உணர்ந்தவள்போல் கண்விழித்துப் பார்த்தாள் ஹேமா. “என்ன திவ்யா தூக்கம் வரலையா? ஓ..., புது இடம் இல்ல, ரெண்டுநாள் அப்படித்தான் இருக்கும்”, கேள்வியும் பதிலும் அவளே சொல்லிக் கொண்டாள்.

“நான் தூக்கத்தைத் தொலைத்து ரொம்ப வருஷமாகுது ஹேமா...., இனிமேல் அது வருங்குற நம்பிக்கை எனக்கு இல்லை”, விரக்தியில் தோய்ந்து வந்து விழுந்தன வார்த்தைகள். சரியாக அதே நேரம், “அம்மா.....”, என்ற வீறிடலுடன், “அம்மா, எங்க..., வேணு...”, கண்களைத் திறக்காமல் கதறினான் கண்ணன்.

‘என் நிலையைப் பார்த்தாயா..?’, என்பதுபோல் வேதனையைச் சுமந்து ஒரு பார்வை ஹேமாவைப் பார்க்க,

அவளோ அதை விடுத்து, கதறும் கண்ணனைத் தூக்கினாள். விளக்கை ஒளிரவிட்டு, “கண்ணா.., இங்கே பார்”, பாத்ரூம் சென்று நீர் பிடித்து அவன் முகத்தை துடைத்தாள்.

மலங்க விழித்து, அம்மா என்றே மறுபடியும் கதறினான். “உங்க அம்மா இங்கேதான் இருக்காங்க கண்ணா. என்னடா?”, அவள் அவனைச் சமாதானம் செய்ய,

“அப்...அப்..அப்பா....”, நடுங்கினான் அவன்.

“அப்பா வேணுமா கண்ணா....?”, ஹேமா அவன் அப்பாவைத் தேடுகிறான் என்று எண்ணி கேட்க, “வேணா..., அ..அ..., வேணா...”, ஓலமிட்டான் அவன்.

அவனது ஓலத்தைக் கேட்ட திவ்யா, ஓடிவந்து அவனை அணைத்துக் கொண்டாள். “கண்ணா..., அப்பா வரமாட்டாங்கடா..., ..., இனிமேல் வரவே மாட்டார். அழாதடா கண்ணா..., அம்மாவால் முடியலடா”, கட்டிக்கொண்டு கதறினாள் அவளும்.

நடக்கும் செயல்களை எப்படி எடுத்துக்கொள்ளவென்று தெரியாமல், திகைத்து நின்றவள், திவ்யா அழத் துவங்கவே, “கண்ணா.., நீ அழுதா அம்மா அழுவாங்க. அழாதடா கண்ணா. என் கிட்டே வாறியா? நான் கதை சொல்லித் தாறேன்”, கொஞ்சம் கட்டாயப்படுத்தி அவனை வாரிக் கொண்டாள்.

“திவ்யா, அழாதீங்க. நான் கண்ணனைத் தூங்க வைக்கிறேன். நீங்க படுங்க”, சொல்லிவிட்டு, விளக்கை அணைத்துவிட்டு, அவனைத் தன் மார்பில் போட்டுக் கொண்டு தட்டிக் கொடுத்தவாறே, கதை சொன்னாள்.

அவள் சொன்ன கதையை, அவன் கேட்டானா தெரியாது? விடி விளக்கின் ஒளியில், தாய் அழுவது மட்டுமே அவனுக்குத் தெரிந்தது. ஹேமா சொன்ன, “கண்ணா.., நீ

அழுதா அம்மா அழுவாங்க", என்ற வாசகம் அவன் காதில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

ஹேமாவின் மேலிருந்து எழுந்து, தாயின் அருகில் சென்று அமர்ந்தவன், அவள் கண்ணீரைத் துடைத்துவிட்டு, "அம்மா, கண்ணா... ம்ம்..., நீ ம்ம்...", அழ மாட்டேன், அழாதே என்று சொல்ல அவனுக்குத் தெரியவில்லை. செய்கையால் கண்ணீரைத் துடைப்பதுபோல் செய்து காண்பித்தான்.

"இல்லடா கண்ணா...., அம்மா அழமாட்டேன் நீ தூங்கு", அவள் சொல்லவே, அவள் கன்னங்களில் கை வைத்துப் படுத்துக் கொண்டான். படுத்தவன் நொடியில் தூங்கியும் போனான்.

திவ்யா விட்டத்தை வெறித்தவாறே படுத்திருந்தாள். கண்ணன் உறங்கிவிட்டதை உணர்ந்த ஹேமா, "திவ்யா அவன் தூங்கிட்டான். கொஞ்சம் தள்ளிப் படுக்கப் போட்டுக்கோ", எதார்த்தமாகச் சொன்னாள்.

"வேண்டாம் ஹேமா, அவனுக்கு இந்த அணைப்பு, கொஞ்ச நாளாகத்தான் கிடைக்குது, அதைக் கெடுக்க வேண்டாம்", இன்னும் அவனை இறுக்கிக் கொண்டாள்.

மனதிற்குள் பிசைந்தது ஹேமாவிற்கு, ஆனாலும் அதை வெளிக் காட்டாமல், "அவன் வளர்ற பிள்ளை திவ்யா. இப்படியே அவனைப் பொத்தி வைக்க முடிவு பண்ணிட்டியா? அவன் தைரியமா இருக்கணும்னு உனக்குத் தோணலையா? நீ இப்படியே செஞ்சால் அவன் கோழையா போய்டுவான்", ஆதங்கமாகச் சொன்னாள்.

"நான் என்னதான் செய்யட்டும் ஹேமா?", பரிதாபமாகக் கேட்கும் தோழியை, கண்கலங்கப் பார்த்தாள் ஹேமா.

எழுந்து அவள் அருகில் சென்று, கண்ணனை மெதுவாக நகர்த்தி, தனியாகப் படுக்க வைத்தாள். "திவ்யா, இனிமேல் கண்ணன் அவ்வளவா அழ மாட்டான். அப்படியே அழுதான்னா, நீ இருக்கன்னு தைரியம் சொல்லு, சீக்கிரம்

சரியாயிடுவான்”, அவளுக்கு நம்பிக்கை கொடுக்க முயன்றாள்.

“இந்த ஆறு மாசமா நான் அதைத்தான் செஞ்சுட்டு இருக்கேன் ஹேமா. எந்த மாற்றமும் இல்லையே...., எனக்குதான் இது விதின்னு எடுத்துக்கலாம். என் வயித்துல பொறந்ததைத் தவிர அவன் ஒரு பாவமும் செய்யலையே..., அவனுக்கு ஏன் இந்த துன்பம்..? என் வயித்துல பொறந்ததுக்கா, அவனுக்கு இவ்வளவு பெரிய தண்டனை..?

“என்னால் தாங்கவே முடியலையே ஹேமா...., எங்கே நெஞ்சு வெடிச்சு செத்துடுவனோ, இவன் அனாதையாப் போய்டுவானொன்னு இப்போல்லாம் ரொம்ப பயம்மா இருக்கு”, ஹேமா என்னவோ நெடுநாள் தோழி போல் அவளை தோளில் சாய்த்துக் கொண்டாள்.

திவ்யா அழுது ஓய்ந்தாள். தோள்சாய ஒரு தோழி கிடைத்தது மிகுந்த ஆறுதலையும், நம்பிக்கையையும், மனதை நெகிழவும் செய்திருந்தது. எனவே தன் துன்பங்கள் அனைத்தையும் கொட்டிக் கவிழ்ப்பவள்போல் அழுது முடித்தாள்.

“அப்படியெல்லாம் எதுவும் ஆகாது. முதல்ல நீ எழுந்து வெளியே வா..., எல்லாம் பிறகு பேசலாம்”, அவளை இழுத்துக் கொண்டு சென்றாள்.

நேரம் நள்ளிரவைக் கடந்து இரண்டு மணியைக் காட்டியது. இரண்டும் கெட்டான் வேளையில் எழுந்து, காபியும் போட்டு குடிக்க முடியாது. எனவே கொஞ்சம் தண்ணீர் கொடுத்து, குடிக்கச் சொன்னாள் ஹேமா.

மறுக்காமல் வாங்கிக் குடித்தவள். வெறிச்சோடி இருந்த ஹாலின் நடுவில் இருவரும் அமர்ந்தார்கள். விளக்கைப் போட்டால், அக்கம் பக்கம் வீடுகளில் இருப்பவர்கள் சந்தேகப் படுவார்கள் என்பதால், விடிவிளக்கைப் போட்டுவிட்டு, அமர்ந்தார்கள்.

இருட்டு கண்ணுக்குப் பழகி, இருவரின் முகமும், ஒருவர் மற்றவருக்கு வரி வடிவமாகத் தெரிந்தது. திவ்யாவின் கரங்களை தன் கைகளில் ஏந்திக் கொண்டாள்.

“திவ்யா.., நான் ஒண்ணு கேட்டால் நீ தப்பா நினைக்க மாட்டியே...”, தயக்கமாகக் கேட்டாள்.

“உன்னைப்போய் நான் தப்பா நினைப்பேனா ஹேமா. வயசான உங்க அம்மாவை விட்டுட்டு, எங்க துணைக்கு வந்து படுத்திருக்க. சொந்த அக்கா தங்கை கூட செய்ய யோசிப்பாங்க...., என்னன்னு கேளு”, மனதாரச் சொன்னாள்.

“இல்ல..., கண்ணன்..., அப்பா...”, திவ்யாவின் கைகள் இறுகுவதை உணர்ந்து பேச்சை அப்படியே நிறுத்தினாள். “உனக்குக் கஷ்டமா இருந்தால் வேண்டாம்...”, வேகமாகச் சொன்னாள்.

“என்னைக்கா இருந்தாலும் நான் உன்கிட்டே சொல்லாமல் இருக்க மாட்டேன். அதை இப்போவே சொல்லுவதில் எனக்கு எந்தக் கஷ்டமும் இல்லை...”, சொல்லிவிட்டு ஆழ்ந்து மூச்சு விட்டாள்.

“ஹேமா.... திருமணம் என்பது ஆண்களோட வாழ்வில் ஒரு நிகழ்வு, ஆனால் அதுவே ஒரு பொண்ணோட வாழ்வில், அது மிகப் பெரிய மாற்றம். அவள் வாழ்ந்த வீட்டில் இருந்து, அவளை அப்படியே....., வேரோடப் பிடுங்கி எடுத்து, மற்றொரு இடத்தில் நட்டு வைக்கும் விழாதான் திருமணம். அதில், துளிர்த்த பெண்களும் உண்டு, பட்டுப்போன பெண்களும் உண்டு.....

“இதில் நான் ரெண்டாவது ரகம்....., என் திருமண வாழ்க்கை, எங்கே சறுக்கியதுன்னு எனக்குத் தெரியவே இல்லை...., நான் வாழ்ந்தேனா என்பது கூட தெரியலை.....

“கண்ணன், என்னோட காதலுக்குப் பிறந்தானா? காமத்துக்குப் பிறந்தானா என்பது கூடத் தெரியலை.....”,

திவ்யா மடை திறந்த வெள்ளமாக அனைத்தையும் சொல்லி முடித்து ஓய்ந்த பொழுது, ஹேமா அவளைக் கட்டிக்கொண்டு, வாய்விட்டுக் கதறினாள்.

“ஐயோ...., திவ்யா...., இவ்வளவு கஷ்டப் பட்டியா? அவன் மனுஷனா இல்லை மிருகமா?”, என்னமோ, அவளே அந்தத் துன்பங்களைப் பட்டவள்போல் துடித்துப் போனாள். இருவரின் இரவுத் தூக்கமும் பறிபோயிருந்தது அன்று.

***

தாகம் - 18.

மனித உருவில் பல மிருகங்கள்

மனிதத் தன்மையே இல்லாமல்

இருப்பவர்களை....

வேறு என்ன சொல்வது...?

மனித மிருகங்கள் என்றா....?

இரவில் களித்த இன்ப நினைவுகளுடன், முகம் குப்புற விழுந்து உறங்கிக் கொண்டிருந்த நந்தன், லேசாக விழிப்பு வரவே, தன் வலக்கையை நீட்டி, படுக்கையைத் துழாவினான். ஏசி குளிருக்கு இதமாக, போர்வைக்குள் சுருண்டிருந்தாள் ப்ரியா.

அவள் உறக்கம் கலையாதவாறு எழுந்து குளிக்கச் சென்றவன், இரவு அவளிடம் சொன்னதுபோல், தன் மீசையை மழித்துக் கொண்டான். அவனது அதீதக் காதல், தான் ஆசையாக வளர்த்த, தனக்கு மிகுந்த கம்பீரத்தை அளித்த மீசை பறி போவதைப் பற்றி, ஒரு சதவீதம் கூட அவன் வருத்தப்படவே இல்லை.

தன் காதல் மனைவியை, எந்த விதத்திலும் காயப்படுத்தாமல் நடந்துகொள்ள வேண்டும் என்றே விரும்பினான். முகத்தைக் கண்ணாடியில் பார்க்கும்போது, அவனுக்கு குறை ஒன்றும் தெரியவில்லை.

மாறாக, எதையோ வென்ற உணர்வு, காதலியை அடைந்த பரவசம். இரவு நடந்து முடிந்த கூடலின் இனிய நினைவுகளோடு, அந்த இன்பத்தின் மிச்சம் மனதில் ஒட்டியிருக்க, சந்தோஷத்தின் உச்சியில் இருந்தான். நந்தனின் ஒவ்வொரு செல்லிலும் ஆனந்தம் கூத்தாடியது. காலையிலும் அவளைத் தழுவி, சுகிக்கவே விரும்பினான்.

அதற்கு முன்பு, அவளுக்குப் பிடிக்காத மீசை இல்லாமல், அவளுக்குப் பிடித்த முகத்துடன், ஓர் இதழ் முத்தம் அவனுக்கு அவசியமாக இருந்தது. வேகமாகக் குளித்து முடித்தவன், ஆர்வமாக வெளியே வந்தான்.

அங்கே அவன் கண்ட காட்சியில் துணுக்குற்றான். ப்ரியா படுக்கையில் எழுந்து அமர்ந்துகொண்டு, தலையை விரித்துப் போட்டவாறு, முழங்கால்களைக் கட்டிக் கொண்டு, அதில் தலையைக் கவிழ்த்தவாறு அமர்ந்திருந்தாள்.

அவள் தூங்கிக் கொண்டிருப்பாள் என்று எதிர் பார்த்து வந்தவன், அவள் இந்தக் கோலத்தில் அமர்ந்திருப்பதைப் பார்த்து, வேகமாக அவள் அருகில் சென்றான்.

“ப்ரியாம்மா..., என்னடா ஆச்சு....?”, கேட்டவாறு அவள் தோளைத் தொட்டான்.

“என்னைத் தொடாத.....”, வெடுக்கென அவன் கையைத் தள்ளிவிட்டு, தலையையும் சிலுப்பி, நிமிர்ந்து பார்த்த அவள் விழிகளில் குரோதம் கொப்பளித்தது.

அவள் பேச்சும், தலைவிரிக் கோலமும், அதை அவள் சிலுப்பிய விதமும், அவள் கண்களில் தெரிந்தக் கனலும், நந்தனுக்கு குழப்பத்தை அளித்தது. அதைவிட, அவள் ‘தொடாதே’ என்று சொன்ன விதம்..., உறைந்து போய் அமர்ந்திருந்தான்.

“என்னம்மா.... விளையாட்டு இது?”, மறுபடியும் அவன் தொட முயல,

“தொடாதடா...”, இன்னும் அவன் கண்களில் அவள் சொல்வதை நம்ப முடியாத பாவனைத் தெரியவே, “நீ உண்மையாவே ஆம்பளையா இருந்தா என்னை இனிமேல் தொடாதே. அப்படித் தொட்ட, நான் இப்படியே, கொளுத்திட்டு செத்துடுவேன்”, அவள் குரலில் இருந்த ஆங்காரம் அவனை இரண்டடி பின்வாங்கச் செய்தது.

திருமணம் முடிந்து, முதல் இரவும் முடிந்து, ஆசை மனைவியின் வாயில் இருந்து வந்து விழும் வார்த்தைகளை, உண்மை என்று நம்பவும் முடியாமல், பொய் என்று தள்ளவும் முடியாமல், அவளைவிட்டு தூரமாக நகர்ந்து அமர்ந்தான்.

சிலவேளை, அவளுக்கு மூளைப் பிசகோ, அதை மறைத்து திருமணம் செய்து வைத்து விட்டார்களோ? என்ற சந்தேகம் கூட எழுந்தது. அப்படி இருந்தாலும், அவளுக்கு வைத்தியம் பார்த்து, அவளை சரியாக்குவேன், என்றுதான் இப்பொழுதும் அவனது காதல் உள்ளம் கசிந்தது.

ஆனாலும் அவள் வார்த்தையை மீறி, அவளைத் தொடும் எண்ணம் எழவில்லை. “சரிடா தொடலை...., நீபோய் முதல்ல குளிச்சுட்டு வா. நாம கீழேபோய் டிப்பன் சாப்பிடலாம்”, இறங்கியே பேசினான்.

“எனக்கு எப்போ சாப்பிடணும்னு தோணுதோ அப்போ நான் சாப்ட்டுக்குறேன். முதல்ல நீ இந்த ரூமை விட்டு வெளியே போ..., இனிமேல் இது என்னோட ரூம்...., என்னோட அனுமதி இல்லாமல்..., இங்கே நீ வரவே கூடாது. வெளியே போ.....”, கையை வாசல் பக்கம் நீட்டி அவள் கத்தவே, அவன்தான் பரிதவித்துப் போனான்.

வீடு நிறைய சொந்த பந்தங்கள் இருக்கையில், அவள் இப்படிக் கத்துவது எங்கே அவர்களுக்குக் கேட்டுவிடுமோ, என்று வேகமாக உடை மாற்றிவிட்டு, அறையிலிருந்து வெளியேறினான்.

சுற்றிலும் பார்வையைச் சுழலவிட்டான், யாரும் அங்கே இருப்பதாகத் தெரியவில்லை. ஆழ்ந்த மூச்சுக்களை எடுத்துவிட்டான். இதயத்தின் தவிப்பு அடங்கவில்லை. எங்கேயாவது தனிமையில் அமர்ந்து சிந்திக்கவேண்டும்போல் இருந்தது.

அதை உதறிவிட்டு, முதலில் தாயைத் தேடிச் சென்றான். வீடு கொஞ்சம் வெறிச்சோடித்தான் இருந்தது.

வேலைக்காரப் பெண்கள் இரண்டுபேர் கிச்சனில் இருப்பது தெரிந்தது.

“டி வள்ளி, ஐயா எந்திரிச்ச உடனே கோவிலுக்கு வரச் சொல்லுன்னு சொல்லிட்டுப் போனாங்க. ஆனா அவங்க இன்னும் எழுந்து வரலையே. எழுப்பவும் தயக்கமா இருக்கு.....”, அவர்கள் பேச்சு காதில் விழவே, அங்கு சென்றான்.

“வள்ளி... அம்மா எந்தக் கோவிலுக்குப் போயிருக்காங்க?”, வேகமாகக் கேட்டான்.

“எல்லோருமே முருகன் கோவிலுக்குத்தான் போயிருக்காங்கையய்யா. உங்களையும் சாப்பிட்டுட்டு அங்கே வரச் சொன்னாங்க. மதியம் அங்கே, நம்மளோட அன்னதானமாம், அதுக்குள்ளே உங்களை வரச் சொன்னாங்கையய்யா”, பவ்யமாகச் சொன்னாள்.

“சாப்பாடு எடுத்து வைக்கட்டுமாய்யா? அம்மா எங்கே?”, கேட்டுவிட்டு சாப்பாட்டு மேசையை நோக்கிச் சென்றாள்.

“ஐயா...., அம்மா....”, அவள் தயங்கினாள்.

“நீ எனக்கு சாப்பாடு எடுத்து வை. நான் கோவிலுக்குப் போறேன். அவளே வந்து சாப்பிடுவா, நீ அங்கே போகாதே சரியா?”, எங்கே அந்த சின்னப் பிள்ளையை திட்டி விடுவாளோ என்று பயந்தே அப்படிச் சொன்னான்.

இரண்டு இட்லிகளை விழுங்கியவன், கை கழுவிவிட்டு, கோவிலுக்குச் சென்றான். போகும் முன்னர் அலைபேசி, பர்ஸ், கீ அனைத்தும் இருக்கிறதா என்று சரி பார்த்துக் கொண்டான். மனதின் குழப்பங்களை ஒதுக்கினான்.

‘எதற்கும் அவள் நன்றாக ஓய்வு எடுக்கட்டும். மிச்சத்தைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். அவள் எதையோ நினைத்து கலங்குறா போல, அவகிட்டே நம்ம நேசத்தை சொல்லிப்

புரிய வைத்தால் எல்லாம் சரியாகிப் போகும்’, தனக்குத் தானே சமாதானம் செய்துகொண்டு விரைந்தான்.

எவ்வளவுதான் தன்னைச் சமாதானம் செய்து கொண்டாலும், மனதின் ஓரத்தில் கலக்கம் மூள்வதை அவனால் தவிர்க்க முடியவில்லை. அதிலும் அவள் பார்த்த பார்வை, அதில் தெரிந்த குரோதம்...., எதுவோ சரியில்லையோ, என்று அவனைத் துவளவும் வைத்தது.

யோசனையோடே கோவிலுக்கு வந்துவிட்டவன், சன்னிதியில் நின்று மனம் உருக வேண்டினான். தன் வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும், ப்ரியாவின் குழப்பங்கள் தீர வேண்டும் என மன்றாடினான். ஆனால் அவனது வேண்டுதல் எதுவுமே முருகனைச் சென்றுச் சேர்ந்ததா என்பது தெரியவில்லை.

வசந்தா வந்து அவனிடம் மருமகளைக் கேட்க, அவளுக்குக் கொஞ்சம் உடல்நிலை சரியில்லை என்று சொல்லி சமாளித்தான். அவனது சித்தப்பா குடும்பத்தவரும், மாமா வீட்டாரும், அவனைக் கோபப்பார்வை பார்த்ததை, அவனால் தவிர்க்க முடியவில்லை. தப்பு தன் பக்கம் இருக்கும்போது என்ன செய்வது, என்று அமைதியாகி விட்டான்.

அனைத்தும் முடிந்து வீட்டிற்கு வந்தவர்கள், சாப்பிட்டுவிட்டு கிளம்புவதாகச் சொல்லவே, ப்ரியாவிடம் விடைபெற விரும்பினார்கள். இதைத் தவிர்ப்பது முடியாத காரியம் என்று தெரியவே, தயக்கமாகவே மாடியேறினான்.

அறைக் கதவை விரலால் தட்டினான். உள்ளிருந்து எந்த அரவமும் இருக்கவில்லை. தயக்கத்தை உதறிவிட்டு, அறைக்குள் அடியெடுத்து வைத்தான். ப்ரியா அலங்காரப் பதுமையாக கட்டிலில் அமர்ந்திருந்தாள். கையில் ஒரு நாவல்.....

வந்தவனை ஏறிட்டும் பார்க்காமல், என்னமோ பரீட்ச்சைக்குப் படிப்பவள் போல், புத்தகத்துக்குள்ளே

புதைந்து கொண்டிருந்தாள் அவள்.

“ப்ரியா.... மாமா, சித்தப்பா எல்லாம் கிளம்புறாங்க. கொஞ்சம் அங்கே வந்து, அவங்களை வழி அனுப்பிட்டு வந்துடுறியா?பெரியவங்க....”, அவளது கனல் பார்வையைப் பார்த்து, பாதியில் நிறுத்தினான்.

“உன்னை என்னோட ரூமுக்குள்ளே வரக் கூடாதுன்னு சொன்னதா ஞாபகம்.... என்கிட்டே சொல்லாமல் அவங்க போக மாட்டாங்களாமா? முதல நீ வெளியே போ.....”, அவள் நக்கலாகவும் அலட்சியமாகவும் கத்தினாள்.

கலவரமானான் நந்தன். வேகமாக கதவைத் தாழிட்டான். “கொஞ்சம் மெதுவாப் பேசேன்...., நான் இங்கேதானே இருக்கேன். ஏன் இப்படி நடந்துக்குற?”, கோபத்தை உள்ளடக்கிய குரலில் கேட்டான்.

“ஏய்..., வெளியே போன்னு சொல்லிட்டு இருக்கேன், நீ உள்ளே வந்து தாழ் போடுற, அறிவில்ல....”, அவள் கூச்சல் அதிகரித்தது.

அவள் கத்துவது கீழே இருந்த அனைவருக்கும் கேட்கவே, அனைவரும் மேலே ஏறி வந்தார்கள். அவர்கள் வரும் அரவம் கேட்கவே, “ப்ரியா நான் உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்குறேன். எதுவா இருந்தாலும் நாம பிறகு பேசி தீத்துக்கலாம். நீ சும்மா நின்னால் போதும், எல்லாம் நான் பாத்துக்கறேன்”, தன் குடும்ப கௌரவம், தன் ஆசைக் கல்யாணம் தோல்வியாவதை மற்றவர் அறிவதை அவன் விரும்பவில்லை.

அவன் வார்த்தைக்குக் கட்டுப்பட்டவள்போல், புத்தகத்தை மூடிவிட்டு, அலட்சியமாக எழுந்து நின்றாள். அவள் எழவே கொஞ்சம் நிம்மதியாக உணர்ந்தான். வேகமாக கதவைத் திறந்துகொண்டு, “இதோ வந்துட்டா....”, அவசரமாகச் சொன்னான்.

அவர்கள் விடைபெறும் முன்பே, “சொல்லிட்டுதான் போவீங்களோ..? சொல்லிட்டிங்கல்ல.....?”, தலையைச் சிலுப்பி, அலட்சியம் கொஞ்சம் கூடக் குறையாமல் கேட்டுவிட்டு, திரும்பி அறைக்குள் நடந்தாள்.

அவமானமாக உணர்ந்தான் நந்தன். அவர்களின் முகத்தை நிமிர்ந்து பார்க்கவே முடியவில்லை. அவளை அழைக்காமல் இருந்திருந்தாலாவது, இந்த அவமானம் இல்லாமல் போயிருக்கும். இப்பொழுது முகத்தை எங்கே வைத்துக் கொள்வது.?...

“மாமா...., சித்தப்பா....”, இவன் பேச்சைக் கேட்க அங்கு யாரும் இருக்கவில்லை. வாகனங்கள் கிளம்பிச் செல்லும் ஓசைக் கேட்டது. அவன் தாயைப் பார்க்க, முகம் முழுக்க வியர்வையில் குளித்திருக்க, வேதனையாக அவனைப் பார்த்தவாறே மயங்கிச் சரிந்தார் வசந்தா.

“அம்மா....., என்னமா செய்யுது.....?”, அவன் தாயைத் தாங்கிக் கொண்டான்.

“என்ன நந்தா இது.....? உன் வாழ்க்கை.....”, அதற்குமேல் அவரால் பேச முடியவில்லை. ஒருபக்கம் கையும் காலும் இழுத்துக் கொண்டது.

“அம்மா.....”, அவன் கதறலில் வேலைக்காரர்கள் அனைவரும் ஓடி வந்தார்கள். ப்ரியாவும் வந்தாள்.... “உயிர் இருக்கா? இல்ல போய்டுச்சா?”, ஏளனமாகக் கேட்க, நீயும் ஒரு பெண்ணா? என ஒரு புழுவைப்போல் அவளைப் பார்த்தான்.

அவளைப் பார்ப்பது கால விரயம் எனத் தோன்ற, தாயை வேகமாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றான். அவசர சிகிச்சைப் பிரிவில் அவரைச் சேர்த்தார்கள். மாரடைப்பும், பக்கவாதமும் ஒருங்கே தாக்கியிருப்பதாகச் சொன்னார்கள்.

ஒரே நாளில், தன் வாழ்க்கை சுனாமியில் சிக்கியத் துரும்பாக அடிக்கப் பட்டுவிட்டதை உணர்ந்தான். ‘காதல் செய்தது அவ்வளவு பெரிய குற்றமா? என் காதல், என் கௌரவத்தை மட்டுமல்லாமல், என் தாயின் உயிரையே பலி வாங்குகிறதே’, நொந்து போனான்.

மருத்துவமனையில் தனியாக அல்லல் பட்டான். சாய்ந்துகொள்ளவும், ஆறுதலான ஒரு வார்த்தைக்கும், அவனுக்கு வலிகளைக் கொடுத்த ப்ரியாவையே நாடியது அவன் மனம். இப்பொழுதும், அவளது ஆறுதலைத் தேடும் தன் மனநிலையை அவனே வெறுத்தான்.

ஆயிரம் பேருக்கு படியளக்கும் அவன், அனாதையாக ஹாஸ்பிடல் வராண்டாவில், சேரில் கண்ணீர் வழிய அமர்ந்திருந்தான். தன் மாமா மற்றும் சித்தப்பாவின் துணையை நாடும் தைரியம் கூட வரவில்லை.

உன் தாயின் இந்த நிலைக்கு நீதானே காரணம், என்று அவர்கள் கேட்டுவிட்டால், முகத்தை எங்கே கொண்டுபோய் வைத்துக் கொள்வது. அவன் வேதனையில் துவளும் வேளையில் அங்கே வந்தான் குமார்.

அங்கிருந்த சூழலை, தன் கைகளில் எடுத்துக் கொண்டான். மருத்துவரை சந்திப்பது, மருந்து வாங்குவது, பணம் கட்டுவது என அனைத்தையும் அவனே செய்தான். சலனமே இல்லாத பார்வையில் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தான் நந்தன்.

உனக்கு எப்படித் தெரியும்? நீ ஏன் இங்கே வந்தாய்? இப்படி, எந்தக் கேள்வியையும் அவனைக் கேட்கவில்லை. கொஞ்சம் வேலைகள் ஓய்ந்ததும், தயங்கியவாறே நந்தனின் அருகில் அமர்ந்தான்.

“வீட்டுக்குப் போய்ட்டுதான் வாறேன்.....”, மெதுவாகச் சொன்னான்.

அவனை அடிபட்டப் பார்வை பார்த்தான் நந்தன். ஏன் இப்படி? உனக்கு முன்பே அவள் மனம் தெரியுமா? என்று ஊமையாக அவன் விழிகள் அவனிடம் கேள்வி கேட்டது. அவன் கேள்வியைத் தாங்கிக் கொள்ள முடியாமல், தலை கவிழ்ந்தான் குமார்.

“எனக்கு எதுவுமே தெரியாது சார். ஒரு வார்த்தை...., ஒரே ஒரு வார்த்தை, இந்தக் கல்யாணத்தில் விருப்பம் இல்லைன்னு சொல்லியிருந்தால், நான் அவளைக் கட்டாயப் படுத்தியிருக்கவே மாட்டேன்.

“என்னமோ கிறுக்குத்தனமா உளர்றா சார். என்னன்னு கேட்டால், மூஞ்சியில் அடிச்ச மாதிரி பேசுறா”, தங்கையுடனான தன் உரையாடல் கண்முன் விரிந்தது.

“ப்ரியா ஏம்மா இப்படி நடந்துக்கற, கொஞ்சம் புரிஞ்சு நடந்துக்கம்மா இது உன் வாழ்க்கை....., நந்தனாக இருக்கபோய் அவர் உன்னை எதுவுமே சொல்லலை. இதுவே வேற யாராவது இருந்திருந்தால்...”,

“ஆமா நீ யாரு....?”, அவளது இந்தக் கேள்வியில் சர்வமும் அடங்க, திகைப்பாய் அவளைப் பார்த்தான்.

“என்னமா நீ இப்படி கேட்டுட்ட...? நான் உன் அண்ணம்மா...”,

“வேற எப்படி கேக்கணும்னு நினைக்கிற..? உனக்கு, உன்னோட பாரம் இறங்கணும். என்னை எப்படியாவது, எங்கேயாவது தள்ளி விடணும்னு நினைச்ச..., அதை செஞ்சுட்ட...., அத்தோட உன்னோட வேலை முடிஞ்சுது. இனிமேல் என்கிட்டே கேள்வி கேக்குற வேலை எல்லாம் வச்சுக்காதே...., நல்லாருக்காது சொல்லிட்டேன்...”, அவனிடமும் முதல் முறையாகக் கோபப் பட்டாள்.

“ப்ரியா.....? ஒரு அண்ணனா என் கடமையைச் சரியா செய்யணும்னு நினைச்சது தப்பாம்மா...?”, கலக்கமாகக் கேட்டான்.

“என்னது, நீ என் அண்ணனா...? கடமையைச் செய்யணும்னு நினைச்ச நீ, அதில் கொஞ்சம் பாசத்தைக் கலந்திருந்தா, நானும் என் என் மனசில் இருந்ததை மறைக்காமல் சொல்லி இருப்பேன். அப்படிச் செய்யாமல் என் வாழ்க்கையவே நாசம் பண்ணிட்டியே”.

“ஒரு வார்த்தை...., ஒரே ஒரு வார்த்தை...., உனக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பமான்னு கேட்டியா...? நீ செய்யலையே..., இதுவே அம்மா இருந்திருந்தால், என் மனசுக்குப் பிடிக்காத கல்யாணம் நடந்து இருக்குமா....?”, கதறியழும் தன் தங்கையை நெஞ்சம் விம்மும் வலியுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அதிலும் அம்மா இருந்திருந்தால்...., என்று அவள் கேட்டதில் இருந்த உண்மை அவனைச் சுட்டது. சின்னப் பெண், அவள் வாழ்க்கைக்கு நல்லதை நாம்தான் செய்ய வேண்டும் என்று நினைக்க, அது எவ்வளவு பெரிய தப்பாகப் போய் விட்டது.

தவறைத் திருத்த முடியும்....., செய்த தப்பை எப்படித் திருத்த...? அதற்கு தண்டனைதான் சரியாக இருக்கும். ஆனால் அவனது தங்கை, தண்டனையைத் தனக்குத் தராமல், நந்தனுக்கும் தன் வாழ்க்கைக்கும் கொடுப்பதைத்தான் தாங்க முடியவில்லை.

“இப்போ இவ்வளவு சொல்லுற நீ, அப்போவே சொல்லி இருக்கலாமே? இது உன்னோட வாழ்க்கைம்மா...., நடந்து முடிந்ததை நம்மளால் மாற்ற முடியாது. ஆனால் நடக்கப் போவதை கண்டிப்பா மாத்த முடியும். நந்தன் உன் மேல் உயிரையே வைத்து இருக்கார்ம்மா”.

“அவரோட அன்பை புரிஞ்சுக்க முயற்சி செய்மா....”, தங்கையின் வாழ்க்கை நல்லபடியாக மாற வேண்டும் என்று அவன் விரும்பினான்.

“என்னது வாழ்க்கையா....? எனக்கா....? அது, என்னைக்கு அந்த நந்தன் என் கழுத்தில் தாலி கட்டினானோ....., இல்லை இல்லை...., அவன் எப்போ என்னைப் பாத்தானோ

அப்போவே இல்லாமல் போய்டுச்சு.... இப்போ இருக்குறது உன் தங்கை இல்லை.

“அவ செத்துபோய் ரொம்ப நாள் ஆச்சு....., இனிமேல் உன் தங்கச்சியா நினைச்சு என்கிட்டே பேச வராதே...., இப்போகூட நான் பேசக் காரணம்...., என்னால் இந்த மனப் புழுக்கத்தை தாங்க முடியாததால் தான்...., போய்டு....”, சொல்லிவிட்டு, அவன் முகத்தில் கதவை அறைந்து சாத்தினாள்.

“அப்படி உனக்கு ஏம்மா நந்தனைப் பிடிக்காமல் போச்சு....? அதுக்கு என்ன காரணம்....?அதையாவது சொல்லேன்....”, குமார் வெளியே இருந்து கத்தினான்.

‘இனிமேல் அதைச் சொல்லி எந்தப் பிரயோஜனமும் இல்லை....’, மனதுக்குள் எண்ணியவள் வெளியே சொல்லவில்லை.

இதோ, சோர்வாக நந்தனிடம் திரும்பி வந்திருக்கிறான். நந்தன் குமாரின் முகத்தையே பார்க்க, “நான் அவளுக்கு அண்ணன் இல்லையாம், வார்டனாம், கார்டியனாம், என்னோட விருப்பத்தை அவமேல திணிச்சுட்டனாம். எப்பவுமே அவளோட உணர்வுகளையோ, விருப்பங்களையோ நான் மதித்ததே இல்லையாம்,

“என்னைப் பாக்கவே பிடிக்கலை..., இனிமேல் என் கண்முன்னாடியே வராதன்னு.....”, அவனால் சொல்ல முடியாமல் குலுங்கி அழுதான்.

“அவ சின்னப் பொண்ணு சார், அவளுக்கு வாழ்க்கைன்னா என்னன்னு தெரியலை...., என்மேல் உள்ளக் கோபத்தை உங்கமேல காட்டுறா. ஆனா, கண்டிப்பா ஒரு நாள் உங்க அன்பை புரிஞ்சுப்பா சார். எனக்கு உங்கமேல் நம்பிக்கை இருக்கு”, குமார் பேசப் பேச, பிரச்சனையின் நுனி புரிவதுபோல் இருந்தது.

“நீங்க அவகிட்டே கல்யாணத்துக்கு சம்மதம் கேட்டீங்களா இல்லையா...?”, சந்தேகமாகக் கேட்டான்.

மௌனமாகத் தலை கவிழ்ந்தான் குமார். அவனை இந்த இடத்திலேயே கொன்று புதைத்தால் என்ன? என்று கிளர்ந்த வெறியை சூழ்நிலை கருதி அடக்கினான். ஆனாலும், ஏதோ ஒரு காரணம் தெரிந்ததில் நிம்மதி.

இப்பொழுது அவளிடம் பேசுவதை விட, தாயை கவனிப்பதே பிரதானமாக அமைதியாகக் கண்களை மூடிக் கொண்டான்.

********காலையில் சூரியன் சுள்ளென முதுகில் உறைக்க, புரண்டு எழுந்தான் வித்தார்த். நேரம் பார்க்க, அது பத்தைக் காட்டியது. “இவ மனசில் என்னதான் நினைச்சுட்டு இருக்கா? இவ்வளவு நேரமாச்சு, மனுஷனுக்கு ஒரு காபி கொடுக்கணும்னு கூடத் தோணலை. வரட்டும் அவ...”, வாய் விட்டே புலம்பியவாறு கண் விழித்துப் பார்க்க, அருகில் யாரோ படுத்திருப்பது தெரிந்தது.

“ஏய், நீ இன்னுமாடி எந்திரிச்சுப் போகலை. இப்படி இருந்தால் குடும்பம் எப்படி விளங்கும். எந்திரிடி.....”, அவளை எழுப்பினான்.

மயக்கத்தில் இருக்கும் அவளுக்கு எப்படி அது கேட்கும். அவள் மயங்கியதே அவனுக்குத் தெரியவில்லை. எட்டி அவளை உதைத்தான். அதற்கும் அவளிடம் அசைவில்லாமல் போன பிறகுதான், ஏதோ விபரீதம் என்பதையே உணர்ந்தான்.

வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தான். இரவு முழுவதும் அவன் கடித்துக் குதறியதன் அடையாளங்கள், அவள் மேனி முழுவதும் விரவியிருந்ததோ, அவள் முகமே வீங்கி இருந்ததோ, இதழ்கள் ரத்தம் கன்றிப்போய் இருந்ததோ எதுவுமே அவனை அசைக்கவில்லை.

“சை...., என்ன ஜென்மம் இது? ஒரு நாளுக்கே இப்படி ஆயிட்டா. இவளோட இன்னும் எப்படிக் குப்பை கொட்டப்

போறனோ? இவளை என்ன செய்ய?”, அவள் மயக்கத்தைத் தெளியவைக்க, அவள் முகத்தில் தண்ணீர் தெளிக்கவேண்டும் என்றுகூட அவனுக்குத் தோணவில்லை.

“மகாராணிக்கு நாம சேவகம் செய்யணுமோ?”, நெஞ்சில் ஈரமே இல்லாமல் எண்ணிக் கொண்டு, எழுந்து சென்று, காலைக் கடன்களை முடித்து வந்தவன், வந்த வேகத்தில் கிளம்பி அவன் வீட்டுக்குச் சென்றுவிட்டான்.

அலங்கோலமாக வீழ்ந்து கிடந்த அவள் மேனியில், ஒரு போர்வையைப் போர்த்தக்கூடத் தோன்றவில்லை அவனுக்கு. ஒரு வேசியிடம் செல்பவன் கூட, அவளை இவ்வளவு கேவலமாக நடத்த மாட்டான்.

ஆண் அல்ல, மனிதன் என்று சொல்வதற்குக் கூட, அருகதையற்றவனாகிப் போனான் அவன். ஆனால் அவனுக்கு அது தெரியவே இல்லை. அவளை ஆள்வது அவன் உரிமை, இதில் என்ன இருக்கிறது? தன்னைத் தாங்குவது அவளது கடமை, அதைவிட்டு, மயக்கமாகிவிட்ட அவள் மேல்தான் குற்றம் என்பதுபோல் கோபமாகச் சென்றுவிட்டான்.

ஒரு பயித்தியத்தைக் கூட பயித்தியம் என்று ஒதுக்கி விடலாம், அவர்கள் அப்படி ஆனதற்கு ஏதாவது ஒரு காரணம் இருக்கும். ஆனால் மன வக்கிரம் பிடித்த, உடல் தேவை மட்டுமே பிரதானம் என்று எண்ணும்.....,

இந்த மாதிரி சேடிஸ்ட் (எதிராளியை துன்பப்படுத்தி இன்பம் காணும்) மனப்பான்மை உடையவன், கட்டிய மனைவியிடம் அவன் வீரத்தைக் காட்டினால்....., மலரினும் மெல்லிய பெண்மை அதைத் தாங்குமா?

அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த மணி, வேகமாக வீட்டுக்குள் வந்தார்.

“வசு, சின்னவ வந்துட்டாளா? என்ன... மாப்பிள்ளை தனியா வெளியே போறார்? எங்கே போறாராம்? ஏதாவது சொன்னாளா?”, மகள்மேல் இருந்த அக்கறையில், பாசமாகக் கேட்டார்.

“ஆமா... இப்போ வந்துக் கேளுங்க. கொஞ்சம் கூட பொறுப்பே இல்லாமல், இன்னும் ரூமில் இருந்து வராமல் இருக்காளேன்னு நானே கோபத்தில் இருக்கேன், நீங்கவேற ஏன் என்னை எரிச்சல் படுத்துறீங்க....

மாப்பிள்ளை என்ன நினைப்பார், பொண்ணை வளத்துருக்க லட்சணம் பாருன்னு என் மூஞ்சியில்தானே காறித் துப்புவாங்க. உங்களுகென்ன....”, பாத்திரங்கள் அவர் கையில் படாத பாடு பட்டது.

“என்ன சொல்லுற? சின்னவ வரலையா? நீ ரூமுக்குப் போய் பாரு. இவ்வளவு நேரமெல்லாம் அவ தூங்கமாட்டா.... சீக்கிரம் போ..”, மனைவியை விரட்டினார்.

“ஹம்..., என்னைய நல்லா விரட்டுங்க, பொண்ணுங்க கிட்டே கோட்ட விட்டுடுங்க...., இதில் ஐயாவுக்கு அதிகாரம்வேற தூள் பறக்குது”, நொடித்துக் கொண்டே மகளது அறைக்குச் சென்றார்.

கதவை தட்டியும் பதில் இல்லாததால், கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே சென்றார். அங்கே மகள் இருந்த கோலத்திற்கு, பாசமிகுத் தாயாக இருந்திருந்தால் கதறித் துடித்திருப்பார். வசுந்தராவோ கொஞ்சம் அதிர்ந்தவர், வேகமாக அவள் அருகில் சென்று, “என்ன படுத்திருக்கா...?”, அதிர்ந்து புலம்பியவர், போர்வையை எடுத்து மகளைப் போர்த்தினார்.

“தர்ஷிணி.....”, கொஞ்சம் பதட்டமாக அவளை எழுப்பினார். அவளிடம் அசைவில்லாமல் போகவே, பாத்ரூம் சென்று தண்ணீர் பிடித்து, அவள் முகத்தில் தெளித்தார். அவள் எழாமல் போகவே, முழுதாகப் பதட்டம் அவரைத் தொற்றிக் கொண்டது. அறையிலிருந்து அம்பாக வெளியே போனவர்,

“உடனே போய் நம்ம வீட்டுக்கு ரெண்டு வீடு தள்ளியிருக்க லேடி டாக்டரைக் கூட்டி வாங்க”, அவரை அனுப்பினார்.

மணி, மனைவியின் பதட்டத்திலும், மருத்துவரை அழைத்துவர சொன்னதிலும், ஏதோ விபரீதம் என்பதை உணர்ந்து, தன் வயதையும் மறந்து ஓடினார்.

வசுந்தரா கிச்சன் சென்று வெந்நீர் வைத்து, அதை எடுத்துக் கொண்டு, மகளின் அறைக்குச் சென்று, அவள் முகத்தை வென்னீரால் துடைத்தார்.

கொஞ்சம் வீக்கம் குறைந்தாலும் முழுதாகப் போகவில்லை. மனம் அடித்துக் கொண்டது. பதட்டமாக மூக்கின் கீழே விரல் வைத்துப் பார்த்தார். மூச்சு இருக்கவே, கொஞ்சம் நிம்மதியானது. ‘என்ன இருந்தாலும் இப்படியா....?’, வித்தார்த்தைப் பற்றி ஒரு நிமிடம் குறையாக நினைத்தவர்,

‘சாப்ட்டு உடம்பைத் தெம்பா வச்சுக்கோன்னு சொன்னால்..., பராக்கு பாத்துகிட்டு, கேலி பண்ணிக்கிட்டு, அக்கா முந்தானையைப் பிடிச்சுகிட்டே சுத்தி வர வேண்டியது. இப்போ....’, அவர் யோசனையைக் கலைத்தது மருத்துவரின் வருகை.

ஒரு நிமிடம் அறையையும், அவளையும் பார்த்தவர், நொடியில் நிலையை உணர்ந்து கொண்டார். “உங்க மருமகன் எங்கே?”, சூடாக வந்து விழுந்தன வார்த்தைகள்.

“அவர் வெசனப்பட்டுட்டு வெளியே போய்ட்டார்...”, மருமகனை விட்டுக் கொடுக்காமல் பேசினார் வசுந்தரா.

“இவ பொண்ணா இல்லை வேற ஏதாவதா? கொஞ்சமாவது மனுஷத் தன்மையே இல்லாமல் இதென்ன? இதில் நீங்க வேற சப்பைக்கட்டு கட்டுறீங்க. ஏங்க...., மாப்பிளையைப் பத்தி சரியா விசாரிச்சீங்களா இல்லையா? இப்படிப் பாடாப் படுத்தி இருக்கானே. என்னமோ பத்துபேர் சேர்ந்து....., ச்சே... சொல்லவே நாக்கு கூசுது”, கோபமாகச்

சொல்லிவிட்டு, அவள் உடம்பையும், காயங்களையும் ஆராய்ந்தார்.

“எனக்கும் ஒரு பொண்ணு இருக்கா. அவளுக்கு இப்படி ஒரு நிலை வந்தால்...., அவனோட அவ வாழ்ந்ததும் போதும், எல்லாம் போதும்னு ஒரு முடிவுக்கு வந்திருப்பேன்”, அவருக்கு ஆறவே இல்லை.

இத்தனைக்கும் வசுந்தரா அசரவே இல்லை, ஆனாலும் மனதின் ஓரத்தில் கொஞ்சம் வருத்தம் இருந்தது அவ்வளவே. ஆனாலும் இருவரின் ஜாதகமும், ஆண் குழந்தை யோகமும், அவருக்குப் பிரிவைப் பற்றியே யோசிக்க முடியவில்லை.

“டாக்டர்..., புதுசு இல்லை, அதான் இப்படி. கொஞ்ச நாள் போனால் எல்லாம் சரியாயிடும்”.

அவர் பேச்சில், தன் வேலையை ஒரு நிமிடம் நிறுத்தியவர், அவரை நிமிர்ந்து உறுத்துப் பார்த்தார். “உங்களை மாதிரி ஆட்கள் இருக்கறதால்தான், இன்னும் பெண்ணினம் இப்படி அடிமையாவே இருக்கு. அவ எழுந்ததும், எதையும் கேட்டு அவளைத் தொந்தரவு செய்யாதீங்க.

“முக்கியமா, இன்னும் நாலு நாளாவது, அவளை எங்கேயும் அனுப்பாமல் உங்களோடவே வச்சுக்கோங்க. வென்னீரில் குளிக்க வைங்க, இந்த மருந்தை அவங்க காயத்தில் போட்டு விடுங்க”, குரலில் அழுத்தத்தோடு சொல்லிச் சென்றார்.

வெளியில் வந்த அவர் மணியிடமும், மாப்பிள்ளையைப் பற்றி விசாரித்துதான் இந்தக் கல்யாணம் நடந்துதா? என்று கேட்டுவிட்டுச் சென்றார். மணியால் அதைக் கேட்டு நார்மலாக இருக்கவே முடியவில்லை.

மனைவி வந்தவுடன் என்னவென்று துளைத்து எடுத்துவிட்டார். பதிலுக்கு அவரோ, கணவனையும்,

மகள்களையும் வசை பாடினாரே தவிர, மருமகனின் தவறை உரைக்கவே இல்லை.

“முதல்ல மாப்பிள்ளைகிட்டே பேசி அவரை வீட்டுக்கு வரச் சொல்லுங்க. எல்லாம் ஊர் உலகத்தில் நடக்குறதுதான். நீங்க எப்பவும் போல, வெளியே மரத்தடியில் உங்க ஸ்நேகிதங்களோட போய் பேசிட்டு இருங்க. வேளைக்கு ஆக்கிப் போடுறேன்.

“வெளியே போன மருமகனைக் கூப்பிடுறதை விட்டுட்டு, என்கிட்டே விசாரணைக் கமிஷன் வச்சுட்டு இருக்குறது”, வெடுக்கென சொல்லிவிட்டுச் செல்ல, மகளைப் பார்க்க முடியாமல் தவித்துப் போனார் மணி.

இங்கே கீதா இருந்திருந்தால் தர்ஷிணியின் வாழ்க்கை திசை மாறியிருக்குமோ? விதி செய்த சதி, தர்ஷிணியின் வாழ்க்கையை விதியின் வசமே இழுத்துச் சென்றது.

கண்விழித்த தர்ஷிணிக்கு, கொஞ்ச நேரம் தான் எங்கே இருக்கிறோம் என்பதே புரியவில்லை. படுக்கையில் எழுந்து அமர்ந்த பொழுது, உதட்டை அசைக்கவே முடியாமல் வலிப்பதும், உடலிலும் அங்கங்கே வலிகள் தெறிப்பதும் தெரிந்தது.

எழுந்து பாத்ரூம் செல்லவும் முடியவில்லை அவளால். “அம்மா..”, கொஞ்சம் சத்தமாக அழைக்க, உள்ளே வந்தவர், ஒரு வார்த்தை கூடப் பேசாமல்...., அவள் அருகில் வந்தார்.

“அக்கா எங்கேம்மா....”, ஏக்கமாக வந்து விழுந்தன வார்த்தைகள். தாயின் மடிதேடும் பிள்ளையாக தன் அக்காவை நாடினாள்.

“நான்தான் வர வேண்டாம்னு சொன்னேன். இப்போ உனக்கு என்ன வேணும்...?”, கனிவாய் கேட்டிருந்தால் நன்றாக இருந்திருக்குமோ?

“இல்லம்மா நீங்க போங்க....”, தாயைப் போகச் சொன்னாள். அவர் சென்ற பிறகு, கட்டிலில் இருந்து மெதுவாக இறங்கி பாத்ரூம் சென்றாள். எங்கே தலை சுற்றிக் கீழே விழுந்துவிடுவோமோ என்ற பயம் தோன்ற, சுவற்றைப் பிடித்துக்கொண்டே நடந்தாள்.

தனக்குத் திருமணம் என்ற ஒன்று முடிந்துவிட்டது என்பதையே மறந்துவிட்டிருந்தாள். திரும்பி வந்தவளின் பார்வையில் நிலைக்கண்ணாடி விழ, அதில் தெரிந்த தன் முகத்தைக் கண்டு திகைத்தே போனாள்.

அதிர்ச்சியில் ‘அம்மா’.., என்று அலறிவிட்டாள். “எதுக்குடி இப்படிக் கத்தித் தொலையிற? பேசாமல் படுத்துக்கோ, நான் இட்லி எடுத்துட்டு வாறேன். சாப்ட்டுட்டு மாப்பிள்ளை வீட்டுக்குக் கிளம்பணும்”, ஒன்றுமே தெரியாதவர்போல் பேசினார்.

“அம்மா..., எனக்கு என்னமா ஆச்சு...? மாப்பிள்ளை வீடு....., ஹையோ., நான் அங்கே வர மாட்டேன். என்னால் முடியாதும்மா? செத்துடுவேன். என்னை இப்படியே விட்டுடேன். என்னை இந்தக் கோலத்தில் பாத்த பிறகும், உங்களுக்கு எப்படிம்மா என்னை அங்கே கொண்டுபோய் விட மனசு வருது?

காலையில் எழுந்து, அவர் என்னைக் கூட பார்க்காமல் எழுந்து போயிட்டாரா? இப்போ நானே அவரைத் தேடித் போகணுமா? உங்களுக்கு கொஞ்சமாவது....”.

“ஏய்..., நீ, உடம்பை ஒழுங்காப் பாத்துக்காததுக்கு மாப்பிள்ளை என்னடி பண்ணுவார்? எல்லாம் பழகினால் சரியாயிடும். முதல்ல சாப்பிடு....”, பேச்சு அத்துடன் முடிந்ததுபோல் வெளியேறினார்.

‘நான் உடம்பைப் பாத்துக்கணுமா? பழகினால் சரியாயிடுமா? எதைப் பழக, இந்தச் சித்திரவதையையா? பழக முடியுமா? இது ஒரு பெரிய விஷயமே கிடையாதா? அக்கா எங்கக்கா இருக்க? அம்மா உன்னை வர

வேண்டாம்னு சொன்னதும் வரலையா? என்னை எங்கேயோ அனுப்பப் போறாங்களாமே?

எனக்கு என்னமோ ரொம்ப பயம்மா இருக்குக்கா. வந்துடேன்.... எனக்கு உன்கிட்டே பேசணும்க்கா..... ஆண்டவா என்னால் தாங்க முடியலையே....., இதுதான் வாழ்க்கையா?', பதறிப் பரிதவித்தது அந்தப் பேதை மனம்.

அதைக் கேட்கத்தான் ஆளில்லை. "சின்னவளே....", என்று அழைத்த தந்தையின் குரலுக்கு, அவருக்குத் தன் முகத்தைக் காட்ட விரும்பாமல், முழங்காலில் முகத்தைப் பதித்துக் கொண்டு, "போய்டுங்கப்பா....., இப்போ உங்க முகத்தை என்னால் பாக்க முடியாது....", கதறும் மகளைக் கண்டு இயலாமையால் வெளியேறினார்.

இனி அவள் நிலை.....

***

தாகம் - 19.

பட்டாம்பூச்சியாய் சிறகடிக்கும் வயதில்

உன் பட்டுச் சிறகை கசக்கியது யார்?

மழலையாய் சிரிக்கும் வயதில்

உன் சிரிப்பை பொசுக்கியவர் யார்?

உன் நிலை தெரிந்தும்

தேற்ற முடியாத நிலையை

என்ன சொல்லி புரியவைக்க உனக்கு.....

காலையில் எழுந்து, எதையோ கண்டு பயந்தவளைப் போல, இமைக்கக் கூட மறந்து, வெறித்தப் பார்வையாக நடந்து வந்த மகளைக் கண்டு துணுக்குற்றார் தங்கம். ஹேமாவின் கண்களே, அவள் உறங்கவில்லை என்பதைப் பறை சாற்றியது.

திவ்யாவின் துணைக்குப் படுக்கப் போகிறேன் என்று சொல்லிவிட்டுச் சென்ற மகள், இந்தக் கோலத்தில் திரும்பி வந்தால்.., அவரும் என்னதான் செய்வார்.

“ஹேமா...., என்னமா ஆச்சு....? ஏண்டா இப்படி இருக்க? திவ்யா எங்கே? அவ ஏதாவது சொன்னாளா? ஏதாவது பிரச்சனையா? என்னன்னுதான் சொல்லேன்ம்மா.... சரி நீ இரு, நான் போய் அவளை பாத்துட்டு வாறேன்”, தாய் கேட்ட கேள்விகளுக்கு, அவரைச் சலனமில்லாமல் பார்த்தவள், அவர் போகிறேன் என்று சொல்லவே, வேகமாக அவர் கைகளைப் பிடித்து தடுத்தாள்.

“வேண்டாம்மா போகாதீங்க....., எனக்கு ஒண்ணும் இல்லை. நான் உங்ககிட்டே பேசணும்மா...., என்னால் தாங்கவே

முடியலை...", சொல்லிவிட்டு, தாயைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

"என்னடா ஹேமா இது? எதுக்கு அழற? சொல்லுடா அம்மாட்ட", பரிதவித்தார் தங்கம்.

தாயை அழைத்துக்கொண்டு அவரது அறைக்குச் சென்றாள். சென்ற வேகத்தில், அவர் மடியில் படுத்துக்கொண்டு, திவ்யா தன்னிடம் சொன்னவற்றை, ஒன்று விடாமல் சொல்லி முடித்தாள். அவள் சொல்லி முடிக்கும் வேளையில், அவள் கன்னங்களில் துளித் துளியாய் நீர் விழுவதை உணர்ந்த பிறகுதான், தாயும் அழுவதை உணர்ந்தாள்.

"அம்மா...., ஆம்பளைங்க இப்படித்தான் இருப்பாங்களாம்மா? இவ்வளவு மிருகமாகவா நடந்துப்பாங்க. இவனெல்லாம் ஆம்பளையாம்மா", பொறுக்க முடியாமல் கேட்டாள்.

சட்டென தன்னை மீட்டுக் கொண்டார் அவர். கண்ணீரைத் துடைத்துவிட்டு, ஹேமாவை எழுந்து அமர வைத்தார். "எல்லா ஆம்பளைங்களும் அப்படி இல்லம்மா. நானும் உங்க அப்பாவும் சண்டை போட்டு, என்னைக்காவது பார்த்து இருக்கியா?

"நம்ம பக்கத்து வீடு, அடுத்த வீடுகளில் இருப்பவர்களை நீ பாக்குறியே...., நூற்றில் ஒருவன், ஆயிரத்தில் ஒருவன் இப்படி இருக்கலாம். அதுக்காக, ஒட்டுமொத்த ஆண்களையே தப்பா நினைக்க முடியாதும்மா.

"இதுவரை அவள் வாழ்வில் நடந்தது எல்லாம் போகட்டும், இனிமேல், நீயும் அவளிடம் இதைப்பற்றி பேசாதே. எல்லாவற்றையும் மறந்துட்டு அவகிட்டே பழைய மாதிரி சாதாரணமாப் பேசு.

"இப்போ நாம, அவளோட காயத்தை ஆற்ற முயலணுமே தவிர, அதை, கிட்ட உக்காந்து கிளறக் கூடாது.

கண்ணனையும், அவளையும் இனிமேல் நாம பாத்துக்கலாம். முடிஞ்சால் அவளுக்கு நல்ல வாழ்க்கையவே நாம அமைத்துக் கொடுக்கணும்", ஒரு பொறுப்பான தாயாகச் சொன்னார்.

"அம்மா இனிமேலும் ஒரு ஆம்பளையை அவ நம்புவா.....? வேண்டாம்மா அவ இப்படியே நல்லபடியா இருக்கட்டும். அவளை நான் பாத்துக்கறேம்மா", உணர்ச்சிவசப்பட்டு பேசும் மகளிடம், இதற்குமேல் எதைப் பேச,

அவளுக்கும் ஒரு எதிர்காலம், திருமணம், குழந்தைகள் இப்படி எவ்வளவோ இருக்கும்போது, அதையெல்லாம் விட்டுவிட்டு, அவளுக்குத் துணையாக நானிருக்கிறேன் என்று சொல்லும் மகளை என்ன செய்வது?

"ஹேமா..., வாழ்க்கை விளையாட்டு கிடையாது. இப்போ கண்ணனோட பயம் போக என்ன செய்வாய்? அவன் ஆண்களைக் கண்டாலே அலறி மயங்குகிறானே? இதற்கு மருந்து, கண்டிப்பா இன்னொரு ஆண்மகனால் மட்டுமே கொடுக்க முடியும்.

"அப்படிக் கண்ணனை நெருங்க உரிமையுள்ளவன், அவனோட அப்பாவாதான் இருக்க முடியும். அவனுக்கு அப்பான்னா, திவ்யாவின் கணவனாகத்தான் அவன் இருக்கணும். திவ்யாவுமே நார்மல் ஆக, பழைய மனுஷியாக மாற, அவளுக்கு நெருக்கமான உறவால் மட்டுமே முடியும்.

"ஒரு பொண்ணுக்கு, கணவனை விட நெருக்கமான உறவு உலகத்தில் வேறு எதுவும் இருக்கவே முடியாது. நீயும் நானும் அவளோட காயத்தை ஆற்ற முடியும். ஆனால் அதை மறக்கவும், மறைக்கவும், அவளுக்கு உண்மையான சந்தோஷத்தைக் கொடுக்கவும், ஒரு கணவனால் தான் முடியும்".

இப்படிப் பேசும் தாயை, வெறுப்பாய் பார்த்தாள் ஹேமா. "என்னம்மா பேசுறீங்க? ஒரு ஆண் துணை இல்லாமல்,

எங்களால் வாழ முடியாதா? அப்படியென்ன பெரிய செயலை செய்துவிடப் போகிறார்கள் அவர்கள்.

“இதையெல்லாம் கேட்ட பிறகு, ஆண் என்றாலே வெறுப்புத்தான் வருது. ச்சே..., வக்கிரம் பிடித்த இனம்...”.

“ஹேமா.....”, தாயின் அதட்டலில், வாயை கப்பென மூடினாள்.

“நான் சொன்னது எதார்த்தம் ஹேமா. கண்ணுக்குக் கறுப்புக் கண்ணாடியைப் போட்டுட்டு, எல்லாமே ஒரே இருட்டு என்று சொல்லக் கூடாது. உன் அப்பாவை நினைத்தாயா நீ? அவரையும் அப்படித்தான் சொல்வாயா?”, மூச்சு வாங்கக் கேட்டார்.

தலை கவிழ்ந்தாள் ஹேமா. “சாரிம்மா...”, உணர்ந்து சொன்னாள். அதற்குக் காரணம், அவள் தந்தையை அப்படி நினைத்துப் பார்க்கவே அவளால் முடியாது. அவ்வளவு கனிவானவர், கண்டிப்பானவர், அன்பானவர். அவர் இருந்தவரை, ஒரு நாள் கூட, அவர்களது வீடு கலகலப்பைத் தொலைத்ததே இல்லை.

“ஹேமா நீ அவளை மாற்றணும். அதை விட்டு, அவளை மாதிரி நீ மாறக் கூடாது. நீ நீயா இரு. அவளோட இயல்பைத் திரும்பக் கொண்டு வா. இனிமேல் திவ்யா அவளோட ஸ்கூல்க்கு, வேலைக்குப் போக வேண்டாம்.

“நமக்கே இங்கே பிள்ளைகளை கவனிக்கவும், பாடம் சொல்லிக் கொடுக்கவும் இன்னொரு டீச்சர் வேணும்னு பேசிட்டு இருந்தோமே. அவளுக்கும் இந்த சின்னப் பிள்ளைகளின் முகத்தைப் பார்த்தால் எல்லாம் மறந்து போயிடும்.

“ஆனால் கண்ணனை மட்டும் நீயே கவனிக்கிற மாதிரி பாத்துக்கோ, ஸ்கூல்ல அவளோடவே இருந்தால், அவன்கிட்டே மாற்றம் வராது”, டக் டக்கென முடிவை எடுத்தார்.

“இதுக்கு அவ ஒத்துக்கணுமே...”, சந்தேகமாகக் கேட்டாள்.

“அதெல்லாம் ஒத்துப்பா...., நீ முதல்ல அவளை சாப்பிட வரச்சொல். மற்றதெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்”, தாய் சொல்லவே சிட்டாகப் பறந்தாள் ஹேமா.

திவ்யா அவ்வளவு சுலபமாக இந்த ஏற்பாட்டை ஏற்கவில்லை. தங்கம் அவளிடம், “என்னமா சம்பளம் கம்மியா தருவோம்ன்னு நினைக்கிறியா?”, அப்படி இல்லை எனத் தெரிந்தும் சொன்னார்.

“ஹையோ அம்மா...., இப்போ நான் போற ஸ்கூல்லயே ஐந்தாயிரம்தான் தாறாங்க. அதுவே, நான் வீட்டில் அடைந்து கிடக்க மனமில்லாமல்தான் போகிறேனே தவிர, பணத்துக்காக இல்லை.

“என் அக்கௌன்ட்டிலேயே, லட்சக்கணக்கான பணம் எடுக்காமலே தூங்கிட்டு இருக்கு.....”, அவர் தவறாக நினைப்பது பொறுக்காமல் வேகமாகச் சொன்னாள்.

“பிறகு என்ன...? வேகமா கிளம்பி வா. அதுக்கு முன்னாடி உன் வீட்டில் இருக்கும் எல்லாப் பொருட்களையும், தம்பியை விட்டு, உடனே போய் எடுத்துட்டு வரச் சொல்லுறேன். நீ சாவியை மட்டும் கொடு”, தாயின் செய்கைகளை, திகைப்பாய் பார்த்துக் கொண்டிருந்தாள் ஹேமா.

கோவையில் கொஞ்சம் பெரிய அளவில் இருந்த அவர்களது ஜவுளிக் கடையை, தந்தை போன பிறகும், தனி ஆளாக நின்று நிர்வாகம் செய்தவர் ஆயிற்றே, யாரிடம் எப்படி வேலை வாங்க வேண்டும் என்பது, அவருக்குத் தெரிந்தே இருந்தது.

அடுத்த இரண்டு மணி நேரங்களில், திவ்யாவின் பொருட்கள் அனைத்தும், மேலே மாடியில், வைக்கப் பட்டன. அந்தப் பெரிய வீட்டில், அவை இருக்கும் இடம் கூட தெரியவில்லை. அதன் பிறகு அதிகமான தயக்கத்திலும், சரியான நேரத்தில் பள்ளிக்குக் கிளம்பிச் சென்றாள்.

பள்ளியில் இரண்டு ஆயா, ஹேமா, திவ்யா, தங்கம் என மொத்தம் ஐவர் இருந்தார்கள். திவ்யாவை எல்கெஜி செல்லும் வயதுடைய குழந்தைகளைப் பார்க்கச் சொன்னார்கள். அனைவருமே கொஞ்சம் சூட்டிகையான குழந்தைகள்தான்.

அதில் கண்ணனும், அஞ்சலியுமே அடங்கும். ஆனால் கண்ணன், கொஞ்சம் அம்மாக் கோண்டாக இருந்ததால், அவனை ஹேமாவிடமே இருக்க வைக்க எண்ணினார்கள். அதன் பிறகு, கண்ணனை ஹால் சோபாவில் இருக்க விட்டுவிட்டு, தாங்கள் கிளம்பிச் சென்றார்கள்.

*******காலையில் எழுந்து, வீட்டையே ரெண்டு படுத்திக் கொண்டிருந்தாள் அஞ்சலி. அவள்தான் முதலில் குளிக்க வேண்டும், ப்ரெஷ் பண்ண வேண்டும், தலை வார வேண்டும், அனைத்திலும் ஜீவாவுடன் போட்டிப் போட்டாள்.

“எனக்கு சூலுக்கு... தைமாச்சு.....”, சொன்னவாறே காலை பத்துமணி பள்ளிக்கு, ஏழு மணிக்கே கிளம்பும் மகளை, என்ன செய்யவென்று தெரியாமல் விழி பிதுங்கினான். அதைவிடக் கொடுமை, எட்டு மணிக்கெல்லாம் தயாராகிவிட்டு, இப்பொழுதே பள்ளிக்குப் போகவேண்டுமென்று ஒரே அடம் வேறு.

முத்துவும், ஜீவாவும் திண்டாடினார்கள். எட்டு முப்பதுக்கெல்லாம் அழவே துவங்கிவிட்டாள் அஞ்சலி. அவளது அழுகையில் வீடே அதிர, அடித்துப் பிடித்து ஓடி வந்தான் கணேஷ். அவன் பாதிக் குளியலில் வந்திருப்பது, அவன்மேனியில் இருந்த சோப்பு நுரையே சொன்னது.

“ஏன் பாப்பா அழறா.....?”, அவசரமாக வீட்டுக்குள் வந்தவன், ஜீவாவின் கண்டனப் பார்வைக்கு ஆளானப் பிறகுதான், சங்கடமாக உணர்ந்தான்.

“இல்ல.... பாப்பா என்னமோ ரொம்ப அழுத மாதிரி....., அவளுக்கு அடி...”,

“அவளை கவனிச்சுக்க, அவங்க அப்பா நான் இருக்கேன், முத்து இருக்கார். உங்களுக்கு எதுக்கு தேவையில்லாமல் இவ்வளவு பதட்டம்?”, ஜீவாவின் பார்வை, கணேஷைத் துளைத்தது.

“சாரி சார்....”, சொல்லிவிட்டு வெளியேறப் போனவனைத் தடுத்தது அஞ்சலியின் குரல்.

“மாமா....”, அந்த அழைப்பில் யார் அதிகம் திகைத்தது என்றே தெரியவில்லை அங்கே.

கணேஷ் ஸ்தம்பித்து திரும்பி ஜீவாவின் முகத்தைப் பார்க்க, அவன் முகத்திலும் அதே திகைப்போடு, முத்துவை ஏறிட்டுக் கொண்டிருந்தது. முத்து இந்தச் சூழலை சமாளிக்க, “அஞ்சும்மா ஏம்மா அப்படி அவரை கூப்பிட்ட?”, வேகமாகக் கேட்டார்.

“அப்போ வேத எப்பிதி அவத கூப்பித...?”, திக்கித் திணறிக் கேட்டாள்.

அதன் பிறகுதான் அங்கிருந்த அனைவருமே சீராக மூச்சு விட்டனர். “அஞ்சு..., அவனை அப்படிக் கூப்பிடாதே...”, வெடித்தான் ஜீவா.

பெருங்குரலெடுத்து அழத் துவங்கினாள் அஞ்சலி. தர்மசங்கடமாகப் போனது அனைவருக்கும். யாருமே இப்பொழுது அவளைச் சமாதானப் படுத்த நெருங்கவில்லை. ஒவ்வொருவரும் அவர்கள் சிந்தையில் உழன்றனர்.

“அஞ்சும்மா அழாதீங்க....., நாம ஸ்கூல்க்கு போகலாமா? இரு... தாத்தா உன்னைக் கூட்டிப் போறேன். கணேஷ் நீங்க போய் குளிச்சுட்டு வந்து காரை எடுங்க”, முத்து அவனை அனுப்பினார்.

“அவது தெய்வதா(அவர் டிரைவரா?).....”, அஞ்சலி கேட்பது, கணேஷின் முதுகின் பின்னால் கேட்டது. மற்றவரின் பதில்

காதில் விழும் முன்னர் அங்கிருந்து வெளியேறினான் அவன்.

“என்னண்ணே நீங்களும் கொஞ்சம் கூட புரிஞ்சுக்காமல்..., டைம் எட்டரை கூட ஆகலை. இப்போவே அங்கே போய் நின்னால் அவங்க என்ன நினைப்பாங்க?”, கடிந்தான் அவரை.

“தம்பி எல்லாம் நான் பாத்துக்கறேன். நீங்க போய் முதல்ல குளிங்க”, அவனை அனுப்பிய ஐந்தாவது நிமிடம், கணேஷ் வந்தான். அஞ்சலி குதிக்கத் துவங்கவே, அவனிடம் சொல்லிவிட்டு, அவளையும் கூட்டிக் கொண்டு வெளியேறினார்கள்.

இரண்டே நிமிடங்களில் பள்ளியை எட்டிவிட, அங்கே அப்பொழுதே வேலைக்குச் செல்லும் தாய் மார்கள் தங்கள் பிள்ளைகளை விட வந்திருந்தார்கள். அங்கே ஆயாக்கள் இருவர் மட்டுமே இருந்தார்கள். அவர்களிடம், அஞ்சலி அடம் பிடித்து, வரவேண்டும் என்று சொல்லவே, அழைத்து வந்ததாகச் சொன்னார்கள்.

“அதுக்கின்னா சார்..., சும்மா உட்டுட்டுப் போங்க...., நாங்க கவின்ச்சிக்கிறோம்”, ஆயா சொல்லவே, அரை மனதாகக் கிளம்பினார்கள்.

“தாத்தா தெய்வத்..... (tata driver) அவள் வார்த்தையில் நைந்த மனதை திடப்படுத்தியவாறு, அவளுக்கு டாட்டா காட்டிவிட்டு கிளம்பினான்.

முத்து அவனிடம், தாங்கள் யாருமே அவளிடம் எதுவும் சொல்லவில்லை என்றும், அவளாகவே ஜீவாவிற்குப் பிடிக்காததால் மாற்றி விட்டாள் என்றும் சொன்னார். விரக்தியாகப் புன்னகைத்துக் கொண்டு வெளியேறினான் கணேஷ்.

அஞ்சலி கொஞ்சம் நேரம்தான் அமைதியாக இருந்தாள். பிறகு உடனடியாக எழுந்து விளையாடத் துவங்கி விட்டாள்.

பள்ளியின் பின் பக்கக் கதவை எப்பொழுதும் பூட்டித்தான் வைத்திருப்பார்கள். ஆனால் அன்று, எதேச்சையாக திறந்திருக்கவே, அஞ்சலி அது வழியாக, ஹேமாவின் வீட்டுக்குச் சென்று விட்டாள்.

அங்கே ஹாலில், கண்ணன் தனியாக அமர்ந்திருப்பதைப் பார்த்தவள், மெதுவாக அவன் அருகில் சென்றாள். அவன் அமர்ந்திருந்த சோபாவில் கொஞ்சம் சிரமப்பட்டு ஏறி அமர்ந்தாள். அவளைப் பார்த்தும் எந்தவித உணர்வுகளையும் காட்டாமல், உம்மென்று பார்த்துக் கொண்டிருந்தான் அவளை.

அஞ்சலியோ, அவனைப் பார்த்து, முகம்கொள்ளா சிரிப்பை உதிர்த்தவள், கண்களும், கன்னங்களும் விரிந்து அன்றலர்ந்த மலராக இருந்தாள். அவள் சிரித்த பின்பும், முகம் மாறவில்லை அவனுக்கு.

“உ(ன்) பேதென்ன...”, தலையை மேலும் கீழும் ஆட்டிக் கேட்டாள். அதற்கும் அவன் பதில் மௌனமே.

“இது உ(ன்) வீதா....?”, கண்களைச் சுழற்றினாள். “நா(ன்) அஞ்சு பாப்பா...உனக்கு பேத்(ர்) சொல்லத் தெதியாதா?”, அவள் இப்படிக் கேட்கவே, அவனுக்கு ரோஷம் வந்துவிட்டது.

“நா(ன்) கண்ணன்...”, வெடுக்கென சொல்லிவிட்டு, அவளைப் பெருமை பொங்கப் பார்த்தான்.

வெளியே மழலையின் குரல் கேட்டதுமே, கண்ணன் தனியாகவா பேசுகிறான் என்பதை அறிய வெளியே வந்தப் பெண்கள், மழலைகளின் உலகத்தைக் கலைக்காமல் அவர்களது பேச்சைக் கவனித்தவாறு நின்றார்கள்.

“நீ கண்ணனா...? அப்போ இந்த கலதுல(கலர்ல) இதுக்க. வாயத் தொத? உலகம் தெதியுமா?”, நெருங்கி வந்து அவனைத் தொட்டுப் பார்த்து, அவன் வாயைத் திறக்கச் சொன்னாள்.

அவள் பேச்சில், பெரியவர்கள் அனைவரும் சிரித்து விட்டார்கள். அவர்கள் சிரிக்கவே, சிறியவர்கள் கலைந்தார்கள். “அவன், அந்தக் கண்ணன் இல்லடா செல்லம். அவனோட பேர் கண்ணன். உங்க பேர் என்ன?”, ஹேமா அவள் அருகில் மண்டியிட்டு அமர்ந்து கேட்டாள்.

“நா(ன்) அஞ்சு பாப்பா..... தெதியாதா உங்களுக்கு? நீங்க யாது?”, குண்டுக் கண்களை உருட்டிக் கேட்டாள்.

“என் வீட்டுக்குள்ளேயே உக்காந்து, என்னையே யாருன்னு கேக்குறியா? குட்டிக் கழுதை, இது என்னோட வீடு. நீ ஸ்கூல்க்கு புதுசா? அது சரி, நீ ஸ்கூல்ல இருந்து இங்கே எப்படி வந்த? இந்த ஆயாங்க எல்லாம் என்ன பண்ணுறாங்க?”, ஹேமாவுக்குக் கோபமே வந்துவிட்டது.

“அம்மா, பொறுப்பே இல்லாமல் இருக்காங்க பாருங்க...”, அவள் சொல்ல,

“இல்ல...., நா தான் வந்தேன்...”, சின்னக் குரலில் சொன்னாள்.

“அம்மா, பெரிய மனுஷி...., நீயாத்தான் வந்த, நான் ஒத்துக்கறேன். பின்ன அவங்க எப்படி உன்னை வெளியே விடலாம், அதைத்தான் கேட்டேன்?”, சிறுமியாக மாறி வாயாடினாள்.

“அப்போ இங்கே வதக்கூடாதா.....? இவ மட்டும் இதுக்கா”, நாக்கைத் துறுத்திச் சொல்லும் அழகிலும், உதடு அழுகையில் துடித்தது.

அந்த நேரம் திவ்யா அருகில் வந்து அவளை தூக்கிக் கொண்டாள். “நீங்க அவங்க கிட்டே சொல்லாமல் வந்துருக்கீங்க. உங்களை அவங்க தேடுவாங்க இல்ல. அதான் சொன்னாங்க, சரியா?”, அவள் அழத் தயாராவது பிடிக்காமல் வேகாகச் சொன்னாள்.

“சதி அப்போ நா போதென்....”, அவள் கைகளில் இருந்து நழுவப் பார்த்தாள்.

“திவ்யா... அதான் எல்லோரும் கிளம்பிட்டீங்களே, அப்படியே தூக்கிட்டு நீங்களும் ஸ்கூல்க்கு போங்க. நான் டோரைச் சாத்திட்டு வந்துடுறேன்”, தங்கம் சொல்லவே, ஹேமா கண்ணனைத் தூக்கிக் கொள்ள, திவ்யா அஞ்சலியைத் தூக்கிக் கொண்டு பள்ளிக்கு வந்தார்கள்.

அங்கேயோ ஒரு பெரும் கூட்டமே கூடி இருந்தது. அதில் நடு நாயகமாக ஜீவா நின்று கொண்டு, “இப்படித்தான் பொறுப்பில்லாமல் இருப்பீங்களா? உங்க பொறுப்பில் விட்ட என் மகளைக் காணோம்ன்னா என்ன அர்த்தம்?

இப்போ உடனே, எனக்கு என் மக வேணும். அவ வரல..., நடக்குறதே வேற”, காலையில் மகளைக் காணாமல் கம்பெனிக்குச் செல்ல மனமில்லாமல், பள்ளிக்கு வந்தவனுக்கு, அஞ்சலி இங்கே இல்லை என்று தெரிந்தவுடன், கண் மண் தெரியாமல் கோபம் வந்துவிட்டது. எனவேதான் கோபப்பட்டுக் கொண்டிருந்தான். அவன் குரலை சட்டென அடையாளம் கண்டுகொண்ட அஞ்சலி, திவ்யாவிடம்....

“அப்பா கோவமா இதுக்காங்க. நீங்க பேசாதீங்க”, அவள் காதில் சொல்லிவிட்டு, “அப்பா..., அஞ்சு பாப்பா கோபமா இருக்கா”, சத்தமாகச் சொல்லிவிட்டு, திவ்யாவில் தோள் வளைவில் முகம் பதிய படுத்துக் கொண்டாள்.

இவ்வளவு நேரம் உச்சக் கோபத்தில் கொதித்தவன், அஞ்சலியின் குரலில் அப்படியே தணிந்தான். ஆனால் அவன் பார்வையில் இருந்த அனல் குறையவே இல்லை. வேகமாக அஞ்சலியை நெருங்க முயன்றான். ஆனால், அதிர்ந்து போயிருந்த திவ்யாவின் முகத்தைப் பார்த்தவன், மேலே ஒரு வார்த்தைகூடப் பேசாமல் அங்கிருந்து வெளியேறினான்.

செல்லும் அவனையே திகைப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தனர் அனைவரும். அங்கே ஒரு மயான அமைதி குடி கொண்டிருந்தது.

***

தாகம் - 20.

பாசத்துக்காக ஏங்குவது

ஒரு விதமென்றால்

பாசம்கொண்ட இதயத்திடமிருந்து

அதைப் பெற்றுக் கொள்ளத் தவறுவது....?

ஒரு வாரம் ஓடிப் போயிருந்தது. எதற்காக இன்னும் இந்த உயிரை வைத்துக் கொண்டிருக்கிறோம் என்றே தெரியாமல், மனம் மட்டுமல்ல, உடலும் நோக, வெறுத்துப் போனான் நந்தன். இன்றோடு மருத்துவமனை வாசத்துக்கு முடிவு உண்டாயிற்று.

இதுவரை, மருத்துவமனையே கதியென்று இருந்து விட்டபடியால், ப்ரியாவின் முகத்தைப் பார்க்கும் வாய்ப்போ, அவள் குரோத விழிகளைச் சந்திக்கும் சந்தர்ப்பமோ அமையவில்லை.

தாயை மருத்துவமனையில் சேர்த்த அடுத்த நாளே, அவனது உடைமைகள் அனைத்தையும் எடுத்து அவள் வெளியே விட்டெறிந்திருந்ததைப் பொறுக்கி, பக்கத்து அறையைத் தன் அறையாக மாற்றிக் கொண்டிருந்தான்.

ஒரு மனிதாபிமான அடிப்படையில் கூட, நடந்து கொள்ளாத அவள்மேல் கோபம் வந்தது. இவ்வளவு நடந்த பிறகும் அவளை வெறுக்கவில்லை, வெறுக்க முடியவில்லை அவனால்.

இந்த ஒரு வாரமாக குமார் பேசிய பேச்சுக்களை அசை போட்டதில், அவள் தன் அண்ணன்மேல் கொண்டிருக்கும் வெறுப்பை, தன்மேல் வளர்த்திருப்பது புரிந்தது. அவன் அவளது சம்மதத்தைக் கேட்காமல், தன்னிச்சையாக முடிவெடுத்ததைத் தாங்கிக் கொள்ள முடியாமல்த்தான் இப்படி நடந்து கொள்கிறாள்,

முதலில் அவளிடம் பேசி, அவன்மேல் இருக்கும் வெறுப்பால், தங்கள் வாழ்வையும் எதிர் காலத்தையும் வீணாக்கிக் கொள்ளக் கூடாது என்று அவளுக்குப் புரிய வைக்க வேண்டுமென்று எண்ணினான்.

ஆனாலும் மனம் முழுவதும் விரவிக் கிடக்கும் தவிப்பை, அவனால் அடக்க முடியவில்லை. அதிலும், முதல்நாள் முழுவதும் தன் கைகளில் அடங்கியவள், காலையில் நிறம் மாறிய விந்தை அவனுக்குப் புரியவே இல்லை.

தன் அண்ணன்மேல் இருந்தக் கோபத்தில், தன்னைப் பழிவாங்க நினைப்பவள், எதனால் தன்னுடன் கலந்தாள்? தன் கோபத்தை முதலிலேயே சொல்லியிருந்தால், அதைப் பேசித் தீர்த்த பிறகு, தங்கள் வாழ்க்கையைத் துவங்கி இருக்கலாமே?

அதையும் செய்யாமல்....., தன்னோடு வாழ்ந்துவிட்டு, எப்படி அவளால் இப்படிப் பேச முடிந்தது? அப்படியென்றால் வேறு ஏதாவது காரணம் இருக்கின்றதா? யோசிக்க யோசிக்க, அவனுக்குத் தலையை வலித்ததுதான் மிச்சம்.

அவனை மேலும் சிந்திக்க விடாமல், குமார் வந்து சேர்ந்தான். “சார் பில் எல்லாம் பே பண்ணிட்டேன். நாம வீட்டுக்குக் கிளம்பலாம்”, அவன் சொல்ல, இருக்கையில் இருந்து எழுந்து, தாயை நாடிச் சென்றான்.

தாயின் கண்களில் ஒளியிழந்து, வேதனைக் குடி கொண்டிருப்பதைப் பார்க்க, அவன் இதயத்தை வாள்கொண்டு அறுக்கும் வேதனை. அதை வெளிக்காட்டாமல், “அம்மா..., போகலாமா?”, அவன் சாதாரணமாகக் கேட்டான்.

ஒப்புதலாக அவர் தலை ஆடியது. வசந்தாவால் பேச மட்டுமே இப்பொழுது முடியும். அவரது ஒரு பக்க உடம்பு செயல்பட முடியாமல் துவண்டிருந்தது. மகனின் கண்களை கேள்வியாகப் பார்க்க, அந்தக் கேள்விக்கு அவனிடம் பதில் இல்லாததால் அமைதியாகவே இருந்தான்.

அவருக்காக வாங்கிய சக்கர நாற்காலியில் அவரைத் தூக்கி அமர வைத்தவன், வார்டு பாயை(boy) விடுத்து, தானே அதைத் தள்ளிக்கொண்டு சென்றான்.

வீட்டுக்கு வந்து, அவரை அவரது அறைக்குக் கூட்டிச் சென்றான். அவரை கவனித்துக் கொள்ள, தனியாக ஒரு செவிலியையும் அமர்த்தியிருந்தான். எதுவுமே ரசிக்கவில்லை வசந்தாவிற்கு. மகனது வாழ்க்கை என்னவாயிற்று, சரியாயிற்றா? என்ற கவலையே அவரை அரித்தது.

நந்தனின் முகத்தில் இருந்து எதுவும் தெரிந்துகொள்ள முடியவில்லை அவரால். அவன் முகத்தைப் பார்த்தால், “எல்லாம் சரியாயிடும்மா.....?”, என்று சொல்வதில், தனக்கு தைரியம் சொல்கிறானா? இல்லைத் தனக்குத் தானே சொல்லிக் கொள்கின்றானா என்றே தெரியவில்லை.

தாயை செவிலியின்வசம் ஒப்படைத்தவன், சோர்வாக மாடியேறினான். அவன் பதிலுக்காகக் காத்திருக்கும் குமாரை என்னவென்று கூட அவன் கேட்கவில்லை. குமாரும் ஒன்றும் நிம்மதியாக இருப்பதாகத் தெரியவில்லை.

பாத்ரூமில் சென்று புகுந்துகொண்டான். கண்ணாடியில் முகத்தைப் பார்க்க, ஒருவார தாடி மீசையுடன், பார்க்கவே பரிதாபமாகக் காட்சி அளித்தான். தாடியை முதலில் வழித்தவன், ஒரு நிமிடம் தன்னை ஆழ்ந்து நோக்கிக் கொண்டு, மீசையையும் எடுத்தான்.

குளித்துவிட்டு ப்ரியாவின் அறையை நோக்கிச் சென்றான். கதவில் கை வைக்க, அது திறந்து கொண்டது. அவள் கட்டிலில் அமர்ந்திருந்தாள். அவள் தோற்றத்தில் எந்தவித மாற்றமும் இல்லை.

அவள் கண்களைப் பார்க்க, அந்தக் கண்களில், கனல் அப்படியே மிச்சமிருந்தது. “உனக்குக் கொஞ்சம் கூட சொரணையே கிடையாதா? இவ்வளவு சொல்லியும்

மறுபடியும், மறுபடியும் என் முன்னாடி வர்றியே, உனக்கு வெக்கமா இல்லை”, தன்மானத்தைச் சுடும் வார்த்தைகள்.

கண்களை மூடி, அதைப் புறம் தள்ள முயன்றான். இப்பொழுது வெளியேறினால், அவள் கோபத்துக்கான காரணம் தெரியாமலே போய்விடும்...., பொறு மனமே, தனக்குள் சொல்லிக் கொண்டான்.

“உனக்கு என்மேல் என்ன கோபம் ப்ரியா..? ஏன் இப்படி நடந்துக்கற?”, பொறுமையாகவே கேட்டான்.

“உன்மேல கோபமா....., எனக்கா....., இல்லை...., கோபமில்லை..., வெறுப்பு...., வெறுப்பு மட்டும்தான் இருக்கு உன் மேல். கோபம் எல்லாம், உரிமையுள்ள இடத்தில் தான் காட்டுவோம்”, உனக்கான இடம் எதுவென்பதை புரிந்துகொள், என்பதுபோல் இருந்தது அவள் பேச்சு.

“உனக்கு இந்தத் திருமணத்தில் விருப்பம் இல்லையென்றால் சொல்லியிருக்கலாமே...”.

“யாரிடம்...”, பட்டெனக் கேட்டாள்.

“உன் அண்ணனிடம்...., என்னிடம்....”, ஆதங்கமாகச் சொன்னான்.

“அண்ணனா...? யார் அவனா...? அவன் என்னோட பாதுகாப்பாளன். அவனோட இஷ்டத்துக்கு, என்னை ஆட்டி வைப்பான். அவனுக்குப் பிடிச்சத் துணியைதான் நான் போடணும், அவனுக்குப் பிடிச்ச படிப்பைதான் நான் படிக்கணும்,

உனக்குத் தெரியுமா....? அவன் வாங்கித் தருவதில், எனக்கு பிடிக்காதத் துணியைக் கூட, நான் போடவே மாட்டேன். அதைக் கையால் கூடத் தொட மாட்டேன். படிக்கச் சொன்னானே படிப்பு, அது எனக்குப் பிடிச்சதால் மட்டும்தான் போனேன்.

“கடைசியா செஞ்சான் பாரு.....”, வெறிபிடித்தவள் போல் சிரித்தாள்... “உன்னை எனக்குக் கல்யாணம் பண்ணி வச்சானே..... என் வாழ்க்கையை நான்தான் வாழணும். அதை எப்படி அவன் முடிவு பண்ணலாம்”, ஆங்காரமாகக் கேட்டாள்.

“அவன்மேல் இருந்த கோபத்தை ஏன் என்மேல் காட்டுகிறாய்? நான் உன்னை, உண்மையாகத் தானே நேசித்தேன்...”, அவன் குரலில் குழந்தையின் கதறல்.

“வாடி மாப்பிள்ளை....., இப்படிச் சொல்லி தப்பிச்சுடுவியா நீ? உனக்கு என்னை ரொம்ம்பப்...., பிடிக்குமாம்...., என்னை அப்படியே உயிரா நினைக்கிறியாம்....? என்னைக் கட்டிக்கிட்டு அப்படியே பூப்போல் தாங்குவியாம், எங்கே தாங்கு, தாங்குடா....

இப்படியெல்லாம் சொல்லி, அவன் மனசை நீதானே கலைச்சுவிட்ட”, எக்காளமாக ஒலித்த அவள் குரலும், தலையைக் குனிந்து, விழிகளை உயர்த்தி அவனைப் பார்த்த பார்வையிலும், வில்லியாகவேத் தெரிந்தாள் அவன் பார்வைக்கு.

உறைந்து போனான் நந்தன்....., ஒரு பெண்ணைக் காதலிப்பதும், அவளை உயிராய் நினைக்கிறேன், அவளைப் பூப்போல் பார்த்துக் கொள்வேன் என்று சொல்வதும், அவ்வளவு பெரிய பாவமா? கண்களை இருட்டிக் கொண்டு வரும்போல் இருந்தது.

ஆனாலும் அதை சமாளித்துக் கொண்டு, “இப்படி நினைக்கிறவ, ஏண்டி என்னோட வாழ்ந்த.....”, மனதை உறுத்தியதைக் கேட்டுவிட்டான்.

“ஹா....ஹா....ஹா....., அப்படியே உன் அழகுல மயங்கி ஒண்ணும், உன் ஆசைக்கு இணங்கலை. நீதானே சொன்ன..., ஒண்ணை அனுபவிக்காமல் இருக்குற வரைக்கும், அதைப் பற்றிய நினைப்பே இருக்காதுன்னு....., அதுக்குத்தான்.....,

இப்போ ஒவ்வொரு ராத்திரியும் உடம்பு முறுக்கேறி....., என் உடம்பு வேணும்னு தவிக்குமல்ல...., அதுக்குத்தாண்டா.....”, என்னமோ டிராஜேந்தர், வில்லனிடம் உணர்ச்சிவசப்பட்டு பேசுவதுபோல் பேசினாள். பார்த்துக் கொண்டிருந்த அவனுக்கு, அவளை அப்படியே கழுத்தை நெரித்துக் கொன்றால் என்ன என்று இருந்தது.

“ச்சீ...., நீயும் ஒரு பொண்ணா.....”, வெறுப்பில் உமிழ்ந்தான் வார்த்தைகளை.

“ஏன், அன்னைக்கு ஒரு நைட் முழுக்க்க்க்க அனுபவிச்சுமா உனக்கு அம்புட்டு சந்தேகம்.....”, அவள் கேட்ட விதத்தில் அவனுக்குத்தான் அருவருத்துப் போனது.

அவள் நின்ற தோரணையும், பேசிய பேச்சும், இதற்குமேல் அவளிடம் வாதாடத் தெம்பில்லாமல், அங்கிருந்து வெளியேறினான். குமார், வியர்வை வழியும் முகத்துடன் அங்கே நின்றுக்கொண்டிருந்ததைப் பார்த்தவன்,

‘உன்னால்தானடா இப்படி’....., என்பதுபோல் தீப் பார்வை பார்த்துவிட்டு விலகினான். குமாருக்கு, தான் எவ்வளவு பெரிய இமாலயத் தவறு செய்துவிட்டோம், என்பது புரிந்தது. தவறைத் திருத்தும் சந்தர்ப்பம் இனி இல்லையே....

******முழுதாக மூன்று நாள் ஆனது, தர்ஷிணி தேறி வர. அந்த மூன்று நாட்களில் ஒரு நாள் கூட வித்தார்த் வரவில்லை. அவனது வீட்டிற்குச் சென்றவன், அனைவரிடமும், அவளை அங்கே விட்டுவிட்டு வந்துவிட்டேன்.

இன்னும் மூன்று நாளில் தானே போய் அழைத்து வருவதாகச் சொன்னான். ஏனென்று கேட்டத் தங்கையிடமும், தாயிடமும், இன்னும் மூன்று நாட்கள்தான், அவள் அவளது வீட்டில் இருக்க முடியும்?

அதன் பிறகு, என்னோடு வேலை பார்க்கும் இடத்துக்கு வந்துவிடுவாள். எனவே அதுவரை, அவளது தாய் வீட்டில் சுதந்திரமாக இருக்கட்டும் என்று சொல்லிவிட்டுச் சென்றான். அவனது தாயும் தங்கையும், அவனது பெருந்தன்மையை நினைத்து வியந்து போனார்கள்.

“பாத்தியாம்மா உன் புள்ளையை?...., அண்ணி மனசு கஷ்டப் படக் கூடாதுன்னு, அவங்களுக்குத் தொல்லை கூடக் கொடுக்காமல் நம்ம வீட்டுக்கு வந்துட்டான். என் புருஷனும் தான் இருக்காரே, என்னை விட்டுட்டு இங்கே அங்கே போக மாட்டார். எனக்கு வாய்ச்சது அவ்வளவுதான்...”, தன் அண்ணன் செய்து வைத்துவிட்டு வந்திருக்கும் செயல் தெரியாமல், ஆதங்கப் பட்டாள் அந்த அன்புத் தங்கை.

உடனடியாக தர்ஷிணிக்குத் தொடர்பு கொண்டுப் பேச, அதை எடுத்த வசுந்தராவோ, அக்காவும் தங்கையும் தங்கள் தோட்டத்துக்குச் சுற்றிப் பார்க்கப் போயிருப்பதாகவும், அவர்கள் வந்தவுடன் போன் பேசச் சொல்லுவதாகவும் சொல்லிவிட்டு வைத்துவிட்டார்.

மாப்பிள்ளை எதுவும் வீட்டில் சொல்லியிருக்கவில்லை என்பதில், வசுந்தராவுக்கு அவ்வளவு சந்தோஷம். இங்கே தர்ஷிணியோ, தன் சிரிப்பு அனைத்தையும் தொலைத்து, காயங்களின் வலியைவிட, மனவலி அதிகமாக இருக்க, சோர்ந்து போனாள்.

கீதாவுடன் பேசலாம் என்றால், வசுந்தரா, அலைபேசியையும் அவளிடமிருந்து எடுத்து வைத்துக் கொண்டார். தர்ஷிணியால் வாயைத் திறந்து பேசியிருக்கவும் முடியாதுதான். ஆனாலும் அக்காவின் குரலைக் கேட்டால் ஆறுதலாக இருக்கும்போல் இருந்தது.

மூன்றாம்நாள், அவள் கொஞ்சம் இயல்பாக நடமாடும் வேளையில் அவளைத் தேடி வந்தான் வித்தார்த். “எப்படி இருக்க? நல்லா இருக்கியா?”, என்னமோ எதுவுமே தெரியாதவன்போல், முகத்தை வைத்துக்கொண்டு

வினவிய அவனை, விழி விரியப் பார்த்துக் கொண்டிருந்தாள் தர்ஷிணி.

“அடடே வாங்க மாப்பிள்ளை....., வீட்டில் எல்லோரும் நல்லா இருக்காங்களா? பேசிட்டு இருங்க, காபி கொண்டு வாறேன்”, வசுந்தரா மாப்பிள்ளை மதிப்பைக் கொடுத்தார்.

அது அவனுக்கு இன்னும் வசதியாகிப் போனது. இங்கே வந்தால் ஏதாவது சொல்வார்களோ, என்ற தயக்கத்தில்தான் இத்தனை நாள் வராமல் இருந்தான். ஆனால் இங்கே மாப்பிள்ளை உபச்சாரம் கிடைக்கவே, குஷியாகிப் போனான். தர்ஷிணியோ, அவனது கேள்விக்கு பதில் சொல்லும் எண்ணம் கூட இல்லாமல், எழுந்து அறைக்குச் சென்றாள்.

அது எவ்வளவு பெரிய பிசகென்று, வித்தார்த் பின்னாலேயே வந்து, கதவை மூடிய பிறகுதான் தெரிந்தது. அவன் கதவை மூடும் சத்தத்தில் திரும்பிப் பார்த்தவள், “ஐயோ என்ன செய்யிறீங்க? வெளியே அம்மா இருக்காங்க....”, பதறினாள்.

“அதெல்லாம் அத்தை எதுவும் நினைக்க மாட்டாங்க....”, அவன் பேச்சும், அவன் அடிமேல் அடிவைத்து வந்த விதமும், அவன் பார்வையில் இருந்த வெறியும், எதுவோ விபரீதம் நடக்கப் போவதை அவளுக்கு உணர்த்தியது.

சட்டென அங்கிருந்து விலகி, கதவைத் திறக்கப் போனவளை, அவள் எண்ணம் உணர்ந்தவன்போல், அவள் இடையோடு இறுகக் கட்டித் தூக்கினான். கத்தக்கூட முடியாமல் அவளது சூழ்நிலை அவளைத் தடுத்தது.

“மூணு நாள் கழிச்சி வந்திருக்கேன், இப்படிக் கண்டுக்காம போற”, அவன் கைகள் அவளை நெரித்தது.

“என்னங்க...., இப்போதான் காயமெல்லாம் கொஞ்சம் ஆறியிருக்கு. என்னால் முடியலங்க....., வலிக்கிது”, பரிதாபமாகக் கெஞ்சினாள்.

ஆனால், அவள் கெஞ்சத் துவங்கும் முன்பே, அவன் வேலையில் பாதி முடிந்திருந்தது. அவசரமாக போர்வைக்குள் புகுந்த அவளை, விடாமல் அவனும் புகுந்துகொண்டு, மேலே அவளைப் பேச விடாமல், முரட்டுத்தனமாக அவள் இதழ்களை மூடினான்.

ஏற்கனவே இருந்த காயம் ஆறும் முன்பே....., அவன் ஏற்படுத்தும் காயங்கள், பலமடங்கு வலியை அவளுக்குக் கொடுத்தது. அவளது கெஞ்சல்களுக்கோ, கண்ணீருக்கோ எந்த மதிப்பும் இருக்கவில்லை அவனிடம்.

அவனது தேவை முழுதாக தீர்ந்த பிறகே, அவளிடமிருந்து விலகினான். ஐந்தாம்நாள் அவளை வீட்டிற்கு அழைத்துச் செல்ல முயல்கையில், நாள் நன்றாக இல்லை என்று அதைத் தடுத்துவிட்டார்கள்.

அப்படி அவன் வீட்டிற்குச் சென்றிருந்தாலாவது அவனது சித்திரவதையில் இருந்து அவளுக்கு விடிவு கிடைத்திருக்கும். ஏழாம் நாள் அவன் வீட்டுக்கு அவள் செல்கையில், பாதியாக இளைத்திருந்தாள்.

அவன் வீட்டில், அவளைப் பார்த்தவர்கள் திகைத்தார்கள். கல்யாணப் பூரிப்பில் பெண்கள் மிளிர்வதைப் பார்த்தவர்கள் உண்டு. ஆனால் ஏழே நாளில் ஏழுகிலோ வெயிட் குறைந்து, அழகு குலைந்து, கண்களில் ஜீவன் வற்றிப் பார்த்தவர்கள் அவர்களாகத்தான் இருக்கும்.

வித்தார்த்தின் தாயும் தங்கையும், அதிர்ந்தே போனார்கள். அதிலும் தர்ஷிணியின் முகம், இதழ்களில் இருந்தக் காயம்...., அது என்னவென்று புரியாமல் இருக்கும் அளவு, அவர்கள் ஒன்றும் கைக் குழந்தைகள் இல்லையே.

அதிலும், காவியா தன் அண்ணன்மேல் வைத்திருந்த மதிப்பில் பாதியை இழந்துவிட்டிருந்தாள். தர்ஷிணியால் அங்கிருப்பவர்களின் முகங்களைப் பார்க்க முடியவில்லை. முகத்தை எவ்வளவுதான் குனிந்து கொண்டாலும்,

காயங்களை என்ன செய்து மறைக்க முடியும்? உடல் காயங்களை, உடைகள் மறைக்கும், முகக் காயத்தை?

ஆனாலும், அவளால் இயன்ற அளவு மேக்கப் போட்டிருந்தாள். நேரம் செல்லச் செல்ல, மேக்கப் அதன் வேலையைச் செய்யத் தவறியது. தர்ஷிணியை அண்ணனின் அறைக்கு அழைத்துச் சென்றவள், “சாரி அண்ணி...”, தன் அண்ணனின் செயலுக்கு, அவள் மன்னிப்பை வேண்டினாள்.

கலங்கத் துவங்கிய கண்களை, சிரமப்பட்டு அடக்கினாள். காவியா, அவளுக்கு இன்னொரு கீதாவாகத் தெரிந்தாள். ஆனாலும் இருவருக்கும் பேசிப் பழக நேரம் கிடைக்கவில்லை. மாலையே அவன் வேலை செய்யும் இடத்துக்குக் கிளம்புவதால், அதில் மும்முரம் ஆனார்கள்.

வித்தார்த்தை தனியாக அழைத்த அவன் தாய், “அவ சின்னப் பொண்ணுடா? கொஞ்சம் பாத்து நடந்துக்கோ..., இதுக்கும் மேல நான் ஒண்ணும் சொல்லறதுக்கு இல்லை”, கண்டிக்கும் குரலில் சொல்லிச் சென்றார்.

தோளுக்குமேல் வளர்ந்த மகனிடம் பேசும் விஷயம் இல்லையே இது...., அவனை வழியனுப்பச் சென்ற காவியா பஸ்ட்டாண்டில் வைத்து, தன் அண்ணனைப் பிடி பிடியென்று பிடித்துக் கொண்டாள்.

தங்கையின் கேள்விகளில், அவனுக்கு பதில் சொல்லவே முடியவில்லை. “அண்ணே...., அண்ணியோட முகத்தைப் பாரு...., எப்படி இருக்குன்னு? இப்போ, எனக்கு இப்படி ஒரு நிலைன்னா, நீ என்ன செய்வ? போண்ணா, உன்கிட்டே இப்படி ஒரு செயலை நான் எதிர் பாக்கலை”, வேதனையாகச் சொல்லிவிட்டு விலகிச் சென்றாள்.

அப்பொழுது அவன் தர்ஷிணியைப் பார்க்க, கலைந்த ஓவியமாக அவள் இருப்பது அவனுக்குத் தெரிந்தது. அந்த நேரம் கீதா வரவே, தர்ஷிணியின் முகம் பூவாய் மலர்வதைப் பார்த்தான்.

ஆனால், வந்த கீதாவோ தங்கையின் நிலையைப் பார்த்து, புடவைத் தலைப்பை, வாயில் திணித்து, வந்த விம்மலை அடக்கினாள். “அக்கா....”, தாயைத் தேடும் கன்றாக அக்காவின் மார்பில் ஒண்டிக் கொண்டாள். இருவரும் அழுகையில் கரைந்தார்கள்.

“கீது...., இது பஸ்டாண்ட், எல்லோரும் உங்களைத்தான் வேடிக்கைப் பாக்குறாங்க”, மனைவியை அடக்கிய கமலேஷுக்கும், பெருத்த அதிர்ச்சிதான்.

வித்தார்த்தை அவன் பார்த்த பார்வையில் நெருப்பு பறந்தது. இதைப் பார்த்த வித்தார்த்தின் இளகிய மனம்..., மீண்டும் இரும்பானது.... தனிமையில் இருக்கப்போகும் தர்ஷிணியின் நிலை இனி.....?

***

தாகம் - 21.

பெண்ணினத்தையே வெறுக்க

அவளைப் பெண்ணாக நான்

நினைக்கவில்லை

ஆணினத்தை வெறுக்க

உன்னை ஆண்மகனாக

நான் நினைக்கவில்லை

என் எண்ண அலைகளைக் கூட

தீண்டமுடியாத உன்னை

என்ன சொல்ல.....?

காருக்கு விரைந்த ஜீவா, தன் போக்கில் காரில் ஏறி அதைக் கிளப்பிக்கொண்டு சென்றுவிட்டான். அவனுக்கு கார் ஓட்டிவந்த கணேஷைக் கூட அவன் எதிர்பார்க்கவில்லை. அவன் எங்கே சென்றிருக்கிறான் என்றும் தெரியவில்லை.

அஞ்சலியைக் காணவில்லை என்று பதறியதும், நாலாப்பக்கமும் விரைந்ததுதான் தெரியும். அவன் எந்தப் பக்கம் சென்றான் என்றுகூட கவனிக்கவில்லை ஜீவா. அவன் கோபமனைத்தும், பள்ளியில் அவளை கவனித்துக் கொள்ளாத ஆயாக்களின் மேலேயே திரும்பியிருந்தது.

கண்மண் தெரியாத கோபத்தில், என்ன பேசுகிறோம் என்றே தெரியாமல் பேசத் துவங்கியிருந்தான். அவன் பேசிய பேச்சுக்களின் சாராம்சம் கூட அவனுக்கு இப்பொழுது நினைவில்லை.

என்னமோ கண்ணுக்குமுன் ப்ளாஷ் அடித்ததுபோல் திவ்யாவின் அதிர்ந்த முகமே மின்னி மறைந்தது. அஞ்சலியின் குரல் கேட்கும்வரை நெருப்பாய் காய்ந்தவன், அவள் குரல் கேட்ட நொடி கரைந்தான்.

கோபக் குரலை மறைத்துக் கொண்டாலும், முகம் இயல்புக்கு மாற நேரமெடுக்கும். அதற்குப் பொறுமையில்லாமலே, மகளை வாரியணைக்க வேகமாகச் சென்றான்.

ஆனால் உச்ச திகைப்பில் வெளிறிய திவ்யாவின் முகத்தைப் பார்த்தவன், மகள் அங்கேதான் இருக்கிறாள் என்ற நிம்மதியில், அவள் அருகில் செல்லும் துணிவு இல்லாமல், திவ்யாவை மேலும் சங்கடப் படுத்த விரும்பாமலே, சட்டென அங்கிருந்து அகன்று விட்டான்.

‘நான் என்ன பேயா பூதமா? என்னைப் பார்த்தாலே அப்படி மிரளுகிறாளே ஏன்? இது அவளது இயல்பா இல்லை நடிப்பா? நடிப்பென்றால் இவ்வளவு தத்ரூபமாக, கண்டிப்பாக யாராலும் நடிக்க முடியாது. ஆனாலும் ஏன்?’, இந்தக் கேள்வி அவனை வண்டாகக் குடைந்தது.

தன் கைகளில் வாகனம் தடுமாறுவது கூடத் தெரியாமல் வண்டியைச் செலுத்தினான். ‘நான் மிருகம் இல்லை’, என்று அவளிடம் கத்தவேண்டும்போல் எழும் உணர்வை அவனால் அடக்க முடியவில்லை.

‘ஹையோ... நான் யார்மேலேயோ இருக்கும் கோபத்தை இவளிடம் காட்ட முயல்கிறேனா?’, எண்ணம் உதிக்க, பிரேக்கை அவன் அழுத்திய விதத்தில், கார் பெருத்த ஓசையுடன் கிரீச்சிட்டு நின்றது.

முத்து முத்தாக முகம் முழுக்க வியர்வை. துடைக்கக் கூடத் தோன்றவில்லை. ‘இந்த கணேஷ் மடையன் எங்கே போனான்?’, தேவையில்லாமல் அவன்மேலும் கோபம் எழுந்தது. தான்தான் அவனைக் கவனிக்காமல், எதிர்பார்க்காமல் விட்டு வந்தோம் என்பது மறந்து போனது.

பின்னால் இருந்த வாகனங்களின் ஹார்ன் ஒலியில் கனவில் இருந்து கலைந்தான். வண்டியை சாலையோரம் எடுத்து நிறுத்தினான். அதே நேரம் அவன் அலைப்பேசி தன் இருப்பை உணர்த்தியது.

அதை எடுக்க மனமில்லை என்றாலும், கடனே என்று எடுத்தான். “சார் அஞ்சு பாப்பா கிடைச்சுட்டாளா?”, தவிப்பாய், மூச்சுவாங்கக் கேட்டான் கணேஷ். தன் தலையை அழுந்தக் கோதிக் கொண்டான் ஜீவா.

“அவ ஸ்கூல்ல தான் இருக்கா....., சாரி, நான் ஞாபகம் இல்லாமல் வண்டியை எடுத்துட்டு வந்துட்டேன். நீங்க எங்கே இருக்கீங்க?”, கொஞ்சம் சங்கடம் அவன் குரலில்.

“அப்படியா சார்.....? தேங்க் காட்....., இல்ல சார் நீங்க ஆபீஸ் போய்டுங்க. இன்னைக்கு, ரெண்டு பேங்கில் இருந்து உங்களைப் பாக்க வாறதா சொல்லி இருக்காங்க. நான் எதிர்பக்கம் தூரமா இருக்கேன். நீங்க கிளம்புங்க சார்”, ஜீவா விட்டுப் போன கோபம் கொஞ்சம் கூட இல்லாமல், அஞ்சு கிடைத்த நிம்மதியே தெரிந்தது, அவன் குரலில்.

“சரி.....”, குற்றவுணர்வாக இருந்தாலும், அவனிடம் தன் வீம்பை விட்டுக்கொடுக்க அவன் தயாராக இல்லை. பின்னர் எழுந்த யோசனைகளை எல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு, கடமை அழைக்க அதே நினைவில் அலுவலகம் சென்றான்.

அலுவலகம் சென்ற அவனை, அலுவல்கள் அனைத்தும் பிடித்து அமிழ்த்தின. பேச்சுவார்த்தைகள் அனைத்தும் முழுத் தோல்வி காணும் நிலைக்கே சென்றது. மூழ்கும் நிலையில் இருக்கும் கப்பலில், யாராவது மொத்த சரக்கையும் ஏற்ற முன்வருவார்களா?

பேங்குகள்(bank) அனைத்தும் அவனது கோரிக்கைகளை நிராகரிக்கும் நிலையிலேயே பேசினார்கள். அவன் கேட்கும் கோடிக்கணக்கான கடன்களின் மதிப்பு, இப்பொழுது அவனது தொழிற் சாலைக்கு இல்லை என்றார்கள். சில

ஆர்டர்கள் பிடித்து, உற்பத்தியைக் காட்டினால், முயற்சி செய்வதாக சில தனியார் பேங்க்கள் சொல்ல, நொந்து போனான்.

‘நான் உற்பத்தியைத் துவங்கவே எனக்குப் பணம் வேண்டுமடா....’, அவர்கள் சட்டையைப் பிடித்து இழுத்து, அவர்கள் செவிகளில் விழுமாறு கத்தவேண்டும்போல் இருந்தது அவனுக்கு. அதைச் செய்யமுடியாத அவனது நிலையை அவனே வெறுத்தான்.

ஒரு திருமண வாழ்க்கை, வாழ்வின் ஆதாரத்தையே குலைக்க முடியுமா? கண்ணைத் திறந்துகொண்டே படுகுழியில் விழுந்ததோடு மட்டுமல்லாமல், தன்மேல் தானே மண்ணையும் அள்ளிப் போட்டுக் கொண்டதை உணர்ந்தான்.

அவனுக்கு வாய்விட்டுக் கதறி அழவேண்டும்போல் இருந்தது. சென்றவள், தன் தைரியத்தையும் கூடவா உருவிச் சென்றுவிட்டாள்? மூளையும் வேலை செய்யவில்லை. தான் இப்பொழுது பிச்சைக்காரன் நிலையில் இருப்பது புரிந்தது.

வந்திருந்தவர்களை நல்லவிதமாகவே பேசி அனுப்பினான். நாற்காலியில் சாய்ந்து, எதையும் யோசிக்கப் பிடிக்காமல் கண்களை மூடி அமர்ந்து கொண்டான். எங்காவது ஓடிப் போகலாமா? மஞ்சள் கடுதாசி கொடுத்து விடலாமா? தற்கொலை செய்து கொள்ளலாமா?

எழும் யோசனைகள் அனைத்தும் தறிகெட்டு ஓடியது. அதை அடக்கும் கடிவாளமில்லாமல் தத்தளித்துத் தடுமாறினான் அவன். அவனுக்கு இப்பொழுது தைரியம் கொடுக்கும், அவனைத் தட்டிக் கொடுக்கும், தோள் கொடுக்கும் ஒரு தோள் வேண்டும்.

அலுவலகத்தில் இருக்க முடியவில்லை. எழுந்து தொழிற்சாலையைச் சுற்றிப் பார்க்கச் சென்றான். வேலையில்லாததால், அனைவரும் கூடிக் கதை பேசுவது

தெரிந்தது. மெஷின்கள் துருப்பிடிக்கும் நிலைக்குச் சென்று விடுமோ?

வேதனை நெஞ்சை நனைத்தது....., பாட்டன் வளர்த்த கம்பெனி, அதை நான் கட்டிக் காக்காமல் போய் விடுவேனோ? ஏக்கமாக அனைத்தையும் பார்வையிட்டான். கைகள் தாமாக எழுந்து அவற்றை வருடின.

அங்கே இருக்க முடியாமல் மூச்சு முட்டும் உணர்வு. இந்த கணேஷ் எங்கே? மீண்டும் மீண்டும் யோசனை சென்று சேரும் இடம் அவனாகவே இருந்தான். இப்போதைக்கு அவன் மனதுக்கு நெருக்கமானவனும் அவன்தான், அவன் எரிச்சலுக்குக் காரணமானவனும் அவன்தான்.

அவன் கால்கள் தாமாகக் கேண்டீன் பக்கம் சென்று ஒரு மூலையில் அமர்ந்து கொண்டான். அமர்ந்தவன், மேசையில் தலை வைத்துப் படுத்துக் கொண்டான். என்னமோ தாயின் மடியில் தலை வைத்துப் படுக்கும் உணர்வு.

‘இது என் கையை விட்டுப் போய்விடுமோ’, அவன் அனுமதி இன்றியே ஒரு துளி நீர் மேசையை நனைத்தது. அந்த உணர்வு கூட தெரியாமல், அப்படியே படுத்திருந்தான். அவன் சாயத் தோள் வேண்டும் கிடைக்குமா?

அங்கே கணேஷ், ஜீவா அஞ்சு கிடைத்துவிட்டாள் என்று சொன்னவுடன், நொடியும் தாமதிக்காமல், அஞ்சுவைப் பார்க்க விரைந்தான். பள்ளியில் இருந்து கொஞ்சம் தூரத்தில்தான் நின்று கொண்டிருந்தான்.

அங்கிருந்து பள்ளிக்கு ஓடியே சென்றான். வழியில் ஆட்டோ பிடித்துச் செல்லும் யோசனைக் கூட எழவில்லை. வியர்வை வழிய பள்ளிக்குச் சென்றவன், “அஞ்.....அஞ்சலியைப் பாக்கணும்”, வியர்வையைப் புறங்கையால் துடைத்தெறிந்தவன், வேகமாகக் கேட்டான்.

ஆயா விரைந்து சென்று ஹேமாவிடம் கூற, அவள் அஞ்சலியை அழைத்துக்கொண்டு வெளியே வந்தாள்.

அஞ்சலியைப் பார்த்தவன், ஹேமாவின் நினைவு கொஞ்சம் கூட இல்லாமல், அவளை வாரி அணைத்துக் கொண்டு கண் கலங்கினான்.

“எங்க பாப்பா போனீங்க...? அப்பா, நான் எல்லாம் ரொம்ப தவிச்சுட்டோம் தெரியுமா?”, அவன் குரல், அவள் காணாமல் போன நினைவில் நடுங்கவும் செய்தது.

“நா (ன்) இங்கேதா இதுந்தே....., அப்பா பேட் அப்பா...., மிஸ்ஸ தித்தித்தார்....., நா சந்தை(சண்டை) அவர்ட்ட”, முறுக்கிக் கொண்டே சொன்னாள்.

“இங்கேதான் இருந்தியா? அப்பா வரும்போது நீ இல்லையேடா பாப்பா... அதான் அப்பா கோபப் பட்டாங்க”, அவளுக்குப் புரிய வைக்க முயன்றான்.

அஞ்சலியைக் கட்டிக்கொண்டு தவிக்கும் அவனை, விழி விரியப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஹேமா. அவள், ஒரு ஆண் இவ்வளவு பரிதவித்துப் பார்ப்பது இதுவே முதல் முறை. அங்கே நிற்கச் சங்கடமாகவும் இருந்தது, விட்டுச் செல்லத் தயக்கமாகவும் இருந்தது.

எனவே, தன் இருப்பை அவனுக்கு உணர்த்திவிடுவோம் என்ற எண்ணம் தோன்ற, “அஞ்சலி...., இது யாரும்மா?”, அவளிடம் கேட்டாள்.

“இது....இது... தெய்வத் (டிரைவர்)....”, அவள் தயக்கமாகச் சொல்லவே, கணேஷின் முகம் வேதனையை அப்பட்டமாக பிரதிபலித்ததைக் கண்டுகொண்டாள் ஹேமா.

“அப்பதித்தானே....”, சொல்லிவிட்டு, அவனிடம் சரியாகச் சொன்னேனா என்பதுபோல் கேட்டாள்.

“ஆமாடா....., எங்க அஞ்சுப் பாப்பா தப்பா சொல்லுவாளா? நீ கிளாஸ்க்கு போடா, நான் ஆபீஸ் போறேன்”, தன் வேதனையை மென்று முழுங்கியவாறு பேசும் அவனை, தயக்கமே இல்லாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் ஹேமா.

“அஞ்சும்மா நீ கண்ணா கிட்டே போ, மிஸ் வாறேன்...”, அவளை அனுப்பிவிட்டு கணேஷைப் பார்க்க,

அவனோ, “கொஞ்சம் பாத்துக்கோங்க...., சுட்டிப் பொண்ணு....”, இதற்குமேல் என்ன சொல்ல என்பதுபோல் திரும்பி நடந்தான்.

“ஹல்லோ..., நீங்க அஞ்சலிக்கு உண்மையாவே என்ன வேணும்..”, துடுக்காகக் கேட்டாள்.

“அதான் அவளே சொன்னாளே.... டிரைவர்ன்னு..., அவ பேச்சுக்கு மறு பேச்சுக் கிடையாது”, ஹேமாவின் முகத்தைப் பார்க்காமல் அவன் சொன்னாலும், அவன் குரலில் இருந்தே அவன் மிகுந்த வருத்தத்தில் இருப்பதைப் புரிந்து கொண்டாள். ஹேமாவிற்கு மனதைப் பிசையும் உணர்வு.....

அதை என்னவென்று கேட்கும் முன்பே, அவன் சென்று விட்டிருந்தான். பள்ளிக்குள்ளே, அஞ்சலி திவ்யாவின் மடியில் அமர்ந்திருப்பது தெரிந்தது. திவ்யாவும் அவளை மடியில் வைத்துக் கொண்டே, மற்ற பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

அஞ்சலியும் ஆர்வமாகப் புத்தகத்தில் இருக்கும் படங்களைப் பார்த்துக் கொண்டு, திவ்யா சொல்லித் தருவதைத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள். பின்னர் கொஞ்ச நேரத்தில் கீழே இறங்கி, கண்ணனைத் தேடிக் கொண்டு வந்தாள்.

கண்ணன் எதையும் கண்டு கொள்ளாமல், ஹேமாவின் அருகில், அவள் அமர வைத்த இடத்தில் இருந்துகொண்டு, தூரமாக இருக்கும் தன் தாயையே பார்த்துக் கொண்டிருந்தான். அஞ்சலி அருகில் வரவே, அவன் பார்வை அவள் பக்கம் திரும்பியது.

“கண்ணா வாதியா விளாதலாம்.....”, ஆர்வமாகக் கேட்டாள். ஆனால் அவளது ஆர்வம் அவனிடம் சுத்தமாக இல்லை.

‘ஆம்’ என்றும் சொல்லாமல், ‘இல்லை’ என்றும் சொல்லாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

“சதி நான் உனக்கு கத சொல்லித் ததவா?”, எப்படியாவது அவனுடன் பழகிவிடும் முனைப்பு அவளிடம்.

“கத.....?”, கேள்வியாக முணுமுணுத்தான்.

“கத தெதியாதா.....? கிஷ்ணா கத....? எங்க அப்பா தொல்லித் தந்தாங்க”, பெருமிதம் வழிந்தது அவள் குரலில்.

“அப்பா இல்ல...., இல்ல..., அம்மா...., கத.....”, வேகமாக அலறினான். தனக்கு அப்பாக் கதை வேண்டாம் என்று தன் மறுப்பைச் சொன்னான்.

“அம்மா...., கத...., அம்மாதான் பேச மாத்தாங்களே? அப்போ எப்படி கத.... தொல்லுவாங்க?அம்மால்லாம் கத தொல்ல மாட்டாங்க”, நாக்கைத் துறுத்தி, புருவம் நெரிய, வேகமாகத் தன் மறுப்பை வெளியிட்டாள் அஞ்சலி.

இதுவரை இவர்களின் செயல்பாடுகளை, பாராமல் பார்த்துக் கொண்டிருந்த ஹேமாவுக்கு அடுத்த அதிர்ச்சி...., அஞ்சலியின் பெரிய மறுப்பு..., அவளுக்கு வித்தியாசமாக இருந்தது. அந்த நேரம் கண்ணன் வேகமாக அங்கிருந்து எழுந்து, திவ்யாவை நோக்கி ஓடினான்.

அவன் பின்னாலேயே சென்றாள் அஞ்சலி. கண்ணன் திவ்யாவின்மேல் தாவி ஏறி, அவளைக் கட்டிக் கொண்டு, “அம்மா..., அம்மா..., கத...., அவ.., அப்பா கத.... இல்ல...., வேணா..., போ...”, அஞ்சலியை விரட்டினான்.

கண்ணனின் செய்கையும் மறுப்பும், அஞ்சலியை விரட்டுவதும், அனைத்தையும் புரியாமல் பார்த்தாள் திவ்யா. “என்னம்மா....?”, தன் மகன் தெளிவாகச் சொல்ல மாட்டான் என்பதால், அவள் அஞ்சலியிடம் கேட்டாள்.

“நீதா அம்மாவா....?”, திகைப்பாகக் கேட்டாள்.

அவள் அதிர்ச்சியின் காரணம் புரியாமலேயே, “ஆமாடா நான் அம்மாதான்...”, அவளுக்கு பதில் சொன்னாள்.

“அப்போ..., நீ தான் அம்மாவா....”, இன்னுமே குழப்பம் அவள் குரலில்.

“ஆமா நான் கண்ணனோட அம்மாடா....”,
தெளிவுபடுத்தினாள் திவ்யா.

“நீ...நீ.... அவவ (அவனை) தூக்குவியா...?”.

“ஆமாடா...”.

“முத்தா குப்பியா....?.

“ம்ம்...”.

“கத தொல்லுவியா?”.

“சொல்லுவேன்...”.

“அப்போ அவ யாது? அப்பா... அதுதா... அம்மா... தொன்னாரு? ஆனா அம்மா தூக்க மாத்தாலே அஞ்சு பாப்பாவை. அஞ்சு பாப்பாக்கு முத்தா குக்க மாத்தாலே, தத்தம் போத்தா தித்துவாலே, அப்போ அது அம்மா இல்லையா? நீதா அம்மாவா..?”, தன் கண்முன்பு அம்மாவின் பிம்பம் பொய்யாகிப் போன உணர்வு.

அம்மா என்றால், திவ்யாவைப் போல்தான் இருப்பாளா? அணைப்பாளா? தூக்கிக் கொள்வாளா? முத்தம் கொடுப்பாளா? சீராட்டுவாளா? கதை சொல்வாளா? அப்படியென்றால் தன் வீட்டில் இருந்த அவள் யார்? அவள் அம்மாவா? இவள் அம்மாவா? உதடு துடிக்க, அழுகைக்குத் தயார் ஆனாள் அஞ்சலி.

நொடியில் திவ்யாவிற்கு அனைத்தும் புரிந்து போனது. பெண்ணுருவத்தில் ஒரு அரக்கியைக் கண்டிருக்கிறாள்

அஞ்சலி. அஞ்சலியின் தாய் தாயாக இருக்கவில்லை, கண்ணனின் அப்பாவைப்போல அவளும் தாய்மையே இல்லாத பெண்ணாக இருந்திருக்கிறாள்.

கலகலப்பாக வளையவரும் சிறுமிக்குள்ளும் இப்படி ஒரு வலியான மறு பக்கமா? என்னைச் சுற்றி யாருமே துன்பமில்லாமல் இருக்க விட மாட்டாயா இறைவா? மனதுக்குள் அழுதவள், அஞ்சலியை வாரி அணைத்துக் கொண்டாள்.

“தொல்லு...., நீதா அம்மாவா...? அப்போ அவ யாது...?”, தனக்குத் தெரிந்தே ஆகவேண்டும் என்ற பிடிவாதம் அவள் குரலில்.

“ஹேமா.....”, திவ்யா குரல் கொடுக்க, இங்கேயும் ஒரு காதை வைத்துக் கொண்டிருந்த ஹேமா, எழுந்து வேகமாக வந்தாள். திவ்யாவின் கரங்களில் இருக்கும் எந்தப் பிள்ளையைத் தாங்கிக் கொள்ளவென்று தெரியாமல் தடுமாறினாள்.

திவ்யாவின் கண்களிலும் அதே தயக்கம். தற்பொழுது ஆறுதல் தேடும் அஞ்சலியைப் பார்க்கவா, தந்தைப் பற்றிய பேச்சில் பயந்து தன்னிடம் ஒடுங்கியிருக்கும் கண்ணனைப் பார்க்கவா? பள்ளியில் அனைத்துப் பிள்ளைகளும் இவர்களையேப்பார்க்க, அங்கிருந்து அகன்றே ஆகவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானார்கள்.

இரு குழந்தைகளும் அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு, விடமாட்டேன் என்று அடம் பிடிக்க, தவித்துப் போனார்கள் இருவருமே.

ஒரு வழியாக இருவரையுமே தாங்கியவாறு, எழுந்து வெளியே வந்தாள் திவ்யா. அங்கிருந்த மரத்தின் நிழலில் அமர்ந்த வேளையில், முத்து அஞ்சலியை அழைத்துப் போக வந்தார். வழக்கமாக பன்னிரண்டு மணிக்கே அவளை அழைத்துச் செல்ல முத்து வந்து விடுவார். தாத்தாவைப்

பார்த்தவுடன், திவ்யாவிடமிருந்து இறங்கி அவரிடம் ஓடியவள்,

“தாத்தா...., இதுதான் அம்மாவா? எனக்கு அம்மா வேணும்...”, அவள் சொன்ன வார்த்தையில் அனைவருமே அதிர்ந்து போனார்கள்.

முத்து சங்கடமாக அவர்களைப் பார்த்து சிரித்துவிட்டு, “பாப்பா அம்மாவையே கேக்க மாட்டா, இன்னைக்குத்தான்...”, அவர் தயக்கமாக இழுக்க,

“அதுக்கு முதல்ல, அவங்க அம்மா ஒழுங்கா இருந்திருக்கணும். அம்மாவோட பிம்பமே அவ மனசில் வேறயா பதிஞ்சு இருக்கு. அது இப்போ கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் அவளுக்குப் பொய்யின்னு தெரிய வந்துது, அதான் இப்போ கேக்குறா?”, ஹேமா நக்கலாகச் சொன்னாள்.

“நீங்க சொல்லுவதும் சரிதாம்மா....”, கண்களைத் துடைத்துக் கொண்டார்.

“அஞ்சலி நீ உன் பேகை எடுத்துட்டு வாம்மா....”, ஹேமா சொல்ல, அங்கிருந்து மனமில்லாமல் அகன்றாள்.

அவளையே பார்த்தவர், “எங்க முதலாளியோட வாழ்க்கையே நாசமா போச்சும்மா. நடைபிணமாவே மாறிட்டார். அவர் உசுரோட இருக்காதே இவளுக்காகத்தான். அவ அம்மா செஞ்சக் கொடுமை கொஞ்சமா நஞ்சமா?

“இந்தப் பிஞ்சு முகம் கூட, அவள் மனசை மாத்தலையே. பிறந்து விழுந்த குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்க மாட்டேன்னு மறுக்குற பொண்ணை எங்கேயாவது பார்த்திருக்கீங்களா? நான் பாத்தேம்மா.... ஆனா என்னால் என்ன செய்ய முடியும்?”, தன் போக்கில் சொன்னவரைத் தடுத்தது திவ்யாவின் கோபக் குரல்.

“உங்க முதலாளி ஒழுங்கா இருந்திருந்தால், அவ ஏன் இப்படி நடந்துக்கப் போறா? அவரும் மிருகமா நடந்திருப்பார்..., அவ தைரியமானவளா இருந்ததால் திரும்பக் கொடுத்தாள்..., உங்களுக்கு அதெல்லாம் தெரியாது. என்னதான் இருந்தாலும் நீங்கல்லாம் ஆண் வர்க்கம் தானே”, குரல் உச்சக் கோபத்தில் வெளிப்பட்டது. ஆண்களைப் பற்றிய திவ்யாவின் தாக்கம் அவளை இப்படிப் பேச வைத்தது.

“அம்மா...., என்னம்மா சொன்னீங்க...? என் முதலாளியோட மனசைப் பத்தி உங்களுக்கு என்ன தெரியும்? உண்மையான பாசத்துக்கு இந்த உலகத்தில் மதிப்பே கிடையாதாம்மா? அப்படிப் பார்த்தால் இப்போ நீங்களும்தான் அஞ்சு பாப்பாவின் அம்மா மாதிரி பேசுறீங்க.

“அதுக்காக நான், பொம்பளை இனமே பேய் இனம்னு சொல்ல முடியுமா? நான் சொல்லப் போறதைக் கேட்டுட்டு நீங்க முடிவு பண்ணுங்க....”, சொல்லிவிட்டு பேசத் துவங்கியவரின் பேச்சைத் தடுத்தது ஜீவாவின் வருகை.

அதே நேரம் அஞ்சலியும் அவளது பேகுடன் வரவே, சுற்றுப்புறம் மறந்து, வாழ்வையே வெறுத்தவன் போல் நடந்து வந்த அவன், அஞ்சலியை வாரிக் கொண்டான்.

அவன் கண்கள் சிவந்து, இமைகள் தடித்து, முகமே கொஞ்சம் வீங்கி இருந்தது. அவன் அழுதிருப்பது, அவன் முகத்திலிருந்தே அனைவருக்கும் தெரிந்தது.

முத்து அவன் அருகில் செல்லும் முன்பே, “அஞ்சும்மா...., நாம இந்த உலகத்தை விட்டே போய்டலாமாடா...?”, அஞ்சலியை நெஞ்சோடு இறுக்கிக் கொண்டு, அவள் பதில் ஒன்றே தேவை என்பதுபோல் சோர்ந்துபோய் அங்கிருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தான்.

“இப்போவே போலாம்ப்பா.....”, தந்தை எங்கேயோ வெளியூர் போக அழைக்கிறான் என்ற எண்ணத்தில், வேகமாக பதில்

சொன்னாள் அஞ்சலி. இந்த சம்பாஷணையை கேட்டுக் கொண்டிருந்த அனைவரின் இதயத்தையும், ஏதோ ஒரு உணர்வு அழுத்தியது.

***

தாகம் - 22.

நெஞ்சம் நிறைய நஞ்சை

சுமக்கும் உனக்கு

அன்பின் சாராம்சம்

புரிவதில்லை.....

சோர்ந்துபோய் படுக்கையில் விழுந்தான் நந்தன். ப்ரியா பேசிய பேச்சுக்கள், விஷ அம்பாக நெஞ்சைத் தாக்கி மனதை ரணமாக்கியது. ஒரு பெண்ணால் இப்படி நடந்துகொள்ள முடியுமா? அதிலும் தன்னைப் பழிவாங்க வேண்டும் என்பதற்காக, தன் உணர்வுகளோடு, தான் போராடவேண்டும் என்பதற்காக, தன் பெண்மையையே களங்கப் படுத்திக் கொண்ட விதம்?

அவளுக்கு அதில் வெற்றி தானோ? முதல்நாள் அவளிடம் அனுபவித்த இன்பம், நினைவில் வந்து இம்சிப்பது உண்மை தானே? அவனால் அதை முழுதாக மறுக்க முடியவில்லை.

இப்பொழுது கூட, இவை அனைத்தும் பொய்யாக இருக்காதா? அவள் தன்னிடம் ஒரு வார்த்தை சிரித்துப் பேசிவிட மாட்டாளா? இவையனைத்தும் பொய்யென்று சொல்லிவிட மாட்டாளா? என்று ஒரு மூலையில் மனம் ஏங்குவதை மறுக்க முடியவில்லை.

திராவகமாக அவள் வீசிய வார்த்தைகள், அவனை அரிக்கவே செய்தன. ஒரு பெண்ணை நேசிப்பதும், அவளைப் பெண் கேட்பதும், அவளையே மணந்து கொள்வதும் இவ்வளவு பெரிய துன்பத்தையும், வலியையும் கொடுக்குமென்று யாராவது சொல்லியிருந்தால், அவர்களைப் பயித்தியக்காரனென்று எண்ணியிருப்பான்.

ஆனால் இன்று...., நினைக்காதே மனமே, கொஞ்ச நேரம் எதையும் சிந்திக்காதே.

இப்படியே இருந்தால் எதுவும் மாறாது என்பதை உணர்ந்தவன், ஒரு வாரமாக மில்லுக்குச் செல்லாமல் வேலைகள் தேங்கிக் கிடக்கும் என்ற எண்ணம் வரவே, எழுந்து மெதுவாகக் கிளம்பினான்.

குமார் இன்னுமே வீட்டுக்குள்ளேயே இருப்பது தெரிந்தது. அவனிடம் இப்பொழுது பேசத் துவங்கினால், வார்த்தைகள் தடிக்கும் என்பதை உணர்ந்தவன், பேசாமல் வெளியேறினான். அவன் காரில் ஏறவே, குமாரும் அவன் பின்னால் சென்றான்.

“என்ன எனக்கு பாதுகாப்புக் குடுக்குறியா? தற்கொலை செய்துகொள்ளும் அளவு நான் கோழையில்லை”, வெடுக்கென சொன்னான்.

“ஐயோ சார் நான் அதுக்காக உங்களோட இருக்கலை, என்னோட மன திருப்திக்காகத்தான் இருக்குறேன். அதுமட்டும் இல்லாமல்..., நீங்க எதுக்கு சார் சாகணும்? நீங்க நல்லா வாழணும் சார். உங்க வாழ்க்கை நேராகாமல் நான் உங்க காலடியை விட்டுப் போக மாட்டேன்”, சொல்லிவிட்டு, அவன் காரில் ஏறி அமர்ந்துகொண்டான்.

‘இனிமேல் வாழ்க்கை எங்கே இருக்கிறது?’, விரக்தியாக நினைத்தவன், காரைக் கிளப்பினான்.

வேலையில் தன் கவனத்தைத் திருப்ப முயன்றான். அதில் கொஞ்சம் வெற்றியும் பெற்றான். அலுவலகத்தில் இருந்து வெளியேறும் நேரம், “என்ன சார்...., ஒரே வாரத்தில் மில்லுக்கு வந்துட்டீங்க? அம்மாவுக்கு எப்படி இருக்கு? எல்லாம் சரியாப் போய்டும் சார்.

“இந்தாங்க.... புதுசா கல்யாணமானவர், வெளியே வந்துட்டு வீட்டுக்குப் போகும்போது வெறுங்கையோட போகக் கூடாது. இது என்னோட சைடு தொழில், பூ கட்டி விக்கிறது.

நானே தினமும் கொண்டுவந்து தாறேன் சார்”, சொல்லிவிட்டு, அவன் கையில் ஒரு பந்து மல்லிகைப் பூவைத் திணித்துவிட்டுச் சென்றார், கூட்டிப் பெருக்கும் பெண்மணி.

தன் நிலை அவருக்கு என்னத் தெரியும்? விரக்தியாகச் சிரித்தாலும், மல்லிகைப் பூவுக்கு மயங்காத பெண்கள் உண்டா? என்ற எண்ணத்தில் அதைப் பெற்றுக் கொண்டான்.

குமாரும் அவன் பின்னோடே வந்தான். இருவரும் வந்தபொழுது இருந்த மனநிலையில் இருந்து, கொஞ்சம் தெளிந்து தைரியமாகவேச் சென்றார்கள்.

வீட்டில் அவர்களுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. ப்ரியா கிச்சனில் நின்று எதையோ சமைப்பது தெரிந்தது. கொஞ்சம் ஆர்வமும், எதிர்பார்ப்பும், ஆசையும் போட்டியிட, அவள் அருகில் சென்றான்.

“ப்ரியா...”, அவன் ஆசையாய் அழைக்க, அலட்சியமாகத் திரும்பி அவனைப் பார்த்தாள். அவள் அலட்சியத்தைக் கண்டுகொள்ளாமல், மல்லிகைப் பூவை அவள்பக்கம் ஆசையாக நீட்டினான்.

அதையும் அவனையும் எடுத்தெரிந்த பார்வை பார்த்தவள், ஒரு வார்த்தைக் கூடப் பேசாமல், கிச்சன் மேடையைக் காட்டினாள். தனக்கு இதுவே போதும் என்பதுபோல் சந்தோஷமாகவே அதை அங்கே வைத்தான்.

அதை தொட்டுக்கூட அவள் பார்க்கப் போவதில்லை என்பது அவனுக்குத் தெரியவில்லை. கொஞ்சம் உற்சாகமாகவே அறைக்குச் சென்றான். குமாரும் கொஞ்சம் ஆசுவாசம் அடைந்தான். எப்படியும் தங்கை மனம் மாறி அவனை ஏற்றுக் கொள்ளும் காலம் வெகுதூரமில்லை என்று எண்ணினான்.

அண்ணனும் கணவனும் அங்கிருந்து அகன்றதும், அந்தப் பூவை புறங்கையால் தள்ளிவிட, அது நேராகக் குப்பைக் கூடையில் போய் விழுந்தது. “அவன் கொடுக்கும் பொருள் இருக்கவேண்டிய இடம் இதுதான்”, வன்மமாகச் சொல்லிக் கொண்டு, அவளும் தன் அறைக்கு விரைந்தாள்.

அன்று இரவு, எப்படியும் அவன் தன்னைத் தேடி வருவான் என்ற நம்பிக்கை, அவளுக்கு மலையளவு இருந்தது. அவளது எண்ணத்தைப் பொய்யாக்காமல், அவனும் அங்கே வந்தான்.....,

இதழில் இகழ்ச்சிப் புன்னகையுடன் அவனைப் பார்க்க, “அம்மா கீழே இருந்து பாத்துட்டே இருக்காங்க. அவங்க நிம்மதிக்காக..., இந்த ரூம்ல ஒரு ஓரமா நான் படுத்துட்டு, காலையில் எழுந்து போய்டுறேன். தயவு செய்து எதுவும் பேசிடாதே...”, அவளிடம் இப்படிக் கெஞ்சவேண்டியிருக்கிறதே என்று மனம் வெதும்பினான்.

உரிமையாய் பழக வேண்டிய நேரத்தில்..., என்னவோ யாசகம் கேட்பது போல, அவனது அறையில், அவளிடமே இடம் கேட்க வேண்டியிருக்கும் தனது நிலையை எண்ணி, மனதுக்குள் துக்கம் பெருகியது.

ஆனாலும் அதை வெளிக்காட்டாமல், ஒரு ஓரத்தில் போர்வையை விரித்து அதில் படுத்துக் கொண்டான். கண்களின்மேல் இடக் கையை குடையாக்கினான். தொண்டைக் குழி ஏறி இறங்கியதில், அவன் துக்கத்தை விழுங்குவது, அவளுக்குப் புரிந்தது.

“என்ன...? ரொம்பக் கஷ்டமா இருக்கு போல..?”, நக்கலாகக் குரல் கேட்டும், அவன் நிலையில் எந்த மாற்றமும் இருக்கவில்லை. தான் கொடுத்த பூ அவள் தலையில் இருக்கிறதா? என்று தேடி, அது இல்லை என்ற ஏமாற்றத்தை, தன் மனம் இந்த நிலையிலும் முழுதாக அனுபவிக்கிறதே என்று, அதற்கும் சேர்த்து தன்னையே அவன் வெறுத்தான்.

அவளுக்குத்தான் அவன் வேண்டாத கணவன், அவனுக்கோ, அவன் உயிராக விரும்பி, ஆயிரம் கனவுகளுடன் திருமணம் செய்த ஆருயிர் மனைவி. மனம் அவளை வெறுத்தாலும், இளமையின் தேவை, அவளை நாடும் உடலையும், மனதையும் கட்டுப்படுத்துவதும் ரொம்பவே கடினமாக இருந்தது.

“நேத்து ராத்திரி...யம்மா...

தூக்கம் போச்சுடி... யம்மா...”, திடுமென ஒலித்த திரைப்படப் பாடலில், பதறி எழுந்தான் நந்தன். ப்ரியா தன் உணர்வுகளோடு வெளிப்படையாகவே விளையாடுவது புரிந்தது. எதுவும் சொல்லாமல் மறுபடியும் படுத்துக் கொண்டு, மனதுக்குள், தனக்குத் தெரிந்த ஏதோ சுலோகத்தைச் சொன்னவாறு உறங்க முயன்றான். அது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை.

********பஸ் கிளம்பும் வேளை, ஓடிவந்து ஏறிக் கொண்டான் வித்தார்த். தர்ஷிணி, கண்களில் நீர் வழிய, தலையை வெளியே விட்டு, தன் அக்காவிடம் விடை பெற்றுக் கொண்டிருந்தாள்.

“போதும் போதும்..., அவங்க, பின்னாடியே ஓடி வந்துடப் போறாங்க”, கேலியா கோபமா என்று புரியாத குரலில் சொன்னான்.

வித்தார்த்தின் குரலில் உடல் விறைக்க, பதட்டமாக அவனைத் திரும்பிப் பார்த்தாள். “இப்போ எதுக்கு இவ்வளவு பதட்டம்? கொஞ்சம் இயல்பாத்தான் இரேன்”, அவளுக்குக் கொஞ்சம் தைரியம் கொடுக்கும் விதத்தில் சொன்னான்.

அவனது தைரியத்திலும், உடல் உதறவே செய்தது. அவனைப் பார்க்கவும் முடியாமல், ஜன்னலோரம்... ஒடுங்கி அமர்ந்தாள். அவளது ஒதுக்கம் உணர்ந்தாலும், அதைக் கண்டுகொள்ளாமல், அவளை நெருங்கி அமர்ந்து கொண்டான்.

‘கொஞ்சம் தள்ளியிருங்களேன்’, சொல்லத் துடித்த வார்த்தைகள், தொண்டைக் குழியைத் தாண்டி வராமல் சண்டித்தனம் செய்தது. அவனோ அவளை உரசியவாறு அமர்ந்தவன், அவள் தோள் சாய்ந்து உறங்கவும் துவங்கினான். எங்கே மற்றவர்கள் உறங்கியவுடன் எழுந்து, தவறாக எதையாவது செய்து விடுவானோ, என்ற பயத்திலேயே, அவள் இமைகள் மூட மறுத்தன.

இப்படி மனம் முழுவதும் பயம் இருந்தாலும், தன் மடிசாயும் அவனை உதறிவிடும் அளவு, அவளால் செய்ய முடியவில்லை. நள்ளிரவில் விழித்தவன், அவள் மடியில் தான் படுத்திருப்பதை உணர்ந்தான். வேகமாக எழுந்து அமர்ந்து கொண்டான்.

“எழுப்பியிருக்க வேண்டியதுதானே?”, அவன் எழுந்ததும் வேகமாகக் கால்களை அசைத்து, வலியில் முகம் சுழித்த அவளிடம் கேட்டான்.

‘அதைச் சொல்லவும் தைரியம் வேணுமே’, மனதுக்குள்தான் சொல்ல முடிந்தது அவளால்.

“என்ன பேசவே மாட்டியா? இல்ல பேசக் கூடாதுன்னு ஏதாவது முடிவில் இருக்குறியா?”, கோபமாகக் கேட்கிறானோ என்று அவன் முகம் பார்க்க, அங்கே கோபத்தின் சாயல் தெரியவில்லை.

நிம்மதியாக மூச்சுவிட்டாள். எங்கே அவன் வேலையைத் துவங்கிவிடுவானோ என்று பயந்தவள், அவன் சாதாரணமாக பேசத் துவங்கவே கொஞ்சம் இறுக்கம் தளர்ந்தாள்.

“என்ன... ரொம்பக் கஷ்டப் படுத்திட்டனா?”, அக்கறையாகக் கேட்கிறானா, வில்லங்கமாகக் கேட்கிறானா என்ற ஆராய்ச்சியிலேயே அவள் இருக்க, வார்த்தைகள் ஊமையாகிப் போனது அவளுக்கு.

“நீ என் மடியில் படுத்துத் தூங்குறியா?”, அவன் கேட்க, வேகமாக மறுத்தாள்.

“இப்படி வாயே தொறக்காமல் இருந்தால், நாம ரெண்டுபேரும் எப்படி ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சிக்கிறது? ஏதாவது பேசு. உனக்குப் பிடிச்சது, பிடிக்காதது, என்கிட்டே உனக்குப் பிடிச்சது, பிடிக்காதது. இப்படி ஏதாவது பேசு”, அவளைப் பேச வைத்தே ஆகவேண்டும் என்ற வேகம் தெரிந்தது அவன் குரலில்.

“சரி நான் சொல்லுறேன் முதல்ல, எனக்கு உன்னை ரொம்பப் புடிச்சு இருக்கு, இப்படிப் பேசாமல் நீ ஒதுங்கி இருக்குறது சுத்தமா புடிக்கலை. உன்கிட்டே இந்த நீள முடி சுத்தமா பிடிக்கலை. போன உடனே இதைச் சரிபண்ணனும்.

“பிறகு உன்கிட்டே ஒரு விஷயம் கேக்கணும்னு நினைச்சேன். உனக்கு வேலைக்குப் போக விருப்பமா?”, அவன் கொஞ்சம் மனம் திறந்து பேசவே, தன் வாழ்வு சீரழிந்து விட்டதோ என்ற பயத்தில் இருந்தவளுக்கு, பாலை வனத்தில் கிடைத்த ஒற்றைத் துளி போல, ஆறுதலாக இருந்தது.

அதன் பிறகு தன் வேலையைப் பற்றி, தனக்குக் கீழே வேலை செய்யும் ஆட்களைப் பற்றி, கால்காசு என்றாலும் கவர்மென்ட் காசாக இருக்கணும்னு சொல்லி, வேலை வாங்க மும்முரமாகப் படித்து வேலை வாங்கியதைப் பற்றி,

அலுவலகத்தில் தனக்கு இருக்கும் மதிப்பைப் பற்றி, தன்னைப் பார்த்தால் மற்றவர்கள் எப்படி நடுங்குவார்கள் என்பதைப் பற்றி, வேலை எவ்வளவு முக்கியம் என்பதைப் பற்றி, அதில் தெறித்த அவனது உற்சாகம், சந்தோஷம் என ஒரு புதிய முகத்தை அவளுக்கு அறிமுகப் படுத்தினான்.

அவளிடம் சாதுர்யமாகப் பேசி அவள் வாயைப் பிடுங்கி, அவளைப் பற்றிக் கொஞ்சம் கொஞ்சமாக அறிந்து கொண்டான்.

மனைவியை வீட்டுக்குள்ளே அடைத்து வைக்காமல் வேலைக்கு அனுப்ப சம்மதிக்கின்றானே, அதுவே பெரிய ஆறுதலாக இருந்தது அவளுக்கு. வீட்டிலேயே இருந்து புழுங்குவதை விட, வேலைக்குப் போய் மற்றவரின் முகம் பார்ப்பது எவ்வளவோ நலம் என எண்ணினாள்.

எனவே, உடனடியாகத் தன் சம்மதத்தைச் சொன்னாள். அவனுமே, உடனடியாக அவளுக்கு ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்வதாகச் சொன்னான். இப்படியாக, அன்றைய இரவில் மனம் திறந்து பேசிக் கொண்டே, தர்ஷிணியை அவள் கூட்டில் இருந்து வெளிவரச் செய்தான்.

தர்ஷிணியும் தனக்குப் பிடித்த விஷயங்கள், தன் அக்கா கீதா, அத்தான் கமலேஷ், அப்பா, கல்லூரி, இப்படிப் பல விஷயங்களைச் சொன்னாள். அப்படியே பேச்சு வாக்கில், தனக்கு மீசை என்றால் ரொம்பப் பிடிக்கும் என்றும், மீசைதான் ஆண்களுக்கு அழகு, மீசை வைத்த ஆண்களைத் தனக்குப் பிடிக்கும், என்று எதேச்சையாக சொல்லிவிட்டாள்.

அந்த நேரம் வித்தார்த்தின் கண்களில் தெரிந்த விபரீத ஒளியைக் கண்டிருந்தால், அவள் மேலே பேச யோசித்திருப்பாளோ? அவள்தான், கணவன் தன்னிடம் மனம் திறந்து பேசுகிறான் என்றக் கனவிலேயே அமிழ்ந்து இருந்தாளே.

“ஏண்டி...., உனக்கு...., உங்க அத்தான் கமலேஷின் மீசைப் பிடிக்குமா?”, தன் விருப்பங்களைச் சொல்லும் வேகத்தில் இருந்தவள், அவன் குரலில் ஒலித்த விபரீதத்தை கவனிக்கவில்லை.

“ம்ம்ம்...., நல்லா இருக்கு இல்ல...., நீங்க கூட மீசை வைத்தால் ரொம்ப அழகா இருப்பீங்க. எனக்காக வைக்கிறீங்களா?”, குழந்தையின் குதூகலத்துடன் கேட்டாள்.

“ஓ..., அப்போ உனக்குப் பிடிக்கணும்னா நான் மீசை வச்சுருக்கணும்.., ம்....”, ஒரு மாதிரி சொன்னான்.

“இப்போ கூட உங்களை எனக்குப் பிடிக்கும். ஆனா மீசை வைத்தால் இன்னும் பிடிக்கும். அது ஒரு கம்பீரத்தைக் கொடுக்கும் உங்களுக்கு”, தன் ஆசைகளை அவனிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வாள் அவள்.

அதை உணர்ந்து நிறைவேற்ற வேண்டியவனோ, அவள் ஆசைகளை விநோதமாக, விரோதமாகப் பார்த்தான். அவன் மனதுக்குள் ஏற்கனவே குடி கொண்டிருந்த சாத்தான், விழித்துக்கொண்டு வெளியேறப் பார்த்தான்.

ஆனால் அவர்கள் இருப்பது ஒரு பொதுவிடம் என்பதால் அதை உறங்க வைக்கப் போராடிக் கொண்டு வந்தான் அவன். எப்படியோ அந்த இரவு முழுவதும் நெட்டித் தள்ளியவன், அதன் பிறகு தனக்கு தூக்கம் வருகிறதென்று, கண்களை இறுக மூடிக் கொண்டான்.

ஆனால் தர்ஷிணியோ, உறக்கம் வராமல் வெளியே விடியலை எதிர்நோக்கிக் காத்திருந்தாள். பாவம், அப்படி ஒன்று அவள் வாழ்வில் வராமலே போகலாம் என்பதை அவள் எதிர் பார்த்திருக்க மாட்டாள்.

காலை ஆறு மணிக்கு அவர்கள் சென்று சேரவேண்டிய இடத்தை அடைந்தார்கள். “சார் லக்கேஜ் எடுக்கணுமா? ஆட்டோ வேணுமா?”, விதம் விதமானக் குரல்கள், அந்தக் காலை வேளையிலும், சோர்வே இல்லாமல் ஒலித்துக் கொண்டிருந்தது.

ஓர் கடா மீசைக்கார ஆட்டோ டிரைவரை நிறுத்தி, அவர் கைகளில் லக்கேஜைக் கொடுத்துவிட்டு, “அண்ணே நீங்க முன்னாடி போங்க, நாங்க பின்னாடியே வாறோம்”, அவரை அனுப்பிவிட்டு கொஞ்சம் பின் தங்கினான்.

“ஏய்... உனக்கு வேண்டிதான் இந்த ஆட்டோவே பிடிச்சேன்...”, அவள் காதின் அருகில் குனிந்து

சொன்னான்.

“ஐயோ.... ஏங்க வீண் செலவு, நீங்க பஸ்சுலதான் போவீங்கன்னா, நாம அதிலேயே போகலாம்...”, வெள்ளந்தியாக சொன்னாள் அவள். ஆனால் அவனோ.....

“அதுக்கில்லை...., உனக்குத்தான் மீசைன்னா ரொம்பப் புடிக்குமே...., அதான் நல்ல மீசைக் காரனா பாத்துப் புடிச்சேன். போற வழியெல்லாம், உனக்கு அவனைப் பாத்துட்டே வர சந்தோசமா இருக்கும்...”, விஷத்தில் தோய்த்த வார்த்தைகள்.

கேட்ட தர்ஷிணிக்கு, அடுத்த அடி எடுத்து வைப்பது சிரமமாக இருந்தது. அவள் நின்றுவிட்டதைப் பார்த்தவன், “என்ன அதுக்குள்ளே கனவா....?சீக்கிரம் வாடி.... போய்டப் போறான். பிறகு உனக்குத்தான் கஷ்டம்”, அவள் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு நடந்தான்.

விடியல்.... வானத்துக்கு மட்டுமே...., நமக்கு இல்லை என்பது புரிய அவளுக்கு அதிக நேரமாகவில்லை.

***

தாகம் - 23.

ஆயிரம் பேரின் நடுவில்

தனிமைச் சிறையில்

நானும் என் மனமும்.....

ஜீவாவின் பேச்சைக் கேட்டு அனைவருமே உறைந்து போயிருக்க, தன்னுணர்வுக்கு மீள அனைவருக்குமே கொஞ்ச நேரமானது. தன்னைச் சூழ்ந்திருக்கும் யாரின் நினைவும், ஜீவாவின் கண்களிலோ, கருத்திலோ பதியவில்லை.

அவன் உலகத்தில், அவனும் அஞ்சலியும் மட்டுமே இருந்தார்கள். ஜீவாவின் கண்களில் கண்ணீர் வழியவில்லையேத் தவிர, அவன் இதயம் கலங்கிக் கண்ணீர் வடிப்பது அவனுக்கு மட்டுமல்ல, அனைவருக்கும் புரிந்தது. அவனது வெறித்த பார்வையே, ஏதோ விபரீத முடிவுக்கு அவன் வந்திருப்பத்தை உணர்த்தியது.

திவ்யாவின் தோளில் புதைந்திருந்த கண்ணன், முதல் முறையாக ஒரு ஆணின் முகத்தைப் படிக்க, பார்க்க முயன்றான். அதைவிட, அஞ்சலி அவன் கரங்களுக்குள் அடங்கியிருப்பது, அவனுக்கு விந்தையாக இருந்திருக்க வேண்டும்.

இருவருமே அழுதிருந்தால், கண்ணனின் மனநிலை பழைய நினைவுகளுக்கே போயிருக்குமோ என்னவோ, இப்பொழுது ஜீவாவின் இறுகிய அணைப்புக்குள் அஞ்சலி இருப்பதே வியப்பாக இருந்தது.

ஜீவாவின் முகத்தில், தன் தாயின் முகத்தில் தெரியும் அதே கவலை ரேகைகள் படிந்திருப்பத்தைக் கண்டான்.

ஒரு ஆண் அழுவானா? அவன் முகத்தில் இவ்வளவு கவலைகள் அப்பிக் கிடக்குமா? வாழ்க்கையை

எதிர்கொள்ள முடியாத அளவு கோழையாக அவன் இருப்பானா?

இது நடிப்பா? நடிப்பாக இருக்க வாய்ப்புக் குறைவு என்றே தோன்றியது. அதிலும் அஞ்சலியே ஆதரவு என்று அவன் அணைத்துக் கொண்டு அமர்ந்திருந்த விதம்...., திவ்யாவின் இறுகிய மனதை கொஞ்சமே கொஞ்சம் தொட்டது.

ஆனாலும் அவளது காயப்பட்ட மனம் இதை நம்புவதற்குத் தயாராக இல்லை. கண்ணனின் நிலையும் கிட்டத்தட்ட அதே நிலையை ஒத்துதான் இருந்தது. கண்ணனால், ஜீவாவை முழுமையாக நம்ப முடியவில்லை. ஆனால் அவன், தன் தந்தையைப் போல் இல்லை, என்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது.

திவ்யா மேலும் அங்கே தாமதிக்க முடியாமல் அங்கிருந்து வேகமாக நகர்ந்து பள்ளிக்குள் சென்றாள். ஜீவாவைத் திரும்பியும் பார்க்கவில்லை. கண்ணனோ அவள் தோள் வளைவில் படுத்துக் கொண்டு, கண்பார்வையில் இருந்து மறையும்வரை ஜீவாவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

எப்பொழுதும், கண்ணன் வெளியில் சென்றால்...., ஆண்களைக் கண்டாலே, “போலா(ம்)....போலா(ம்)....”, என்று விடாமல் புலம்புவான், அவர்கள் இருக்கும் இடத்தில் இருக்கக்கூட விரும்ப மாட்டான். இன்றோ, ஜீவாவைப் பார்க்கும் அளவு முன்னேறி இருந்தான்....

கண்ணனுக்குத் தோன்றியது ஒன்றுதான், தாயின் கண்களில் இருக்கும் வெறுமை, கலக்கம், ஆதரவற்றத் தன்மை, அவன் பார்வையிலும் இருந்தது. அது இவைகள்தான் என்பதை, அவனுக்குப் பிரித்தறியவோ, இனம் காணவோ முடியவில்லை.

மாறாக, தாயின் கண்களைப்போலும், அவள் முகத்தைப் போலும் ஜீவாவின் முகம் இருந்தது. தாய் தன்னை அணைப்பதைப் போல, அவன் அஞ்சலியை அணைத்து வைத்துக் கொண்டிருந்தான், அதுவும் புரிந்தது.

சிறுவனான கண்ணனுக்கு, அவ்வளவுதான் யோசிக்க முடிந்தது. அவன் வயதுக்கு, ஜீவா நடிக்கிறான் என்று யோசிக்க முடியவில்லை. கண்ணனின் மாற்றத்தை உணரும் நிலையில் திவ்யா இல்ல. “நடிக்கிறான்..., நடிக்கிறான்.....”, அவள் மனம் இதையே ஜெபம் செய்தது.

பள்ளிக்குள் சென்றவள், ஜீவாவின் நினைவை முழுவதும் உதறிவிட்டு, பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லவும், அவர்களின் கேள்விக்கு பதில் சொல்லவும், அவர்களோடு விளையாடவும் தன் கவனத்தைத் திருப்பினாள். அதில் வெற்றியும் பெற்றாள்.

இங்கே முத்துவோ ஜீவாவை வீட்டுக்குக் கூட்டிச் செல்ல முயன்றார். என்னதான் இருந்தாலும், ஜீவா அவருக்கு முதலாளி, அந்த விசுவாசத்தைக் கொண்டு, உரிமையைக் காட்டி, அவனை அழைத்தார்.

அவரது அழைப்பையும் உணரும் நிலையில் அவன் இருக்கவில்லை. திவ்யாவைப் போல், அங்கிருந்து செல்ல, ஹேமாவால் முடியவில்லை. பிரம்மை பிடித்த நிலையில் இருக்கும் ஜீவாவையே, ‘ இப்போ நான் என்ன செய்யலாம் ’? என்ற யோசனையில் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்த நேரம் அங்கே வந்தான் கணேஷ். “ஹப்பா...., சார் இங்கேதான் இருக்காரா? நான் எங்கேயெல்லாம் தேடினேன் தெரியுமா?”, அவன் குரலில் அப்படி ஒரு நிம்மதி. விறைத்திருந்த கணேஷின் தோள்கள், ஜீவாவைக் கண்ட நிம்மதியில் தளர்வுற்றன.

“சார் வாங்க, முதல்ல வீட்டுக்குப் போகலாம்....”, இருக்கும் சூழலில் இருந்து அவனை மாற்ற வேண்டும் என்பது மட்டுமே அவனுக்குத் தோன்றியது. அஞ்சலியை வாங்க கைகளை நீட்டினான்.

“நீ போ....., உன்னை யார் வரச் சொன்னது. என்னை நிம்மதியா சாகக் கூட விட மாட்டியா? என்னைக்

கொலைகாரனா மாத்த முன்னாடி இங்கே இருந்து போய்டு", இரும்பின் குரலில் ஒலித்தது ஜீவாவின் குரல்.

அதைச் சட்டை செய்யாமல், "நான் உங்களை வீட்டில் விட்டுட்டு போறேன் சார்...", பணிவாகவே சொன்னான். அவனின் கோபக் குரல் அவனைக் கலங்க வைத்தாலும், வெளியே காட்டவில்லை.

"என் வீட்டுக்குப் போக எனக்குத் தெரியும்டா. என் வாழ்க்கை சீரழியக் காரணமே நீதாண்டா. ஏண்டா இப்படிப் பண்ணின?", லோன் கிடைக்காத ஆத்திரம், தன் தொழிற்சாலை கையை விட்டுப் போய்விடுமோ என்ற ஆதங்கம். யாரிடமும் தன் உள்ளக் கிடக்கையை காட்ட முடியாத ஆத்திரம், கோபம், தனிமை, ஆதரவின்மை, அனைத்தும் அவன் நிதானத்தைத் தவறச் செய்தது.

அஞ்சலியை கீழே விட்டுவிட்டு, அவன் சட்டையைப் பிடித்து உலுக்கினான். அஞ்சலி, பயத்தில் அழத் துவங்கியிருந்தாள். தந்தையின் இந்தக் கோபம் அவளுக்குப் புதிது. அதைவிட, தந்தை கணேஷைப் பார்த்தால் மட்டுமே இவ்வளவு ஆத்திரப் படுகிறான் என்று அவள் நினைத்தாள்.

"சார்..., என்னைக் கொன்னால் உங்க ஆத்திரம் தீரும்ன்னா என்னைக் கொன்னுடுங்க சார்....., என்னால் முடிஞ்ச அந்த உதவியையாவது நான் உங்களுக்குச் செய்யிறேன்", கோபமே படாமல் நிதானமாகச் சொன்னான்.

"அஞ்சு பாப்பா அழறா சார்....., கொஞ்சம் உங்களைக் கட்டுப் படுத்திக்கோங்க..., இது அவளோட ஸ்கூல். நாம நம்ம வீட்டுக்குப் போகலாம்....", ஜீவா இப்படி பொதுவிடத்தில் அவமானப் படுவதையோ, நிதானமிலாமல் நடந்து கொள்வதையோ கணேஷ் விரும்பவில்லை.

அதற்குக் காரணம், தான் அவமானப் படுகிறோமே என்பதை விட, ஜீவாவின் நிலை தாழ்ந்து விடுமோ என்ற அக்கறைதான் காரணம்.

“முத்து, நீங்க ஜீவா சாரைக் கூட்டிப் போங்க, நான் வாறேன்...”, ஜீவா பித்துப் பிடித்த நிலைக்குச் சென்றிருந்தான். எனவே, முத்து அவனை கைத்தாங்கலாக அழைத்துச் சென்றார். ஜீவா தள்ளாடிச் செல்வதும், அவனது கோபமும், கணேஷிடம் அவன் போட்ட சண்டையும், அஞ்சலியை இன்னும் அழ வைத்துக் கொண்டுதான் இருந்தது.

அஞ்சலியைக் கைகளில் ஏந்தியவன், ஹேமாவின் அருகில் சென்று, “மேம், அஞ்சலி இங்கேயே இருக்கட்டும்..., நான் பிறகு வந்து அவளைக் கூட்டிப் போறேன்... ப்ளீஸ்”, அவளை அவள் கைகளில் கொடுத்தான்.

“நீ பேத்(ட்) பாய்...., உன்ன பாத்தாதா(ன்) அப்பா கோவப் படுறாங்க...., நீ வேணா போ..., எனக்கு உன்ன புதிக்கல(பிடிக்கல)”, சொல்லிவிட்டு அவனை அடித்தாள்.

அவள் அடிகள் அனைத்தையும் அசையாமல் வாங்கிக் கொண்டான். “நீயாவது என்னை அடி பாப்பா..., நல்லா அடி...., இன்னும் அடி...”, ஹேமா அவளை வாங்கிக் கொள்ளும் முன்பே, அவன் கன்னங்களில் மாறி மாறி அடி விழுந்தது.

“அஞ்சலி...., என்ன இது...?”, ஹேமா கொஞ்சம் குரல் உயர்த்திக் கேட்ட பிறகே அமைதியானாள்.

“அவளை ஒண்ணும் சொல்லாதீங்க.....”, சொல்லிவிட்டு ஜீவாவைப் பார்க்க விரைந்தான். அஞ்சலியும், ஹேமா கடிந்து கொண்டதால், அதிர்ச்சியாக அவளைப் பார்த்தவாறு அமைதியாக இருந்தாள்.

ஹேமாவுக்கு எதுவும் புரியவில்லை. அவர்கள் குடும்பத்துக்குள் ஏதோ குழப்பம், என்பதுவரை புரிந்தது. ஆனாலும், கணேஷின் பொறுமையும் நிதானமும், அவன் கலக்கத்தை மறைப்பதும், அவளுக்கு அவன்பால் ஒரு கரிசனையை ஏற்படுத்தியது.

ஒரு குடும்பமே அவனை வெறுப்பதும், அவன் அதைப் பொருட்படுத்தாமல், அவர்களைச் சார்ந்தே இருக்க முயல்வதும், அவர்களுக்காக எதையும் செய்யத் தயாராக இருப்பதும், அவளுக்கு வியப்பாக இருந்தது.

எப்படியாவது அவனிடம் பேசி, அவன் மனதை அறிய வேண்டுமென்று நினைத்தாள். 'நீ எதற்கு அவன் மனதை அறிய வேண்டுமென்று' மனசாட்சி கேட்க, அதற்கு அவளிடம் பதில்தான் இல்லை.

அஞ்சலியைத் தூக்கிக் கொண்டு பள்ளிக்குள் சென்றாள். அங்கே திவ்யா சலனமே இல்லாமல், பிள்ளைகளுக்குப் பாடம் எடுப்பது தெரிந்தது. 'எவ்வளவு பெரிய விஷயம் நடக்குது, இவ எப்படி இப்படி இருக்கா?', புருவம் சுருக்கியவள், அவள் முத்துவிடம் கேட்ட கேள்வி நினைவிலாட,

'திவ்யா இப்படிப் பேசாமல் இருந்தால்தான் ஆச்சரியம். அவள் நிலையில் நான் இருந்திருந்தால், நானும் இப்படித்தான் பேசியிருப்பேன்', தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டாள்.

அஞ்சலியை அருகில் இருந்த இருக்கையில் அமர வைக்க, அஞ்சலி தலை குனிந்து அப்படியே அமர்ந்திருந்தாள். அது மதிய நேரமானதால், பாதி பிள்ளைகளுக்குமேல் சென்று விட்டிருந்தார்கள். மீதிப் பிள்ளைகளுக்கு உணவளித்து, அவர்களை உறங்க வைத்துக் கொண்டிருந்தார்கள் ஆயாமார்.

அஞ்சலியைச் சாப்பிடச் சொன்ன பொழுது கூட அவளிடம் எந்த மாற்றமும் வரவில்லை. திவ்யாவும் அஞ்சலியின் அமைதியை உணர்ந்தாள், ஆனால், அவளது மனக் காயங்களும் கிளறிய நிலையில் இருந்ததால், அவளிடம் முழு கவனத்தைச் செலுத்த முடியவில்லை.

அனைத்தையும் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த தங்கம், "ஹேமா, திவ்யா, நீங்க ரெண்டுபேரும்

கண்ணனையும், அஞ்சலியையும் வீட்டுக்குக் கூட்டிப் போய் சாப்பாடு கொடுத்து தூங்க வைங்க. இங்கேதான் பசங்க எல்லோரும் தூங்கிட்டாங்களே..”, திவ்யாவின் மனமறிந்தே அவ்வாறு சொன்னார்.

திவ்யா, கண்ணனைத் தூக்கிக் கொள்ள, அஞ்சலியின் பார்வை ஏக்கமாக அவனைத் தழுவி மீண்டது. ஹேமா அவளை தூக்கிக் கொண்ட பொழுதும், கண்ணனையும், திவ்யாவையும் தொடரும் அவள் பார்வையை, என்ன செய்தும் ஹேமாவால் கவர முடியவில்லை.

ஹேமாவுக்கே ஒரு அளவுக்குமேல் ஒரு மாதிரியாகிப் போனது. திவ்யாவோ அவள் உலகத்துக்குள் அமிழ்ந்து விட்டது புரிந்தது. இயந்திரகதியில் கண்ணனுக்கு பால் சாதம் பிசைந்து ஊட்டிக் கொண்டிருந்தாலும், மூளைக்குள், முத்து சொன்ன,

“பிறந்த குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்க மாட்டேன்னு சொல்லும் தாயைப் பார்த்திருக்கீங்களா? நான் பாத்திருக்கேன்...”, இதை நினைக்க, ‘நானும்தான் பார்த்தேன்....’, ஒரு நிமிடம் அவள் கை கண்ணனுக்கு ஊட்டுவதை நிறுத்திவிட்டு, கண்களை மூடி அந்த நாளுக்கே சென்றாள்.

கண்ணன் கேள்வியாக அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான். அஞ்சலியோ, ஹேமா கொடுத்த சாப்பாட்டை ஒரு வாய் கூட வாங்க மாட்டேன் என்று, வாயை இறுக மூடிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

அவள் கண்கள் கண்ணனைத் தொடர்வதையும் நிறுத்தியிருந்தது. ஹேமாவும், ரைம்ஸ் சொல்லி, கதை சொல்லி, தன்னால் முயன்ற அனைத்தையும் செய்தும், அஞ்சலியின் பிடிவாதத்தின்முன், எந்தப் பலனும் இருக்கவில்லை.

திவ்யா கண்ணனுக்கு சாதம் ஊட்டிவிட்டு கிச்சனுக்குள் செல்ல, அவளைத் தொடர்ந்தாள் ஹேமா. “திவ்யா....,

எவ்வளவு நேரம்தான் இப்படிக் கனவிலேயே எல்லாம் செய்வ? உன்னைச் சுத்தியும் கொஞ்சம் பாரேன்...", கெஞ்சலாகச் சொன்னாள்.

"ஏன்...? என்னாச்சு...? ஏதாவது சொதப்பிட்டனா...?", கனவை வேகமாகக் கலைத்துவிட்டு, ஹேமாவிடம் கேட்டாள். ஹேமா பதில் சொல்லும் முன்பு, ஹாலில் கண்ணனின் குரல் கேட்கவே, இருவரும் வேகமாக எட்டிப் பார்த்தார்கள்.

அங்கே கண்ணன் அஞ்சலியின் அருகில், அவளை ஒட்டி நின்றுகொண்டு, "ஏ...?ஏ..., ஏ...(ன்)?", இதையே திரும்பத் திரும்ப அவளிடம் கேட்டுக் கொண்டிருந்தான்.

ஓயாமல் துறுத் துறுவென்று இங்கும் அங்கும் ஓடிக் கொண்டு, தன்னிடம் வம்பளந்துக்கொண்டு, விளையாட வரச்சொல்லி தொந்தரவு செய்யும் அஞ்சலி, அன்று அமைதியாக அமர்ந்திருக்கவே, அவனுக்கு எதையோ இழந்த உணர்வு.

எனவேதான் தன் தயக்கத்தையும் மீறி, அவளிடம் பேச வந்துவிட்டான். அஞ்சலி அதற்கும் பதில் சொல்லாமல், அமைதியாகவே இருந்தாள். கண்ணன்தான் விடுவதாக இல்லை...., அவளை ஏ....., என்ற வார்த்தையாலேயே துளைத்துக் கொண்டிருந்தான்.

அவன் இவ்வளவு கேட்பது பொறுக்க முடியாமல், "உனக்கு அம்மா புவா தந்தாங்க...., அஞ்சு பாப்பாக்கு ததவே(தரவே) இல்லை...., அஞ்சுக்கு அம்மா இல்ல....., புவா இல்ல..... அஞ்சு பாப்பாக்கு அப்பா வேணும்...., அப்பா புவா ததுவாங்க....., அப்பா...., அப்பா....", அழுதாள் அஞ்சு.

அஞ்சு சொன்னதையும், அழுவதையும் பார்த்த கண்ணனுக்கு, தன் தாய் அவளுக்கு உணவு கொடுக்காததால், அவள் அழுகிறாள் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் அவள் அவளது அப்பாவைத் தேடி அழுகிறாள் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

வழக்கமாக அப்பா என்ற பெயரைக் கேட்டாலே நடுங்கும் கண்ணன் அன்று அவ்வாறு செய்யவில்லை. மாறாக புருவம் சுருக்கி எதையோ யோசித்தான்...., ஆனாலும் அப்பா இல்ல...., என்ற சொல்லை அவன் வாய் உச்சரிக்கவில்லை.

அஞ்சலியின் பேச்சைக் கேட்டு, ஹேமாவின் பார்வை திவ்யாவைக் குற்றம் சாட்ட, தான் செய்த இமாலயத் தவறு அவளுக்குப் புரிய, ஹேமா கலந்து வைத்திருந்த சாதத்தை எடுத்துக் கொண்டு அஞ்சலியின் அருகில் சென்றாள்.

திவ்யாவை அருகில் பார்த்தும், அஞ்சலியின் அழுகை சட்டென நின்றது. அவளையே ஏக்கமாக நிமிர்ந்து பார்க்க, அவள் கொடுத்த உருண்டையை மறுப்பே இல்லாமல் சாப்பிட்டாள் அஞ்சலி. அஞ்சலிக்கு, தன் தாய் சாப்பாடு ஊட்டுவதைப் பார்த்த பிறகும், பொறாமையால் கண்ணன் அழவில்லை.

மாறாக, தாயின் மடியில் ஏறி அமர்ந்துகொண்டான். அவன் திவ்யாவின் மடியில் அமரவே, அஞ்சலி திவ்யாவைப் பார்க்க, அவளை மறு பக்கம் அமர வைத்துக் கொண்டாள். இரு தொடைகளிலும் இருவர் இருக்க, அவளால் சாப்பாடு ஊட்ட முடியவில்லை.

ஹேமா அவள் கைகளில் இருந்து கிண்ணத்தை வாங்கி வைத்துக் கொள்ள, கொஞ்சம் சிரமப் பட்டவாறே, அஞ்சலிக்கு சாப்பாடு கொடுத்தாள். சலுகையாக அவள் தோளில் சாய்ந்து கொண்டாள் அஞ்சலி.

ஹேமாவே ஒரு கிண்ணத்தில் திவ்யாவின் கைகளைக் கழுவத் தண்ணீர் கொண்டுவர, “நான் வந்திருப்பேனே ஹேமா...”, தயக்கமாகச் சொல்ல,

“எப்படி ரெண்டுபேரையும் வச்சுட்டே கை கழுவுவ? இப்படி அட்டை மாதிரி உன்கிட்டே ஒட்டிக்கிறாங்க. உன்னை இப்போ பார்த்தால், ரெட்டைப் பிள்ளைங்களுக்கு அம்மா

மாதிரி இருக்கு எனக்கு", அவள் இருக்கும் நிலை பார்த்து சிரிப்பாகச் சொன்னாள்.

"என் கஷ்டம் உனக்குச் சிரிப்பா இருக்கா...?", போலியாக முறைத்தாள் அவளை. அங்கிருந்த இறுக்கமான சூழல் கொஞ்சம் குறைந்தது. அஞ்சலி இறங்கி விளையாடச் செல்ல, கண்ணனும் அவளோடு சென்றான்.

அதன் பிறகு இருவருமே ஒருவரோடு ஒருவர் பேசியவாறு விளையாட, கண்ணனுக்கு உறக்கம் வந்துவிடவே, "அம்மா..., வாவா..., வாவா....", கண்களை கசக்கியவாறு திவ்யாவின் அருகில் வந்தான்.

அஞ்சலி வந்து, "என்ன தொல்லுறா....?", என்று கேட்க, "அவனுக்குத் தூக்கம் வந்துடுச்சாம். தூங்க வைக்கச் சொல்லுறான்", அவளுக்கு விளக்கம் சொல்லிவிட்டு, "நீயும் தூங்குறியா?", கேட்டுவிட்டு, ஒரு போர்வையை அறையில் விரித்து அவள் நடுவில் அமர்ந்துகொண்டு, இருவரின் தலையையும் காலுக்கு ஒன்றாகக் கொடுத்துப் படுக்க வைத்துக் கொண்டாள்.

அத்தோடு அவர்களின் தலையையும் கோத, கண்ணன் நொடியில் உறங்கினான். அவனை மடியிலிருந்து இறக்கித் தனியே படுக்க வைத்தவள், அஞ்சலியை மடியில் முழுதாகப் படுக்க வைத்து, தட்டிக் கொடுத்தாள்.

புதிதாக உணரும் தாயின் மடி, அதன் மென்மை, அவள் தட்டிக் கொடுத்ததால் வந்த சுகம், இவை, தான் உறங்கிவிட்டால் அனுபவிக்க முடியாதே என்ற வருத்தத்திலேயே, உறங்கிப் போனாள் அவள்.

வீட்டிற்கு அழைத்து வந்த ஜீவாவைக் கஷ்டப்பட்டு கட்டாயப் படுத்தி, உண்ண வைத்தான் கணேஷ். அதற்கு முன்பு அவன் கொடுத்த இரண்டு அடியைக் கூட வாங்கிக் கொண்டான். அவன் நிலையான மனதில் இல்லை என்பது அவனுக்குப் புரிந்ததால், அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

சாப்பிட்டு முடித்தவுடன், ஒரு தூக்க மாத்திரையைக் கொடுத்து அவனைத் தூங்க வைத்தவன், ஜீவா உறங்கி எழுந்து வந்தவுடன் அவனிடம் நிதானமாகப் பேசத் துவங்கினான்.

“சார்...., இப்போ கவர்மென்ட் பேங்க் தான் நமக்கு லோன் தரமாட்டேன்னு சொல்லி இருக்காங்க. நாம தனியார் வங்கிக்குப் போகலாம். அவங்கள்ள ஒரு ஆளாவது நமக்கு லோன் தரமாட்டேன்னு சொல்லாமல் இருக்க மாட்டாங்க”, அவனுக்கு தைரியம் கொடுக்க முயன்றான்.

“அவனுங்களும்தான் கையை விரிச்சுட்டாங்க.....”, விரக்தியாகச் சொன்னான்.

“நாம ஏதாவது ஏற்பாடு பண்ணலாம் சார்...”.

“எப்படி...?”, கத்தரித்தார்ப்போல் கேட்டான்.

“சார், முதல்ல உங்களுக்கு முதலீடா, ஒரு ஒருகோடி ரூபாய் தேவைப் படுமா? அந்தப் பணத்தை நான் தாறேன்...., இனாமா இல்லை, கடனா...., அதுக்கு வட்டி கூட வாங்கிக்கறேன்..., அவ்வளவு ஏன், ப்ளேட் வட்டி கூட வாங்கிக்கறேன்...”, எங்கே அவன் பணம் வாங்க மறுத்து விடுவானோ என்பதால் சேர்த்தே சொன்னான்.

ஜீவாவுக்கு வேறு வழியும் இருக்கவில்லை. முதலில் கொஞ்சம் உற்பத்தியைத் துவங்கினால்தான் லோன் வாங்க முடியும். ப்ளேட் வட்டி வெளியே வாங்கலாம் என்றாலோ, இது வெளியே தெரிந்தால் அவனை நம்பி மூலதனப் பொருட்கள் தரும் யாரும், அட்வான்ஸ் வாங்கிக் கொண்டு பொருள் தராமல், முழுத் தொகையையும் கொடுத்தால்தான் பொருட்கள் தருவோம் என்று சொல்லி விடுவார்கள்.

இவையெல்லாம் நினைத்துதான் ஜீவா ஏற்கனவே கலங்கியிருந்தான். பணத்தை எந்தப் பக்கம் இருந்தும் வாங்க முடியாது. தன் பரம்பரை மில் தன் கையை விட்டு

நழுவி விட்டது என்ற கவலையில்தான், அவன் இந்த அளவு சோர்ந்ததே.

ஆனால் இப்பொழுது, கணேஷிடம் இருந்து பணம் வாங்கவும் தயக்கமாக இருந்தது. வேறு வழி இல்லையே என்று கவலையாகவும், இவனிடம் நாம் பணம் வாங்குவதா? என்ற வீம்பாகவும் இருந்தது.

“சார், என்கிட்டே உங்களுக்குப் பணம் வாங்குவது தயக்கமா இருக்கும்னு தெரிஞ்சுதான், நான் வட்டி கூட வாங்கிக்கறேன்னு சொல்லுறேன். என்னால் நடந்து முடிந்த எதையுமே மாற்ற முடியாது. ஆனால், நடக்க இருக்கும் பெரிய விபரீதத்தை என்னால் தடுக்க முடியும்.

“நீங்க இதற்கு மேலேயும் என்னிடம் இருந்து பணம் வாங்கத் தயங்கினால், நான் உங்களோட இருப்பதற்கு எந்த அர்த்தமுமே கிடையாது சார். நான் இப்படியே எங்கேயாவது கண் காணாமல் போய்டுறேன்.

“எனக்கு ஏதாவது ஒரு விதத்தில் நீங்க வாய்ப்பு தாங்க. இல்ல, இன்னும் உங்களோட, தனிப்பட்ட விருப்பம்தான் முக்கியம், தொழிலாளர்களைப் பற்றி உங்களுக்கு எந்தக் கவலையும் இல்லை, இந்த உலகத்தை விட்டே போகணும் என்ற முடிவில்தான் இருந்தீங்கன்னா,

“உங்களுக்கு முன்னாடியே நான் போய்டுறேன்....., எந்த விதத்திலும் உங்களுக்கு உதவியா இருக்க முடியாத நான், இருந்தால் என்ன, இல்லாமல் போனால் என்ன? நான் போறேன் சார்.....”, உருக்கமாகச் சொல்லிவிட்டு, கவலைத் தோய்ந்த முகத்துடன் அங்கிருந்து கிளம்பிப் போனான்.

அவன் வெளியே செல்லவே, “முத்து...., அவனை நிக்கச் சொல்லுங்க. எனக்காக இல்லன்னாலும், அந்த மொத்தத் தொழிலாளர்களின் நலனுக்காக, இவனோட பணத்தை நான் வாங்கிக்கறேன். ஆனால், சரியா வட்டி போட்டு அவனுக்குக் கொடுத்துடுவேன்னு சொல்லிடுங்க.

நான் மூலப் பொருள் தாறவங்க கிட்டே பேசுறேன்....., எல்லாம் சரியா நடக்கும்னு நம்புறேன். அப்படியே அவனைப் போய், அஞ்சலியைக் கூட்டி வரச் சொல்லுங்க, என்னால் இப்போ அங்கே போக முடியாது", அரை மனதுடன் என்றாலும், அஞ்சலியைக் கூட்டிவரச் சொன்னதில் இருந்தே, ஜீவாவின் மனமாற்றம் கணேஷிற்குப் புரிந்தது.

மிகுந்த உற்சாகத்துடனே, காரை எடுத்துக் கொண்டு சென்றான். சென்ற அவனை வர வேற்றது...., மூடியிருந்த பள்ளியின் கதவுகளே. ஐந்து மணியோடு முடிந்துவிடும் பள்ளிக்கு, அவன் ஆறுமணிக்குச் சென்றால்.....,

தோட்டக்காரர் அவனை, வீட்டிற்குச் சென்று கேட்கச் சொல்லி வழியும் காட்டவே, அங்கே சென்றான். அவனை ஹேமாதான் வரவேற்றாள். அவன் கொஞ்சம் தயங்கியவாறே அஞ்சலியைக் கேட்க,

"உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்....., வாங்க....", சொன்னவாறு அவனை அழைத்துக்கொண்டு சென்றாள்.

***

தாகம் - 24.

வாழ்க்கையில் துன்பம் வரலாம்

துன்பமே வாழ்க்கையாகிப் போனால்

துயர் களைய வழியேது?

வீட்டிற்கு வர ஆன முப்பது நிமிடங்களும், ஆட்டோவில் தலை நிமிராமல் அமர்ந்து வந்தாள் தர்ஷிணி. ஆட்டோவில் அமர்ந்து, அழுவதற்குக் கூட அச்சமாக இருந்தது. எங்கே அதற்கும், ஆட்டோக்காரன் முன்பே ஏதாவது சொல்லிவிடுவானோ என்று பயந்தாள்.

வீட்டின் முன்னால் ஆட்டோ நிற்கவே, தான் வாழப்போகும் வீட்டை, கொஞ்சம் கூட ஆர்வமே இல்லாமல், ஆராய்ச்சிப் பார்வை மட்டுமே பார்த்தாள். யாரவது பெரியவர்கள் வந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமோ?

மேலே சிந்திக்கவிடாமல், “இதென்ன தாஜ்மஹாலா, அப்படிப் பாத்துட்டு நிக்கிற? ச்சீ வா.....”, மனைவி என்ற அன்போ, சக மனுஷி என்ற பரிவோ எதுவுமே இல்லாமல், ஏதோ அடிமையை அழைப்பதுபோல் அழைத்துச் சென்றான்.

கதவைத் திறந்தவன், “நீ கதவை சாத்திட்டு இரு, நான் போய் பாலும், டிப்பனும் வாங்கிட்டு வாறேன்”, சொல்லிவிட்டுச் சென்றான்.

அங்கேயே அமர்ந்திருந்தால், அதற்கும் குற்றம் கண்டுபிடிப்பானோ என்று தோன்றவே, வீட்டைப் பெருக்கி, ஜன்னல்களைத் திறந்துவிட்டு, ப்ரெஷ் செய்யத் துவங்கினாள்.

அந்த நேரம் வந்த வித்தார்த்தின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. தொண்டையில் உருளும் பயப்

பந்தை அடக்கியவள், என்ன என்பதுபோல் அவனைப் பார்த்தாள்.

“உன்னை யாருடி ஜன்னல் எல்லாம் திறக்கச் சொன்னது?”, என்னவோ கொலைக்குற்றம் செய்ததுபோல் கேட்டான்.

அவள் பதில் சொல்லாமல் அமைதியாக இருக்கவே, “நான் கேட்டால் எனக்கு பதில் வரணும், இல்ல.....”, அவன் கண்களை உருட்டிய விதத்தில் மிரண்டு,

“இ..இல்லங்க...., பூட்டியே இருந்த வீடு....., புழுங்குன வாடையா இருக்கும், அது போகத்தான்.....”, மென்று முழுங்கினாள்.

“அதுக்கு மட்டும்தான் திறந்தியா...? இல்லை..., பக்கத்து வீட்டில் இருக்கும் மன்மதனோட வாடையைப் பிடிக்கத் தொறந்தியா?”, கொச்சையாக வந்து விழுந்தன வார்த்தைகள்.

“ஐயோ அப்படியெல்லாம் எதுவும் இல்லங்க....., உங்களுக்குப் பிடிக்கலன்னா சாத்திடுறேன்”, சொல்லிவிட்டு வெளியே செல்லப்போன அவளை,

“என்ன, அதுக்குள்ளே அவனைப் பாக்கணும்னு ஆசை வந்துடுச்சா? இப்படி ஓடுற...?”, அவன் குரல் துரத்த, ப்ரேக் போட்டதுபோல் அசையாமல் நின்றாள்.

இப்பொழுது நான் என்ன செய்யட்டும் என்பதுபோல் அவனைப் பாவமாகப் பார்க்க, “நீ போய் பாலைக் காய்ச்சு, எல்லாம் நான் பாத்துக்கறேன்”, சொன்னவன் அனைத்து ஜன்னல்களையும் மூடி, கதவையும் அழுந்தச் சாத்தினான்.

வீடே ஒருவித இருளில் மூழ்கியது. தர்ஷிணியின் உடல் நடுக்கத்தை, அவளால் கட்டுப் படுத்தவே முடியவில்லை. கிச்சன் ஜன்னலையும் மூடி விடவே, மூச்சை முட்டும் உணர்வு, மூச்சு விடவே சிரமமாக இருந்தது அவளுக்கு.

“என்னங்க...., என்னமோ ரொம்ப மூச்சு முட்டுற மாதிரி இருக்குங்க...., ஒரு ஜன்னலாவது.....”, அவன் கண்களில் தெரிந்தக் கனலை விட, அவன் பார்வை சென்ற இடம் அதிக கலவரமூட்டியது.

வீட்டை சுத்தம் செய்வதற்காக, தூக்கிச் சொருகிய சேலையும், முந்தானையை ஒதுக்கி இருந்ததால், அதன் வேலையை அது செய்யத் தவறிய விதமும், கலைந்த தலையும், அவன் பார்வைக்குத் தப்பாத அவள் கெண்டைக் காலும், அவனுக்கு இளமையின் தேவையையே அதிகரித்தது.

அவன் அடிமேல் அடி வைத்து வரவே, “என்னங்க பால் கொதிக்குது....”, அவனிடமிருந்து தப்ப வழிதேடினாள்.

“பால் மட்டுமா..? நானுந்தாண்டி கொதிக்கிறேன்.... முதல்ல என்னைத் தணிச்சுக்கறேன்...., பிறகு பாலைப் பாக்கலாம்...”, அவன் கைகள் அவள் சேலையில் பதிந்தது.

இனிமேல் தனது மறுப்புக்கு அங்கே மதிப்பிருக்காது என்பது அவளுக்குப் புரிந்து போக, அவனது தாக்குதலுக்குத் தன்னைத் தயார்ப் படுத்திக் கொண்டாள் தர்ஷிணி. எவ்வளவுதான் மனதை திடனாக்கிக் கொள்ள முயன்றாலும், அவனது மிருகத் தனமான அணுகுமுறைக்கு முன்பு, உடலும், மனமும் ஒருங்கே காயப் படுவதை அவளால் தடுக்க முடியவில்லை.

அவளைவிட்டு அவன் விலகியபோழுது, மதிய சாப்பாட்டு வேளையும் கடந்திருந்தது. இரவிலும் உண்ணாமல், காலையிலும் சாப்பிடாமல்....., அரை மயக்கமாகவே இருந்தது. முயன்று தன் கண்களைத் திறந்தவள், கால்கள் பின்ன பாத்ரூமில் சென்று அடைக்கலமானாள்.

ஷவரைத் திறந்துவிட்டு, நிற்கக் கூட முடியாமல், அதன் அடியில் அமர்ந்துகொண்டாள். ஹீட்டரும் சேர்ந்து இருந்ததால், நீர்த் திவலைகள் அவள் காயங்களில் பட்டுத் தெறித்து, உயிர் வலியைக் கொடுத்தது. அதையும் தாங்கிக்

கொண்டு, கண்களில் வழியும் கண்ணீரையும் அதன் போக்கில் விட்டுவிட்டு, அப்படியே அமர்ந்திருந்தாள்.

“ஏய்..., எவ்வளவு நேரண்டி குளிப்ப..? மனுஷன் எவ்வளவு நேரம் காத்துட்டு இருக்குறது...?”,

“நீயெல்லாம் மனுஷனா...?”, அவள் மனசாட்சி கேட்ட குரல் அவனுக்குக் கேட்டிருக்க நியாயமில்லை.

“இப்போ நீ வெளியே வாறியா? இல்ல நான் உள்ளே வரவா?”, அவன் குரலே, சொல்வதைச் செய்வேன் என்பதை அவளுக்கு உணர்த்த, அடுத்த நிமிடங்களில் அவள் வெளியே இருந்தாள்.

மாற்றுடை எடுத்துச் செல்லாததால், பாவாடையைப் பிழிந்து அவள் மார்புக்குக் குறுக்காகக் கட்டியிருக்க, அது தந்த போதையில், அடுத்த யுத்தத்தை துவங்கியிருந்தான் அவன்.

‘டேய்... உனக்கு இருப்பது ஆசையா இல்லை வெறியா..?’, அவன் ஆளுகைக்குள் சிக்கியிருந்த அவள் மனதின் ஓலம்..., அவனைத் தீண்டவே இல்லை.

அவன் விலகிச் சென்று, குளிக்கச் செல்லும்பொழுது மாலையாகி இருந்தது. தட்டுத் தடுமாறி எழுந்து, ஹாலோடு ஒட்டியிருந்த குளியலறையில் குளித்தவள், அவன் வரும் முன்பே உடை மாற்றியிருந்தாள்.

காலையில் உண்ணாமல் விட்ட உணவும், சரியாகக் காய்ச்சாமல் விட்டிருந்தப் பாலும் கெட்டுப் போயிருந்தது. முதலிரவில் பால் கொட்டி வீணாக, இன்று முதல் முறையாக காய்ச்சிய பாலும் திரிந்து போனதில், துடித்துப் போனாள் தர்ஷிணி.

காய்ச்சாத பால் திரிந்து போவது சாதாரண நிகழ்வு என்றாலும், இதை அப்படிச் சாதாரணமாக எடுத்துக்

கொள்ள அவள் தயாராக இல்லை. கெட்ட சகுனமாகவே இவையனைத்தும் அவளுக்குப் பட்டது.

“என்ன இவ்வளவு சீக்கிரம் குளிச்சு டிரஸ் மாத்திட்ட...? நான் என்னவோ நினைச்சுட்டு வந்தேன்...”, அவன் பேச்சும், அவன் பார்வை மொய்த்த விதமும், அவளுக்கு அருவருப்பைக் கொடுத்தது. அதையும் விட, ஒரு நாள் முழுக்கச் சாப்பிடாதது, இரவு முழுவதும் உறங்காமல் இருந்தது, ஒரு நாள் முழுக்க அவனது வெறிக்கு இசைந்தது என, அவளால் நிற்கக் கூட முடியவில்லை.

அவள் தள்ளாடுவதைப் பார்த்தவன், வேகமாக அவளைத் தாங்கினான். அவளை அழைத்துச் சென்று சோபாவில் அமர வைத்தவன், “உனக்குக் கொஞ்சம் கூட தெம்பே கிடையாதா...? அன்னைக்கு மயக்கம் போட்ட, இன்னைக்குத் தள்ளாடுற..., நீ எதுவும் செய்ய வேண்டாம்...., நானே வெளியே போய், டிபன் வாங்கிட்டு வாறேன்...”, சொல்லிவிட்டுச் சென்றுவிட்டான்.

‘என் வாழ்க்கை முழுவதும் இப்படியேத்தான் போகுமா? கண்ணோரம் கரித்தது. இங்கே வந்து இன்னும் தன் அக்காவுக்குப் போன் செய்யவில்லையே என்று எண்ணியவள், அருகில் கிடந்த தன் ஹேன்ட் பேகில் இருந்து அலைபேசியை எடுத்து, அக்காவுக்குப் போன் செய்தாள்.

அங்கே எடுக்கவும், “அக்கா....”, தாயைப் பிரிந்த கன்றாகத் தேம்பியது அவள் குரல்.

“தர்ஷு....., தர்ஷும்மா....., எப்படிடா இருக்க? நல்லா இருக்கியா? உடம்பப் பாத்துக்கோடா...., கொஞ்ச நாள் அப்படித்தான் இருக்கும்...”, “கீது.....”, என்ற கணவனின் குரலுக்கு அடங்கி, மேலே எதுவும் சொல்லாமல், வாயை மூடி அழுதாள். அந்த அழுகை தங்கையை எட்டாமல் பார்த்துக் கொண்டாள்.

கீதாவின் குரலும், கன்றைப் பிரிந்த தாய்ப்பசுவாக, ஆதரவாகக் குழைய, ஒரு அளவுக்குமேல் தங்கையின் தனிப்பட்ட விஷயத்தில் மூக்கை நுழைக்க முடியாமல் தயங்கினாள் அவள்.

“நான் நல்லா இருக்கேன்க்கா....., கொஞ்சம் வேலை அதிகம். அதான் உனக்குக் காலையிலேயே போன் செய்ய முடியலை. நீ என்னைப் பற்றிக் கவலைப் படாதேக்கா....., அவர் என்னை நல்லா பாத்துக்கறார். இப்போ கூட நான் சமைக்க வேண்டாம்னு வெளியே சாப்பாடு வாங்க போயிருக்கார்....”, சொன்னவள், தான் சொன்னப் பொய்களின் கனம் தாங்காமல், அலைபேசியை பாதியிலேயே அணைத்தாள்.

“தர்ஷு...., தர்ஷு.....”, கீதா, அலைபேசியின் இணைப்புத் துண்டித்ததைக் கூட உணராமல் தங்கையை அழைத்துக் கொண்டிருந்தாள்.

அவளை நெருங்கிய கமலேஷ், கீதாவைத் தன் தோளோடு அணைத்துக் கொண்டான். “கமல்....., தர்ஷு பொய் சொல்லுறா...., என்கிட்டேயே பொய் சொல்லுறா..., என்னால் முடியலை கமல்..., எனக்கு இப்போவே அவளைப் பாக்கணும்.

“நீங்க ஏன் என்னை புரிஞ்சுக்கவே மாட்டேன்னு அடம் பிடிக்கிறீங்க? அவகிட்டே அவளோட வாழ்க்கையைப் பற்றி கேட்கக் கூட என்னை விடலையே. உங்க தங்கையா இருந்தால் இப்படி நடந்துப்பீங்களா? அவ என்னோட....”,

“கீது....”, கமலேஷ் அவள் தோளைப் பற்றி உலுக்கியப் பிறகுதான் புலம்புவதை நிறுத்தினாள்.

“கீது, நான் இவ்வளவு சொல்லியும் புரிஞ்சுக்காமல் இப்படிப் பேசினால் நான் என்னதான் செய்யட்டும். அந்த வித்தார்த் என்னைப் பார்த்த பார்வையில் கொஞ்சம் கூட மதிப்பில்லை. நேத்து தர்ஷுவோட முகத்தைப் பார்த்தே,

அவ எப்படி வாழுறான்னு உன்னால் புரிஞ்சுக்க முடியலையா?

“இப்போ அதைத் தனியா வேற கேட்டு அவளை நோகடிக்கணுமா? இப்போ அவன் வீட்டில் இல்லை, திடீர்ன்னு வந்துட்டால்...., நாமளே அவளுக்கு எதுக்கு ஒரு புது கஷ்டத்தைக் கொடுக்கணும்? சொன்னால் புரிஞ்சுக்க, இன்னும் ஒரு பத்து நாள் பொறுத்து, அவளைப் பார்க்க நானே உன்னைக் கூட்டிப் போறேன்.

“அதுவரைக்கும் கொஞ்சம் பொறுமையா இரு. நான் தர்ஷுவை, உன்னோட தங்கையா இல்லை. என்னோட மகளாத்தான் பாக்குறேன். இன்னொரு முறை என்கிட்டே இப்படிப் பேசுன....”, கீதாவிற்குப் புரிய வைக்க முயன்றான்.

அவளும் கொஞ்சம் புரிந்துகொண்டு அமைதியானாள். ஆனாலும் அவள் கலங்குவதை, கமலேஷால் வேடிக்கை மட்டுமே பார்க்க முடிந்தது.

அங்கே கீதாவிடம் பேசிவிட்டு, குமுறி அழுது கொண்டிருந்தாள் தர்ஷிணி. ‘அக்கா, என்னால் தாங்கவே முடியலக்கா...., எங்கேயாவது ஓடிப் போய்டுவோமான்னு இருக்கு. இன்னும் எவ்வளவு நாள் இந்தச் சித்திரவதையைத் தாங்க முடியும்னு தெரியலக்கா....’, மானசீகமாகத் தன் அக்காவிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

வெளியே வித்தார்த் வரும் அரவம் கேட்டது. அசையாமல் ஸோபாவில் படுத்திருந்தாள். “ஏய் எந்திருச்சு சாப்பிடு....”, அவள் அசையாமல் இருக்கவே, அவளை தன் கால்களால் தட்டினான்.

தான் ஒரு நாயாக நடத்தப் படுவதை உணர்ந்தாள். இதுவரை அவன், அவள் பெயரைச் சொல்லி அழைத்ததே இல்லை. அவனது வெறியைத் தீர்த்துக் கொள்ள மட்டுமே, கைகளால் அவளைத் தீண்டினான். அவளை எழுப்ப

எப்பொழுதும் கால்களால் உதைப்பதையே வழக்கமாகக் கொண்டான்.

ஒரு உயிரும் உணர்வும், ஆசைகளும், கனவுகளும், எதிர்பார்ப்புகளும், கொண்ட ஒரு சாதாரண மனிதப் பிறவியான தர்ஷிணிக்கும், தன் கணவனிடமிருந்து, ஆறுதலையும், அணைப்பையும், காதலையும், நேசத்தையும் எதிர்பார்க்காமல் இருக்க முடியவில்லை.

அது கிடைக்காமல் மட்டுமல்ல, சாதாரண மதிப்பும், கௌரவமும் கூடக் கிடைக்காமல் போகவே துவண்டு போனாள்.

“ஏய் இப்போ எழுந்துக்கறியா இல்லையாடி...”, அவன் குரல் உயரவே, தடுமாறி எழுந்து அமர்ந்தாள். கண்கள் மச மசப்பாகத் தெரிந்தது. தலை சுற்றி, மயக்கம் வரும்போல் இருந்தது அவளுக்கு. தலையை வேகமாக உதறினாள். ஆனாலும் அது நிற்கவில்லை.

அவள் படும் துன்பத்தைப் பாராமல், “என்ன... மகாராணிக்கு நாங்க ஊட்டி விடணுமோ, போ போ...., போய் தட்டும் டம்ளரும் எடுத்துட்டு வா”, அவளை விரட்டினான்.

தன் நிலையை அவனுக்குக் காட்டாமல், முயன்று மறைத்தவாறே சென்று, தட்டை எடுத்து வந்தாள். அதன்பிறகு எந்தவிதப் பேச்சும் இல்லாமல் அமைதியாகவே கழிந்தது. சாப்பிட்டு முடித்தப் பிறகுதான், ஸோபாவில் கிடந்த அவளது அலைபேசியைப் பார்த்தான்.

அதை எடுத்து டயல் செய்த எங்களைப் பார்த்தவன், “யாருக்குடி நான் இல்லாதப்போ போன் செஞ்ச....?”, அடுத்த யுத்தத்துக்குத் தயாரானாள் தர்ஷிணி.

******காலையில் நான்கு மணிக்கே எழுந்த நந்தன், படுக்கையில் இருந்து எழுந்து சென்று, ப்ரியாவின் முகத்தையே பார்த்தவாறு நின்றான். அவள் முகத்தில்

இப்பொழுது தவழும் குழந்தைத் தனத்தை நம்ப முடியாமல் பார்த்தான்.

பிறகு தன் எண்ணம் போகும் திசையை உணர்ந்தவன், தலையை வேகமாக உதறிவிட்டு, அவள் அறையை விட்டு வெளியேறினான். அவன் எழுந்ததோ, தன்னைப் பார்த்ததோ, சென்றதோ தெரியாமல் ஆழ்ந்த நித்திரையில் இருந்தாள் ப்ரியா.

நந்தனுக்கு மனதில் இப்பொழுது ஒருவித வெறுமை குடிகொள்ளத் துவங்கி இருந்தது. 'ப்ரியாவிடம் பேசிப்பார்' என்று ஒரு மனம் தூண்ட, பேசி, பட்டது போதாதா என்று மற்ற மனம் சாடியது.

வாழ்க்கை இப்படியே செல்ல அனுமதிக்கக் கூடாதே....., அவளிடம் எப்படியாவது பேசி, தங்கள் வாழ்க்கையைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் வலுப் பெற்றது. அது முளையிலேயே கருகப் போவது தெரியாமல், நேரத்தை நெட்டித் தள்ளினான்.

காலை ஆறரை மணிக்கு அவளைத் தேடிப் போக, அவளது அறையில் அவள் இருக்கவில்லை. எங்கே போனாள் என்ற யோசனையுடன் கீழே இறங்கி வர, கிச்சனுக்குள் சமைத்துக் கொண்டிருப்பது அவனுக்குத் தெரிந்தது.

கிச்சன், பேசுவதற்கான இடமல்ல என்பது புரிய, எப்படியோ இந்த மட்டிலும், அறையிலேயே அடைந்து கிடைக்காமல், வெளியே வந்தாளே என்ற நிம்மதியுடன், எதற்கும் அவளிடம் பேச்சுக் கொடுத்துதான் பார்ப்போமே என்ற ஆவல் கிளம்பவே, அவளை நெருங்கிச் சென்றான்.

"ப்ரிது....., ப்ரிது....", வேலைக் காரர்கள் அங்கே இல்லாததால், அவளை, தான் மனதுக்குள் நினைக்கும், அழைக்கும் செல்லப் பெயர் வைத்து அழைத்தான்.

"அடச்சீ....., உன் வாயில் என் பேர் வாறதையே சகிக்க முடியாமல் இருக்கேன். இதில் உன் மொகரைக்கு, செல்லப்

பேர் வேற. போடா இங்கே இருந்து", என்னமோ ரோட் சைட் ரோமியோவை விடக் கேவலமாக அவனை நினைத்து விரட்டுவதை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

ஆனாலும் தன் பாசத்தைக் கைவிடாமல், அதை உதறிவிட்டு, "இவ்வளவு காலையில் இங்கே என்ன பண்ணுற ப்ரியா?", எதுவுமே நடவாததுபோல் கேட்டான்.

நீ என்ன ஜென்மம்டா என்றக் கேவலமான பார்வையை அவள் பார்க்க, அவள் கண்களைச் சந்திக்காமல், சமையல் மேடையைப் பார்த்தான். அவனது கேள்விக்குப் பதிலாக, தோசைக் கல்லில் தோசை வெந்து கொண்டிருந்தது.

அதைப் பார்த்தவன், "ஓ..., தோசை சுடுறியா...? இதெல்லாம் வள்ளி, தெய்வாவே பாத்துப்பாங்களே, நீ ஏன் செய்யிற..?", காதல் கணவனாக அக்கறையாகக் கேட்டான்.

"எனக்குத் தேவையானதை நான்தான் செஞ்சுக்கணும்...., முதல்ல நீ இந்த இடத்தை விட்டுப் போ...., காலங் காத்தால...., மூஞ்சியைக் காமிச்சுக்கிட்டு. உன் மொகரையைப் பாத்தாலே பத்திகிட்டு வருது..., போறியா இல்லையா...", உண்மையான அருவருப்பை அவள் முகத்தில் பார்த்தவன், மனதுக்குள் துவண்டு போனான்.

பேசாமல் தன் அறைக்கு வந்தவன், கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தான். ஆறடி உயரம், அதற்கேற்ற உடல் வாகு, அடர்ந்த புருவம், அலையலையான கேசம், கூர்மையான நாசி, முன்பு மீசை இருந்ததற்கு அடையாளமாக மூக்கின் கீழே கருமை படர்ந்திருந்தது. மீசை இல்லாமலும், தன் கம்பீரத்தில் குறை காண முடியவில்லை அவனால்.

ஆனால் அவளோ நொடிக்கொருதரம் உன் மொகரையும் நீயும் என்று பேசுவது, ஒரு ஆண்மகனாக, அவனுக்கு ஒரு மன இறுக்கத்தைக் கொடுத்தது. தன்னை இவ்வளவு

திட்டினாலும், தனக்காக சமையல் செய்யும் அவள் கடமை உணர்வை மெச்சினான்.

அந்தக் கடமை உணர்வும் அவனுக்காக இல்லை என்பதை, சாப்பாட்டு மேசையில் உணர்ந்தான். அவன் சாப்பிட அமர்ந்த வேளையில், அவளும் சாப்பிட அமர்ந்தாள். அவளது கை வண்ணத்தைச் சாப்பிட அவன் ஆவலாக இருக்க, அவளோ தனக்கு மட்டும் பரிமாறிக் கொண்டு சாப்பிட்டாள்.

அவள் தனக்குத் தராமல் போகவே, “வள்ளி..., எனக்குச் சாப்பாடு வை..”, அவன் குரலுக்கு, வள்ளி ஓடி வந்து, அவன் தட்டில் இட்லி வைத்தாள்.

“என்ன வள்ளி....., ப்ரியா தோசைதானே சுட்டா. நீ இட்லி வைக்கிற..?”, அவன் அவளிடம் சந்தேகமாகக் கேட்டான்.

“அது...., வந்துங்க....., ஐயா....”, அவன் மனைவி தனக்கு மட்டும் சமைத்துக் கொண்டதை அவனிடம் எப்படிச் சொல்லவென்று வள்ளி தயங்க,

‘அவனுக்கு ஆக்கிப் போட, நான் ஒண்ணும் அவனுக்கு வேலைகாரி இல்லைன்னு சொல்லு...., நான் எனக்கு மட்டும்தான் சமச்சுகிட்டேன்..., இவனுக்கு, இந்த மரியாதைக் கொடுக்கும் போதே, நினைப்பைப் பாரேன்’, மனதுக்குள் நினைத்தவள்,

“வள்ளி, உங்க முதலாளிக்கு என் கையால் சாப்பாடு செஞ்சுப் போடணுமாமே....., இது பேராசை இல்ல”, ஏளனமாகவும், தெனாவெட்டாகவும் சொல்லிவிட்டு, சாப்பிட்ட தட்டைக் கூட, எடுக்காமல் செல்லும் அவளை வெறித்துப் பார்த்தான்.

தன்னிடம் வேலை செய்யும் வேலைக் காரர்கள் முன்பு அவமானமாக உணர்ந்தான் நந்தன். அவர்கள் ஏளனமாகச் சிரிப்பார்களோ என்று அவர்கள் முகங்களைப் பார்க்கக்

கூட முடியாமல், அவமானத்தில் முகம் கன்ற, எழுந்து செல்லப் போனான்.

அந்த நேரம் அவன் தாய் வசந்தா அங்கே வர, அவரது கண்களில் வழிந்த இரக்கம் அவனை இன்னும் குன்ற வைத்தது. அவமானத்தில் முகம் கசங்கச் செல்லும் அவனையே, வேதனையாகத் தொடர்ந்தது அந்தத் தாயின் பார்வை.

***

தாகம் - 25.

நான் தோள் சாயத்

துடிக்கும் தோள்.....

என்னை வெறுத்தால்.....

அஞ்சலியை அழைக்கச் சென்ற கணேஷின் முகத்தில் எப்பொழுதும் தெரியும் அந்த வேதனைச் சாயல் குறைந்திருப்பதைக் கண்டாள் ஹேமா. எதற்கென்றுத் தெரியாமலே அவளுக்குச் சந்தோஷமாக இருந்தது.

அதைச் சின்ன திடுக்கிடலுடன் உணர்ந்தாள்அவள். தனது 'செவ்வாய்தோஷ' ஜாதகம் சட்டென நினைவிற்கு வர, அவள் முகம் களையிழந்தது. ஹேமாவின் முகம் நொடியில் மலர்ந்து, நொடியில் கூம்பியதைக் கண்ட கணேஷ், அது எதனால் என்பதை அறிய ஆசைப் பட்டான்.

ஆனாலும், இதுவரை ஒரு வார்த்தை கூட, நேரடியாகப் பேசாத அவளிடம், என்னவென்று கேட்கவும் மனம் தயங்கியது. அன்று நொடியில் முடிவெடுத்து, அந்தச் சிறுவனையும், அவன் தாயையும் அவள் ஆட்டோவில் அழைத்துச் சென்ற விதம்,

அதற்கு முன்பு, அவர்களது வண்டியைப் பற்றிய அவளது கவனம், அக்கறை, அவ்வளவு பதட்டத்தில் கூட தெளிவாக முடிவெடுக்கும் அவளது பாங்கு, அனைத்தையும், அன்று நொடியில் உணர்ந்து மயங்கியவன், இன்று நேரில் அவளைக் கண்டு இன்னும் மயங்கினான்.

இதுவரை தனக்கென்று ஒரு வாழ்க்கையையோ, வாழ்க்கைத் துணையையோ சிந்தித்துக் கூட பார்க்காத கணேஷ், முதல் முறையாக ஒரு பெண்ணை, சுவாரசியமாகப் பார்த்தான். தன் மனம் அவள் முன்புத் தடுமாறுவது அவனுக்குப் புரிந்தது.

ஜீவாவின் வாழ்வு நேராகாமல் உனக்கு ஒரு வாழ்வா? என்ற மனசாட்சியின் குரலுக்கு உடனே அடிபணிந்து, “அஞ்சலியை அழைச்சுட்டுப் போக வந்தேன்....”, தயங்கியவாறே கேட்டான்.

“உங்கக் கூட கொஞ்சம் பேசணும் வாங்க.....”, அவள் சொல்லிவிட்டு முன்னால் நடக்க, மந்திரத்துக்குக் கட்டுப்பட்டவன்போல் அவள் பின்னால் நடந்தான்.

“நீங்க அஞ்சலிக்கு என்னவாகணும்.....”, நேரடியாகக் கேட்டாள்.

‘அது எதுக்கு உனக்கு....?’, என்று அவனது மனமும், அவளது மனசாட்சியும் குரல் கொடுத்தாலும், இருவருமே அதை விடுத்து, “அதான் அஞ்சலி.....”, அவன் துவங்கவே, கோபமாக இடையிட்டது ஹேமாவின் குரல்.

“இங்கே பாருங்க....., இந்த அஞ்சலி சொன்னாள்...., ஆட்டுக்குட்டி சொன்னான்ற கதையெல்லாம் இங்கே வேண்டாம்...., ஒழுங்கா நான் கேட்டதுக்கு பதில் சொல்லுங்க”, கட்டிய மனைவியின் உரிமையை ஒத்திருந்தது அவள் செய்கை.

கணேஷிற்கு இது புதிது....., இவ்வளவு உரிமையாகவும், அதட்டலாகவும் ஒரு பெண் அவனிடம் பேசியதாக, அவனுக்கு நினைவே இல்லை. திகைப்பாக அவளைப் பார்த்தவன், தன்னை நொடியில் சுதாரித்தான்.

அவன் திகைப்பைப் பார்த்த பிறகுதான், தான் கொஞ்சம் ஓவரா போய்விட்டோமோ என்று சிந்தித்தாள். அப்படிச் சிந்தித்தவள், ‘எல்லாம் அஞ்சலிக்காகத்தான்’, என்று சப்பைக் கட்டு கட்டிக் கொண்டாள்.

“இப்போ அது எதுக்குங்க உங்களுக்கு..., நீங்க அஞ்சலியை அழைச்சுட்டு வாங்க. நான் போறேன்...”, அவளிடம் என்ன சொல்வதென்று புரியாமல், அங்கிருந்து செல்ல முயன்றான்.

“ஏன் சொல்ல மாட்டீங்களா...?”, சம்பந்தமே இல்லாமல் கெ(கொ)ஞ்சியது அவள் குரல்.

அந்தக் குரலில் விழுந்தான் கணேஷ்...., “நீ என்னைக் கட்டிக்கிறேன்னு சொல்லு...., நான் எல்லாத்தையும் சொல்லுறேன்...”, அவன் கட்டுப்பாட்டையும் மீறி, வந்து விழுந்தன வார்த்தைகள்.

வார்த்தைகளைச் சிதறவிட்டப் பிறகுதான், அதன் அர்த்தங்களை உணர்ந்தான் கணேஷ். வார்த்தைகளைச் சிதற விட்ட பிறகு அதை எப்படி திரும்ப அள்ள முடியும்? அவளது பதிலுக்கு, ஒரு மனது ஏங்கத்தான் செய்தது.

அவன் கூற்றில் திகைத்தாலும், அவள் மனதிலும் முதல் முதலாகச் சலனத்தை விதைத்த அவனிடம், உண்மையைச் சொல்லத் துணிந்தாள் ஹேமா. இங்கே இருவருமே டீனேஜ் வயதில் இருக்கும், விடலைப் பிள்ளைகள் இல்லை.

இருபத்து ஐந்து வயதை அவள் கடந்து இரண்டு வருடங்கள் ஓடியிருக்க, அவனுக்கோ நான்கு வருடங்கள் ஓடியிருந்தது. இத்தனை வருடமாக, இவர்களுக்காகத்தான் இருவருமே ஒருவருக்கு ஒருவர் காத்திருந்தார்களோ என்னவோ, கடவுள் போட்ட முடிச்சை, யாரால் அவிழ்க்க முடியும்.

ஆழ்ந்து மூச்சை விட்டவள், “ஒரு செவ்வாய்தோஷப் பொண்ணை உங்களுக்குக் கட்டிக்கிற தைரியம் இருந்தால், நானும் தயார்தான்”, தன் நிலையைத் தெளிவாக நொடியில் விளக்கியவள், இனிமேல் முடிவு உன் கையில் என்பதுபோல் அவனையே சலனமில்லாமல் பார்த்தாள்.

அவள் பேச்சை மெதுவாக உள் வாங்கியவன், “நான் சொல்லப்போகும் கதையைக் கேட்டு, உனக்கு மனசு மாறாமல் இருந்தால்.....”, ஒரு நிமிடம் இடைவெளி விட்டவன், “எனக்குப் பரி பூரண சம்மதம்”, என்றான்.

நொடியில் தங்களது எதிர்கால வாழ்க்கையின் பெரிய முடிவையே, இருவரும் எடுத்து விட்டார்கள். தன் தாயிடம்

கேட்க வேண்டுமென்று அவளும் எண்ணவில்லை, ஜீவாவின் வாழ்க்கையைப் பற்றிய எண்ணம் அவனுக்கும் எழவில்லை.

ஒரு நிமிடம் இருவருக்கிடையில் மயான அமைதி. நேரம் இரவை நெருங்க, ஒருவரை ஒருவர் ஆழ்ந்து நோக்கியவாறு அசையாமல் இருந்தார்கள். அவளை நெருங்கி, அவள் கைகளைப் பற்றிக் கொண்டான்.

“உன் பேர் கூட எனக்குத் தெரியாது....., ஆனா என் மனசுக்குள்ளே இருக்குறதை உன்கிட்டே சொல்லணும்னு தோணுது. அதுக்கு நீ எனக்கு உரிமையுள்ளவளா, என் மனசுக்கு நெருக்கமானவளா இருக்கணும்னு நான் ஆசைப் படுறேன்.

“இப்போகூட உனக்கு விருப்பம் இல்லன்னா...., வேண்டாம்னு சொல்லிட்டுப் போய்டு...., நான் தவறா நினைக்க மாட்டேன்...”, எங்கே அவள் போய்விடுவாளோ என்று, பிடித்திருந்த அவள் கைகளை அழுந்தப் பற்றிக் கொண்டான்.

மனதுக்குள் சிரித்துக் கொண்டாள் ஹேமா, ‘வாய்தான் போன்னு சொல்லுது. கையை இப்படி இறுக்கப் புடிச்சு வச்சுகிட்டா எங்கே இருந்து போறது?’, மனதுக்குள் நொடித்துக் கொண்டாள்.

அவன் தன் பதிலுக்காகக் காத்திருப்பது புரிய, “ஆமா, விருப்பம் இல்லாமத்தான், இந்தா புடிச்சுக்கோ கையைன்னு குடுத்துகிட்டு நிக்கிறோமாக்கும்”, படக்கென சொல்லிவிட்டு, அவன் பிடியில் இருந்து கையை வெடுக்கென உருவிக் கொண்டாள்.

“ஹேய் நிஜம்மாவா....?”, உருவிய அவள் கரத்தை மீண்டும் பற்றிக் கொண்டு, தன் நெஞ்சில் வைத்து அழுத்திக் கொண்டான்.

“நிஜம்மாவே உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா? உனக்கு என்னைக் கட்டிக்க சம்மதமா? நீ சும்மா சொல்லலையே, உனக்கு என்னைப் பிடிச்சிருக்கு தானே?”, ஒரு விஷயத்தை வெவ்வேறு வடிவங்களில் கேட்டுக் கொண்டே இருந்தான்.

“ம்ச்..., என்ன நீங்க...., இப்படி நம்பிக்கையே இல்லாமல் கேக்குறீங்க”, அவள் குரலில் சுருதி குறைந்தது.

“இந்தக் கேள்வியை நான் உன் கிட்டே கேட்க அவசியம் வந்திருக்கு, அதனால்தான் கேக்குறேன். மற்றபடி எனக்கு உன் மேல் நம்பிக்கை இல்லாமல் கேட்கலை. இதுக்கு எனக்கு பதில் தெரிஞ்சால்தான் மேற்கொண்டு நான் பேச முடியும். ப்ளீஸ்”, அவன் குரல் தழுதழுத்தத விதமே, அவன் நம்பிக்கையில்லாமல் கேட்கவில்லை என்பதை அவளுக்கு உணர்த்தியது.

அத்தோடு இல்லாமல், அதில் ஏதோ விஷயமிருப்பதும் அவளுக்குப் புரிந்தது. எனவே தன் விளையாட்டை நிறுத்திவிட்டு, “என்ன சொல்லுறீங்க.....? எனக்குப் புரியலை...”.

“உனக்குப் புரியிற மாதிரி சொல்லுறேன். முதல்ல, நாம ரெண்டுபேரும் ஒரு இடத்தில் உக்காரணும். அதுக்கு முன்னாடி உன் பேர் என்னன்னு சொல்லு. உலகத்திலேயே, காதலியோட பேர் தெரியாமலே, கல்யாணம் வரைக்கும் போன ஒரே ஆள் நானாத்தான் இருப்பேன்”.

“என்னமோ நீங்க கேட்டு நான் சொல்லாத மாதிரி சிலுத்துக்கறீங்க. உங்கப் பேரை மட்டும் சொன்னீங்களா?”, போலியாகக் கோபம் கொண்டாள்.

“சரி சரி...., ரொம்பக் கோபப் படாதே, என் பேர் கணேஷ்....”.

“நான் கோபப் படுறனா?”, இடுப்பில் கை வைத்து அவனை முறைக்க, “ஹையோ நீ ரொம்ப நல்ல பொண்ணுன்னு நினைச்சுக் காதலைச் சொன்னால், உடனே இப்படிக் கண்ணாலேயே உருட்டுக் கட்டையை எடுக்குறியே...., உன்

பேரைச் சொல்லு.... முதல்ல, எனக்கென்னவோ உன் பேர் பூலான் தேவியா இருக்குமோன்னு சந்தேகமா இருக்கு", அவள் முறைப்பில் பொய்யாக பயந்தவாறே, காதலனின் குறும்பு சேரக் கேட்டான்.

"ஹம்..., என் பேர் ஹேமா..... ரொம்ப பயந்தவர் மாதிரி நடிக்காதீங்க..., வாங்க, அங்கே இருக்கும் சிமெண்ட் பெஞ்சில் உக்காரலாம்", அவனை அழைத்துக்கொண்டு, அவர்கள் வீட்டின் தோட்டத்தின் அருகில் இருக்கும் சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தார்கள்.

அவனது கேலிகளை விடுத்து, கேள்வியாக அவனைப் பார்த்தாள். "சொல்லுங்க கணேஷ்....., சாரி உங்களை பேர் சொல்லிக் கூப்பிடலாம் இல்ல. சில விஷயங்களைக் கேட்ட பிறகு கொஞ்சம் பயமாத்தான் இருக்கு, சொல்லுங்க".

"என்ன ஹேமா இப்படி கேட்டுட்ட, தாராளமா என் பேரைச் சொல்லிக் கூப்பிடு, எனக்கு அதில் எந்தப் பிரச்சனையும் இல்லை.....", மேலே சொல்லக் கொஞ்சம் தயங்கினான்.

"சொல்லுங்க...., அஞ்சலி பற்றிச் சொல்லுறேன்னு சொன்னீங்க...., பிறகு எதுக்கு இவ்வளவு மௌனம்...", அவனைச் சொல்லத் தூண்டினாள்.

அவள் கேட்கவே, அவன் கண்களில் முகத்தில் எப்பொழுதும் தெரியும் ஒருவித இயலாமைக் கலந்த வலி, அப்பொழுதும் தெரிந்தது. அதை உணர்ந்து, ஆதரவாக அவன் கரங்களைப் பற்றிக் கொண்டாள். அவள் கைகள் கொடுத்த தைரியத்தில் பேசத் துவங்கினான்.

"ஹேமா நான் அஞ்சலியோட....., எனத் துவங்கி நிறுத்திவிட்டு, "நான் எதில் தவறினேன்னு எனக்கே தெரியலை. என்னோட சின்ன அலட்சியம் இவ்வளவு பெரிய விபரீதத்தில் போய் முடியும்னு நான் கற்பனைக் கூடப் பண்ணிப் பார்த்ததே இல்லை.....,

தன் மனதில் இவ்வளவு நாள் தான் புதைத்து வைத்திருந்த விஷயங்களை ஒவ்வொன்றாகச் சொன்னான். ஜீவாவின் வாழ்வில் தன் பங்கு, அதில் தான் எடுத்த முடிவு, அந்த முடிவால் விளைந்த விபரீதம்,

ஜீவா கடந்த நான்கு வருடங்கள், ஒரு பெண்ணால் பட்ட துன்பம், அவளைப் பெண்ணென்று சொல்ல முடியுமா என்று, தான் சந்தேகம் கொள்வது, அந்தத் துன்பத்தில் விளைந்த அஞ்சலியின் பிறப்பு, அவள் பிறப்பின் பிறகும், அவள் மாறாதது.

ஜீவா படும் துன்பங்களை, ஒரு பார்வையாளனாக மட்டுமே பார்க்க முடிந்த தன் நிலை, ஜீவா தன்மேல் கொண்ட கோபம், அந்தக் கோபத்திலும், தான் அவனை விட்டு விலகாமல் இருக்கும் காரணம். ஒவ்வொன்றாகச் சொன்னவன், இறுதியில், ஆறு மாதங்களுக்கு முன்பு, ஜீவாவின் வாழ்வில் நேர்ந்த, அந்த மிகப் பெரியத் தலை குனிவு,

அதனால் அவன் தொழிலை கவனிக்காமல் விட்டது. இன்று அந்த சாம்ராஜ்யமே மூழ்கும் நிலை, அதை எதிர்கொள்ள தைரியம் இல்லாமல் கலங்கி நிற்கும் ஜீவாவின் கோழைத்தனமா, வெறுமையா, கோபமா, வாழ்வின் மேல் இருக்கும் அவ நம்பிக்கையா? இல்லை இவை எல்லாவற்றிலும் இருந்து ஜீவா ஓட நினைக்கும் விதம்,

அதைப் பார்த்து அவனைக் கட்டி வைக்க தான் போராடும் விதம் என அனைத்தையும் சொன்னான். அதிலும் ஒவ்வொரு நாளும், ஜீவா அந்தப் பெண் என்ற பிசாசிடம் சிக்கி, வேதனையும், அவமானமும் கொண்டது, இவை அனைத்தின் முத்தாய்ப்பாக, அவளை ஜீவா விரும்பிய விதம், ஒரு பெண்ணை எவ்வளவு நேசிக்க முடியுமோ அவ்வளவு நேசித்தது,

தங்கள் உறவைக் காக்க அவன் எடுத்த முயற்சிகள், அதையெல்லாம் புரிந்துகொள்ளாத அவளது போக்கு,

அவளை வெறுக்க முடியாமல் அவன் தவித்தது. உச்சகட்டமாக அவளை அவன் வெறுக்கக் காரணமான அந்த நிகழ்வு.....,

என அனைத்தையும் சொல்லி முடித்த பொழுது, தான் ஒரு ஆண்மகன் என்பதையும் மறந்து, குலுங்கி அழுதான். அவனது அழுகை ஹேமாவையும் தாக்க, அவளும் கண் கலங்கினாள். திவ்யா, ஒரு ஆண்மகனால் பாதிக்கப் பட்டாள்.....,

ஜீவா ஒரு பெண்ணால் பாதிக்கப் பட்டிருக்கிறான். இதில் ஆண் பெண் பேதம் இல்லை, எல்லாம் மனசுதான் காரணம், நல்ல குணங்கள் தான் தேவை, ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வது, விட்டுக் கொடுப்பது, நம்பிக்கை, இவைதான் வாழ்வின் ஆதாரம்,

அது ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், என்பதை உணர்ந்தாள் ஹேமா. அவளுக்கு அப்பொழுதுதான், தாய் சொன்ன, திவ்யாவிற்குத் துணை வேண்டும் என்ற கூற்று காதில் ஒலித்தது.

அப்படியென்றால், ஏன் ஜீவாவையும், திவ்யாவையும் சேர்க்கக் கூடாது என்ற எண்ணம் அவளுக்கு எழுந்தது. அதை அவனிடம் சொல்லும் முன்பு, கணேஷ் பேசுவதைத் தீவிரமாக கேட்கத் துவங்கினாள்.

“நான் செஞ்ச சின்னச் செயல், இப்படி ஒரு பெரிய தாக்கத்தை ஜீவா வாழ்வில் ஏற்படுத்தும் என்று, நான் நினைக்கவே இல்லை ஹேமா.

எப்படி இருந்த ஜீவா..... இப்போ....., காதல் ஒரு சாம்ராஜ்யத்தையே சரிக்கும் என்று சரித்திரத்தில் படிச்சப்போ சிரிப்பு வந்தது. ஆனா நானே என் கண் முன்னாடி பாக்கும் போது....., எனக்கு இருக்குறது ஒரே ஒரு ஆசைதான்.....,

எப்படியாவது....., எப்பாடு பட்டாவது ஜீவாவுக்கு ஒரு வாழ்க்கைத் துணையைத் தேடிக் கொடுக்கணும். அவ அஞ்சலிக்கும் நல்ல அம்மாவா இருக்கணும். ஆனால் எந்த மூஞ்சியை வச்சுட்டு இதையெல்லாம் செய்யன்னுதான் தெரியலை.

'இன்னும் ஒரு பொண்ணை எப்படி நம்பன்னு', அவர் கேட்கும் கேள்விக்கு என்கிட்டே பதில் இல்லை. அவருக்கு எப்படிச் சொல்லி புரிய வைக்கன்னும் தெரியலை. இதில் அஞ்சலி கிட்டே, உனக்கு அம்மா வேணும்னு அப்பாட்ட சொல்லுன்னு சொன்னால்....,

"எதுக்கு அம்மான்னு எங்கிட்டேயே எதிர் கேள்வி கேக்குறா..., என்ன செய்ய...? அவளோட அம்மா, அவளுக்கு அவ்வளவுதான் செஞ்சா..., அஞ்சலியையும் குற்றம் சொல்ல முடியாது....., என்னோட கனவு வெறும் கனவாவே போய்டுமோன்னு கவலையா இருக்கு ஹேமா.

ஜீவாவுக்கு ஒரு நல்லது செய்யாமல், என் வாழ்க்கையில் எதுவுமே இல்லன்னு நினைச்சேன்....., ஆனா.....", ஒரு பெருமூச்சு விட்டு, தன்னை நிதானத்துக்குக் கொண்டு வந்தான்.

"அப்போ என்கிட்டே காதலைச் சொன்னது தப்புன்னு பீல் பண்ணுறீங்களா?", ஹேமா வேகமாகக் கேட்டாள்.

"ச்சே...ச்சே...., கண்டிப்பா இல்லவே இல்லை ஹேமா. உன்னோட துணை இருந்தால் நல்லா இருக்கும்னு மனசு சொல்லுச்சு, அதான் என் காதலைச் சொன்னேன். கண்டிப்பா, அதில் கொஞ்சம் கூட எனக்கு வருத்தம் இல்லை. ஆனால் ஜீவா.....",

அவன் ஜீவாவை நினைத்துக் கலங்குவது கண்டு, "கணேஷ்...., உங்க ஆசை கண்டிப்பா நிறைவேறும். ஆனால் அதற்கு நாம முயற்சி செய்வதை விட, அஞ்சலி முயற்சி செய்தால் பெரிய பலன் கிடைக்கும்....", அவள் சொல்லவே,

நடக்குமா என்ற எதிர்பார்ப்போடு அவள் முகத்தைப் பார்த்தான்.

அதே நேரம், இவர்களின் பேச்சைக் கேட்டு திவ்யாவும், தூங்கிக் கொண்டிருந்த அஞ்சலியைக் கட்டிக்கொண்டு கண்ணீரில் கரைந்தாள். அதைவிட, ஜீவாவின் வாழ்விலும் தன்னைப் போன்று துன்பம் அனுபவித்திருக்கிறான் என்பதை அறிந்த பொழுது, ஏன் இறைவா இப்படி...? என்ற எண்ணம் எழுவதை அவளால் தடுக்க முயலவில்லை.

ஜீவாவின் நேசம் பொய்த்த விதம் கேட்ட பொழுது, ஒரு நொடி, தனக்கு மட்டும் இப்படி ஒரு காதல் கிடைத்திருந்தால்...., என்ற ஏக்கம் எழுந்து அவளை வதைத்தது. ஆனால் அது ஒரு நொடிதான், பிறகு அவள் கவனம் முழுவதும் அஞ்சலியின் மீதே இருந்தது.

தாயை உணராத பிள்ளை, தாயின் தொடுகையை, அரவணைப்பை, பாசத்தை, கவனிப்பை....., இப்படி எதையுமே உணராத அவளுக்கு, என்னால் இவை அனைத்தையும் கொடுக்க முடியும். நான் கொடுப்பேன், அவளும் இனி என் மகள்தான்.....,

இந்த எண்ணம் அவளையும் அறியாமல் வேர்விட்டு வளரத் துவங்கியது. அவள் தன் எண்ணங்களில் மூழ்கியதால், கணேஷும், ஹேமாவும் மேலே பேசியதைக் கேட்கவில்லை. அப்படிக் கேட்டிருந்தால், அஞ்சலியை அந்த நொடியே விலக எண்ணியிருப்பாளோ?

அப்படி அவள் கேட்காமல் போனது, நல்லதன் அடையாளமா? அவள் வாழ்வில் வசந்தம் வருவதற்கான அறிகுறிகள் தெரியத் துவங்கி விட்டனவா? ஜீவாவின் வாழ்வையும் இவளால் மலரச் செய்ய முடியுமா?

ஜீவாவின் மடிந்து போன தன் காதல் உணர்வுகளுக்கு உயிர் கொடுப்பானா? திவ்யாவால் அஞ்சலியை ஏற்றுக் கொண்டதுபோல், ஜீவாவையும் ஏற்க முடியுமா? விடை காலத்திடம்.....

***

தாகம் - 26.

பாலைவனத்தில் நீரூற்றைத்

தேடிய என் பயணம்.....

கானலாகுமா.....?

கை சேருமா.....?

அலுவலக அறையில் வந்து அமர்ந்த நந்தனுக்கு நெஞ்சை அடைத்தது. மூன்றாம் மனிதர்களுக்கு முன்னால், தான் அவமானப் பட்ட விதம்....., தாயின் கண்களில் தெரிந்த இரக்கம், கண்ணீர்....., இதற்கு என்ன பதில் இருக்கிறது என்னிடம்?

தன்னையே கேட்டுக் கொண்டான். அவள் இவ்வளவு கோபப் படும்படி தான் என்ன செய்துவிட்டோம்? நான் காதலாய் அவளைத் துரத்த, அவள் இப்படிக் குரோதமாய் என்னை முறைப்பதேன்.

எவ்வளவுதான் மனக் கலக்கங்கள் இருந்தாலும், அதையெல்லாம் ஒதுக்கிவிட்டு, தொழிலைக் கவனிக்கத் துவங்கினான். அப்படி அவன் தொழிலில் மூழ்க, பகல் பொழுதுகள் கொஞ்சம் நிம்மதியுடனே கழிந்தது.

ஆனால் இரவு நேரங்களில் அவன் படும் அவஸ்த்தைகள், தெருவில் இருக்கும் நாய் கூடப் படாது.
இப்பொழுதெல்லாம் ப்ரியாவின் தாக்குதல்கள் அடுத்தக் கட்டத்தை எட்டியிருந்தன. இரவில் அவள் அறையில், அவன் படுக்கப் போனவுடன் துவங்கும் அவளது நடவடிக்கைகள்.

மேனி தெரியும் வண்ணம் உடை உடுத்துவது, மோகனமாகப் பார்ப்பது, உடம்பை முறுக்கி, கண்களாலேயே அவனுக்கு அழைப்பு விடுப்பது....., இப்படியாக அவனது ஆண்மைக்கு, சத்திய சோதனையே நடத்தினாள்.

அவளது செய்கைகளால்....., தன் இளமையின் தாபங்கள் வெடித்துக் கிளம்புவதையும் தடுக்க முடியாமல், கட்டிய மனைவியை அருகில் வைத்துக் கொண்டு, விரக தாபத்தில் தவிப்பது என்பது, எவ்வளவு பெரியக் கொடுமை என்பதை, அணு அணுவாக அனுபவித்தான்.

கண்களை மூடினாலே, அவளது வரிவடிவான அழகும், தான் முதல்நாள் அனுபவித்த அவளது மேனியின் மென்மையும், ஆசையும் அவனைக் கொழுந்துவிட்டு எரியச் செய்தது. தாபத்தை அடக்கும் வயதில்லையே அவன் வயது.

நாளுக்கு நாள் அவள் அரை நிர்வாணமாக இருக்கும் கோலத்தைப் பார்க்கும்போது, தன் சுய கௌரவத்தை எல்லாம் விட்டுவிட்டு, தன் ஆளுமையை அவள்மேல் காட்டி விடுவோமா? என்று கூட ஒரு கட்டத்தில் நினைத்தான்.

ஆனால், அதன் பின்விளைவுகள் எவ்வளவு பயங்கரமாக இருக்கும், அவள் நாக்கும், கண்களும், தன்னை வார்த்தையாலேயே கொன்று புதைத்துவிடும் என்ற எண்ணம் தலை தூக்க, அந்த எண்ணத்தையும் குழித் தோண்டிப் புதைத்தான்.

அவனது தாபத்தைத் தீர்த்துக்கொள்ள, வெளியே செல்ல அவனுக்கு எவ்வளவு நேரமாகும்? ஆனால் அதையெல்லாம் விடுத்து, தன் மனைவிக்குத் துரோகம் செய்ய, அந்த நிலையில் கூட அவனால் முடியவில்லை.

“ஏன் தண்டிக்கப்படுகிறோம் என்று அறியாமலேயே தண்டிக்கப் படுதல் கொடுமையிலும் கொடுமை”, அந்தச் சித்திரவதையை ஒவ்வொரு நாளும் அனுபவித்தான்.

“ஏன் ப்ரியா....., காதலிக்கிறது அவ்வளவு பெரிய குற்றமா...?”, ஒரு நாள் அவள் செய்யும் செயல்களின் தாக்கம் பொறுக்க முடியாமல், இமைகளை மூடிக் கொண்டே அவளிடம் கேட்டான்.

ஒரு நிமிடம் அவன் யாரிடம் பேசுகிறான் என்று குழம்பியவள், வெடுக்கென படுக்கையில் எழுந்து அமர்ந்தாள். அரைகுறையாக உடுத்திருந்த நைலான் புடவை, அவள் மேனியை தழுவ மறந்து, அவள் மடியில் கிடந்தது.

“என்னைக் கேட்ட.....? காதலிக்கிறது குத்தமான்னா....? அது குற்றமே இல்லை....., ஆனா...., நீ என்னைக் காதலிச்சியே அது மிகப் பெரிய தப்பு....., அந்தத் தப்புக்குத் தண்டனைதான் இப்போ நீ அனுபவிக்கிற”, எகத்தாளமாகச் சொல்லிச் சிரித்தாள். அவள் கண்கள், ஒரு குற்றவாளியைப்போல் அவனைப் பார்த்தது.

அவளது எகத்தாளத்தில் உள்ளம் குமுறினாலும், அவள் மேனியில் அவன் கண்கள் மொய்ப்பதை, அவனால் கட்டுப் படுத்தவே முடியவில்லை. ஜாக்கெட்டை மீறி வெளியே வரத் துடிக்கும் அவள் இளமையும், அதை மறைக்க முயலாமல், அவள் அமர்ந்திருந்த விதமும்....., அவனுள் கனலை மூட்டியது.

“உன்கிட்டே சம்மதம் கேட்காமல் திருமணம் நடந்தது என்ற ஒரே ஒரு காரணத்துக்காகவா, எனக்கு இவ்வளவு பெரிய தண்டனை. ஒரே ஒரு நிமிஷம்...., என்னையும் என் காதலையும் புரிஞ்சுக்க முயற்சி பண்ணேன்....”, தான் ஆண்மகன் என்பதையும் மீறி, தான் அவள்மேல் கொண்ட காதலால் கெஞ்சினான்.

“எது...., நீ என்னை காதலிக்கிறியா....? ஹா...ஹா....ஹா....”, ஏதோ நகைச்சுவையைக் கேட்டதுபோல் விழுந்து விழுந்து சிரித்தாள். பின்னர் சிரிப்பதை நிறுத்திவிட்டு, “நீ, என்னோட இந்த அழகை விரும்புற, ஆனா இந்த அழகை, நீ பாக்க மட்டும்தான் முடியும், கண்டிப்பா அனுபவிக்க முடியாது.

இப்போ உன் கண்ணுல தெரியுது பாரு ஆசை....., அதைப் பாக்கும்போது, எனக்கு எவ்வளவு சந்தோசமா இருக்குத்

தெரியுமா? உனக்கு இது மட்டும் போதாது, இன்னும் அனுபவிக்கணும்..., என் மனசு எப்படி சுக்கல் சுக்கலா நொறுங்கிப் போச்சோ..., அதே மாதிரி உன்னோட ஆசை, கனவு எல்லாம் கானல் நீரா போகணும்.

“பக்கத்தில் உன் ஆசை மனைவி இருந்தாலும், அதை அனுபவிக்க முடியாமல் நீ தவிக்கிறதைப் பார்க்கப் பார்க்க....., உன்னை இன்னும் இப்படியே சுத்த விடணும்னு ஒரு வெறி வருது பாரு.....”, சொல்லிவிட்டு, வெறி வந்தவள்போல், அவள் அடுத்து செய்த காரியம்.....,

ஒரு சாதாரண மனநிலையில் உள்ளப் பெண்ணால் இப்படி நடந்துகொள்ள முடியுமா என்று தவித்துப் போனான். அவளின் ஆடையற்ற மேனியழகைப் பார்க்கும் தைரியமற்றக் கோழையாக கண்களை இறுக மூடி, முகம் குப்புறத் தலையணையில், தன் முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

அவன் இடத்தில் இப்பொழுது வேறு ஒருவனாக இருந்திருந்தால், என்ன நடந்திருக்கும் என்பதை அவள் அறிந்திருக்கவில்லை. நந்தனோ, அவளைக் காயப்படுத்தும் தைரியமில்லாமல்...., தன் ஆண்மையை அடக்கப் போராடினான்.

இந்தத் துன்பத்தில் இருந்து தப்பித்து, பக்கத்து அறையில் தஞ்சம் புகுந்துகொள்ளலாம் என்றாலோ, தாய்க்குத் தகவல் சொல்லக் காத்திருக்கும் வேலைக் காரர்களின் கண்பார்வையில் இருந்து தப்புவது, பெரிய கவலையாக இருந்தது. விரக தாபத்தில் வெந்து தணிந்தான் நந்தன்.....,

ப்ரியாவோ..., தான் மிகவும் கீழ்த்தரமாக நடந்துகொள்கிறோம் என்பதைக் கூட உணராமல், அவனைக் காயப்படுத்துவதும், ரணப்படுத்துவதும் மட்டுமே முக்கியம் என்பதுபோல், அவனது செயலை, தவிப்பை,

துடிப்பை....., தீராப் பகைவனை, போரில் வென்றுவிட்ட மமதையில், அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

தங்களுக்குள் இரவிலாவது எந்த விதமான சுணக்கமும் இல்லை, என்ற, அந்த ஒரு நிம்மதியையாவது தாய்க்குக் கொடுக்கவேண்டிய கட்டாயத்தில் இருந்தான் நந்தன். நாளுக்கு நாள் அவனது தாயின் உடல்நிலை, குன்றியதே தவிர, தேறவே இல்லை.

நந்தனிடம் பேசுவது கூட குறைந்துவிட்டது. அவனைப் பார்த்தால்..., பார்வையாலே நலம் விசாரிப்பதோடு சரி. மகனின் வாழ்வு இப்படி ஆகிவிட்டதே, முதலிலேயே ஜாதகம் பார்த்து, பொருத்தம் பார்த்து அனைத்தையும் நடத்தியிருந்தால் சரியாக இருந்திருக்குமோ, என்று அவன் தாய் எண்ணியதை, அவனிடம் வாய்விட்டுச் சொல்லக் கூட முடியாத நிலையில் இருந்தார்.

ஏற்கனவே மனவேதனையில் இருக்கும் மகனிடம், தானும் எதையாவது பேசி நோகடிக்க வேண்டாமே, என்று அமைதி காத்தார். மனம் முழுக்க தெய்வத்திடம் மன்றாடுவது ஒன்றையே வேலையாகக் கொண்டிருந்தது.

தான் நன்றாக இருந்திருந்தாலாவது, ஏதாவது வேண்டுதல் என்று கோயில் குளங்களுக்குப் போயிருக்கலாம். ஆனால் அதுவும் முடியாமல் ஒரு சக்கர நாற்காலியில் முடங்கிவிட்டத் தன் நிலையை எண்ணிக் கண்ணீர் வடிப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும் அந்த அன்புத் தாயால்.

தினமும் இரண்டு வேளை, காலையும் மாலையும் தன் அன்னையைப் பார்த்து, நலம் விசாரிக்காமல் இருப்பதில்லை நந்தன். இருவரும், முடிந்த அளவு பொதுவான விஷயங்களையே பேசுவார்களேத் தவிர, மறந்தும் நந்தனின் குடும்ப விஷயம் பற்றிப் பேசுவது இல்லை.

அவர்கள் நிலையில், கொஞ்சம் கூட மாற்றமே இல்லாமல், நாட்கள் மாதங்களைக் கடந்தது. நாளுக்கு நாள், நந்தன் ப்ரியாவிடம் அவமானப் படுவதும், தூண்டப் படுவதும், அவன் உணர்வுகள் எரியவிட்டு வேடிக்கைப் பார்க்கபடுவதும் தொடர்ந்து கொண்டிருந்தன. மனதளவில் கோழையாகிக் கொண்டிருந்தான் நந்தன். அவனைக் கத்தியின்றி ரத்தமின்றி வென்று கொண்டிருந்தாள் அவள்.....

*********போனைக் கையில் வைத்துக்கொண்டு வித்தார்த்த கத்த, “என் அக்காவுக்குதான் போன் செய்தேன்....”, பலவீனமாகச் சொன்னாள் தர்ஷிணி.

“உனக்கு எப்படிடி நம்பர் தெரியும்.....?”, அவன் கேள்வியில் திகைத்தாள் அவள். நம்பர் எப்பொழுதும் அவளுக்கு மனப்பாடமாகத் தெரியும், எனவே டயல் செய்து பேசுவாள். அதையே அவனிடம் சொல்ல, “இன்னும் யாரோட நம்பரெல்லாம் உனக்குத் தெரியும்..?”, சிங்கத்தின் கர்ஜனையாகக் கேட்டான்.

“அக்...கா....., அத்....தான்....., அம்மா....., அப்பா....., என்னோட ப்ரண்ட்...., உங்க நம்பர்....”, நடுக்கத்துடனே உரைத்தாள்.

“ஏண்டி..., சிம்மை மாத்தினாலும், நீ செய்யிறதை செய்யத்தான் செய்வ இல்ல.....”, என்னமோ போன் செய்தது, மிகப் பெரிய குற்றம் என்பதுபோல் சொன்னான்.

“சிம்மை மாத்தீட்டீங்களா.....? எப்போ.....? ஏன்.....? என்கிட்டே சொல்லவே இல்லை....?”, அதிர்ச்சியாகக் கேட்டாள். தன் போனில் இருந்த சிம்மை, தனக்குத் தெரியாமலே மாற்றியிருக்கிறான். அந்தத் தகவலை தனக்குச் சொல்லக் கூட இல்லை....., ‘நான் என்ன இவன் அடிமையா...? இல்லை மனைவியா...? இப்படிக் கேட்கிறானே...?’, மனம் துவண்டது.

“எதுக்குச் சொல்லணும்.....? இனிமேல் உனக்குப் போன் எதுக்கு...? அதான் நான் கூடவே இருக்கேனே. உனக்கு இந்த போன் கூட, நான் உன்கிட்டே பேசத்தானே தவிர, நீ

யார்கிட்டேயும் பேசதுக்கு இல்லை. இன்னொரு சந்தோசமான விஷயம்...., அது போஸ்ட் பெய்ட் சிம்...., நீ எவ்வளவு நேரம் வேண்டுமென்றாலும் என்கூடப் பேசலாம்.....,

“அதுக்கு சார்ஜே கிடையாது. அதனால், இனிமேல் பயப்படாமல் எனக்குப் போன் பண்ணு, சரியா. மத்தவங்க நம்பர் எல்லாம் மறந்துடு..., இல்ல...., நான் மறக்க வைக்க வேண்டி இருக்கும்....”, ஒருவர் பேசும் பேச்சைக் கேட்கக்கூட நாம் இவ்வளவு வெறுப்போமா, அவ்வளவு வெறுத்தாள் தர்ஷிணி.

அதிலும் எவ்வளவு வேண்டுமென்றாலும் என்கூடப் பேசலாம்....., என்று அவன் சொன்னது, காதில் நாராசமாக ஒலித்தது. அவனது சிரிப்பு...., எரிச்சலைக் கிளப்பியது. இறுதியாக, அவன் மிரட்டிய பொழுது, அவள் முதுகுத் தண்டு சில்லிட்டது.....

தான் ஒரு கூண்டுக்குள், வெறிபிடித்த ஒரு சிங்கத்தோடு பிணைக்கப் பட்டிருக்கிறோம் என்பது தெளிவாகப் புரிந்துபோனது தர்ஷிணிக்கு. அதிலிருந்து தப்பிக்கும் மார்க்கம் எதுவுமே பிடிபடவில்லை. திருமணம் முடிந்த இரண்டே வாரங்களில் பிரிவா...., தன் எண்ணம் போகும் திக்கை உணர்ந்தவள், திகைத்தாள்.

எப்படியாவது இந்தத் திருமண உறவைக் காப்பாற்றியே ஆக வேண்டும். அக்காவுக்குப் பிள்ளை இல்லை என்பதிலேயே, பாதித் தேளாக மாறி, கொட்டிக் கொண்டிருக்கும் அம்மா, தன் திருமணமே தோல்வியில் முடிகிறது என்று சொன்னால், படமெடுத்துத் தாக்கும் நாகமாக மாறவும் தயங்கமாட்டார் என்பது அவளுக்குத் தெரியும்.

இனிமேல் பிறந்த வீடு என்பது...., விருந்தாடச் சென்று வரலாமே தவிர, நிரந்தரமாக அங்கே போகவே முடியாது என்ற உண்மை முகத்தில் அறைந்து விதிர்க்க வைத்தது.

அவள் யோசனையிலேயே இருக்க, அவள் தெளியும் முன்பே, இழுத்துச் சென்றான் படுக்கை அறைக்கு..

அதன் பிறகு தொடர்ந்த நாட்கள், நரகத்தின் விளிம்புவரை சென்று திரும்பினாள் தர்ஷிணி. முழுதாக ஒரு மாதம் கடந்த பிறகுதான், தர்ஷிணி, சூரிய வெளிச்சத்தையே காண அனுமதிக்கப் பட்டாள். அதிலும் மறுநாள் முதல்...., அவள் வேலைக்குப் போகிறாள் என்ற அறிவிப்புடன்.

இந்த ஒரு மாதத்தில், கீதாவிடமிருந்து வந்த அழைப்புக்கள் அனைத்தையும் தவிர்த்தாள் தர்ஷிணி. தாய் ஒருமுறை அழைத்து, கீதாவைப்போல் இவளும் இருக்கக் கூடாது எனவும், தனக்கு ஒரு பேரனை, உடனடியாகப் பெற்றுத் தரச் சொல்லியும் ஒரு பாட்டம் அட்வைஸ் மழை பொழிய, வெறுத்துப் போனது தர்ஷிணிக்கு.

இவ்வளவு கொடுமையிலும் பெரிய ஆறுதல்....., அவன் அவளை வேலைக்கு அனுப்புகிறேன் என்று சொன்னதுதான். ஆனால் அதிலும், அடுத்தகட்ட காயங்கள் இருக்கும் என்பது தெரியாமல் போனது அவளுக்கு.

ஒரு தனியார் கம்பெனியில், எம்டியின் உதவியாளராய் இருந்தாள். எம்டி, கொஞ்சம் ஐம்பதை நெருங்கிய வயதுடையவராக இருக்கவே, தைரியமாகவே வேலைக்குச் சென்றாள். அலுவலகத்தில் அவளுக்கு எந்தவிதமான துன்பங்களோ, தொல்லைகளோ இருக்கவில்லை.

ஆனால் வித்தார்த்தின் தொல்லைகளும், பேச்சுக்களும்தான் அதிகமாக அவளைக் காயப் படுத்தியது. வீட்டை விட்டு வெளியேறி, அலுவலகத்தில் அவளை இறக்கி விடும் வரை, “ஏய்..., அந்த அவனோட மீசை அழகா இருக்காடி....? அவனை உனக்குப் பிடிச்சிருக்காடி....? உன் எம்டி கிழவனுக்கு, இந்த வயசிலும் நல்ல மீசை இல்ல.....”, ஒவ்வொரு நொடியும் அவளை வார்த்தையால் கடித்துக் குதறினான்.

வேலையின் நடுவில், அவன் அழைப்புக்கு பதில் சொல்லத் தாமதமானால்....., “என்ன ரொம்ப வேலையோ.....?”, அவன் கேட்கும் தோரணையே, அவன் எதைச் சொல்கிறான் என்பது அவளுக்கு புரியவர, முகம் வெளிறிவிடும்.

ஒருமுறை, எம்டி அவளுக்குக் கடிதம் டிக்டேட் செய்துகொண்டிருக்கும் பொழுது அலைபேசி அடிக்க, ஒரு நிமிடத்தில் அவள் உடல் முழுவதும் வியர்வையில் நனைய, வெடவெடக்கத் துவங்கியதைக் கண்டு, அதன் பிறகு அவளுக்கு அழைப்பு வந்தால், எம்டியே அவளை பேசச் சொல்லி விடுவார்.

அப்படி அவள் உடனடியாக எப்பொழுது பேசினாலும், “என்னடி....., கிழவன் வேலையே வைக்கிறது இல்ல போல, எல்லாம் அவனே செஞ்சுடுறானோ?”, அம்பாய்த் தைக்கும் வார்த்தைகளில், அவர் முன்பு முகம் மாறாமல் காக்க தவித்துப் போவாள் தர்ஷிணி.

இந்தக் கொடுமைகளையும் தாங்கி, இரவு முழுவதும் அவன் சுமையையும் தாங்கி...., சுமைதாங்கியே ஆகிப் போனாள். ஒரு மாதம் வேலைக்குப் போகும் முன்பே...., வேலைக்குப் போகவே கூடாது என்ற முடிவுக்கு அவளை வர வைத்திருந்தான் வித்தார்த்.

காலையும், மாலையும் அவளை அலுவலகத்தில் விட்டு, அழைத்துச் செல்வதைக் கண்ட சகப் பணியாளர்கள், “தர்ஷுக்கு என்னடி, அவ ஆத்துக்காரர் அவளை நோகாமல் கூட்டி வந்து கூட்டிப் போவார். நமக்கு அப்படியா..? இந்த பஸ்ஸில் தடித் தாண்டவராயங்கள் கிட்டே, நசுங்கி வருவதற்குள் ஒரு வழி ஆயிடுறோம்”, பொறாமையால் அவர்கள் பொங்கும் வேளை,

‘அவன் அப்படி இல்லை....., என்னைக் குத்திக் கிழிக்கவென்றே இப்படிச் செய்கிறான்...’, என்று கத்திக் கதறவேண்டும்போல் எழும் ஆத்திரத்தை அடக்க ரொம்பவே சிரமப் பட்டாள்.

காலையை விட, மாலை நேரத்தில் சரியாக, ஐந்து முப்பதுக்கு அலுவலக நேரம் முடிந்த, அடுத்த நிமிடத்தின் துவக்கத்தில் அவள் அவன் முன்பு நிற்கவில்லை என்றால்....., “என்னடி, அவனுக்கு உன்னை விடவே மனசே இல்லையா.....?”, சிரித்தவாறே அவள் கழுத்தை நெரிக்கும் வித்தையைச் செய்ய,

மனதளவில் செத்துச் சுண்ணாம்பாகி இருந்தாள் தர்ஷிணி. அன்று ஒரு முடிவுடன் வீட்டுக்கு வந்தவள், “நான் இனிமேல் வேலைக்குப் போகலை.....”, அவன் முகம் பார்த்து, தைரியமாகச் சொன்ன அவளை, கூர்மையான பார்வை பார்த்தான் வித்தார்த்.

“என்ன அதுக்குள்ளே போர் அடிச்சுடுச்சா? பதினைஞ்சு நாளைக்குதான் அவன் முகத்தையே பாக்க முடியுதுன்னா...., அப்போ என்னையும் இன்னும் கொஞ்ச நாளில் உனக்குப் பிடிக்காமல் போய், அடுத்த ஒருத்தன் கேக்குமா...., உன் உடம்பு.....”, தெனாவெட்டாக அவன் கேட்க, காதை பொத்திக் கொண்டு, மடிந்து அமர்ந்தாள் தர்ஷிணி.

‘இவன் ஒருவனையே தாங்க முடியவில்லை, இதில் இன்னும் ஒருவனா?’, மனதுக்குள் குமுறியவள், “என்ன பேசுறீங்க.....? வீட்டுக்குள் இருந்து, உங்க சித்திரவதையை மட்டும் அனுபவிச்சால் போதும்னு முடிவுக்கு வந்துட்டேன்.

“வெளியே போய்...., அதுக்கு நீங்க பேசுற பேச்செல்லாம் கேட்க என் மனசில் தெம்பில்லை. நான் வேலைக்கு இனிமேல் போகலை.....”, உறுதியாகச் சொன்ன அவளை, உறுத்து விழித்தான் அவன். அவன் பார்வையே வரப்போகும் கலவரத்தை அவளுக்கு அறிவிக்க, அதைக் கேட்கத் தயார் ஆனாள்.

“ஏய்...., நான் என்ன உன் பணத்துக்காகவா உன்னை வேலைக்கு அனுப்புறேன்....., என் கிம்பளமே உன் சம்பளத்தை விட அதிகம். எனக்கு, என் பொண்டாட்டி இந்தப்

பெரிய கம்பெனியில் வேலைக்குப் போறான்னு பெருமையா வெளியே சொல்லிக்கணும் அவ்வளவுதான்.

“மத்தபடி நீ வீட்டுக்குள்ளே இருந்தால் எனக்கு இந்தப் பெருமை கிடைக்குமா? அதுவும் அழகான பொண்டாட்டி, வேலைக்குப் போற பொண்டாட்டி அமைய, கொடுத்து வச்சுருக்கணுமே..., இந்த நினைப்பை இப்படியே மூட்டை கட்டி வச்சுட்டு, ஒழுங்கு மரியாதையா போய் வேலையைப் பாரு போ போ....”, ஒரு செல்லாக்காசாய் அவளை எண்ணி விரட்டினான்.

மனக் காயத்துடன், காபி போட்டு அவனுக்கும் கொடுத்து, தானும் ஒன்றை எடுத்துக் கொண்டவள், மனம் பாரமாய் கனக்க, காபியின் சுவையறியாமலே அதை உள்ளே தள்ளினாள். அதுவோ..., உள்ளே சென்ற வேகத்தில் வெளியே வரத் துடிக்க, ஓடிப்போய் பாத்ரூமில் வாந்தி எடுத்தாள்.

அதை அவள் சாதாரணமாக எடுத்துக் கொள்ள, “என்னடி...., வயித்தை அதுக்குள்ளே ரொப்பிட்டியா...”, ஆங்காரமாகக் கேட்டு, அவன் டம்ளரை விசிறியடிக்க, திகைத்து நின்றாள் தர்ஷிணி.

***

தாகம் - 27.

நீரோடையில் அருகில் நான்

இறங்கினால் தாகம் தணியுமா....?

உப்புநீர் ஓடையில் இறங்கிய அனுபவம்....

தயக்கமாய்த் தடுப்பதை

தவிர்க்க முடியவில்லை.....

ஹேமா சொன்ன விஷயத்தைக் கேட்டவன், மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்திருப்பான். ஆனால் அவள், அஞ்சலிதான் அதற்கு முயல வேண்டும் என்று சொல்லவே, அவன் உற்சாகம் தண்ணீர் பட்டத் தணலாக நமுத்துப் போனது.

“என்ன ஹேமா இப்படிச் சொல்லிட்ட.....? நான்தான் அஞ்சலியைப் பத்தி இப்போ சொன்னேனே. நீயும் வேகமா கதை கேட்டுட்டு இப்போ இப்படிச் சொன்னால் நான் என்ன செய்யட்டும்...?”, அவன் குரலில் சுரத்தே இல்லை.

“கணேஷ்... அதெல்லாம் அப்போ....., இப்போ அஞ்சலி அம்மா வேணும்னு கேக்குற அளவுக்கு முன்னேறி இருக்கா அது தெரியுமா?”, அவனுக்கு நம்பிக்கை அளிக்கும் விதத்தில் சொன்னாள்.

“ஹேமா இன்னைக்குக் காலையில் வரைக்கும் அவ வேண்டாம்னு சொல்லித்தான் நான் கேட்டேன். இப்போ ஒரே நாளில் எப்படி இப்படி ஒரு மாற்றம் வர முடியும்?”, நம்பிக்கையில்லை அவன் குரலில்.

“உண்மையான அம்மா எப்படி இருப்பாங்கன்னு, அவளுக்குத் தெரிய வந்தப்போ, அவளுக்குள் இப்படி ஒரு மாற்றம் வந்துது. அது யாருன்னா....”, அந்த நேரம் அங்கே

தங்கத்தின் குரல் கேட்கவே, இருக்கையில் இருந்து வேகமாக எழுந்தாள் ஹேமா.

“அ...அ..அம்மா...., வாங்கமா....”, ஏதோ தவறு செய்து, சிக்கிக் கொண்ட உணர்வில் அவள் பேச்சு தந்தியடித்தது.

“நான் வந்தது இருக்கட்டும்....., இவ்வளவு நேரமா உன்னைக் காணோமேன்னு நானும் தேடிட்டு இருக்கேன். இங்கே என்ன பண்ணுற நீ...? சரி, இந்தத் தம்பி யாரு...?”, கொஞ்சம் கண்டிப்பு எட்டிப் பார்த்தது அவர் குரலில்.

“அம்மா இவர்...., கணேஷ்....., இவர் வந்து...., ஜீவா..., இல்ல அஞ்சலி....”, தாய் திடீரென வந்துக் கேட்கவே, பேச்சுக் குழறியது அவளுக்கு.

அவளது தடுமாற்றம் உணர்ந்து, அவள் துணைக்கு வந்தான் கணேஷ். “ஹல்லோ ஆன்ட்டி....., நான் கணேஷ்..., பிஇ, எம்பிஏ முடிச்சு, இங்கே இருக்கும் கம்பெனியின் நிர்வாகப் பொறுப்பில் இருக்கேன். மாசம் ஐம்பதாயிரம் சம்பளம், தனிக்காட்டு ராஜா...., ஆனா இப்போ குடும்பஸ்தனா மாறலாம்னு ஆசைப் படுறேன்.

“எனக்கு ஹேமாவை ரொம்பப் பிடிச்சு இருக்கு. கல்யாணம் செஞ்சுக்க ஆசைப் படுறேன்...”, தைரியமாகத் தங்கத்தின் முகத்தைப் பார்த்து, கோர்வையாகச் சொல்லி முடித்தான்.

அவன் சொல்லி முடிக்கவே, தங்கம் சலனமே இல்லாமல் அவனைப் பார்த்தார். “என்ன... உங்களுக்குப் பேசத் துவங்கினால் சுற்றுப்புறமே மறந்து போய்டுமா?”, கண்டிக்கும் பார்வையுடன், தங்கத்தின் பார்வை, பக்கத்தில் இருந்த ஜன்னலில் பதிந்து மீண்டது.

தாயின் பார்வை சென்ற திக்கைப் பார்த்தவள், வேகமாகத் தன் தலையிலேயே அடித்துக் கொண்டாள். “சாரிம்மா...., கவனிக்காமல்...”, அதற்கும் அவளை முறைத்தார்.

“ஹேய்... என்னதான் நடக்குதுன்னு எனக்கும் கொஞ்சம் சொல்லுங்களேன்....”, பொறுமையிழந்துக் கேட்டான் கணேஷ்.

அவன் கையைப் பிடித்து அழுத்தி, “கணேஷ்..., நீங்க அஞ்சலியைக் கூப்பிடத் தானே வந்தீங்க? வாங்க, நாம வீட்டுக்குள்ளே போகலாம்...”, விஷயத்தைச் சொல்லாமல், அவனை அழைத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றாள்.

அவனோ அங்கிருந்து நகராமல், “என்னம்மா....”, ஹேமாவைக் கெஞ்சலாகப் பார்த்தான்.

“தம்பி..., விஷயம் என்னன்னு வீட்டுக்குள் போனா, உங்களுக்கே புரிஞ்சுடும்...”, சொல்லிவிட்டு முன்னால் நடந்தார்.

“ம்ச்..., வாங்க...., நல்லவேளை, அம்மா வந்தாங்க, இல்ல நாம ரெண்டு பேரும் என்னவெல்லாம் உளறி வச்சிருப்போமோ...., இப்போவே அவ எதையும் கேட்டிருக்கக் கூடாதேன்னு நான் பயந்துட்டு இருக்கேன்”, நிஜமான கவலை அவள் குரலில்.

“எவ அவ.....”, கடுப்பாகக் கேட்டான் கணேஷ்.

அவன் தலையில் நறுக்கென குட்டி, “கணேஷ்...., அஞ்சலியோட அம்மாவை, என்ன இப்படி, எவன்னு கேட்டுட்டீங்க..? உங்களுக்கு, ஜீவாவுக்குக் கல்யாணம் நடக்கணும்னு ஆசை இருந்தால்..., அவ எதையும் கேட்டிருக்கக் கூடாதுன்னு கடவுளை வேண்டிக்கோங்க”, கடுப்பாகச் சொல்லிவிட்டு அவனை இழுத்துக் கொண்டு நடந்தாள்.

தலையைத் தேய்த்தவாறே, “ஹேமா...., என் பொறுமையை ரொம்பச் சோதிக்கிற, அவ அவங்குறியே, அவளுக்குப் பேர் இல்லையா?”, அவனும் அதே கடுப்புடன் திரும்பக் கேட்டான். அதற்குள்ளாகவே அவர்கள் இருவரும், வீட்டு ஹாலுக்குள் வந்து விட்டிருந்தார்கள்.

தங்கமோ, இவர்களின் வழக்காடலை கண்டுக் கொள்ளாமல், “திவ்யா..., அஞ்சலியைகத் தூக்கிட்டு வாம்மா.... அவளைக் கூட்டிப் போக ஆள் வந்திருக்காங்க”, தங்கத்தின் குரல், கேட்கவே, திவ்யா அஞ்சலியைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்தாள்.

அவளது முகமே, அவள் அழுதிருப்பதை அவர்களுக்கு உணர்த்தியது. ஹேமா உண்மையாகவே பயந்து போனாள். தாங்கள் பேசியதை திவ்யா கேட்டிருந்தால்....., முதல் பாகம் வரை ஓகே. அதன் பிறகு அஞ்சலியை வைத்துப் பேசியதைக் கேட்டிருந்தால், அஞ்சலியை அவள் தூக்குவதும், கொஞ்சுவதும் இதுதான் கடைசியாக இருக்கும் என்று எண்ணினாள்.

தங்கத்துக்கு, அந்தக் கவலை இருந்ததாகத் தெரியவில்லை. கணேஷோ, திவ்யாவை ஜீவாவிற்கு ஜோடியாக நினைத்துப் பார்த்தான். அவன் பார்வை அவள் முகத்திலேயே நிலைத்தது. சட்டென அவன் பார்வை கூர்மை பெற்றது. அன்று ரோட்டில் இவர்களுக்குத் தானே விபத்து நடந்தது,

அன்று அவளது கோபமும் தவிப்பும், கண்ணனின் நிலையையும் அவனும் பார்த்தவன் தானே..... ஹேமா , திவ்யாவை, ஜீவாவின் மனைவி ஆக்கலாம் என்று சொன்னாள்....., அப்படியென்றால் அவளும் தனியாகத்தான் இருக்கிறாளா?

கண்ணன் இவளின் மகன் தானே....., ஹேமாவிடம் திவ்யாவின் கதையை எப்படிக் கேட்டுத் தெரிந்து கொள்வது, அவளுக்கு இந்தத் திருமணத்தில் விருப்பமா, என்று எப்படி அறிந்துகொள்ள, என்று தவியாய்த் தவித்தது. ஆனால் அதற்கான சந்தர்ப்பம் இதுவல்ல என்பது, அவனுக்குப் புரியவே அமைதியாக இருந்தான்.

திவ்யாவிற்கு, அஞ்சலியைக் கொடுக்கவே விருப்பம் இல்லை. அவளது தந்தை மதியம் இருந்த நிலையை

எண்ணிப் பார்த்தாள். அங்கே அவனும் தவித்துக் கொண்டிருப்பான் என்று நினைத்தவள், அஞ்சலியை தங்கத்திடம் கொடுத்தாள்.

“அந்தத் தம்பிட்டயே கொடு திவ்யா.....”, அவர் சொல்லவே, திவ்யாவின் உடம்பில் சட்டென ஒரு விறைப்பு. ஆனாலும் அவரிடம் மறுத்துச் சொல்ல மனமில்லாமல், அஞ்சலியை அவன் கரங்களில் கொடுத்தாள்.

கணேஷ் அவளையே இமைக்காமல் பார்க்க, அவன் கண்களை அவள் சந்திக்கவே இல்லை. “தம்பி.... நீங்க நாளைக்கு வாங்க. நாளைக்கு ஞாயிற்றுக் கிழமை, நீங்க அஞ்சலியோட அப்பாவையும் வேண்ணா அழைச்சுட்டு வாங்களேன்.....”, தங்கம் எதையோ மனதில் வைத்துக் கொண்டு சொல்ல வருவது, அவனுக்குப் புரிந்தது. ஆனால் என்னவென்று புரியவில்லை.

மறுக்கும் எண்ணமில்லாமல், “சரி ஆன்ட்டி.....”, சொல்லிவிட்டு அஞ்சலியை வாங்கிக் கொண்டு, ஹேமாவிடம் கண்களால் விடை பெற்றான்.

ஹேமாவுக்கு, உடலெல்லாம் ஒரு பரபரப்புத் தொற்றிக் கொண்டது. எப்படியாவது திவ்யாவைப் பேச வைக்கும் எண்ணம் தோன்றவே, “அம்மா... உங்களுக்கு அஞ்சலியோட அம்மா பற்றி ஒரு விஷயம் தெரியுமா.....? இருங்க நான் ரூம்ல வந்து சொல்லுறேன்...”, ஓரக் கண்ணால் பார்த்தவாறு அவள் சொல்ல, திவ்யாவின் முகத்தில் எந்த மாற்றமும் இருக்கவில்லை. மாறாக அவர்களுக்கு இடையில் இருக்க மனமில்லாமல், அறைக்கு விரைந்தாள்.

ஹேமாவை அது சோர்ந்து போக வைக்க, தங்கம் அவள் தோளில் கை போட்டு, “உனக்குக் காதல் ஒரே நொடியில் வந்த மாதிரி, திவ்யாவுக்கும் காதல் வரணும்னு நீ நினைத்தால் அது ரொம்பத் தப்பு. இனிமேல் அவளுக்குக்

காதல் உணர்வு வரணும்னா, அது அவளோட கணவன், உரிமையா, நேசமா, உயிரா பழகுவதில் தான் இருக்கு.

அப்படி அவளுக்கு, கணவன் என்பவன் இனிமேல் வரவேண்டும் என்றாலே....., அதற்கு நாம நிறைய பாடு படணும். அதிலும் கண்ணன் நிலை உனக்கே தெரியும்....., இனிமேல் திவ்யா ஒரு ஆணை ஏற்பதாக இருந்தால்....., அது கண்ணனுக்காக மட்டுமே இருக்கும்.

இதெல்லாம் நான் ஏற்கனவே உன்கிட்டே சொல்லி இருக்கேனே. நீ திவ்யாவை மாற்ற நினைப்பதை விட, கண்ணனை மாற்றுவது சுலபமா இருக்கும். அதனால்தான் நாளைக்கு ஜீவாவையும் வரச் சொல்லி இருக்கேன்.

ஜீவா வந்து அஞ்சலியோடும், கண்ணனோடும் முதலில் பழகணும், பிறகுதான் முடிவெடுக்க முடியும்", நீளமாகச் சொல்லி முடித்தார்.

"எப்படிம்மா இப்படியெல்லாம்....., அதைவிட, என்னோட காதலை, பொசுக்குன்னு இப்படிப் போட்டு உடைக்கிறீங்களே...., உங்களுக்குக் கோபம் இல்லையாம்மா...?", கொஞ்சம் தயங்கியவாறு கேட்டாள்.

"நான் எதுக்குக் கோபப்படப் போறேன் ஹேமா....., என்னோட ஒரே ஆசை..., உனக்குக் கல்யாணம் பண்ணி வச்சு, பேரன் பேத்திகளைக் கொஞ்சணும் என்பதுதான். இதுவரை பார்த்த மாப்பிள்ளை எல்லாமே.., உன் ஜாதகத்தைப் பற்றிக் கேட்டதுமே, போய்டுவாங்க.

"ஆனா நீ முதலிலேயே ஜாதகம் பற்றிச் சொல்லியும், அந்தத் தம்பி உறுதியா இருந்ததைப் பார்த்தேனே....., அது மட்டும் இல்லாமல்..., நீங்க பேசியது எல்லாத்தையும் கேட்டேன். கடைசியா சொதப்பப் போனதையும் பார்த்தேன், அதான் நான் குறுக்கே வர வேண்டியதா போச்சு.....

"எது எப்படியோ....., எல்லாம் நல்லபடியா முடியணும்னு, அந்த ஆண்டவனை வேண்டிக்கிறதைத் தவிர, வேற என்ன

செய்ய முடியும். சரி நீ போய் திவ்யாவையும், கண்ணனையும் வரச் சொல்லு, சேர்ந்து சாப்பிடுவோம். மணி பத்தாகப் போகுது...".

ஹேமா திவ்யாவை அழைக்கப் போகையில், திவ்யா ஏதோ யோசனையில் மூழ்கி இருப்பவளைப் போல் இருந்தாள். கண்ணன் அவள் அருகில் அமர்ந்து கொண்டிருந்தான். ஹேமா சென்றதைக் கூட அவள் உணரவில்லை, கண்ணனோ அவளைப் பார்த்து சிரிக்கவா வேண்டாமா என யோசனை செய்தான். "திவ்யா....", ஹேமா அழைக்க, "வா ஹேமா.....", சோபையாக அழைத்தாள்.

"என்ன திவ்யா....., ஏன் ஒரு மாதிரி இருக்க?", எதுவும் தெரியாதவள் போல் கேட்டாள். கண்ணனைத் தூக்கி மடியில் அமர்த்திக் கொண்டாள்.

"சாரி ஹேமா...., நீங்க அஞ்சலியைப் பற்றி பேசியதைக் கேட்டேன்..., கண்டிப்பா கேக்கணும்னு நினைச்சுக் கேக்கலை...., நீங்க பேசியது காத்து வாக்கில் என் காதில் விழுந்துது....", சங்கடமாகச் சொன்னாள்.

அதைவிட, அவர்கள் பேசியதை, தான் ஒட்டுக் கேட்டதாக எண்ணி விடுவாளோ என்று பயந்தாள். ஹேமா அதைக் கண்டு கொள்ளாமல், "ஜீவா ரொம்பப் பாவமில்ல திவ்யா...., அதோட, அஞ்சலிக்கு இப்படி ஒரு அம்மா இருந்திருக்க வேண்டாம்...., அதிலும் கடைசியாச் செய்தது...., அவர் இப்படிச் சாகணும்னு முடிவெடுக்கற அளவுக்குப் போய்ட்டார் திவ்யா.....

"கணேஷ்க்கு என்ன செய்யன்னே தெரியாமல் முழிக்கிறார்...., சில ஜென்மங்கள் ஏன்தான் இப்படி இருக்குண்ணே தெரியலை. உண்மையான அன்பைப் புரிஞ்சுக்கத் தெரியாத இவங்க எல்லாம் உயிரோட இருக்கும்போது, அவர் ஏன் சாகணும் இல்ல..., சரி அது அவரோட கவலை, வா நாம சாப்பிடப் போகலாம்...", தான்

கொஞ்சம் அதிகமாகப் பேசிவிட்டதாகத் தெரியவே, வேகமாகப் பின் வாங்கினாள்.

திவ்யாவோ ஜீவாவைப் பற்றி சிந்திக்கக் கூட முயலவில்லை. தாயும் இல்லாமல், தந்தையும் இப்படிக் குழம்பிய மனநிலையில் இருக்கும் போது, அவனால் எப்படி அஞ்சலியைப் பார்த்துக் கொள்ள முடியும்? என்றே சுற்றி வந்தது.

கண்ணனோ, இவர்களது பேச்சை கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். இருவரும், மதியம் தான் பார்த்த, அஞ்சலியின் அப்பாவைப் பற்றி பேசுகிறார்கள் என்பது புரிந்தது. ஜீவா பாவம் என்று ஹேமா சொன்னதையே நினைத்தான். சிறிது நேரத்தில் மறந்துவிட்டு, வேறு விளையாடிக் கொண்டிருந்தான்.

அன்று இரவில், திவ்யாவிற்கு மனதின் அலைப்புறுதல் அதிகமாகவே இருந்தது. அவளுடன் படுத்திருந்த ஹேமா விழித்து பார்க்கும் பொழுதெல்லாம், திவ்யா மோட்டுவளையை வெறிப்பதும், கண்ணனை அணைத்துக் கொண்டிருப்பதும், கண்ணன் முகத்தையே பார்த்துக் கொண்டிருப்பதுமே தெரிந்தது.

ஒரு கட்டத்தில் தாங்க முடியாமல், “திவ்யா தூங்க முயற்சி செய்யேன்...., கண்ணை மூடிக்கோ தூக்கம் தானா வரும். இப்படி முழிச்சுட்டே இருந்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும்”, ஹேமாவின் குரல் கேட்கவே, அவளைத் திரும்பிப் பார்த்தவள்,

“கண்ணை மூடினால் ஒரே இருட்டா இருக்கே ஹேமா...., என்னால் அந்த இருட்டை சகிச்சுக்க முடியலை....”, எழுந்து அமர்ந்து கொண்டாள்.

ஹேமாவிற்கோ, என்ன செய்து திவ்யாவின் இந்த பயத்தைப் போக்கவென்று தெரியவில்லை. அமைதியாகவே இருந்தாள், அவள் மனநிலை புரிந்தவள்போல், “ஹேமா, எனக்குத் தூக்கம் வராது....,

அதுக்கு, நீ எதுக்கு முழிச்சுட்டு இருக்கணும்...? நீ தூங்கு...", சொல்லிவிட்டுக் கண்ணனின் அருகில் படுத்துக் கொண்டாள்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்தவள் எப்பொழுது உறங்கினோம் என்றே தெரியாமல் உறங்கிப் போனாள் ஹேமா.

வீட்டிற்குச் சென்ற அஞ்சலி முதலில் சென்றது தன் தந்தையிடம் தான். சென்ற வேகத்தில், தனக்குக் கண்ணனின் அம்மாவைப் போன்று அம்மா வேண்டும் என்று கேட்டாள். ஜீவா ஏற்கனவே மன வேதனையில் இருந்தான்.

அத்தோடு அஞ்சலியின் இந்த கோரிக்கையும் இணைந்து கொள்ள, இன்னும் சோர்ந்தான். ஆனால் அவனை, அப்படியே தன் கூட்டுக்குள் அடைய விடாமல், கணேஷ் அங்கே வந்தான். வந்தவன் வெறுமனே இருக்காமல், அவனது தொழில் பற்றியப் பேச்சைத் துவங்கினான். அந்த நேரம் முத்து அங்கே வந்து, அஞ்சலியைத் தூக்கிச் சென்றார்.

எப்படியும் தொழிலில் வெற்றி பெற்றே ஆகவேண்டிய கட்டாயத்தில் இருக்கவே, கணேஷின் கேள்விகளுக்குச் செவி சாய்த்துத் தொழில்முறைப் பேச்சுக்களில், தன்னை இணைத்துக் கொண்டான். கொஞ்ச நேரம் அப்படியே கழிய, இரவு உணவை முடித்தவர்கள், உறங்கச் சென்றார்கள்.

"சார் நான் கெஸ்ட் ஹவுசுக்கே வந்துட்டேன்.....", என்ற அறிவிப்போடு விலகிச் செல்லும் கணேஷை, புதிதாகப் பார்ப்பதுபோல் பார்த்தான். அறைக்கு வந்த அவனை, அஞ்சலி பிடித்துக் கொண்டாள்.

தாயென்றால் இப்படித்தான் இருப்பாளா...? என்று அவள் கேட்ட கேள்விகளுக்கு அவன் பொறுமையாக பதிலளிக்க, இப்படிப்பட்ட தாய், கண்ணனின் அம்மா என்றும், அவள் தனக்கும் வேண்டுமென்றும் கேட்டு அடம் பிடித்தாள்.

கண்ணனின் தாய் என்று சொன்னவுடன், திவ்யாவின் முகமும், அவள் அன்று அதிர்ந்து நின்ற தோற்றமும், அவன் கண்களில் வந்து போனது. கண்ணன் ஆண்களையே இவ்வளவு வெறுக்கிறான் என்றால், கண்டிப்பாக அவன் தந்தை நல்லவனாக இருக்க வாய்ப்புக் குறைவே என்று தோன்றியது.

இவ்வளவு மென்மையான குணம் கொண்ட அவளுக்கு, அப்படி ஒரு நிலை வேண்டாம் என்று எண்ணினான். எவ்வளவு முயன்றும் அவள் வாழ்வில் ஏதோ ஒரு சோகம் ஒளிந்திருக்கிறது என்பதை, அவனால் புறம் தள்ள முடியவில்லை.

அஞ்சலி உறங்கியிருக்க, அவன் உறக்கம் வராமல் புரண்டான். எப்படியோ உறங்கியும் போனான். காலையில் கண்விழித்த கொஞ்ச நேரத்திலேயே, அஞ்சலி, கண்ணனைப் பார்க்க வேண்டும், திவ்யா அம்மா கையால் தான் சாப்பிடுவேன், குளிப்பேன் என்று அடம் செய்யத் துவங்கினாள்.

ஜீவாவும் எவ்வளவோ அவளைச் சமாதானம் செய்ய முயன்றும் முடியவில்லை. கணேஷ் வந்து அவளை அங்கே அழைத்துச் செல்வதாகச் சொல்லவே, தந்தையையும் உடன் வரச் சொல்லி கெஞ்சினாள்.

ஜீவா தயங்கவே, அங்கே ஹேமாவைத் தனக்குப் பிடித்திருப்பதாகவும், அவள் தாய், அவனை பார்க்க விரும்புவதாகவும் சொல்லவே, அரை மனதாகக் கிளம்பினான்.

அவர்கள் வீட்டிற்குச் செல்லவே, ஹாலில் அமர்ந்திருந்த கண்ணன், இரு ஆண்களைப் பார்க்கவே எழுந்து, வீட்டுக்குள் ஓடியே போனான். அஞ்சலி அவனை அழைத்ததை, அவன் கண்டு கொள்ளவே இல்லை. ஜீவா அஞ்சலியை, உள்ளே சென்று விளையாடுமாறு சொல்லவே, கணேஷ் வேண்டாம் என்று மறுத்தான்.

வந்திருக்கும் இடத்தில் எதுவும் சொல்லாமல், மகளை மடியிலேயே இருத்திக் கொண்டான். அஞ்சலி ஜீவாவின் மடியில் அமர்ந்துகொண்டு, அவன் சட்டையைப் பிடித்து இழுப்பதும், அவன் பாக்கெட்டில் இருக்கும் பேனாவை எடுத்து விளையாடுவதும், அதை மறுபடியும் அவன் பையில் வைப்பதும்,

அவன் பர்சில் இருந்து பணத்தை எடுத்து எண்ணுவது, அதை உள்ளே வைப்பது, அவன் பாக்கெட்டில் வைப்பது என அவனை ஒரு வழி செய்து கொண்டிருந்தாள். அவளது சேட்டைகள் அனைத்தையும், கண்ணன் வைத்த விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனுக்கு, அவள் ஒரு ஆணிடம் விளையாடுவது, வியப்பாக இருந்தது. அதைவிட, அவள் நொடிக்கொரு அப்பா போடவே, இன்னும் திகைத்தான்....., அவளது விளையாட்டுக்கள் அனைத்தையும், ஜீவா முகம் கோணாமல் சகிப்பதும்,

அவளது விளையாட்டில் பங்கு கொள்வதும், ஆச்சரியமாக இருந்தது. அவனுக்கும், 'அப்பா' என்ற பிம்பம் இப்படித்தான் இருக்குமோ என்ற எண்ணம் எழுந்தது. அஞ்சலி கண்ணனைப் பார்த்துவிட்டாள், தங்கத்திடம் உரையாடிக் கொண்டிருந்த அவன் முகத்தைத் திருப்பி,

"அப்பா...., கண்ணன்....., கண்ணா...., அப்பா வா....", அவள் அழைக்கவே, முடியாது என்பதுபோல் வேகமாகத் தலையை ஆட்டினான் கண்ணன்.

ஜீவா முகம் கொள்ளாப் புன்னகையை முகத்தில் ஏந்தி, 'வா' என்பதுபோல் அவனைப் பார்த்து சைகை செய்ய, வேகமாகத் தலையை உள்ளிழுத்துக் கொண்டான் கண்ணன்.

வேகமாக உள்ளே போனவன், திவ்யாவின்மேல் மோதிக் கொண்டான். அவன் வேகமாக வருவதைப் பார்த்தவள், அவனை ஏந்திக் கொண்டு, "என்னடாக் கண்ணா....? ஏன்

இவ்வளவு வேகமா ஓடி வாற...? விழுந்துடுவல்ல...., பாத்து வரணும் சரியா...?", திவ்யா கேட்க....,

"அம்மா....., அப்பா.....", கண்ணன் விழி விரித்துச் சொல்ல, வேகமாக வெளியே வந்து பார்க்க, அங்கே அமர்ந்திருந்த ஜீவாவைப் பார்த்து, ஆசுவாசமாக மூச்சு விட்டாள். அதன் பிறகுதான் கண்ணனிடம் அவள் கவனம் சென்றது. அவனைப் பார்த்தவள் திகைத்தாள்.

***

தாகம் - 28.

தாய்மை வரத்துக்காக

பலர் தவமிருக்க

பிள்ளையைத் தொல்லையாய்

நினைக்கும் வினோதம்

என்வாழ்வில்.....

சாப்பிட்ட காபியின் சுவை பிடிக்காமல், தர்ஷிணி வாந்தி எடுப்பதாக அவள் நினைக்க, அவளது கணவனோ, “என்னடி அதுக்குள்ளே வயித்தை ரொப்பிட்டியா?”, என்ற காட்டுத் தனமான கத்தலைக் கேட்டப் பிறகுதான், தர்ஷிணிக்கு அந்த நினைவே வந்தது.

கைகள் தானாக அவள் அடி வயிற்றில் வட்டமிட்டது. ‘என் பிள்ளை’, நினைவே சிலிர்த்தது. தன் அக்காவின் பத்து வருட ஏக்கத்துக்கு முடிவு கட்ட வந்தப் பிள்ளை. தாயின் சுடு சொற்களை இனிமேல் கேட்க வேண்டாம்..... அக்கா அன்று சொன்னதுபோல், இந்தப் பிள்ளைதான் என் வாழ்வில் வசந்தத்தைக் கொண்டு வரப் போகிறது.

ஒருநாள், தர்ஷிணி தன் கவலையில் மூழ்கி இருக்க, அலைபேசி அடிக்கவே அதை நொடியில் இயக்கிக் காதில் வைத்தாள். என்றுமே தன் கவலைகளை, கண்ணீரை, அவலங்களை, தமக்கையோடு அவள் பகிர்ந்ததில்லை. அன்றோ தாங்க முடியாத உடல் வலியாலும், வித்தார்த் தெளித்த அமில வார்த்தைகளாலும் சுருண்டிருக்க,

கீதாவின் குரல், பாலைவனச் சாரலாக மனம் நனைத்தது. அக்காவின் எப்படி இருக்கிறாய் என்ற கேள்வியே நெஞ்சைத் தொட, உள்ளக் கிடக்கைகள் அனைத்தையுமே கொட்டிவிட்டாள். அதற்கு இரண்டு நாள் முன்புதான்

கமலேஷ் அவளைப் பார்க்க வந்து, அவள் நிலையைப் பற்றி அறிந்து கீதாவிடம் சொல்லியிருந்ததால்,

தங்கைக்கு தைரியம் கொடுப்பதற்காக மட்டுமே போன் செய்திருந்தாள். இந்த இரண்டு நாள் தாமதம் கூட, தங்கையின் நிலையை அவள் அறிந்து, அதை ஜீரணிக்கவே எடுத்துக் கொள்ளப் பட்டிருந்தது.

தர்ஷிணியின் வாய்மொழியால், கீதா கேட்ட விஷயங்கள் அனைத்தும், தங்கையின் வாழ்வு நரகத்தில் நடப்பதை கீதாவிற்கு உணர்த்தியது. தாயின் சுடு சொற்களுக்குப் பயந்தும், வித்தார்த், கமலேஷிடம் பாராமுகமாக நடந்து கொண்டதை உணர்ந்தும், கீதாவால் தங்கையை தன் வீட்டிற்கு அழைக்கக் கூட முடியவில்லை.

தங்கையை இப்படியே விட்டால்...., அவள் தவறான முடிவுக்கு வந்துவிடும் அபாயம் இருந்ததால், அவளுக்கு ஆதரவாகவும், நம்பிக்கை அளிக்கும் விதமாகவும் மட்டுமே பேசினாள். “உனக்கு ஒரு குழந்தை வந்துவிட்டால்..., அவர் மாறி விடுவார். மழலைக்கு மயங்காதவர் யாருமே இல்லை...”, இப்படியாகத் தொடர்ந்த கீதாவின் அறிவுரைகளைக் கேட்ட பிறகு,

மழலைச் செல்வம்தான் தன் வாழ்க்கையை சீரமைக்கப் போகிறது என்பதை திடனாக நம்பியது அந்தப் பேதை மனம். திருமணப் பந்தலிலே, தாய் பேரனைக் கேட்க, அது வேறு எதற்கு? என்று அவன் கேட்டது, அந்த நேரத்தில் அவளுக்கு சத்தியமாக நினைவுக்கு வரவே இல்லை.

அப்படி வந்திருந்தால்....., அந்தப் பிள்ளையும் தன்னோடு சேர்ந்து துன்பப்படப் போகிறது என்பதை உணர்ந்திருப்பாளோ? அப்படியே நினைவுக்கு வந்திருந்தாலும், பத்து வருடமாகத் தங்கள் வீட்டினர் ஏங்கித் தவமிருக்கும் அந்த பிள்ளைச் செல்வத்தை வேண்டும் என்று வைக்கத் துணிந்திருக்க மாட்டாள்தான்.

எப்படியிருந்தாலும் கீதா கொடுத்த அந்த நம்பிக்கை மட்டுமே அந்த நேரத்தில் பெரிய ஊன்றுகோலாக இருந்தது. அதையே ஜெபமாக ஜெபித்துக் கொண்டிருந்ததாலோ என்னவோ, பிள்ளை வரவை அவளது அடி மனது ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

ஆனால், தினமும் அவளை யோசிக்கக் கூட அனுமதிக்காமல் தொடரும் அவனது அதிரடியால்...., அவள் சிந்திக்கும் சக்தியையே இழந்து இருந்ததாலேயே, நாட்கள் தள்ளியிருப்பதைக் கூட அவள் உணரவில்லை.

இப்பொழுது அதை அறிந்தபொழுது..... எதையோ வென்ற, வெல்லப் போகும் உணர்வு. தன் வாழ்வு இந்த நரகத்தில் இருந்து விடியப் போகிறது என்ற பேரானந்தம்...., அதை எப்படி வெளிப்படுத்த என்று கூடத் தெரியாமல் சிலையாகிவிட்டாள். அவளது பரவசத்தில் அவள் மூழ்கி இருக்க, வித்தார்த்தின் கோபத்தை அவள் கண்டுகொள்ளவே இல்லை.

தர்ஷிணி அமைதியாக இருப்பதைத் தவறாகப் புரிந்துகொண்டவன், “என்னடி நான் கேட்டுகிட்டே இருக்கேன்....., நீ அப்படியே சிலையாட்டம் நிக்கிற? கேக்குறது காதுல விழல...?”, அவளை உலுக்கினான்.

அவனது உலுக்கலில் கனவு கலைந்தாலும், அவனது கோபத்தை உணரவே இல்லை. “என்னங்க....., நம்ம பிள்ளைங்க...., நமக்கே நமக்குன்னு....., எனக்கு எவ்வளவு சந்தோசமா இருக்குத் தெரியுமா..? நீங்க அப்பா ஆகப் போறீங்க....., நா...நான்....., அம்மா.....”, அதைச் சொல்லும் பொழுதே கண்கள் கலங்கி, அடி வயிற்றைப் பாசமாகத் தடவியது அவள் விரல்கள்.

“ஏய்..., உடனே கிளம்புடி....., ஹாஸ்பிட்டல் போகலாம்....என்னால் நிம்மதியாவே இருக்க முடியாது.... நீ... நீ....., கிளம்புடி....”, அவனது உச்ச எரிச்சலில்

வார்த்தைகள் தடுமாற, அவளோ அது பாசத்தில் வந்த தவிப்பு என எண்ணிக் கொண்டாள்.

‘ஆண்டவா...., எனக்கு இவ்வளவு கஷ்டம் கொடுத்தாலும், பிள்ளையைக் கொடுத்து என் வாழ்வை மலரச் செய்தாயே...., உனக்குக் கோடி நன்றி.....’, மனம் கடவுளுக்கு நன்றி சொல்ல, “இதோ ஒரு அஞ்சு நிமிஷத்தில வந்துடுறேங்க.....”, துள்ளலாகக் கிளம்பினாள்.

மருத்துவமனையில், அவன் மருத்துவரிடம் முதலில் தனியாகப் பேசிவிட்டு வந்து அவளை அழைத்துச் சென்றான். செல்லும் முன்னர், “ஏய்...., அவங்க என்ன கேட்டாலும், எனக்குச் சம்மதம்ன்னு ஒரு வார்த்தை மட்டும்தான் உன் வாயில் இருந்து வரணும். வேற ஏதாவது வந்துது.....”, அவன் அடிக்குரலில் எச்சரிக்க, மனதுக்குள் அபாய மணி அடித்தது அவளுக்கு.

இதயம் பந்தயக் குதிரையாக தடதடக்க, நடுக்கமாகவே அந்தப் பெண் மருத்துவரின் முன்னால் அமர்ந்தாள். மருத்துவர் கோபமாக அவள் முகத்தை ஏறிட்டவர், அவள் முகத்தில் என்ன படித்தாரோ, “என்னம்மா, உனக்குக் கருக்கலைப்பு செய்வதில் விருப்பம் இல்லையா? முகமெல்லாம் இப்படி வேர்த்திருக்கு....?”, குழப்பமாகக் கேட்டார்.

“என்னது.....? க...ரு....”, கேட்கக் கூட அவளால் முடியவில்லை. இதற்கா என்னை இவ்வளவு வேகமாகக் கூட்டி வந்தாய் பாதகா...., உன்னை நம்பி, ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் உன் பின்னால் வந்தேனே.....,

‘உனக்கு இதைச் செய்ய எப்படி மனசு வந்துது..? உள்ளே இருப்பது உன் குழந்தைடா..., உன் வாரிசு...., அதுகூட உனக்குத் தெரியலையா....? நீயென்ன மனிதனா...? இல்லைக் கல்லா...?’, உள்ளம் எரிமலையாகக் குமுற, பார்வை மட்டுமே அவனிடம் கேள்வி கேட்டது.

ஆனால் அவனோ....., “டாக்டர்...., அவ கொஞ்சம் பயப்படுறா அவ்வளவுதான். மற்றபடி அவளுக்கு முழுச் சம்மதம்தான்”, தர்ஷிணியின் பார்வையைக் கண்டுகொள்ளாமல், மருத்துவரிடம் சொன்னான் அவன்.

“என்ன சார் விளையாடுறீங்களா....? நான் அப்போவே முடியாதுன்னு சொன்னேன்...., நீங்கதான், அவ படிக்கிற சின்னப் பொண்ணு, காலேஜ்ல எல்லோரும் கிண்டல் பண்ணுறாங்கன்னு அழறா, அப்படி இப்படின்னு கதை சொன்னீங்க...., அவங்க என்னன்னா இப்படி அழறாங்க....,

“உங்களுக்கெல்லாம் மனசாட்சியே இல்லையா. உங்க சந்தோசத்துக்கு, குழந்தை இடைஞ்சலா இருக்கும்னு நீங்க நினைத்தால்..., அதற்கான பாதுகாப்பு நடவடிக்கையில் நீங்க ஈடுபட்டிருந்திருக்கணும். அதை விட்டுட்டு...., விருப்பமே இல்லாத அவங்களை, கட்டாயப் படுத்திக் கருக்கலைப்பு செய்ய அழைச்சுட்டு வந்தது ரொம்பப் பெரிய தப்பு.

“முதல்ல அவங்களை அழைச்சுட்டு வீட்டுக்குப் போங்க....., நீங்க ஏதோ ரொம்ப சின்னப் பொண்ணுன்னு சொன்னதால்தான் அரை மனசா சம்மதிச்சேன் ஆனால்....., உன் வயசு என்னமா....?”, அவனிடம் படபடவென பொரிந்தவர், தர்ஷிணியிடம் கேள்வி கேட்டார்.

“இருபத்தி மூணு.....”, குரலே வெளிவராமல் அவள் பதில் சொல்ல, வெளிப்படையாகவே வித்தார்த்தை முறைத்தார் அந்த டாக்டர்.

“இல்ல டாக்டர்...., எங்களுக்குக் கல்யாணம் முடிஞ்சே ரெண்டு மாசம் முழுசா ஆகலை அதுக்கு முன்னாடி....”, சப்பைக் கட்டு கட்டினான்.

அவனது இந்தக் கேவலமானக் கெஞ்சலைக் காணச் சகிக்காமல், இருக்கையில் இருந்து எழுந்து வேகமாக வெளியேறினாள் தர்ஷிணி. அவளது இந்தச் செயலை எதிர்பார்க்காத வித்தார்த்தும், வேறு வழியில்லாமல்

அவளைப் பின் தொடர்ந்தான். தர்ஷிணியோ அவனை எதிர் பாக்காமல் நடந்தே வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

வித்தார்த் வீட்டுக்கு வந்து, “என்னடி...., நான்தான் பேசிட்டு இருந்தேனே..., அதுக்குள்ளே எழுந்து வந்துட்ட, அவங்க என்ன நினைச்சு இருப்பாங்க....?”, கத்தினான்.

அவனது கத்தலைப் பொருட்படுத்தாமல்...., “சொந்தப் பிள்ளையவே கொலை செய்யச் சொல்லி கேட்டப்போ நினைத்ததைவிட, பெருசா எதையும் நினைச்சிருக்க மாட்டாங்க...”, நக்கலாக பதில் சொன்னாள்.

அவளது இந்த பதிலுக்கு, சாதாரண மனநிலையில் இருந்திருந்தால் என்ன செய்திருப்பானோ, ஆனால் இப்பொழுது, அவனுக்குக் காரியம் ஆகவேண்டி இருந்தது. எனவே, “சரி சரி..., உலகத்திலே அவ மட்டும்தான் டாக்டரா....., மூலைக்கு ஒரு டாக்டர் இருக்காங்க. வா நாம வேற டாக்டர் பாக்கலாம்....”, என்னவோ, படம் பார்க்க, இந்த தியேட்டர் விட்டால், வேறு தியேட்டர் என்ற ரீதியில் பேசும் அவனை வெறுப்பாய் பார்த்தாள்.

“என்னடி...., பார்வையெல்லாம் ஒரு மார்கமா இருக்கு...., இப்போ எழுந்து வரப் போறியா இல்லையா...?”, அவன் குரல் உயரத் துவங்கியது.

“நான் எங்கேயும் வர மாட்டேன். எனக்கு இந்தக் குழந்தை வேணும்”, உறுதியாகச் சொன்னாள்.

அவளது இந்தப் பேச்சை அவன் ரசிக்கவில்லை. “அதை நான் முடிவு செய்யணும்...., நான் முடிவு செஞ்சுட்டேன். எனக்கு இந்தச் சனியன் வேண்டாம்....”, கையை நீட்டி அவள் வயிற்றைச் சுட்டிக் காட்டினான்.

வயிற்றில் இருக்கும் பிள்ளையை, சனியன் என்று சொல்லும் அவனையே உறுத்துப் பார்த்தாள். “நீங்க என்ன செஞ்சாலும் இந்தக் குழந்தையை நான் பெத்துப்பேன். என் அக்காவோட பத்து வருட ஏக்கம், என் அம்மாவின் எதிர்

பார்ப்பு...., கலைய விட மாட்டேன்...", அவள் நிலையில் எந்த மாற்றமும் இருக்கவில்லை.

"உன் அக்காவோட ஏக்கத்துக்காக பெத்துப்பேன்னு சொல்லுறியா..., இல்லை அன்னைக்கு உன்னைப் பாக்க வந்தானே உன் அத்தான்...., அவன் கொடுத்துட்டுப் போனான்னு பெத்துக்கறியா.....", விஷத்தைக் கக்கினான் வித்தார்த்.

"ஐயோ....., இப்படிப் பேச உங்களுக்கு எப்படி மனசு வருது....., என்னோட பெண்மையை மட்டும் நீங்க களங்கப் படுத்தலை, உங்களோட ஆண்மையையும் சேர்த்துக் கேவலப்படுத்துறீங்க. அப்போ, உங்களால ஒரு புள்ளைக்கு அப்பன் ஆக முடியாதுன்னு நீங்க சொல்ல வாறீங்களா.....?", ஓங்கரமிட்டு அழுது புலம்பினாலும், அவனுக்கு பதில் கொடுக்க அவள் தயங்கவில்லை.

"என்னடி சொன்ன...? என்ன ஆம்பளையான்னா கேட்ட.., அது இவ்வளவு நாளா தெரியலையாடி...., என்னையே கேவலப் படுத்துறியா.....? இந்த சனியனுக்கு வேண்டி, என்னையே எதுத்துப் பேசுறியா? இல்லடி...., இனிமேல் இந்தச் சனியன் மேல நான் எந்த இதையும் செய்யப் போறதில்லை....

என்னையே ஆம்பளையான்னு கேக்க வச்சுடுச்சு இல்ல...., நான் ஆம்பளைன்னு காட்டத்துக்கு வேண்டியாவது நீ அதைப் பெத்துக்கணும்டி....., ஆனா அதை எப்படி நீ பெத்துக்கறன்னு நானும் பாக்குறேன்", அவனது அதே நிதான நடையுடன் தன்னை நெருங்க, கொஞ்சம் கூட அசையாமல் அங்கேயே நின்றாள் தர்ஷிணி.

எங்கே ஓடினாலும் அவன் விடப் போவதில்லை...., அதைவிட, தனது போராட்டம் வயிற்றில் இருக்கும் பிள்ளைக்கு ஏதாவது பாதிப்பை ஏற்படுத்துமோ என்று அஞ்சி..., அசையாமலே நின்றாள். அன்று கிழிந்த நாராக்கப் பட்டாள் தர்ஷிணி.

நாட்கள் வாரங்களைக் கடக்க, வாரங்கள் மாதங்களைக் கடந்தது. ஆனால் வித்தார்த்தின் நடவடிக்கையில் எந்த மாற்றமும் இருக்கவில்லை.

தர்ஷிணியின் மணி வயிறு பிறையென வளரத் துவங்கியது.

*******நாட்கள் எப்படி நகரும் என்று சிந்திக்கும் வேளையில்...., இதோ ஐந்து மாதங்களை வெற்றிகரமாகக் கடந்துவிட்டாய் என்று சொன்னது அந்த நாள் காட்டி. நந்தனின் ஒரே செயல், குறிக்கோள், வெறி அனைத்தும் வேலை என்றாகிப் போனது.

வீட்டில் இருக்கும் நாட்களைக் குறைத்துக் கொண்டான். மாதம் முழுவதும் வெளிநாடே தஞ்சம் என்றிருக்க அவனுக்கும் ஆசைதான். ஆனால் தாயின் முகத்துக்காக அதைக் குறைத்துக் கொண்டான். அவன் வாரிக் குவிக்கும் ஆர்டர்களை முடிக்கவே வருடக் கணக்காக ஆகும் என்ற நிலை.

அவன் ப்ரியாவின் பார்வையில் இருந்து மறைய முயல, அவளோ தவறான பாதையில் அடியெடுத்து வைக்கத்துவங்கியிருந்தாள். நந்தன் அவள் அறையில் இருக்கும் பொழுது வேண்டுமென்றே அலைப் பேசியில் பேசத் துவங்குபவள்....., அவளது கெஞ்சலும் கொஞ்சலும் பேச்சும்....., நாராசமாக அவன் காதில் ஒலிக்கும்.

அதைவிட, அவள் தன்னைப் பாடாய்ப் படுத்தும் விதத்தை விளக்கும் வேளையில்.... அப்படியே செத்துப் போகலாமா என்று கூடத் தோன்றும். அதிலும் பேசியவாறே, அவனை எள்ளி நகையாடும் அவள் பார்வையும், இகழ்ச்சியாக வளையும் அவள் இதழ்களும்.....

அவள் முகத்தைப் பார்க்காமல் இருக்க எவ்வளவு முயன்றும், அவனால் முடியவே முடியாது. தன்னையும் மீறிக் கோபமாக அவளைப் பார்க்கும் வேளை....., “என்னடா...., கோபம் வருதுபோல...., உனக்கெல்லாம் அது

வரக் கூடாதே.., பிரபு.., என் வீட்டுக்காரருக்கு கோபம் வருதுடா.....”, என்னவோ நகைச்சுவையைக் கண்டதுபோல் கெக்கலித்துச் சிரிப்பாள்.

ஒரு நாள் அடக்க முடியாத கோபத்தில்....., அவளை ஓங்கி அறைந்து, அவள் தலை முடியைக் கொத்தாகப் பற்றி, “நானும் ரொம்பப் பொறுத்துப் போறேன்..., என்னை ரொம்பச் சீண்டுற..., வெளியே அம்மா இருக்காங்களேன்னு பாக்குறேன் இல்ல....”, முதல் முறையாக அவனது கோபத்தை அவளிடம் காட்டினான்.

அடுத்த நொடி அவள் செய்ததுதான், அவனை அடியோடு அடக்கி விட்டது....., அணிந்திருந்த சேலையை அவன் பார்க்கும் போதே அவிழ்த்து எறிந்தவள்...., ஜாக்கெட்டையும் அபாயகரமாகக் கிழித்தவள், “யாராவது வாங்களேன்....., இந்த அநியாயத்தைக் கேக்க யாருமே இல்லையா....?”, உச்சஸ்தியில் கத்தியவள், அறைக் கதவைத் திறந்துகொண்டு ஓடினாள்.

அவன் அவளைப் பிடிக்கும் முன்பே நழுவி ஓடியவள்...., “என்னை இப்படி அடிச்சுக் கொடுமைப் படுத்துறாரே...., இதை யாருமே தட்டிக் கேக்க மாட்டீங்களா.....? நான் அவரோட ஆசைக்கு இணங்கலைன்னு, என்னை இப்படி மாட்டைப் போட்டு அடிக்கிற மாதிரி அடிக்கிறாரே.....

“இவரெல்லாம் ஒரு ஆம்பளையா.....?”, வீடே அதிருமாறு கத்த, வேலைக்காரர்கள் முதல், வசந்தா வரை அனைவரும் ஹாலுக்கு வந்தார்கள். அவளைப் பற்றி ஏற்கனவே அனைவருக்கும் தெரியுமாகையால், யாரும் எதுவும் சொல்லவில்லை.

ஆனால் அவள் கன்னத்தில் இருந்த விரல்த்தடம்..., நம்பாமல் இருக்கவும் விடவில்லை. வசந்தா நந்தனைப் பார்க்க, அவளை அடித்துவிட்டக் குற்ற உணர்ச்சியில் தலை கவிழ்ந்தான். அதைப் பார்த்து மனதுக்குள் சிரித்துக் கொண்டாள் ப்ரியா.

அவளது குற்றச் சாட்டை வள்ளியால் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை. “அம்மா...., அப்படிச் சொல்லாதீங்கமா...., ஐயா ஏதாவது கோபத்தில் உங்களை அடிச்சிருப்பார். மத்தபடி ஐயா ரொம்ப நல்லவருமா...., இப்படி அபாண்டமா சொல்லாதீங்க”, அந்த வீட்டில் அவளை மகள்போல் வசந்தா நடத்துவதாலும், நந்தனும் அவளிடம் அவ்வாறே நடந்து கொள்வதாலும்...., விசுவாசத்தால் வாய் திறந்தாள்.

“ஓ ஹோ....., அப்போ, கோபத்தை மட்டும் என்கிட்டே காட்டுறார், மத்ததெல்லாம் உன்கிட்டதான் காட்டுறாரா...? அதான் இவ்வளவு வேகமா சப்போர்ட்டுக்கு வாறியா...?”, கீழ்த்தரமாகப் பேசிவிட்டாள்.

வள்ளி அழுதுகொண்டே ஓடிவிட, நந்தன் கோபத்தைக் கட்டுப் படுத்த முடியாமல்..., மீண்டும் அறையப் போனவன்...., வசந்தாவின் அதட்டலில் கையை கீழே போட்டான்.

“எல்லாம் அவங்க அவங்க ரூமுக்குப் போங்க...., ப்ரியா, இனிமேல் இப்படி நடக்காது.....”, தளர்ந்த குரலில் அவர் சொல்ல, அனைவரும் அங்கிருந்து நகர்ந்தார்கள். நந்தனைப் பார்த்து ஒரு வெற்றிச் சிரிப்பு சிரித்துவிட்டு ப்ரியா சென்றாள்.

நந்தன் தாயைப் பார்க்க, அவர் எதுவும் சொல்லாமல் அவர் அறைக்குச் சென்றார். நந்தனுக்கு அடுத்த மிகப் பெரிய அவமானம்..., காலையில் எப்படி மற்றவர் முகத்தில் விழிப்பது, அதுவும் வள்ளி..., ‘ஆண்டவா எனக்கு மட்டும் ஏன் இப்படியெல்லாம்....?’, இடிந்தே போனான் நந்தன்.

தளர்ந்த நடையுடன், அவன் அறைக்குச் சென்று முடங்கினான். காலையில் வெளியே வந்த அவனை வரவேற்றது வெறுமையான வீடு....., வேலைக்கார வள்ளி, தெய்வானை, சுப்பு... அனைவருமே வேலையை விட்டு நின்று விட்டிருந்தனர்.

எப்படியும் தாய்க்காகவாவது சமையல் செய்தாக வேண்டுமே...., ஏதோ கஞ்சி மட்டும் வைத்து அன்று சமாளித்தவன், அடுத்த நாளே சமையலுக்கு ஒரு ஆண் சமையல்காரரைப் போட்டுவிட்டான். அதன் பிறகு ப்ரியாவின் கொட்டம் இன்னும் அதிகரித்தது.

பகலிலும் இரவிலும் வீட்டில் இருக்காமல்....., வெளியே சுற்றத் துவங்கியிருந்தாள். இவை வெளிநாட்டுப் பயணத்தில் இருந்த நந்தனின் காதுகளை எட்டவே இல்லை. இன்று மாலைதான் வெளிநாட்டில் இருந்து வந்தவன், ஒரு மாதமாகக் காலெண்டர் கிழிக்காமல் இருக்கவே, அதைக் கிழிக்கும் வேளையில்தான் வெற்றிகரமான ஐந்தாம் மாத முடிவைக் கண்டான்.

ப்ரியாவின் செயல்கள் வெளியிலும் பரவத் துவங்க, குமார் அவளைக் கண்டிக்க முயன்றான். அவளோ...., நீ யார் என்னைக் கேட்க? என்று சொல்லிவிடவே, அவனாலும் எதுவும் செய்ய முடியவில்லை.

ஏற்கனவே அவளது அடாவடியால், சொந்தங்கள் விலகியிருக்க, வேலைக்காரர்கள் ஓடியிருக்க, இப்பொழுது குடும்பத்துக்கே ஒரு தலைக்குனிவு என்று சொல்லும்போது...., வசந்தாவால் தாங்க முடியவில்லை.

நந்தனை அழைத்து, ப்ரியாவை எதைச் செய்வதாக இருந்தாலும் வீட்டின் நான்கு சுவருக்குள் செய்யச் சொல்லவே, நந்தனும் வேறு வழியில்லாமல் அவளிடம் பேச முயன்றான். அன்று அவன் வந்திருப்பது கூடத் தெரியாமல்...., இரவு பன்னிரண்டைத் தாண்டி வீட்டுக்கு வரவே, அவளை அவளது அறையிலேயே சந்தித்தான்.

“என்ன.... உனக்கு வாங்கினது பத்தலையா...?”, இளக்காரமாகக் கேட்க, சுறு சுறுவென்று ஏறும் கோபத்தை, அடக்கி அமைதியாக அவளைப் பார்த்தான்.

அவளோ கண்களில் வழியும் அதே நக்கல், குரோதம், நையாண்டி...., கூடவே அலட்சியமாக அவனைப் பார்த்தாள்,

கூடவே கோபமும் கொப்பளித்தது. “நீ மனசுக்குள்ளே என்னதான் நினைச்சுட்டு இருக்க...?”, கட்டுப்படுத்தியக் கோபத்தோடு கேட்டான்.

“கண்டிப்பா உன்னை இல்லை.....”, எரிந்து விழுந்தாள்.

இந்தப் ப்ரியா புதிது....., அவளிடம் இந்தக் கோபம் அவ்வளவாக வெளிப்படாது..., மாறாக...., ஒரு அலட்சியம் தான் அதிகமாக இருக்கும். இதுவே அவன் சந்தேகத்தைக் கிளற, “இப்படி வெளியே போய் சுத்திட்டு வாறது, இதுவே கடைசியா இருக்கணும். இன்னொரு முறை இப்படிச் செய்தால், நான் மனுஷனாவே இருக்க மாட்டேன்”, சொல்லிவிட்டுச் சென்றான்.

“செஞ்சா என்னடா செய்வ.....? அன்னைக்கு செஞ்ச மாதிரி அறைஞ்சிடுவியோ...., எங்கே மீசை வச்ச ஆம்பளையா இருந்தால் அப்படிச் செய்யிடா பாப்போம்.....”, விரல் சொடுக்கி சவால் விட்டவள், நினைவு வந்தவளாக...., “ஹா....ஹா....ஹா....., அதான் உன் மீசையவே எடுக்க வச்சுட்டனே...., என்னமோ ரொம்ப கம்பீரமா இருந்தியாம் மீசையில....,

“உன் தங்கச்சி என்கிட்டேயே சொல்லுறா...., விடுவனா நான். வச்சேன் பாத்தியா உனக்கு ஆப்பு....., இனிமேல் நீ கண்ணாடியைப் பாக்கும் போதெல்லாம், என்கிட்டே தோத்துப் போனது உனக்கு ஞாபகம் வரணும்டா.....,

“இத்தனை நாள் ஏன் இதைச் சொல்லாமல் இருந்தேன்னு பாக்குறியா...? ஒண்ணு ஒண்ணாச் சொல்லணும்னுதான்...., இன்னும் உனக்கு, இதே மாதிரி ஷாக் கொடுக்க கைவசம் நிறைய விஷயம் இருக்கு....., ஹா...ஹா.....ஹா....”, நந்தனின் முகம் கறுத்துச் சிறுப்பதைப் பார்த்தவாறே...., கைகொட்டிச் சிரித்தாள். இறுதியில் நிற்க முடியாமல் தள்ளாடி...., மயங்கிச் சரிந்தாள் ப்ரியா. இதுவும் நடிப்பாக இருக்குமோ என ஒரு நிமிடம் தயங்கியவன், மனம் கேளாமல் அவள் அருகில்

நெருங்கினான். தண்ணீர் தெளித்தும் அவள் எழாமல் போகவே...., மருத்துவரை அழைத்தான். மருத்துவர் சொன்ன செய்தி, சந்தோஷத்தை அளித்ததா, துக்கத்தை அளித்ததா என்று பிரித்தறிய முடியவில்லை அவனால். ஆனாலும், ப்ரியா மேல் இதுவரை, கொஞ்சமாக எழத் துவங்கியிருந்த கோபம் ஓடி ஒளிந்து கொண்டது மட்டும் என்னவோ உண்மை.

***

தாகம் - 29.

உன் முகத்தில்

புன்னகையைக் காண

மீண்டும் மீண்டும்

நான் துன்பப் படவும்

தயார்.....

கண்ணன் அப்பா என்று சொல்லவே...., பயத்தில் கொஞ்சம் துடித்தவள், வேகமாக வெளியே வந்து எட்டிப் பார்க்க, அங்கே ஜீவாவைப் பார்த்த பிறகுதான் நிம்மதியாக மூச்சு விட்டாள். அதன் பிறகுதான் அவளது கவனம் கண்ணனிடம் சென்றது.

கண்ணன் மூர்ச்சையாகி விட்டானோ..., அவனிடம் அசைவில்லையே என்ற பதைப்பில் அவனைத் திரும்பிப் பார்க்க, கண்ணனோ ஜீவா, அஞ்சலியையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஜீவா, கணேஷ், தங்கம், ஹேமா அனைவரும் சேர்ந்து உரையாடிக் கொண்டிருக்க, அஞ்சலி ஜீவாவிடம் செய்யும் குறும்புகளை, அவன் கண்டுகொள்ளாமல்...., தங்கத்திடமே பேச்சில் கவனமாக இருக்க, அவன் முகத்தைத் திருப்பித் தன்னைப் பார்க்க வைத்து,

“அப்பா...., அஞ்சுப் பாப்பா ஒன் எளித்தா(எழுதிட்டா)....., பாதுங்க(பாருங்க)..., பாதுங்க....”, தன் கையை அவன் முகத்துக்கு நேராக நீட்டினாள்.

கோணலாக அவள் உள்ளங்கையில் பேனாவால் கிறுக்கி வைத்திருந்த வரிகளைக் கண்டவன், “ஹை.., என் அஞ்சுச் செல்லம் ரொம்ப அழகா எழுதுறாங்களே....”, அவள்

கன்னத்தில் அழுந்த முத்தமிட்டுச் சொல்ல, ஒரே குஷியாகிப் போனது அவளுக்கு.

மீண்டும் மீண்டும் எதை எதையோ எழுதி, கிறுக்கி, அவனிடம் ஒவ்வொன்றாகச் சொல்ல, அவளைப் பாராட்டும் விதமாக அவன் நடந்துகொண்ட செயல்கள் அனைத்தையும், ஒளிந்திருந்து ஏக்கமாகப் பார்த்துக் கொண்டிருந்தான் கண்ணன்.

திவ்யாவிற்கு, தான் எப்படி உணர்கிறோம் என்றே சொல்லத் தெரியவில்லை. கண்ணனின் பயம் கொஞ்சம் தெளிந்திருக்கிறதே என்று சந்தோசப் படுவதா? இல்லையென்றால் இப்படி அஞ்சலியை ஏக்கமாகப் பார்க்கிறானே என்று வருத்தப்படுவதா என்று தெரியவில்லை.

தான் வந்த சுவடு தெரியாமல், அங்கிருந்து நகர்ந்து விடுவோம் என்று எண்ணும் வேளையில், “கண்ணாம்மா....., அப்பா உதுப்பா...., கண்ணாப்பா....., நான் விளாத போதேன்(விளையாட போறேன்), உதுப்பா....”, அவன் கைகளில் இருந்து திமிறி இறங்கி ஓடினாள்.

வில்லில் இருந்து புறப்பட்ட அம்பாக, தன்னை நோக்கி ஓடி வந்த அஞ்சலியை, மறு கையில் ஏந்திக் கொண்டாள் திவ்யா. அவள் கன்னங்களில் முத்தமிட்டாள். அஞ்சலியும் திவ்யாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு...., முத்தமழை பொழிந்தாள்.

இந்த நெருக்கத்தை எதிர் பார்க்காத மற்றவர்கள்...., திகைத்தார்கள் என்றால்..., ஜீவா ஒருபடி அதிகமாக அதிர்ந்தான் என்றுதான் சொல்ல வேண்டும். நேற்று அஞ்சலி சொன்ன வரை, கண்ணனின் அப்பா ஒரு கடுமையானவன் என்ற பிம்பம் அவன் மனதில் பதிந்திருந்தது.

திவ்யா அம்மா வேண்டும் என்று அவள் சொன்ன பொழுது திகைப்பாகத்தான் இருந்தது. அது தொடரவே, அஞ்சலியை

எப்படி சமாளிப்பது என்று மலைப்பாக இருந்தது. ஆனால் இப்பொழுது இருக்கும் நிலையைப் பார்த்தால்.....

இது இப்படியேத் தொடர்ந்தால்....., அஞ்சலி திவ்யா வேண்டும் என்று அடம் பிடிக்கத் துவங்கினால்...., அது அவள் வாழ்வில் எப்படிப் பட்ட விளைவுகளை உருவாக்கும் என்று எண்ணி பயந்தான். அவர்கள் நெருக்கம் நல்லதல்ல என்று மனம் உரைக்க,

“அஞ்சும்மா....., அப்பா வீட்டுக்குக் கிளம்புறேன்...., வாறியா போகலாம்”, இருக்கையில் இருந்து எழுந்து கொண்டான்.

“நீ போ...., நான் கண்ணம்மா கூடதான் இதுப்பேன்..”, சலுகையாக திவ்யாவின் தோளில் படுத்துக் கொண்டாள்.

“அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்...., அப்பா ஐஸ்கிரீம் சாப்பிடப் போறேன்...., உனக்கு வேண்டாமா...?”, எப்படியாவது அவளை அழைத்துச் செல்லும் முனைப்பு அவனிடம்.

“எனக்கு நீ இங்கே வாங்கித்து வாங்க.....”, முடியாது போ என்ற பிடிவாதம் அஞ்சலியிடம்.

இவர்களின் பேச்சை, கண்ணன் கொஞ்சம் தயங்கித் தயங்கிப் பார்க்க, திவ்யாவோ மறந்தும் ஜீவா முகத்தைப் பார்க்கவில்லை. ஜீவாவும் அவளைப் பார்க்கவில்லை.

“இல்லடா செல்லம்....”, கொஞ்சியவாறு அவள் அருகில் நெருங்க, கண்ணனின் பயப் பார்வையும், திவ்யாவின் விறைக்கும் உடல் மொழியும் அவனை நெருங்க விடாமல் தடுத்தது. மனதுக்குள் சலித்தான் ஜீவா. ஆனால் அதை வெளியில் சொல்ல முடியவில்லை.

நின்ற இடத்திலேயே நின்று கொண்டான். “தம்பி...., நாம இன்னுமே பேசி முடிக்க வேண்டிய விஷயத்தை பேசி முடிக்கலை. உங்களுக்கு ஏதாவது அவசர வேலை இருக்கா என்ன? அஞ்சலி கண்ணனோட விளையாடட்டும்.

இப்போதானே வந்திருக்கா, கொஞ்ச நேரம் போனால் உங்க கிட்டே வந்துடுவா”, அவனுக்குச் சமாதானம் சொன்னார்.

அவரது பேச்சில் கொஞ்சம் தயக்கம் நீங்கி அமர்ந்தான். ஆனாலும் பார்வை அஞ்சலியை விட்டு அகலவில்லை. திவ்யாவோ, கண்ணனையும் அஞ்சலியையும் தூக்கிக் கொண்டு உள்ளே விரைந்தாள்.

கொஞ்ச நேரம் இருவரும் சேர்ந்து திவ்யாவின் மடியை விட்டு இறங்கவே இல்லை. அஞ்சலி சிறிது நேரத்தில் இறங்கி விளையாடத் துவங்கிவிட, கண்ணனும் திவ்யாவின் மடியை விட்டு விலகினான்.

அஞ்சலியிடம் கண்ணன் பழக முற்படுவது புரிய, மனதுக்குள் சந்தோஷ ஊற்று திவ்யாவிற்கு. விளையாட்டு சுவாரசியத்தில், அஞ்சலி மீண்டும் தன் தந்தையிடம் அதைப் பற்றி சொல்ல விரைய, அவள் பின்னாலேயே சுற்றிய கண்ணன், அவள் தந்தையின் அருகில் செல்லவே பின்தங்கி விட்டான்.

அவனுக்கு ஜீவா மேல் கொஞ்சமே கொஞ்சம் நம்பிக்கை வந்திருந்தாலும், அவனை நெருங்கும் தைரியம் வரவே இல்லை. விளையாடியதில் அவன் களைத்துப் போக, “அம்மா புவா.....”, கண்ணன் சட்டையை தூக்கி வயிற்றைக் காட்ட, சிரித்தவாறே அவனுக்கு பால் கலக்கிக் கொடுத்தாள் திவ்யா.

“அஞ்சலி எங்கேடா கண்ணா.....?”, அவளுக்கும் பால் கலக்கிவிட்டுக் கேட்க.....,

“ம்ம்..., அப்பா....., அவ....”, திகைப்பு, ஆச்சரியம், ஏதோ அதிசயத்தைக் கண்ட உணர்வில், கண்களை விரித்து, ‘அவளோட அப்பாகிட்டே போய்ட்டா’, என்பதை அவனுக்குத் தெரிந்த விதத்தில் சொன்னான்.

கண்ணன் ‘அப்பா’ என்ற சொல்லையே முன்பு பயத்தோடுதான் சொல்லுவான். இன்றுதான் அவன் அந்த வார்த்தையை பிரமிப்பாகச் சொல்வதைக் கண்டாள் திவ்யா. பிஞ்சு மனதில் எதுவும் சீக்கிரம் மறைந்துவிடும் என்பதைக் கண்கூடாகக் கண்டாள்.

அதிலும், புதிய பொம்மைக் கிடைத்தால், பழைய பொம்மையை மறந்துவிடுவதைப் போல, தன் அப்பா என்ற பிம்பத்தை, அஞ்சலியின் அப்பா என்ற பிம்பம் தோற்கடிப்பதை அவன் உணர்ந்ததை விட, திவ்யா சரியாக உணர்ந்து கொண்டாள்.

அஞ்சலி எவ்வாறு, தாய் இப்படி இருப்பாள் என்பது தெரியாமல் இருந்தாளோ, அதேபோல் கண்ணனும் இதுவரை, தந்தை என்பவன் எப்படி இருப்பான் என்று தெரியாமல் இருந்திருந்தான். இங்கே அதன் மறு உருவத்தைக் காணவே, அவனுக்கு வியப்பு.

அதைக் கிடப்பில் போட்டுவிட்டு, “அஞ்சலியைக் கூட்டிட்டு வாறியா..?”, மெதுவாகக் கேட்டாள். அங்கே அமர்ந்திருக்கும் அவர்கள் முன்பு, அதுவும் இரண்டு ஆண்கள் முன்பு வரவே அவளுக்குத் தயக்கமாக இருந்தது.

காலையிலேயே, தங்கம் ஹேமாவின் திருமண விஷயமாகப் பேச வருகிறார்கள் என்று சொன்ன பொழுது...., அவளுக்குத் தன் வாழ்த்துக்களைச் சொன்னவள், அவர்கள் முன்பு தான் வர மாட்டேன் என்பதை தயக்கமாகச் சொன்னாலும், அதில் ஒரு உறுதி இருந்தது.

அதனாலேயே அவர்கள் வந்த பொழுது, ஹேமாவோ, தங்கமோ அவளை அழைக்கவில்லை.

திவ்யாவிற்குமே பயம் தான்...., சில நேரம் கண்ணன் பயத்தில் அழத் துவங்கி விட்டால்...., எனவேதான், முடியுமா என்று கேட்டாள். கண்ணனும் கொஞ்சம் யோசித்தான்.

“அம்மா கண்ணா....., அவ...., அப்பா..., ம்....”, கொஞ்சம் யோசித்தாலும் சம்மதம் சொன்னான்.

வேகமாகச் சென்றவன், கதவின் பின்னால் இருந்து அவர்களை எட்டிப் பார்த்தான். வாசலில் ஒரு கண்ணும், பேச்சில் பாதி கண்ணுமாக இருந்த ஜீவா...., கண்ணன் எட்டிப் பார்க்கவே, மறுபடியும் ‘வா’ என்பதுபோல் தலையை அசைத்தான்.

அனைவரும் இந்தச் செயல்களைக் கண்டாலும் யாரும் எதுவும் சொல்லவில்லை. கண்ணனோ அங்கே நின்றுகொண்டே...., “வா...., வா....”, அஞ்சலியை அழைத்துக் கொண்டிருந்தான்.

“அஞ்சும்மா, கண்ணன் கூப்பிடுறான் பாரு..., போ....”, அவளை இறக்கி விட்டான். அவள் செல்லவே, “அப்போ நீங்க சொன்ன மாதிரியே செஞ்சுடலாம். ஆனா, கல்யாணத்தை ஒரு வருஷம் ஏன் தள்ளி வைக்கணும்னு சொல்லுறீங்க....?

“பொண்ணுக்கும் சம்மதம், பையனுக்கும் சம்மதம்...., ரெண்டு வீட்டுப் பக்கமும் எந்த எதிர்ப்பும் இல்லை. அப்படி இருக்கும்போது....?”, ஜீவாவிற்குப் புரியவே இல்லை. இதைத்தான் அவனும் கொஞ்ச நேரமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

ஆனால் அவனது பேச்சுக்கு யாரும் செவி சாய்ப்பதாக இல்லை. முடிவில், சரி நீங்க ஏதோ முடிவில் இருக்கீங்க...., உங்க விருப்பப் படியே ஒரு வருஷம் கழித்தே திருமணத்தை வைக்கலாம்”, என்று சொல்லி முடித்து விட்டான்.

அதன் பிறகு, எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு நான் போய்ட்டு ஒரு மணி நேரத்தில் வந்து விடுகிறேன் என்று சொல்லிவிட்டு, அவர்களிடம் இருந்து விடைபெற்றுச் சென்றான்.

தங்கம், திருமணம் உறுதி செய்யப் பட்டதால்..., சாப்பிட்டு விட்டுத்தான் போகவேண்டும் என்று சொல்லவே, வேறு வழியில்லாமல் அவர்களோடு சேர்ந்து சாப்பிட அமர்ந்தான். அஞ்சலியையும் மடியில் வைத்துக் கொண்டான்.

அவளோ, “அப்பா வேணா...., நா(ன்) பால் குதிச்சேன்....., கண்ணம்மா தந்தாங்க....”, சொல்லிவிட்டு, அவன் இலையில் இருந்த காய்களை மட்டும் எடுத்து உண்டாள். திவ்யாவை அப்பொழுது அங்கே காணவில்லை.

கண்ணன் இங்கேயும் அங்கேயும் அலைவது ஜீவாவின் விழித் திரையில் விழுந்தது. ஹேமா கண்ணனை அழைக்க, அவளிடமும் வர மாட்டேன் என்று சொல்லிவிட்டு ஓடி விட்டான். தங்கமே அவர்கள் அனைவருக்கும் பரிமாறினார்.

ஹேமா திவ்யாவுடன் சாப்பிடுவதாகச் சொல்லவும் கணேஷ் கொஞ்சம் சுணங்கவே, அவனுக்கு அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்து அவனை மலரச் செய்தாள். “தேங்க்ஸ்...”, கணேஷ் இதழ் அசைவில் சொல்ல, “போதும்...”, என்று அவளும் கண்களைச் சுருக்கி இதழ் அசைவிலேயே பதில் கொடுக்க, கணேஷின் பார்வை சுவாரசியமாக அவள் இதழ்களில் பதிய,

‘உதை விழும்’, என்பதுபோல் அவள் அவனை உறுத்துப் பார்க்க, அவன் கன்னத்தை அவள் பக்கம் காட்ட, கையை ஓங்கி, அடித்து விடுவதுபோல் ஓங்க, சட்டென நகர்ந்து அமர்ந்து கொண்டான். இதைத் தங்கம், பார்த்தும் பார்க்காதவர் போன்று இருந்து கொண்டார்.

மகளது திருமணம் நடைபெறுமா இல்லையா என்ற கவலையில் இருந்தவருக்கு, ஹேமாவிற்குப் பிடித்த மணமகனும், அவர்களின் அன்னியோன்யமும், சீண்டலும், தங்கத்துக்கு திருப்தியையே அளித்தது.

ஜீவா கண்ணனைப் பார்ப்பதும், அஞ்சலிக்கு ஊட்டுவதுமாக இருக்க, இவர்களின் ஊடல்களைக் கவனித்தாலும், கருத்தில் பதிய வைக்கவில்லை. பின்னர்

சாப்பிட்டுவிட்டுக் கிளம்பிவிட்டான். அஞ்சலி வரவில்லை என்று சொல்லிவிடவே, அவளை அங்கேயே விட்டுச் சென்றான்.

கண்ணனும் அஞ்சலியும் சேர்ந்து விளையாட, தங்கம், தான் கொஞ்சம் ஓய்வெடுக்கச் செல்லுவதாகச் சொல்லிச் சென்றார். ஹேமாவும், கணேஷும் தனித்திருக்க, இருவரும் அஞ்சலி, கண்ணன் மேல் ஒரு கண்ணும், தங்கள் உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டும் இருந்தார்கள்.

திவ்யா அவள் அறையில் புகுந்துகொண்டாள். ஹேமா, கணேஷ் மொட்டை மாடிக்குச் சென்றார்கள். செல்லும் முன்னர் குழந்தைகளிடம் சொல்லவே, இருவரும் படிகளில் ஏறி விளையாடுவதும், ஓடுவதுமாக இருந்தார்கள்.

மொட்டை மாடியில் சிறிய பந்தல் போட்டிருக்கவே, வெயில் தெரியாமல் அங்கிருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்து கொண்டார்கள். கணேஷின் பார்வை, ஹேமாவை சிலிர்க்க வைத்துக் கொண்டிருந்தது.

ஹேமாவின் வெட்கம்...., கணேஷை இன்னும் கிறங்க வைத்தது. என்னவோ டீனேஜ் வயதில் இருக்கும் மாணவன்போல், காதல் உணர்வில் சிக்கிக் கொண்டு தடுமாறினான். ஹேமா இயல்பாக இருக்க முயன்று கொண்டிருந்தாள்.

பெஞ்சில் அவளை நெருங்கி அமர, அஞ்சலி அந்த நேரம் “ஓ...”, என்று கத்திக் கொண்டு, அவர்களைச் சுற்றி ஓடவே, வேகமாக நகர்ந்து உட்கார்ந்தான். அவனது செய்கையைப் பார்த்து, குலுங்கிச் சிரித்தாள் ஹேமா.

“ஹேய்.. நான் அவஸ்தைப்படுறது உனக்குக் கிண்டலா இருக்கா?”, போலியாகக் கோபப் பட்டான்.

“பின்ன.... ஒரு சின்னப் பிள்ளைக்கு இவ்வளவு பயப்பட்டால் என்னதான் செய்யிறது?”, சொல்லிவிட்டு இன்னும் சிரித்தாள்.

“ஹம்...., என்னவோ பதட்டமாவும் இருக்கு, பரவசமாவும் இருக்கு...., இந்த முப்பது வருஷத்தில் இப்படி எப்பவுமே உணர்ந்தது இல்லை. நான் இப்போ ரொம்பவே சந்தோசமா இருக்கேன் ஹேமா.....”, ஆத்மார்த்தமாக மனதில் இருப்பதைச் சொல்லி, அவள் கைகளை இறுகப் பற்றிக் கொண்டான்.

அவன் கைகளைப் பிடிக்கவே, பதட்டமாக உணர்ந்தாள் ஹேமா. அவன் அவனது உணர்வுகளை வார்த்தையில் வடித்துவிட, அவள் உணர்வுகளைச் சொல்ல வழியில்லாமல்...., தலை குனிந்தாள்.

அவளது வெட்கம்..., அவனுக்குள் இளமையின் உணர்வுகளை விதைக்க, இன்னும் அவளை நெருங்கி, அவள் முகத்தைக் கைகளில் ஏந்திக் கொண்டான். அவள் விழி மூடி இருக்க, தைரியமாக முன்னேறி....., அவள் இதழ்களில்...., தன் முதல் முத்திரையை அழுந்தப் பதித்தான்.

அவன் இதழ்கள், தன் நெற்றியில் பதியும் என்று அவள் நினைக்க, தன் இதழ்களில் அழுந்தப் புதைந்த அவன் இதழ்களின் ஸ்பரிசம் உணர்ந்து, ஒரு நொடி விதிர்த்துப் போனாள்.

அவனிடமிருந்து விலக முயல, அவன் பிடியோ உறுதியாக இருந்தது. அவன் இதழ்கள் செய்யும் மாய வித்தையில், அவளது எதிர்ப்பு அடங்க, அடுத்த நொடியே அவன் இதழ் ஸ்பரிசத்தில் கரைந்தாள்.

புதிதாகச் சுவைக்கும் இதழமுதம்....., முடிக்க முடியாமல் தவித்தார்கள் இருவரும். காலம் கடந்து தங்கள் உலகில் லயித்திருக்க, “பேத்(bad) பாய்.....”, என்ற அஞ்சலியின் குரலில் பதறி விலகினார் இருவரும்.

எதிரில் அஞ்சலியும் கண்ணனும் இவர்களையே பார்த்தவாறு, அசையாமல் நின்றிருந்தார்கள். ஹேமாவுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. கணேஷை முறைத்துப்

பார்க்க, அவனோ “ஞே..’, என விழித்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

இவனை நம்பிப் பிரயோஜனம் இல்லை என்ற முடிவுக்கு வந்த ஹேமா, எதையாவது சொல்லி சமாளிக்கலாம் என வாயைத் திறக்க, கணேஷோ அவசரமாக...., “அஞ்சும்மா...., ஹேமா ஆன்ட்டி வாயில்...., இல்ல கண்ணில் தூசி விழுந்துடுச்சா...., அதான் எடுத்துட்டு இருந்தேண்டா.....”, வேகமாகச் சொன்னான்.

அஞ்சலியோ....., “பேத்(bad) பாய்....., உம்மா குத்துத்து பொய் சொல்லுற.. கண்ணா நீ இவங்க கூத(கூட) சேதாத.... (சேராத)”, என்றாள்.

அவனைப் பேசாவிட்டால் இன்னும் சொதப்புவான் என்று தெரியவே...., “அஞ்சும்மா...., கண்ணா அம்மா எங்கேடா...., கண்ணாக்கு புவா ஊட்டினாங்களா? உங்களுக்கும் ஊட்டினாங்களா?”, பேச்சை அழகாக திசை திருப்பவே...., அஞ்சலியும் அதில் கலந்துகொண்டாள்.

அஞ்சலி சாதாரணமாக பேசத் துவங்கிய பிறகுதான்...., கணேஷுக்கு மூச்சே வந்தது. “நல்ல வேளை சமாளிச்ச...”, ஆசுவாசமாக மூச்சு விட்டான்.

“சின்னப் பிள்ளைகிட்டே பொய் சொல்லி மாட்டிக்கறீங்களே உங்களுக்கே இது நல்லா இருக்கா?”, ஹேமா குறும்பாகக் கேட்டாள்.

“ஆமா ஆமா..., இதுக்கு முன்னாடி இப்படி யாருக்காவது முத்தம் கொடுத்து மாட்டியிருந்தா, சரியாச் சொல்லியிருப்பேன்.... இங்கே, ஒரு பொண்ணை பாக்குறதுக்கே வழியைக் காணோம்..., இதில் பொய் சொல்லத் திறமை இல்லன்னு பட்டம் வேற. அப்போ, காதலிச்சா நிறைய பொய் சொல்லணுமோ?”, அவனது அதிமுக்கியமான சந்தேகத்தைக் கேட்டான்.

“ஐயாவுக்கு நினைப்புத்தான்...., அப்படி மட்டும் செய்ங்க... உங்களை வச்சுக்கறேன்...”, பொய்க்கோபம் கொண்டாள்.

“ஹேமா, அதான் உன்னை கட்டிக்கிறேன்னே சொல்லிட்டேனே..., நீயென்ன வச்சுக்குறதைப் பத்தி பேசுற..?”, அவன் கேட்கவும், அவன் தலையில் நறுக்கென அவள் குட்டவும் சரியாக இருந்தது.

“ஹேமா..., எதுக்கு இப்படிக் குட்டுற, வலிக்கிது. ஒரே ஒரு முத்தம் கொடுத்துட்டு, என்னவெல்லாம் வாங்கிக் கட்ட வேண்டியதா இருக்கு. ஒரு சின்னப் பொண்ணு, என்னை பேட் பாய்ங்குது, நீ என்னன்னா பொய் சொல்லுன்ற, குட்டுற, கடைசியா வச்சுக்கறேன்னு வேற சொல்லுற...”, அவன் சொல்லவே, வேகமாக அவன் வாயை, தன் கையால் மூடினாள்.

அவள் மூடிய விரல்களில் முத்தம் வைக்க, படக்கென எடுத்துக் கொண்டாள். “கணேஷ்...., நீங்க ரொம்ப மோசம்”, தலையைக் குனிந்தவாறே சொன்னாள்.

“இதுக்கே இப்படிச் சொன்னால்.....”, அவன் அதிர்ச்சியாகக் கேட்க, “நீங்க இப்படியே பேசிட்டு இருந்தீங்க..., எழுந்து கீழே போய்டுவேன்”, அவள் மிரட்டவே, அடங்கி அமர்ந்தான்.

“உன்கிட்டதான் இப்படியெல்லாம் பேசுறேன் ஹேமா..., நானா இப்படியெல்லாம் பேசுறேன்னு எனக்கே ஆச்சரியமா இருக்கு”, ஆத்மார்த்தமாகச் சொன்னான்.

அவன் கைகளை, தன் கைகளுக்குள் பொதிந்து கொண்டாள். பேச்சற்ற மோனநிலை அங்கே நிலவியது. பின்னர் குழந்தைகள் விளையாடத் துவங்கவே, பேச்சு திசை மாறியது. அந்த நேரம், ஜீவா அவர்கள் வீட்டுக்குள் வந்தான். குழந்தைகளின் சத்தம் மாடியில் கேட்கவே, அங்கே விரைந்தான்.

அதே நேரம், கணேஷ் திவ்யாவைப் பற்றி கேட்கவே, ஹேமாவும் சொல்லத் துவங்கினாள். அனைத்தையும் கேட்ட

ஜீவா துடி துடித்துப் போனான். அதிலும் கண்ணனை எண்ணிக் கலங்கியது அவன் உள்ளம்.

அந்த நேரம், அங்கே கண்ணனும் சரியாக வரவே, எதைப் பற்றியும் யோசிக்காமல், அவனைத் தாவி அணைக்க, “அம்மா....., இல்ல...., இல்ல..., விடு...., வேணா....”, கண்ணனின் அலறல் அனைவரையும் அங்கே இழுத்து வந்தது.

கண்ணன் அலறிய பிறகுதான் ஜீவாவும் கண்ணனின் நிலையை உணர்ந்தான். திவ்யா நொடியில் அங்கே விரைந்து, கண்ணனை அவன் கைகளில் இருந்து தூக்கிக் கொண்டாள். ஜீவா, எப்படிச் சொல்ல, எப்படி மன்னிப்பை யாசிக்க என்று தெரியாமல் தடுமாற,

அவனைத் திட்ட வாய் திறந்த திவ்யாவோ...., அவன் கண்களில் தெரிந்த தவிப்பை ஒரு நொடி உணர்ந்தவள், அங்கிருந்து வேகமாக நகர்ந்தாள்.

கண்ணனோ, திவ்யாவை ஒண்டிக் கொண்டாலும், அவள் தோள் வளைவில் இருந்து ஏறிட்டு ஜீவாவைப் பார்க்க, ஜீவாவின் கண்களில் தெரிந்த கண்ணீர்த் துளி, அவன் கண்களுக்குத் தப்பாமல் தெரிய, அவன் அழுவதை நிறுத்தி, கண் மறையும்வரை அவனைப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

கண்ணனின் மனதில் ஜீவாவிற்கு இடம் கிடைக்குமா????????

***

தாகம் - 30.

ஒரு தாயின் ஜனனம்

வலியிலே பெற்றெடுத்தேன்

உன்னை - என்

வலிகளை மறப்பதற்காக.....

ப்ரியா மயங்கியவுடன், துடித்துப் போன நந்து, மருத்துவரை அழைத்து வந்து காட்ட, அவர் சொன்ன வார்த்தைகளைக் கேட்டவன், திகைத்துப் போனான். அவர் சொல்வதை, நந்துவால் நம்பவே முடியவில்லை.

“டாக்டர் நீங்க நிஜமாத்தான் சொல்லுறீங்களா?”, தன் அதிர்ச்சியை மறையாமல் கேட்டான்.

“என்ன நந்தன் விளையாடுறீங்களா? அவங்க இப்போ, நாலு இல்ல ஐந்து மாதக் கருவோட இருக்காங்க. நீங்க என்னவோ விஷயமே இப்போதான் தெரியும்ங்கற அளவுக்கு ஷாக் கொடுக்குறீங்க. அவங்களை கவனிக்கிற லட்சணம் இதுதானா?

“அவங்க எப்போ சாப்டாங்க....? இது அவங்களோட பசி மயக்கம்.... உங்க கேள்வியிலேயே தெரியுது...., நீங்க எந்த அளவு அவங்களை கவனிக்கறீங்கன்னு. இனிமேலாவது கொஞ்சம் கவனமா பாத்துக்கோங்க. அவங்க ரொம்ப வீக்கா இருக்காங்க”, சொல்லிவிட்டு, சில மருந்துகளையும் எழுதிக் கொடுத்துவிட்டு, அதைத் தவறாமல் கொடுக்கச் சொல்லிவிட்டுச் சென்றார்.

நந்தனால் தன் உணர்வுகளை எப்படி வெளியிட என்றே தெரியவில்லை. அர்த்தமே இல்லாத இந்த வாழ்க்கைக்கு, இனிமேலாவது ஒரு அர்த்தம் கிடைக்குமா, என்று ஏங்கியது அவன் காதல் கொண்ட மனம்.

இந்தக் குழந்தைக்காகவாவது தன்னை ஏற்றுக் கொள்வாளா? முதலில் இந்தக் குழந்தையை ஏற்றுக் கொள்வாளா? கேள்விகள் படையெடுத்தாலும், தனக்கென்று ஒரு வாரிசு....., அதுவும், தனக்குப் பிடித்தவளின் மணி வயிற்றில் இருப்பதை எண்ணி, அவனால் சந்தோஷம் கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

உடனடியாக இந்த சந்தோஷச் செய்தியை அனைவருக்கும் அறிவிக்க வேண்டுமென்று உள்ளம் பரபரத்தது. அவள் பசியோடு இருக்கிறாள் என்ற செய்தி மூளையை எட்டவே, உற்சாகத் துள்ளலோடு...., கீழே இறங்கிச் சென்று, தாய்க்காக எப்பொழுதுமே தயாராக இருக்கும் ஆப்பிள் ஜூசை எடுத்துக் கொண்டு மாடியேறினான்.

அவள் அருகில் அமர்ந்து ஜூஸை ஒரு குழந்தைக்கு புகட்டுவது போல் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்தான். மயக்கத்தில் இருந்ததாலோ என்னவோ...., எந்த எதிர்ப்பும் இல்லாமல் குடித்து முடித்தாள்.

அவளைப் பார்த்தவாறே, ஸோபாவில் அமர்ந்து உறங்கிப் போனான் நந்தன். காலையில் கண் விழித்தவள்..., தன் அருகில் இருந்த தலையணையை எடுத்து அவன் முகத்தில் எறிந்தாள். நல்ல உறக்கத்தில், தன் முகத்தில் எதுவோ வந்து விழவே...., திடுக்கிட்டு விழித்தான் நந்தன்.

ப்ரியாவைப் பார்த்தவுடன்...., மற்றவை அனைத்தும் மறந்து போனது. “ப்ரியா...., தேங்க்ஸ்டா....., நான் எவ்வளவு சந்தோசமா இருக்கேன் தெரியுமா...? அதுவும், நான் அப்பா ஆகப் போவது தெரிஞ்சு, என்னால் சந்தோஷத்தை அடக்கவே முடியலை.

“உனக்கு என்ன வேணும்னு சொல்லுடா, இனிமேல் உடம்பை கவனிச்சுக்காமல் இருக்கக் கூடாது. வேளைக்குச் சாப்பிடணும். இல்ல இல்ல..., நானே உன்னை கவனிச்சுக்கறேன்.... என்மேல் எவ்வளவு கோபம்

இருந்தபோதும்....., என் பிள்ளையை நீ வச்சுருக்கதுலேயே தெரியுது உன்னோட பாசம்.

“கண்டிப்பா இந்தக் குழந்தை நம்ம வாழ்வில் ஒரு நல்ல மாற்றத்தை, திருப்பத்தைக் கொண்டு வரும்னு நான் நம்புறேன்”, சொல்லிக் கொண்டே போனான்.

அவனை..., “என்ன....? என்ன சொன்ன....?”, ப்ரியாவின் அதிர்ச்சிக் குரல் அவனைத் தடுத்தது.

“என்ன ப்ரியா.....? தயவு செய்து, உனக்கே தெரியாமல்தான் இந்தக் குழந்தையை வச்சு இருக்கேன்னு மட்டும் சொல்லிடாதே...”, எங்கே அப்படிச் சொல்லிவிடக் கூடாதே என்று தவிப்பாய்ச் சொன்னான்.

“நீ குடிச்ச மிச்ச எச்சிப் பாலைக் குடிச்சதுக்கே...., அதை வாந்தி எடுத்தவடா நான்...., இது..., இதை.... சீ...., அசிங்கம்...., இதைப்போய் நான்..... என் வயித்தில்...., இல்ல...., இனிமேல் ஒரு நிமிஷமும் இது என் வயித்தில் இருக்கக் கூடாது, இருக்க விட மாட்டேன்...”, வெறி பிடித்தவள்போல் கத்தும் அவளை, கையாலாகாத் தனத்துடன் வெறித்தான் நந்தன்.

தான், தன் காதலின் அடையாளம் என்றுக் கருதும் குழந்தை, அவளுக்கு அசிங்கமாகத் தெரிவதில் நொந்து போனான். எப்படி அவளைச் சமாதனப் படுத்தவென்று தெரியவில்லை. ஆனால், என்ன ஆனாலும், தனக்கு இந்தக் குழந்தை வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தான் நந்தன்.

ஒரே நாள் உறவில்..., தன் காதல் மொத்தமும் கொட்டித் தீர்த்த, தன் ஆண்மையின் அடையாளம்....., இந்தச் சமுதாயத்தில், ப்ரியாவால் தனக்கு ஏற்பட்டிருக்கும் அவமானத்தைத் துடைக்கக் கிடைத்திருக்கும் வாய்ப்பு, மிச்சமிருக்கும் தன் வாழ்க்கையை அழகாக்கப் போகும் குழந்தை.

அவளோடு பேசினால், அவளது கோபம் இன்னும் அதிகரிக்கவே செய்யும் என்பதை உணர்ந்தவன் அங்கிருந்து வெளியேறினான்.

இதுவரை அவள் கொடுத்த எவ்வளவோ துன்பங்களில் அவன் காயப் பட்டிருக்கிறான், அவமானப் பட்டிருக்கிறான், அசிங்கப் பட்டிருக்கிறான், ஆனால் கண் கலங்கியதே இல்லை. இன்று தன் குழந்தைக்கு என்ன ஆகுமோ...? அவளை அல்லது அவனை முழுதாகப் பார்ப்போமா என்ற ஏக்கம் அவனை அலைக்கழித்தது.

இந்த விஷயத்தை, தாயிடம் சொல்லியே ஆகவேண்டும் என்று தோன்றவே, தாயைத் தேடிச் சென்றான்.

மகன் இவ்வளவு காலையில் தன்னைத் தேடிவருவதால், குழப்பமாகவும், என்ன சொல்லப் போகிறானோ என்றக் கவலையுடனுமே அவனைப் பார்த்தார். தான் தந்தையாகப் போகும் விஷயத்தைச் சொன்னவன், மனம் கேளாமல் அவள் குழந்தையை அழிக்க வேண்டும் என்று சொல்வதையும் சேர்த்துச் சொல்ல, மாதங்கள் கடந்துவிட்டதால் அப்படி எதுவும் செய்ய முடியாது என்று அவனுக்குத் தைரியம் சொன்னார்.

அவருக்குமே இந்தச் செய்தி மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. எங்கே தன் மகனது வாரிசைப் பார்க்காமலே போய்விடுவோமோ என்று ஒவ்வொரு நாள் துடித்ததும், தவித்ததும், அந்தக் கடவுளுக்கும் அவருக்கும் மட்டுமே தெரியும்.

கலங்கி நிற்கும் தன் மகனுக்குத் தைரியம் சொல்லி, நந்தனை, அவர்களது குடும்ப மருத்துவரிடம், அவளை அழைத்துச் செல்லுமாறு சொன்னார். ப்ரியாவும் ஒரு முடிவோடு இருந்ததால், மறுப்பு எதுவும் தெரிவிக்காமல் அவனோடு சென்றாள்.

அவளது அமைதியே, ஏதோ எரிமலையைத் தாங்கியிருப்பதை உணர்ந்தவன், அதன் தாக்கத்தை

மருத்துவமனையிலேயே உணர்ந்தான். டாக்டர் புனிதா எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் தன் பிடிவாதத்தில் நிலைத்து நின்றாள் ப்ரியா.

“என்னம்மா ப்ரியா.... நான் இவ்வளவு சொல்லுறேன், கேட்க மாட்டேன்னு அடம் பிடிக்கிறியே....! உள்ளே இருக்கும் கரு, இப்போ ஒரு குழந்தையா மாறிடுச்சும்மா. அதை அழிக்க முடியாது. அப்படியே அழிக்கணும்னு முடிவு செய்தால், அது உன்னோட உயிருக்குதான் ஆபத்து”, பொறுமையாக எடுத்துச் சொன்னார்.

முகம் இறுக, இருந்த அவளது நிலையில் எந்த மாற்றமும் இருக்கவில்லை. “நான் செத்தாலும் பரவாயில்லை, எனக்கு இது வேண்டாம்....., சீ சீ...., அசிங்கம்....., அதுவும் இவனோட...., எனக்கு நினைக்கவே வாந்தி வருது....., முதல்லையே தெரிஞ்சிருந்தா இதை வளரவே விட்டிருக்க மாட்டேன்”, அவள் முகத்தில் தெரிந்த அருவருப்பில் செத்துக் கொண்டிருந்தான் நந்தன்.

‘இவளுக்கு, என்னோட இருந்ததே அசிங்கமா? இது தெரியாமல்தான் அன்று முழு இரவும் என்னோடு இருந்தாளா? அன்று தெரியவில்லையா இது அசிங்கம்னு? நெஞ்சில் கொஞ்சம் கூட ஈரமே இல்லாமல் இருக்காளே...’, மருத்துவரின் முன், தனக்கும் தன் ஆண்மைக்கும் நிகழும் தலைக் குனிவை, மென்று முழுங்கிக் கொண்டிருந்தான்.

“ப்ரியா...., முழுசா ஐஞ்சு மாசம் முடிஞ்சிடுச்சு. இதுக்கும் மேல செய்யணும்னா...., அது கொலை செய்யிறதுக்கு சமம்...., அதைவிட, நீ தற்கொலை செய்துக்கிறதுக்கும் இதுக்கும், எந்த வித்தியாசமும் இருக்காது”, புனிதாவின் குரலிலும் இப்பொழுது கோபம்.

“எனக்கு அதைப்பற்றி கவலை இல்லை. எனக்கு வாழணும்னு எந்த ஆசையும் இல்லை. என் வயித்துக்குள்ளேயே, இந்தக் குழந்தையை, துண்டு துண்டா வெட்டியாவது வெளியே எடுத்துடுங்க. இது என்

வயித்துக்குள்ளே இருக்குறது...., ஏதோ அசிங்கத்தை வச்சுட்டு இருக்க மாதிரி அருவருப்பா இருக்கு.

“எனக்கு இது வேண்டாம் வேண்டாம் வேண்டாம்.....”, காட்டுக் கூச்சல் போட்டாள்.

“உன்னை மாதிரி ஒரு பொண்ணை நான் பாத்ததே இல்லை....., இங்கே என்கிட்டே எவ்வளவுபேர் பிள்ளை இல்லாமல் வாறாங்க தெரியுமா? அந்தக் கவலை உனக்கு வராமல், கடவுள் உனக்கொரு குழந்தையைக் கொடுத்தால், இப்படியா செய்வ...? அதுவும் அது ஒரு உயிர், உன்னோட குழந்தை, அதைப்போய்...., வேண்டாம் ப்ரியா இன்னும் நாலே மாசம், உனக்கு அதுவும் முடியலையா, இன்னும் மூணு மாசம்....,

“அது முடிஞ்ச உடனேயே சிசேரியன் செய்து குழந்தையை வெளியே எடுத்துடுறேன். இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக்கோ...”, மனித உயிரின் மதிப்பு தெரிந்த அவர், தன் நிலையையும் மறந்து, தனது நண்பனுக்காக, ப்ரியாவிடம் தணிந்து கேட்டார்.

ஆனாலும், அவள் முடிவில் எந்த மாற்றமும் இருக்கவில்லை...., “எனக்கு ஒரு ரெண்டு நாள் டைம் தாங்க....”, இயந்திர கதியில் சொல்லிவிட்டு, எழுந்து சென்றுவிட்டாள். நந்தன் சோகமாக ஒரு சிரிப்பை புனிதாவிடம் சிந்திவிட்டு, அவள் பின்னால் தன் வாரிசைக் காப்பாற்ற ஓடினான்.

அன்று முதல், அவளைக் கண்காணிப்பதே நந்தனின் முழு நேரப் பணியானது. வேண்டுமென்றே, நந்தனின் உடற்பயிற்சி இயந்திரத்தில் ஓடுவது, படுக்கையில் குப்புறப் படுத்துக் கொள்வது, இவை எல்லாம் விட உச்சகட்டம், கத்தியை எடுத்துத் தன் வயிற்றில் குத்திக் கொள்ளப் பார்த்தது, என அனைத்து பயித்தியக்காரத் தனத்தில் இருந்தும், அவளையும், தன் வாரிசையும் காப்பதே அவன் வேலை ஆனது .

இரவும் பகலும் அவளை விட்டு விலகாமல் அடை காத்தான். அவனது அவசரத் தேவைகளுக்குக் கூட, நகர முடியாமல், எங்கே, தான் அந்தப் பக்கம் போனவுடன் எதையாவது செய்துகொள்வாளோ என்று பயந்து, அவள் ஆழ்ந்து உறங்கும் நேரத்தில், அதை வைத்துக் கொண்டான்.

கூடவே, அவளது சுடு சொற்கள், கேவலமான பேச்சுக்கள், அசட்டையான பார்வைகள், நாயைவிடக் கேவலமாக அவள் தன்னை நடத்துவது, அவள் ப்ரெஷ் செய்யக் கூட எழுந்து செல்லாமல், அவனை வைத்தே வேலை வாங்கினாள்.

அவனது இந்தச் செய்கைகளே, அவள் முடிவை மாற்ற வைத்தது. அவனை விரலசைவில் ஆட்டி வைப்பது அவளுக்குப் பிடித்திருந்தது. எங்கே எதையாவது பேசினால், தவறான முடிவிற்கு வந்துவிடுவாளோ என்று பயந்தே, வாயைத் திறப்பதே இல்லை நந்தன்.

அவள் ப்ரெஷ் செய்வது துவங்கி....., சாப்பாடு ஊட்டுவது, குளிக்க ஹீட்டர் போடுவது, அவள் தலை முடியைக் காய வைப்பது, அவளுக்கு உடை உடுத்துவது, இரவில் ஏசி குளிர் பிடிக்கவில்லை, எனக்கு நீ காற்று விசுறு என்று சொல்லி அவனைத் தூங்க விடாமல் தனக்கு வெண்சாமரம் வீச வைப்பதுவரை....

அவன் ஒரு ஆண்மகன் என்பதையும் மறந்து, அடிமை நிலையிலேயே அவனை நடத்தினாள். ஒவ்வொருநாளும் ஒரு யுகமாகக் கழிந்தது நந்துவுக்கு. அவள் பாதம் பிடித்துவிட்டு அவளை உறங்க வைப்பதுவரை அவன் செய்யத் தயார்தான்.....

ஆனால்....., அவன் செய்யும் ஒவ்வொரு செயல்களின் போதும் ஒரு விதமான மன அழுத்தத்துக்கு ஆளானான் நந்தன்.பாசத்தில் செய்யும் எந்தக் கடினமான வேலையிலும் ஒரு அலுப்போ சலிப்போ தெரியாது. ஆனால் கட்டாயப்படுத்திச் செய்ய வைக்கும் செயலில் வெறுப்பே வளரும்.....

அந்த வெறுப்பையும், தன் குழந்தைக்காகச் சகித்துக் கொண்டான். நந்தனின் இந்தச் செயல்களைப் பார்த்து, வசந்தா அறையை விட்டு வெளியே வருவதையே சுத்தமாக நிறுத்தி விட்டார். வேலைக்காரனோ, சமையலறையை விட்டு வெளியே வருவதே இல்லை.

இப்படியாக நாட்கள் கழிய, நந்தனின் வாரிசு வெளியே வரும் வேளையும் வந்தது. பிரசவ வலியில் அவள் துடிக்கும் வேளையிலும், நந்தனை நிந்தித்த வார்த்தைகள்தான் அதிகம்....., பிரசவ அறையில் அவள் நந்தனைப் பேசிய பேச்சுக்களைக் கேட்ட அவன்....., இப்படியே தான் செத்துவிட மாட்டோமா என்று ஒடுங்கிப் போனான்.

“என் வயித்தைக் கீறி அதை வெளியே எடுத்துப் போடுங்க...., என்னால் இந்த வலியைத் தாங்கிக்க முடியலை....”, என்று அவள் அந்தக் கட்டிடமே அதிரும் அளவில் ஓலமிட, நந்தன் தன் உயிரைக் கண்களில் மட்டுமே தாங்கியவாறு, சிலையென வெளியே நின்றிருந்தான்.

செவிலிகள் அனைவரும், மருத்துவரும் நந்தனுக்காகப் பரிதாபப் பட்டார்கள். அவர்களது அந்தப் பரிதாபம் கூட, வேதனையை அளித்தது அவனுக்கு. ஒரு வழியாக, ப்ரியாவின் வாயிலிருந்து, நந்தனுக்குச் சில பல சாபங்களை வாங்கிக் கொடுத்துவிட்டு, இந்த பூமிக்கு வந்து பிறந்தாள் அவனது செல்வ மகள்.

அந்தக் குழந்தையின் முகத்தைக் கூட, பார்க்க மறுத்துவிட்டாள் ப்ரியா. “சீ....சீ...., அதை என்கிட்டே கொண்டு வராதீங்க...., வெளியே நிக்கானே அவன்கிட்டே கொடுத்துடுங்க...., எனக்கு அதோட முகத்தைக் கூடப் பாக்க வேண்டாம்..”, கண்களை இறுக மூடிக் கொண்டு, இடக்கையால் அவள் விரட்டிய விதமே...., நந்தனின் வாழ்வு, அடுத்தப் போராட்டத்துக்கு தயாராகி விட்டதை உணர்த்தியது.

***

தாகம் - 31.

பாலை நிலத்தில் கிடைத்த

ஒரு துளியாய்.....

எனக்கு உன் நேசம்.....

திவ்யா, கதறியழுத கண்ணனைத் தூக்கிக் கொண்டு அவள் அறைக்கு விரைந்துவிட, அங்கே சங்கடமான அமைதி நிலவியது. ஹேமா, எப்படி நிலைமையை சமாளிக்க என்று கணேஷைப் பார்க்க, அவனும் அதே நிலையில்தான் நின்று கொண்டிருந்தான்.

“சாரி நான் கண்ணனை....., ஏதோ வேகத்தில்....”, எப்படிச் சொல்லவென்று தெரியாமல் மென்று முழுங்கினான் ஜீவா.

“நீங்க எதுக்குண்ணா சாரி கேக்குறீங்க...? கண்ணன் கொஞ்சம் இப்படித்தான் நடந்துப்பான், அது எங்க எல்லாருக்குமே தெரியும். உங்களுக்குத் தெரியாது அதான் இப்படி எமோஷன் ஆகுறீங்க. அதெல்லாம் இன்னும் கொஞ்ச நேரத்தில் சமாதானம் ஆயிடுவான்”, ஆதரவாகச் சொன்னாள் ஹேமா.

சரி என்பதுபோல் தலையை ஆட்டிவிட்டு, “நான் கிளம்புறேன்..., அஞ்சலி எங்கே...?”, எனக் கேட்க,

“அவ திவ்யாவோடதான் இருப்பா...., அவளுக்கு திவ்யான்னா உயிர். எப்போதும் அவ கூடவே இருக்கணும்னு ஒரே அடம். இருங்க... நான் போய் கூட்டி வாறேன்”, வேகமாக திவ்யாவின் அறைக்கு விரைந்தாள்.

அங்கே அவள் கண்ட காட்சியில் மெய் மறந்து நின்றுவிட்டாள். திவ்யா எங்கே என்று கண்கள் துழாவ, கட்டிலில் அமர்ந்தவாறு அவளும் ஹேமா பார்த்த திக்கிலேதான் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஆனால் கண்ணனோ, அஞ்சலியோ இவர்கள் இருவரையும் கவனிக்கவே இல்லை. அஞ்சலி கண்ணனிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

“ஏ கண்ணா அழுத...? எங்க அப்பா தொம்ப நல்லவங்க..., நாம அழுதா அப்பாவும் அழுவாங்க. நாம சிதிச்சா அப்பா உம்மா குதுப்பாங்க. நீ அப்பாத்த வாதியா?அப்பா பாவமில்ல”, தான் அழுதால், ஜீவாவும் அழுவதுபோல் நடிப்பதை, அந்த பிஞ்சு உள்ளம் அப்படியே நம்பியிருந்தது.

அந்த நம்பிக்கையை, கண்ணனுக்குக் கடத்த முயன்றாள். ஆனால் கண்ணனோ..., “அப்பா.... இல்ல...., அடி..., கிட்ட..., ம்ஹூ.....”, மிரட்சியான பார்வையுடன். “இல்ல நான் அப்பாகிட்டே வரமாட்டேன் வந்தால் அடிப்பாங்க”, என்று கைகளை உதறி நடுங்கினான்.

“என் அப்பா அதிக்க மாத்தாங்க...., இப்போ கூத கண்ணனை தூக்கி வச்சுகித்தாங்க. நீதா அழுத...., அப்பா பாவம்...., நீ வா....”, எப்படியாவது அவனைச் சமாதானப் படுத்தித் தந்தையிடம் அழைத்துச் செல்லும் முனைப்பைக் காட்டினாள்.

அஞ்சலி சொல்வதில் இருந்த உண்மை புரிந்தாலும்...., பிறந்தது முதல் அவன் அனுபவித்த ஆணின் ஸ்பரிசம் எப்பொழுதும் அவனை கலங்கடித்தே பழகி இருந்ததால், மலையளவு தயக்கம் அவன் முகத்தில்.

“இல்ல...., வேணா..., அடி.., ம்ஹும்....”, இப்பொழுது அவனது மறுப்பில் பாதி தயக்கமும் கலந்திருந்தது.

“எ (ன்) அப்பா அதிக்க மாத்தாங்க...., நீ வத மாத்தியா..? அஞ்சு பாப்பா கோபமா இருக்கா. கண்ணா கூத பேச மாத்தா...”, கைகளை கட்டிக் கொண்டு, கண்ணனுக்கு முதுகு காட்டி அமர்ந்து கொண்டாள். இதுவரை சாதாரணமாகப் பார்த்த திவ்யாவும் ஹேமாவும், அடுத்து கண்ணன் என்ன செய்வான் என்ற பதைப்பில் அவனைப் பார்த்தவாறு இருந்தார்கள்.

கண்ணனுக்கோ இந்த மாதிரிச் செய்கைகள், விளையாட்டுக்கள் புதிது. திவ்யாவும் அவனைப் பூப்போல் பார்த்துக் கொள்வாளே தவிர, அவனது குட்டி உலகத்துக்குள் அவளால் போக முடிந்ததே இல்லை. அதற்குக் காரணமும் அவளது சூழ்நிலையாக இருக்கலாம்.

கண்ணனுக்கு அழுகை வரும்போல் இருந்தது. அதுவும், அஞ்சலி அவனிடம் பேசமாட்டேன் என்று சொல்லிவிடவே, தனது ஒரேயொரு விளையாட்டுத் தோழியும், எங்கே பிரிந்து விடுவாளோ என்ற ஏக்கம் அவனுக்கு எழ, “நா..., வாறே(ன்)....”, மெல்லிதாகச் சொன்னான்.

கண்ணன் இந்த வார்த்தையை உதிர்த்த பிறகுதான் ஹேமா மூச்சே விட்டாள் என்றால்...., திவ்யாவோ மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டாள். இது எதற்கான அறிகுறியென்று அவளுக்குத் தெரியவில்லை. ஆனாலும் தன் மகன் சாதாரண மனநிலைக்கு மாறுவதில் மகிழாமல் இருக்க முடியவில்லை.

அங்கே அஞ்சலியோ, கண்ணனைக் கரம் பிடித்து அழைத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறினாள். ஹேமா எதுவும் சொல்லாமல் ஒதுங்கிக் கொள்ள, ஜீவா இருந்த இடத்துக்கு அடிமேல் அடி வைத்துச் சென்றார்கள் இருவரும்.

திவ்யா விளையப் போகும் விபரீதம் அறிந்து கண்ணனை தடுக்க விரைய, ஹேமா அவளைத் தடுத்தாள். “ஹேமா... அன்னைக்கே பாத்தல்ல..., இப்போ அவர் தூக்கினால் கண்ணனுக்கு மறுபடியும் பிட்ஸ் வந்துடும்....”, பதைப்பாகச் சொன்னாள்.

“திவ்யா, அதெல்லாம் எதுவும் ஆகாது....., அதான் அவனோட, அஞ்சலி இருக்காளே. என்ன நடக்குதுன்னு கொஞ்சம் ஒதுங்கி இருந்து பார்க்கலாம். நீ கண்ணனைப் பற்றிச் சொன்ன பிறகுதான், ஹாஸ்பிட்டல் பத்தியே ஞாபகம் வருது. கொஞ்சம் இரு இதோ வாறேன்...”,

சொல்லிவிட்டு, அவளது கேள்விகளை எதிர்நோக்கக் காத்திருக்காமல், அறைக்குச் சென்றாள்.

கண்ணனோ அஞ்சலியின் கரங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டே பாதி தூரம் வந்தவன், மீதி தூரத்துக்கு நடக்க மாட்டேன் என்று அடிமேல் அடி வைத்து நகர்ந்தான். அவனது தயக்கத்தை அஞ்சலி கண்டுகொள்ளவே இல்லை.

இருவரையும் பார்த்த ஜீவா, கண்ணனின் தயக்கத்தை உணர்ந்து கொண்டான். “அஞ்சும்மா...., கண்ணாவை விட்டுடு...., அவனே அப்பா கிட்டே வரும்போது வரட்டும். இப்போ அவனை இழுக்காதே.... நாம வீட்டுக்குப் போகலாமா...?”, கண்ணனின் தயக்கம் உணர்ந்து, அஞ்சலி அவனைக் கட்டாயப் படுத்துவதை தவிர்த்தான்.

அதே நேரம், கண்ணனைப் பார்த்து பளீர் புன்னகைப் பூக்கவும் மறக்கவில்லை. இப்பொழுது கண்ணன் பயந்து ஓடவில்லை. அதே நேரம் அவனை நெருங்கவும் முயலவில்லை. நின்ற இடத்திலேயே நின்றான்.

திவ்யா அவனை அழைக்கப் போகையில், ஹேமா அவனைத் தூக்கிக் கொண்டு, ஜீவாவின் அருகில் சென்றாள். “அண்ணா...., அன்னைக்கு, கண்ணனுக்கு வேண்டி நீங்க ஹாஸ்பிட்டல்ல ஐந்தாயிரம் ரூபாய் பே பண்ணி இருக்கீங்க. ஆனால் அங்கே எங்களுக்கு ஆயிரம் ரூபாய்தான் ஆச்சு.

அன்னைக்கே, உங்ககிட்டே கொடுக்கணும்னு நினைச்சேன், மறந்தே போயிட்டேன். கண்ணா...., அஞ்சு அப்பாதான் உனக்கு ஹாஸ்பிட்டலுக்கு பில் பே பண்ணினாங்க. எங்கே தேங்க்ஸ் சொல்லு பாப்போம்”, அவனையும் பேச்சுக்குள் இழுக்கப் பார்த்தாள்.

கண்ணனோ அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவனைப் பார்க்கக் கூட மாட்டேன் என்பதுபோல் அவள் தோள் வளைவில் புதைந்து கொண்டான். ஜீவா அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. “அன்னைக்கு அது

என்னோட தப்பு..., அதான் நான் பே பண்ணினேன். அது மட்டும் இல்லை, அவசரத்தில், நீங்க பணம் எல்லாம் கொண்டு வரலன்னு எனக்குத் தெரியும்.

அதோட, இது என் கடமையும் கூட. அதனால் இந்த மீதிப் பணம் எனக்கு வேண்டாம். நீங்க ஸ்கூல்ல எதுக்காவது யூஸ் பண்ணிக்கோங்க. அப்போ நாங்க கிளம்புறோம். வாறேன் கண்ணா. உங்க அம்மா கிட்டேயும் சொல்லிடுங்க", சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

தங்கமும் அந்த நேரம் எழுந்து வந்து, அவனை வழியனுப்பி வைத்தார். கணேஷ் ஹேமாவின் செய்கையை, மெச்சுதல் பார்வை பார்த்தவாறே விடைபெற்றுச் சென்றான்.

அதன் பிறகு வந்த நாட்கள் ராக்கெட் வேகத்தில் பறந்தன. காலத்தின் ஓட்டம் தெரியாத அளவிற்கு ஓடினார்கள். ஜீவா தொழிலை முன்னேற்ற, அதன் பின்னல் ஓடினான். பகல் இரவு பாராமல்...., நாளுக்கு இருபத்திநாலு மணிநேரம் போதாமல் திண்டாடினான்.

கணேஷ், அவனுக்குப் பக்க பலமாக இருந்தான். ஒன்றரைக் கோடி ரூபாய் அவன் கொடுக்க, இந்தப் பணம் எப்படி வந்தது என்ற கேள்விக்கு, அவன் பதில் சொல்லவே இல்லை. சரி, அவனுக்கு வட்டியோடு அதைத் திருப்பிக் கொடுத்துவிடலாம் என்ற எண்ணத்தில் அவனும் அதைக் கேட்கவில்லை.

காலையிலும் மாலையிலும் அஞ்சலியைப் பள்ளியில் விட, அழைத்துச் செல்ல, சரியாக வந்துவிடுவார்கள் ஜீவாவும், கணேஷும். கணேஷ் ஹேமாவிடம் நேரம் செலவழிக்கவேண்டி..., ஒரு அரைமணி நேரம் அங்கே அமர்ந்திருப்பான் ஜீவா.

அன்றைய முழு நாளில் அதுதான் அவனது ஓய்வு நேரம்....., அஞ்சலியும் கண்ணனும் அவன் கண் பார்வையில் விளையாடுவார்கள். அஞ்சலி ஜீவாவின்மீது ஏறி

விளையாடினால்..., கண்ணன் ஓரமாக நின்று வேடிக்கப் பார்ப்பான்.

ஜீவாவோ அதைக் கண்டும் காணாதவன் போன்று, அஞ்சலியை மேலே தூக்கிப் போட்டுப் பிடிப்பதும், ஓடவிட்டுப் பிடிப்பதும், இப்படியாக அந்த அரைமணி நேரமும், கண்ணனை எப்படிக் கவர்வது என்ற யோசனையோடே கழிப்பான்.

அஞ்சலி, கண்ணனையும் கூட்டிக் கொண்டு சில நேரம் ஓடுவாள். அப்படி ஓடும் வேளையிலும் கண்ணனைத் தொடுவதை நாசூக்காக தவிர்த்து விடுவான். "என்னால் ஓட முடியலையே...., அப்பா டயர்ட் ஆயிட்டேன்..., எனப் பல விதமாகச் சொல்லி அமர்ந்து விடுவான்.

திவ்யாவும் இவை அனைத்தையும் கண்டாலும் எதுவும் சொல்லாமல் விலகி விடுவாள். அப்படித்தான் ஒரு நாள் ஜீவா, வந்தவன், அவர்களோடு ஒரு ஐந்து நிமிடம் விளையாடினான். அதன் பிறகு, அவன், உடல் அசதியில், அந்த சிமெண்ட் பெஞ்சில் சாய்ந்தவாறே உறங்கிப் போனதைப் பார்த்தாள்.

மேலே போட்டிருந்த கோட் கழட்டி வைக்கப் பட்டிருக்க, டை ஒழுங்கற்று அவன் கழுத்தைச் சுற்றிக் கிடக்க, மாலைக் காற்றுக்கு அவன் முடி அசைந்தாட, கையை நாடியில் முட்டுக் கொடுத்து அவன் உறங்கிய விதம்....., அவன் முகத்தில் தெரிந்த களைப்பு..., அந்த நேரம் ஞாபம் வந்த அவனது கதை...., அனாதரவாக அவன் இருந்த இந்தத் தனிமை...., என ஏதோ ஒன்று திவ்யாவை அங்கேயே கட்டிப் போட்டது.

ஜன்னல் கம்பிகளைப் பிடித்தவாறு அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். திடீரென அவன் முகம், வளர்ந்த கண்ணனின் முகமாகத் தெரிய, அவன் தனிமையைப் போக்கவேண்டும், அவனை மடி தாங்கவேண்டும் என்ற எண்ணம் எழவே, விதிர்த்து அங்கிருந்து விலகினாள்.

அதன் பிறகு இப்படி ஒரு எண்ணம் மனதில் எழாதவாறு அதை இறுக்கிக் கொண்டாள்.

ஜீவா, தொழிலில் கவனம் செலுத்தவே, அஞ்சலியை வீட்டில் தனியாக விட முடியாது என்று சொல்லி, கணேஷ் ஹேமாவின் வசம் ஒப்படைக்க, அதுவும், திவ்யா, ஜீவாவைப் பார்க்க பெரிய வாய்ப்பாக அமைந்தது.

வீட்டினுள் எங்கே இருந்தாலும், அவன் வருவதை, அவனது காரின் ஓசையை வைத்தே கண்டு பிடித்துவிடுவான் கண்ணன். கண்ணனின் நடத்தையில் சட்டென ஒரு பரபரப்பு தொற்றிக் கொள்ளும். எப்பொழுதுமே ஆண் குழந்தைகளுக்கு, அவர்களது அப்பா ரோல் மாடலாக இருப்பார்.

கண்ணனுக்கு , அந்த இடத்தை ஜீவா பிடித்துக் கொண்டான். ஜீவா எதையாவது தீவிரமாகச் சிந்திக்கும் பொழுது, அவனது மீசையற்ற மேவாயைத் தடவியவாறே யோசிப்பான். கண்ணனும் சில வேளைகளில் கண்ணாடியில் நின்று அந்த செயலைச் செய்து பார்ப்பான்.

கண்ணனின் இந்தச் செய்கையைப் பார்க்கும் போது, திவ்யாவின் முகத்தில் சிறு மின்னல் வந்து போகும். அதற்குக் காரணம், அவன் அவனது தந்தையின் நடத்தையை பற்றிக் கொள்ளாததனால் வந்த சந்தோஷம்.

இவ்வளவு நாள் ஆன பிறகும், ஜீவா திவ்யாவிடம் நேரடியாக ஒரு வார்த்தை கூடப் பேசியது இல்லை. ஆனால் அவளை ஆழ்ந்து கண்காணித்து இருக்கிறான். அஞ்சலியையும், கண்ணனையும் அவள் பார்க்கும் பார்வையில், ஒரு சின்ன வேறுபாட்டைக் கூட அவன் உணர்ந்தது இல்லை.

அஞ்சலி அவளை கண்ணம்மா என்று அழைப்பதைக் கூட அவள் தடுத்தது இல்லை என்பதை, அவன் அறிந்தே இருந்தான். அவள் அனுபவித்த துன்பங்களைக் கேட்ட

பிறகு...., அவள், தனது சிறு நடத்தையால் கூட காயப் பட்டுவிடக் கூடாது என்பதில் அதிக கவனமாக இருந்தான்.

அவளுக்குத் தன்னைப் பார்த்தாலே...., சிறு பதட்டம் வருவதை உணர்ந்தவன், முடிந்த அளவு அவள் கண்பார்வையில் இருந்து மறைந்தே இருக்க முயன்றான். தன் வருகையை....., அஞ்சலி என்ற சத்தத்தோடு அவளுக்கு அறிவித்து விடுவான்.... ஆனால் திவ்யாவிற்கோ அவன் காலடி ஓசை கூட மனப்பாடம் என்பது அவன் அறிந்திருக்க நியாயம் இல்லை.

அஞ்சலி, திவ்யா இல்லாமல் இருக்கவே முடியாது என்ற நிலைமைக்கு வந்து விட்டிருந்தாள். மாதத்தில் இருபத்து ஐந்துநாட்கள், இரவிலும் அவள் திவ்யாவுடனே இருக்க, மீதமிருக்கும் ஐந்து நாளில் அவள் ஜீவாவுடன் இருந்தாலும், திவ்யாவும் கண்ணனும் வேண்டும் என்று அடம் பிடித்து அழும் அவளைச் சமாதானம் செய்ய முடியாமல் திண்டாடினான் ஜீவா.

கண்ணனின் நடத்தையில் மிகப்பெரிய மாறுதலே வந்திருக்கிறது என்பதை, திவ்யா உணரும்படி, அன்று ஒரு சம்பவம் நடந்தது. வழக்கம்போல் ஜீவா அஞ்சலியைக் காண வந்தான். வந்தவன் பயங்கரச் சோர்வாக இருந்ததால்..., நீங்க விளையாடுங்க, அப்பா இங்கே படுத்துக்கறேன்", என்று சொல்லிப் படுத்துவிட்டான்.

அன்று ஜீவாவை, வளர்ந்த கண்ணனாகக் கற்பனை செய்து பார்த்த பிறகு, திவ்யாவால் ஜீவாவை கவனிக்காமல் இருக்க முடியவில்லை. ஏதோ ஒரு சக்தி, தன்னை அவனை நோக்கி இழுப்பதை உணர்ந்தாள்.

அன்றும் ஜன்னல் வழியாக ஜீவாவைப் பார்க்க, அவன் சிமெண்ட் பெஞ்சில் படுத்துவிட்டது தெரிந்தது. 'பிள்ளைகள் எங்கே...?', என்ற எண்ணத்தில் அவள் கண்களைச் செலுத்த, கண்ணனோ பூனை நடை நடந்து ஜீவாவின் அருகில் செல்வது தெரிந்தது.

கண்கள் விரிய, மூச்சு விடவும் மறந்து, இதயம் வேகமாகத் துடிக்க அவனையே பார்க்க, கண்ணனோ..., ஜீவாவின் கழட்டி வைத்திருந்த கோட்டை(coat) வருடிப் பார்ப்பது தெரிந்தது. கண்ணனின் கண்களில் வழிந்த ஏக்கத்தைப் புரிந்துகொள்ள முடியாத அளவு முட்டாள் இல்லையே திவ்யா....

ஆனால் அவனது ஏக்கத்தைப் போக்க தன்னால் முடியுமா? என்ற பெரிய கேள்வி எழுந்து, அவளை மூச்சடைக்கச் செய்தது. திவ்யாவின் கண்கள் உடைப்பெடுத்தன...., சில மாதங்களுக்குப் பிறகு அவள் இன்றுதான் அழுகிறாள்....

அவள் தோளில் ஒரு கரம் விழ, திடுக்கிட்டுத் திரும்பினாள். “வா ஹேமா..., சும்மா....”, சொல்லிவிட்டு, கண்களை வேகமாகத் துடைத்தாள்.

“கண்ணனோட ஏக்கம், உனக்கு இன்னுமா புரியலை திவ்யா....?இல்ல, புரிந்தும் புரியாத மாதிரி நடிக்கிறியா? இதுக்கு என்ன செய்யபோற? நானும் நாலு மாசமா பாக்குறேன். நீயும் இந்த ஜன்னல் வழியாப் பாக்குறதை. நீயா ஏதாவது பேசுவன்னு நான் எதிர்பார்க்க, எல்லாம் ஏமாற்றமாவே போகுது திவ்யா”, நேரடியாகப் பேச்சைத் துவங்கினாள்.

“நீ நினைக்கிற மாதிரி எதுவும் இல்லை ஹேமா..., என்னால் இன்னொரு ஆண்மகனை மனசால் நினைக்க முடியும்னு, இன்னுமா நீ நினைக்கிற?”, அதிர்ச்சியும், தன்னிரக்கமும் போட்டி போட்டது அவள் குரலில்.

அவளைத் தோளில் சாய்த்துக் கொண்டாள் ஹேமா. “நான் எதுவும் நினைக்கவே இல்லை திவ்யா. எனக்குத் தெரியாதா உன்னோட மனசு. உன்னால், ஒரு ஆணை ஏத்துக்க முடியாமல் போகலாம். ஆனால் கண்ணன்.....,

“இப்போல்லாம் அவனோட ஏக்கம் ரொம்ப அதிகமாயிடுச்சு திவ்யா. ஜீவா வந்தாலே, அவரைப் பாக்குறது மட்டும்தான்

வேலைன்னு நடந்துக்கறான். ஜீவாவுக்கு, தயக்கம், பயம். எங்கே கண்ணன் பழைய மாதிரி மாறிடுவானோன்னு.

“கண்ணனோட இந்த ஏக்கத்தை தீத்து வைக்கவாவது நீ ஒரு வாழ்க்கைத் துணையை ஏன் ஏத்துக்கக் கூடாது...? நான் மறுபடியும் சொல்லுறேன்...., இது உனக்காக இல்லை..., கண்ணனுக்காக மட்டும் தான்.

“இன்னும் எவ்வளவு நாள், அவனோட இந்த ஏக்கத்தை இப்படி வேடிக்கைப் பாத்துட்டே இருக்கப்போற திவ்யா? ஜீவாவைப் பற்றி நான் ஏற்கனவே உன்கிட்டே சொல்லணும்னு நினைச்சுட்டே இருந்தேன். அவரோட லைப்....”.

“எனக்குத் தெரியும் ஹேமா...., அவரோட லைப் பத்தி எனக்குத் தெரியும்...”, ஹேமாவை பாதியில் தடுத்துச் சொன்னாள்.

“திவ்யா..., ஜீவாவால் மட்டும்தான், நம்ம கண்ணனை முழுசா மாத்த முடியும். அன்னைக்கு டாக்டர் சொன்னதை உன்கிட்டே சொன்னேனே, உனக்கு மறந்துடுச்சா? கண்ணன் ஒரு நார்மலான குழந்தையா வளரணும்னா, கண்டிப்பா ஒரு ஆண் துணை அவனுக்கு வேணும்.

“இப்போ அவன் பாதிதான் மாறி இருக்கான். மீதியும் மாறணும்னா அதுக்கு ஜீவாவோட ஒத்துழைப்பு வேணும். அவர் உரிமையாப் பழகணும்னா, கண்டிப்பா அதுக்கு உண்டான உரிமை முதல்ல அவருக்கு இருக்கணும்.

“இந்த வீட்டுக்குள்ளே கூட வராமல்....., வெளியவே உக்காந்துட்டு அவர் போகக் காரணம் என்னன்னு உனக்குத் தெரியாதா? அது மட்டும் இல்லை, அன்னைக்கு நடு ராத்திரி, அஞ்சலியை தூக்கிட்டு உன்கிட்டே ஓடி வந்தாரே. அதுக்குக் காரணம் என்ன?

“அஞ்சலி, அந்த நடு ராத்திரில நீ வேணும்னு கேட்டு அடம் பிடிச்சதுதான். அந்தச் சூழலில் அவர் முகத்தில் தெரிஞ்ச

வலியைப் பார்த்து உன் மனசு என்ன பாடு பட்டுதுன்னு எனக்குத் தெரியும் திவ்யா.

“அவரோட வலியைப் பார்த்த பிறகு, அடுத்த நாள்ல இருந்து அஞ்சலியை, நீ, அவர் வீட்டுக்கே அனுப்பாமல் நீயே கவனிச்சுக்கறியே...., ஆனால், அவர் அவரோட மகளைப் பிரிந்தும் வேதனைப் படுறாரே...., அதுவும் உனக்குத் தெரியலையா திவ்யா.

“உங்க ரெண்டு பேரோட துன்பத்துக்கும் ஒரு தீர்வு இருக்கும்போது அதை நீ ஏன் ஏத்துக்கக் கூடாது? யோசிடா..... அங்கே பார், கண்ணன் என்ன செய்யிறான்னு....”, அவர்கள் பார்க்கும் பொழுது கண்ணன் ஜீவாவின் அருகில் கொஞ்சம் இடைவெளி விட்டு அமர்ந்து, அவன் முகத்தையேப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இதுவரை கண்களை மூடிக் கொண்டு கண்ணனின் செய்கைகளை அரைக் கண்ணில் பார்த்துக் கொண்டிருந்த ஜீவாவின் கடைவிழியோரம் வழிந்த ஒற்றைத் துளி நீரைத் துடைக்க, நீண்டு கொண்டிருந்தன கண்ணனின் பிஞ்சுக் கரங்கள்.

***

தாகம் - 32.

நொடியில் விருட்ச்சமாகும் அன்பை

நொடியில் பிடுங்கியெறிய முடிவதில்லை.....

தர்ஷிணியின் உடல்நிலை நாளுக்கு நாள் கெட்டுக் கொண்டிருந்தது. மாதங்கள் கடந்திருக்க, அவள் மணிவயிறு வளர்ந்ததைப் போலவே, அவளது மனப் பாரமும் சேர்ந்து வளர்ந்தது. இப்பொழுதெல்லாம் வேலைக்குச் செல்லவில்லை.

அதற்குக் காரணம்....., தர்ஷிணிக்கு நிற்கக் கூட முடியாமல், தலை சுற்றலும் வாந்தியும் அவளைப் புரட்டி எடுத்தது. ஒரு சொட்டுத் தண்ணீர் குடித்தால், அது இரண்டு சொட்டாக வெளியே வந்தது. அப்படியிருக்கையில் உடம்பில் எங்கே தெம்பு இருக்கும்?

இந்த நேரத்தில் கணவனின் அன்புக்காகவும், ஆறுதலான அணைப்புக்காகவும், பேச்சுக்காகவும் அவள் மனம் ஏங்கியது அவளது குழந்தைக்காக, சுமையான இரவுகளை அவள் சகிக்கப் பழகிக் கொண்டாள். இவ்வளவு உடல் உபாதையிலும், சோர்விலும் அவன் அவளிடம், ஒரு கர்ப்பிணிப் பெண்ணிடம் நடந்து கொள்வதைப்போல் நடந்து கொள்ளவில்லை.

மருத்துவமனைக்குப் போக வேண்டுமா, சென்றுகொள், என்னை எதிர் பார்க்காதே....., ஒரே வார்த்தையில் முடித்துவிட, ஒவ்வொரு மாதமும், மருத்துவரிடம் ஏதாவது ஒரு காரணம் தேடித் பிடித்து சொல்வதற்குள் அவளுக்குத்தான் தலை சுற்றிப் போகும்.

“என்ன தர்ஷிணி....., நீ ரொம்ப வீக்கா இருக்க, துணைக்கு ஆள் இல்லாமல் இப்படி வாறியே, எங்கேயாவது விழுந்து வைத்தால் என்னத்துக்கு ஆகும்?”, உரிமையோடு அவர்

கடிந்துக்கொள்ளும் போது, கண்ணோரம் கரித்துக் கொண்டு வரும் அவளுக்கு.

அவள்மேல், மூன்றாம் மனிதர்கள் வைக்கும் ஆதரவைக் கூட, கட்டியவனோ, தாயோ வைக்கவில்லை என்பதை நினைத்து நைந்து போனது அவள் மனம்.

அவள் கர்ப்பமாக இருக்கும் விஷயத்தை அவள் அக்காவுக்கும், அம்மாவுக்கும் சொன்ன பொழுது, இருவருமே மிகுந்த சந்தோசத்தில் வந்தார்கள். ஆனால் அவர்கள் வந்தபொழுது அவள் பட்ட துன்பங்கள்.....

முதலில் அவளைக் காண வந்தது கீதா தான். அவளை, கமலேஷ் அழைத்து வந்திருந்தான். கீதா தர்ஷிணியை கைக்குள் வைத்துப் பார்த்துக் கொண்டாள். அவள், ஒரு சாப்பாடு பிடிக்காமல் வாந்தி எடுத்தால், வேறு சாப்பாடு அவளுக்குப் பிடித்த மாதிரி வைத்துக் கொடுத்தாள்.

ஆனால் இரவில் வித்தார்த், கமலேஷோடு அவளைச் சேர்த்து வைத்துப் பேசி, தர்ஷிணியைச் சித்திரவதை செய்த பொழுது, காலையில் இருந்த இதம் அனைத்தும் தொலைந்து போனது. மூன்று நாள் தாக்கு பிடித்தவள், நான்காம் நாள் காலையில், அக்காவை, அவளாகவே கிளம்பிப் போகச் சொல்லிவிட்டாள்.

அதை தர்ஷிணி சொன்ன பொழுது....., கீதா கதறி அழுதுவிட்டாள். “ஏன் தர்ஷு...., இந்த அக்கா மலடியா போயிட்டதால், நான் தொட்டால், உனக்கும் உன் குழந்தைக்கும் ஏதாவது ஆயிடும்னு நீயும் அம்மா மாதிரி நினைக்கிறியா?”, அவளது நிலை, தாழ்வு மனப்பான்மை அவளை இப்படிப் பேச வைத்தது.

“அக்கா....., நீதான்க்கா எனக்கு அம்மா....., பிறகு எப்படி.....?”, அக்காவிடம் கேட்டவள், அறைக் கதவை சாத்திவிட்டு, வேகமாகத் தன் ஆடையைக் களைந்து தன் மேனியை அவளிடம் காட்டினாள். தர்ஷிணியின் மேனியைப் பார்த்த கீதா விக்கித்துப் போனாள்.

பூப்போல் இருந்த தங்கையின் மேனியில் இருந்த புதியக் காயங்களும், ஆறி இருந்த நகங்களின் தடமும், பற்களின் தடமும்.... “ஹையோ....., தர்ஷும்மா என்ன இது.....?”, கட்டிக் கொண்டு கதறிவிட்டாள்.

தர்ஷுவோ, பாறையாக இறுகி நின்றாள். கண்கள் மட்டும் கொதிநீரை உற்பத்தி செய்து வெளியேற்றியது. “என்னால் இதுக்குமேல சித்திரவதையைத் தாங்க முடியாதுக்கா. உன்கிட்டே, இதுக்குமேல வெளிப்படையா, என்னால் பேச முடியாது. போய்டுக்கா..., தயவு செய்து ஊருக்குப் போய்டு...,

“மிச்சம் இருக்கும் இந்த உயிரை, என்னோட வயிற்றில் இருக்கும் இந்தப் பிள்ளைக்காக நான் காப்பாத்திக்கணும்...”, தன் ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டாள்.

“ஹம்..., அவரோட தங்கை காவியா சொன்ன ஒரே வார்த்தைக்காக, என்னோட இந்த முகம் தப்பிச்சு இருக்கு. எங்கே அவ வந்தால் இன்னும் எதையாவது கண்டு பிடிச்சு, அவரை தப்பா நினைச்சுடுவாளோன்னு, என்னோட, அவளைப் பேசக் கூட விடவில்லை.

“அவள் கேட்டால்...., என்னைப் பக்கத்தில் வச்சுட்டே...., நான் பெரிய ராங்கி ரங்கம்மா, பேச மாட்டான்னு வாய் கூசாமல் பொய் சொல்லி, அவர் நல்ல பிள்ளை ஆயிடுறார். இல்லையா, நான் கோவிலுக்குப் போயிருக்கேன், ஷாப்பிங் போயிருக்கேன், இப்படி ஆயிரம் காரணங்கள் கண்டுபிடித்து, சாக்குச் சொல்லுறார். இதுக்கு மேல காயப்பட, என் உடம்பில் தெம்பில்லக்கா.

“என்னோட இந்தக் காயம் ஆறணும் என்றாலே, நீ ஊருக்குப் போனால்தான் நடக்கும். என்னால் பொறுத்துக்க முடியாமல் தான்க்கா, உன்னைப் போகச் சொல்லுறேன். மத்தபடி, நீ நினைக்கும் காரணம் இல்லக்கா”, கீதாவைக் கட்டிக்கொண்டு கதறித் தீர்த்தாள்.

கீதாவிற்கு, தங்கையின் நிலையைப் பார்த்து நெஞ்சு வலிக்கும் போல் இருந்தது. ஆனாலும் அதை ஒதுக்கிவிட்டு, “தர்ஷு... அக்கா சொன்னால் கேட்பாய் தானே. உன் புருஷன் பொசசிவ்(possessive) குணம் கொண்டவர் போல, அதான் இப்படி நடந்துக்கறார்.

“நீ அவர்கிட்டே, அவர்தான் உனக்கு முக்கியம் என்ற ரீதியில் பேசு. அப்படிப் பேசி அவருக்குப் புரிய வைத்தால், கண்டிப்பா அவர் மாறிடுவார்”, கீதா சொல்ல, விரக்தியாகச் சிரித்த தர்ஷிணிக்கு, நம்பிக்கை அளிக்கும் விதமாகப் பேசினாள்.

அத்தோடு, “தர்ஷும்மா, உனக்கே தெரியும்.... நம்ம அம்மாவைப் பற்றி, நீ உன் புருஷன் இல்லாமல் வீட்டுக்கு வந்தாலே, சல்லிக் காசுக்கு மதிக்க மாட்டாங்க. இப்போ நீ, இப்படி ஒரு பிரச்சனையோட வந்தால், அவங்க நாக்கே உன்னைக் கொன்னுடும்.

“என்னாலும் உன்னை வீட்டுக்கு அழைச்சுட்டு போக முடியாது. புரிஞ்சு நடந்துக்கோடா. வாழ்க்கையைக் காப்பாற்ற எவ்வளவு முடியுமோ அவ்வளவு போராடுவோம்”, சொல்லிச் சென்றாள்.

அக்காவின் பேச்சைக் கேட்டு, அன்று சாயங்காலம் அலுவலகத்தில் இருந்து வந்த வித்தார்த்திடம் அவள் பேச முயல, “என்னடி...., பேச்செல்லாம் புதுசா இருக்கு. உன் அத்தான் போன சோகத்தை, பேசி ஆத்திக்கிறியோ”, குத்தலான பேச்சில் மனம் சோர்ந்தாலும் விடாமல் முயன்றாள்.

“அதான் எனக்கு நீங்க இருக்கீங்களே, பிறகு எதுக்கு நான் வேற யாரையோ நினைக்கணும். எனக்கு நீங்கதான் முக்கியம்...., நீங்க மட்டும் போதும்....”, எப்படியாவது மாறிவிட மாட்டானா என்ற ஆசையில் பேசினாள்.

“ஏண்டி....., இப்படி டெய்லி, உன்னை இந்தப் போடு போட்ட பிறகுமா உனக்கு ஆசை அடங்கலை. என்னமோ புதுசா

கதை சொல்லி, சுத்தி வளைச்சுக் கேக்குற. இதுவே உனக்குப் பத்தலன்னா....., நீ எதுலதான் அடங்குவடி....", அவள் மனதைப் பற்றி பேச, அவனோ உடல் சார்ந்தகாகவே அதைப் பார்த்தான் அவனோடு பேசுவதை அத்தோடு நிறுத்திக் கொண்டாள்....., நாளுக்கு நாள், அவனது பிம்பம் விழித் திரையில் விழுந்தாலே...., ஒருவித விறைப்பு வந்தது அவள் உடல் மொழியில்.

கீதா சென்று, அவள் தாயை ஒரு வாரம் அனுப்பி வைத்தாள். வந்தவரோ தர்ஷிணிக்குப் பிடித்த விதத்தில் சமைத்துப் போட்டார்.

தாய் என்ற விதத்தில், தன் மன, மற்றும் உடல் காயங்களைப் பற்றிப் பேசினாலோ, "ஆம்பளைங்க அப்படித்தான் இருப்பாங்க. நீதான் அனுசரிச்சுப் போகணும். ஏன் உன் அப்பனோட நான் குப்பை கொட்டலை....", ஒரே பேச்சில் அனைத்தையும் முடித்துவிட்டார்.

"அம்மா உன் ஆண் குழந்தை மோகம், இப்படியாம்மா போகணும். பெத்தப் பொண்ணு என்ன ஆனாலும் பரவாயில்லை. உனக்கு ஆண் தான் உசத்தி, அவன் என்ன செஞ்சாலும் நான் சகிச்சுக்கணும் இல்ல. எனக்குத் தெரியும்மா..... நீங்க இப்படித்தான் சொல்லுவீங்கன்னு.

"தயவு செய்து இங்கே இருந்து போய்டுங்கம்மா. பெத்த உங்களுக்கே, பெண் என்பதால் எங்களைப் பிடிக்காத போது, ஆம்பளை அவன்கிட்டே எதிர் பார்க்க முடியுமா? என்னைப் பெத்த தாய் இப்படிப் பேசுவதை தாங்கிக்க முடியலம்மா.

"வேண்டாம்மா இங்கே இருந்து போய்டுங்க. சில வேளை என் வயித்தில் இருக்குறது பொண்ணுன்னு உங்களுக்குத் தெரிந்தால் அதை சபிக்கக் கூட நீங்க தயங்க மாட்டீங்க. போதும்மா எல்லாம் போதும்....,

"நீங்க என்னை கவனிச்சதும் போதும், உங்க மாப்பிள்ளைக்கு கூஜா தூக்குனதும் போதும்",

கையெடுத்துக் கும்பிட்டுச் சொல்ல, வெகுண்டார் வசுந்தரா.

“என்னடி.. கொழுப்பா....., வாழ்க்கை இப்படித்தான் இருக்கும். அதிலும் ஆம்பளை முறுக்கு அவங்களுக்குக் கொஞ்சம் இருக்கத்தான் செய்யும். பாத்து பதமா நடந்துக்கோன்னா ரொம்ப பேசுற? என்னைப் பார்த்தால் உனக்கு எப்படித் தெரியுது? ஒழுங்கா மாப்பிள்ளையோட வாழுற வழியைப் பாரு.

“அதை விட்டுட்டு இப்படிப் பண்ணுறார், அப்படிப் பண்ணுறார்னு கதை சொல்லாதே. இருந்து பொழைக்கிற வழியைப் பாரு. ஒருத்தி மலடி, இன்னொருத்தி வாழா வெட்டின்னு ஊர் பேச வச்சுடாதே”, சொல்லிவிட்டு, அன்றே கிளம்பிவிட்டார்.

அதன் பிறகு வந்த நாட்கள் ஓடி மறைந்தன. தர்ஷிணியை வெளியே எங்கும் அழைத்துச் செல்ல மாட்டான்.

ஏழாம் மாதம் சீமந்தம் வைத்தார்கள். அவளை வீட்டுக்கு அனுப்பிய மூன்றாம் நாள் அழைத்து வந்துவிட்டான். ஒன்பதாம் மாதம் துவங்கி விட்டது. இன்னும் ஏழு நாளில் டெலிவரி டேட் கொடுத்திருந்தார்கள்.

அதை அவனிடம் சொல்ல, அதுக்கு எனக்கென்ன வந்துது...., என்று சொல்லிவிட்டு அவள்மேல் கவிழ்ந்தான்.

“என்னங்க ஒன்பதாம் மாசம்ங்க...., வேண்டாம்....., எனக்கு பயம்மா இருக்குங்க...”, உண்மையான பயம் அவள் குரலில்.

“என்ன... அந்தச் சனியன் வெளியே வந்து விழுந்திடுமா? அதுவும் நல்லதுதான்.....”, சொல்லிவிட்டு, அவன் வேலையைத் தொடர, உலகத்திலேயே இப்படி ஒரு மனிதன் இருப்பானா என்று அவள்தான் நொந்து போனாள்.

இன்னும் இரண்டு நாளே இருந்த வேளையில், அலுவலகத்தில் அனைவரும் பிக்னிக் போகலாம் என

பிளான் செய்திருக்கிறோம், நாளைக்குப் போகணும் என்று அவன் சொன்ன பொழுது திகைத்துப் போனாள்.

“என்னங்க டெலிவரி நாள் நெருங்கிடுச்சு..”, எச்சில் விழுங்கியவாறே அவள் சொல்ல, “ஒரு நாளில் ஒண்ணும் குடி முழுகிப் போய்டாது. ஒழுங்கு மரியாதையா வாற, அவ்வளவுதான். இந்த இழவுக்குத்தான், புள்ளையும் வேணாம் ஒரு மண்ணும் வேணாம்னு சொன்னேன்.

சொன்னாக் கேக்கணும்....., என் அம்மாவுக்கு இல்லை, ஆட்டு குட்டிக்கு இல்லைன்னு சொன்னால், இப்போ யார் அனுபவிக்கிறது. ராத்திரி ஒரு மாதிரித் தொல்லைன்னா, பகல்ல இப்படியா... சை என் எரிச்சலைக் கிளப்பாமல் போடி. வர வர, இப்படி வயித்தைத் தள்ளிகிட்டு நிக்கிற உன்னைப் பாத்தாலே எரிச்சலா வருது”, அமிலங்களாக அவன் வீசும் சொல்லில், உள்ளுக்குள் சர்வமும் அடங்கியது அவளுக்க

காலையில் எழுந்து பாத்ரூம் சென்ற பொழுதே...., லேசாக உதிரம் வெளியேறுவதைக் கண்டு கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது தர்ஷிணிக்கு. அதைவிட, பயம் தான் அவளை அதிகமாக ஆக்கிரமித்தது.

ப்ளீடிங் ஏதாவது ஆனால் உடனடியாக வந்து மருத்துவமனையில் சேர்ந்துவிட வேண்டுமென்று, கிளிப்பிள்ளைக்குச் சொல்லுவதை போல் சொல்லிச் சென்ற மருத்துவரின் முகம் நெஞ்சில் நிழலாடியது.

இப்பொழுது இதை வித்தார்த்திடம் சொன்னால் அது எப்படிப்பட்ட வார்த்தைகளை அவனிடமிருந்து பெற்றுத் தருமென்பதை அவளுக்கு மனம் உணர்த்த, அவசரமாக ஒரு நாப்கின் வைத்துகொண்டு, ஊரில் இருக்கும் அனைத்து தெய்வங்களிடமும் வேண்டியவாறு அவன் பின்னால் சென்றாள்.

எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் அவ்வளவு கவனம், அவள் பிள்ளையோ உள்ளே இருந்து வெளியே வரத்

துடித்துக் கொண்டிருந்தான். ப்ளீடிங் அறிகுறி இருந்தால், அடுத்த இரண்டு அல்லது மூன்று மணி நேரங்களில் டெலிவரி ஆகிவிடும்.

இது தெரியாமல், இந்த ஒரு முழு நாளைக் கடத்த வேண்டுமென்று அவள் நினைத்தால் முடியுமா? அவளால் நடக்க முடியாமல் கால் துவள, “வேகமா வந்துத் தொலையேண்டி...., நமக்காக காத்துட்டு இருக்காங்க....”, எரிந்து விழுந்தான் வித்தார்த்.

வயிற்றுக் குழந்தை கர்ப்பவாசலை நெருங்கியிருக்க, நிற்கவே முடியாமல் கால் துவள, அதில் வேகமாக நடக்கச் சொன்னால் அவளும் என்னதான் செய்வாள். அதிலும் தலைப் பிரசவம் ஏகப்பட்ட பயம் நெஞ்சில் இருக்கும்.

அதிலும் பிரசவம், ஒவ்வொரு பெண்ணுக்கும் மறு பிறப்பு. அந்த பயம் தவிப்பு இவையெல்லாம் போக்கத்தான் பெண்களைத் தங்கள் தாய் வீட்டுக்கு அனுப்பி வைப்பார்கள். பெரியவர்களின் அனுபவம் அவர்களுக்குப் பக்கபலமாக இருக்கும்.

ஆனால் இங்கே தாய் வீட்டுக்குச் சென்ற மூன்றாம் நாளே அவன் அழைக்க, “மாப்பிள்ளை உன்மேல் எவ்வளவு பிரியம் இருந்தால் இப்படி மூணு நாள்லயே வந்திருப்பார்...., அவரோட போ. பிள்ளை பிறக்கும் வேளை, நான் உன்னோட வந்து இருக்கேன்”, என்று சொன்ன தாயை நினைத்து,

அவள் தாயா இல்லைப் பேயா...., என்று மனதுக்குள் நொந்து போனாள். எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும், எங்கே பிள்ளை கீழே விழுந்து விடுமோ...? என்ற பயம் வேறு அவளை ஆட்டிப் படைத்தது.

இப்பொழுது இடுப்பு வலியும் சேர்ந்திருக்க, உதட்டைக் கடித்து, வலியைப் பொறுத்துக் கொண்டாள். வண்டியில் ஏறி அமர்ந்தவுடன், அவனுடன் வேலை பார்க்கும் விமலா, “என்ன சார் நிறை மாசமா இருப்பாங்க போல....?

இவங்களை ஏன் அலைக்கழிக்கிறீங்க...?", தர்ஷிணியின் வயிற்றைப் பார்த்து அக்கறையாகக் கேட்டாள்.

அவளைப் பார்த்து சிநேகமாகப் புன்னகைத்தாள் தர்ஷிணி. புன்னகைக்கும் பொழுதே வலி வர, அதை அவளது முகம் ஒரு நொடி பிரதிபலிக்க, "மேம்...., என்ன செய்யிது....?", இரண்டு பிள்ளைப் பெற்ற அவளுக்குத் தெரியாதா என்ன? ஏதோ சரியில்லை என்று அவளுக்குப் புரிந்தது.

தர்ஷிணிக்கு வந்த வலி மறைந்திருக்க, "நா... நல்லாத்தான் இருக்கேன்", இருக்கையில் நேராக அமர முடியாமல்...., சாய்வாக அமர்ந்தவாறு சொன்னாள்.

அவள் அருகில் இருந்த வித்தார்த்தோ, இவர்களது பேச்சைக் கண்டுகொள்ளாமல், ஓடும் வண்டியில் இருந்து வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அதிகாலை என்பதால் போக்குவரத்து நெரிசல் இல்லாமல் இருக்க, வாகனம் அதி வேகமாக விரைந்தது.

ஒரு ஸ்பீட் பிரேக்கரில் வண்டி கொஞ்சம் வேகமாக ஏறி இறங்க, "அம்மா....", என்று சன்னமாக அலறிவிட்டாள் தர்ஷிணி.

விமலாவோ, அவளது இருக்கையில் இருந்து எழுந்து அவளை நெருங்க, அவள் கண்களில் தெரிந்தது, தர்ஷிணியின் காலுக்கு அடியிலிருந்த ஈரம். அதற்குள்ளாகவே முக்கால் மணிநேரம் கடந்திருக்க, சென்னை சிட்டியை விட்டுக் கொஞ்சம் தள்ளி வந்திருந்தார்கள் அவர்கள்.

நிலைமையைச் சட்டெனப் புரிந்துகொண்ட விமலா, "சார், வண்டியை உடனே பக்கத்தில் இருக்கும் ஹாஸ்பிட்டலுக்கு விடச் சொல்லுங்க. மேடத்தை உடனே ஹாஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணனும். சீக்கிரம்...", வித்தார்த்திடம் சொல்லிவிட்டு,

“என்ன மேடம், இப்படியா கவனம் இல்லாமல் இருப்பீங்க....? பிள்ளைக்கு ஏதாவது ஒண்ணுகிடக்க ஒண்ணு ஆனால் என்ன ஆகும். சார்கிட்டே சொல்லியிருக்கலாமே....”, நொடியில், வண்டியில் தீப் பற்றிக்கொண்ட உணர்வு,

தர்ஷிணி செய்த எந்தப் புண்ணியமோ, அங்கே ஒரு பெரிய மருத்துவமனையே அடுத்துவர, நொடியில் அவளை அங்கே சேர்த்தார்கள். வித்தார்த்தோ, மற்றவர்களை ட்ரிப் போகச் சொன்னான். ஆனால் விமலா போகவே இல்லை, இங்கே ஒரு பெண் துணை வேண்டுமென்று பிடிவாதமாக நின்று கொண்டாள்.

அவனோ பில் கட்டிவிட்டு வருகிறேன் என்று சென்றுவிட, விமலா அங்கே இருந்தாள். அந்த நேரம், இரண்டு செவிலிகள் பேசுவது அவளுக்குக் கேட்டது,

“என்னம்மா, காலையிலேயே நீ ப்ளீடிங் ஆகுறதைப் பாத்துட்டு ஹாஸ்பிடல் போகாமல், நாப்கின் வச்சு மறச்சு இருக்குறியே. இதென்ன மறைக்கிற விஷயமா? ரெண்டு உசுரும்மா”, ஒருத்தி கடிந்துகொள்ள,

மற்றவளோ....., “இம்புட்டு வலியையும் எப்படிம்மா தாங்கிகிட்ட..?”, அவர்கள் டெலிவரிக்கு நேரமாகும் என்று எண்ணிப் பேசிக் கொண்டிருக்க, தன் மொத்த வலியையும் அடக்கி, உதட்டைப் பற்களால் கடித்ததில் உதடு கிழிந்து ரத்தமே வந்து விட்டது.

கைகளால் படுக்கையில் விரித்திருந்த துணியை, பலம் கொண்டமட்டும் இழுக்க, அது கிழிந்து கையோடு வந்தது. “என்னம்மா ரொம்ப வலிக்குதா? கொஞ்சம் பொறுத்துக்கோ இப்போ டாக்டர் வந்துடுவாங்க”, அவர்கள் சொல்லி முடிக்கும் வேளையில், “சிஸ்டர், எனக்கு டாய்லெட்டுக்குப் போகணும்.....”, என்று சொன்னவாறு எழுந்து செல்லப் போனாள்.

“என்னது....? அப்படியே படுங்க பாக்குறோம்.....”, இருவரும் நேரம் நெருங்கியதை உணர்ந்து பார்க்கும் வேளையில்,

தர்ஷிணியின் மகன் தலைக் காட்டினான்.

“அம்மா.....”, என்ற அடுத்த சன்னமான முனங்கலில், தர்ஷிணியின் தவப் புதல்வன் இந்த மண்ணுலகில் கால் பதித்து, மூச்சுக் காற்றுக்காக வீறிட்டு அழத் துவங்கினான்.

சிஸ்டர் வந்து, “தர்ஷிணி கூட யார் வந்திருக்கீங்க....? அவங்களுக்குப் பையன் பொறந்திருக்கான். என்று சொல்லிவிட்டுச் சென்றாள்.

அந்த நேரம் வித்தார்த், அவர்கள் எழுதிக் கொடுத்த லிஸ்ட் படி பொருட்களை வாங்கி வந்தவன், அதை அந்தச் செவிலியிடம் கொடுத்து அனுப்பினான். பிள்ளையைக் குளிப்பாட்டி, பூத்துவாலையில் சுற்றி எடுத்து வந்து கொடுக்க,

“எனக்குத் தூக்கத் தெரியாது, நீங்க அவகிட்டே கொடுத்திடுங்க...”, விட்டேற்றியாக சொன்ன அவனை, விசித்திரமாகப் பார்த்தாள் அந்த செவிலி. விமலாவோ ஓடிச் சென்று குழந்தையை வாங்கிக் கொண்டாள்.

“அவங்க எப்படி இருக்காங்க....?”, விமலா கேட்க, “இரும்பு மனசும்மா அவங்களுக்கு. நல்லா இருக்காங்க. இன்னும் அரை மணி நேரத்தில் ரூமுக்கு மாத்திடுவோம். எந்த ரூம் சார்...”, கடமையில் புகுந்தாள்.

“விஐபி ரூம்....., ரூம் நம்பர் நானூற்றிப் பதினைந்து”, கர்வமாகச் சொன்னான்.

‘பிள்ளை பிறந்த கர்வத்தை விட, விஐபி ரூம் பிடித்தது பெருசா?’, என்ற பார்வையை அவனைப் பார்த்து செலுத்திவிட்டு, நீ எப்படி இருந்தால் எனக்கென்ன? என்று சென்றுவிட்டாள்.

விமலாவும் அதே மன நிலையில்தான் இருந்தாள். ஆனால் அவளால் அதை வெளிக்காட்ட முடியவில்லை. அவன்தான் அவளது உயரதிகாரி ஆயிற்றே..... அடுத்த அரைமணி

நேரத்தில், தர்ஷிணி, அவளது அறைக்கு மாற்றப்பட, அவளை அறைக்குள் விட்டுவிட்டு, எங்கே சென்றான் என்றே தெரியாமல், மாயமாக மறைந்துவிட்டான் வித்தார்த்.

விமலாவோ, மாலைவரை அங்கே இருந்தாள். அவளும் எவ்வளவு நேரம்தான் அங்கே இருக்க முடியும். “மேடம் நான் கிளம்பணும்...”, தர்ஷிணியைத் தனியாக விட்டுச் செல்ல வேண்டி இருக்கிறதே என்று சங்கடமாகச் சொன்னாள்.

“நீங்க இவ்வளவு நேரம் இருந்ததே எனக்கு ரொம்ப சந்தோஷம் விமலா. இனிமேல் நான் பாத்துக்கறேன்....., அவர் எல்லோருக்கும் தகவல் சொல்ல போயிருப்பார்.... இப்போ வந்துடுவார்...., நீங்க போங்க...”, அவள் தயக்கம் உணர்ந்து, தைரியமாக அவளிடம் காட்டிக் கொண்டு, அவளை போகச் சொன்னாள்.

அவள் சென்றவுடன், இதுவரை அவள் அடக்கி வைத்திருந்த கண்ணீர் வெடித்துக் கிளம்பியது....., உறங்கும் தன் மகனை மார்போடு கட்டிக் கொண்டு கண்ணீர் உகுத்தாள். பச்சை உடம்புக்காரி, அவளுக்கு ஆறுதல் சொல்லக் கூட யாருமில்லை.

இப்படித் தனியாக இருக்கிறோமே என்று அதற்காக அழுதாளா? காலையில் சென்றக் கணவன் இன்னும் வரவில்லையே என்று அழுதாளா? பிறந்தக் குழந்தையின் முகத்தைக் கூட அவன் பார்க்க வில்லையே, அதற்காக அழுதாளா?

அடுத்த வேளைச் சாப்பாட்டுக்கு என்ன செய்வது என்று அழுதாளா? மருத்துவமனை பில்லை எப்படி செலுத்தப் போகிறோம் என்று எண்ணி அழுதாளா? அப்படிச் செலுத்த முடியவில்லை என்றால், அதனால் ஏற்படப்போகும் அவமானத்தை எண்ணி அழுதாளா?

சென்ற கணவன் திரும்ப வருவானா மாட்டானா? என்ற பயத்தில் அழுதாளா? அவளுக்கேத் தெரியவில்லை. எவ்வளவு நேரம் அழுதாளோ...., யாரோ கதவைத்

திறந்துவரும் ஓசை கேட்கவே, கண்ணீர் வழியும் நீருடன் ஏறிட்டுப் பார்த்தாள்.

கணவன்தான் வருகிறானோ என்ற எதிர்பார்ப்பும் சேர்ந்தே இருந்தது. என்னதான் அவன் கொடுமைக் காரனாக இருந்தாலும் ஒரு இக்கட்டில் அவனைத்தான் மனம் முதலில் நாடியது. அது அவன் இல்லை என்றதும், கண்ணீர் ஆறாகப் பொழிந்தது.

வந்த செவிலியோ இவளைப் பார்த்து, “என்னம்மா பச்சை உடம்பை இப்படியா அலைப்பீங்க...., இப்படியே அழுதுக் காய்ச்சல் வந்து, ஜன்னி வந்தால், பிள்ளையை யார் பாத்துப்பாங்க. நீங்க இப்படி அழுதால்...., என்ன லவ் மேரேஜா...., அதான் பெரியவங்க யாரும் இல்லையா?”, தன் போக்கில் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அந்த நேரம், பக்கத்து அறையில் ஏதோ ஒரு பெண்ணின் ஆங்காரமான குரலும், அதைத் தொடர்ந்து ஒரு பச்சிளம் குழந்தையின் கதறலும் கேட்டுக் கொண்டிருந்தது. தன் சோகத்தை ஒதுக்கிவிட்டு, “சிஸ்டர்...., அங்கே என்ன பிரச்சனை...? ஏன் அந்தக் குழந்தை ரொம்ப நேரமா அழுதுட்டே இருக்கு...?”, தவிப்பாகக் கேட்டாள்.

தன்னைப்போல் ஏதோ ஒரு பெண் அங்கே கலங்குகிறாளோ என்ற கவலை அவளுக்கு. “அட நீங்க வேறம்மா..., அங்கே ஒரு பிரச்சனையும் இல்லை. தான் பெத்த குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்க மாட்டேன்னு எந்தப் பொண்ணாவது சொல்லுவாளா? இந்தப் பொண்ணு சொல்லுதும்மா.

“சில நேரம், அழகுதான் போய்டும்னு பயப்படுதோன்னு நினைச்சு, அதெல்லாம் இல்லைன்னு சொன்னால்....., அந்தக் கருமத்தை என் கண்ணிலேயே காட்டாதீங்கன்னு கத்துது. பிள்ளையோட அப்பா துடிக்கிறதைப் பாக்க முடியலை.

“இப்படித்தான் பிள்ளை பிறக்கதுக்குள்ளே, அவரை என்னவெல்லாம் வஞ்சிது தெரியுமா? கேட்ட எங்களுக்கே ரத்தக் கண்ணீர் வந்துது. இப்போ கூட, ஒரு மூணு மாசம் தாய்ப்பால் கொடு, அப்படி இல்லையா, ஒரு மூணு நாள் கொடுன்னு, அந்தப் பொண்ணோட காலில் விழுந்து கெஞ்சாத குறையா கேக்குறார்.

“அந்த பொண்ணு இரும்பாட்டம், இளகாமல் இருக்குதும்மா? ஹம் இரும்பு கூட அவரோட கதறலுக்கு இளகும், இல்ல உருகும். இவ கல்லாட்டம் உக்காந்து இருக்கா. அந்தப் பச்சை மண்ணு எவ்வளவு நேரம்தான் பசி அடக்கும்.

“இப்போதான், உங்களுக்குக் குழந்தை பொறக்கதுக்கு ரெண்டு மணி நேரத்துக்கு முன்னாடியே பொறந்த குழந்தை. பசியில அழுவுது. பால் புட்டி கொடுத்தால் வாயிலேயே வாங்கலை. அம்மாவோட அணைப்புக்கு ஏங்குது. நாம என்ன செய்ய முடியும்?

“எல்லாம் விதி....., நீங்க எதைப் பத்தியும் கவலைப் படாமல் தூங்குங்கம்மா. நைட் சாப்பாடு இங்கேயே கொடுத்துடுவாங்க. நீங்க சாப்பிட்டுப் படுத்துக்கோங்க. இந்த மருந்தையும் மறக்காமல் சாப்பிடுங்க”, சொல்லிவிட்டு, கவலையாக அங்கிருந்து நகர்ந்தார்.

“சிஸ்டர்....”, சென்ற அவளை அழைத்தாள் தர்ஷிணி.

“ஏதாவது வேணுமா...”, அவள் திரும்பி நின்று கேட்க, “நான் வேண்ணா அந்த பாப்பாக்குத் தாய்ப்பால் கொடுக்கவா?”, மலையளவு தயக்கம் அவள் குரலில் இருந்தாலும், ஒரு குழந்தை பசியில் அழுவதை, அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அவளை வியப்பாகப் பார்த்தவள், “நான் போய் கேட்டுட்டு வந்து சொல்லுறேனே.....”, சென்றவள், நொடியில் ஒரு அழகான பூக்குவியலோடு திரும்பி வந்தாள்.

அந்தக் குழந்தையோ வீறிட்டு அழுது கொண்டிருந்தது. அவள் பால் கொடுக்க முயல, அவள் முலைக்காம்பைப் பற்றாமல், தாயிடம் செல்லக் கோபம் கொண்ட பிள்ளைபோல், திமிறி அழுதுகொண்டே இருந்தது.

முதலில் குழந்தையைச் சமாதானம் செய்வது ஒன்றே பிரதானம் என்பது புரிய, தன் மார்போடு அணைத்துக் கொண்டு, மெல்லிய குரலில் பேச, அவள் பேச்சில் கொஞ்சம் கவனம் செலுத்தி, அழுகையை நிறுத்தவே, இப்பொழுது பால் கொடுக்க, அவள் முலைக்காம்பைப் பற்றிக்கொண்டு, சமத்தாகப் பால் குடித்தாள் அந்தக் குட்டி தேவதை.

“உங்களைத்தான் தன்னோட அம்மாவா நினைச்சுகிட்டா அவ.., பாத்தீங்களா, உங்க குரல் கேட்ட உடனே எப்படி அமைதி ஆயிட்டான்னு...”, செவிலி சொல்ல, பால் குடிக்கும் குழந்தைக்கு முத்தம் வைத்தாள் தர்ஷிணி.

எந்தக் குழந்தையாக இருந்தாலும் தாய் தாய்தானே....., தாய்மையின் மறு வடிவம் கருணை....., கருணையின் மறு வடிவம் தாய்மை..... அங்கே இரு குழந்தைகளுக்குத் தாயானாள் தர்ஷிணி.

***

தாகம் - 33.

அம்மா என்றால் அன்பு

அப்பா என்றால் கனிவு

இவை இரண்டையும்

தொலைத்தப் பிள்ளைகளுக்கு

நடுவிலே இவர்கள் போராட்டம்.....

முதலில் கொஞ்ச நேரம் உறங்கிய ஜீவா, பிள்ளைகளின் சத்தம் கேட்காமல் போகவே, படுத்த வாக்கிலேயே கண்களைச் சுழற்றிப் பார்த்தான். அப்பொழுது அஞ்சலி, தூரத்தில் மணலில் அமர்ந்து விளையாட, கண்ணனோ தயக்கமான நடையுடன் தன்னை நெருங்குவது தெரிந்தது.

கண்ணன் தன்னை நெருங்கவே, அசையாமல் படுத்துக் கொண்டான். கண்ணன், தன்னை நெருங்குவான் என்று அவன் எதிர்பார்க்க, அவனோ, தன் ஆடையைத் தொட்டுப் பார்ப்பதை உணர்ந்து, கவலையாக இருந்தது அவனுக்கு.

கண்ணனின் மன மாற்றம் ஜீவாவுக்குப் புரிந்தாலும், கண்ணனைத் தொட்டுத் தூக்க, மிகப்பெரிய தயக்கம் அவனுக்கு இருந்தது. அதனாலேயே, கண்ணன் ஏக்கமாகப் பார்த்தாலும், அவனைத் தொடவோ, தூக்கவோ முயலவில்லை.

அப்படி தன்னிஷ்டப்படி தூக்கி, அது கண்ணனுக்கு ஏதாவது உடல்நலக் குறைவை ஏற்படுத்திவிட்டால்....., அதுவும் அவன் தயக்கத்துக்குக் காரணம். இன்னும், கண்ணன் என்ன செய்கிறான் என்று காத்திருக்க, ஜீவாவின் அருகில் அமர்ந்தவன்,

“அப்பா.....”, என்று மெல்லியதாகச் சொல்லிப் பார்த்தான். அந்த அழைப்பைக் கேட்டதால்தான் ஜீவாவின்

கடைவிழியோரம் கண்ணீர் வழிந்தது. அதைக் கண்ட கண்ணன், அவன் கண்ணீரைத் துடைக்கக் கைகளை நீட்டிய வேளை,

“கண்ணா....., இங்கே வா...., இங்கே பார் பட்டர்பிளை.....”, அஞ்சலியின் உற்சாகக் கூச்சலில் ஜீவாவை விட்டுவிட்டு, கண்ணனின் கவனம் அஞ்சலியிடம் திரும்பியது.

அஞ்சலி இப்பொழுது சாதாரணமாகப் பேசத் துவங்கி இருந்தாள். அவளது “ட”, “ர” எழுத்துக்களைக் கூடப் பழகிவிட்டாள். அவளைச் சரியாகப் பேசச் சொல்லி, திவ்யா சொல்லிக் கொடுக்கவே, அதைச் சரியாகப் புரிந்து கொண்டாள். அப்படியே பேசவும் பழகிக் கொண்டாள்.

ஜீவா, இருக்கையில் இருந்து எழுந்தவன், கணேஷைத் தேடினான். கணேஷும் அங்கே வந்துவிட, “கணேஷ்...., உங்க கல்யாணத்துக்கு நாள் குறிச்சுட்டா என்ன? ஏற்கனவே ஆறு மாசம் ஓடிடுச்சே...”, யோசனையாகக் கேட்டான்.

ஜீவா இப்படித் திடீரெனக் கேட்பான் என்று எதிர் பார்க்காத கணேஷ் கொஞ்சம் தடுமாறினான். “இல்...இல்ல சார்...., அதான் ஏற்கனவே ஒரு வருஷம் கழிச்சுன்னு பேசி முடிச்சுட்டோமே....., இன்னும் ஆறு மாசம் போகட்டும் சார். பிறகு நாள் குறிச்சுக்கலாம்”, வேகமாகச் சொல்லிவிட்டு, மேலும் அவன் வேறு எதுவும் கேட்கும் முன்னர் அங்கிருந்து நகர்ந்தான்.

அவனது இந்த அவசரமான விலகலே, எதுவோ சரியில்லை என்று உணர்த்த, “கணேஷ்...., நீ எதையாவது என்கிட்டே இருந்து மறைக்கறியா?”, நேரடியாகக் கேட்டான்.

“உங்கிட்டே நான் என்ன சார் மறைக்கப் போறேன்....? நம்ம கம்பெனி இப்போதான் கொஞ்சம் ஸ்டெடி ஆகி இருக்கு. அது இன்னும் நல்லபடியா போகட்டும். உடனே பண்ணிக்கறேன். நாம இதைப்பற்றி இப்போதைக்கு எதுவும் பேச வேண்டாம் சார்”, எனக்கு இதில் சுத்தமாகப்

பேச விருப்பமில்லை என்பதுபோல், இறுக்கமாகச் சொல்ல, ஜீவா அமைதியானான்.

அலுவலகத்தில் இரவு ஷிப்ட் வேலைகளை மேற்பார்வை இடவேண்டி இருந்ததால், அங்கே விரைந்தார்கள். கணேஷ் மட்டும் ஏதோ டென்ஷனாக இருப்பதுபோல் அவனுக்குப் பட்டது.

கிளம்பும் முன்னர், அஞ்சலியிடம் சொல்லிவிட்டு ஜீவா கிளம்ப, அவன் அருகில் இருந்த கண்ணனின் முன்னால் மண்டியிட்டு அமர்ந்தான். கண்ணன் திகைப்பாகப் பார்க்க, “என்னைப் பார்த்தால் பயம்மா இருக்கா....?”, மென்மையாகக் கேட்டான்.

கண்ணனுக்கு உள்ளுக்குள் உதறல் எடுத்ததை மறைக்கத் தெரியாமல் உதடு துடிக்கத் துவங்கவே, “சரி, நான் போயிட்டு வாறேன் சரியா...? டாட்டா”, என்று சொல்லிவிட்டு, சட்டென அங்கிருந்து நகர்ந்து விட்டான். போகும் முன்பு, அஞ்சலியின் கன்னத்தில் அழுந்த அவன் கொடுத்த முத்தத்தை, இன்னதென்று புரியாத பார்வை பார்த்தான் கண்ணன்.

அதையெல்லாம் மறக்க வைத்தது கணேஷின் தடுமாற்றம். ‘இப்பொழுது நீ சொல்லியே ஆகவேண்டும் என்று மிரட்டிக் கேட்க, அவன் என்ன சின்னப் பையனா? ஆனாலும் ஜீவாவால் ஒழுங்காக வேலையைப் பார்க்க முடியவில்லை.

கணேஷ், மேற்பார்வையிடும் சாக்கில் வெளியே நழுவ, அவனைப் பின் தொடர்ந்தான் ஜீவா. கணேஷ் வேகமாக, அலைபேசியில் யாருக்கோ தொடர்புகொண்டு பேச, ஒட்டுக் கேட்பது சரியாகப் படாமல் இருந்தாலும், வேறு வழியில்லாமல் அங்கேயே அசையாமல் நின்றான்.

“ஹேமா நான்தான் பேசுறேன். நான் பயந்துட்டு இருந்த மாதிரியே ஆயிடுச்சு”, கணேஷ், ஹேமா என்று துவங்கவே அங்கிருந்து நகரத் துவங்கிய ஜீவா, அவன் அடுத்துச்

சொன்னதைக் கேட்டவன் அப்படியே அசையாமல் நின்றுவிட்டான்.

அந்தப்பக்கம் பேசுவது ஜீவாவுக்குக் கேட்கவில்லை.

“.....”.

“ஜீவா இன்னைக்கு, நம்மக் கல்யாணத்தைப் பத்திப் பேச்சு எடுத்துட்டார். எப்படியோ சமாளிச்சு வச்சு இருக்கேன். நான் சொன்னதை அவர் நம்பின மாதிரி தெரியலை. இப்படியே இன்னும் எவ்வளவு நாள் சமாளிக்கன்னும் தெரியலை”, பதட்டமாகவே சொன்னான்.

“----------“.

“நீ சொல்லுறது சரிதான். ஆனால் என்னால் அவர்ட்ட இதை எப்படிச் சொல்லன்னு தெரியலை. நீ எப்படி இப்படிச் செய்யலாம்னு கேட்டுட்டா..? எனக்கு பயம்மா இருக்கு ஹேமா...., நீ பக்கத்தில் இருந்தால் தைரியமா இருக்கும்னு தோணுது”, ஏக்கம் அவன் குரலில்.

“.....”.

“எனக்குமட்டும் ஆசை இல்லையா....., உங்களுக்கு வேண்ணா, ஒரு வீடு கூட இல்லாதவனைக் கட்டிக்கிற பெருந்தன்மை இருக்கலாம். ஆனால், என் பொண்டாட்டியை வாடகை வீட்டில் தங்க வைக்க எனக்கு விருப்பமில்லை. அதே நேரம் வீட்டோட மாப்பிள்ளையாகவும் என்னால் முடியாது ஹேமா. என்னைப் புரிஞ்சுக்கோயேன்”, கெஞ்சலாகச் சொன்னான் இப்பொழுது.

“.....”.

அதன் பிறகு அவன் பேசிய எதையுமே கேட்க, ஜீவா அங்கே இருக்கவில்லை. அவன் மனம் குழம்பித் தவித்தது.

கணேஷின் வீட்டுக்கு என்னவாயிற்று? இந்தக் கேள்வியே அவன் மனதை வண்டாகக் குடைந்தது.

இரவு பதினோரு மணிக்கு, இதற்குமேல் அங்கே இருக்க முடியாமல், “வீட்டுக்குப் போகலாம்”, என்று சொல்லிக் கொண்டு கிளம்பி விட்டான்.

இருவரும் வீட்டுக்கு வந்து, சாப்பிட்டு முடிக்கும் வரை எதுவுமே பேசவில்லை. சாப்பிட்டு முடித்தவுடன், “கணேஷ் நான் உன்கிட்டே ஒரு விஷயம் கேட்டால் என்கிட்டே மறைக்காமல் உண்மையைச் சொல்லுவியா?”, தீர்க்கமாக அவனைப் பார்த்துக் கேட்க, உள்ளுக்குள் உதறல் எடுத்தது அவனுக்கு.

“கண்டிப்பா சார்.....”, பட்டெனச் சொன்னான்.

“நீ எனக்குத் தந்த ஒன்றரைக் கோடி ரூபாய் பணம் எப்படி வந்தது?”, பார்வை அவனைத் துளைத்தது.

“அது நான்...., நான்...., அரேஞ் பண்ணினேன் சார்....”, தடுமாறினான்.

“அதுதான் எப்படி....”, அசையவே இல்லை ஜீவா.

“அது எதுக்கு சார் இப்போ....?”, மென்று முழுங்கினான்.

“ஒண்ணு நீ இப்போ உண்மையைச் சொல்லணும்...., இல்லையா இங்கே இருந்து போய்டு....”, அவன் பேசுவதைக் கேட்ட முத்துவும் திகைத்தார்.

“நீங்க என்னை இங்கே இருந்து போகச் சொன்னால்...., நான் போய்டுறேன் சார்...”, தலை கவிழ்ந்து எழுந்து செல்லப் போனான்.

“இந்த வீட்டை விட்டு வேண்ணாலும் போவ..., ஆனா, எனக்காகத்தான் உன்னோட வீட்டை வித்தன்னு சொல்ல மாட்ட இல்லை. அதோட, அதுக்காகத்தான் உன்னோட

கல்யாணமும் தள்ளிப் போயிருக்கா? உனக்கு வயசு, ஏறுதா இறங்குதா?

“ஏண்டா இப்படிப் பண்ணுற? இந்த நன்றிக் கடனை நான் எப்படி அடைக்க....., உன்னை எவ்வளவு விரட்டினாலும் போகாமல் இப்படியே என்னையே சுத்தி வாறியே நான் இதுக்கு என்னக் கைம்மாறு செய்யட்டும்”, கணேஷை இறுக அணைத்துக் கொண்டான்.

“என்னால் தான் உங்க வாழ்க்கை இப்படித் தடம் மாறிப் போச்சு, அதைச் சரி செய்யிறது என்னோட கடமை. என்னோட கடமையில் பாதியை முடிச்சுட்டேன். மீதியை, நான் எப்போ முடிக்கப் போறேன்னு தெரியலை. அதுவும் முடிச்சுட்டேன்னா, எனக்கு நிம்மதி சார்”, கணேஷும் அவனை அணைத்துக் கொண்டு சொன்னான்.

“என்ன சொல்லுற கணேஷ்.....”,

“ஆமா சார்....., தொழில் இனிமேல் நல்லபடியா போகும்னு எனக்கு நம்பிக்கை இருக்கு. ஆனால்....., உங்க வாழ்க்கை, அஞ்சலிக்கு ஒரு அம்மா....., வரணும் சார். அதுக்குப் பிறகுதான் எனக்குக் கல்யாணம்”, உறுதியாகச் சொன்னான்.

“எனக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி வைன்னு நான் உன்கிட்டச் சொன்னேனா?”, கோபமாகக் கத்தினான்.

“உங்களுக்கு ஒரு மனைவி வேண்டாம்....., ஆனால் அஞ்சலிக்கு ஒரு அம்மா வேணும். எவ்வளவு நாள்தான் உரிமை இல்லாத இடத்தில் அவளை விட்டு வைக்கிறது. நானே உங்ககிட்டே சொல்லணும்னு நினைச்சேன்.....,

“திவ்யா அவங்களைப் பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க? அவங்க மகன் கண்ணனும், அஞ்சலியும் நல்லாப் பழகுறாங்க. கண்ணனுக்கும், அஞ்சலி மாதிரியே இன்னொரு மறு பக்கமும் இருக்கு.....”, சொல்லிவிட்டு,

ஏதாவது மறுப்புச் சொல்கிறானா என்று ஜீவா முகத்தைப் பார்க்க,

“நீ எதுவும் சொல்ல வேண்டாம்....., எனக்குத் தெரியும்....”, தாடை இறுகச் சொன்னான். அவனது பதிலில் திகைத்தான் கணேஷ். அதை விடுத்து, “நீங்க ரெண்டு பேரும் வாழ்க்கையில் இணையணும்னு நாங்க விரும்புறோம்....., ஹேமா, தங்கம் அத்தை எல்லோரும். இதைப் பற்றி ஹேமா ஏற்கனவே திவ்யா கிட்டே பேசி இருக்கா...”, அதற்கு மேல் சொல்லாமல் நிறுத்திவிட்டான்.

“திவ்யா என்ன சொன்னாங்களாம்.....?”, குரல் சாதாரணமாகவே ஒலித்தது.

“அவங்க என்ன சொல்லியிருப்பாங்கன்னு நீங்க நினைக்கறீங்களோ அதைத்தான் அவங்க சொல்லி இருக்காங்க. அவங்க நிலையில் யார் இருந்தாலும், இன்னொரு ஆணை அவங்களால் ஏத்துக்கவே முடியாது.

இப்போ அஞ்சலியை வச்சுட்டு நீங்க என்ன கஷ்டப் படுறீங்களோ, அதே கஷ்டம் தான் கண்ணனை வச்சுட்டு அவங்க படுறாங்க, சொல்லப் போனால், அதைவிட ஒரு படி அதிகமாகவே....”, பெரிய பெருமூச்சு பிறந்தது, இருவரிடம் இருந்தும்.

“சரி, நீ போய் தூங்கு. இங்கே கீழே இருக்கும் ஏதாவது ரூமில் படுத்துக்கோ. கெஸ்ட் ஹவுஸ் போக வேண்டாம்”, சொல்லிவிட்டு, அவனது பதிலை எதிர் பார்க்காமல் சென்றுவிட்டான்.

படுக்கையில் விழுந்த அவனுக்கு, உறக்கம் மட்டும் வருவேனா என்று விளையாட்டுக் காட்டியது. என்றும் நடப்பதுதான், ஆனால் இன்று என்னவோ ஒரு இனிய அவஸ்த்தையாகவும், பெரிய துன்பமும், மனதை மாறி மாறி அழுத்தியது.

அதன் பிறகு வந்த நாட்கள் அசாத்திய அமைதியுடனே கழிந்தது அனைவருக்கும். திவ்யாவும், ஜீவாவும் நேருக்கு நேர் கண்டாலும், திவ்யாவின் கண்கள் வழக்கம்போல் ஜீவாவின் கண்களைச் சந்திக்கவில்லை. அதேபோல் அவள் உடல் மொழியிலும் மாற்றம் இருக்கவில்லை.

ஜீவா அவளிடம் பேச விரும்பினாலும், அதற்கான சந்தர்ப்பம் சரியாக அமையவில்லை. அவன் பேச விரும்பிய முக்கியக் காரணமும் அஞ்சலிதான். திவ்யா அம்மா வேண்டும் என்று ஒரே அடம்.....

அதிலும் ஹேமாவும், கணேஷும் சேர்ந்து, அவளைக் கிளப்பி விடவே, திவ்யாவை 'மம்மி' என்றே அழைக்கத் துவங்கிவிட்டாள். பள்ளிக்கு வரும் மற்றப் பிள்ளைகளின் பெற்றோர், இதைக் கேட்டு, என்னவென்று கேட்க, அஞ்சலியோ, 'இது என் மம்மி' என்று அவர்களிடமும் சொல்லி வைக்க,

இந்தச் செய்தி கண் காது வைத்துப் பரவத் துவங்கியது. திவ்யாவிற்கு, இது ஒரு பக்கம் மன உளைச்சலைக் கொடுத்தாலும், தங்கமும், ஹேமாவும் அவளுக்குப் பக்கபலமாக இருக்கவே, அவற்றைக் கண்டுகொள்ளாமல் விடத் துவங்கிவிட்டாள்.

திவ்யாவை உலுக்கிய ஒரு சம்பவம் அன்று நடந்தது. ஜீவா ஐந்து நாள் வெளியூர்ப் பயணம் முடித்து அன்று வந்தான். அவனைக் காணவே அஞ்சலி, அப்பா....., என்ற சொல்லுடன் விரைந்தோடிச் செல்ல,

அவளுக்கு இணையாகக் கண்ணனும் ஓட....., அஞ்சலியைத் தூக்கிச் சுற்றியவன், அங்கே வந்தக் கண்ணனை ஒரு நொடி கவனிக்கவில்லை. அதை உணர்ந்த கண்ணனின் முகம் சட்டென வாடி விட்டது. ஜீவா அதை உணர்ந்ததும், எப்படி அவனை நெருங்குவது என்றத் தயக்கத்தில் அவன் முகம் பார்க்க, கண்ணனோ அழுதுகொண்டு அங்கிருந்து ஓடியே விட்டான்.

அது பெரிய மன வருத்தத்தை ஜீவாவுக்கும், திவ்யாவிற்கும் கொடுத்தது.

அப்பொழுது அஞ்சலியும் கண்ணனும் பக்கத்துக்கு ஒருவராகப் படுத்து, திவ்யாவை அணைத்திருந்தார்கள். திவ்யா வழக்கம்போல், உறக்கத்தைத் தொலைத்து, மோட்டுவளையை வெறித்த வாறு, அந்த சம்பவத்தை அசை போட்டுக் கொண்டிருந்தாள். ஹேமா அவளைப் பார்த்தவள்,

“ஹம்...., அதெப்படி திவ்யா, அஞ்சலியையும் கண்ணனை மாதிரியே மாத்திட்ட, உன்னை உரசிகிட்டு படுத்தால்தான் அவளுக்குத் தூக்கமே வருது.....”, அவளைக் கேலி செய்தாள்.

“ம்ச்...., கிண்டல் பண்ணாதே ஹேமா....., எனக்கு அஞ்சலி வேற, கண்ணன் வேறையா தெரியவே இல்லை. எவ்வளவு சமத்து தெரியுமா? ஒரு முறை ஒரு விஷயம் சொல்லிட்டா, அடுத்த முறை அதைச் சொல்லவே வேண்டாம்.

“அவ்வளவு கவனம், அவ்வளவு பொறுப்பு. எப்படித்தான் என்கிட்டே ஒட்டிக்கிறாளோ....., அதைவிட, கண்ணனோட குணமும் இவளோட குணமும் எதிர் துருவம்....., ஆனாலும் ரெண்டுபேரும் அவ்வளவு ஒற்றுமை”, இருவரின் தலையையும் வாஞ்சையாக வருடி, இதழ் ஒற்றினாள்.

“லவ் யு அப்பா.....”, திவ்யாவின் வருடலும், முத்தமும், அஞ்சலியை அவள் தந்தையை நினைக்க வைத்தது.

“இது நல்லா இருக்கு....., உன்னை உரசிகிட்டு படுத்துட்டு, அவங்க அப்பாவை நினைக்குது பாரேன்.....”, போலியாகக் கோபம் கொண்டாள்.

“ஹேய் சும்மா இரு நீ...., அவளுக்கு அவங்க அப்பாவை அவ்வளவு பிடிச்சிருக்கு. அதனால் அப்படிச் சொல்லுறா....., இதில் கோபப்பட என்ன இருக்கு....”, அஞ்சலிக்கு வக்காலத்து வாங்கினாள்.

“அம்மா தாயே, உன் பொண்ணுக்கு, அவங்க அப்பாவை புடிக்கட்டும், பிடிக்காமல் போகட்டும். என்னை ஆளை விடு. அது எப்படித்தான் வெறும் விட்டத்தில் நட்சத்திரத்தை எண்ணுறியோ போ”, அலுத்துக் கொண்டாள்.

“ஆமா இவ என்னோட பொண்ணுதான்.....”, உண்மையான நேசம் அவள் குரலில்.

“பொண்ணு மட்டும் வேணும்....., அவங்க அப்பா வேண்டாமா? நல்லா இருக்கு உன் நியாயம். நான் சொன்னதை யோசிக்கவே இல்லையா திவ்யா. எவ்வளவு நாள்...., இல்லை முழுசா ரெண்டு மாசம் ஓடிடுச்சு.

“ஜீவா அண்ணனும் உன்கிட்டே பேச, எவ்வளவோ முயற்சி செய்யிறாங்க. நீ இப்படி பிடிகொடுத்துப் பேசாமல் இருந்தால் எப்படி? நாங்களும் இவ்வளவு நாள் பொறுத்துட்டோம். இனிமேல் எங்களால் பொறுத்துக்க முடியாது.

“நாளைக்கே உங்க ரெண்டு பேரையும் பேச வைக்கிறதா நாங்க முடிவு பண்ணிட்டோம். ரெண்டுபேரும் நிதானமா பேசி ஒரு முடிவுக்கு வாங்க.....”, பிடிவாதமாகச் சொல்லி முடித்துவிட்டாள்.

அதே நேரம், கண்ணனும் “அப்பா...”, என்று முனக, அவனுக்காகவாவது தான் பேசியே ஆகவேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள்.

திவ்யாவால் அவனிடம் மனம் திறந்து பேச முடியுமா? ஜீவா அவளது பேச்சைப் புரிந்து கொள்வானா???

***

தாகம் - 34.

மழலையின் சிரிப்பில்

துன்பங்களைத் தொலைக்க

மழலையின் சிரிப்பைத்

தொலைத்தவனை என் செய்ய.....?

தர்ஷிணி, அழும் குழந்தைக்குப் பாலூட்டி முடித்து, செவிலியிடம் கொடுத்தாள். பசியாறிய பின்னர் அழுகை மறந்து, உறங்கி விட்டிருந்தாள் அவள். தர்ஷிணி, குழந்தையைப் பற்றியோ, அதன் தாய், தந்தையைப் பற்றியோ எதுவும் கேட்டுக் கொள்ளவில்லை.

அந்தச் செவிலிதான் மனம் கேளாமல் புலம்பித் தள்ளிவிட்டாள். அவள் சொல்வதை அமைதியாகக் கேட்டுக் கொண்டாள்.

இரவு உணவு உண்ட பிறகும் அவள் அங்கேயே இருக்க, “சிஸ்டர் நீங்க போங்க, உங்களுக்கு வேலை இருக்குமே, நான் பாத்துக்கறேன்”, தயக்கமாகச் சொன்னாள்.

“இல்ல மேம், உங்களை கவனிச்சுக்கச் சொல்லி, என்னைச் சொல்லி இருக்காங்க. அதுவும், உங்களுக்குப் பொம்பளைத் துணை இல்லைன்னு சொன்னேன்....., உடனே, எங்க புனிதா டாக்டர் என்னை இங்கேயே இருக்கச் சொல்லிட்டாங்க.

“நார்மல் டெலிவரி என்பதால், நீங்க ரெண்டு நாளில் வீட்டுக்குப் போய்டலாம்னு சொன்னாங்க....., ஆனா இப்போ.....”, சொல்வதற்குத் தயங்கினாள்.

“இப்போ என்ன.....?”, படபடப்பாகக் கேட்டாள். தர்ஷிணிக்குப் பயம், எங்கே, பில் கட்டாததால், தன்னை

இப்பொழுதே வெளியேற்றி விடுவார்களோ என்று பயந்தாள். அதனாலேயே வேகமாகக் கேட்டாள்.

“ஹையோ..., நீங்க பயப்படுற மாதிரி எதுவும் இல்லை. அந்தப் பச்சக் குழந்தைக்கு, இன்னும் ரெண்டு நாள் அதிகமா தாய்ப்பால் கிடைத்தால் நல்லதுன்னு பீல் பண்ணுறாங்க. அதான் உங்களை ஒரு ஐந்து நாள் கழிச்சு வீட்டுக்குப் போகச் சொல்லி, கேட்கணும்னு அவங்க நினைக்கிறாங்க.

“உங்க ஹஸ்பன்ட் வந்தவுடனே அவர்கிட்டே பேசலாம்னு இருக்காங்க. அவர் எப்போ வருவார்?.....”, செவிலி கேட்டுக் கொண்டே போக, தர்ஷிணிக்கு முகத்தில் இருந்த மொத்த ரத்தமும் வடிய, முகம் வெளிறியது.

அவள் என்னவோ, அழும் குழந்தையின் பசியைத் தாங்க முடியாமல்..., ஒரு வேளை, அதன் பசியை ஆற்றினாள். அப்படிப் பாலூட்டும் பொழுதே, எங்கே வித்தார்த் அந்த நேரம் வந்து விடுவானோ, குழந்தைக்குப் பால் கொடுப்பதைப் பார்த்தால் எதையாவது சொல்லிவிடுவானோ, என்று பயந்தது, அவளுக்கு மட்டுமே தெரியும்.

அப்படியிருக்க, இவர்கள், ஐந்து நாள் தன்னை இருக்கச் சொல்வதை, அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. அதை, அந்தச் செவிலியிடமும் சொல்ல முடியாமல், தொண்டையில் குத்திய மீன் முள்ளாக, நெருடிக் கொண்டே இருந்தது.

அதை மறைத்தவாறே, “சிஸ்டர், எனக்குப் போன் செய்யணும், கொஞ்சம் அதுக்கு ஏற்பாடு பண்ணுறீங்களா?”, தன்னை இப்படி ஒரு நிலையில் கணவன் விட்டுச் சென்றதை நினைத்துக் கலக்கமாகவும், அவமானமாகவும் இருந்தது.

“இதோ, என்னோட போன்லயே பேசுங்க”, சொல்லிவிட்டு அவளது அலைபேசியை கொடுத்துவிட்டு, அங்கிருந்து

வெளியேறினாள்.

தர்ஷிணி முதல் வேலையாக வித்தார்த்துக்கு அழைத்தாள். ரிங் போய்க்கொண்டே இருந்ததே தவிர, அவன் எடுக்கும் வழியைக் காணோம். இதயம் தொண்டைக் குழியில் துடித்தது அவளுக்கு. அதை மறைத்தவாறே, நடுங்கும் கரங்களால் மீண்டும் முயன்றாள்.

இந்த முறை, அவளை ஏமாற்றாமல் அவனது குரல் ஒலித்தது. "என்னங்க....., நான்தான்....., இங்கே நான் தனியா இருக்கேன்...., நீங்க எங்கே போனீங்க? எப்போ வாறீங்க? அத்தை மாமா, அண்ணிட்ட எல்லாம் சொல்லிட்டீங்களா?

"அக்காவுக்கும், அம்மாவுக்கும் சொன்னீங்களா....? என்ன சொன்னாங்க..? அவங்க எல்லாம் எப்போ வாறாங்களாம்...?", தன் மனக் கவலைகள் அனைத்தையும் அவனிடமிருந்து மறைத்துவிட்டு, தொண்டைக்குழியில் கசந்துவழியும் உணர்வையும் மென்று முழுங்கிக் கொண்டு, சாதாரணமாகப் பேச முயன்றாள்.

ஆனால் அவனுக்கு, அந்தக் கவலைகள் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. "ஏய்...., இப்போ எதுக்குடி போன் பண்ணுன? அதான் பில்ல மொத்தமாக் கட்டிட்டு தானே வந்தேன். சாப்பாடும் அங்கேயே போடுவாங்கன்னு சொன்னாங்களே. இதுக்கு மேல நான் என்ன செய்யணும்?

"அம்மாவுக்கெல்லாம், நீ வீட்டுக்கு வந்ததும் சொல்லிக்கலாம். நீயும் யார்ட்டையும் சொல்லிட்டு இருக்காதே....., மூணு நாளில் உன்னைக் கூட்டி வரலாம்னு சொன்னாங்க...., இப்போ இங்கே உன்னையும், அந்த சனியனையும் யார் கவனிக்கிறது?

"அதனால், ஒரு அஞ்சு நாளைக்கு நீ அங்கேயே இரு....., உனக்கு என்ன, மகாராணியை கவனிக்க நர்ஸ் இருக்காங்க. என்னை யார் கவனிப்பா? உனக்கு அந்த

நினைப்பெல்லாம் இருக்காது...., நான் வந்து உனக்குச் சேவகம் பண்ணணுமாக்கும்.

“ஒழுங்கு மரியாதையா உடம்பை கவனிச்சுட்டு, வீட்டுக்கு வந்து சேர்...., என்னை இப்படிக் கூப்பிட்டு எரிச்சல் படுத்தாதே....., இப்போ, உங்க வீட்டில் உள்ளவங்களுக்குப் போன் செய்து, சொல்லித்தான் தீருவன்னா, எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை....,

“அவங்கள, இங்கே வீட்டில் எல்லாம் என்னால் தங்க வச்சுக்க முடியாது. ஏதாவது ஹோட்டல்ல தங்கிக்கிறதா இருந்தால் வரச் சொல்....”, நெஞ்சில் கொஞ்சம் கூட ஈரமே இல்லாமல்...., தன் வாரிசும், அதை ஈன்றெடுத்தத் தன் மனைவியும், தனியாக இருக்கிறார்கள், அவர்களைப் பார்ப்பது தன் கடமை என்ற நினைப்புக் கொஞ்சம் கூட இல்லாமல்,

பணம் கட்டி அவளை ஹாஸ்பிட்டலில் தள்ளிவிட்டதைப் பெரிதாகப் பேசிவிட்டு, அவளுக்கு அவள் வீட்டு ஆட்களின் துணை கூட கிடைக்க முடியாதவாறு செய்துவிட்டு, ஆணவமாக அலைபேசியை வைத்துவிட்டான்.

விக்கித்து அமர்ந்துவிட்டாள் தர்ஷிணி. வழக்கமாக அவள் மனதில் எழும் அதே கேள்வி, பூதாகரமாக எழுந்து அவளை விழுங்கப் பார்த்தது. ‘இவன் மனிதன் தானா...?’, இந்தக் கேள்வி மறுபடியும் எழுந்து அவளை இம்சை செய்தது.

வித்தார்த் வாழ்க்கையை ஒன்று செக்ஸ்அடிப்படையில் பார்த்தான், அல்லது பணம் அடிப்படையில் பார்த்தான், இல்லையா, ஆண் என்ற மிதப்பில் பார்த்தான், அதைத் தவிர்த்து, அன்பு, பாசம், அரவணைப்பு, பாதுகாப்பு, நம்பிக்கை, துணை....., இப்படி எந்த விதத்திலும், வாழ்வை அவன் பார்க்கவே இல்லை.

வாழ்க்கையில் முதல் முறையாக, குழந்தை பெற்று மிகப் பெரிய தவறு செய்து விட்டோமோ என்று எண்ணினாள். தன்வாழ்வை நினைத்து அவள் கலங்கவில்லை. மாறாக....,

தன் குழந்தையின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று கலங்கித் தவித்துப் போனாள்.

அம்மா, அப்பா, அக்கா, அத்தான், மாமா, அத்தை, அண்ணி, அண்ணா என இவ்வளவு சொந்தங்கள் இருந்தும், ஒரு அனாதையாக அந்த மருத்துவமனையில் அவள் இருக்கும் நிலையைக் கண்டு, உள்ளம் வெதும்பினாள்.

வெளியே சென்றுவிட்டு வந்த சிஸ்டர், அவள் இருந்த நிலையைப் பார்த்து, வேகமாக வந்து அவள் நெற்றியிலும், கழுத்திலும் கை வைத்துப் பார்த்தாள். “என்ன ஆச்சு...? ஏன் இப்படி இருக்கீங்க...? ஏதாவது பிரச்சனையா...? ஏதாவது செய்யிதா..?”, அவள் உடல் நிலையைப் பற்றிய கவலையில் கேட்டாள்.

அவள் மனதில் இருந்த துன்பத்தை அவள் அறிய வாய்ப்பில்லையே. “எனக்கு ஒண்ணும் இல்லை சிஸ்டர்....., என்னமோ யோசனை”, சொல்லிவிட்டு, மேலே பேசப் பிடிக்காமல், கண்களை மூடி, மகனை அணைத்தவாறு படுத்துக் கொண்டாள்.

கண்களை மூடி இருந்தாலும்...., அவ்வளவு அலுப்பிலும் ஒரு பொட்டுத் தூக்கம் கூட அவளுக்கு வரவில்லை. தொடர்ந்து வந்த ஐந்து நாட்களும், அவள் இரண்டு பிள்ளைகளுக்குத் தாயாகிப் போனாள்.

அந்தப் பெண் குழந்தையும் அவள் அணைப்பிலேயே இருக்க விரும்பியது. அவள் அணைப்பை விட்டு விலகினாலே வீறிட்டு அலறினாள். தர்ஷிணிக்கு, அந்தக் குழந்தையின் வீட்டில் இருந்து, வீட்டுச் சாப்பாடு கொண்டு வந்து கொடுக்கப் பட்டது.

அவர்கள் இரு குடும்பங்களுக்கு நடுவில், அந்தச் செவிலியே பாலமாக இருந்தாள். அன்று ஐந்தாம் நாள்....., அவளைப் பார்க்க, ஒரு வயதான பெண்மணி சக்கர நாற்காலியில் வந்தார். மௌனமாக அவள் கரங்களைப் பற்றிக் கொண்டார்.

“ரொம்ப நன்றிம்மா....., எங்க வீட்டு வாரிசுக்கு, நீ உயிர்ப்பால் கொடுத்து காப்பாத்தி இருக்க. அதுக்கு நன்றின்னு ஒரு வார்த்தையில், பதில் கைம்மாறு செஞ்சுட முடியாது. என் மகனுக்கும் உன்கிட்டே நன்றி சொல்ல ஆசைதான். ஆனால் எந்த முகத்தை வைத்துக்கொண்டு உன் முகத்தைப் பார்ப்பதுன்னு அவனுக்குத் தயக்கம்”, சொல்லிவிட்டு, தன் கழுத்தில் கிடந்த செயினைக் கழட்டி, தர்ஷிணியின் மகன் கழுத்தில் போட்டார்.

ஆனால் அவர் செய்கையைத் தாங்க முடியாமல், “வேண்டாம்மா...., இதை நான் வாங்கினால்...., நான் கொடுத்த தாய்ப்பாலுக்கு விலை வாங்கிய மாதிரி ஆயிடும். தயவு செய்து வேண்டாம். உங்க பேத்தியையும், நான் என் மகளாகத்தான் பாக்குறேன்....”, சொல்லிவிட்டு, அந்தச் செயினை எடுத்து, அந்தக் குழந்தையின் கழுத்தில் போட்டு விட்டாள்.

அவள் சொன்னதில் இருந்த உண்மை புரிய, அமைதியானார் பெரியவர். “உன்னை அழைச்சுட்டுப் போக யாரும்மா வாறாங்க?...”, கண்களைச் சுழல விட்டவாறே கேட்டார்.

“யாரும் வரலம்மா...., அவருக்கு ஆபீஸ்ல கொஞ்சம் வேலை அதிகம் அதான் வர முடியலை. நான் கால் டாக்ஸி பிடிச்சுப் போய்டுவேன்”, அவருக்குச் சமாதானம் சொன்னாள்.

“என்னது... தனியா டாக்ஸியில் போறியா...? அதெல்லாம் எதுவும் வேண்டாம். எங்க டிரைவர் உன்னை வீட்டில் விட்டுடுவார்”, அவளது எந்த மறுப்பையும் சட்டை செய்யாமல், அவளை அவர்களது காரில் அனுப்பினார்.

அவளும் வேறு வழியில்லாமல், அவரது பேத்திக்கு, இறுதியாக முத்தமிட்டுவிட்டுக் கிளம்பிப் போகையில், அவளது பிரிவு அறிந்ததுபோல், அந்தக் குழந்தை வீறிட்டு அழ, போகும் முன்னர் இறுதியாக அவளது பசியாற்றிவிட்டே சென்றாள்.

கன்றைப் பிரியும் தாய்ப்பசுவாக, தர்ஷிணியின் மனம் பாரமாகிப் போனது. அவர்களைத் திரும்பியும் பாராமல் காரில் சென்று ஏறிக் கொண்டாள். கார் அவளது வீட்டை நோக்கிச் செல்லத் துவங்கியது.

அவள் மனதில் பெரிய பாரம் ஏறி அமர்ந்து கொண்டது. வாழ்க்கை, இன்னும் தனக்கு என்ன வைத்திருக்கிறது என்பதை எண்ணும் பொழுதே....., திகிலாக இருந்தது. மீண்டும், தான் அந்த இருட்டு கூண்டுக்குள் அடைபட வேண்டுமே என்று மனம் கிடந்து அடித்துக் கொண்டது.

டிரைவரிடம் சொல்லி, பாதி வழியிலேயே இறங்கிக் கொண்டாள். மீண்டும் எப்படியும், அவர்கள் தன்னைத் தேடி வருவார்கள் என்பது அவளுக்குத் தெரியும். எனவேதான், தன் முகவரி அவர்களுக்குத் தெரியாத வண்ணம் தலைமறைவாகி விட்டாள்.

அவர்களோடான உறவை அப்படியே முறித்துக் கொண்டாள். வீட்டுக்கு அவள் வந்த பொழுது கதவு திறந்தே இருந்தது. வீட்டில் பேச்சுச் சத்தம் கேட்கவே, கொஞ்சம் ஆர்வமாக உள்ளே நுழைந்தாள்.

அவளைப் பார்த்தவுடன் அங்கே மயான அமைதி குடி கொண்டது. அவளது மாமியார், நாத்தனார், வித்தார்த் அனைவரும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். இவளைப் பார்த்ததும் காவியாவும், அவள் அன்னையும் முகத்தைத் திருப்பிக் கொண்டு, அங்கிருந்த மற்றொரு அறையில் புகுந்து கொண்டார்கள்.

திகைத்துப் போனாள் தர்ஷிணி. அவர்களது வீட்டு வாரிசைப் பெற்றுக் கொண்டு வந்திருக்கிறேன்...., மருத்துவமனையில் தான் தன்னை வந்து பார்க்கவில்லை, வீட்டிற்கு வந்த அவளை 'வா' என்று கூடச் சொல்லாமல் அவர்கள் சென்ற விதம்....., ஓய்ந்து போனாள். இந்த உலகில் தன்னையும், தன் மகனையும் நேசிக்க ஒரு ஜீவன் கூட இல்லையா? அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

கணவனின் முகத்தைப் பார்க்க, “ரூமுக்குப் போ...., ஆனா ஒண்ணு..., இந்தச் சனியனோட சத்தமே கேக்கக் கூடாது ஆமா.....”, கட்டளை இட்டுவிட்டு வெளியேறினான்.

அறைக்குச் சென்று, படுக்கையில் விழுந்து குமுறி அழுதாள்...., அனைவரின் புறக்கணிப்பும் அவளை வாட்டி வதைத்தது. ஆனால் தன் அத்தை, அண்ணியிடம், பேசாமல் இருக்க அவளால் முடியவில்லை. தன் உடல் நிலையையும் மீறி, இரவு உணவை அவர்கள் அனைவருக்கும் சேர்த்தே தயாரித்தாள்.

அதன் பிறகு அவர்களை, அறைக்குச் சென்று அழைத்தாள். “எங்களுக்கு எதுவும் வேண்டாம்....”, மாமியார் மரகதம் முகத்தில் அடித்ததுபோல் சொல்லி, கதவை இறுகத் தாழிட்டார்.

“அத்த...., உங்கப் பேரனைப் பாக்கணும்னு உங்களுக்குத் தோணவே இல்லையா? நாங்க அப்படி என்ன தப்பு செஞ்சோம்?....”, தாங்க முடியாமல் கேட்டுவிட்டாள்.

“வாடியம்மா...., கல்யாணம் ஆகி சென்னைக்கு வந்தவதான்....., அதுக்குப் பிறகு ஒரு முறையாவது எங்ககிட்டே போன் செஞ்சு பேசி இருக்கியா? நாங்களாகப் பேசினால்தான்.... நீ பேசி இருக்கியா? உண்டான விஷயம் கூட நாலு மாசம் கழிச்சுத் தெரிஞ்சுது.

“வந்துப் பாக்கலாம்ன்னா....., நாங்க வந்தால் நீ பிள்ளையே பெத்துக்க மாட்டேன்னு சொன்னியாமே...., இப்படிச் சொன்ன பிறகு, நாங்க எப்படி உன்னை வந்துப் பாக்க? இப்போ கூட, பிள்ளை பிறந்ததைச் சொன்னால், அவனையே ஹாஸ்பிட்டலுக்கு வரக் கூடாதுன்னு சொன்னியாம்....,

“என் புள்ளை, அவனோட புள்ளையைப் பாக்க வர முடியாமல் எவ்வளவு தவிச்சுப் போனான் தெரியுமா? கிட்டே இருந்து பார்த்த எங்களுக்குத்தான் தெரியும். அப்படி

இருந்தபோது கூட, நாங்க எதுக்கு இங்கே வந்து இருக்கோம்?

“எங்கப் பேரப் புள்ளையைப் பாக்கத்தான். எங்கே, அவனைத் தூக்கினால், அதுக்கும் நீ ஏதாவது சொல்லி, வீட்டை விட்டுப் போய்டுவியோன்ற பயத்தில்தான், குழந்தையைத் தூக்காமல் வேடிக்கைப் பாத்துட்டு இருக்கோம்.

“அப்படித் தவிச்சுட்டு இருக்க எங்களைப் பாத்து, இப்படிச் சொல்லுறியே. நீ என்ன, நிமிஷத்துக்கு ஒரு வேஷம் மாறுவியோ?”, கவலையும், ஆற்றாமையும், கோபமுமாகப் புலம்பினார் அவர். அவர் பேச்சைக் கேட்ட தர்ஷிணிக்கு மயக்கம் வராத குறைதான்.

தன் கணவன், தனது குறையை மறைக்க, அவர்களிடம் என்னவெல்லாம் சொல்லி வைத்திருக்கிறான் என்பதை அறிந்த போது, துடித்துப் போனாள். அவர்கள் மகனை, அவர்கள் இவ்வளவு நம்பும் பொழுது, அதைத் தன்னால் உடைக்க முடியுமா? தான் சொல்வதை அவர்கள் நம்புவார்களா என்ற சந்தேகம் எழுந்தது.

அதிலும், தன் மகனைக் காண முடியாமல் அவன் துடித்துப் போனான் என்று சொன்னதைக் கேட்ட பிறகு, அவளுக்கு அந்த நிலையிலும் சிரிப்பு வரும்போல் இருந்தது.

அதை மறைத்துக் கொண்டு, “இருங்க அத்த, நான் குழந்தையைத் தூக்கிட்டு வாறேன்”, சொல்லிவிட்டு வேகமாக அவள் அறைக்குள் நுழைந்தாள். அந்த நேரம், வெளியே சென்றிருந்த வித்தார்த் வரவே, நேராக அவர்கள் அறைக்குச் சென்றவன் அவளைத் தடுத்தான்.

“எங்கடி போற.....?”, அவன் கேள்வியே, எதுவோ பெரிதாக வரப் போவதை அவளுக்கு உணர்த்தியது.

அவள் அமைதியாக இருக்கவே, “அதெப்படிடி....., நான் என்ன செஞ்சாலும், அதுக்கு எதிராவே செய்யணும்னு

முடிவோட இருக்க? நான் எவ்வளவு கச்சிதமா பிளான் பண்ணி, எல்லோரையும் உன்னை விட்டுத் தள்ளி வச்சா....., கொஞ்சம் கூட மான ரோஷம் இல்லாமல், எல்லாரோடவும் பழகணும்னு நினைக்கிறியே...., உனக்குக் கொஞ்சம் கூட வெக்கமே இல்லையா?

இப்போ வேகமா எங்கேயோ போறியே, எங்கே...? இந்தச் சனியனைக் காட்டி, அவங்களை உன் பக்கம் திருப்பவா....", கண்களை விரித்து அவன் கேட்க, அப்படியே அவன் முகத்தில் ஒரு குத்து விட்டால் என்ன என்ற வெறி கிளம்பியது அவளுக்கு.

அவனையே வெறித்துப் பார்த்துக் கொண்டே இருக்க, "இதோ பார்...., இந்த உலகத்தில், என் ஒருத்தனைத் தவிர, நீ வேற யாரோட பேசினாலும் பழகினாலும் எனக்குப் பிடிக்காது. உனக்கு நல்லது, கெட்டது....., எல்லாத்தையும் நான்தான் செய்வேன்.....

"அதையும் மீறி, நீ யாரோடாவது பழகணும்னு நினைச்ச...., உன்னை எதுவுமே செய்ய மாட்டேன்...., கையில் வச்சு இருக்கியே உன் பிள்ளை....., அது ஒரேடியா போய்டும்..... சொர்க்கத்துக்கு. புரிஞ்சுதா?....", சினிமாவில் வரும் வில்லனைப்போல் ஏற்ற இறக்கங்களோடு அவன் சொல்ல....., அவனுடைய அடக்குமுறையில், மூச்சு முட்டியது அவளுக்கு.

மூளையும், மனமும் மரத்து விட்டவளைப்போல் உறைந்துபோய் அவள் நிற்க, அவனது அதே நிதான நடையுடன் அவளை நெருங்க...., மார்போடு தன் மகனை அணைத்துக் கொண்டு, பின்னால் நகர்ந்தாள். இறுதியில் சுவர் தட்டி அவள் நிற்க, அவளை தன் மூச்சுக்காற்று சுடும் அளவு நெருங்கியவன், அவள் கையில் இருந்த குழந்தையை வெறுப்பாகப் பார்த்தான்.

அவன் அருகாமையை உணர்ந்தவன்போல், குழந்தை வீறிட்டு அழ, "அடச்சீ வாய மூடு.....", கத்தியவன், அவள்

கைகளில் இருந்து குழந்தையைப் பறித்து, படுக்கையில் விட்டெறிந்தான்.

“என்னங்க.....”, அதிர்ச்சியில் குழந்தை இன்னும் அழ, அதைவிட அதிர்ந்த தர்ஷிணி, குழந்தையின் அருகில் செல்ல முயல, அவள் கைகளை அழுந்தப் பிடித்து அவளைத் தடுத்தான்.....

“என்னங்க.. குழந்தைங்க.....”, கெஞ்சினாள் தர்ஷிணி.

“அதுக்கு ஒண்ணும் ஆகாது....., பெட் மேலதானே போட்டேன்...., ஆனா, இனிமேல் நீ நடந்துக்கற முறையில் தான்...., அதை நான் கீழே போடுவதும், தொடாமல் இருப்பதும் இருக்கு....”, சொல்லிக் கொண்டே போனவன்....,

“பிள்ளை பிறந்ததும் சும்மா கும்முன்னு ஆயிட்டடி.....”, சொன்னவனின் கைகள் அவள் மேனியைத் தழுவ, வீறிட்டு அழும் குழந்தையின் அருகில் செல்ல முடியாமல், புழுவாய்த் துடித்தாள் தர்ஷிணி.

“என்னங்க....., குழந்தை மூச்சு விடாமல் அழறாங்க...., தயவு செய்து விட்டுடுங்களேன்....”, கையெடுத்துக் கும்பிட்டு வேண்டினாள்.

அவனோ, அவளை விட்டு, அழும் குழந்தையின் அருகில் சென்றவன், “ஆஆஆ.....”, என உச்சக் குரலில் கத்த, அந்தப் பச்சிளம் குழந்தை, பயத்தில் மூச்சு விடவும் மறந்து ஸ்தம்பித்தது.

“ஐயோ என்ன செய்யிறீங்க.....”, அவனைத் தள்ளி விட்டுவிட்டு, குழந்தையை அள்ளிக் கொண்டு, பாத்ரூமுக்குள் சென்று புகுந்து கொண்டாள். ஆனால் குழந்தை அழாமல், உடல் முறுக்க, கண்கள் மேலே சொருக வெட்டி இழுத்தது அதன் உடல்.....

“ஹையோ...., என் செல்லமே...., உனக்கு என்னடா ஆச்சு.....”, கதறியவள், வேறு வழியில்லாமல் அறையிலிருந்து

வெளியேற, அங்கே நின்ற தன் மாமியார், நாத்தனாரைப் பார்த்துத் திகைத்தாள்.

“பாத்தீங்களாம்மா.... நான் சொன்னப்போ நம்பலையே....., இப்போ, குழந்தையை நான் கேட்டதுக்கு, முடியாதுன்னு சொல்லிட்டு, பாத்ரூமுக்குள்ளே போய் பூந்துகிட்டா....., இப்போ, கண் முன்னாடியே பாருங்க உங்க மருமக லட்சணத்தை...”, அப்பாவியாக முகத்தை வைத்துகொண்டு அவன் நடத்திய நாடகமே ஜெயித்தது அங்கே.

தன் கையில் துடிக்கும் குழந்தையை வைத்துக்கொண்டு உயிரைக் கண்களில் தேக்கிக் கொண்டு, “அத்த... என் குழந்தை...”, அவளது கதறலுக்கு மதிப்பிருக்கவில்லை அங்கே.....

***

தாகம் - 35.

உனக்கு உயிர் கொடுத்தவனே

உனக்கு எமனாக.....

எப்படிக் காக்க நான்.....

சக்திகொடு என் தெய்வமே.....

தர்ஷிணியின் மேல் எவ்வளவுதான் கோபம் இருந்தாலும், அவள் கையில் இருப்பது தங்கள் வீட்டு வாரிசு, அதற்கு உடல்நிலை சரியில்லை என்று சொன்னவுடன், அவன் தாய் மரகதத்தின் கோபம், இருந்த இடம் தெரியாமல் மறைந்தது.

“ஹையோ... பிள்ளைக்கு என்ன ஆச்சு....? உன் வீம்பால், எங்க வீட்டு வாரிசைக் கொல்லப் பாக்குறியா...?”, ஆங்காரமாகக் கேட்டுவிட்டு, அவள் கைகளில் இருந்து பிள்ளையை பறித்துக் கொண்டு, அருகில் இருக்கும் மருத்துவமனைக்கு ஓடினான் வித்தார்த்.

“அவனை ஒண்ணும் பண்ணிடாதீங்க.....”, கதறியவாறு பின்செல்லும் அவளை, வித்தியாசமாகப் பார்த்தார்கள் அனைவரும்.

குழந்தையை அவசர சிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டு சென்று, உடனடியாக மருத்துவம் துவங்க, துரிதமாக அவனது துடிப்பு சரியாக்கப் பட்டது. மருத்துவர், தர்ஷிணியைக் காட்டுக் கத்தலாகக் கத்தித் திட்டினார். பிறந்த குழந்தையை, எப்படிப் பாத்துக்கணும்னு தெரியாது? பிள்ளையை விட்டுட்டு எங்கே போனீங்க..... இன்னும் கொஞ்ச நேரம் கவனிக்காமல் விட்டிருந்தால், குழந்தையோட உயிர் போயிருக்கும்...

“பிள்ளையை ஒழுங்கா பாத்துக்க முடியலன்னா நீங்கல்லாம் எதுக்குமா குழந்தை பெத்துக்கறீங்க....., நீங்க

மலடி இல்லைன்னு நிரூபிக்கவா?", இன்னும் என்ன என்னவோ சொல்லி அவளைத் திட்ட, எதுவுமே அவள் காதில் விழவில்லை.

"டாக்டர்... என் குழந்தையை நான் பாக்கணும்....., ப்ளீஸ்...., அவனை என் கையில் தந்துட்டு, நீங்க என்ன வேண்ணா திட்டுங்க, நான் எல்லாத்தையும் கேட்டுக்கறேன். என் வயித்தில் பிறந்ததுதான், அவன் செய்த பெரிய பாவமே.....,

"எல்லாம் என் தப்புதான்....., நான் குழந்தையே பெத்திருக்கக் கூடாது.., ஹையோ...", அவள் நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுது துடிக்க, அந்த மருத்துவராலேயே மறு வார்த்தைப் பேச முடியவில்லை.

"நீங்க குழந்தையைப் போய் பாருங்க....", சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்து விட்டார்.

தர்ஷிணி வேகமாக உள்ளே செல்ல, அவளைத் தடுக்கப் போன தாயைத் தடுத்தாள் காவியா. 'என்னடி.....', என்பதுபோல் அவர் பார்க்க, "தப்பு, அவங்க மேல இருக்குற மாதிரி எனக்குத் தெரியலம்மா.....", அவரிடம் சொல்லிவிட்டு,

"அண்ணே..., உள்ளே போய் உன் குழந்தையைப் பாரு.....", கூர்மையாக அவனைப் பார்த்து சொல்ல, வேறு வழியில்லாமல் உள்ளே சென்றான்.

அவனைக் கண்டவுடன் வெறிபிடித்தவள் போல் கத்தினாள் தர்ஷிணி. "இப்போ எதுக்கு இங்கே வந்தீங்க...? என் பிள்ளையை ஒரேடியா கொல்லவா....? நீங்க செஞ்சதெல்லாம் போதும்....., தயவு செய்து போய்டுங்க... இல்ல, நான் மனுஷியாவே இருக்க மாட்டேன்", அவள் கண்களில் அவ்வளவு கோபம்.

"மேடம், இது ஐசியு. இங்கேயெல்லாம் இப்படிக் கத்தக் கூடாது. முதல்ல எல்லோரும் வெளியே போங்க....", செவிலி கத்தினாள்.

வித்தார்த் அதைக் கண்டு கொள்ளாமல், “ஏய் என்னடி...., வாய் ரொம்ப நீளுது...., இவனை எனக்குத் தானே பெத்த, அப்போ அவனைப் பாக்க எனக்குத் தெரியும்...”, அவளைத் தள்ளி விட்டுவிட்டு, குழந்தையைத் தொடவே....., அவன் தொடுகையை உணர்ந்து பயத்தில் அழத் துவங்கினான் குழந்தை.

குழந்தை அழவே, “சார்...., குழந்தையைத் தொடாதீங்க. அவனுக்கு இன்னும் உடம்பு சரியாகலை....”, அவனைத் தடுத்தாள் செவிலி. அவன் கைகளுக்குக் குழந்தையைக் கொடுக்காமல்...., தான் தூக்கிக் கொண்டாள். அவள் கைகளுக்குள் அடைக்கலாமானதும், தன் அழுகையை நிறுத்தினான்.

காவியா, தாயை, அர்த்தம் பொதிந்த பார்வை பார்க்க, மரகதத்தின் கண்களில் நீர்....., “என்னடி இது....?”, அதிர்ச்சியாகக் கேட்க, “அம்மா உன் புள்ளையைக் கூப்பிடு நாம வீட்டுக்குப் போகலாம்....”, அவனை ‘அண்ணா’ என்று அழைப்பதையே வெறுத்தாள் காவியா.

மரகதம் அவனை அழைத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றார். “இங்கே என்னடா நடக்குது.....?”, அவனை நிற்க வைத்துக் கேள்வி கேட்டார்.

“அதான் பாத்தீங்களே....., அவ வேணும்னு ஸீன் போடுறா. நீங்க இருந்தால், உங்களை இன்னும் அவமானப் படுத்துவாள். நீங்க கிளம்புங்க....., நான் அவளைப் பாத்துக்கறேன்....”, அவர் கேட்க வருவது புரிந்தும், தெரியாதவன்போல் பேசினான்.

“அம்மா, உங்கப் புள்ளை ரொம்ப விவரம்மா....., என்னமா நடிக்கிறான் பாருங்க...”, அவனிடம் பேசவே அவள் தயாராக இல்லை. எனவேதான் தாயிடம் சொன்னாள்.

“என்ன காவியா சொல்லுற...? நான் நடிக்கிறானா?”, முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கப் பார்த்தான்.

அதன் பிறகு, அங்கே பெரிய வாக்குவாதமே அரங்கேறியது. தாய், தங்கையின் எந்தப் பேச்சுக்கும் அங்கே மதிப்பிருக்கவில்லை. அவர்கள் இருவரும் தர்ஷிணியைப் பற்றியே, அவள் பக்கமே பேச, வெகுண்டான் அவன்.

“போதும் நிறுத்துங்க...., இது என் குடும்ப விஷயம்...., இதில் தலையிட, உங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. என் பொண்டாட்டியை எப்படிப் பாத்துக்கணும், என் புள்ளையை எப்படிப் பாத்துக்கணும்னு எனக்குத் தெரியும். நீங்க கிளம்புறீங்களா?”, ஒரே வார்த்தையில் முடித்துவிட்டான்.

“இதுக்கு மேலையும், அவளை உன்கிட்டே விட்டு வைக்க எனக்கு என்ன, உன்னாட்டம் கிறுக்காடா புடிச்சுருக்கு? அவளை இப்போவே, கையோட ஊருக்குக் கூட்டிப் போறேன். அவ, எனக்கு இன்னொரு மகளா இருந்துட்டுப் போகட்டும்.

“மனுஷனாடா நீ....., என் வயித்தில் எப்படிடா நீ வந்து பொறந்த, அப்படி ஒரு அப்பாவுக்கு, இப்படி ஒரு புள்ளையா...? ச்சே...., என்னால் நம்பவே முடியலை...”, ஒரு பெண்ணாக மாறி, நியாயத்துக்குக் கொடி பிடித்தார்.

ஆனால் அவனோ, மிருகமாக அல்லவா இருந்தான்....., “நீ என்னை, எங்க அப்பனுக்குப் பெக்கலையோ என்னமோ....”, விஷமாய் அவன் வார்த்தைகளைக் கக்க, அது அவரது நெஞ்சைத் தாக்க, அந்த வார்த்தையின் கொடுமை தாங்காமல் அவர் இதயம் வேகமாக துடித்தது.

“என்னடா சொன்ன.....? பெத்த அம்மாவைப் பாத்து கேக்குற கேள்வியாடா இது? பாம்புக்காடா நான் இத்தனைக் காலம் பால் ஊத்தி வளத்தேன்...., உனக்கு ஒரு அப்பாவிப் பொண்ணை கல்யாணம் பண்ணிவச்சு, அவ வாழ்க்கையவே நாசம் பண்ணிட்டனே.

“இந்தப் பாவத்தை நான் எந்த கங்கையில் போய்டா கரைக்க?..... நான் சபிச்சால் நீ நாசமா போய்டுவ, உன்னைப் பெத்தப் பாவத்துக்கு, என்னால் அதைச் செய்ய

முடியலை. ஆனா, அவளை விட்டுடுடா....", நெஞ்சைப் பிடித்துக் கொண்டு அவர் மண்ணில் சாய, காவியா அவரை ஓடிச் சென்றுத் தாங்கினாள்.

"ஐயோ அம்மா...., என்னம்மா செய்யிது.....? இப்போ நான் என்ன செய்யட்டும்....? கண்ணைத் தொறந்து பாருங்கம்மா....", அவளது கதறலைக் கேட்கக் கூட அவர் இருக்கவில்லை. தான் பெற்ற மகனிடமிருந்து, எந்தத் தாயும் கேட்க விரும்பாத வார்த்தையைக் கேட்ட அந்தத் தாய் தன் துடிப்பை நிறுத்திக் கொண்டார்.

அதன் பிறகு, அவரது இறுதி சடங்கு முடிந்து, பதினாறாம் நாள் காரியங்கள் முடியும் வரை, ஒருவித மயான அமைதியுடனே கழிந்தது நாட்கள். தர்ஷிணியைக் காக்க, காவியா எடுத்த எந்த முயற்சிகளுக்கும் பலன் இருக்கவில்லை.

அவ்வளவு ஏன், அவள் சொல்வதைக் கேட்கக் கூட யாரும் தயாராக இருக்கவில்லை. கீதா மட்டுமே அவளுக்கு ஆதரவு அளிக்க, வசுந்தரா போட்ட சத்தத்தில், கமலேஷ் வேறு வழியில்லாமல், தர்ஷிணியிடம் மன்னிப்பை வேண்டிவிட்டு அங்கிருந்து கிளம்பி விட்டார்கள்.

வசுந்தராவோ, பேரன் பிறந்த சந்தோசத்திலேயே, வித்தார்த்தைத் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டு ஆட, தர்ஷிணியின் கதறல்கள் அவரைத் தொடவே இல்லை.

"இங்கே பாருடி...., சிங்கக் குட்டி மாதிரி ஆம்பளைப் புள்ளையைக் கொடுத்துருக்காரு. அவர் மனசுக் கோணாமல் நடந்துக்குறதை விட்டு , என்னமோ ஊர் உலகத்தில் நடக்காததை, அவர் செய்யிற மாதிரிப் பேசுறியே.

"புதுப் பொண்டாட்டினா, கொஞ்சம் அப்படி இப்படி இருக்கத்தான் செய்வாங்க. அதையெல்லாம் நீதான் அனுசரிச்சுப் போகணும். டெய்லி உன்கிட்டே வாறாருன்னு கதை சொல்லுறியே, உனக்கே இது வெக்கமா இல்லை.

கட்டுன பொண்டாட்டி, உன்கிட்டே வராமல் வேற எவ கிட்டே போவார்?

“இதுக்கு நீ, சந்தோசந்தான் படணும். உன்மேல் எம்புட்டு ஆசை இருந்தால்....., இப்போ கூட உன்னைக் கை கழுவுறேன்னு சொல்லாமல், உன்னைத் தன்னோடவே வச்சுக்கணும்னு சொல்லுறாரே...., இது எங்கே நடக்கும்?

“அவர் இடத்தில் வேற எவனாவது இருந்திருந்தால்...., அடுத்த நிமிஷம் கை கழுவி விட்டுட்டு, வேற ஒருத்தியைப் புடிச்சிருப்பான். அவர் அதையெல்லாம் பெருசா எடுத்துக்காமல்....., எவ்வளவு பெருந்தன்மையா நடந்துக்கறார்....

“ஒழுங்கு மரியாதையா அவரோட குடும்பம் நடத்துற வழியைப் பாரு. அதை விட்டுட்டு, அப்பா இருக்கான், அக்கா இருக்கான்னு ஏதாவது சண்டித்தனம் செஞ்ச...., பிறகு நான் மனுஷியாவே இருக்க மாட்டேன்....”, தாய்மையும் இல்லாமல், பெண்ணுக்கு நடக்கும் கொடுமையைக் கண்டு துடிக்கவும் இல்லாமல், ஆண் என்பவனுக்கு, என்னமோ, பெண் அடிமை, அவன் சொல்ப்படி கேட்டு நடக்க வேண்டியது பெண்ணின் கடமை, விதி, என்று சொல்லும் அவரை, விரக்தியான சிரிப்புடன் தர்ஷிணி பார்த்தாள்.

“அம்மா...., இதுவரை உனக்கு ஆம்பளைப் பிள்ளை இல்லாததால்தான் இப்படி நடந்துக்கறன்னு நினைச்சேன்...., ஆனா நீ....., இந்த உலகத்திலேயே, ஆம்பளை மட்டும்தான் மனுஷன்னு நினைக்கிறன்னு, இன்னைக்குதாம்மா ரொம்பத் தெளிவாப் புரிஞ்சுது.

“எங்கே கிடைப்பான் இப்படி ஒரு மாப்பிள்ளைன்னு குதிக்கிறியே...., நான் சொல்லவா....., அவனுக்கு எங்கே கிடைப்பா இப்படி ஒரு மாமியார்....., என்னை முதல் ராத்திரி அன்னைக்கு, வேசியை விடக் கேவலமா நடத்திட்டுப் போனானே.....

“அன்னைக்கு உன் இடத்தில் ஒரு நல்ல தாய் இருந்திருந்தால்...., அதுக்கு ஒரு முடிவு தெரியாமல், அவனை வீட்டுக்குள் சேர்த்திருக்க மாட்டா....., அப்படி நீ அன்னைக்கு நடந்திருந்தால்...., அவனுக்கும் மனசில் ஒரு பயம் வந்திருக்கும்.....

“என்னையும் அவன், கொஞ்சமாவது மனுஷியா நடத்தி இருப்பான். ஆனா நீ.... அப்படிச் செய்யவே இல்லையே....., விட்டுட்டுப் போனவன், ரெண்டு நாள் கழிச்சு வந்த உடனே, வெத்திலைப் பாக்கு வச்சு அழைச்சால்....., அதாம்மா, அந்த ஒரு வாரமும், நம்ம வீட்டுக்குள்ளே வச்சே என்னைக் கற்பழிச்சான்.....

“ஒரு பொண்ணோட மனச் சம்மதம் இல்லாமல் அவ உடம்பைத் தொட்டால்...., அது புருஷனா இருந்தால் கூடக் கற்பழிப்புதான்...., அதுக்கு நீயே துணை போனால், அவன் என்னம்மா செய்வான்...., இன்னும் என்னை மேலே ஏறித்தான் மிதிப்பான்.

“இங்கே இருந்து போய், மாசமான பிறகு கூட, உனக்கு நான் பேசாதது பெரிய விஷயமாவே இல்லை...., உன் மாப்பிள்ளை பேசினால் போதும்னு இருந்துட்டியே...., எங்கே கிடைப்பா அவனுக்கு இப்படி ஒரு மாமியார்...? இல்ல....,

“இப்போ கூட குழந்தைப் பொறந்து, உனக்கு அதைச் சொல்லாதது கூடக் கவலையில்லை...., உனக்குப் பேரன் பொறந்த சந்தோஷம் போதும் இல்ல...., என்னோட வாழ்க்கைக்கு வேண்டி, போராடி உயிரை விட்டாங்களே என் மாமியார்....., அவங்க, மனுஷ தெய்வம்மா....

“உன்னையெல்லாம் என் அம்மான்னு சொல்லக் கூட என் வாய் கூசுது. எனக்கு, இன்னையோட இந்த அம்மா உறவு போதும்....., உனக்கு, ஆண் பிள்ளையும், பேரனும், மாப்பிள்ளையும் போதும்னு இருக்க இல்ல...., இனிமே உனக்கு ரெண்டாவது பொண்ணு இல்லன்னு நினைச்சுக்கோ.

“இதுக்கு மேலேயும் நான் இங்கேயே இருந்தால்....., நான் தூங்கும் போது, நீயே உன் மாப்பிள்ளையை வர வச்சு...., என்னை அவனுக்குக் கூட்டிக் கொடுப்ப...., அந்த அவமானம், அசிங்கத்துக்கு, அவன் வீட்டிலேயே நான் இருந்துட்டுப் போறேன். ச்சே...., உன்கூடச் சேர்ந்து நானும் எப்படியெல்லாம் பேசறேன் பாத்தியாம்மா....?

“இதெல்லாம் என் மனசு வலிக்க, அதில் இருந்து ரத்தம் சொட்டச் சொட்ட, வேதனையில் நான் பேசுற பேச்சும்மா....., போதும்... இன்னையோட, எனக்கு எல்லாச் சொந்தமும் செத்துப் போச்சுன்னு நான் நினைச்சுக்கறேன்.

“நான் செத்தால் கூட இனிமேல் என்னை வந்து பாக்காதம்மா....., நான் அப்படியே பாதியில் செத்துட்டாக் கூட, என் மகனை, உன்னை நம்பிக் கொடுக்கவே மாட்டேன். அப்படி ஒரு தெய்வம் வளத்தப் புள்ளையே இப்படி இருக்கும் போது,

“ஆம்பளைப் புள்ளை வெறிப் பிடித்த நீ வளத்தால் அது, ஆண் வெறிப் பிடித்த மிருகமாகத்தான் இருக்கும்....., நான் போறேன்...., செத்தால், பொணமாக் கூட, இந்த வீட்டுப் படியை இனிமேல் நான் மிதிக்க மாட்டேன்....”, சொல்லிவிட்டு, தளர்ந்த நடையுடன், தன் மகனை அள்ளிக் கொண்டு, அறையை விட்டு வெளியேறினாள்.

மகளது பேச்சில், முதல் முறையாக விக்கித்து அமர்ந்திருந்தார் வசுந்தரா.

மணி அவளை எதிர் கொள்ள, அவரை உயிரற்ற ஒரு பார்வை பார்த்தாள். அதன் பிறகு, அடுத்த இரண்டாம் நாள், வித்தார்த்தோடு வண்டி ஏறினாள். வாழ்க்கை, தனக்கு என்ன வைத்திருக்கிறது என்பது, வழக்கம்போல் அவளுக்கு எதுவும் தெரியவில்லை.

தொடர்ந்த நாட்களில், வித்தார்த்தின் தேவைகளைத் தீர்ப்பது மட்டுமே அவளது வேலை என்றாகிப் போனது. ஆனாலும், அவளும், அவள் மகனும் பட்டத் துன்பங்கள்

கொஞ்சம் நஞ்சமில்லை. ஒவ்வொரு இரவிலும், பாலுக்காக அழும் பிள்ளையை விட்டுவிட்டு, காமத்துக்காக அவளைப் பிடித்து வைத்து வேடிக்கைப் பார்க்கும் கணவனின் செய்கையைத் தடுக்கும் திறன் இல்லாமல் படுக்கையில் பிணமாகக் கிடந்தாள்.

பசியில் கதறி அழுது, தாய் வராமல், தன் கட்டை விரலை வாயில் வைத்துக் கொண்டு உறங்கும் மகனைப் பார்த்து ரத்தக் கண்ணீர் வடித்தாள் அவள்.

அதைவிட, அழும் மகன் அருகில் சென்று, அவனை அடித்தும், ஆங்காரமாகக் கத்தி, குழந்தையை அலறவிடும் வித்தார்த்தின் செய்கையைத் தடுக்க முடியாமல் துவண்டாள் தர்ஷிணி.

அதன் பிறகு, குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்கவும் அவன் விடவில்லை. நடை பழகிய பொழுது, தத்தி தத்தி தன்னை நெருங்கிய குழந்தையை, காலை வைத்து உதைத்துத் தள்ள, இரண்டாம் முறையாக அவனுக்குப் பிட்ஸ் வந்தது.

குழந்தை வளர்ந்து, ஒன்றரை வயதான பொழுதோ, தந்தை வீட்டுக்குள் வந்தாலே, ஓடிச் சென்று ஒரு மூலையில் அமர்பவன், அந்த இடத்தில் அமர்ந்தே உறங்கியும் விடுவான். நடு இரவில் விழிப்பு வந்து அவன் தாயைத் தேட,

பக்கத்து அறைக்குள் கேட்கும் தாயின் அழுகையும், தந்தையின் மிரட்டலும், வீட்டின் இருளும் அவனை சுருளச் செய்யும். “அம்மா...., அம்மா...., வா....”, ஒரு நாள் கதவைத் தட்டிவிட, வந்தது என்னவோ வித்தார்த்.

ஓங்கி அவன் விட்ட அடியில், அந்த இடத்திலேயே மயங்கிய அவனை, தர்ஷிணி, சில பல கெஞ்சல்களுக்கு இடையில் வித்தார்த்திடம் அனுமதி வாங்கி, மகனைத் தெளிய வைத்தாள். கண்விழித்த அவனோ.... “அம்மா போ...., போ.....”, அவள் கைகளைத் தட்டி விட்டு, மூலையில் சென்று சுருண்ட பொழுது, ‘தன் உயிர் இப்படியே போய்விடாதா’ என்று ஏங்கினாள்.

அவளது இந்த இன்னல்களுக்கு இடையில் ஒரு நாள், மணி அவளைக் காண வந்தார். அவளிடம் சரியாகப் பத்தே நிமிடம்தான் பேசினார். அவள் பதிலுக்கு எதுவுமே பேசவில்லை. அவளிடம் ஒரு பையைக் கொடுத்தார், அப்படியே சென்றுவிட்டார். அந்தப் பையை அவள் தொட்டுக் கூடப் பார்க்கவில்லை.

காலையில் விடிந்த பிறகு, மகனை தினமும் கட்டிக் கொண்டு அவள் விடும் கண்ணீர்....., அந்தக் கடல் நீரை விட அதிகமாகத்தான் இருக்கும். அவள் அழுகையை மட்டுமே கண்டு வளர்ந்த அவள் மகன், சிறு வயது, சேட்டைகள், ஆசைகள், விருப்பங்கள் எதுவும் இல்லாமல் ஒடுங்கியே போனான்.

தர்ஷிணியால், வித்தார்த் இல்லாத நேரங்களில் மட்டுமே அவனைத் தொடவும், நெருங்கவும் முடிந்தது. மற்ற நேரங்களில், குழந்தை அவன் கண் பார்வையில் பட்டால் கூட, எதற்கு அடிக்கிறோம், எதற்கு அடி வாங்குகிறோம் என்றே தெரியாமல் போனது இருவருக்கும்.

அதன் பிறகு, மகனைத் தன்னுடனே இரவில் வைத்துக் கொள்வேன் என்று அவள் பிடிவாதம் பிடிக்க, வேறு வழியில்லாமல் அவன் சம்மதித்தான். ஆனால், ஏன் அப்படிச் செய்தோம் என்று அவள்தான் நொந்துப் போனாள்.

கணவனின் காம வெறி தெரிந்தும், மகனை அறைக்குள் அழைத்தது, எவ்வளவு பெரியப் பிழையென்று ஒரே நாளில் அவள் உணர்ந்து கொண்டாள். இரவில், மகன் உறங்கிய பிறகே அவன் வந்தான். வந்தவன், வந்த உடனே அவன் வேலையைத் துவங்க, “என்னங்க பையன் முழிச்சுக்கப் போறான்.....” என்ற அவளது எந்தக் கெஞ்சல் களுக்கும் பலன் இருக்கவில்லை.

இரவில் ஏதோ சத்தம் கேட்டு விழித்தக் குழந்தை, அந்த கும்மிருட்டில் வரி வடிவமாகத் தெரிந்த ஏதோ உருவம்,

தாயை ஏதோ செய்கிறது, தாயின் விசும்பல் ஒலி கேட்கவே, “அம்மா...., என்ன....? அம்மா....”, என்று அவள் அருகில் ஓட, அவனை ஒற்றைக் கையில் பிடித்துத் தூக்கி சுவற்றில் வீசினான் அந்தக் கொடியவன்.

“அம்மா.....”, என்ற அலறலில் அவன் விழ, விளக்கைப் போட்டுவிட்டு மகன் அருகில் செல்ல, அவன் மண்டை பிளந்து ரத்தம் வழிந்துக் கொண்டிருந்தது.

தர்ஷிணி கதறித் துடிக்க, “சனியன் போய்ச் சேரலையா....”, என்ற சொல்லோடு அவன் போய் படுத்துக் கொண்டான்.

குழந்தையை மருத்துவமனை கூட்டிச் செல்ல, அங்கே அவனுக்குக் காய்ச்சலும், பிட்ஸ்ஸும் சேர்ந்தே வந்தது. அந்த இரவு, அந்த பாலகனின் மனதில் தீராத வடுவாக மாறிப் போனது.

இரவில் உறக்கத்தில் பாதியில் விழித்து, அம்மா அம்மா என்று அழுது அரற்றினான். காலையில் தந்தை வேலைக்குச் சென்ற பிறகு, “அப்பா...., இல்ல...., வேணா....”, இப்படியே சொல்வான்.

அவன் சொல்ல வருவது புரிந்தாலும், எதுவும் சொல்லாமல் அவனைச் சமாதானப் படுத்துவாள். அவனுக்கு இரண்டரை வயதான பொழுது, தந்தையின் நடை சத்தம் கேட்டால் கூட எங்கேயாவது சென்று ஒளிந்து கொள்ளும் அளவுக்கு, பயந்துபோய் இருந்தான் அவன்.

வித்தார்த்துக்கோ, அவளும், மகனும் பேசுவதைப் பார்த்தாலே எரிச்சலாகிப் போனது. எப்படியும் அவனை அகற்றிவிட வேண்டும் என்றே எண்ணத் துவங்கினான். அதன் உச்சம்தான், மகனைக் கொலை செய்ய முயன்றது.

இதுவரை, மகனது உயிருக்கு பயந்துதான் வித்தார்த்தின் கொடுமைகள் அனைத்தையும் அவள் தாங்கிக் கொண்டாள். அன்று அலுவலகத்தில் இருந்து சீக்கிரம்

வந்தவன், அவளைத் தனக்குத் தலை வலிக்கிறது என்று சொல்லி, மாத்திரை வாங்க வெளியே அனுப்பினான்.

அவள் வெளியே சென்ற சிறிது நேரத்தில், கிச்சனுக்குள் ஒளிந்திருந்த மகனை, வலுக்கட்டாயமாக தூக்கிக் கொண்டு, பாத்ரூம் சென்று, அவன் திமிறத் திமிற, பாத் டப்பில் நீருக்குள் அமிழ்த்திக் கொல்ல முயன்றான்.

தர்ஷிணிக்கு ஏதோ உள்ளுணர்வு உந்த, மகனையும் அழைத்துச் சென்று விடுவோம் என்று எண்ணி வீட்டுக்கு வர, அங்கே மகனது முனகல் சத்தம் அறைக்குள் இருந்து கேட்கவே, ஓடிச் சென்று அங்கே பார்க்க, அவள் கண்ட காட்சியில், சப்த நாடியும் ஒடுங்க,

அவன் கைகளில் இருந்து குழந்தையைப் பறித்தாள். “நீ கடைக்குப் போகலையாடி....., இன்னைக்கு இல்லன்னா என்ன...? இன்னொரு நாள் பாத்துக்கறேன்....”, சொல்லிவிட்டு அவன் வெளியேற,

“அம்மா...., அம்மா.....”, மூச்சு விடவும் முடியாமல் கதறும் மகனிடம் அதன் பிறகே கவனம் செல்ல, ஒரு முடிவுடன், அவள் தந்தை கொடுத்தப் பையை எடுத்துக் கொண்டு, குழந்தையை தூக்கிக் கொண்டு, மருத்துவமனைக்குச் சென்றாள்.

அந்தப் பையில் இருந்த அலைப் பேசியின் பாகங்களைப் பொருத்தி, அதற்கு உயிரூட்டி, அதில் பதிந்திருந்த வழக்கறிஞர் சுந்தரதேவி அவர்களுக்குத் தொடர்பு கொண்டாள்.

அவரும் விரைந்தோடி வரவே, அதன் பிறகு, முதல் வேலையாக, கண்ணனின் இந்த நிலைக்கான மருத்துவ அறிக்கை பெறப் பட்டது. அத்தோடு அவனது வாக்கு மூலமும், பிள்ளை மொழியிலேயே பெறப் பட்டு, காவல்துறை உதவியோடு ஆவணப் படுத்தப் பட்டது. அத்தோடு தர்ஷிணியையும் மருத்துவப் பரிசோதனைக்கு உள்ளாக்கினார்கள்.

அனைத்தும் சுந்தரதேவியின் ஆணைப்படியே நடந்தது. இறுதியாக, வித்தார்த்திற்கு விவாகரத்து நோட்டீஸ் அனுப்பினார்கள். அவ்வளவு சீக்கிரம் ஒத்துக்கொள்ளும் ஜென்மமா அவன். சுந்தரதேவிதான், அவர்கள் ஆவணப் படுத்திய ஆதாரங்கள், அவன் குழந்தையைக் கொலை செய்ய முயன்ற ஆதாரம், என அனைத்தையும் காட்டி,

பிரச்சனையை சுமுகமாக முடிக்க உதவ வில்லை என்றால், காவல் துறையில் வழக்குத் தொடர்ந்தால், அவனது அரசாங்க வேலைக்கும் ஆபத்து வர வைப்போம் என்று சொல்லி மிரட்டி, மியூச்சுவல் விவாகரத்துக்கு சம்மதிக்க வைத்தார்.

முடிந்த அளவு தர்ஷிணியையும், குழந்தையையும் சந்திக்க வைப்பதைத் தவிர்த்தார். இறுதியாக, போராடி அவனிடமிருந்து பிரிந்து சுதந்திரக் காற்றை சுவாசித்தாள் தர்ஷிணி. ஆனாலும், அவளை நிம்மதியாக வாழ விட மாட்டேன் என்றும், அவள் குழந்தையைக் கொலை செய்யாமல் அடங்க மாட்டேன் என்றும் மிரட்டினான்.

அவனது இந்த மிரட்டலுக்காகப் பயந்தே...., சுந்தரதேவியிடம் கூட தான் எங்கே தங்கப் போகிறோம் என்று சொல்லாமல் தலைமறைவானாள் தர்ஷிணி.....

***

தாகம் - 36.

என் நேசம் உன்னைத்

தீண்டவேண்டாம்.....

என் கண்ணீர் உன்னைச்

சுட வேண்டாம்.....

குழந்தையின் பசி கூடவா

உன்னைத் தொடவில்லை.....

மருத்துவமனையில் எவ்வளவோ பெரிய அவமானங்களையும், தலைக் குனிவையும், ப்ரியாவால் சந்தித்தான் நந்தன். அனைத்தையுமே தாங்கிக் கொண்டான் தன் குழந்தைக்காக. குழந்தை பிறந்த பிறகு கொஞ்சம் மாறுவாள் என்ற அவனது ஏக்கம் கானல் நீராகிப் போனது.

குழந்தை பிறந்தவுடனே, “அந்த அசிங்கத்தை என் கண்ணிலேயே காட்டாதீர்கள்”, என்று அவள் போட்டக் கூச்சலில், இடிந்து போனான் நந்தன்.

குழந்தை பசியில் வீறிட்டு அழ, தாய்ப்பால் கொடுக்கச் சொல்லி செவிலிகள் சொல்ல, அதைக் காது கொடுத்தும் கேட்கவில்லை. அவள், தனது அழகு போய்விடுமோ என்று பயப்படுகிறாளோ என எண்ணி, அதுவும் தவறென்று அவர்கள் எடுத்துச் சொல்ல, “என்னால் முடியாது....”, என்ற ஒற்றைச் சொல்லுடன் அவள் முகத்தைத் திருப்பிக் கொள்ள,

மருத்துவர் புனிதாவை அவர்கள் அழைத்து வந்தார்கள். புனிதாவிற்கு ஏற்கனவே தெரியும், அவளிடம் பேசுவதும், குட்டிச் சுவரில் முட்டிக் கொள்வதும் ஒன்றுதான் என்று,

ஆனாலும் பசியில் அழும் குழந்தையின் முகத்தைப் பார்த்து, தன் தயக்கத்தை உதறிவிட்டு அவளிடம் பேசினார்.

“இங்கே பாரும்மா ப்ரியா.....”, “நீங்க என்ன சொன்னாலும் என் முடிவில் எந்த மாற்றமும் இல்லை டாக்டர்...., வீணா, உங்க நேரத்தை வேஸ்ட் பண்ணாதீங்க.....”, அவர் முகத்தில் அடித்ததுபோல் பேசி அவரைக் கலங்கடித்தாள்.

“நான் இப்போ, உன்னைப் பால் கொடுன்னு சொல்ல வரலம்மா..., நீ இப்போ பீட் பண்ணாமல் இருந்தால்...., அது உன் உடம்புக்குத்தான் கேடு. பின்னாளில் கேன்சர் வரக் கூட சான்ஸ் இருக்கு”, மருத்துவ ரீதியாக அவளை வழிக்குக் கொண்டுவர எண்ணினார்.

“நான் செத்தாலும் பரவாயில்லை....., ஆனால், இனிமேல் ஒரு நொடி கூட, என் கை அது மேலப் படாது”, முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

“இந்தக் குழந்தையை ஒரு நிமிஷம் பாரும்மா...., இது உன்னோட குழந்தை, அதோட அழுகை உனக்குக் கேக்கலையா.....”, அவளை எப்படியாவது இளக வைக்க முயன்றார்.

‘பாத்தால், மனசு மாறிடுவனோ என்னவோன்னு பயந்து தானே, அதோட முகத்தைக் கூடப் பாக்க மாட்டேன்னு சொல்லுறேன்’, அவள் மனம் அரற்றியது. வெளியேறத் துடித்தக் கண்ணீரை கண்களுக்குள் அணை கட்டித் தடுத்தாள்.

“இப்போ அதை நீங்க வெளியே கொண்டுப் போகலன்னா...., நான் இப்படியே எழுந்து வீட்டுக்குப் போய்டுவேன்....”, கண்களைத் திறக்காமல் அவள் சொல்ல, தோல்வியோடு வெளியேறினார் புனிதா.

“சாரி நந்து....., நான் பால் டின் எழுதித் தாறேன், நீங்க கொடுங்க...”, அவர் சொன்னவாறு பால் கலந்து கொடுத்தும், அவன் மகள் அதை குடிக்கவே இல்லை.

அழுகையால் அந்தக் கட்டிடத்தையே அதிர வைத்தாளே தவிர, அதன் சுவையைக் கூட அவள் அறிய விரும்பவில்லை.

அந்த நேரத்தில் தான், ஒரு செவிலி வந்து, ஒரு தாய், அவன் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்க விரும்புவதாகவும், அவனுக்கு விருப்பமா என்றும் கேட்க, ஒரு நொடி கூடத் தாமதிக்காமல், அவள் கைகளில் குழந்தையைக் கொடுத்து அனுப்பினான்.

ஒரு வேளையாவது தன் மகள் தாய்ப்பால் குடிக்கட்டுமே என்ற அவனது எண்ணம், தொடர்ந்த ஐந்து நாட்கள் நீடித்தது. அவளைக் கண்டு நன்றி சொல்ல அவனுக்கு விருப்பம் தான்....., ஆனால், தனது கையாலாகாத தனத்தில், எப்படி அவள் முகத்தில் விழிக்கவென்று தெரியாமல் தன் தாயை அனுப்பி நன்றி சொன்னான்.

அவள் அன்று கிளம்பவே, தன் டிரைவரோடு காரையும் அனுப்பி வைத்தான். என்றாவது ஒரு நாள் அவளுக்கு நன்றி சொல்லவேண்டும் என்ற அவனது எண்ணம், டிரைவர் திரும்பி வந்து சொன்ன செய்தியிலேயே அடங்கி விட்டது.

“சார், அவங்க பாதி வழியிலேயே இறங்கிட்டாங்க. நான் எவ்வளவோ கேட்டும், அவங்க ஒத்துக்கவே இல்லை.....”, தயங்கியவாறு அவன் சொல்ல, அதை அப்பொழுதே மறந்துவிட்டான். அவனால் வேறு என்னதான் செய்ய முடியும். பசியில் அழும் அவன் மகளைச் சமாதானம் செய்யவே அவனுக்கு முடியவில்லை.

ஆனால் ப்ரியாவிற்கோ, பால் கட்டி வலி வந்து, அது காய்ச்சலில் கொண்டுபோய் விட்டப் பிறகு கூட அவள் மனம் இரங்கவே இல்லை. அதற்கு மருந்து எடுத்துக் கொள்ளவும் அவள் தயாராக இருக்கவில்லை. இறுதியில், பால் ஊறாமல் இருக்க, ஊசி போட்டுச் சரி செய்யும் நிலைக்குத் தள்ளப் பட்டார்கள்.

வீட்டுக்கு வந்த பிறகு, குழந்தையை கவனிக்க ஆயா வைக்கக் கூட பயந்தான் நந்தன். எங்கே வள்ளியை எதையோ சொல்லி அனுப்பியது போல, வருபவர்களையும் ஏதாவது சொல்லிவிட்டால், என்று பயந்தான்.

அவன், அவனது மில்லுக்குக் கூடச் செல்லாமல்...., தன் மகளே கதியென்று கிடந்தான். அவளைத் தூக்க, குளிக்க வைக்க, சாப்பாடு ஊட்ட, பால் கொடுக்க, டயப்பர் மாற்ற என அனைத்தையும், தாயைக் கேட்டுக் கற்றுக் கொண்டான்.

அந்த வீட்டில், ப்ரியா என்ற ஒருத்தி இருக்கிறாள் என்பதையே அவன் மறந்து போனான். அவன் உலகம், அவன் மகளாகிப் போனாள்.

முதலில் அறைக்குள்ளேயே முடங்கிக் கிடந்தவள், அவளை யாரும் கண்டுக்கொள்ளவே இல்லை என்னும்போது, வெறி பிடித்தவள் போல் ஆனாள். அவனது சிரித்த முகத்தைப் பார்க்கும் பொழுதெல்லாம் எரிந்தது அவளுக்கு.

‘நான் இங்கே தனியாகக் குமுறும் போது, அவன் எப்படி சந்தோஷமாக இருக்கலாம்’, என்ற எண்ணமே அவளை நிம்மதியாக இருக்க விடவில்லை. அதன் பிறகு, வேண்டுமென்றே அவன் கவனத்தைக் கவர முயன்றாள்.

வீட்டு ஹாலில் வந்து அமர்ந்து கொள்வது, தனக்குத் தலை வலிக்கிறது, இடுப்பு வலிக்கிறது, கால் வலிக்கிறது, மருந்து போட்டுவிடு, என்று கூச்சல் போடுவாள்.

அவளது இந்த நாடகத்தில், தன் மகள் பாதிக்கப் படக் கூடாது என்பதற்காக, அவள் அறைக்குச் செல்லத் துவங்கினான். அவளுக்குத் தன்னைக் காயப் படுத்த வேண்டும், இல்லாவிட்டால் அவளால் நிம்மதியாக உறங்க முடியாது என்பதை உணர்ந்தவன் போன்று, அவளது சுடு சொற்களைக் கேட்கத் தயாரானான்.

ஆனால், அவன் உணர்வுகளோடு அவள் விளையாட, அவன் அனுமதிக்கவில்லை. பிள்ளைப் பெற்ற உடம்பின்

மினு மினுப்பும், வாளிப்பும், பூரிப்பும் எவ்வளவு மறைத்தாலும் மறைந்து போகாதே. அதிலும் அவள் அழகு, பல மடங்கு அதிகரிக்கையில், ஒரு ஆண்மகனும் என்னதான் செய்ய முடியும்.

தன்னை, தன் மனதை, முடிந்த அளவு கட்டுப் படுத்திக் கொண்டான். “என்னடா....., என்னைத் தொடாமல் இருக்கணும்னு எங்கேயாவது போய், ஆப்பரேஷன் செய்துகிட்டியா என்ன?”, அவள், அவனது கட்டுப்பாட்டை எள்ளி நகையாடும் போது....,

‘நான் இப்பொழுதும் ஆம்பளைதான்.... காட்டவா?....’, எனக் கத்தவே அவனுக்குத் தோணும். ஆனால் அதை அப்படியே தொண்டைக் குழியில் புதைத்துக் கொள்வான்.

அவனது அந்த மௌனமே அவளை இன்னும் ஆங்காரமாக்கியது. ‘என்னடா அமுக்குணி மாதிரி இருக்க?....’, மனதுக்குள் எண்ணிக் கொள்வாள்.

அதன் பிறகு, வீட்டில் தங்குவதை அவள் குறைத்துக் கொண்டாள். அவளது இவ்வளவு கொடுமைகளையும் சகித்துக் கொண்ட நந்தனின் பொறுமையையும் சோதிக்கும் நாளும் வந்தது.

எப்பொழுதுமே மகளின் முகத்தைக் காணக் கூட, ப்ரியா விரும்புவது இல்லை. அது நந்தனுக்கும் தெரியும். எனவே, குழந்தையை அவள் அருகில் விடாதவாறு பார்த்துக் கொள்வான். அன்று, ஒரு அவசரமான அலைப்பேசி அழைப்பு வரவே, உறங்கும் குழந்தையைத் தொட்டிலில் விட்டவன், அவள் எழுந்துவிடாதவாறு, வெளியே சென்று பேசினான்.

ஆனால், குழந்தை திடீரென எழுந்து, தொட்டிலில் இருந்து தவறி விழுந்துவிட்டாள். விழுந்தது என்னவோ கீழே இருந்த பெட் (bed) மேலேதான். அதனால் அடி எதுவும் படவில்லை. விழுந்த அதிர்ச்சி தாங்காமல் வீறிட்டு அழுதாள்.

குழந்தையின் அழுகை வெளியே இருந்த நந்தனுக்கே எட்ட, பக்கத்து படுக்கையறையில் இருந்த ப்ரியாவுக்குக் கேட்காதா என்ன? அவளோ அசையாமல் இருந்தாள். வீட்டுக்குள்ளே வந்து பார்த்த நந்தன், பதறிப்போய் குழந்தையை வாரி அணைத்துக் கொண்டான்.

அதே கோபத்தில், ப்ரியாவின் அறைக்குள் நுழைந்தான். ஜன்னலுக்கு வெளியே விட்டத்தைப் பார்த்தவாறு நின்றிருந்தாள் ப்ரியா. 'கதறியழும் பிள்ளையை விட, உன் பிடிவாதம் உனக்குப் பெரிதா?', கோபம் அலையலையாகப் பெருக,

"என்னைப் பிடிக்காதவ, பிறகு ஏண்டி என்னைக் கல்யாணம் செஞ்சுகிட்ட?", முதல் முறையாகத் தன் கோபத்தை அவளிடம் காட்டினான்.

அவனது கோபத்தை எதிர் பார்க்காதவள், திடுக்கிட்டுத் திரும்பினாள். ஒரு வினாடி திகைத்தவள், 'இவன் யார் என்னிடம் கேள்வி கேட்க..?', சாத்தான் காதில் வேதம் ஓத, கோபம் பெருக அவளும் பதிலுக்கு வெடித்தாள். "என்னது.... நான் உன்னைக் கல்யாணம் செஞ்சு கிட்டனா...? இது என்ன புதுக் கதை, நீதான் என்னைக் கல்யாணம் செஞ்சுகிட்டன்னு நான் நினைச்சேன்....", கோபத்தை மறைத்து, நக்கலாக பதில் சொன்னாள். அவனது கோபம் அவளுக்குப் பிடித்திருந்தது.

"சரி அப்படியே இருந்தாலும்....., உனக்கு விருப்பம் இல்லைன்னு என்கிட்டே சொல்லியிருக்கலாமே....".

"முதல்ல, என்கிட்டே விருப்பமான்னே கேக்கலை...., இதில் நான் யார்கிட்ட, விருப்பம் இல்லன்னு சொல்லியிருக்கணும்னு நீ சொல்லுற?", எள்ளல் அவள் குரலில்.

எந்தப் பக்கம் போனாலும் அணை கட்டும் அவளை, என்ன செய்வது என்பதுபோல் பார்த்தான். "என்ன அதுக்குள்ளே

கேள்வி எல்லாம் முடிஞ்சு போய்டுச்சா?”, நக்கல் வழிந்தது அவள் குரலில்.

நந்தனின் பொறுமை பறக்கத் துவங்கியது. “உனக்குக் கல்யாணத்தில் விருப்பமில்லை. என்னைப் பிடிக்கவில்லை. பிறகு ஏண்டி என்னைத் தொட விட்ட...? அதுக்கு மட்டும் பிடிச்சுதோ?”, இந்தக் கேள்வி தன்னையே தாக்கும் என்று தெரிந்திருந்தால் கேட்டிருக்க மாட்டானோ.

“என்னது.... பிடிச்சு உன்னைத் தொட விட்டேனா...? உனக்கு, அப்படி ஒரு நினைப்பு வேற மனசுக்குள்ளே இருக்கா? இதுக்கு, அன்னைக்கே பதில் சொன்னேனே..., என்ன மறந்துடுச்சா?”, தலையைச் சரித்து, நிதானமாக அவள் கேட்ட விதத்தில், அவன் ரத்தம் இன்னும் கொதித்தது.

“என்ன பொல்லாத காரணம் சொன்ன.....? எனக்கு ஒரு பொண்ணோட சுகத்தைக் கொடுத்து, அது இல்லாமல் செய்யிறது தானே உன்னோட எண்ணம்....., ஏன், அது எனக்கு மட்டும்தான் இருக்குமா? உனக்கு இருக்காதா.....?”, அவளுக்குத் திருப்பிக் கொடுத்துவிடும் வேகம் அவனிடம் இருந்தது.

“ஹா...ஹா....ஹா....., எனக்கா.... எனக்கா....., எனக்கு இருக்காதே....”, அவள் கண்களில் வழிந்த குரோதத்தை, வருடங்கள் கடந்து மீண்டும் பார்த்தான்.

அதை உதறிவிட்டு, “அது ஏன் உனக்கு மட்டும் இருக்காது..? உன் உடம்பு மட்டும் என்ன இரும்பால் செஞ்சதா? அதுவும் எலும்பும், சதையும், ரத்தமும், உணர்வும் கலந்தது தானே?”, அவன் குரலில் வேகம்.

“நீ சொன்னியே....., இது எல்லாம் கலந்ததுதான் என்னோட உடம்பும்....., ஆனா...., ஆனா....., நான், என்னோட மனசால் கூடியது என்னோட காதலன் பிரபுவோடத்தான்....., இந்த உடம்பை, நான் அவனுக்குக் கொடுக்குறதா நினைச்சுதான், உனக்குக் கொடுத்தேன்.

“அதனால்தான் உன் பேச்சு கூட எனக்குப் பிடிக்கலை, உன்னோட உதட்டை, என்னோட உதடைத் தீண்ட விடலை....., அவ்வளவு ஏன்...., நீ செஞ்சது எல்லாமே, எனக்கு என் காதலன் பிரபு செஞ்சது மாதிரிதான் இருந்துது.....

“அது கூடத் தெரியாமல்....., பொட்டப் பய மாதிரி காலையில் மீசையை மழிச்சுட்டு என் முன்னாடி வந்து நின்னியே....., அப்படியே கைகொட்டிச் சிரிக்கணும் போல இருந்துது எனக்கு....., பெரிய ஆருயிர்க் காதலன்....., காதலிக்குக் குத்துதுன்னு சொன்ன உடனே, பெரிய தியாகி மாதிரி செரச்.... செஞ்சுட்டு வந்துட்ட,

“இனிமேல், இந்த மொகரையைக் கண்ணாடியில் பாக்கும்போது எல்லாம், என்கிட்டே தோத்துப் போனதுதான் உனக்கு ஞாபகம் வரணும்.....,

“இப்போ எனக்கு ஒரு பெரிய சந்தேகம்....., நீ என் உடம்பைத் தொட்ட, நான் என் பிரபுவை மனசுக்குள் நினைச்சுகிட்டேன்...., அப்போ என் வயித்தில் இருந்தது யாரோட குழந்தை? உன்னோடதா இல்லை?.....”, வில்லிபோல் சொல்லிச் சிரிக்க,

“ஏய்...., வாயை மூடுடி....., நீயெல்லாம் பொண்ணா...., ச்சே....”, ஆத்திரமாகக் கத்தியவன், அவளை அடிக்கக் கை ஓங்கினான், “உன்னைத் தொடுறதே பாவம்...”, சொல்லிவிட்டு கையை உதறிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டான்.

அவன் முகத்தில், அவள் காறி உமிழ்ந்து, சாணியைக் கரைத்து ஊற்றிய உணர்வில் அருவருத்துப் போனான். தான் உயிராக விரும்பி, தாலி கட்டியத் தன் மனைவி, தன்னுடன் கூடிய பொழுது, அவள் காதலனை நினைத்துக் கொண்டு தன்னிடம் கூடினேன், என்று சொல்வது தனக்கு எவ்வளவு பெரிய அவமானம்.

அதைக் கொஞ்சம் கூட குற்ற உணர்வோ, அருவருப்போ இல்லாமல் அவள் சொல்கிறாள் என்றால்....., தன்மேல் அவளுக்கு எவ்வளவு வன்மம் இருக்க வேண்டும். இவளையா இவ்வளவு நாள் மனதில் வைத்து மறுகினேன்.

என் காதலுக்கும், நேசத்துக்கும் கொஞ்சம் கூடத் தகுதி இல்லாத இவளிடமா, இவை அனைத்தையும் கொண்டுபோய் அவள் காலடியில் கொட்டினேன்? ச்சே...., எவ்வளவு பெரிய முட்டாளாக நான் இருந்திருக்கிறேன்....

போதும், இந்த நொடியோடு அவளுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. மனதில் இருந்து, அவளை அந்த நொடியில், தூக்கி எறிந்தான் நந்தன்.

அதன் பிறகு, அவள் நடத்தையை அவன் கண்டு கொள்ளவே இல்லை. அவள் எங்கு சென்றாலும் அவளைக் கேட்பதில்லை. இரவு முழுவதும் ஹாலில் அமர்ந்து செல் போனில் பேச, அதை அறைக்குள் இருந்து செய், என அவன் கண்டிக்க,

அப்போ நீயும் அந்த அறையில் இருக்க வேண்டும், என அவள் கண்டிஷன் போட, தன் மானம் வெளியே போவதைவிட, அவள் பேச்சில் தன் மனம் காயப் பட்டாலும் பரவாயில்லை, எனப் பொறுத்துக் கொண்டான்.

அனைத்தையும் தாங்கும் அவனால்....., அவன் ஏமாந்த விஷயத்தை, சுவாரசியமாக தன் காதுபடச் சொல்லி, தன்னை ஒரு புழுவைப் பார்ப்பதுபோல் அவள் பார்க்கும் வேளைகளில், தன்மானம் சிதைய, பாறையென மனதுக்குள் இறுகினான் அவன்.

இரவில் நேரம் கழித்து வீட்டுக்கு வருவதும், அவன் கேட்டால் எரிந்து விழுவதும், குழந்தையை ஒரு பொருட்டாகவே மதிக்காததும்....., அவளை எப்படி மாற்றவென்றுத் தெரியாமல் திணறிப் போனான்.

குழந்தைக்கு, இந்த நிலையிலேயே ஒரு வயது ஆகி இருந்தது. அதன் பிறகு வந்த நாட்களில், அவள் நடத்தையில் மிகப் பெரிய மாற்றம். எப்பொழுதும் ஒரு மயான அமைதி அவளிடம் குடி கொண்டிருந்தது.

அதற்காக நந்தனிடமோ, குழந்தையிடமோ பழகினாள் என்று சொல்ல முடியாது. ஆனால், பழைய சுடு சொற்களோ, குரோதப் பார்வையோ, புழுவைப்போல் அவனைப் பார்ப்பதோ, அவன் தனக்குச் சேவகம் செய்ய வேண்டுமென்று நினைப்பதோ, இப்படி எதுவும் இல்லாமலே சென்றது.

நந்தன், மனதுக்குள் கொஞ்சம் நிம்மதியாக உணர்ந்தான். ஆனால், அடிக்கடி யாரிடமோ தொலைபேசியில் உரையாடுவது மட்டும் அவனுக்குத் தெரியும். அவன் அதை என்னவென்று கேட்கவில்லை.

அவளது அறைக்கும் இப்பொழுது அவன் செல்வதில்லை. அவன் மகள் நடை பழகிவிட்டாள், அவளையும் அங்கே செல்ல விடுவதில்லை. எப்பொழுதாவது, அவள் அறையை விட்டு வெளியே வந்தால், அம்மா...., என்று மகளுக்கு அடையாளம் காட்டுவான்.

அவன் மகளும், அவளிடம் செல்ல வேண்டுமென்று அடம் பிடித்ததில்லை. வீட்டில் பாட்டி இருப்பதைப் போல, அம்மா என்ற ஒருத்தியும் இருக்கிறாள், என்பது மட்டுமே அவளுக்குத் தெரியும்.

நந்தன் தொழிற்சாலைப் பக்கமே போகவில்லை. தன் மகளின் வளர்ச்சியே முக்கியம், அவளது சந்தோஷம் ஒன்றே முக்கியம் என்பதுபோல் நடந்து கொண்டான். தொழிலா..? மகளா...? என்ற கேள்வி வந்த பொழுது, அவன் மனம் மகளையே தேர்ந்தெடுத்தது.

நந்தனும் மகளும் விளையாடும் வேளையில், அவள் அறைக்குள் நுழைந்து விட்டால், கத்தி அவளை வெளியே அனுப்பி விடுவாள். சில நேரம், குறும்பாக அவள் அறையை

எட்டிப் பார்த்தால், அதன் முகத்தைக் கூட பார்க்காமல், உம்...., எனத் திரும்பி விடுவாள்.

‘அம்மா’ என்று ஒரு முறை மழலையில் அழைக்க, அவள் கண்கள் சிவந்து, மகளைப் பார்த்த பார்வையில், அதன் பிறகு, குழந்தை அவளை அப்படி அழைக்கத் துணியவே இல்லை.

மகளது மழலைப் பேச்சிலும், குறும்பிலும், பாசத்திலும் நந்தன் முக்குளித்தான். மகளிடம், தாயைத் தொல்லை செய்யக் கூடாது எனச் சொல்லி வளர்க்கவே, ‘அம்மா என்பவள் இப்படித்தான்’ என்ற மனநிலைக்கு, அவளும் சென்றுவிட்டாள். இப்படியே அமைதியாக தன் வாழ்க்கை சென்றால் போதும் என்று அவன் எண்ணியிருக்க,

இடியாக விடிந்தது ஒரு விடியல்....., கடந்த ஆறு மாதமாக, ப்ரியா அவள் அறையை விட்டு, சாப்பிடக் கூட எப்பொழுது வெளியே வருகிறாள் என்பது அவனுக்குத் தெரியாது. அவனும் அவன் மகளும் தனி உலகில் சஞ்சரித்தார்கள்.

ப்ரியா இப்படியே இருப்பது அவனுக்கு வருத்தத்தை அளித்தாலும், தன்னையோ, மகளையோ காயப்படுத்தாமல் இருப்பதே போதும் என்று எண்ணிய வேளையில்தான் நேர்ந்தது அது. ஒருநாள் காலை நான்கு மணிக்கு எழுந்த மகள், எதற்கோ, ப்ரியாவின் அறைக்குச் சென்று பார்த்து வந்தவள்,

“அப்பா....., அம்மா எங்கே.....?”, அவனிடம் கேட்க, எதற்கென்று அறியாவிட்டாலும், “அம்மா அவங்க ரூம்ல இருப்பாங்கடா.....”, என்றான் அவளிடம்.

“அம்மா இல்லியே.....”, அவள் சொல்ல, “அங்கேதாம்மா இருப்பாங்க...”, சொல்லிவிட்டு உறக்கத்தைத் தொடர்ந்தான்.

“இல்ல...., நீ வா.....”, அவனைப் பிடித்து இழுத்துக் கொண்டு வர, அவள் அறைக்குச் சென்றவன் திகைத்தான்.

அவள் படுக்கையில் இருந்த கத்தைப் பேப்பர்களுக்கு மத்தியில் அவன் கட்டிய தாலி இருக்க, விரைந்து சென்று அதை எடுத்தான். தேகம் முழுவதும் துடித்து அடங்கியது. முப்பத்து முக்கோடி தேவர்கள் சாட்சியாக அவன் கட்டியத் தாலி.....

அதன் பிறகுதான், அங்கே இருந்த பேப்பர்களைப் பார்த்தான். திகைப்பாக அவற்றை எடுத்துப் பார்க்க, விவாகரத்துப் பத்திரமும், அதில் அவளது கையொப்பமும். வேறு சில பேப்பர்களிலும், பத்திரங்களின் அடியிலும், அவளது கையொப்பம் இடப் பட்டிருந்தது.

அத்தோடு ஒரு கடிதமும்....., “இந்த லெட்டரை எப்படித் தொடங்கன்னு எனக்குத் தெரியலை. அன்புள்ள அப்படின்னு துவங்க எனக்கு முடியலை. ஏன்னா....? எனக்கு உன்மேல் அன்பு கிடையாது. இதுவரை நான் உன்னைப் படுத்தியது போதும்னு முடிவு பண்ணிட்டேன்.

“இனிமேல் என்னோட சந்தோசத்துக்காக வாழணும்னு நான் முடிவு பண்ணிட்டேன். என்னோட சந்தோஷத்தைத் தேடி நான் போறேன். அதாவது, பிரபுவோட தான் நான் போறேன். தயவு செய்து என்னைத் தேடாதே.

“இதில் விவாகரத்துக்கு சம்மதிச்சு கையெழுத்துப் போட்டு வச்சு இருக்கேன். இந்த லெட்டர் கீழேயும் என்னோட சம்மதத்தை எழுதி வச்சு இருக்கேன். அது மட்டும் இல்லை, இன்னும் சில பத்திரங்களிலும் கையெழுத்துப் போட்டு இருக்கேன்.

“உனக்கு எப்படி வசதியோ, அப்படி இதைப் பயன் படுத்திக்கோ, இனிமேல், என் வாழ்நாளிலேயே, உன்னை நான் பாக்கக் கூடாதுன்னு நினைக்கிறேன். பாய்....., குட்பை.....”, அத்தோடு அவள் கையொப்பத்தோடு அந்தக் கடிதம் முற்றுப் பெற்றிருந்தது.

“நோ.....”, என்ற சொல்லோடு, அவன் அவற்றை விசிறியடிக்க, அஞ்சலியோ பயத்தில், அவளது

பாட்டியையும், சமையல் காரனையும் அழைத்து வந்தாள். வசந்தா, அறிந்த செய்தியின் தாக்கம் தாங்காமல், ஏற்கனவே ஒரு அட்டாக் முடிந்த அவர் இதயம், அந்தச் செய்தியைத் தாங்காமல் நின்று போனது.

வசந்தாவின் இறுதிச் சடங்குக்கு வந்தவர்கள் அனைவருக்கும், ப்ரியாவின் செய்தி தெரியவர, அவை, கண் காது மூக்கு வைத்துப் பரவ, இறுதியில், நந்தன் கையாலாகாதவன், ஆண்மை இல்லாதவன், ஒரு பெண்ணைத் திருப்தி செய்ய முடியாதவன், அதனால்தான் அவள் போய்விட்டாள் என்று பரவ, நந்தன் நொந்து போனான்.

கூட இருந்தும் அவன் நிம்மதியைக் கெடுத்தாள், விட்டுச் சென்றும் அவனுக்கு மிகப் பெரிய தலை குனிவை ஏற்படுத்தினாள். நந்தன் இந்தத் தலை குனிவில் இருந்து வெளி வருவானா?

(குமார் தான், ப்ரியா வைத்துவிட்டுச் சென்ற, பத்திரம், கடிதம் என அனைத்தையும் வக்கீலிடம் காட்டி, நந்தனுக்குப் ப்ரியாவிடம் இருந்து விடுதலை வாங்கிக் கொடுத்தான்).

அவன் மனச்சுமையிலிருந்து வெளிவர நினைத்தாலும், இந்தச் சமூகம் அவனை விடவில்லை. ஒருவழியாக மனம் தேறி , நந்தன் ஆபீஸ் சென்றான். தொழிற்சாலையைச் சுற்றிப் பார்க்கச் சென்ற போது, சில தொழிலாளர்கள் கும்பலாகச் சேர்ந்து பேசிக்கொண்டு இருந்தது, அவன் காதில் விழுந்தது.

"நம்ம முதலாளி கிட்ட ஏதோ குறை இருக்கப் போய்தானே, அந்த அம்மா, அவங்களை விட்டுட்டுப் போய்டுச்சு. அவரால, அவங்களைத் திருப்தி படுத்த முடியலைன்னு கேள்விப்பட்டதா, நம்ம சுப்பு ஏற்கனவே சொல்லிட்டு இருந்தான். இப்போ அதுதான் நிஜம்ன்னு ருசு ஆகிடுச்சுப் பார்த்தியா”.

அதைக் கேட்ட நந்தன் மனம், சுக்கு நூறாக உடைந்தது. அப்படியே, தன்னுடைய அறைக்குச் சென்று விட்டான். மனதில் விழுந்த இடியை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

ஆனாலும் பிற்பகலில், அவன் கட்டாயம் செல்ல வேண்டிய ஒரு மீட்டிங் இருக்கவே, இங்கே நடந்த விஷயங்களை ஒதுக்கிவிட்டு, அங்கே சென்றான்.

மீட்டிங்கின் பாதியிலேயே, அவனுக்கு ஆர்டர் கொடுக்கும் ஒரு கம்பனியின் ஆள், காலையில் அந்தத் தொழிலார்கள் பேசிய அதே விஷயத்தை, வேண்டுமென்றே கிளறி, கொஞ்சம் நாசூக்காக நேருக்கு நேராகவே, கிண்டல் செய்தான்.

தான் செய்யாத தவறுக்கு, சிலுவை சுமக்கும் சக்தி இல்லாமல், இதேபோல் நடந்த பல சம்பவங்களால், மனது ஒடிந்து, அதன் பிறகுஆபீசுக்கே செல்லாமல் , வீட்டுக்குள்ளேயே முடங்கினான், நந்தன் .

***

தாகம் - 37.

வாழ்க்கையின் அடுத்தப் பக்கம்

எதை வைத்திருக்கிறதோ

எனக்கு.....

அன்று ஞாயிற்றுக் கிழமை, வழக்கம்போல் விடியல் சோம்பலாக இருந்தாலும், திவ்யாவின் மனதுக்குள் ஏதோ படபடப்பு. மறுநாளே தன்னை சந்திக்க வந்த ஜீவாவிடம், ஒரு வாரத்தைக் கூடப் பேச முடியாமல் திணறி, வியர்வையில் நனைந்து, பதட்டமாகி, மயக்கமே வரும் நிலைக்குச் சென்றுவிட,

அவள் நிலை உணர்ந்து, பிறகு பேசலாம் என்று சொல்லிவிட்டுப் பெருந்தன்மையாகச் சென்றுவிட்டான். ஆனால் திவ்யாவிற்குத்தான் குற்ற உணர்வாகப் போய் விட்டது.

அவன் என்ன சிங்கமா புலியா? இப்படி அவன் அருகில் வர பயந்தால், அவனும்தான் என்ன செய்வான்....., திவ்யாவை அதன் பிறகு நெருங்கவே இல்லை. கண்மூடித் திறக்கும் முன்னர், ஒரு மாதம் கடந்திருக்க, ஜீவாவின் மில் நல்லபடியாகச் செயல்படத் துவங்கி இருந்தது.

இரவில் வீடு தங்கத் துவங்கவே, அஞ்சலியை திவ்யாவிடம் விடுவதைத் தவிர்க்கத் துவங்கினான். அது அஞ்சலிக்குத் தெரியாமல் பார்த்துக் கொண்டாலும், திவ்யா, அஞ்சலி கிடையாதே...., அவன் தன்னைத் தவிர்க்க நினைப்பதும், அஞ்சலியை விலக்க நினைப்பதும் அவளுக்குப் புரிந்தது.

புரிந்த அதை, ஏற்றுக் கொள்ளத்தான் அவளால் முடியவில்லை. கண்ணனுக்குச் சமாதானம் சொல்லுவது ஒரு பெரிய வேலையாக இருந்தாலும், தன் ஒரு குழந்தையைப் பிரிந்த ஏக்கம், அவளை வாட்டி வதைத்தது.

கண்ணனுக்கு, எப்பொழுதும் அஞ்சலி வேண்டும்....., அவளோடு விளையாடுகிறானோ இல்லையோ, அவள் அவளது அப்பா பற்றி வாய் ஓயாமல் பேசுவதைக் கேட்க அவனுக்குப் பிடித்திருந்தது. அதைவிட, இரவு நேரங்களில் அவளோடு கதை பேசி, சிரித்து, விளையாடி, செல்லச் சண்டை போட்டு, உறங்கிப் பழகிய அவனால், அவள் இல்லாமல் தனியாகத் தூங்க முடியவில்லை.

இதனிடையில், ஹேமாவின் திருமணம் தள்ளிப் போவதை, திவ்யாவால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. திருமணம் ஏன் தள்ளிப் போகிறது என்று திவ்யா கேட்ட பொழுது, அவளைத் தனியாக விட்டுவிட்டுச் செல்ல முடியாது என்று சொல்ல, திகைத்துப் போனாள்.

ஒரு பக்கம் அஞ்சலியின் பிரிவு, மறு பக்கம் கண்ணனின் வருத்தம், இதை எல்லாம் விட....., ஹேமாவின் திருமணம், தன்னால் தடை படுகிறதா....? இதை அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை.

ஹேமாவிடமும், தங்கத்திடமும், தான் இங்கே இருந்து சென்று விடுவதாக மிரட்டிக் கூடப் பார்த்துவிட்டாள். அதற்கு ஹேமாவின் பதில்.... “நீ இல்லாமல் போனால்....., என் வாழ்க்கை பழைய நிலைக்குத் திரும்புமே தவிர, புதிய பாதையில் போகவே செய்யாது”, என்று அவள் சொல்ல, இன்னும் ஓய்ந்து போனாள்.

“நான் இங்கே வராமல் போயிருந்தால், உனக்கு நல்லது நடந்திருக்கும் தானே...?”, வேதனையாக திவ்யா கேட்ட பொழுது,

“நீ இங்கே வராமல் போயிருந்தால்....., அஞ்சலி இங்கே, பத்தோடு பதினொன்றாக இருந்திருப்பாளே தவிர, எனக்கும் கணேஷுக்கும் எந்த சம்பந்தமும் அதனால் வந்து இருக்காது. உன்னால்தான் நாங்கள் இணைந்தோம்...., அப்படி இருக்கும்போது, நீ இல்லாமல் எங்கள் வாழ்வு இணையாது...”, அவள் உறுதியாகச் சொல்ல, தன்னால்

அவளது திருமண வாழ்க்கையே கேள்விக்குறி ஆவதைத் தாங்க முடியவில்லை.

ஹேமாவுக்கோ.., திவ்யா தன் வாழ்க்கை பற்றிய முடிவை எடுப்பதில் இருக்கும் தயக்கம் புரியாமல் இல்லை. ஆனால்.., நீண்ட நாட்களாக மனதை அழுத்திய விஷயத்தை அவளிடம் கேட்கவா, வேண்டாமா.., என்ற தயக்கம்.., அவள் முகத்தில் இருந்தே அதை உணர்ந்த திவ்யா,

“என்ன ஹேமா.., எதையோ கேக்க வந்துட்டு தயங்கற..?” மெதுவாக கேட்டாள்.

“ஏன் திவ்யா, அந்த ஆள் தான் அவ்வளவு மோசமானவன்னு உனக்கு முதல் நாளே தெரியுமே.., பிறகு ஏன் அவனை விட்டு முதலிலேயே விலக நீ முயலவில்லை. அதேபோல்.., உன் அத்தை, அண்ணி உதவியை எல்லாம் நீ நாடி இருக்கலாமே..” கேட்பது சரியா தவறா எனத் தெரியாத தயக்கம், பயம் அவளிடம்.

இன்று வரைக்கும் அவளிடம் இதைப் பற்றி அவள் கேட்டதில்லை. கேட்கக் கூடாது என்பதை விட, தான் கேட்டு, அவளுக்கு எந்த துன்பத்தையும் கொடுத்துவிடக் கூடாது என்பதாலேயே கேட்டதில்லை. ஆனால் இன்று அவளால் கேட்காமல் இருக்க முடியவில்லை.

“இதுக்கு எப்படி பதில் சொல்லன்னு எனக்குத் தெரியலை..., முதல் விஷயம், என் அக்காவின் வாழ்க்கை.., ஏற்கனவே அவளால் வீட்டில் ஏகப்பட்ட பிரச்சனை. அப்படி இருக்கும்போது.., நான் என் வாழ்க்கையையே தொலைக்கப் போறேன்னு தெரிந்தால் வீட்டில் ஏற்படும் சூழல், அதை எப்படி சம்மாளிக்க என்பது எனக்கு தெரியலை.

“என்னால் முடிந்த அளவுக்கு அந்த உறவை காப்பாற்றிக்க நினைத்தேன். ஆனா.., அது எல்லாம் முடியாமலே போச்சு. அத்தை.., அண்ணி.., அவங்க உதவியை நான் நாடி

இருக்கலாம். ஆனா, என்னை பெற்ற தாயே எனக்கு எதிராக இருக்கும்போது, எந்த நம்பிக்கையில் அவங்க உதவியை நாட?

“அதைவிட, அவங்ககிட்டே நான் ஒரு நாள் கூட நெருங்கி பேசியதோ, பழகியதோ இல்லை. அதற்கான சந்தர்ப்பம் எனக்கு வாய்க்கவே இல்லன்னுதான் சொல்லணும். ஒரு குழந்தை வந்துட்டா மாறிட மாட்டானா என்ற என்னோட எதிர்பார்ப்பாக கூட இருந்திருக்கலாம்.

“எல்லாமே பொய்யா போச்சு.., அவன் மனுஷனா, மிருகமான்னே தெரியாமல், இறுதியா.., அவன் காமவெறி பிடித்த மிருகம் மட்டுமே என தெரிய வந்தப்போ.., எனக்காக என் அப்பா ஏற்படுத்திக் கொடுத்த ஒரு பிடிப்பின் நம்பிக்கையில் வெளியேறிட்டேன்.

“வீட்டுக்குள் ஒரு மிருகம்.., வெளியே அவனைப்போல் எத்தனை மிருகங்கள் இருக்குமோ என்ற பயம் கூட அப்போ இருந்தது. எனக்கு ஒரு பாதுகாப்புக்காக அம்மா வீட்டுக்கு போகலாம்னா.., அந்த படி எனக்கு எட்டாக்கனி என்னும்போது.., நான் என்ன செய்திருக்க முடியும்?

“எல்லாத்தையும் தாண்டி.., என் கண்ணனுக்காக மட்டும்தான் இந்த உயிரை நான் இன்னும் வைத்திருக்கிறேன். ஆனா இப்போ.., அஞ்சலி.., என்னால் அவளை விட்டுக் கொடுக்க முடியாது ஹேமா. அந்த பிஞ்சு மனசு அம்மாவுக்காக ஏங்கும்போது.., அதை எப்படி நான் தவிர்க்க..?” ஒவ்வொன்றாக சொல்லிக்கொண்டே வந்தவள், இறுதியாக அஞ்சலியிடம் வந்து நிறுத்தினாள்.

திவ்யா சொன்னதில் இருந்த உண்மைகளும், அவளது சூழலும் புரிய, அமைதியாக அதை ஏற்பதை தவிர அவளுக்கு வேறு வழி இருக்கவில்லை.

அதன் பிறகு, தங்கமோ, ஹேமாவோ, அவள் திருமணம் தள்ளிப் போவதைப் பற்றிய வருத்தத்தை ஒருத் துளிக் கூட திவ்யாவிடம் காட்டவில்லை. இந்தச் செய்கையே அவளை

இன்னும் குற்ற உணர்வில் குறுகச் செய்தது. இதைத் தாங்க முடியாமல், “ஹேமா நான் ஜீவாவைக் கல்யாணம் செஞ்சுக்கச் சம்மதிக்கிறேன். நீங்க ஏற்பாடு பண்ணுங்க.....”, விட்டத்தை வெறித்தவாறு அவள் சொல்லிவிட்டாள்.

“இங்கே பார் திவ்யா...., இந்த அவசர முடிவு, எனக்காகன்னா தயவு செய்து வேண்டாம்....., எனக்கு, உன்னோட நிம்மதியும், கண்ணனோட சந்தோசமும் தான் முக்கியம். அதை விட்டு, என்னோட சந்தோசத்துக்காக, உன்னை, உனக்கு விருப்பமே இல்லாத பந்தத்தில் இணைக்க, எனக்குத் துளிக் கூட விருப்பம் இல்லை.

“அப்படியே, எனக்காக நீ இந்த முடிவுக்கு வந்தால்..., என்னால் கணேஷோட ஒரு நாள் கூட நிம்மதியா வாழ முடியாது. நீ என்னைப் பத்தி இதில் நினைக்கவே செய்யாதே....., கண்ணன், நீ, ஜீவா, அஞ்சலி....., உங்க நாலுபேரை மட்டும் மனசில் வச்சு முடிவெடு.

“இப்போ எனக்காகச் சம்மதம் சொல்லிட்டு....., ஜீவாவுக்கு இன்னொரு....”, “ஹேமா.....”, வேகமாகச் சொல்லிக் கொண்டே வந்தவள், திவ்யாவின் அழைப்பில் அமைதியாகி, அவள் முகத்தைப் பார்த்தாள். அவள் முகத்தில் தெரிந்த வேதனை, அவள் மனதை உருக்கியது.

“என்னோட பயம் அது இல்லை ஹேமா. என்னைப் பற்றி உனக்கு முழுதாகத் தெரிந்தும்.....”, ஹேமா, திவ்யா அழுவது தாங்காமல், அவளை தோளில் சாய்த்துக் கொண்டாள்.

“ஏன் திவ்யா, உன்னையே நீ ஏமாத்திக்கிற....? உன்னால் அஞ்சலியை விட்டுட்டு இருக்க முடியலன்னு சொல்லு, நான் ஒத்துக்கறேன். கண்ணனோட சோர்ந்த முகத்தையும், ஏக்கமான பார்வையையும் உன்னால் தாங்கிக்க முடியலன்னு, சொல்லு ஒத்துக்கறேன்.

“இதையெல்லாம் விட்டுட்டு....., வேண்டாம் திவ்யா...., இந்த ஹேமாக்காக உன்னை நான், உனக்குப் பிடிக்காததை செய்யவே சொல்ல மாட்டேன். மனசைப் போட்டு குழப்பிக்காமல் நிம்மதியா இரு”, அவள் என்னவோ, நிம்மதியாக இரு என்று சொல்லிவிட்டாள் ஆனால் அவளது நிம்மதியை அடியோடு குலைக்கவென்றே, ஒரு வாரம் முழுதாக, அஞ்சலி பள்ளிக்கே வரவில்லை.

துடித்துப் போனாள் திவ்யா. கண்ணன் அஞ்சலியைத் தேடித் தேடி, அவனுக்குக் காய்ச்சலே வந்து விட்டது. ஹேமாவோ, தங்கமோ அதைப் பற்றி அவளிடம் எதையும் கேட்கவும் இல்லை. குறையும் சொல்லவில்லை.

“கண்ணா... என்னடா இப்படிப் பண்ணுற...? அஞ்சலி வந்துடுவாடா. காய்ச்சல் விடவே மாட்டேன்னு அடம் பண்ணுதே....., ஹேமா... அஞ்சலி ஏன் ஸ்கூல்க்கு வரலன்னு உனக்குத் தெரியுமா? அவளுக்கு உடம்பு சரியில்லையா..?

“ஏன் என்கிட்டே எதுவுமே சொல்ல மாட்டிக்க...? எனக்கு மனசு கிடந்தது அடிச்சுக்குது. ஒரு வாரமா பிள்ளையைக் கண்ணிலேயே காட்டாமல் என்னதான் செய்யிறாங்க?”, அஞ்சலியைக் காணாதது, கண்ணனின் உடல்நிலை, எல்லாம் சேர்ந்து, சகட்டு மேனிக்கு அனைவரிடமும் தன் கோபத்தை, வார்த்தையால் காட்டினாள்.

‘இதைக் கேக்க உனக்கு ஒரு வாரம் தேவைப் பட்டுத்தா...?’, மனதுக்குள் எண்ணியவள், “திவ்யா.... அவங்க குழந்தையை, அவங்களுக்கு விருப்பம்ன்னா விடுவாங்க, இல்லையா விட மாட்டாங்க. நாம என்ன கேக்குறது?”, எதுவும் தெரியாதவள்போல் அப்பாவியாகச் சொல்ல, திவ்யாதான் மனதுக்குள் துடித்தாள்.

குழந்தையைக் காணாத ஏக்கத்தை அவர்களுக்குக் காட்டாமல் மறைத்தாள். ஆனால் எவ்வளவு தூரம் அதை மறைக்க முடியும்? ஒரு வாரப் போராட்டத்திற்குப் பிறகு,

அன்று ஜீவாவையும் அஞ்சலியையும் அவள் பார்க்கப் போகிறாள்.

எனவேதான் அந்த ஞாயிறை, மிகுந்த எதிர் பார்ப்புடன் எதிர் கொண்டது அவள் மனம். இதோ ஜீவாவின் கார் சத்தமும் கேட்கின்றது. கண்ணன் படுக்கையில் இருந்தவன் துள்ளி எழுந்து, “அஞ்சலி.....”, என்ற கூக்குரலுடன் மாடி இறங்கினான்.

திவ்யாவும் அவனுக்கு நிகரான ஆவல் கொண்டிருந்தாள். ஆனால் அதை வெளியே காட்ட முடியவில்லை அவளால்..... கீழே சென்ற கண்ணனோ, அஞ்சலியை ஓடிச் சென்று கட்டிக் கொண்டான். அவன் அதிகமாக வெளிப்படுத்திய உணர்வு அதுதான்.

ஆனால், அஞ்சலிக்கு எந்தத் தயக்கமும் இருக்கவில்லை. “டேய் கண்ணா.....”, என்ற அழைப்பில்....., அவனை கட்டிக் கொண்டு முத்தமழை பொழிந்தாள். “மம்மி எங்கே....?”, அவனிடம் கேட்டுவிட்டு, அவனை எதிர் பார்க்காமல், மாடியேறி ஓடினாள்.

“மம்மி.....”, அஞ்சலியின் அழைப்பில், இதற்கு மேலும் தன் உணர்வுகளுக்கு அணை போட முயலாமல், ஓடி வந்து வாரி அணைத்து தூக்கிக் கொண்டாள்.

“அஞ்சும்மா....., எங்கடா போய்ட்டீங்க....? இந்த மம்மியை மறந்துட்டியா?”, கேட்டவாறு அவளை அணைத்து முத்தமழை பொழிந்தாள்.

அஞ்சலியோ...., “மம்மி..., உங்களுக்கு அப்பாவைப் பிடிக்கலையா..? அதனால்தான் எங்க வீட்டுக்கு வர மாட்டேன்னு சொல்லிட்டீங்களா? இனிமேல் உங்களைத் தொந்தரவு செய்யக் கூடாதுன்னு அப்பா சொன்னாங்களே ஏன்..?

“என்னை, வேற ஸ்கூல்லப் போடப் போறாங்களாம்....., நான் எல்கேஜி போகப் போறேனாம்....., அங்கே எனக்கு,

கண்ணன் மாதிரி நிறைய ப்ரண்ட்ஸ் கிடைப்பாங்களாம்....., ஆனால், அது கண்ணனா ஆக முடியாது தானே.....

“முந்தி கூட, அம்மாவைத் தொந்தரவு செய்யக் கூடாதுன்னு சொன்னாங்க...., அம்மா போய்ட்டாங்க...., இப்போ உங்களையும் தொந்தரவு செய்யக் கூடாதுன்னு சொல்லுறாங்க..... அப்போ நீங்களும் என்னை விட்டுப் போகப் போறீங்களா? எனக்கு நீங்க வேணும் மம்மி...., எங்க வீட்டுக்கு வந்துடுங்களேன்...., எனக்கு நீங்க வேணும்.....”, அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு, விடவே மாட்டேன் என்று அழுது அடம் பிடித்தாள்.

அதைவிட, அப்பா சொன்ன வார்த்தைகள் அவள் மனதில் பயத்தைக் கொடுத்து இருந்தன. எனவேதான், திவ்யாவைப் பார்த்தவுடன் அனைத்தையும் கொட்டிவிட்டாள். இனிமேல் திவ்யா, கண்ணனைக் காண முடியாது என்று சொன்னதை, அந்தப் பிஞ்சு மனம் தாங்க முடியாமல் தவித்தது.

திவ்யா ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள்....., தன்னால் அஞ்சலியைப் பிரிய முடியாது. அதேபோல், கண்ணனை இதற்குமேல் தவிக்க விட முடியாது. தன் மனக் காயங்களைப் பார்த்தால், இரண்டு பிஞ்சு உள்ளங்கள் வாடுவதை, வேடிக்கைப் பார்க்க மட்டுமே முடியும்.

இல்லை... என் குழந்தைகளின் மனம் வாட நான் விட மாட்டேன். முடிவெடுத்து விட்டாள்....., அஞ்சலியைத் தூக்கிக் கொண்டு கீழே இறங்கி வந்தாள்....., அங்கே ஜீவா, கை நிறைய சாக்கலேட்களை வைத்துக் கொண்டு, கண்ணனுக்கு எதிரில் மண்டியிட்டு அமர்ந்திருந்தான்.

கண்ணனோ கொஞ்சம் கூட பயம் இல்லாமல், அவன் அருகில் நெருங்கி, அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். ஜீவா, தன் இடக் கரத்தை நீட்டி, கண்ணனின் தலையை மெதுவாகக் கலைத்தான்.

கண்ணன் இரண்டடி பின் வாங்கினாலும், ஓடி ஒளியவில்லை. “எடுத்துக்கோடா கண்ணா....”, கலங்கும்

தன் குரலை நேராக்கியவாறே கர கரப்பாகச் சொல்ல, கண்ணனோ 'வேண்டாம்' என்பதுபோல் தலையை ஆட்டினான்.

ஜீவாவுக்கும், கண்ணனைத் தன் நெஞ்சோடு சேர்த்துக் கட்டிக்கொண்டு முத்தமிட ஆசைதான்...., ஆனால், அவன் அழுது விடுவானோ என்ற தயக்கத்திலேயே அதைச் செய்யத் துணியவில்லை. அஞ்சலிக்கு இருந்த அதே தவிப்பு, கண்ணனிடமும் இருந்தது. ஆனால், அதை அவன் வெளியிடத் தெரியாமல் நின்றான், அவ்வளவே.

"கண்ணா.... நான் அங்கே வைக்கிறேன்...., பிறகு எடுத்துக்கறியா...?", கேள்வியாக அவனைக் கேட்க, அதற்கும் அவன் 'இல்லை' என்றே தலையை ஆட்டினான்.

"சரி நான் போகட்டுமா....? இனிமேல் நான் இங்கே வர மாட்டேன்...., அஞ்சலிக்கு வேற ஸ்கூல் பாத்துட்டேன்...., நீயும் இந்த வருஷம் எல்கேஜி போறல்ல...., எந்த ஸ்கூல் போற...? என்னை மறந்துட மாட்ட தானே...., நான் போறேன்.....", ஜீவாவுக்கே இதைச் சொல்லும் பொழுது அழுகை வரும்போல் இருந்தது.

இருக்கும் இடம் கருதியும், இதுதான் எதார்த்தம் என்ற உண்மை மனதின் ஓரம் புரிய வரவும், தன்னைத் தானே திடப் படுத்திக் கொண்டான். அவன் முன்பு இருந்து எழப் போனான்...., அவனை எழ விடாமல், அவன் கோட் ஓரம், கண்ணனின் கையில் சிக்கியிருந்தது.

ஜீவா ஆவலாகத் திரும்பிப் பார்க்க, "நா.....னு.....", இதைக் கேட்கும் முன்பே கண்ணனின் இதழ்கள் துடித்து, அழுகைக்குத் தயார் ஆயின. ஜீவா கரங்களை நீட்டி அவனைப் பிடிக்கும் முன்பே, மாடியை நோக்கி விரைந்தான். அங்கே இருந்த திவ்யா கண்ணனைத் தூக்கிக் கொண்டாள்.

அவள் கண்கள் கலங்கி இருந்தன. ஜீவா, தன்னைச் சட்டென சுதாரித்துக் கொண்டு, "அஞ்சும்மா வா

போகலாம்....", குரல் கொடுத்தான்.

அவளோ..., "நான் வர மாட்டேன்...., நான் மம்மி கூடத்தான் இருப்பேன். அங்கே வந்தால், நீ மம்மியை மறக்கச் சொல்லுவ. நான் மாட்டேன்.... எனக்கு மம்மி வேணும்...", திவ்யாவின் தோளில் இருந்து முகத்தை நிமிர்த்தாமலே பதில் சொன்னாள்.

"அஞ்சும்மா...., நான் ஏற்கனவே சொல்லி இருக்கேன்ல....., அவங்களைத் தொந்தரவு செய்யக் கூடாதுன்னு.....", "போப்பா...., நீ இதைச் சொல்லாதே...., எனக்குப் பிடிக்கலை....", கோபமாகக் குறுக்கிட்டுச் சொன்னாள் அஞ்சலி.

ஒரு வாரமாக, தான் அவளுக்கு உருப் போட்டது, பலிக்காமல் போனதில், நொந்து போனான் ஜீவா. தான் இங்கே வந்திருக்கவே கூடாதோ என்று எண்ணினான். "சாரி... நான் இப்படி ஆகும்னு எதிர் பாக்கலை...., தெரிந்திருந்தால் அவளை இங்கே அழைச்சுட்டே வந்திருக்க மாட்டேன்....", மனதில் தோன்றியதை அப்படியே சொன்னான்.

இதுவரை அவன் வந்ததுமுதல் நடப்பவற்றை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த ஹேமாவும், தங்கமும் வாய் திறக்கும் முன்பே, "அஞ்சலி என்னோட மக....., அவளை என்னை விட்டுப் பிரிக்கப் பாக்குறீங்களா நீங்க....? அவளை நான் எங்கேயும் அனுப்ப மாட்டேன்", இந்த வார்த்தைகளைக் கேட்டது, சாட்சாத் நம்ம திவ்யாதான்.

அங்கிருந்த அனைவருக்குமே, சுற்றுப்புறம் ஒரு நிமிடம் தன் அசைவை நிறுத்தியது. பெரியவர்கள் அனைவரும் மௌனம் சாதிக்க, "மம்மி..., நிஜம்மாவா....., என்னை அப்பாவோட அனுப்ப மாட்டீங்களா? என்னையும் உங்களோட வச்சுக்கப் போறீங்களா...? அப்பா நீ போ...., எனக்கு மம்மி கிடைச்சுட்டாங்களே...., இனிமேல் நான்

இங்கேதான் இருப்பேன்...., வவ்...வவ்.... வவ்...", குஷியாகச் சொல்லி, அவனுக்கு அளவம் காட்டினாள்.

ஜீவாவின் முகம் அஞ்சலியின் பேச்சைக் கேட்டு வெளிறியது....., 'என் மகளுக்கும் நான் வேண்டாமா...? எனக்கென்று இந்த உலகில் யாருமே இல்லையா...?', ஒரு நொடியில் உடைந்து போனான். அதென்னவோ...., "அஞ்சலி என்னோட மக....", என்று வீராப்பு காட்டி, அவளை அழைத்துச் செல்ல அவனால் முடியவில்லை.

சட்டென அங்கிருந்து வெளியேற முயல, அவன் முக பாவனையைப் பார்த்துக் கொண்டிருந்த ஹேமா, திவ்யாவை முறைக்க, திவ்யாவே அஞ்சலியின் இந்தப் பதிலையும், ஜீவாவின் அடிபட்ட பாவனையையும் எதிர் பார்க்காதவள், ஹேமாவிடம் பார்வையால் கெஞ்சினாள்.

"அஞ்சலி... அதான் அப்பா இங்கேயே இருக்கச் சொல்லிட்டாங்களே, வா, நாம போய் கண்ணனோட விளையாடலாம்...", சொல்லிவிட்டு, குழந்தைகளை வாங்கிக் கொண்டு, திவ்யாவின் பார்வைக்கு எந்த பதிலும் சொல்லாமல் சென்றுவிட்டாள்.

திவ்யா தயக்கமாக தங்கத்தை ஏறிட, "திவ்யா...., அஞ்சலி அவரோட குழந்தை...., அவருக்கு இருக்கும் ஒரே ஆதாரம். இப்போ, அவளையும் உன்கிட்டே தொலச்சுட்டோமேன்னு, அவர் ரொம்ப பீல் பண்ணுவார். இப்போ முடிவெடுக்க வேண்டிய சூழ்நிலையில் நீ இருக்க திவ்யா", அவளையே கூர்மையாகப் பார்த்தவாறு சொன்னார்.

"நான் முடிவெடுத்துட்டேம்மா....., என்னால் அஞ்சலியை விட்டுட்டு இருக்க முடியாது...., சோ....", மேலே சொல்லத் தயங்கினாள்.

'நீயே சொல்' என்பதுபோல் அவர் பேசாமல் இருக்க, "நான் அவரைக் கல்யாணம் செஞ்சுக்கறேம்மா....., எனக்குச் சம்மதம்", தங்கத்தின் பார்வையை நேராகச் சந்தித்து, எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் சொன்னாள்.

“நீ...., நிஜமாதான் சொல்லுறியா திவ்யா..? இதைக் கேக்கவே எனக்கு எவ்வளவு சந்தோசமா இருக்கு தெரியுமா...? நீ இதை இப்போவே ஜீவா கிட்டே பேசிடு....., அவர் வெளியே, அந்த பெஞ்சில் தான் உக்காந்து இருப்பார் போ....”, அவளை அனுப்பினார்.

அவளை அனுப்பிவிட்டு, பூஜை அறையில் மஞ்சள் துணியில் காசு முடிந்து வைத்தார். அவரிடம் தன் முடிவை தயக்கம் இல்லாமல் சொல்ல முடிந்த அவளால்..., ஜீவாவிடம் அதைச் சொல்ல, மிகப் பெரிய தயக்கமே இருந்தது.

வீட்டின் உள்ளே இருந்து, அவன் அருகில் செல்ல இருக்கும் இருபதடி தூரத்தை கடக்க, அவளுக்குப் பத்து நிமிடங்களுக்கு மேல் ஆனது. கால்களில் ஏதோ இரும்பு குண்டை கட்டி வைத்ததுபோல் நகர்த்தவே முடியவில்லை.

எப்படியோ, மிகுந்த தயக்கத்துக்கு மத்தியில், அவன் இருந்த இடம் சென்றாள். அவள் வருகையை உணர்ந்து, அவளை நிமிர்ந்து பார்த்தான். பார்த்தவன், அவள் முகத்தைப் பார்க்காமல் பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

“சாரி...., நான் ஏதோ.....”, அவளுக்கு வார்த்தைகள் தந்தியடித்தது.

“பரவாயில்லங்க...., அஞ்சலி சின்னப் பொண்ணு...., சொன்னால் புரிஞ்சுப்பா...., இன்னும் ஒரு வாரம், உங்களைப் பாக்காமல் இருந்துட்டா, உங்களை மறந்துடுவா..., மறந்துடுவான்னுதான் நினைக்கிறேன்...”, நடக்கவே முடியாத ஒன்றைப் பேசுகிறோம் என்பது அவனுக்கே தெரிந்து விட்டது.

அதன் பிறகு யார் பேச்சைத் துவங்குவது என்று அங்கே பெரிய போராட்டம்....., ஜீவா, ஓர விழியாக அவளைப் பார்க்க, திவ்யா புடவைத் தலைப்பால் தன் முகம் துடைப்பது, அவன் பார்வையில் விழுந்தது.

‘நான் என்ன, பார்க்க அவ்வளவு கொடூரமாகவா இருக்கிறேன்..?’, ஏனென்று தெரியாமலே அவன் நெஞ்சில் வலி.....

“சரிங்க நான் போறேன்.....”, அவள் பதட்டத்தை அவன் அதிகரிக்க விரும்பாமல் கிளம்ப முயன்றான்.

“ஒரு நிமிஷம்....”, திவ்யாவின் குரல் தடுக்க, திரும்பாமல், அவளுக்கு முதுகு காட்டியே நின்றான்.

அவன் தன் முகம் பார்க்காமல் நிற்பது அவள் மனதில் ஒரு வலியைக் கொடுத்தாலும், அதை விட்டுவிட்டு, “அ....ன்..னைக்கு பே.. பே..ச வந்தீ...ங்களே...., அ..அ...தை இன்...னைக்குப் பே..பே....சுறீங்களா...?”, இதைச் சொல்லும் முன்னர், பாதிக் காற்றுதான் வந்தது.

அவள் சொல்ல வந்தது அவன் செவிகளைத் தாண்டி விழுந்து, அது மனதில் பதிந்து, அதை அவன் கிரகிக்க, முழுதாகப் பத்து நிமிடம் ஆனது. அவள் சொன்னது உண்மைதானா...? என்பதை அவள் முகம் பார்த்து அறிய நினைத்தாலும்,

அவளது பதட்டம் அவனை, அதைச் செய்ய விடாமல் தடுத்தது. அவன் எடுத்துக் கொண்ட அந்தப் பத்து நிமிடங்களில்...., திவ்யாவின் மனம் எதை எதையோ எண்ணிக் கலங்கித் தவித்தது. ‘எங்கே தன்னைக் கேவலமாக எண்ணி விடுவானோ? தான் கேட்டது தவறோ? அவசரப்பட்டுக் கேட்டு விட்டோமோ..?’, எனத் துடித்தாள்.

ஜீவா, மறுபடியும் அந்த இருக்கையில் அமர்ந்த பிறகுதான், அவளால் மூச்சு விடவே முடிந்தது. அவளது தவிப்பைப் பார்த்துக் கொண்டே இருந்தவன், ஆழ்ந்து ஒரு மூச்சு விட்டான்.

“நீங்க முழு மனசோடதான் இதைக் கேக்குறீங்களா..? உங்களுக்கு நிஜமாவே அஞ்சலியோட அம்மாவா....,

இல்லை...., என்னைக் கல்யாணம் செஞ்சுக்க சம்மதமா...?”, தயக்கமே இல்லாமல், உறுதியாகப் பேசத் துவங்கினான்.

“ம்ம்ம்....”, என்ற ஒற்றை ஒலி மட்டுமே அவளது சம்மதமாக வந்தது. “அப்போ, மேற்கொண்டு நான் பேசுறேன்...., இந்தக் கல்யாணம் நமக்காக என்பதை விட, நம்ம குழந்தைகளுக்காக என்பதுதான் உண்மை. அதனால், நீங்க எந்தவிதமான பயத்தையும் மனசில் வச்சுக்காதீங்க.

“நீங்களும் கண்ணனும், நம்ம வீட்டில் முழுச் சுதந்திரத்தோடு இருக்கலாம். அதில் என்னோட எந்தவிதத் தலையீடும் இருக்காது. என் மனைவியாக, எந்த விதத்திலும் நீங்க நடந்துக்கணும்னு நான் நினைக்கவே மாட்டேன். அதனால், அந்த பயமும் உங்களுக்கு வேண்டாம்.....

“கண்ணன் இனிமேல் என்னோட மகன்....., அவனையும் நான் அஞ்சலி மாதிரி, என்னோட இன்னொரு குழந்தையாகத்தான் பாக்குறேன், அதனால், அவனைப் பற்றிய பயம் உங்களுக்கு வேண்டாம்.

“அப்படியே என்மேல் உங்களுக்கு நம்பிக்கை வர வேண்டுமென்றால்...., என்னோட சொத்தை இப்போவே ரெண்டு பங்காகப் பிரித்து, கண்ணனுக்குப் பாதியும், அஞ்சலிக்குப் பாதியும் எழுத, நான் தயாரா இருக்கேன்..... கண்ணனோட மனதில், அப்பாவா இடம் பிடிப்பதுதான் என்னோட முதல் வேலை.....

“சட்டப்படி நீங்க என்னோட மனைவி ஆயிட்டா....., உங்களுக்கு உண்டான எல்லா உரிமைகளையும் நான் தரத் தயாரா இருக்கேன்...., ஆனால், நான் உங்ககிட்டே கேட்பது ஒன்றே ஒன்றுதான்....., நீங்க என்னோட மனைவியான பிறகு, என்னோட ஒரே வீட்டில், ஒரே அறையில்தான் இருந்து ஆகணும்....

“பசங்களும், அதே அறையில் நம்மளோடதான் இருப்பாங்க...., ஆனால் அப்படி இருந்தாலும், உங்க

விருப்பத்துக்கு மாறா எதுவும் நடக்காது. இதில் என்னை நீங்க முழுசா நம்பணும்...., இதில் அடிப்படை, நம்பிக்கையைத் தவிர வேறு எதுவும் இல்லை .

“அப்படியே வேறு ஏதாவது வழிமுறை இருந்திருந்தால் அதை நான் செய்திருப்பேன்...., நீங்க நம்ம வீட்டில், அஞ்சலிக்கும், கண்ணனுக்கும் அம்மாவா மட்டும் இருந்தால் போதும். நீங்க என் மனைவியான பிறகு, உங்களோட சுய கௌரவத்துக்கோ, சுய மரியாதைக்கோ, என்னால் எந்தவிதமான பங்கமும் வராது.....

“அதே மாதிரி...., என் மனைவியைப் பாதுகாப்பது என்னோட கடமை. வெளியில் இருந்து ஒரு தூசு துரும்பு உங்களை அண்டுவதைக் கூட, ஒரு கணவனா நான் அனுமதிக்க மாட்டேன். உங்களுக்கு வேலைக்குப் போக விருப்பம் என்றால்...., தாராளமா நீங்க போகலாம்...., அதை நான் தடுக்க மாட்டேன்....

“அது உங்களோட வீடு...., நம்மோட வீடு....., என்மேல் முழு நம்பிக்கை வைத்து நீங்க வரணும் அவ்வளவுதான்...., இனிமேல் நீங்க சொல்லுங்க...., நான் கேக்குறேன்...”, அனைத்தையும் தங்கு தடையில்லாமல், அழகாகச் சொல்லி முடித்தான்.

அவளது வீடு, அவளது விருப்பம், பாதுகாப்பு, நம்பிக்கை....., கண்ணனுக்கு வேண்டியது, அனைத்தையும் அவளும் உணர்ந்தாள். அவள், அவன் மனைவியாக எந்த விதத்திலும் நடக்க வேண்டாமென்று அவன் சொன்னதில் இருந்த அழுத்தம்....., அதில் இருந்த மறை பொருள், என அனைத்தும் அவளுக்குப் புரிந்தது. ஆனாலும், ஏதோ ஒன்று குறைவதாக, அவளுக்குத் தோன்றியது.

அது தன் மனப் பிரமையாக இருக்கும் என்று விட்டுவிட்டாள். இதற்குமேல் அவள் சொல்ல வேண்டியது எதுவும் இருப்பதாக அவளுக்குத் தெரியவில்லை. ஜீவா, தன் பதிலை எதிர் பார்த்திருப்பது புரிய, “நான் உங்களை

நம்புறேன்....., ஆனால் முழுசா நம்ப முடியுமான்னு தெரியலை.

“என்னோட இடத்தில் நீங்க இருந்திருந்தால் உங்களுக்குப் புரிந்திருக்கும்....., நம்ப முயற்சி செய்யிறேன்....., அஞ்சலி என்னோட மக...., அவளைப் பற்றிய கவலை இனிமேல் உங்களுக்கு வேண்டாம். ஆனால் ஒரே அறையில்.....”, அவள் இதை மறுக்கத் துவங்கிய வேளையில்.....

ஜீவாவின் முகம் எதையோ கண்டு அச்சப் படுபவன்போல் வெளிறவே, “ஒரே அறையில் எப்படின்னு தெரியலை...., கண்ணன்...., இதை எனக்குச் சொல்லிப் புரிய வைக்கத் தெரியலை...., முயற்சி பண்ணுறேன்”, இவற்றையும் சேர்த்துச் சொன்ன பிறகுதான், கொஞ்சமாவது இயல்பானது அவன் முகம்.

அதன் பிறகு, மிகுந்த தயக்கத்துக்கு இடையில், “என்.... என்னால்...., உங்....க....., ம...னை...வியா..... எ...தை....யுமே....”, இந்த வார்த்தைகளைத் தந்தி மொழியில் உச்சரிக்கும் போதே...., அவள் கைகள் முந்தானையைப் பிடித்துக் கசக்கி, முடிச்சுப் போட முயன்று தோற்று..., நடுங்கியது.

“ப்ளீஸ்....., வேண்டாம்....., உங்ககிட்டே ஏற்கனவே சொல்லிட்டேன்...., என் மனைவியாக, நீங்க ‘எந்த’ விஷயமும் செய்யணும்னு நான் எதிர் பார்க்கவே இல்லை...., நீங்க அதைப் பற்றி நினைக்கக் கூட வேண்டாம்”, அவன் அழுத்தம் திருத்தமாக உரைத்தும், அவள் நடுக்கம் மட்டும் குறையவே இல்லை.

இங்கே மாடியில், ஹேமா குழந்தைகளோடு விளையாடிக் கொண்டிருந்தாள். அப்பொழுது திடீரென யோசனை வர...., “அஞ்சலி...., கண்ணா....., நாம இப்போ ஒரு விளையாட்டு விளையாடலாமா? நான் இப்போ, உங்க அம்மா அப்பா பேர், பிறகு உங்க கூட இருக்குறவங்க பேர் எல்லாம் கேட்பேன்....., யார் சரியாச் சொல்லுறீங்களோ, அவங்களுக்கு ஒரு கிப்ட்

தருவேன் சரியா....?", மெதுவாக அவள் வேலையைத் தொடர்ந்தாள்.

"ஹையா...., நான் ரெடி....., எனக்குதான் எல்லார் பேரும் தெரியுமே....", உற்சாகமாகக் கூச்சலிட்டாள் அஞ்சலி. கண்ணன் அவ்வளவு உற்சாகமாக இல்லை என்றாலும், கொஞ்சம் தயக்கமாகச் சம்மதித்தான்.

"இப்போ முதல்ல, கண்ணா கிட்டே....., கண்ணா... உன் அம்மா பேர் என்ன....",

"திவ்யா....., திவ்யதர்ஷிணி.....".

"இப்போ அஞ்சலி...., உன் அப்பா பேர் என்ன...?",

"ஜீவா...., ஜீவானந்தன்..... ஹை... எங்க அப்பாவுக்கும் ரெண்டு பேர்..., உங்க அம்மாவுக்கும் ரெண்டு பேர்...", குதித்தாள் அஞ்சலி. அவளுக்கு இந்த விளையாட்டுப் பிடித்திருந்தது.

"சரி இப்போ, உங்க அம்மா பேர் சொல்லு அஞ்சலி....".

"ப்ரியா...", முகத்தை உர்ர்...., என்று வைத்துக் கொண்டு சொன்னாள்.

அதைக் கண்டு கொள்ளாமல்...., "கண்ணா.... உன் அப்பா பேர் என்ன....?",

ஹேமா கேட்க, அவன் முகம் கலவரமானது....., சொல்ல மாட்டேன் என்பதுபோல் தலையை ஆட்ட, "கண்ணா... உனக்கு உங்க அப்பா பேர் மறந்துடுச்சா...? எனக்குத் தெரியுமே....", சொல்லி குதிக்க...,

"வித்தார்த்.....", கிட்டத்தட்டக் கோபமாகக் கத்தினான். "எனக்குப் பிடிக்காது....", கால்களைக் கட்டிக் கொண்டு, முகத்தை அதில் புதைத்துக் கொண்டான்.

அவன் செய்கையில் தவித்த ஹேமா, “கண்ணா... உனக்குப் பிடிச்ச அப்பா வாங்கிடலாமா...? அதே மாதிரி, அஞ்சலிக்கும் பிடிச்ச அம்மா கொண்டு வந்துடலாமா.... என்ன சொல்லுறீங்க...?”, கைகளை உயர்த்திக் கேட்க,

“நிஜம்மாவா.....? அப்போ எனக்கு, திவ்யாம்மா தான் வேணும்...”, அஞ்சலி பட்டென சொல்ல, கண்ணனோ...., “எனக்கு அஞ்சலி அப்பாதான் வேணும்....”, தயக்கமாகச் சொன்னான்.

“சரி அப்போ, இனிமேல் உங்க கிட்டே யார் கேட்டாலும் ரெண்டு பேரும், உங்க அப்பா அம்மா பேர்...., ஜீவானந்தன், திவ்யதர்ஷிணின்னு சொல்லுங்க, சரியா?”, குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்க,

சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளைகளாக, தங்கள் தாய் தந்தை பெயரைத் திரும்பத்திரும்ப உச்சரித்துக் கொண்டிருந்தார்கள் கண்ணனும், அஞ்சலியும்.

“அதோட, உங்க மாமா பேரு கணேஷ், கணேஷ்குமார். அத்தை பேரு ஹேமா நான்தான், சரியா”, குழந்தைகளை அணைத்துக் கொண்டாள்.

இரு துருவங்களாக....., வாழ்க்கையில், இதற்குமேல் துன்பம் இல்லை, இருக்கப் போவதில்லை என, நரகத்தின் விளிம்பு வரை சென்று திரும்பிய ஜீவானந்தனும், திவ்யதர்ஷிணியும் இனி ஒரே புள்ளியில் இணைந்து, தங்கள் பயணத்தைத் துவங்கப் போகிறார்கள். இவர்கள் வாழ்வு இனி என்னவாகும்????

பழைய நிழல்கள் இவர்கள்மேல் விழுமா? பழையக் காயங்கள் மறைந்து, இவர்களால் ஒன்றிணைய முடியுமா? பிள்ளைகளுக்காகத் துவங்கும் இவர்களின் அடுத்த அத்தியாயம் எப்படி இருக்கும்? பார்க்கலாம்.....

முதல் அத்தியாயம் இத்தோடு நிறைவு பெறுகிறது. அடுத்த அத்தியாயத்தில் மீண்டும் உங்கள் அனைவரையும்

சந்திக்கிறேன்.

தங்கள் வாழ்வில் இதேபோல் துன்பப் பட்டு, துயரப்பட்ட சகோதரிகளுக்கு இந்த கதை சமர்ப்பணம்.

படித்துவிட்டு உங்கள் கருத்துக்கள், நிறை குறைகள் அனைத்தையும் என்னோடு பகிர்ந்து கொள்ளுங்கள். இந்த துன்பப்பயணத்தில் என்னோடு பயணித்த, என் தோழமைகளுக்கு என் நன்றிகள்.

நன்றி.

உங்கள் தோழி,

Infaa @ Infanta.